# சபலம்

பூங்கொடி பதிப்பகம்



எண்டமூரி வீரேந்திரநாத் - சுசீலா கனகதுர்கா

# சபலம்

எண்டமூரி வீரேந்திரநாத்
சுசீலா கனகதுர்கா

பூங்கொடி பதிப்பகம்

முதற் பதிப்பு : ஜூன், 1990

**விலை : ரூ. 36-00**

அச்சிட்டோர் : தொ. பே. 47 [illegible] 20

சாலை அச்சகம், 11 திருவீதியான் தெரு
கோபாலபுரம், சென்னை-600 086 [சாலை [illegible]]

# பதிப்புரை

சுந்தரத் தெலுங்கில் சிந்தித்து எழுதப்பட்ட நாவல் "சபலம்".

திருமதி சுசீலா கனகதுர்கா அவர்களின் எளிய - இனிய தமிழ், இது ஒரு மொழிபெயர்ப்பு நாவல் என்ற உணர்வை நம் மனம் உணராத வாறு செய்துவிடுகிறது.

இந்நாவல், குங்குமம் வார இதழில் வாரந் தோறும் வெளிவந்து பல்லாயிரக்கணக்கான வாசகர்களின் மனங்களிலே மணந்த நாவல்.

வே. சுப்பையா

# ஆசிரியரின் நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | பிரளயம் | 12 00 |
| 2. | தூக்குத் தண்டனை | 25 00 |
| 3. | வாழ்வே வா | 33 00 |
| 4. | அவள் செதுக்கிய சிற்பம் | 27 00 |
| 5. | முள்பாதை | 80 00 |
| 6. | முள் மலராகிறது | 24 00 |
| 7. | நிலாப்பெண் | 24 00 |
| 8. | முற்றுப்பெறாத பயணம் | 35 00 |
| 9. | கொலைதூரப் பயணம் | 35 00 |
| 10. | களவுபோன வைரங்கள்<br>சுசீலா கனகதுர்கா | 18 00 |

# 1

'புடவை...புடவை...கைத்தறிப் புடவைகள்!...'

தொண்டை வரளக் கத்திக் கொண்டிருந்தான் அந்தப் பையன். அவனுக்குப் பதினாறு வயது இருக்கும். தலையில் மூட்டை. சிவப்பாய் ஒடிசலாய் இருந்தான். மீசை கூடச் சரியாக அரும்பவில்லை.

'அம்மா புடவைங்கம்மா...அம்மாப்பேட்டை கைத்தறிப் புடவைங்க...' அவனோடு கூட நடந்து கொண்டிருந்த நடுத்தர வயதுக்காரன் இடையிடையே தானும் குரல் கொடுத்துக் கொண்டிருந்தான். அவன் வயதுக்கு மீறிய வயோதிகத்துடன் பலவீனமாய் இருந்தான். அவனது தலையிலும் சிறு மூட்டை.

'அம்மா, புடவை வேணுங்களா?' ஒரு வீட்டிற்கு முன்னால் நின்று கேட்டார்கள்.

'கை வேலையாயிருக்கேன்' உள்ளிருந்து குரல் கேட்டது.

'புடவைங்கம்மா. சுத்தமான கைத்தறிப் புடவைங்க.' ' பிச்சைக்காரனில்லை என்ற பொருள் தொனிக்கச் சொன்னான். அவள் வெளியே வந்து, 'மாதக்கடைசி. இப்ப வேண்டாம் போ' என்று கதவைச் சாத்திவிட்டாள்.

திரும்பவும் நடை.

'இந்தப் பட்டினத்தில யாரும் நம்ப புடவைங்களை வாங்கமாட்டாங்க. சாயந்திரம் தவணையில் கடனுக்கு

வாங்க கடைங்களில் கூடுவாங்களே தவிர, நம்மிடம் யாரு வாங்குவாங்க?'

அவன் பேசவில்லை.

'கிராமமே தேவலை. நாளொன்றுக்கு ஒரு புடவை யாவது விற்றுப் போகும்' என்றான் நம்பிக்கை தளர்ந்து.

பையன் அதற்கும் வாயைத் திறக்கவில்லை.

வெளியே திண்ணையில் பேச்சுக் குரலைக் கேட்டு ஒருத்தி வந்து எட்டிப் பார்த்துவிட்டு உள்ளே போனாள்.

'யாரோ துணிக்காரன். இந்த மாதிரி தெருவில் வந்து விற்பவங்களிடம் புடவையே வாங்கக் கூடாதாம். முந்தா நாள் என் அண்ணி சொன்னாள். ஒரே மாதிரி புடவை அவங்களண்டை ரெண்டு இருக்குமாம். முதல் புடவை யைப் பார்க்கும்போது ஐந்து மீட்டர் சரியாய்தான் இருக்கு மாம். எடுத்துக்காட்டின புடவை கசங்கிடுத்துன்னு, மடிப்புக் கலையாத அதேபோன்ற இன்னொரு புடவை யைத் தந்துடுவாங்களாம். அவன் போனதும் பிரித்துக் கட்டிக்கப் போனால் அந்தப் புடவை மூணு, மூணரை மீட்டருக்கு மேலே இருக்காதாம்!'

இரண்டு மூன்று பேர்கள் சிரித்த ஓசை.

'இவர்களையெல்லாம் போலீசில் பிடித்துக்கொடுக்க வேண்டும்.'

திண்ணையில் உட்கார்ந்திருந்த பையனின் முகம் சிவந்தது.

'டேய்! நம்ம ஊருக்குப் போயிடலாண்டா! பத்து ரூபாய் வராப்பல ஒரு புடவையை விற்றாலும் போதும், இங்கே அதுவும் கிடையாது.'

பையன் தோற்றுவிட்டவனாய்த் தலைகுனிந்தான். மாமா வேண்டாம் என்றபோதும் பலவந்தமாய் கிளப்பிக்

கொண்டு வந்தவன் அவன்தான். பத்து ஆண்டுகளாக கிராமத்தில் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் சுற்றித் திரிந் திருந்தும் வியாபாரம் இல்லை. வியாபாரத்திற்கு ஏதாவது செய்ய வேண்டும் என்ற யோசனையில் பிறந்ததுதான் இந்தப் பிரயாணம்!

பெரியவரான மாமா சொன்னதும் உண்மைதான் என்று பட்டது பையனுக்கு. கண்ணாடி அறைக்குள் அடுக்கப் பட்ட மட்டமான புடவைகளை வாங்கிப் பழக்கப்பட்டவர் களுக்குத் தனது தொழில் மேன்மை எவ்வாறு புரியும்?

'மாமா, நீ இங்கேயே படுத்துக்க. வெயில் அதிகமா யிருக்கு. நான் இன்னும் இரண்டு தெரு சுத்திட்டு வரேன்.'

'புடவை...புடவை... சொந்தத்தறியில் நெய்த புடவை...'

அரைமணியாய்க் கத்திக் கொண்டேயிருக்கிறான். ஓரிருவர் கூப்பிட்டுப் புடவைகளைப் பார்த்தார்கள். வாங்கும் எண்ணம் யாருக்குமே இல்லை. அச்சிறுவனிட மும் பொறுமையும் சக்தியும் தளர்ந்து விட்டன. பசி எடுத்தது. கொண்டு வந்த பணமும் நேற்றோடு தீர்ந்து விட்டது.

பிறகு அவன் 'புடவை புடவை' என்று கத்தவில்லை. அதனால் எந்த லாபமுமில்லை என்று அவனுக்குப் புரிந்து விட்டது.

ஓர் உயர் அதிகாரியின் வீடு. முன்பக்கம் தோட்டம். கேட் திறந்தே இருந்தது. கேட்டிற்குப் பக்கத்தில் யாருமே இல்லை. நேராய் உள்ளே நுழைந்தான்.

அதிகாரியின் மனைவி எரிச்சலுடன் அவ்வறையில் உலாவிக் கொண்டிருந்தாள். இன்னொருத்தி அங்கு உட்கார்ந்தபடி அவளையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் ஒரு டாக்டரின் மனைவி. டாக்டரின் மனைவி

ஏதோ சங்கடத்தில் ஆழ்ந்திருந்தாற்போல தோன்றிற்று. அதற்குக் காரணம் உண்டு. அன்று மாலையில் 'மிஸ் கோயம்புத்தூர்' தேர்வு நடக்கவிருந்தது. அதில் மூன்று நீதிபதிகளில் அவளும் ஒருத்தி.

அதுவரையிலும் எல்லாம் நன்றாய்த்தானிருந்தது. சிக்கலெல்லாம் அதிகாரியின் பெண் அந்தப் போட்டியில் பங்கெடுத்துக்கொண்டதால் வந்து சேர்ந்தது. அதிகாரியின் மனைவி தன் மகள் எப்படியாவது அந்த ஆண்டு போட்டியில் 'மிஸ் கோயம்புத்தூராக' தேர்ந்தெடுக்கப் பட்டுவிட வேண்டும் என்று பிடிவாதமாயிருந்தாள். டாக்டரின் மனைவியிடமும் இந்த விஷயத்தை உறுதியாய்ச் சொல்லி விட்டாள்.

தான் ஒருத்தியே நீதிபதியாயிருந்தால் போட்டியே நடத்தாமல்கூட அவள் பரிசைக் கொடுத்துவிடுவாள். ஆனால் அவளோடு சேர்ந்து மேலும் இருவர் நீதிபதிகளாயிருந்தார்கள். அதில் ஒருத்தி மிகவும் கண்டிப்புக்காரி. 'நான் நூற்றுக்கு நூறு மார்க்கு கொடுத்தால்கூட, மற்ற இருவருடையதையும் சேர்த்து மொத்தம் யாருக்கு அதிகமாய் மார்க்கு வருமோ அவர்களுக்குத்தான் பரிசு கிடைக்கும்' என்று முணுமுணுத்தாள் டாக்டரின் மனைவி.

'...மீதி இருவரும் குறைந்தது ஐம்பது போட்டால்தான் முதல் பரிசு வரும்' என்றாள் தொடர்ந்து.

ஒத்திகை தொடங்கிவிட்டது. விதவிதமாய் மகளின் தலைமுடியை மாற்றி, புடவைக்கட்டை மாற்றி, மேலும் மேலும் மேக்அப் செய்து கூட்டி வந்து டாக்டர் மனைவியிடம் காட்டிக்கொண்டே இருந்தாள். ஆனால் எப்படி ஒப்பனை செய்தாலும் டாக்டரின் மனைவிக்குப் பிடிக்கவில்லை.

சரியாக அந்தச் சமயத்தில்தான் வெளியேயிருந்து 'அம்மா' என்ற குரல் கேட்டது.

அதிகாரியின் மனைவி வெளியே வந்து, படியில் நின்று கொண்டிருந்த பையனைப் பார்த்து 'யாரு?' என்றாள்.

'வெயில் வறுத்தெடுக்குதும்மா. கொஞ்சம் குடிக்கத் தண்ணீர் தரீங்களா?' என்று கேட்டான் பையன். அவள் என்ன எண்ணினாளோ தெரியாது. உள்ளே திரும்பி 'டேய் ராமு! இந்தப் பையனுக்குக் கொஞ்சம் தண்ணீர் கொண்டுவந்து கொடு' என்றாள்.

அவள் உள்ளே திரும்பப் போனபோது, 'நல்ல புடவைங்க இருக்குது. பார்க்கிறீங்களாம்மா?' என்றான்.

அவள் நின்றாள். 'புடவையா?'

'ஆமாம்மா. சொந்தமாய் நெய்தது.'

கைத்தறிப்புடவைகள் என்றதுமே அவளுடைய ஆர்வம் வடிந்துவிட்டது. 'இப்ப முடியாது' என்றாள். அதற்குள் உள்ளேயிருந்து அவள் மகள் வந்தாள். செயற்கை வேஷங்களோடு இருந்த அப்பெண்ணைப் பார்த்ததும் அப்பையனுக்கு என்னவோ போலாகிவிட்டது. அவளுடைய மேக்-அப் மிகவும் அசாதாரணமாய் இருந்தது. அவளுக்கு அவனைவிட ஆறு, ஏழு வயது அதிகமாயிருக்கலாம். ஆனால் ஒப்பனையாலும் தலையலங்காரத்தாலும் மேலும் நாலைந்து வயது கூடுதலாகக் காட்டிற்று. தன் மகளைப் பார்த்ததுமே அப்புடவைக்காரப் பையனின் முகத்தில் தென்பட்ட ஆச்சரியத்தை அவள் வேறுவிதமாய்ப் புரிந்து கொண்டு—

'இன்றைக்கு அழகிப் போட்டி இருக்கு' என்றாள் கர்வமாய்.

அவன் மேலும் பரிசீலிப்பது போல் அவளைப் பார்த்தான். நெய்யும் இழைகளைப் பார்த்தே குணத்தைப் படித்துவிடக்கூடிய கண்கள் அவை! புடவைக்கரைக்குக் கீழே தவழும் கால்களைப் பொறுத்து அதற்கு மேலே இருக்கும் தேக அமைப்பை ஊகித்து உணரக்கூடிய பயிற்சி

பெற்ற கண்கள் அவை! அப்பெண்ணின் சகஜமான அழகை எங்கோ ஏதோ கெடுக்கிறது என்று உணர்ந்துகொள்ள அரை விநாடிக்கு மேல் ஆகவில்லை அவனுக்கு.

அதற்குள் அந்தப் பெண் அலுப்பாய், 'மம்மீ! இனி என்னால் இந்த வேஷத்தை மாற்ற முடியாது. எவ்வளவு தடவை மாற்றினாலும் ஆன்ட்டிக்குப் பிடிக்கலை. எனக்குப் பரிசு வராவிட்டாலும் போகட்டும்' என்றாள்.

'என்னம்மா இது? வா, நான் கேட்கிறேன்' என்றாள். மகளோடு உள்ளே திரும்பி நடந்தபோது அப்பையன் பின்னாலிருந்து 'அம்மா' என்றான்.

'இப்போ எங்களுக்குப் புடவை எதுவும் தேவை யில்லைப்பா'

'புடவைகளைப் பற்றி இல்லைம்மா.'

'பின்னே?'

'உங்க பொண்ணு கட்டிக்கிட்டிருக்கிற புடவை அந்த உடம்புக்கு பொருந்தலைம்மா.'

'அப்படீன்னா...உன் புடவையைக் கட்டிக்கிட்டா அழகாயிருக்குங்கிறயா?' ஏளனமாய் கேட்டாள்.

'இல்லீங்கம்மா...கனமான புடவைங்க பார்க்கறதுக் கும், வாங்கறதுக்கும் நன்றாய்த்தானிருக்கும். ஆனால் கட்டிக்கிட்டால் பருமனாய் எடுத்துக்காட்டும்.'

உள்ளே போகத் திரும்பிய அப்பெண் நின்றாள். அவ் வளவு தூரத்திலிருந்தபடியே தன் புடவையின் கனத்தை அவன் எப்படிக் கண்டுபிடித்தானோ என்று வியந்தாள்.

'ரோஜா நிறப் புடவை. இது நன்றாகத்தானே இருக்கு.' என்றாள் தன்னையறியாமல்.

சாதாரணமாய் ரோஜா வண்ணம் எந்த நிறத்தாருக் கும் பொருந்தும் என்பது இலக்கணம்,

பையன் முறுவலோடு, 'இல்லீங்கம்மா! உங்க உடல் நிறத்துக்கு ரோஜா வண்ணத்தைவிட இலைப்பச்சை நன்றாயிருக்கும். அதுவும் உங்களைப் போன்ற உயரமான பெண்களுக்கு இவ்வளவு சின்ன பார்டர் பொருத்தமாயிராது. பார்டரிலேருந்து பூக்கள் கொஞ்சங் கொஞ்சமாய் மேலுக்குப் போய் கிரமமாய் மறைந்தால் அழகாயிருக்கும். ஏற்கனவே 'போட்டி' என்கிறீங்க.'

'ஓகோ! உன்னிடமிருக்கிற ஒரு புடவையை எங்க தலையில் கட்டவா இந்த யோசனை?' ஏளனமாய் கேட்டாள் தாய்.

பையன் சிரித்தான்.

'என்னிடம் அந்த மாதிரிப் புடவைங்க கிடையாதும்மா. சின்ன அம்மா எந்த மாதிரி புடவை கட்டிக்கிட்டால் நன்றாயிருக்கும்னு சொன்னேன். அவ்வளவுதான்.'

அந்தப்பெண் அவனையே வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தாள். தன்னைவிட இரண்டு வயது சிறியவனாயிருப்பான். ஆனால் புடவைகளையே ஆட்டிப் படைப்பவன் போலல்லவா பேசுகிறான்!

'நீங்க தப்பா எடுத்துக்கலைன்னா ஒரு வார்த்தைம்மா! ரொம்பப்பேரு கடைங்களுக்குப் போயி எந்தப் புடவை நன்றாயிருக்குன்னு பொறுக்கி எடுப்பாங்களே தவிர, எந்தப் புடவை நமக்கு மேட்ச்சாகும்னு பார்த்து தேர்ந்தெடுக்க மாட்டாங்க. அந்த மாதிரிதான், உங்க பெண்ணோட முகவாய்க்கட்டை மேலே வெச்சிருக்கிற மச்சத்தைக் கொஞ்சம் வலது பக்கமாய்த் தள்ளி வெச்சிருந்தால் நன்றாயிருக்கும்.'

இப்பொழுது அந்தத் தாய்க்கு அவன்மேல் நம்பிக்கை பிறந்துவிட்டாற் போலிருந்தது. ஏதோ மனித சக்திக்கு அப்பாற்பட்ட சக்தியின் செயலாய்த் தோன்றிற்று அது. இல்லாவிட்டால் அந்த மச்சம் செயற்கை மச்சம் என்று

தெரிந்திருக்காது. நான்கு ஆண்டுகளாய் அந்த மச்சத்தை அதே இடத்தில் பார்த்து வருபவர்களுக்குக்கூட அது பிறவி மச்சமில்லை என்ற அபிப்ராயமே தோன்றவில்லை.

அதற்குள் அப்பெண் ஒரடி முன்னுக்கு வந்து நின்று, 'இன்னும் என்ன பண்ணனும்?' என்று ஆர்வத்துடன் கண்கள் மினுமினுக்கக் கேட்டாள்.

அப்பையன் இப்பொழுது கொஞ்சம் மிடுக்காய் அவளை மேலும் பரிசீலிப்பது போலப் பார்த்தான்.

அப்பெண்ணிடமிருந்த சிறிய குறை உயரம்! சாதாரண உயரத்தைக் காட்டிலும் இரண்டங்குலம் உயரமாயிருந்தாள். அதையே அவள் நாசூக்காய் மாற்றிக் கொள்ளலாம். ஆனால் அவள் உடுத்தியிருந்த புடவையின் மூலம் அந்த மாதிரி முயற்சி எதையும் பண்ணியதாய்த் தெரியவில்லை.

'அந்த லோலாக்கை மாற்றிடுங்கம்மா. உயரமானவங்க லோலாக்குகளை மாட்டிக்கிட்டால் நன்றாயிராது. அதேமாதிரி கீழே தொங்கற தொங்கட்டான் நகைங்களை விட கழுத்தைச் சுற்றினாப்பல நகை அணிந்தால் நன்றாயிருக்கும். உங்க செருப்பைக்கூட மாற்றணும்...' என்று சொல்லிச் சிரித்தான்.

'இது ஒன்றும் குதிகால் உயரச் செருப்பில்லை.'

'உயரம் சங்கதியைச் சொல்லலை நான். உயரமானவங்க சாதாரண செருப்புங்களைத்தான் போடணும். இல்லாவிட்டால் பூமிக்கும் உடம்புக்கும் நடுவில் அந்த டிசைன் கண்ணைப் பறிப்பது போல் தெரிவதுடன் உயரமாயும் தென்படுவாங்க''

அந்தப் பெண் சட்டென்று தன் செருப்பைப் பார்த்துக் கொண்டாள். இவ்வளவு நாளும் அதைப்பற்றியே சிந்திக்காமல் போனதற்கு வெட்கமடைந்தவள், மேற்கொண்டு எதுவும் யோசிக்காமல் அவனுடைய சக்தி, சாமர்த்தியத்

தின் மேல் நம்பிக்கை வைத்தவளாய், 'எனக்கு எந்தப் புடவை நன்றாயிருக்கும்னு சொல்லேன்' என்றாள்.

அதுவரை அவன் வார்த்தைக்குக் கட்டுப்பட்டிருந்த தாய், மகளின் இந்த வார்த்தையைக் கேட்டு திடுக்கிட்டு அவளைப் பார்த்தாள். மகள் போகிற போக்கைப் பார்த்தால் நேராய்ப் படுக்கையறைக்கே அவனை அழைத்துச் சென்று பீரோவிலிருக்கும் புடவைகளையெல்லாம் எடுத்துக் காட்டுவாள் போலிருந்தது.

'என்னம்மா இது? அவன் பார்த்துச் சொல்றதாவது? உனக்குப் புத்தி கித்தி பிசகிடுத்தா?' என்றாள்.

அப்பெண் அலட்சியமாய், 'பரவாயில்லைம்மா' என்று உள்ளே நடந்தாள்.

தாய் பையனைப் பார்த்து, 'பையா! உன்னிடம் ஏதாவது புடவை இருந்தால் காட்டு' என்றாள், அவனை உள்ளே போகவிடாமல் தடுக்கும் உத்தேசத்துடன்.

அப்பெண்ணுடன் உள்ளே போவதா வேண்டாமா என்று தடுமாற்றமடைந்த அவன் அந்த வார்த்தையைக் கேட்டு, 'நான் ஒரு புடவை தரேங்கம்மா. அதுக்கு நீங்க ஒண்ணும் பணத்தை இப்போதே தரணும்னு இல்லை, கட்டிக்கிட்டதும் நன்றாயிருந்தால், அப்புறமாய் பணம் தரச்சொல்லுங்க உங்க மகளை' என்றான்.

அப்பெண் திரும்பி வந்து, 'எங்கே, புடவையைக் காட்டு, பணத்திற்கென்ன வந்தது?' என்றாள்.

அப்பொழுது அப்பையன் மூட்டையை அவிழ்த்து ஒரு புடவையை வெளியே எடுத்தான். வெள்ளைப் புடவையில் கருப்பு பார்டர்.

அப் பெண் புடவையை எடுத்துக்கொண்டு, 'இதற்கு மாட்ச்சிங் ப்ளவுஸ் இருக்கோ இல்லையோ?' என்று முணுமுணுத்தாள்.

'மாட்ச்சிங் வேண்டாங்கம்மா, பார்டர் பளிச்சின்னு கண்ணைப் பறிக்கிறாப்பல இருக்கிற ப்ளவுஸ் இருந்தால் போட்டுக்குங்க'' என்றான் பையன்.

'எவ்வளவுப்பா அந்தப்புடவை?'

'நூற்றி இருபத்தைந்தும்மா.'

'நூற்றி...இரு...பத்...தைந்தா?'

இவ்வளவு மலிவான புடவையையா என் மகளைக் கட்டச் சொல்கிறாய் என்பது போலிருந்தது அவள் பேச்சு.

அவன் பதில் பேசவில்லை.

அதற்குள் அப்பெண் அறையிலிருந்து சன்னல் வழியாய், 'இதோ, மச்சத்தை இங்கே வெச்சுக்கட்டுமா?' என்றாள்.

தாய்க்குப் பற்றிக்கொண்டு வந்தது. பக்கத்தில் டாக்டரின் மனைவி மட்டும் இல்லாமலிருந்திருந்தால் மகளை நாலு வாங்கு வாங்கியிருப்பாள். மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தவித்துக் கொண்டிருந்தாள். அதற்குள் அச்சிறுவன் தரவேண்டிய எஞ்சிய நான்கு ஆலோசனைகளையும் தந்து முடித்து விட்டான்.

சரியாய் பத்து நிமிடங்களுக்குப் பிறகு அப்பெண் வெளியே வந்தாள்.

ஒரு வினாடி அங்கிருந்த பெண்மணிகள் இருவருக்கும் ஒன்றுமே புரியவில்லை, பார்ப்பது தன் சொந்த மகள் தானா என்ற சந்தேகமே வந்துவிட்டது தாய்க்கு!

உயரமே பெருந்தன்மையான தோற்றத்துடன் மாறிப் போயிருந்தது. லோலாக்குக்களை எடுத்துவிட்டு கம்மல்களை அணிந்துகொண்டு, கழுத்தில் மாலைக்கு பதில் நெக்லஸை அணிந்துகொண்டதுமே அழகு கூடிவிட்டிருந்தது, முகவாய்க்கட்டையில் வைத்துக் கொண்டிருந்த மச்சத்தை

மாற்றிவிட்டபிறகு அம்முகம் ஓர் ஓவியன் மட்டுமே உணரக் கூடிய செளந்தர்யத்தைப் பெற்றுவிட்டது,

'குட்! வெரிகுட்' என்றாள் நீதிபதியாக இருந்த டாக்டரின் மனைவி.

'இந்தாப்பா உன் பணம். மொத்தத்தில் புடவையை எங்க தலையில் கட்டிட்டாய்' என்று நூற்று இருபத்தைந்து ரூபாயை அவனிடம் தந்தாள் தாய்.

'இந்தா ராமு, இவன் போனதும் கதவைச் சாத்திக்கோ' என்று வேலையாளிடம் சொல்லிவிட்டு நடந்தாள்.

பையன் இன்னும் புடவை மூட்டையைக் கட்டிக் கொண்ட பாடில்லை. வெளியே கிளம்பிக் கொண்டிருந்த போது அப்பெண்ணின் அலங்காரத்திலிருந்த குறை என்ன வென்று தெரிந்தது. 'அம்மா' என்றான்.

'இரு கண்களுக்கு இடையே உள்ள தூரம் சாதாரணமாய் இருக்க வேண்டியதைக் காட்டிலும் அதிகமாயிருக்கிறது. புருவங்களை நீண்ட வடிவத்தில் இல்லாமல் பிறைச் சந்திர வடிவில் வளைத்தால் புது அழகு வரும். இமைகளின் மேற்புறத்து 'ஷேடு' களுக்கும் இதேபோலவே இட வேண்டும்.'

பையன் புடவைகளை மடித்து வைத்து மூட்டையைக் கட்டி முடித்தான். அறைக்குள் சென்று வெளியே வந்த அந்தப் பெண் 'இப்ப எப்படியிருக்கேன்?' என்றவள், 'அம்மா பணம் கொடுத்துட்டாங்க இல்லையா?' என்றாள்.

'கொடுத்துட்டாங்கம்மா.'

வெளியேயிருந்து ஹாரனை அழுத்தினாள் அம்மா. அப்பெண் வாசல்வரை வந்து வெளியே போகப் போனவள், திரும்பி அவனைப் பார்த்தாள். பின்னால் வேலையாள் ராமு இல்லை என்பதை உறுதிசெய்து கொண்டாள்,

சிட்டாய் பறந்து வந்து அவன் முகத்தை இரு கைகளாலும் ஏந்தி உதட்டில் அழுத்தமாய் ஒரு முத்தம் கொடுத்து 'தாங்க்யூ' என்று சொல்லிவிட்டு, மான் குட்டியைப்போல ஓட்டமாய் ஓடிவிட்டாள். கண்மூடி கண் திறப்பதற்குள் எல்லாமே நடந்துவிட்டது. பையனோ சிலையாகி விட்டான்.

# 2

எதிர்பாராத அந்த முத்தத்தால் அதிர்ச்சியடைந்தான் அவன். வாழ்நாளிலேயே அவனை முத்தமிட்ட ஒரு நபர் உண்டென்றால் அது இவள்தான். அவனுக்கு அந்தப் பெண்ணின் பெயர்கூடத் தெரியாது. அதேபோன்று இவனது பெயரும் அவளுக்குத் தெரிந்திருக்க வாய்ப்புமில்லை.

இவ்வளவு அழகான பெண்ணிற்கு இதற்குள் எவ்வளவோ காதல் கடிதங்கள் வந்திருக்கும். அதில் பலரை அவள் நிராகரித்தும் சிலரைப் பரிசீலனையிலும் வைத்திருக்கலாம். சிலருடன் நட்புக்காக மட்டும் அவள் பழகி இருக்கலாம். ஆனால் இது என்ன? முத்தம் என்பது சரியானதுதானா? சில நூறுகளை—பெரிய மனது இருந்தால் சில ஆயிரம் ரூபாயை—வீசி எறிந்து விட்டுப் போக வேண்டிய ஒன்று. ஆமாம், அவள் நன்றியை அப்படித்தான் காட்டிக் கொணடிருக்க வேண்டும். மனதில் எழுந்த ஆனந்தத்தை ஒருமுத்தத்தின் மூலம் வெளிக்காட்டி நன்றிக் கடனைத் தீர்த்துக் கொண்டாள். அரிதான புத்தி சாலித்தனத்தை ஆராதிக்கும் முத்தம் அது! பொங்கி யெழும் ஆனந்தத்தின் அறிகுறி அது!

அவன் யோசித்துக்கொண்டே சந்தில் திரும்பி மூலையி லிருந்த பெட்டிக் கடையில் ஒரு சோடா வாங்கிக் குடித் தான். தொலைவில் யார் வீட்டிலிருந்தோ சுமன் கல் யாண்பூரின் கஜல் சங்கீதம் கேட்டுக் கொண்டிருந்தது.

அவன் புடவை விற்பனையையும் அந்தப் பெண்ணை யும் மறந்துபோய் அந்தப் பாட்டையும் அதன் பொருளை யும் கேட்டு அப்படியே நின்றுவிட்டான். கொஞ்சம் வடமொழி புரியுமாதலால் அதன் அர்த்தத்தைப் புரிந்து கொண்டான். கூடவே அவனுக்குப் பள்ளி ஆசிரியரும் நினைவுக்கு வந்தார். அவனது திறமைகளை அடையாளம் கண்டு ஊக்குவிப்பவர் அவர்.

வகுப்பில் ஒரு முறை அவர் ராஜஸ்தானைப் பற்றிச் சொன்னார். 'ராஜஸ்தானில் மல்ஹோரி' என்ற இடம் கல்யாணப் புடவைகளுக்குப் பெயர் போனது! அங்கே ஒவ்வொரு புடவையையும் ஒருத்தரே முழுவதுமாய் நெய்வார்களாம். அதுவும் கன்னிப் பெண்களே நெய்யும் அந்தத் திருமணப் புடவை எந்த மணமகளின் மேனியை அலங்கரிக்கப் போகிறதோ என்று கற்பனை பண்ணிக் கொண்டே, தன் திருமணத்தைப் பற்றியும் கனவு கண்ட வாறு, பாட்டுக்களை முணுமுணுத்தபடி புடவைகளை நெய்து முடிப்பார்கள். அந்த பாட்டிற்கு 'லோரி' என்று பெயர். முற்றிலுமாய் ஒரே கன்னிப்பெண்ணால் நெய்யப் படும் அந்த ராஜஸ்தான் புடவைகள் நாட்டில் மிகப் பெயர் போனவை...' என்றார் ஆசிரியர்.

பத்தாம் வகுப்பில் முதல் மாணவனாகத் தேர்வு பெற்றதும் தானே நெய்த புடவையை ஆசிரியரின் வீட்டிற்கு எடுத்துப்போய் தந்தான். மேக வர்ண நிறத்தில் வெள்ளைக் கரையிட்ட அந்தப் புடவை யாரையுமே பார்த்த மாத்திரத்தில் கவராமல் போகாது. அதைப் பார்த்து ஆசிரியரின் மனைவி மிகவும் மகிழ்ந்து போனார். 'இப்ப எதுக்குடா இதெல்லாம்?' என்றார் ஆசிரியர் கண்டிப்பதுபோல. 'நானும் என் எதிர்காலத்தைப் பற்றிக்

கனவு கண்டவாறு இந்தப் புடவையை நெய்தேன் சார்' என்று வெளியே சொல்லவில்லை. தனக்குள் நினைத்துக் கொண்டான்.

'ரொம்ப நன்றாயிருக்கு' என்றார் ஆசிரியரின் மனைவி புடவையைக் கையில் எடுத்துக்கொண்டு. அவன் சிரித்துக்கொண்டே தலையைக் கவிழ்த்துக் கொண்டான். திரும்பவும் ஆசிரியர் மனைவி சொன்னார். 'டேய் ரவி, உன் வேலைத்திறனைப் பார்த்தால் ஒரு நாள் நீ ரொம்பப் பெரியவனாக வருவாய்னு தோணுதுப்பா.'

'பத்தாவது வகுப்பில் பாசானதற்கு சார்தான் காரணம் அம்மா! இதைக்காட்டிலும் பெரிதாய்த் தர முடியலை என்னால்.'

'அப்படிச் சொல்லாதேப்பா, நீ இன்னும் மேலே படிக்கணும். கஷ்டப்பட்டாவது படிக்கணும். லீவு நாளில் இங்கே வா. தினமும் ஒரு மணிநேரம் பாடம் சொல்லித் தரேன்.'

'லீவில் பட்டணத்துக்குப் போகலாம்னு இருக்கோம் சார். இந்த கிராமத்தில் எவ்வளவு விற்றாலும் என்ன லாபம்? நாலு புடவைங்களைப் பட்டணத்தில் விற்றாலும் போதும்.'

'பட்டணத்தில் இந்தப் புடவைகளை யாருடா வாங்கு வாங்க?'

'வாங்கிப் பார்த்துட்டால் இதன் அருமை தெரிஞ் சுடாதா சார்?'

வாத்தியார் அவனை விநோதமாய்ப் பார்த்தார். அவர் பார்வைக்கு எட்டாத ஏதோ ஒன்று அவன் முகத்தில் தென்பட்டது.

'ஒரு பக்கம் படிச்சிட்டே உங்க மாமாவுக்கு இவ்வளவு ஒத்தாசை பண்றாய். உன்னைப் பெத்தவங்க யாரோ,

அவுங்க ரொம்பத்தான் அதிர்ஷ்டசாலி' என்றாள் அவர் மனைவி.

'படிப்பு மட்டுந்தானா? இவன் எவ்வளவு நன்றாய் பாடுவான் தெரியுமா? டேய் அம்மா கேட்கட்டும் ஒரு பாட்டுப் பாடு.'

அவன் தலை குனிந்தபடி மெல்லப் பாடத் தொடங்கினான். அந்தப் பாட்டின் பொருள் மிக நன்றாயிருந்தது.

'நிலாவில் உட்கார்ந்து உணர்ச்சியை நெய்தால்
பாட்டுப் புடவை தயாராயிடும்
ஜரிகை பல்லவிக்குச் சரணம் கரை
-நிறமோ மேகவர்ணம்!
மேலே மேலே வந்துடாதே சூரியனே பகலென்றால்
எங்களுக்குக் கசப்பு!
கண் பார்வை புடவை கட்டணும்-உடம்பைக்
காஞ்சிப்பட்டுப் புடவை தழுவணும்
விரல்கள் நெய்யும் நெய்தலுக்குக் கொசுவங்கள்
-பல்லவி பாடும்.'

ஆசிரியரின் மனைவிக்குப் பாட்டின் பொருள் விளங்கவில்லை. பாட்டிலும் குரலிலும் இருந்த இனிமையை ரசித்தாள். அவ்வளவே! ஆசிரியர் மட்டும் இந்த அருமையான கவிதைக்கு வியந்து போனார்.

'யாருடா எழுதினாங்க இந்தப் பாட்டை?'

அவன் மேலும் வெட்கத்தோடு தலை குனிந்து, 'நான் தான் சார்' என்றான்.

அவர் இமைக்காமல் அவனையே பார்த்தார். இளமை மெல்ல மெல்ல எட்டிப்பார்க்க முயன்று கொண்டிருந்த அந்த முகத்தில் அப்பாவித்தனம் ஓடிப்போய் விடாமலிருக்க இறுதி யுத்தம் புரிந்து கொண்டிருந்தது.

'இவனது முன்னோர்கள் யாராவது பெரிய புலவரா யிருந்திருக்கணும். இல்லாவிட்டால் இவ்வளவு பெரிய அர்த்தங்களை இத்தனை சின்ன வாக்கியத்தில் அடக்கும் திறமை இந்தச் சின்ன வயதிலே இந்தப் பையனுக்கு வந் திருக்காது' என்றெண்ணிக்கொண்டார் அவர்.

அவருக்குத் தெரியாது—புடவை நெய்பவர்களுக்குப் பெண்களின் உள்ளத்தைக் கண்ணாடியைப் போல துல்லிய மாய்த் தெரிந்து கொள்ளும் பயிற்சி வேண்டும் என்றும்—எந்த நிறத்தில் எந்தப் புடவை அழகைக் கூட்டும் என்று தெரிந்து கொள்ள வேண்டுமானால், எந்த புஷ்பம் எந்த உணர்ச்சியைக் காட்டக்கூடும் என்று சொல்லிவிடத் தகுந்த கவிதை உணர்ச்சி இருக்கவேண்டு மென்றும், அது அப்பை யனிடம் ஒரு துளி அதிகமாகவே இருந்த தென்றும்.

அதனால்தான் அப்பையனிடம் புடவை நெய்யும் கலையோடுகூட, எந்தப் புடவை யாருக்குப் பிடிக்கும் என்று சொல்லிவிடக்கூடிய அபூர்வ ஆற்றலும் இருந்தது.

ரேடியோவில் முடிந்தது—அதே கல்யாணப் புடவையை நெய்து கொண்டு கன்னிப் பெண் ஒருத்தி கனவு காண்பதாக பாடப் பட்ட அந்தப் பாட்டு.

அவன் மாமா படுத்திருந்த இடத்திற்கு வந்து சேர்ந்த போது மணி மூன்று. வெயில் சிறிது தணிந்திருந்தது. பையனின் முகம் விநோதமான ஒளியை வீசிக் கொண்டி ருந்தது அந்த ஒளி முத்தத்தால் வந்ததில்லை.

'மாமா! ஒரு புடவையை வித்துட்டேன் மாமா! நூறு ரூபாய் புடவையை நூற்றி இருபத்தைந்துக்கு வித்தேன் மாமா!' நினைத்ததைக் காட்டிலும் இருபத்தைந்து ரூபாய் அதிகமாய் வந்துவிட்ட உற்சாகம் அவனுக்கு!

பட்டினத்தில் இருநூறு ரூபாய்ப் புடவையை நானூறு ரூபாய்க்கு விற்பார்கள் என்றறிந்திராத அவனுக்கு, புடவை யின் அசல் விலையைவிட இருபத்தைந்து ரூபாய் கூடுதலாய்

வந்தது மகிழ்ச்சியாயிருந்தது. அந்த இருபத்தைந்து அவ னுடைய திறமைக்கு எடுத்துக்காட்டு. அந்தச் சமயத்தில் அவன் அப்புடவையின் விலையை இருநூறு ரூபாய் சொல்லி யிருந்தாலும் அவர்கள் வாங்கித்தான் இருப்பார்கள்!

'கிராமத்திலேயே தரகரிடம் புடவையைக் கொடுப்ப தால் லாபமில்லை. கஷ்டமோ நஷ்டமோ நாமே பட்ட ணத்திற்குப் போய் விற்றால் நல்லது!' என்ற யோசனை கூட அவனுக்குத்தான் முதலில் உதித்தது! மாமாவைப் பல வந்தப்படுத்திக் கிளப்பி வந்தவனும் அவன்தான்!

'புடவை-புடவை' என்று தெருவில் அலைந்து திரிவ தால் பலனில்லை என்று—தண்ணீர் குடிக்கும் சாக்கில் முதலில் நுழைந்து விட்டு, அங்குள்ள சூழ்நிலையைப் புரிந்து கொண்டு, மெல்ல மெல்ல அதற்குள் அடியெடுத்து வைக் கும் சாதுரியத்தைச் செய்து காட்டியவனும் அவன்தான்!

அந்த வெற்றிக் களிப்பில்தான் மாமாவுக்கு இந்த விஷயத்தைச் சொன்னான். ஆனால் அவ்வார்த்தைகள் அக்கிழவரின் காதில் விழுந்ததோ இல்லையோ தெரியாது. பலவீனமாய் கண்களைத் திறந்தார்.

தா... தா... தாகம் என்பது போல வசனை செய்தார். அவர் தேகம் காய்ந்த கட்டாந்தரை போல சுள்ளென்று சுட்டது. பையன் நடுங்கி விட்டான். அவனுக்குத் தான் செய்த தவறு புரிந்தது. மாமாவைத் திண்ணையின் மேல் அஜாக்கிரதையாய் விட்டுவிட்டு புடவை விற்பதற்கு கிளம்பி விட்டான். இங்கே, வெயிலில் தன் மாமா தாகத்தால் தொண்டை வரள, கத்தவும் சக்தியின்றி, தெருவில் போன யாரையும் உதவிக்குக் கூப்பிடவும் சக்தியில்லாமல், பாவம், எத்தனை நேரமாய் தாகத்தால் துடித்துக் கொண்டிருந் தாரோ? தாகத்தால் எப்படித் துடிதுடித்தாரோ?

பையன் ஓட்டமாய் ஓடிப்போய் குழாயிலிருந்து தண்ணீ ரைப் பிடித்து வந்து முகத்தில் தெளித்தான். மாமாவின்

தலையை மடியில் ஏந்திக் கொண்டு வாயில் நீரை ஊற்றினான். சில நிமிடங்களுக்குப் பிறகு அவர் முகத்தில் சிறிது களை வந்தது. ஆனால் அது தற்காலிகமானது...சாவுக் களை!

'மாமா—மாமா' என்றான் குரல் விம்ம. அவனுக்குப் பயமாயிருந்தது. அழுகை வந்தது. ஊரை விட்டு ஊர் வந்து இந்த மாதிரி ஒரு விபத்தை எதிர்பார்க்க வில்லை. இதெல்லாம் தன்னால்தான்.

'முடிஞ்சுட்டு து......மு...டிஞ்...சு...ட்...டு...து' மாமாவின் குரல் கிணற்றுக்குள்ளிருந்து வந்தாற் போலிருந்தது. நடுங்கும் கரங்களுடன் அப்பையனின் கையைத் தன் கையில் எடுத்துக்கொண்டார். 'ரவி எனக்கு...எனக்கு ஒரு வாக்குறுதி தாடா''

'சொல்லு மாமா. நீ என்ன சொன்னாலும் அப்படியே செய்யறேன். சொல்லு.'

'ரவி, நீ மாதவியைக் கல்யாணம் பண்ணிக்கணும்டா.'

எந்த மாதவியை? அவனது கவிதா உணர்ச்சியைப் புரிய மறுக்கும் மாதவியை. அவனது கவிதையைக் கிண்டல் செய்யும் மாதவியை.

'தலையில் மூட்டையைச் சுமந்துகொண்டு தெருத் தெருவாய் அலைந்து புடவைகளை விற்கப் போகிறாயா?' என்று ஏளனம் பண்ணும் மாதவியை.

வைகறைப் பொழுதையும் மாலைப் பொழுதையும் ரசிக்கத் தெரியாத மாதவி! கோலம் போடத் தெரியாத மாதவி! பதின்மூன்று வயதாகியும் இன்னும் கோலி விளையாடிக் கொண்டிருக்கும் மாதவியை...

'இப்போ இல்லைடா ரவி. என்றாவது ஒரு நாள் நீதாண்டா பண்ணிக்கணும். அவள் அப்பாவிப் பொண்ணு. வேறு வீட்டில் மருமகளாய்ப் போய் இருக்க முடியாது.

அவளையும் அவள் தாயையும் நீதான் காப்பாத்தனும். என் மகனைக்கூட நீதான் முன்னுக்குக் கொண்டு வரனும். மாதவி நல்லவள்டா! ரொம்ப நல்லவள்; வாக்குத் தாடா... ரவி வாக்... குத்... தா...;

மனது கலங்கிற்று.

மாமாவின் உயிர் கொஞ்சம் கொஞ்சமாய்ப் போய்க் கொண்டிருந்தது.

'ரவி! நீ இல்லாவிட்டால் என் குடும்பம் சிதறிப் போயிடுண்டா. இத்தனை நாளாய் உன்னை வளர்த்ததற் காகக் கேட்கலை, மாமாவாய் கெஞ்சிக் கேட்கிறேன். மாதவி...மா...த...வி—யை...'

அப்பையன் தன்னையறியாமல் அவர் கையின் மேல் தன் கையை வைத்து, 'பண்ணிக்கிறேன் மாமா, மாதவியை பண்ணிக்கிறேன். என்றாவது நானே பண்ணிக்கிறேன்' என்றான்.

கிழவனின் முகம் இறுதி முறையாய் மலர்ந்தது திருப்தி யோடு.

'போதும் ரவி...போதும்...' வார்த்தைகளை முடிப் பதற்குள்ளாகவே உயிர் பிரிந்துவிட்டது.

பையனுக்குத் துக்கம் வரவில்லை. அதைவிடப் பெரிய உணர்ச்சி! சலனமில்லாமல் மாமாவின் சடலத்தைப் பார்த் துக் கொண்டிருந்தான்.

தனக்கு நெய்யக் கற்றுக்கொடுத்த விரல்கள் - இப் பொழுது ஒடுங்கிவிட்டன.

தான் நெய்வதைப் பரிசோதிக்கும் கண்கள் - நிலை குத்தி நின்றுவிட்டன,

தன் வேலையைப் பாராட்டும் வாய்—ஜீவனற்றுப் போய்விட்டது.

ரவி! மாதவி நல்லவள்டா. அப்பாவிப் பெண்!

நல்ல குணம்—அப்பாவித்தனம்— இவ்விரண்டுந்தானா கணவன் மனைவியருக்கிடையே வேண்டியது?

நடுவீதியில் இறந்துவிட்ட மனிதருக்காக அவன் அழுது கொண்டிருந்தான். கொடுத்துவிட்ட வாக்குறுதியைப்பற்றி யோசிக்கவில்லை. மனிதன் ஏதேனும் ஒரு பலவீனமான தருணத்தில் ஏதோ ஒரு தப்பைப் பண்ணிவிடுகிறான். அதன் விளைவால் வாழ்நாள் முழுவதும் குமுறுகிறான்.

அவன் அப்பொழுது பண்ணிய தப்பும் அது போன்றது தான்!

# 3

பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு—

சுறுசுறுப்பான மாலை நேரம். நீண்ட அண்ணாசாலையின் நெரிசல் மிகுந்த பகுதி. ரவிதேஜா மில்ஸின் நிர்வாக இயக்குநர் ரவியின் டயோட்டா கார் அந்த பல மாடிக் கட்டிடத்தினுள் நுழைய—

வாசலில் ஜிலுஜிலுவென்று பாப் முடியில் பளிச்சிடும் கன்னி. எப்போதும் சிரிப்பு. ஸ்டைலான நுனிநாக்கு ஆங்கிலத்துடன் வரவேற்கும் இந்தப் பெண் துவங்கி பிரமாண்ட கட்டிடத்தின் ஒவ்வொரு பகுதியும் நிசப்தமானது.

ஏன் நிசப்தம் ஆகவேண்டும்? அவன் அவ்வளவு கறார் பேர்வழியா? முரட்டுச் சுபாவமா? இரண்டுமில்லை. கண்டிப்புப் பேர்வழி.

குமிழ்ச் சிரிப்புடன் தொழிலாளர்கள் யாருடனும் தோள்மீது கைபோட்டு நட்புக் கொள்வதும் உண்டு. இதனால் அவனை வெறுப்பவர் பட்டியல் என்று எதுவுமில்லை.

ஆடையுலகில் - அவனும், அவனது தயாரிப்புகளும் அவ்வளவு பிரசித்தமானதால் அவனைப் புகழாதவர் இல்லை. டி. வி. பெட்டி முதல், வானொலிப் பெட்டி வரையும் - தினசரி பத்திரிகை துவங்கி கிழமை இதழ்கள் வரையும் - அவனது தயாரிப்பான ஆடைகளை அணிந்து 'ரவிதேஜா மில்ஸ்' என்று அறிவிப்பு செய்த வண்ணம் இருப்பதை நீங்கள் பார்க்கவில்லையா? அந்த நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர்தான் ரவி.

ஆண்களாகட்டும். பெண்களாகட்டும். மனதுக்கேற்ற ஆடைகளை வாங்கி, ஆயிரக்கணக்கில்—லட்சக்கணக்கில் வாழ்த்துக்களைப் பெற்றுக்கொள்கிற இந்த ரவிக்கும் ஒரு வருத்தம் உண்டு. ஆம்—அவனது அன்பு மனைவி அணிவது வேறொரு கம்பெனியின் தயாரிப்பைத்தான். அன்பு மனைவி யார்? மாதவி—

ஹா...! எங்கேயோ கேட்டாற்போல்...ஆமாம் - பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு கோவையில் தலையில் மூட்டை தூக்கி புடவை - புடவை என்று கூவிய அதே நபர். எதிர்பாரா முத்தம் பெற்ற பாக்யசாலி. மாதவியைக் கட்டிக் கொள் என்று சொன்ன மாமாவுக்கு வாக்குக் கொடுத்த அதே சிறுவன் இப்பொழுது கோடீஸ்வரனாக—

சரி, மாதவி எப்படி?

மாதவியினுடையது விநோதமான மனோதத்துவம். ஒருநாள் அவள் ஏதோ விழாவிற்கு அழகாய் அலங்கரித்துக் கொண்டு போயிருந்தாள். விழாவிற்கு வந்திருந்த மற்றொருத்தி மாதவியின் முகத்திற்கு முன்பே, 'இந்தப் புடவை உனக்குப் பொருந்தலைம்மா!' என்று சொல்லி விட்டாள். பக்கத்திலிருந்த இன்னொருத்தி, 'அவளுக் கென்னம்மா - கணவர் புடவைக் கம்பெனியின் முதலாளி. புடவைங்க ஃப்ரீயாய் வந்து...' என்றாள் - ஃப்ரீயாய் கிடைக்கும் புடவைகள் பின்னே எப்படியிருக்கும் என்ற பொருள் படும்படி. அவ்வளவுதான் - அன்றையிலிருந்து

மாதவி, 'ரவிதேஜா மில்ஸ் புடவைகளைக்' கட்டுவதை விட்டொழித்தாள்.

'உங்க புடவைகள் எனக்குப் பொருந்தாது.'

ரவிக்கு அது அதிர்ச்சி.

அவன் கம்பெனியில் ஆராய்ச்சிப் பகுதிக்குரிய செலவு களே, வருடத்திற்கு இருபத்தைந்து லட்சங்கள் இருக்கும். ஒரு புதிய ரக டிசைன் மார்க்கெட்டிற்கு வந்து தோல்வி யடைந்துவிட்டால் நஷ்டம் லட்சக்கணக்கில் ஏற்பட்டு விடும். இலாக்காவிலிருந்த சிலரின் வேலையே எப்பொழு தும் சினிமாக்களைப் பார்த்து நடிகைகளின் புடவைகளைப் போல புதிய ஃபேஷன்களைக் கண்டுபிடிப்பதுதான்! மேலும் சிலர் அஜந்தா, எல்லோராவுக்குச் சென்று அச்சிற்பங்களின் டிசைன்களைக் கூட பார்த்து வருவதுண்டு. பெண்களின் ஃபேஷன்கள் நாளுக்கு நாள் மாறிக் கொண்டேயிருக் கின்றன. அவர்களின் மாறப்போகும் ஆசைகளை ஆறு மாதங்களுக்கு முன்கூட்டியே கண்டுபிடித்துவிடக் கூடிய வரே உண்மையான புடவை வியாபாரி! அதற்காகத்தான் ரிசர்ச் டிபார்ட்மென்டிற்கு அத்தனை செலவு! அதனால்... பொருந்தாது என்ற பேச்சிற்கே இடமில்லை. இந்தியாவி லிருக்கும் ஒவ்வொரு பெண்ணிற்கும் பொருந்தும்படியான புடவை குறைந்தபட்சம் ஏதாவது ஒன்றாவது இருந்தே தீர வேண்டும். இல்லாவிட்டால் இவ்வளவு லட்சங்கள் செல வில் நடைபெறும் இந்த ஆராய்ச்சியே அனாவசியம்!

ரவியின் மனம் துவண்டது.

'ஏன் பொருந்தாது? என்னோடு வா. நான் செலக்ட் பண்றேன். விமல், கார்டன் இவற்றில் எவ்வளவு ரகங்கள் உண்டோ அவ்வளவு ரகங்களும் நம்ப புடவைகளிலும் உண்டு.'

'ஒன்றும் தேவையில்லை. ஃப்ரீயாய் வந்ததுன்னு எல்லோரும் குத்திக் காட்டுவதற்கா?'

'ஸ்ரீயா, அதென்னது?'

அதற்குமேல் அவளால் சொல்லாமலிருக்க முடிய வில்லை. சொன்னாள். கேட்டதும் அவனுக்குச் சிரிப்பு வந்தது.

'பாரு மாதவி! நீ குள்ளமாய் இருக்கிறாய். கொசு வத்தை அதிகம் வைக்காதே'னு ஆயிரந்தடவை சொல் லிட்டேன். நீயோ கேட்கலை. பெரிய மாலைகளையும் அதிக நகைகளையும் போட்டுக்காதேன்னு சொன்னேன்... அவ்வளவு எதுக்கு? குண்டாய் இருப்பவங்க சின்ன சைஸ் கைப்பையைத்தான் பயன்படுத்தணும்னு கூடச் சொன் னேன். அதுகூட உனக்குப் பிடிக்கலை. எல்லாவற்றையும் விட முக்கியமானது குள்ளமானவங்க உட்காரும்போது கால்கள் இரண்டையும் பரவலாய் வைக்கக்கூடாது நெருக்க மாய் வைத்துக்கொண்டு உட்காரணும்னு எவ்வளவோ தடவை சொல்லியிருப்பேன் உனக்கு...இந்தக் குறையை யெல்லாம் உன்னிடத்தில் வைத்துக் கொண்டு எங்க புடவை மேலே குற்றம் சொல்வானேன்?'

அதற்குள் அவள் அழத் தொடங்கி விட்டாள். 'நான் குண்டாய் இருக்கேன், குள்ளமாய் இருக்கேன்னுதானே என்னைப் பழிக்கிறீங்க நீங்க?'

'இதப்பார். மாதவி! கேவலம் உயரம் - குள்ளம் இவற் றால் மட்டுமே மனிதனின் சந்தோஷம் வடிந்துவிடாது. குறைந்தபட்சம் உன்னால் முடிந்ததைக் கூடவா நீ செய்ய முடியாது?'

'என்ன? என்னத்தைப் பண்ணணும்?'

'தினம் அரைமணி நேரம் தேகப்பயிற்சி செய்யலாம்.'

'சர்க்கசில் சேர்ந்துடுன்னு சொல்லாமல் சொல்றீங்க.'

அவனுக்கு அலுப்புத் தட்டிற்று. நிறையப் பேர் வாழ்ந்து தீர வேண்டுமே என்ற காரணத்தால் வாழ்வார்

கள், சிலர் மட்டுந்தான் வாழ்க்கையோடு மகிழ்ச்சியையும் சேர்த்து வாழ நினைப்பார்கள். அவள் முதல் ரகம்.

இன்று நேற்றல்ல ,மணமான தினத்திலிருந்தே சொல்லி வருகிறான்—இரவில் படுக்க வரும்போது வாயில் ஒரு ஏலக் காயைப் போட்டுக்கொள்ளச் சொல்லி. அவள் அதைப் புரிந்துகொள்ள மாட்டாள். அவ்வளவு எதற்கு? பவுடரைப் போட்டுக்கொள்ள வேண்டியது முகத்திற்கு மட்டுந் தானா?—பாதி அழகு கழுத்தாலும் வருகிறது. கழுத்தின் பின்புறம் துப்புரவாய் இருக்க வேண்டும் என்ற சிறு விஷயம் கூட அவளுக்குத் தெரியாது. சொன்னாலும் கேட்டுக் கொள்ள மாட்டாள்.

அவனுக்கு வாழ்க்கையில் ஒவ்வொரு விநாடியும் ஏதாவது புது ரகங்களைப் பற்றி ஆலோசிப்ப திலும் இன்னொரு புதிய டிசைனைக் கண்டுபிடிப்பதிலுமே கழியும்...எப்பொழுதும் யோசனைகள்! ஆக, மூளை களைப்படைந்துவிடும். களைப்படைந்த மூளைக்கு ஓய்வு தேவை. அது வீட்டில் கிடைக்காது. உடல் சுகம் முக்கிய மில்லை. அதற்கு மேலே—அன்பு வேண்டும்!

அன்பின் முதல்படி புரிந்து கொள்வது. தப்பு எங்கே யிருந்து துவங்கியது என்றுதான் அவனுக்குப் புரியவில்லை.

ரவிதேஜா கம்பெனி இயக்குநர்களின் மிக முக்கிய மான கூட்டம் அன்று நடக்க இருந்தது. ஒரு முக்கியமான தீர்மானத்தை அன்றைக்குக் கொண்டு வர வேண்டி யிருந்தது.

ஆடை வியாபாரத்தில் ஒரு கம்பெனி பிற கம்பெனி களோடு கடுமையான போட்டியை எதிர்த்து நிற்க வேண்டியிருக்கும்.

ரவிதேஜா டெக்ஸ்டைலிற்குப் போட்டியாய் செஞ்சு ராமய்யா அண்ட் கோ தடபுடல் செய்து வந்தது. சுமார் இருபத்தைந்து ஆண்டுகளாய் அத்துறையில் மிளிர்ந்து

வந்த அந்தக் கம்பெனி முதலாளிகள்—ரவி வரவால் தளர்ந்து விட்டார்கள். இறுதி முயற்சியாய் செஞ்சு ராமய்யா ஒரு நவீன திட்டத்தைக் கொண்டு வந்தார். லாட்டரி எடுத்து மாருதி கார் பரிசாக வழங்கப்படும் என்று அறிவித்தார். எல்லா நகரங்களிலும் இதை ஏற்பாடு செய்தார்.

மக்கள் செஞ்சு ராமய்யாவின் ஷோருமிற்கு வந்து மொய்த்தார்கள்.

இது ஒரு பக்கத்திலிருந்து தாக்கிற்று. மறுபக்கத்தி லிருந்தோ விலைக்குறைப்பு விற்பனை.

'நடுவீதிக்கு வந்துவிட்டேன்.' எதிர்பாராமல் கடனாளி களின் தொல்லையால், இருக்கும் சொத்துக்களையெல் லாம் விற்றுவிட்டு நடுவீதிக்கு வந்துவிட்டேன். சரக்கு களையெல்லாம் மலிவு விலையில் விற்றுவிட எண்ணி உங்கள் ஊருக்கு வந்திருக்கிறேன். மூன்றே நாட்கள் மட்டுமே. 75 ரூபாய்க்கு ஷர்ட் துணி!...

இதுபோன்ற அறிக்கைகளும், கடைகளும்...

ஏதாவது ஒன்றைச் செய்ய வேண்டும்.

ரவி என்ன செய்யப் போகிறான்?

டைரக்டர்கள் எல்லோரும் ஆர்வத்தோடு, மீட்டிங்கில் கூடியிருந்தார்கள்.

'டியர் சர்ஸ்...' என்றான் ரவி—நாம் இங்கே கூடி யிருப்பது ஒரு முக்கியமான விஷயத்தைப்பற்றி வாதாடு வதற்காக. நம் பிரச்னை உங்களுக்குத் தெரியும். இரு பக்கத்திலிருந்தும் தாக்குதல்கள். கவர்ச்சிகரமான பரிசு களைத் தந்து வாடிக்கையாளர்களைக் கவரும்கம்பெனிகள். இன்னொரு புறம் மலிவு விலையில் விற்பனை என்ற பெயரில் மட்டச் சரக்கு. இவ்விரண்டையும் நாம் எதிர்த்து நிற்காவிட்டால் நமது வளர்ச்சி தடைப்பட்டுவிடும். நம்

மார்க்கெட்டிங் பகுதியோடு நீண்ட விவாதங்கள். சேர்மனுக்கு இன்று சுருக்கமாய் விவரித்து, நான் அமுலாக்கப்போகும் விஷயங்களுக்கு அவரிடமிருந்து அனுமதியைப் பெற்றேன். இத்திட்டத்தில் உங்களுக்கு ஏதாவது சந்தேகம் இருந்தால் விவாதிப்பதற்காகத்தான் இன்று இந்தக் கூட்டம்' என்று நிறுத்தினான்.

சேர்மன் சர்மா முறுவலுடன் பார்த்துக் கொண்டிருந்தார். அவருக்கு ஐம்பத்தைந்துவயதிருக்கும். லட்சாதிபதி. குழந்தை இல்லை.

'சர்ஸ்...நம்ப போட்டியாளர்களை எதிர்ப்பதற்காக நாம் ஏதாவது செய்யணுமானால் இன்னும் கவர்ச்சிகரமான பரிசுகளை வைக்கணும், என்ன வைக்கலாம்? கப்பலா? ஹெலிகாப்டரா? எங்கபுடவைகளை வாங்கினால் சந்திரமண்டலத்திற்கு இலவசப் பயணமா? நாம் அவ்வளவு பெரிய பரிசுகளைத் தரமுடியாது. ஒவ்வொரு புடவையுடனும் இரண்டு லாட்டரி டிக்கெட் தரலாம்...'

'என்னது?'

'ஆம் இரண்டே இரண்டு லாட்டரி டிக்கெட் மூலமாய் லட்ச ரூபாய் பரிசைப்பெற எவ்வளவு குறைந்த சான்ஸ் உண்டோ, அதே குறைந்த சான்சுதான் ஒரு புடவையை வாங்குவதன் மூலம் மாருதி காரைப் பரிசாய் பெறுவதிலும் உள்ளது என்பதை வாங்குபவரின் மனதில் பதியுமாறு எடுத்துச் சொல்லுவோம்- பிறகு மக்கள் அதிலிருக்கும் குறைகளை உணருவார்கள். நான் போட்ட கணக்கு சரியாயிருக்கும் பட்சத்தில் இந்தத் திட்டம் அதிக நாள் நீடிக்காது. நாம் பண்ணக்கூடியதெல்லாம் இத்திட்டத்தை அவங்க எதிர்பார்த்ததைவிட குறைந்த காலத்திற்குள் முடித்துவிடுவதுதான்...' நிறுத்தினான்.

'ஒரு ஷாப். புடவையின் விலையை உயர்த்தாமல் கேவலம் தன் வியாபார வளர்ச்சிக்காக ஒதுக்கப்பட்ட

பணத்திலிருந்து மாருதி காரைப் பரிசாகத் தர வேண்டுமானால், குறைந்தது ஐம்பது லட்சம் விற்பனையாகணும். இது எவ்வளவு தூரம் சாத்தியப்படும்? அதனால் புடவையின் விலையை உயர்த்தாமலிருக்க முடியாது. 'பத்து ரூபாயைப் புடவையின் விலையோடு சேர்த்துத் தரிங்களா அல்லது எங்கள் புடவையைச் சாதாரண விலைக்கே வாங்கி இரண்டு லாட்டரி டிக்கெட்டைப் பெறுகிறீர்களா?...' என்ற எண்ணத்தை வாடிக்கையாளர்களின் மனதில் பதியுமாறு செய்வோம். நாம் செய்யும் இந்தக் காரியத்தைப் பார்த்து முதலில் நிறையப் பேர் சிரிப்பார்கள், பிறகு புரிந்துகொண்டு அதிர்ச்சி அடைவார்கள். இந்த அதிர்ச்சியை மக்களிடம் ஏற்படுத்துவதுதான் நாம் செய்யும் வேலை...''

கைதட்டல்கள். நிறுத்தாமல்தட்டினார்கள் டைரக்டர்கள்.

# 4

'இரண்டாவது, போட்டியாளர்கள் - பம்பாய் சேல்ஸ், விலை குறைப்பு விற்பனைகள்...! நம் விலைகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால் இவை மிகக் குறைந்தவையே. ஆனால் பொருளின் தரம் மோசம். இந்த விஷயத்தை எல்லோருமே ஒத்துக்கொள்வார்கள். நாமும் ஒப்புக்கொள்ள வேண்டிய விஷயம் ஒன்று இருக்கு! இந்த உலகத்தில் எந்தப் பொருளை வேண்டுமானாலும் எடுத்துக்கொள்வோம். பத்து ரூபாய் செலவு என்றால் பனிரெண்டு ரூபாய்க்கு, அல்லது அதிகபட்சம் பதினான்கு ரூபாய்க்கு விற்பார்கள். ஆனால் புடவை விஷயத்தில் மட்டும் தயாரிப்புச் செலவு நூறு ரூபாயானால் அதனை முன்னூறு ரூபாய்க்கு விற்கிறோம்...

'...இதில் நம் தவறு இல்லை. எவ்வளவோ புடவைகள் வருடக்கணக்காய் கடைகளில் தேங்கி விடுகின்றன. சில

நிறங்களை யாருமே வாங்குவது இல்லை. இருந்தாலும் நாம் கடையில் வைத்திருக்கணும். இதற்கான வட்டி லட்சக்கணக்கில் இருக்கும் அதனால்தான் புடவைகளின் விலை இவ்வளவு உயர்ந்து போய்விடுகிறது. நாமும் விற் பனையை உயர்த்தினால் விலையைக் குறைக்கலாம்...'

'இங்கே நான் ஒரு விஷயத்தில் குறுக்கிட விரும்பு கிறேன்' என்று கூறிய சர்மா தொடர்ந்து, 'விலையைக் குறைக்க வேண்டிய அவசியமில்லைங்கறது என் உத்தேசம். பிற பொருள்களின் விஷயம் வேறு, புடவைகளின் விஷயம் வேறு. விலையுயர்ந்த புடவைகளை வாங்குபவர்கள் அதிக மாய் எதையும் பொருட்படுத்த மாட்டார்கள். பார்க்கப் போனால் விலை அதிகம்னு சொன்னதுமே அது என்னவோ ரொம்ப உசத்திப் புடவை என்று மகிழ்ந்து போய்விடுவார் கள். இன்னும் சொல்லப்போனால், நகைகளைப் போலவே விலையுயர்ந்த புடவைகளும் அந்தஸ்தின் எடுத்துக்காட்டு தான்! சில சமயம் விலையைக் குறைப்பது கூட அபாய மாகி விடும். ரவி சொன்னது போல பட்டுப்புடவையை ஐம்பது ரூபாய்க்குத் தருவதாய்ச் சொன்னாலும் யாரும் வாங்கமாட்டாங்க' என்றார்.

'சர்ஸ்—சுமார் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால் பிரேஸியர்கள் மார்க்கெட்டில் புதிதாய் வந்தன. அந்த நாட்களில் 'பாடி'க்கு பதிலாக பிரேஸியர் அணியும் பெண் களைக் கண்டால் கண்ணைப் பொத்திக் கொள்வார்கள். இப்போதோ வயலில் வேலை பண்ணும் கூலி வேலை செய்யும் பெண் கூட பிரேஸியர் உடுத்துகிறாள்.

இப்போது ஒரு புது விதமான வஸ்து (ஃபாப்ரிக்) கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதன் பெயர் லிக்ரா (LYCRA). குனிந்தாலும், அசைந்தாலும் நடந்தாலும், இன்னும் நாட்டியமாடினாலும் கூட அதை உண்மையில் தேகத்தின் மேல் தரித்திருப்பது போலவே தெரியாது. இந்த புது வித மான ஃபிட்டிங், விரைவிலேயே பிரேஸியர்களின் இருப்

பிடத்தைக் கைப்பற்றப் போகின்றது. இந்தப் புது ரகத்தை பெட்டல்ஸ் என்கிறார்கள். 'As you flower into woman - Discover Petals'-என்பது இவர்களின் சுலோகம். இந்த கம்பெனியோடு உடன்படிக்கை செய்துகொண்டு முன்னூறு ரூபாய்க்கு மேல் புடவை வாங்கினவங்களுக்கு நாம் ஒரு ஜோடி 'பெட்டல்ஸ்'களை இலவசமாய் தருவோம். அதுதான் நம் பரிசு. ஒரு முறை இந்த 'பெட்டல்ஸ்' களைத் தரிக்கத் தொடங்கிய பெண் திரும்பவும் பழைய பிரேஸியர் பக்கம் கண்ணெடுத்தும் பார்க்க மாட்டாள். இது முற்றிலும் மார்க்கெட்டிற்கு வந்து பரவுவதற்குள் நம் விற்பனை ரிகார்டை எட்டிவிடும் என்பது என் நம்பிக்கை.'

ரவி கையிலிருந்த காகிதத்தை மேஜையின் மேல் போட்டுவிட்டு அடுத்த விஷயத்துக்கு வந்தான்—

'ஒரு புடவையை வாங்கினால் புடவையோடு கூட பிளவுஸ் பீசை இலவசமாகத் தருவோம். ஆனால் வாங்கறவங்க நம் கடையிலேருந்து எந்தத் துணியை வேணுமானாலும் எடுத்துக்கலாம்னு அனுமதி தருவோம். இதனால் வாடிக்கையாளர்கள் நம் கடையில் அதிக நேரம் இருப்பாங்க. நம் கடையில் 'கும்பல்' அதிகரிக்கும். ஐ மீன் அதிகரித்தாற்போல தென்படும். வியாபாரத்தின் முக்கிய லட்சணமானது - எல்லாவற்றையும்விட முதலானது - கடை கலகலப்பாய் தோன்றும்படி பார்த்துக் கொள்வது தான்! இதே சமயத்தில்கூட வந்திருக்கிறவர் இன்னொரு புடவையை தேர்ந்தெடுக்க தொடங்கிடுவாங்க...' என்றான் ரவி. கைதட்டல். ரவி தன் செக்ரட்டரியைப் பார்த்துச் சிரித்தான். இந்தக் கடைசி ஆலோசனையைச் சொன்னது அவள்தான்! அவளுக்கு நாற்பத்தைந்து வயதிருக்கலாம். அவனுக்கு வலது கையைப் போல வேலை செய்து வந்தாள்.

அவன் தொடர்ந்தான்—'நம் விற்பனைத் திட்டத்தின் கீழ் சிறு புத்தகம் ஒன்றைப் பிரசுரிக்கலாம் எந்த தேக அமைப்பிற்கு எந்தப் புடவை நன்றாயிருக்கும், எதுபோன்ற

நிறம் எடுப்பாயிருக்கும், தலையலங்காரம்—இதைப்பற்றி யெல்லாம் அதில் இருக்கும். சாதாரணமாய் 'டை' வாங்குவோருக்கு இது போன்ற புத்தகங்களைத் தருவாங்க. நம் புடவைகளை வாங்கும் ஒவ்வொருத்தருக்கும் இப்புத் தகத்தை இலவசமாய் தருவோம். கோடீஸ்வரங்க கூட இந்த மாதிரி சின்னப் பரிசுகளை ஆசையோடு வாங்கு வாங்க. மேக்கப் சாதனங்கள் கூட இனாமாய்த் தரலாம். புடவைக் கலருக்குப் பொருத்தமான பொட்டும், லிப்ஸ்டிக் கும், சின்ன பௌடர் டப்பாவும். மை இது போன்றவைகள் அதில் இருக்கும். முன்னூறு ரூபாய்க்கு மேற்பட்ட புடவை களுக்குக் காதணிகளையும் கூடத் தருவோம். அஃப்கோர்ஸ் ஆர்டிஃபிஷியல்தான்!—

'இதனாலெல்லாம் நமக்கு ஏதாவது லாபமுண்டா?'— ஒரு வயதான டைரக்டர் கேட்டார்.

ரவிக்கு 'அம்மாடா' என்றிருந்தது. இனி நிஜ விஷயத் திற்கு வரலாம்.

'சர்ஸ்! உங்கள் எல்லோருடைய அனுமதியோடும் இன்றிலிருந்து நாம் புடவைகளின் விலையை இரு பத்தைந்து சதவீதம் உயர்த்தப் போகிறோம்.'

அதுவரையிலும் ஆர்வத்தோடு கேட்டுக்கொண்டிருந்த டைரக்டர்கள் எல்லோரும் திடீரென்று கசமுசவென்று பேசத் தொடங்கிவிட்டார்கள்.

'ரவி டெக்ஸ்டைலஸ் கம்பெனி புடவைகள் தேகத்தை மட்டுமேயில்லை மனசையும் நிரப்பிவிடும்—' இதுதான் அவர்களின் சுலோகம். அது உண்மையாயிருக்கும் வரை யிலும் விலையைப் பற்றிப் பொருட்படுத்த வேண்டிய தேவையில்லை. ஆனால் அவர்கள் இவ்விதமாய் யோசித் துப் பார்க்கவில்லை. ஒரு தடவை மார்க்கெட் வீழ்ந்து விட்டால் நஷ்டம். அதனால்தான் அவ்வளவு கசமுசா.

அதற்குள் டைரக்டர்கள் எல்லோருமாய் ஒருமுடிவிற்கு வந்து விட்டார்கள். விற்பனைகளைப்பற்றி உடனுக்குடன் தமக்குத் தெரிவிக்கும் பட்சத்தில் ஆறு மாதங்களுக்கு விலையை உயர்த்தி வைப்போம் என்ற முடிவிற்கு வந்தார்கள்.

அவ்விதமாய்...

அவன் வென்று விட்டான்!

விலையை உயர்த்தி, உற்சாகத்தைத் தரும் பரிசுகளைத் தரவேண்டும் என்ற புகழ்பெற்ற தீர்மானத்தை நாட்டிலேயே முதல் முதலாக எடுத்துக்கொண்ட கம்பெனி ரவிதேஜாதான்.

எந்தப் புடவையை வாங்கினாலும் ஏதாவது ஒரு பரிசு உறுதி!

மீட்டிங் முடிந்தது. டைரக்டர்கள்—பார்ட்டிக்காக எழுந்து கொண்டிருந்தபோது ரவி சொன்னான்—

'சர்ஸ்! இதுவரை வாடிக்கையாளர்களுக்கு தரப் போகும் பரிசுகளைப்பற்றி சொன்னேன். நீங்கள் சம்மதித்ததற்கு என் நன்றி. நான் மீட்டிங்கில் சொல்ல வெட்கப்பட்ட கடைசி விஷயத்தை இப்போது சொல்ல விரும்புகிறேன்—

'நம் கடைக்குப் புடவை வாங்க வரும் பெண் தன்னோடு எத்தனை சிநேகிதிகளைக் கூட்டி வருகிறாளோ—நூற்றுக்கு அத்தனை ரூபாய் என்று விலையில் சலுகை தருவோம் என்று சொல்லிவிட்டு மௌனமானான். அக்கம்பக்கத்தாரை 'இண்டர் டிபெண்ட்' பண்ணும் அந்தத் திட்டத்திற்குப் பின்னாலிருந்த தத்துவத்தை ஒரு நிமிஷம் அங்கிருந்த யாருமே புரிந்து கொள்ளவில்லை.

கடைக்கு—அதுவும் துணிக்கடைக்கு வந்துவிட்டுப் பெண்களால் சும்மாயிருந்துவிட முடியாது என்பது

புரிந்ததுமே முதலில் யாரோ லேசாய் விசிலடித்தார்கள். பிறகு எல்லோருடைய சம்மதத்தையும் தெரிவிப்பதுபோல சட்டென்று சிரிப்புகள் எழும்பலாயின. என்றுமே உம்மென்றிருக்கும் சேர்மன் கூட ரவியின் தோளில் தட்டிவிட்டு, 'குட்...! வெரிகுட்...' என்றார். தொடர்ந்து பார்ட்டியை நோக்கிப் போய்க்கொண்டிருந்தபோது, 'உன்கடைசித் திட்டம் நன்றாய்த்தானிருக்கு. ஆனால் பத்து சிநேகிதிகளை மட்டுமே கூட்டிட்டு வரலாம்னு குறிப்பிடு. இல்லாவிட்டால், கொஞ்சம் போக்கிரித்தனமான பெண்களானால், நூறு பேரைக் கூட்டிட்டு வந்துட்டுக் கடையையே இலவசமாய்த் தூக்கிட்டுப் போயிடுவாங்க' என்று சிரித்தார்.

அன்றைக்குப் பார்ட்டி மிக கனமாய் நடந்தது. முக்கிமாய் ரவி மிக உல்லாசமாயிருந்தான். அவன் தீர்மானங்கள் சீக்கிரத்திலேயே அமுலாக்கப்பட்டு அது பலித்துவிட்டால் ரவிதேஜர் டெக்ஸ்டைல்ஸ் இந்தியாவிலேயே துணி உற்பத்தியில் நம்பர்-ஒன் ஆகிவிடும். அவனுக்கு நம்பிக்கை இருந்தது. புதிய டிசைன்களை உருவாக்கும் விஷயத்தில் தன்னை யாருமே மிஞ்சிவிடமுடியாது என்றும் அவனுக்குத் தெரியும்.

ரவிதேஜா டெக்ஸ்டைல்ஸ் பப்ளிக் லிமிடெட் கம்பெனி. ஆனால் நாற்பது சதவீத ஷேர் சர்மாவுடையதுதான்! பண வரவுப் பகுதியையெல்லாம் அவர்தான் பார்த்துக் கொண்டார். அதைத்தவிர இன்னும் நான்கு பகுதிகள் உண்டு. உற்பத்தி, மார்கெட்டிங், டிசைன், ஆராய்ச்சிப் பகுதி இவைகளை ரவி பார்த்துக் கொண்டான். எஞ்சிய மூன்று டைரக்டர்களும் மீதி மூன்று பாகங்களையும் பார்த்துக் கொண்டார்கள். ஒருவர் விஷயத்தில் மற்றொருவர் தலையிடமாட்டார்கள். அதனால்தான் இன்றைக்கு ரவி அவ்வளவு சந்தோஷமாயிருந்தான். அவன் திட்டங்கள் எல்லாம் ஒத்துக் கொள்ளப்பட்டு விட்டன!

அவன் வீடு திரும்பும்போது பதினொன்றரை. உடைமாற்றிக் கொண்டு படுக்கையில் வந்து படுத்தவன் மாதவி

இன்னும் தூங்க வில்லை என அறிந்து அவள் மேல் கையை வைத்தான். சட்டென்று அவன் கையைத் தட்டிவிட்டவள் 'வந்தீங்களா? இப்ப எதுக்கு வரணும்? விடிஞ்சதும் வந்திருக்க வேண்டியதுதானே' என்றாள்.

அவன் உற்சாகமும், அன்றைய வெற்றியும் அந்த ஒரே அடியில் விழுந்துவிட்டன. அவன் மனம் எப்பொழுதாவது தான் அவ்வளவு சந்தோஷமாய் இருக்கும். அவ்வளவும் பறந்து போய்விட்டன.

'அதில்லை மாதவி...' என்று நயந்து சொல்லப் போனான்.

அவள் முகத்தைச் சுளித்து, 'இன்றைக்குக்கூட குடிச் சுட்டுத்தானே வந்திருக்கீங்க?' என்றாள் அருவருப்பு தொனிக்க!

கேட்பவர்களுக்கு அவன் ஒரு பெரிய குடிகாரன் என்றும், தினமும் நள்ளிரவு தாண்டியபிறகுதான் வீடு திரும்புவான் என்றும் தோன்றும்! உண்மையில் அவன் எப்பொழுதோ கம்பெனிக்காக மட்டுமே குடிப்பான்.

'குடிக்கறவங்க இந்த மாதிரியே இருக்க மாட்டாங்க மாதவி! நீ சொல்றது குடிகாரங்களைப் பற்றி! ஒருவாய் குடித்தாலும் பத்து பாட்டில் குடித்தாலும் ஒரே மாதிரி வாய் நாற்றந்தான் வரும்.' அவளைச் சிரிக்க வைக்கச் செய்த முயற்சி வெற்றி பெறவில்லை.

தன்னைத் தேற்றிக்கொண்டு, அவளுக்கு நயந்து சொல்ல முயன்றான். 'பாரு மாதவி! மீட்டிங் முடிவதற்குள் பத்து மணியாகி விட்டது. பிறகு டின்னர் என்றார்கள். இன்றைய அட்டென்ஷன் எல்லாமே என்மீதுதான் இருந்தது. அப்படியிருக்கும்போது அதையெல்லாம் விட்டுவிட்டு என்னால் எப்படி வர முடியும்?'

'என்னை எதுக்குக் கட்டிக்கிட்டீங்க? அந்த கம்பெனியையே கட்டிட்டிருக்கலாமே!'

'ரெண்டையும் ஒரே சமயத்தில்தான் கட்டிக்கிட்டேன் நம்ப பழைய நாட்களை மறந்துட்டியா மாதவி? இரவும் பகலும் கைத்தறியோடு உழன்று கொண்டிருந்த நாட்கள் அவை. பாடுபடாவிட்டால் முன்னுக்கு வருவது சிரமம். இப்போது நாம் இவ்வளவு சுகத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம் என்றால் - கஷ்டப்பட்டதால்தானே அது வந்தது?'

'நிறுத்துங்க! குடிச்சிட்டால் போதும், எதை வேணும் னாலும் உளறுவீங்க.'

அவன் சிலையாகி விட்டான். மென்மையான நரம்பு ஏதோ அறுபட்டு இதயத்தைக் கீறினாற் போன்ற வேதனை. அவனுக்கு வாழ்க்கையில் முதன் முதலாகக் கோபம் வந்தது.

'அப்படீன்னா...நான் பொய் சொல்றேனா?'

'பொய்தான் சொல்றீங்களோ நிஜந்தான் சொல்றீங் களோ-எதைச் சொல்லித்தான் என்ன லாபம்? மனைவியை சுகமாய் வெச்சுக்கத் தெரியாத...'

'ஏன்? இப்ப உனக்கென்ன கஷ்டம்?'

'என்ன சுகம் இருக்குன்னு கேளுங்களேன்.'

'ஏனில்லை? மஹிளா மண்டலி மீட்டிங்குக்குப் போக கார் இருக்கு. ராத்திரி தூங்க ஏர் கண்டிஷனர் பெட்ரூம் இருக்கு. வேலைக்கு உதவி பண்றதுக்கு நாலு வேலை யாட்கள் இருக்காங்க. வேறென்ன சுகம்வேணும்?'

'அவ்வளவுதானா? இதானா சுகங்கறது?'

'பின்னே வேறென்ன?'

'ஒரு பொழுதுபோக்கில்லை, ஓரிடத்துக்குப் போற தில்லை.'

அவன் திகைப்படைந்து, 'மாதத்திற்கு நான்கு முறை டின்னருக்குக் கூட்டிட்டுப் போறேன். ஃபாமிலி பார்ட்டிங் களுக்குப் போறோம். இன்னும் வேறென்ன?'

'டின்னருக்கும் பார்ட்டிக்கும் போறது ஒண்ணுதானா பொழுது போக்குங்கறது? காலையில் போயி பாதி ராத்திரியில் எப்போவோ வரீங்க. வீட்டில் சமையல் பண்ற துக்குதான் மனைவி! ஏதோ ராத்திரி படுத்துக்கணுமேன்னு வீட்டுக்கு வரீங்க.'

அவனுக்கு அலுப்புத் தட்டிற்று. சுதாரித்துக்கொண்டு சொன்னான்: 'பார் மாதவி! சிலர் வாழறாங்க. வேறு சிலரோ வாழ்க்கையை சவாலாய் எடுத்துட்டுக் கஷ்டப் படறாங்க.'

'கஷ்டம், கஷ்டம், கஷ்டம்! நீங்க ஒருத்தர்தானா கஷ்டப்படறது? வேறு யாருமே கஷ்டப்படலையா?'

'இல்லை. பாரு, நிஜமாய் கஷ்டப்படறவங்க ரொம்பக் குறைவு. இல்லாவிட்டால் சினிமா தியேட்டருங்களும், ரேசு களும், 'பார்' களும் இவ்வளவு நிரம்பி வழியுமா?'

'உங்களை நியாயப்படுத்திக்க என்ன வேணுமானாலும் சொல்லுவீங்க.'

'உன்னோடு வாதாடுறேனே! உனக்குப் புரிய வைக் கணும்னு நினைச்சது என் தப்பு.'

'நானுந்தான் அப்படிச் சொல்வேன்! இந்த தப்பெல் லாம் அப்பாவால் வந்தது. உங்களண்டை எதுக்கு சத்தியம் வாங்கணும். நீங்கதான் எதுக்கு வாக்களிக்கணும்? உங்களையல்லாது யாராவது ஒரு குமாஸ்தாவைக் கட்டிக் கிட்டிருந்தால்கூட வாழ்க்கை இதைவிட சுகமாய் இருந் திருக்கும்.'

எரிமலை வெடித்துச் சிதறினாற்போல தளர்ந்து போய்விட்டான் அவன். நாம் படும் கஷ்டத்திற்கும், நமக்கு வேண்டியவர்கள் புரிந்துகொள்ளும் விதத்திற்கும் இவ்வளவு வித்தியாசம் இருக்கும் என்று எதிர்பார்க்க வில்லை அவன்.

# 5

ரவிக்குச் சட்டென்று விழிப்பு வந்தது. வியர்த்துக் கொட்டிற்று. மோசமான கனவு... படுக்கையில் திரும்பிப் பார்த்தான். மாதவி உறங்கிக் கொண்டிருந்தாள், மல் லாந்து, கால்களைப் பரப்பிக் கொண்டு, ரயில்வே பிளாட் பாரத்தில் கூலியாட்கள் படுத்துக் கொள்வதைப் போல! மனைவியை அந்த நிலையில் பார்க்க சகிக்காமல் திரும்பிப் படுத்துக் கொண்டான்.

கண்ட கனவே அவனைச் சுற்றிச் சுற்றி வந்தது. அவனுக்கு வெட்கமாயுமிருந்தது. அந்தக் கனவிற்கு அர்த்தந்தான் என்ன? தன்னை விட்டுத் தன் மனைவி தொலைவிற்குப் போய்விட வேண்டுமென்று மனதிற்குள் விரும்புகிறானா? இல்லை. அவள் பண்ணும் காரியங்களை யும், வாதாடுவதையும் பார்த்தால் கன்னத்தில் நாலு கொடுக்கவேண்டும் போன்ற ஆத்திரம் வருவது நிஜந்தான். இதற்காக அவளை விட்டுப் போய்விட வேண்டும் என்று ஒருநாளும் எண்ணியதில்லை. தன்னை நொந்து கொண்டு அழுது தீர்ப்பான். அவ்வளவுதான்!

திருமணமான புதிதில் இப்போதைவிட இன்னும் அதிக மாய் கஷ்டப்பட்டிருக்கிறான். அதைப் புரிந்துகொள்ள மாட்டாள் அவள். 'எதுக்கு அவ்வளவு கஷ்டப்படணும்? யார் கஷ்டப்படச் சொன்னாங்க உங்களை?' என்பது போன்ற கேள்விகளையே வீசுவாள். அவை ஈட்டியாய் இதயத்தைப் பிளக்கும் அவனை. எந்த மனிதனுமே பிறர் தன்னைப் புரிந்துகொள்வதற்காகத்தான் எல்லா காரியங் களையுமே பண்ணுவான். அப்படிப்பட்ட புரிந்து கொள்ளும் தன்மை வீட்டில் தன் துணைவியிடமிருந்தே கிடைக்காமல் போய்விட்டால் பிறகு என்ன லாபம்?

சரி போகட்டும். பணம் என்றாலே பிடிக்காதா என்று கேட்டாலும்—அதுவுமில்லை...

'ச்...ச்...ஃபங்ஷனுக்குப் போறத்துக்கு ஒரு புடவை இல்லை' என்பாள் கிளம்பும்போது.

'அதென்ன மாதவி? பீரோவில் அவ்வளவு புடவைங்களை அடுக்கி வைத்திருக்காயே?'

அவளிடம் 350 புடவைகள் இருப்பதை அவன் அறிவான். கணக்குப் போடவில்லை. ஆனால் மூளையில் பதிந்துவிட்டிருந்தது. 60 ஃபாரின் புடவைகள், 80 பட்டுப் புடவைகள், மதுரை, சேலம், கல்கத்தா போன்ற புடவைகள் 120, அதைத்தவிர ஷிபான் ஆர்கண்டி, ஃபுல் வாயில். ஆஃப் வாயில் மேலும் 90—

'நல்லா கணக்குப் போட்டு வெச்சிருக்கீங்களே?'

'கணக்குப் போடலை. 350 புடவைகளை வெச்சுக்கிட்டு, ஃபங்ஷனுக்குப் போக ஒரு புடவையும் இல்லைங்கிறாயே, ஏன்?'

'ஒருமுறை வந்து பாருங்க! எல்லோரும் புதுப்புது டிசைன்களில் உடுத்திட்டு வரும்போது நான் மட்டும் அழுமூஞ்சியோடு போய் நின்னுட்டு வரணும். எதற்குமே கொடுத்து வைக்கணும். எப்பப் பார்த்தாலும் இதே புடவைங்களையே கட்டிட்டு வரான்னு எல்லோரும் சிரிக்க மாட்டாங்களா?'

'பின்னே உங்கிட்டே இருக்கிற புடவைங்களையெல்லாம் என்ன பண்ணப்போறாய்?' ஆச்சரியத்தோடு கேட்டான்.

'எவ்வளவு இருக்கு? இதையே உங்க ஜெனரல் மேனேஜரிடம் கேட்டுப் பாருங்க, அவர் மனைவியிடம் எவ்வளவு புடவை இருக்குன்னு!'

'அவளும் இந்த ஃபங்ஷனுக்கு வரப்போகிறாளா?'

'வருவாள். ஏன்?'

'இப்போ அவங்க வீட்டில் கூட இதே மாதிரி வாதம் நடந்திட்டிருக்கும்னு நான் நினைக்கிறேன். அவளும் உன்னைப்பற்றித் தன் கணவரிடம் இதேபோல சொல்லிட்டிருப்பாள்.'

'நிறுத்துங்க! எதற்கெடுத்தாலும் இப்படி குதர்க்கமாய் பேசக் கற்றுக்கிட்டிருக்கீங்க.'

'ஆமாம், தர்க்கந்தான்! இரவும் பகலும் கஷ்டப் பட்டால் யாரி படச் சொன்னாங்க உங்களை, உங்களைப் பண்ணிக்கிட்டதைவிட ஒரு குமாஸ்தாவைப் பண்ணிக் கிட்டிருந்தால் நிம்மதியாயிருந்திருக்கும் என்கிறாய்! ஃபங்ஷனுக்குப் போனால் ஒரு தடவை கட்டின புடவையை இன்னொரு தடவை கட்டமாட்டேன் என்கிறாய். உன் னோடு எப்படித்தான் ஈடு கட்ட முடியுமோ?'

'மனைவிக்கு எல்லோரும் நல்லதாய் புடவை வாங்கித் தரணும்னுதான் நினைப்பாங்களே தவிர இதுபோல பேசி வாயை மூடணும்னு நினைக்கமாட்டாங்க.'

அவனுக்கு அலுப்புத் தட்டிற்று—எவ்வளவு சொன் னாலும் புரிந்து கொள்ளாத மனைவியைப் பார்த்து!

ஃபங்ஷனுக்குப் போய் எல்லோருடைய கண்களும் தன் மீதுதான் படவேண்டும், தான் எல்லோருக்கும் ஒரு கவர்ச்சியின் மையமாய் விளங்கவேண்டும், அதுதான் அவள் விருப்பம்! வாழ்க்கையில் வேறெந்த குறிக்கோளு மில்லாத பெண்களுக்கு இதைக் காட்டிலும் வேறெந்த ஆசை இருக்கும்?

அவனுக்கு இன்னும் அந்தக் கனவே நினைவிற்கு வந்து கொண்டிருந்தது. ஏன் வந்தது அக்கனவு? இதனால்தான் ஆண்கள் கிளப் என்றும் ரேஸ் என்றும் சுற்றத் தொடங்கி விடுகிறாரிகள் போலிருக்கிறது என்றெண்ணிக் கொண் டான்.

இப்பொழுது தான் என்ன பண்ணவேண்டும்?

அன்றிரவு அவனுக்கு அதற்கு மேல் தூக்கம் வரவில்லை. வெகுநேரம் அப்படியும் இப்படியும் புரண்டு படுத்தபடி இருந்தான்.

அவனுக்குத் தன் கடந்தகாலம் நினைவிற்கு வந்தது. பச்சைத் தரையில் படுத்தபடி எதிர்காலத்தைப் பற்றி யோசித்துக் கொண்டிருப்பான். இப்பொழுது நிகழ்காலத்தைப் பற்றிய யோசனை!

எதிர்காலத்தைப் பற்றிய யோசனைகளில் ஆனந்தம் இருக்கும். மனிதன் நிகழ்காலத்தைப் பற்றி யோசித்தானென்றால் கவலையில் மூழ்கியிருக்கிறான் என்று அர்த்தம்.

அவனிடமிருந்த சிக்கல் என்னவென்றால், கொஞ்சம் கருத்து வேற்றுமை வந்ததுமே ஈடுகட்டிக்கொண்டு போகத் தெரியாததுதான்.

தன்னை அவள் சார்பில் நிறுத்தி பாரபட்சமில்லாமல் யோசித்துக் கூட பார்த்தான்.

குழந்தைகளைப் பள்ளிக்குக் கூட்டிச் செல்வது, மனைவியோடு சேர்ந்து காய்கறி மார்க்கெட்டிற்குப் போவது, காலையில் பத்து மணிக்கு ஆபீசுக்குப் போய்விட்டு மாலையில் ஐந்து மணிக்கே திரும்பி வந்துவிடுவது...இதெல்லாம் மிக நல்ல விஷயந்தான். ஒவ்வொரு பெண்ணும் விரும்புவதும் அதுதான். ஆனால் நாளுக்கு நாள் மனிதனின் வாழ்க்கை பிரச்சினைமயமாகிக் கொண்டிருக்கும் இந்தக் காலத்தில்—விலைவாசி ஏற்றத்தால் திண்டாடிக் கொண்டிருக்கும் இந்தக் காலத்தில் ஒன்றையுமே சாதிக்காதவர்கள்கூட ஐந்து மணிக்குத் திரும்பி விடுவதில்லை என்பதை உணர மாட்டேன் என்கிறாளே!

பட்டினத்தில் தெருதெருவாய் அலைந்ததால் அவன் ஒரு விஷயத்தைத் தெரிந்துகொண்டான். தெருவில் சுற்றியலைந்து விற்பவனின் துணிகளை சாயந்திரமாகிவிட்டால் யாருமே வாங்க மாட்டார்கள். கணவன்மார்கள் வீட்டி

லில்லாத நேரத்தில்தான் பொழுது போக்கிற்காகக் கூப்பிடு வார்கள். ஒன்றிரண்டு வாங்குவார்கள். அதனால் அந்த நேரத்தில் விற்பதுதான் நல்லது. மீதி வேளைகளில் சுற்றி யலைவது வீண் முயறசி. அதனால் மாலை நேரத்தில் வேலை பண்ணுவதற்காக அவன் ஒரு துணிக்கடையில் சேர்ந்தான்.

ஒருநாள் ஒருத்தர் வந்தார். சுமார் ஐம்பது வயதிருக் கலாம். கடையிலிருந்த முதலாளியோடு சேர்ந்து எல் லோரும் அவர் வந்ததுமே எழுந்து நின்றார்கள். 'வெளியே கண்ணாடிக்குள் மாடல் பொம்மைக்குக் கட்டியிருக்கும் புடவை ரொம்ப நன்றாயிருக்கு. காரில் போகும்போது என்னைக் கவர்ந்தது. அதைக் கொடுங்கள்' என்றார். முதலாளி ரவியைப் பார்த்து 'அந்தப் புடவையை எடுத்துக் கொடு' என்று சொல்லிவிட்டு குளிர்பானம் தருவிப்பதற் காகப் போனார்.

ரவி ஒரு புடவையை எடுத்துத் தந்தான். அவர் அதை உற்றுப் பார்த்துவிட்டு, 'இதில்லை, வெளியே பொம்மைக் குக் கட்டியிருப்பது' என்றார்.

'அதுதான் இதுவும். ஒரே புடவைதான் சார்?'

'ஆனால் அதுதான் நன்றாயிருக்கு!'

ரவி அவரைப் பார்த்துச் சிரித்தான். 'எவ்வளவு நன்றாயிருந்தாலும் சரி, ஷோகேஸில் கட்டின புடவையை ஒருநாளும் வாங்காதீங்க சார். பலநாள் வெயிலில் பட்டு அவை நிறம் மங்கிப் போயிருக்கும்.'

அவர் முகத்தில் வியப்பு. 'ஆனால் இந்தப் புடவைக்கும் அதுக்கும் வித்தியாசம் இருப்பது போல தோணுதே!'

'புடவையில் இல்லை சார். கட்டியிருப்பதில்தான் வித்தியாசம்.'

அவர் அவனை ஒரு விநாடி கண் கொட்டாமல் பார்த்து விட்டு, 'சரி, பாக் பண்ணித் தா' என்றார். சொல்லி விட்டு முதலாளியிடம் போய் குளிர்பானம் அருந்தினார். இருவரும் பேசிக்கொண்டிருந்தபோது, 'யாரந்தப் பையன்?' தொலைவில் புடவையை பாக் பண்ணிக் கொண் டிருந்த ரவியைப் பார்த்துக் கேட்டார்.

'சாயந்தர நேரத்தில் பார்ட் டைம் பார்த்துட்டிருக் கான் சார்.'

'சாயந்திர வேளையிலா? இதற்கு முன்னால் இந்த மாதிரி சிஸ்டம் இல்லையே?'

'பகலெல்லாம் ரொம்பக் கூட்டமிராது. சாயந்திர வேளைகளில் ஒரு ரெண்டு மணி நேரம் நாலைந்து பேரை வெச்சுக்கிட்டால் நன்றாயிருக்கும். ரொம்ப சம்பளமும் தரவேண்டியிராது.'

'இந்த யோசனையைக்கூட அவன்தான் சொன் னானா?' என்று காரை நோக்கி நடந்தார்.

அதற்குள் ரவி புடவைப் பொட்டலத்துடன் வந்து சேர்ந்தான்.

'ஐயாவின் காரில் கொண்டு போய் வை' என்றார் முதலாளி. அவர் காரில் உட்கார்ந்து கிளப்பப் போன போது ரவி பாக்கெட்டை அவரிடம் நீட்டினான்.

அவர் புடவையைப் பெற்றுக்கொண்டு, 'கஸ்டமர் களிடம் இந்தப் புடவையை வாங்க வேண்டாம்னு ஒரு நாளும் சொல்லக் கூடாது' என்றார் சுருக்கமாய்.

'நம்மிடம் அதுபோல இன்னொரு புடவை இருந்த தானால் முதல் புடவையைப் பற்றிக் குறை சொல்வதன் மூலம் கஸ்டமர்களுக்கு நம்மீது நம்பிக்கை அதிகமாகும் சார். அந்த இரண்டாவது புடவை எப்படியாவது விற்றுத் தீர்ந்துடும் சார்.'

கார் புறப்பட்டுப் போய்விட்டது. ரவி உள்ளே வந்து பக்கத்திலிருந்த சேல்ஸ்மேனைக் கேட்டான் அவர் யாரென்று. 'சர்மாவைத் தெரியாதா? தேஜா டெக்ஸ் டைல்ஸ்...'

ரவிக்கு அதிர்ச்சியாயிருந்தது. தேஜா டெக்ஸ்டைல்ஸ் சேர்மேனுடன்தான் பேசியிருக்கிறான். அவருக்குப் புடவைகளைப்பற்றிச் சொல்லியிருக்கிறான்.

ஒரு காலத்தில் தேஜா டெக்ஸ்டைல்ஸ் மிகப் பிரசித்தி பெற்றிருந்தது. ஆனால் சர்மாவுக்குக் குதிரைப் பந்தயப் பழக்கம் ஏற்பட்டது. அதனால் லட்சக்கணக்கில் போய் விட்டது. குடிப்பழக்கம் ஏற்பட்டது. வியாபாரத்தின் மேல் உற்சாகம் போய்விட்டது. மெல்ல அக் கம்பெனி மூடப்படும் நிலைமைக்கு வந்தது.

ரவி வீட்டிற்குப் போனான்.

அதற்கு மறுநாள் பிற்பகல் மூன்று மணிக்கு ஒரு பெண் வந்தாள் அக்கடைக்கு. அவளுக்கு முப்பத்தைந்து வயதிருக் கலாம். உள்ளே நுழையவில்லை. கடைக்கு வெளியேயே நின்றபடி பொம்மையைப் பார்த்துவிட்டு, 'அதனால்தான் நான் கட்டிக்கிட்டால் அவருக்குப் பிடிக்கலை' என்று முணு முணுத்தாள். கடை முதலாளி ஓட்டமாய் ஓடிவந்து, 'என்னவாச்சு மேடம்?' என்று கேட்டார் கலவரத்தோடு.

'நேற்று அவர் இங்கேதான் வாங்கினாராமே இந்த மாதிரிப் புடவையை?'

'ஆமாம் மேடம்.'

'இந்த பொம்மைக்குக் கட்டினால் அவ்வளவு அழகா யிருப்பது போல நான் கட்டிக்கிட்டால் இல்லையாம். அதான் நேரில் பார்த்துட்டுப் போகலாம்னு வந்தேன்.' சிரித்தாள்.

'யார் கட்டினாங்க அதுக்கு?'

'ரவிங்கற பையன் மேடம்!'

அவள் காரில் போய் உட்கார்ந்துகொண்டாள். அவளுக்கு ஒரே சிரிப்பு வந்தது. கணவனின் வார்த்தைகளை நினைத்து அவ்வாறு வந்தது போலும்!

பெண்கள் ஷோ கேஸிலிருக்கும் பொம்மையைப் போலிருக்க வேண்டும் என்று எல்லா கணவருமே விரும்புவார்கள். அவ்வாறு முடியாவிட்டால் அலுத்துக்கொள்வார்கள்.

'யாரோ ஒருத்தன் கட்டியிருக்கிறான்! அது ஒரு கலை!' என்றாள் புன்னகை மாறாமல்.

'ரவி என்று ஒருத்தன் மாலை நேரங்களில் கடைக்கு வருவான் மேடம். பகலெல்லாம் சொந்தமாய் வீதியில் விற்பான்.'

அவள் சிரித்துக்கொண்டே தலையாட்டிவிட்டு, காரைக் கிளப்பினாள். காரை ஓட்டியவள் யதேச்சையாய் திரும்பிப் பார்த்துவிட்டுச் சட்டென்று காரைத் திரும்பவும் நிறுத்தினாள். அப்பொழுதுதான் ரவி படியேறி கடைக்குள் நுழைந்து கொண்டிருந்தான். அவள் கைகள் ஸ்டீயரிங்கின் மேல் முறுக்கேறிக் கொண்டன.

அவனேதான்...

ஐந்தாண்டுகளுக்கு முன்னால்—

மிஸ் கோயம்புத்தூராய் தேர்ந்தெடுக்கப்படுவதற்குச் சரியாய் இரண்டு மணி நேரத்திற்கு முன்னால் அவன் செய்துகொடுத்த அலங்காரங்களால் தன்னையே தான் கண்ணாடியில் பார்த்துக் கொண்டு தாங்கமாட்டாத உணர்ச்சிப்பெருக்கோடு யாரை முத்தமிட்டாளோ—அதே பையன்!

அவள் திரும்பி உள்ளே போகவில்லை! காரைக் கிளப்பிக் கொண்டு போய்விட்டாள். அவனைச் சந்திக்க

முயலவில்லை. அவள் முகத்தில் ஏதோ ஒரு உத்வேக உணர்ச்சி மட்டும் நிழலாடிக் கொண்டிருந்தது.

அன்று மாலை ஒரு தகராறு ஏற்பட்டது. அதே கடையில் கோபி என்ற இன்னொரு சேல்ஸ்மேனும் வேலை பார்த்து வந்தான். அவன் பல ஆண்டுகளாய் அந்தக் கடையில் வேலை பார்த்து இருக்கிறான். வாங்க வரும் பெண்களோடு ஜோக்கடித்துக் கொண்டிருப்பான். புடவைகளைக் காட்டும்போது வேண்டுமென்றே கையைத் தொடுவது, இந்த நிறம் உங்க உடம்புக்கு ரொம்பப் பொருத்தமாயிருக்கும் என்பது, உங்க உருவத்துக்கு எந்தப் புடவையானாலும் பொருந்தும்—என்றெல்லாம் சொல்வான். அவர்கள் ஏதேனும் கொஞ்சம் சிரித்து விட்டால் போதும் மேலும் நெருங்கத் தொடங்கிவிடுவான். 'ஷோ கேஸ் பொம்மைக்குப் புடவை கட்டியிருக்கும் விதத்தைப் பார்த்தீங்களா, அந்த மாதிரி கட்டிக்குங்க. அழகாயிருக்கும், நான்தான் கட்டினேன். வேணுமானால்...' என்று சொல்லி விட்டுப் பாதியில் சிரிப்பான்.

சில பெண்கள் இதுபோன்ற பேச்சை விரும்புவார்கள். அன்றைக்கு நிகழ்ந்த சம்பவமும் அப்படிப்பட்டதுதான். அந்தக் கடையிலேயே ரெடிமேட் துணிப்பகுதியும் இருந்தது. பிரா வாங்க வரும் சிலர் துணிச்சலாய் நம்பர் கேட்டு வாங்கிப் போவார்கள். சிலரோ சங்கோஜப்படுவார்கள். அப்படிப்பட்ட ஒருத்தி வந்து தலைகுனிந்தபடி நம்பரைச் சொல்லி, இருக்கா என்று கேட்டாள். கோபி பாக்கெட்டைத் திறந்து 'தர்ட்டி டூவில் இந்த வெரைட்டியானால்...' என்று ஏதோ அசிங்கமாய் பேசினான். அப்பெண் ஒன்றும் சொல்லாமல் போய்விட்டபிறகு, 'ஏன் அந்த மாதிரி கஸ்டமர்களைத் துரத்தி விடுகிறாய்?' என்று கேட்டான் ரவி.

'உன் வேலையை நீ பார்த்துக்கோ! என் விஷயம் உனக்கெதுக்கு?' என்றான் அவன். இருவருக்கும் தகராறு நேர்ந்தது. அன்று மாலையில் இரண்டு ரௌடிகளுடன்

வந்து ரவியைத் தள்ளினான் கோபி. ரவி கீழே விழுந்தான். அவன் கிராமத்தில் வளர்ந்தவன். மூவரையும் அடித்தான். மொத்தத்தில் நால்வருமே மருத்துவமனையில் சேர்க்கப் பட்டார்கள்.

ஒரு வாரத்திற்குப்பிறகு ரவி மருத்துவமனையிலிருந்து விடுதலையானபோது கடையில் அவன் பார்த்து வந்த வேலை போய்விட்டதாய் தெரிந்தது. இரண்டு நாட்களுக்கு முன்பே டிஸ்சார்ஜ் ஆகி வெளியே வந்திருந்த கோபி, ஏதேதோ புனைந்து சொல்லிவிட்டான். அவன் பல ஆண்டு களாய் வேலை பார்த்து வந்திருப்பதால் முதலாளி அவன் சொன்னதைத்தான் நம்பினார்.

ரவி பெரிதாய் வருந்தவில்லை.

அப்பொழுதே அவனுக்கு அந்த வேலை அலுத்துப் போயிருந்தது, வீண் வேலையாய் தோன்றிற்று. எவ்வளவு நாள் வேலை செய்தாலும் இப்படியேதான் இருக்க வேண்டும். அதற்குள் அவன் ஆயிரம் ரூபாய்கள் வரை சேர்த்து வைத்திருந்தான். ஆனால் ஆயிரம் ரூபாயைக் கொண்டு என்ன செய்ய முடியும்? ஏதோ ஒன்றைச் செய்யா விட்டால் வயிற்றுப்பாட்டிற்குக் கஷ்டம். யோசிக்கத் தொடங்கினான். இரண்டு நாட்களுக்குப் பிறகு அவனுக்கு ஒரு யோசனை பிறந்தது.

இச்சம்பவம் நடந்த ஒரு வாரத்திற்குப் பிறகு சர்மா திரும்பவும் அக்கடைக்கு வந்து ரவியைப் பற்றித் துப்புத் துலக்கினார்.

'அவனைத் தள்ளிட்டோம் சார்!'

ஆச்சரியமடைந்தவராய். 'ஏன்?' என்று கேட்டார்.

'என்னவோ துண்டுத் துண்டு துணிங்களையெல்லாம் அபேஸ் பண்றானாம்.'

'திருட்டுத்தனமா? அந்தப் பையன் ஒத்துக்கிட்டானா?'

'எப்படி ஒப்புக்குவான் சார்? அவன் ஏதோ கோபிங்கறவன் மீது புகார் சொன்னான், பெண்களிடம் அசிங்கமாய் நடந்துக்கிறான்னு. ஆனால் கோபி எங்களண்டை ரொம்ப நாளாய் வேலை பார்த்துவரான்' என்றார் முதலாளி.

அந்த விவரங்களையெல்லாம் தெரிந்து கொண்டதும் சர்மா வீட்டிற்கு வந்து மனைவியிடம் நடந்ததையெல்லாம் சொன்னார். 'ஏதோ நல்ல வேலை தரலாம்னு போனால் அந்தக் கடையிலேயே தள்ளிட்டாங்களாம். நீ பெரிய கெட்டிக்காரன்னு சொல்லி சிபாரிசு பண்ணினாய். பாரு, என்ன வேலை பண்ணியிருக்கான்னு!' என்றார். அவள் பதில் பேசவில்லை.

# 6

மறுநாள் மாலை ஷாப்பிங்கிற்கு அந்த கடைக்கே போனாள் அவர் மனைவி. கோபியிடம் போய் நின்றாள். அந்தப் பக்கமாய் திரும்பி துணிகளை அடுக்கிக் கொண்டிருந்த கோபி பின்னால் திரும்பியபோது அவளைப் பார்த்தான். ஒரு விநாடி அவள் அழகைப் பார்த்துத் திகைத்துப் போய் நின்றுவிட்டான்.

'என்ன காட்டணும் மேடம்?'

அவள் சட்டென பதில் சொல்லாமல் சிரித்தாள்.

ஐந்தாண்டுகளுக்கு முன்னால் கல்லூரி மாணவர்களையெல்லாம் மஜ்னுவாக்கி சத்தியநாராயணபுரத்தைச் சுற்றிச் சுற்றி வரும்படிச் செய்த சிரிப்பு அது.

'பிராசியர்ஸ் இருக்கா?' என்று கேட்டாள் சிரித்துக் கொண்டே. '36 நம்பர் வேணும்!'

அவள் நம்பரைச் சொன்னதுமே கோபியின் முகத்தில் கேலிச் சிரிப்போடு கூடிய ஒருவித உணர்ச்சி நிழலாடிற்று,

சாதாரணமாய் பார்ப்பது போல அவள் மார்புப் பகுதியை ஒருமுறை நோட்டமிட்டுவிட்டு அவள் முகத்தைப் பார்த்தான். ஒருவிதமான கீழ்த்தரமான தொழிலை எடுத்துக் காட்டும் பார்வை அது.

அவள் முகத்திலிருந்த சிரிப்பு மாறவேயில்லை.

அவன் திரும்பி பின்னாலிருந்த ஷெல்ஃபிலிருந்த பாக்கெட்டுகளை வெளியே எடுக்கத் தொடங்கினான். எடுத்தபடியே யோசிக்கலானான். அவள் தன் பார்வையைக் கண்டுகூட சிரிப்பு மாறாமலிருந்தது அவனுக்கு ஒருவித துணிச்சலைத் தந்தது. அதற்கு முன்னாலோ அவளிடமிருந்த பெருந்தன்மை அவனை அச்சுறுத்திற்று.

அவன் பலவித பிராக்களை எடுத்துக் காட்டிவிட்டு, 'இந்த கொக்கி புதுசாய் வந்திருக்கு மேடம்! திறந்து போட சுலபமாயிருக்கும்' என்றான். அப்படிச் சொல்லிக் கொண்டே அவன் அந்த பிராவைத் தூக்கிப் பிடித்துக் கொண்டிருந்த தோற்றம் அசிங்கமாயும் அருவருப்பாயுமிருந்தது.

அவள் நிமிர்ந்து பார்த்தாள்.

அவன் சிரித்தான்.

'யாருக்கு? எனக்கா? அவருக்கா?' என்றாள் அவள் மிகச் சன்னமான குரலில்—பக்கத்திலேயிருந்த சேல்ஸ் மேனுக்குக்கூட கேட்காதபடி மெல்ல. அதனால் அவனுக்கு மேலும் துணிச்சல் ஏற்பட்டது. அவனுக்குத் தன் அழகின் மீது மிக நம்பிக்கை இருந்தது.

அதற்குள் அவள் பாக்கெட்டிலிருந்து இன்னொன்றை எடுக்க கைவைத்தாள். அதே சமயத்தில் அவன் தான் கையில் பிடித்துக் கொண்டிருந்ததைப் போட்டுவிட்டான். அது அவள் கையின்மேல் விழவே, வேறொன்றை எடுத்து அவளுக்குக் காட்டும் சாக்கில் தானும் அதன்மேல் கை வைத்து, துணிகளுக்குக் கீழேயிருந்த அவள் கையை மெல்ல

தொட்டான். அவள் கையை எடுத்துக்கொள்ளாததால் சுண்டு விரலை அழுத்தினான்.

அப்பொழுதுதான் அவன் கன்னம் அதிர்ந்தது.

அந்த சப்தம் அந்த ஹால் முழுவதும் எதிரொலித்தது.

பேசிக்கொண்டிருந்த வாடிக்கையாளர்கள் எல்லோரும் திரும்பிப் பார்த்தார்கள்.

அங்கு மயான அமைதி சூழ்ந்தது... கொஞ்ச நேரம் வரை. கௌண்ட்டருக்கருகில் இருந்த முதலாளி ஓடி வந்தார். அவள் தேஜா டெக்ஸ்டைல்ஸ் முதலாளி சர்மா வின் மனைவி என்று தெரிந்ததுமே அவருக்கு உதறலெடுத் தது. 'என்னவாச்சு மேடம்? என்னவாச்சு மேடம்?' என்றார் கலவரத்தோடு.

அவள் கை இன்னும் எரிச்சல் எடுத்துக்கொண்டே இருந்தது. இதற்கு முன்னால் நாலைந்து முறை படித்துக் கொண்டிருந்த காலத்தில் இதேபோல அடித்திருக்கிறாள். ஆனால் அப்பொழுது மாணவர்கள் சாதாரணமாய் சைக்கிளில் உட்கார்ந்து கொண்டு கடிதத்தைத் தந்தோ அல்லது தொலைவிலிருந்து கேலியாய் பார்த்துச் சிரித்துக் கொண்டோதான் இருந்திருக்கிறார்களே தவிர இந்த மாதிரி இல்லை. எதிரே நின்று கொண்டிருந்த ஆளை, பத்து நிமிடத்திற்கு முன்பே அடிக்க ஆயத்தமாயிருந்து, கை நீட்டி அடித்தது.

கோபியின் கண்கள் இருண்டன. அவன் இன்னும் அதிர்ச்சியிலிருந்து மீளவில்லை. கண்மூடித் திறப்பதற்குள் நடந்து முடிந்து விட்டது இத்தனையும். அதற்குள் அவள் விடுவிடென்று வெளியே நடந்தாள்.

முதலாளி அவளுக்குப் பின்னாடியே கைகளைப் பிசைந்துகொண்டு ஓடினார். அவள் ஒன்றும் பேசாமல் காரில் ஏறி உட்கார்ந்து ஓட்டிக்கொண்டு போய்விட்டாள்.

அவள் வீட்டிற்குப் போய்ச் சேருவதற்குள்ளாகவே நாலைந்து முறை போன் வந்துவிட்டது. அவள் போனை எடுத்தாள்.

கடை முதலாளி, 'மேடம்! சாரி மேடம் சாரி!' என்றார்.

இச் சம்பவம் கடை விற்பனையை எவ்வளவு பாதித்து விடும் என்றறிவார் அவர்.

'பரவாயில்லீங்க. நடந்ததென்னவோ நடந்துடுத்து.'

முதலாளி நிம்மதியாய் மூச்சுவிட்டவர், 'தாங்க்ஸ் மேடம்...' என்றவர் நிதானமாய், கெஞ்சுவதுபோல... 'இந்த விஷயத்தை சர்மா அவங்களிடம்...' என்று பாதியில் நிறுத்தினார்.

'சொல்ல மாட்டேனுங்க. ஆனாலும் பெண்மணிங்க வந்தால் கடையில் அப்படிப்பட்ட ஆளு இருந்தால் விற்பனை...' என்று முடிப்பதற்குள்ளாகவே அவர் இடைமறித்து, 'ஆமாம் மேடம்! ரொம்ப டேஞ்சர்' என்றார்.

'அப்ப, அவனை என்ன பண்ணினீங்க?'

'அப்போதே தள்ளிட்டேன் மேடம். தர வேண்டிய சம்பளத்தைக் கூட தந்து உடனே அனுப்பிட்டேன்.'

'குட்...இவன் சங்கதியை இதுக்கு முன்பே உங்களிடம் ஒரு சேல்ஸ்மேன் சொன்னானில்லையா, அனாவசியமாய் அவன்மேல் திருட்டுப்பட்டம் கட்டி தள்ளிட்டீங்க.'

'ஆமாம் மேடம், தப்பாயிடுத்து. இவன் ரொம்ப நாளாய் வேலையில் இருக்கானேன்னு இவன் பேச்சை நம்பிட்டோம்.''

'பாவம், அவன் எங்கேயிருக்கான் இப்போது?'

'தெ...தெரியாது மேடம்.'

'தென்பட்டால் உடனே திரும்பி வேலைக்கு எடுத்துக் குங்க.'

'கண்டிப்பாய் மேடம்... இந்த விஷயத்தை சரிமா சாரி வரையிலும்...'

'நான் மறந்துடறேன். நீங்களும் மறந்துடுங்க.'

'தாங்க்ஸ் மேடம்'

'சரி'

ஃ ஃ ஃ

ஆனால் ரவி திரும்பி அந்தக் கடைக்கு வேலைக்குப் போகவேயில்லை. வேலை போய்விட்ட பிறகு இனி என்ன செய்வது என்று பலவாறு யோசித்தான்.

ஆயிரம் ரூபாயை வைத்துக்கொண்டு வியாபாரம் பண்ண முடியாதென்று அவனுக்கும் தெரியும். கொஞ்சம் கடன் வாங்கிக்கொண்டால் அதிகமாய் போனால் இருபது புடவை வரும். அவ்வளவுதான்.

ரவி யோசித்தான்.

ஏதாவது ஒன்றைப் புதிதாய் பண்ணினாலொழிய லாப மில்லை. கடை வேலையை விட்டதால்—வீட்டிற்குக்கூட பணம் போதவில்லை. மாதவியும் மாதவியின் தாயும் முணுமுணுக்கத் தொடங்கி பல நாட்களாகிவிட்டன. மைத்துனனுக்குத் தெருதெருவாய் சுற்றுவதைத்தவிர வேறு வேலையில்லை.

'ஒரேயொரு பேண்டில் எவ்வளவு முறைதான் தைப்பது? தையல் கூட நிற்க மாட்டேங்குது' என்று மாதவி தனக்கு அதைத் தைக்க விருப்பமில்லாததை எடுத்துக்காட்டி விடவே, முழங்காலுக்கருகில் கிழிந்திருந்த கிழிசலை பின்னால் வேறொரு துணியை வைத்து ஒட்டுப் போட்டுத்

தானே தைத்துக்கொள்ள தொடங்கினான். தையல் வெளியே தெரியாமல் பேண்ட்டைத் தைத்துக் கொண் டிருந்தபோது—

திடீரென்று மூளையில் மின்னல் பளிச்சிட்டது.

சாதாரண புடவையின் மேல் வேறு துணியால் டிசைன் தைத்து, அதனை ஓர் அபூர்வ, அழகான புடவையாய் மாற்றுவதை 'ஆப்ளிக்வர்க்ஸ்' என்பார்கள். எம்பிராய்டரி அவ்வளவு அழகாயிருக்காது என்று நிறையப் பேர் நினைப் பார்கள். ஆனால் அது தைப்பவர்களின் திறமைக் குறைவே தவிர, புடவையின் நிறமும் மேலே போடும் துணியின் நிறமும் சரியாய் மாட்ச் ஆகவேண்டும். மாட்சி ஆவது என்றால் வெள்ளைக்குக் கருப்பும், கருப்புக்கு வெளுப்பும் போன்ற துணி மாட்ச்சிங் இல்லை. அதை ஏட்டில் படித் தால் வராது. தைக்க வேண்டிய டிசைனைப் பொறுத்து கலரைத் தேர்ந்தெடுத்துக்கொள்வதும் ஒரு கலை! அப்படிப் பட்ட கலை அவன் கையிலிருந்தது!

ரவி யோசித்தது ஒன்றைப்பற்றித்தான்! கடைக்காரர் கள் பொதுவாய் தருவது—சிறப்பாய் தராதது ஒன்றை தான் தரவேண்டும். கடைக்காரர்கள் பண்ணிய ஆப்ளிக் வேலைகளில் நல்ல துணிகளைப் பயன்படுத்த மாட்டார்கள். புடவையைக் காட்டிலும் சீக்கிரத்தில் அவை வெளுத்துப் போய்விடும். நல்ல புடவைகளுக்கு மட்டமான துணிகளைப் போட்டால் டிசைன் எடுப்பாய் தென்படாததோடு, புடவையின் அழகும் கெட்டு சுருங்கியும் விடும். கடைகளில் கிடைப்பவை எல்லாமே ஒரே ரகமாய்த்தான் இருக்கும். இந்த விதத்தில்தான் அவன் தன் திட்டத்தை அமு லாக்கத் தீர்மானித்துக்கொண்டான்.

அதில் அவன் எப்படியும் கைதேர்ந்தவன்!

கையிலிருந்த முதலீடு ஆயிரத்துடன்—இன்னும் ஒரு ஆயிரத்திற்குக் கடனாய் இருபது புடவைகளை வாங்கிக் கொண்டான். பத்து ஜார்ஜெட், பத்து ஆர்கண்டி, ஒவ்

வொன்றிலும் ஐந்து ஐந்து புடவைகளைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு பத்து நாட்கள் உட்கார்ந்து கொண்டு அவற்றில் ஆப்ளிக் வேலைகளைச் செய்து முடித்தான்.

மொத்தம் இருபது புடவைகளையும் எடுத்துக்கொண்டு ஒரு அரசாங்க அலுவலகத்திற்குப் போனான்.

ரவி தன் இருபது புடவைகளையும் எடுத்துக்கொண்டு போய் காட்டியபோது, பெண்கள் கூடி பார்த்து விட்டு உதட்டைப் பிதுக்கினார்கள். கொஞ்சம் அதிக தவணை தருவதாய் ஒப்புக் கொண்ட பிறகு இரண்டு புடவைகளை மாத்திரம் எடுத்துக் கொண்டனர். அவையும் சாதாரண புடவைகள், ஆப்ளிக் வேலை பண்ணாத புடவைகள்.

அப்பொழுது ஆப்ளிக் வேலைகளைப் பற்றி ஒருவரும் அறிந்திலர். அவன் பண்ணிய வேலைகளைக்கூட யாருமே அவ்வளவாய் பொருட்படுத்தவுமில்லை. குண்டாயிருந்த ஒருத்தி மட்டும் அதை வாங்கிக் கொண்டாள். சாதாரணமாய் பார்ப்போருக்கு அவ்விரண்டு புடவைகளுக்கும் வித்தியாசம் தெரியாது. ஆப்ளிக்கின் திறமை அதைக் கட்டிக் கொண்டால்தான் தெரியும். முதல்நாள் அவள் தேர்ந்தெடுத்துக் கொண்டபோதே அவள் தேக அமைப்பை மனதிற்குள் எடைபோட்டு வைத்துக் கொண்டான்—அடுத்த புடவையைத் தைக்கும் போது—அந்த தேகத்திற்குப் பொருந்தும் விதத்தில் பார்த்துத் தைப்பதற்காக...

—மேலாக்குக்குப் பக்கத்தில் ஒரு பூ.

—தலைப்பின் கோடியில் இன்னொன்று.

—இடுப்பின் வளைவிலே ஒன்று.

கால்களுக்கருகில், வலது பக்கத்துக் கொசுவங்களுக்குள் மறைந்தும் மறையாமலும் ஒன்று.

—இடதுபக்கத்துத் தொடையிலிருந்து கொசுவங்களுக்குள் மறைந்தபடி ஒன்று—

மொத்தம் ஐந்து பூக்கள். புடவை முழுவதும் சன்ன மான கோடுகள், நடுநடுவே சிறிய புள்ளிகள்—அவள் கட்டிக்கொண்டால் நன்றாய் பொருந்தும் விதத்தில் தைத்தான்.

கிளிப்பச்சை நிறத்தில் அந்த ஆப்ளிக் எவ்வளவு அழகாய் அமைந்திருந்ததென்றால்—இரண்டு நாட்களுக்குப் பிறகு அவள் அதைக் கட்டிக்கொண்டு ஆபீசிற்கு வந்த அன்று—தலைமைச் செயலகத்தில் வேலை நிறுத்தத்தின் போது ஏற்படும் பரபரப்பைவிட அதிகமாய் பரபரப் பாயிற்று.

பூக்களைப் பொருத்தியிருந்த விதத்தில்தான் அந்த ட்ரிக்கே இருந்தது என்பதைத் தெரிந்துகொள்ளாத பெண் கள்—எல்லாப் புடவைகளையும் விழுந்தடித்துக் கொண்டு வாங்கினர்.

ஆயிரத்திற்கு இன்னும் ஒரு ஆயிரமாய் லாபம் வந்தது. அதுதான் தொடக்கம். பிறகு இரண்டாண்டுகளில்—அதாவது 1978—79 ஆண்டுகளில் சாதாரண அமெரிக்கன் ஜார்ஜெட் புடவைகளுக்கு சின்னச் சின்னப் பூக்களுடைய துணிகளைக் கரையாய்ப் போட்டு அதே நிறத்தில் பிளவுசு களை அணிவது சிறந்த ஃபேஷனாய் மாறிற்று.

தொடர்ந்து அவன் ஓயவேயில்லை. சுமார் பதினைந்து கடைகளுக்கு ஆப்ளிக்குகளைப் பட்டுவாடா செய்தான். சென்னையில் சுமார் பத்து அலுவலகங்களில் வேலை செய்யும் ஒவ்வொரு பெண்மணியும் அவனிடம் கடன் கணக்கு வைத்துக்கொள்ளத் தொடங்கினாள்.

முதல் ஆறுமாதங்களில் விற்பனை அரை லட்சத்தைத் தாண்டி விட்டது.

அப்பொழுதுதான் சர்மா அவனைச் சந்தித்தார்,

# 7

ஏதோ ஓர் அலுவலகத்தில் புடவை விற்பனை தொடர்பாகப் பேசிவிட்டு அவன் படியிறங்கிக் கொண்டிருந்தபோது எதிரே வந்த சர்மா அவனைத் தடுத்து நிறுத்தினார். 'அந்தக் கடையில் எனக்குப் புடவையை விற்றது நீதானே?' என்றார். ரவி ஆமாம் என்றான்.

'அன்றையிலிருந்தே உன்னைத் தேடிக்கிட்டிருக்கேன். பாவம் வேலை பறிபோயிருச்சாமில்லே? உன்னைப் பற்றிப் பொய் சொன்ன அவனுடைய வேலையும்தான் போயிருச்சாம்! என் மனைவி சொன்னாள். சரி, இப்போ என்ன பண்ணிக்கிட்டிருக்கே?'

'தவணை முறையில் புடவைகளை வித்துக்கிட்டிருக்கேன், அரசு அலுவலகங்களில்.'

'உன் கையில் திறமை இருக்கு. நீ எங்க கம்பெனியில் சேர்ந்தால் என்ன?'

ரவி சிரித்துவிட்டு, 'சம்பளம் எவ்வளவு தருவீங்க?' என்றான்.

'ஐநூறு. போதுமா?'

'தற்போது எனக்கு டிசைன்களைக் கத்தரித்துத் தரும் ஆளுக்கு நான் அந்த சம்பளந்தான் தந்துகிட்டிருக்கேன். மன்னிச்சிடுங்க. உங்களைப் புண்படுத்தும் நோக்கமில்லை எனக்கு. இப்போது நான் பண்ணிக்கிட்டிருக்கும் ஆப்ளிக் வேலையில் லாபம் நல்லாதான் வந்துகிட்டிருக்கு. அதை விட்டுட்டு வர முடியாது.'

'உன் விற்பனை எவ்வளவு இருக்கும்?'

'போன மாதம் சுமார் ஒரு லட்சம்.'

சர்மா திகைப்படைந்தவராய் அவனைப் பார்த்தார். தேஜா டெக்ஸ்டைல்ஸின் சென்னை கிளை விற்பனையை விட அது அதிகம்.

சர்மா வியாபாரப் புள்ளி. தன் முகத்தோற்றத்தை அவன் படித்தறிய விடாமல் ஜாக்கிரதையாய், 'சரி விடு. உனக்கு உன் வியாபாரத்தில் எவ்வளவு லாபம் வருதோ அவ்வளவையும் தந்துடறேன். உன் ஆப்ளிக் வேலைகளை யெல்லாம் எங்க கம்பெனிக்கே பண்ணித் தாயேன்' என்றார்.

ஆறு மாதத்திற்கு முன்பாயிருந்தால் ரவி சந்தோஷத் தோடு குதித்துக் கும்மாளமிட்டிருப்பான். அப்பொழுது அவன் ஒரு துணிக்கடையில் சேல்ஸ்மேன் மட்டுந்தான். ஆனால் இப்பொழுது...விற்பனை ருசியைக் கண்டுபிடித் திருக்கும் நபர். அந்த ஏணி அவனை எதில் ஏற்றி வைக்குமோ எனத் தெரியாதவன். சிரமங்களுக்குப் பழக்கப் பட்டு விட்டிருப்பவன்!

'அதுக்கு எவ்வளவு தருவீங்க?'

'மாதம் பத்தாயிரம் ரூபாய்.'

அதாவது வருடத்திற்கு லட்சத்து இருபதாயிரம். அவன் நடைபாதையில் படுத்து உறங்கிய நாட்களில், அதி லிருந்து ஒரு சைபரை நீக்கிவிட்டாலும்கூட,—அதுவே அவன் கனவிலும் நினைத்திராத பெரிய தொகை.

தான் சொன்ன தொகையைக் கேட்டு அவன் முகத்தில் தோன்றிய மாறுபாட்டைக் கவனித்த சர்மா வேறுவித மாய்ப் புரிந்துகொண்டு, தான் தவறுதலாய் அதிகமாய் சொல்லிவிட்டோமோ என்றெண்ணினார்.

'நீ சொன்னதுபோல போன மாதம் உன் விற்பனை லட்ச ரூபாயாயிருக்கும்பட்சத்தில்தான் இது...' என்று முடித்தார்.

சர்மா பத்தாயிரம் என்றதுமே ஒத்துக்கொள்ளத் துணிந்துவிட்டிருந்த ரவி, அவர் கடைசியாய் சொன்ன இவ் வார்த்தைகளைக் கேட்டு வருத்தமடைந்தான். கடைசியில்... முதல் முதலாய் அவரைப் பார்த்ததுமே மதிப்பு ஏற்பட்டது. தேஜா டெக்ஸ்டைல்ஸின் எம். டி. என்றதுமே அனாவசியமாய் ஆலோசனை தந்துவிட்டதற்குக்கூட பயந்தான். ஆனால் இப்பொழுது அவர் அசல் வியாபாரியாய் பேசியதால், தானும் அதுபோலவே பேசத் தொடங்கினான். பின்னே என்ன? எப்பொழுது வியாபாரமானது களத்தில் இறங்கிவிட்டதோ இனி அங்கிருந்து எஞ்சிய எல்லாமே ஓடிப்போய்விடும். தன் கையிலிருந்த 'கலை'யின் மதிப்பை உணர்ந்தவன் அவன். இப்பொழுதே தன் வியாபாரத்தில் பத்தாயிரம் லாபம் சம்பாதித்துக் கொண்டிருக்கிறான் அவன்.

'வருடத்திற்கு லட்சத்து இருபதாயிரம் தரேங்கிறீங்க. எனக்கு அவ்வளவு தேவையில்லை. உங்க கம்பெனியில் ஐந்து சதவீதம் ஷேர் கொடுங்கள், போதும்.'

'உனக்கு ஏதாவது புத்தி பிசகிருச்சா? எங்க கம்பெனி கோடிக்கணக்கில் புழங்கும் கம்பெனி.'

'இருக்கலாம். ஆனால் கடந்த பத்தாண்டுகளாய் ஒரு ரூபாய்கூட பங்குதாரர்களுக்கு லாபத்தைப் பங்கிட்டுத் தரவில்லை. ஷேரின் விலை பத்தில் ஒரு பாகம்கூட இல்லை மார்க்கெட்டில்.'

சர்மா யோசனையில் ஆழ்ந்தார். இதில் பிசகு ஏதாவது இருக்குமோ என்று யோசித்தார்.

ரவி சொன்னான்—'பாருங்க! உண்மையில் மாதத்துக்குப் பத்தாயிரம் என்றதுமே நான் எகிறிக் குதித்து சந்தோஷமாய் ஒப்புக்கிட்டிருக்கணும். ஆனால் உங்க ஷேரை ஏன் கேட்கிறேன்? உங்களுள் ஒருவனாய் கலந்து போய்விடுவதற்குத்தான்! அப்பத்தான் எனக்கும் வேலை

பண்ணணும் என்ற தவிப்பு இருக்கும். ஐந்து சதவீதம் ஷேரின் மூலம் என் சாப்பாட்டுக்குத் தேவையான பணங் கூட வர வழியில்லை.

ரவி தன் கம்பெனியைப் பற்றி இவ்வளவு விவரங்களை எப்படித்தான் தெரிந்து கொண்டிருக்கிறானோ என்று வியந்தார் அவர். அவன் எல்லா கம்பெனிகளையும் அது போலவே கவனித்து வருகிறான் என்பதை அறியார் அவர். எது எப்படியானால் என்ன, கொஞ்சநேரம் யோசித்த பிறகு சர்மா ஒப்புக்கொண்டு விட்டார்.

...அந்த விதமாய் ரவி, தேஜா டெக்ஸ்டைல்ஸில் பங்குதாரரானான்.

அன்றிலிருந்து தேஜா கம்பெனி வளர்ச்சி பெறத் தொடங்கிற்று. கம்பெனி முழுவதுமே இல்லை, ஆப்ளிக் பகுதி மட்டுமே! அதற்கு ரவிதான் அதிபதி. அந்த ஒரு பகுதியின் மூலம் வரும் லாபத்திலேயே அந்த மொத்த கம்பெனியையே போஷிக்க வேண்டிய நிலைமை ஏற் பட்டது. 1978—79ல் அந்த ஆப்ளிக் வேலைப்பாடு நாட்டையே ஒரு உலுக்கு உலுக்கி விட்டது.

தேஜா கம்பெனியில் அறுபது சதவீதத்திற்கு மேலா கவே சர்மாவிற்கு ஷேர் இருந்தது. அவரிடமிருந்த குதிரைப்பந்தய பைத்தியம் இதர டைரக்டர்களுக்குத் தலைவலியாய் இருந்தது. கம்பெனியின் மூலதனத்தை மட்டும் தொடமாட்டார். ஆனால் லாபத்தையெல்லாம் குதிரைப் பந்தயத்தில் தொலைத்து விடுவார். அதனால் வளர்ச்சி நலிந்தது. பல ஆண்டுகளாய் இவ்வாறே நடந்து வந்து கொண்டிருந்தது.

ரவி தன் பொறுப்பை ஒரு யாகத்தைப் போல நிறை வேற்றி வந்தான். ஆறு மாதங்களில் அவன் மார்க் கெட்டைப் பற்றி அலசி ஆராய்ந்தான். பிரபல கம்பெனி களின் ஷேர்கள் நாளுக்கு நாள் விலை ஏறிக் கொண்டிருக்

கின்றன. தம் கம்பெனி ஷேர் மட்டும்தான் ஏறவில்லை. அதற்குக் காரணம் எல்லோருக்குமே தெரிந்ததுதான். ஆனால் ஒருவராலுமே ஒன்றும் பண்ண முடியவில்லை. ஓராண்டு கழிந்தது. அதற்குள் அவன் தேஜா டெக்ஸ் டைல்ஸிற்குப் பின்னால் ஒரு பலமான சக்தியாய் மாறி விட்டான்.

'பிரேம மஞ்சரி' என்ற குதிரை ஜெயிக்கும் என்று சர்மாவுக்கு உறுதியாய் தெரிந்தது. அதன்மீது இருபது லட்சம் கட்ட உறுதி எடுத்துக்கொண்டு விட்டார். பணம் இல்லை. எவ்வளவோ வழிகளில் முயன்றார். பங்குகளை அடமானம் வைக்கலாம் என்றெண்ணினார். ஆனால் மார்க்கெட்டில் அந்த பங்குகளை அடமானம் வைத்துக் கொள்வதற்கு யாருமே முன்வரவில்லை.

குட்டிபோட்ட பூனையாய் அலைந்தார்.

சரியாய் அந்த சமயத்தில்தான் ரவி, எஞ்சிய டைரக்டர் களோடு சேர்ந்து அவருக்கு ஒரு யோசனை சொன்னான்.

தேஜா டெக்ஸ்டைல்ஸ் 'ஒரு நாளுக்காக' மட்டும் சர்மாவுக்கு இருபது லட்சம் அதிகாரபூர்வமாய் கடன் வழங்குவதென்றும், அந்தக் குதிரை தோற்றுவிடும் பட்சத் தில் சர்மா தன் பங்குகளை எல்லாம் இழந்துவிட்டது போலாகும் என்றும், வென்றுவிட்டால் இருபது சதவீதம் கம்பெனிக்கு வெகுமானமாய் தரவேண்டியது என்றும்...

சர்மாவுக்கு இந்தத் திட்டம் புரியவில்லை. இயக்குநர் கள் எல்லோருமே உட்கார்ந்திருந்தார்கள். அவர்கள் வீட்டில், கீழ் ஹாலில் இந்தக் கூட்டம் நடந்தது.

'நீங்க என்ன சொல்றீங்களோ எனக்குப் புரியவில்லை. இருபது லட்சத்திற்காக என் அறுபது சதவீதங்களை இழப் பதா? இந்த தேஜா டெக்ஸ்டைல்ஸ் என்னால் ஸ்தாபிக்கப் பட்டது. அதனுடன் என் சம்பந்தத்தை முறித்துக் கொள் வதா?'

'குதிரை தோற்றுவிட்டால் அப்படித்தான் பண்ணணும்' என்றான் ரவி. தொடர்ந்து... 'குதிரை தோற்றுவிட்டால் கம்பெனியே இருக்காது. இனி முறித்துக் கொள்வதைப் பற்றிய பேச்சு எதுக்கு?' என்றான்.

'என்னது?'

'ஆமாம்.'

'துணி தயாரிப்புக்காக ஸ்தாபித்த ஃபேக்டரியின் பணத்தை இந்த விதத்தில் குதிரைப் பந்தயத்தில் இழந்து விட்டோம் என்று எந்த ஒரு அங்கத்தினராவது போலீஸ் கம்ப்ளையிண்ட் கொடுத்தால் எல்லாரும் ஜெயிலுக்குப் போகணும். எல்லாருக்குமே ஏழாண்டுகளுக்குக் குறையாமல் சிறைத் தண்டனை கிடைக்கும். அதற்குப் பிறகு கம்பெனி ஏது?'

சர்மாவுக்கு அவன் சொன்னது புரிந்தது.

'ஒருகால் ஜெயித்துவிட்டால்?'

'ஜெயித்தால் அந்த இருபது லட்சத்துக்கு மேலே உங்களுக்கு ஒரு முப்பது லட்சம் லாபம் வரும். லாபத்தை நீங்க வெச்சுக்குங்க. உங்களுக்கு இந்த உதவி பண்ணியதற்காக எங்களுக்கு இருபது சதவீதம் பங்குகளை தானம் பண்ணப் போறீங்க. அவ்வளவுதான்.'

'அதாவது 60 சதத்திலிருந்து என் ஷேர் 40 சதத்திற்குக் குறைந்துடப் போகுது. கம்பெனி விவகாரங்களில் எனக்கு எந்த செல்வாக்கும் இராது. அவ்வளவுதானே?'

யாருமே பேசவில்லை. தன் குதிரைப் பந்தய பலவீனத்தை மற்றவர்கள் நன்றாய்ப் பயன்படுத்திக் கொள்கிறார்களோ என்ற சந்தேகம் ஏற்பட்டது சர்மாவுக்கு.

அதை மறுத்து ரவி சொன்னான் :

'நீங்கள் எங்களுக்குத் தந்திருக்கும் பங்குகளைக் கூட நாங்கள் உங்கள் பேரிலேயே ட்ரஸ்ட்டிலேயே வைத்திருக்கோம். அதாவது அதன் மூலம் வரும் லாபம்கூட உங்களையே சேரும்.'

'அதாவது இருபதுலட்சம் ஒரு நாளைக்கு எனக்குத் தந்ததற்கு, உங்களுக்கு நான் என் கம்பெனியின் அதிகாரங்களை ஒப்படைச்சிட்டு, லாபத்தை மட்டும் எடுத்துக்கணும். அதானே?'

'கேவலம் ஒரு நாளைக்கு கடன் தந்ததற்கு இல்லை. எங்க ஆறு பேரின் எதிர்காலமும் ஜெயிலில் கழியாமலிருக்க வேண்டும் என்ற 'ரிஸ்க்' எடுத்துக்கிட்டதால்...''

சர்மா யோசித்தார். 'சரி, நீங்க சொன்னது போலவே செய்வோம். இருபது லட்சம் தாங்க. ஆனால் இந்தப் பணத்தை எனக்குத் தந்தது போல எந்த ரிகார்டிலும் இருக்கக் கூடாது, இதுதான் என் நிபந்தனை!'

அவர் சொன்னது அங்கிருந்த எல்லோருக்குமே புரிந்தது. குதிரை தோற்றுவிட்டால்—இருபது லட்சம் போய்விடும். தேஜா டெக்ஸ்டைல்ஸ் இயக்குநர்கள் எல்லோரும் அரெஸ்ட் ஆகிவிடுவார்கள். சர்மா மட்டும் அரெஸ்ட் ஆகமாட்டார். (கம்பெனி பணமில்லாமல் மூடப்படும். அது வேறு சங்கதி) தலைக்கு மேல் போய் விட்ட பிறகு சாண் போனாலென்ன முழம் போனாலென்ன?

குதிரை ஜெயித்தால்—மறுநாள் பணம் கட்டப்பட்டு விடும். சர்மாவின் பங்கு சர்மாவுக்கே கிட்டும்; அதிகாரம் மட்டும் இராது. அவருக்கு எந்த நஷ்டமுமில்லை.

இயக்குநர்கள் யோசனையில் ஆழ்ந்தார்கள். எல்லோரும் அதை ரவியின் தலையில் தள்ளி விட்டார்கள். இறுதியில் அந்த பொறுப்பைத் தான் ஒருவனே தாங்கிக் கொள்ள ரவி ஒப்புக் கொண்டான்.

அதாவது ஒருவேளை இந்த விஷயம் வெளிப்பட்டு விட்டால், ரவிதான் அந்தப் பணத்தைக் கம்பெனியிலிருந்து எடுத்துத்தந்ததாய் போலீசாரின்முன்னால் ஒப்புக் கொள்ள வேண்டும். இந்த மாதிரி உடன்படிக்கை ஏற்பட்டது.

அன்றிரவு ரவிக்கு உறக்கமே வரவில்லை—டென்ஷ னால். மேல் அறையிலிருந்து இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த இன்னொருத்திக்கும்கூட!

# 8

அடுத்த நாள் சர்மாவைத் தவிர மற்றவர்கள் தேஜா டெக்ஸ்டைல்ஸ் போர்டு அறையில் உட்கார்ந்திருந்தார்கள். எல்லோரது முகத்திலும் டென்ஷன்.

'இந்த ஏற்பாட்டால் சர்மாவோடு நிரந்தரமாய் நாம் மனஸ்தாபத்தை வரவழைத்துக்கொண்டு விடுவோமோ என்னவோ?' என்றார் ஒரு டைரக்டர்.

'இதுவரைக்கும் இந்தக் கம்பெனியில் அவர் சொன்னது தானே வேதவாக்கு?'

'அது குதிரை ஜெயிக்கும் விஷயத்தைப் பொறுத்திருக்கு. தோற்று விட்டால் என்னவாகும்? கம்பெனி நிரந்தரமாய் மூடப்பட்டுவிடும்.'

'ரவி ஜெயிலுக்குப் போவான்'—முடித்தார் இன்னொ ருத்தர்.

அதற்குள் இன்னொரு டைரக்டர், 'சர்மா நல்லவர் தான்...ஆனால் அவருக்கு இந்தப் பணப் பித்து போகாத வரையிலும் இந்த கம்பெனி உருப்பட வழியில்லை. இன்னும் கொஞ்ச நாள்இப்படியே நீடித்தால்—நமக்குள்ளே இருக்கட்டும் இந்த விஷயம்—நான் இதுவரைக்கும் யாரிட

மும் சொன்னதில்லை—இந்த ஷேர்களையெல்லாம் விற்று விட்டு கம்பெனியிலிருந்து கழட்டிக்கலாம்னு இருக்கேன்.'

'நானும் அப்படித்தான் இருக்கேன். கேவலம் அவர் மேலுள்ள மரியாதையால் அவர் எதைச் சொன்னாலும் ஒத்துக்கிட்டு வந்தேன். ஆனால் எவ்வளவு நாளைக்கு? நம் எல்லோருக்காகவும் செலவழிக்கிறார். ஆனாலும் அதுக்கும் ஒரு எல்லை இல்லையா என்ன? கம்பெனிதான் முக்கியம்.'

ரவி பேசாமல் அவர்களது பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தான். உண்மையில் பிரச்சினை அவர்களுடைய தில்லை. தன்னுடையது. மனதிற்குள் நினைத்துக்கொள் டான்: 'இந்த நேரத்தில் குதிரை ஓடத் தொடங்கியிருக்கும்.'

எல்லோரும் அவரவர்களின் யோசனையில் ஆழ்ந்தி ருக்கும்போது 3.20க்கு போன் ஒலித்தது. ஒரு டைரக்டர் ரிசீவரை எடுத்தார். ரவியின் இதயம் வேகமாய் துடித்தது.

மறுமுனைச் செய்தியை ஒரு நிமிஷம் கேட்டுவிட்டுப் போனைக் கீழே வைத்தவர்—'டியர் ஃபிரெண்ட்ஸ், பிரேம மஞ்சரி குதிரை நான்கு லெங்த்தில் வெற்றி யடைந்து விட்டதாம்' என்று தெரிவித்தார் முறுவலுடன்.

திடீரென்று ஹாலில் கைத்தட்டல் ஓசை அதிர்ந்தது. எல்லோரும் கைக் குலுக்கிக் கொண்டார்கள். எந்த சந்தோஷத்தையும் வெளிக்காட்டாதவன் ரவி ஒருத்தன் தான். உண்மையில் பிரச்சினையே இப்போதிலிருந்துதான் தொடங்கப் போகிறது. எப்போது சர்மாவின் சர்வாதி காரம் போய்விட்டதென்று தெரிந்ததோ, அப்போது திலிருந்து ஒவ்வொருவருத்தரும் இனி தாமே இந்தக் கம்பெனி விவகாரங்களைத் திருத்த வேண்டும் என்று முயற்சிப்பார்கள்.

அரைமணிக்குப்பிறகு சர்மாவின் கார் விர்ரென்று பறந்து வந்தது. அவ்வளவு வயதானவர் சிறுவனைப்போல

ஓட்டமாய் படியேறி ஓடிவந்தார். ரவியைப் பிடித்துக் கொண்டு உலுக்கி விட்டார். 'பிரேம மஞ்சரி ஜெயித்து விட்டது. முப்பது லட்சம்' என்று கத்தினார். அவர் முகம் ஆயிரம் வாட் பல்பைப் போல பிரகாசித்தது. பத்து நிமிஷங்கள் கடகடவென்று அந்தக் குதிரையின் வெற்றியைப் பற்றிப் பிரலாபித்தார். கடைசியில் நிஜ விஷயத்திற்கு வந்தார்.

'நான் நம் பெரிய மனிதர்களின் ஒப்பந்தப்படி இருபது சதவீதம் ஷேர்களை டிரஸ்டிற்குத் தந்து அதிகாரத்தை விட்டு நீங்கிக்கணும். ஆனால் நான் அப்படிச் செய்வதாய் எழுத்து மூலமாய் எந்த ஒப்பந்தமும் கிடையாது. நான் முடியாது என்று சொல்லி விட்டாலும் யாரும் ஒன்றுமே பண்ணிட முடியாது' என்று எல்லோரையும் பார்த்துச் சிரித்தவர் '... நான் என் இருபது சதவீதத்தைத் தர முடியாது' என்று நிறுத்தினார்.

அங்கே ஊசி விழுந்தாலும் கேட்கும்படியான நிசப்தம் ஏற்பட்டது. அந்த நிசப்தத்தை ஊடுருவிக்கொண்டு அவர் குரல் திரும்பவும் ஒலித்தது.

'மொத்தம் அறுபது சதவீதம் ஷேர்களையும் டிரஸ்ட்டாய் நியமித்து ரவியை டிரஸ்டியாய் வைக்கப் போறேன். தேஜா டெக்ஸ்டைல்ஸிலிருந்து வெளிவரும் ஒவ்வொன்றும் இன்றிலிருந்து 'ரவி தேஜா' என்ற பெயரில் வரும்.' திடீரென்று ஹாலில் மறுபடியும் கரகோஷம் வானைப் பிளந்தது.

ரவி அவ்வாறு கைதட்டிய டைரக்டர்களைப் பார்த்தான். இதில் எத்தனை பேர் மனப்பூர்வமாய் கைதட்டினார்களோ தெரியாது. சர்மா தன் அதிகாரத்தை விட்டு நீங்கினால், அதைத் தம் கைகளில் ஏந்திக்கொள்ள ஏன் தான் இவ்வாறு தவிக்கிறார்களோ அதுவும் புரியவில்லை. நாளைக்குத் தான் அதை ஏற்றுக்கொண்டால் எவ்வளவு பேர் ஆதரவு தருவார்களோ, அதுவும் தெரியாது. நேற்று

வந்த ஆள் அவன். அவன் திரும்பி சர்மாவைப் பார்த்தான். இக்கிழவர் வாழ்க்கையில் முதன்முதலாக வெற்றி பெற்று விட்ட ஆனந்தத்தில் என்னென்னவோ பைத்தியக்காரத் தனமான வாக்குறுதிகளைப் பண்ணிக் கொண்டிருக்கிறார். இதை எவ்வளவு தூரம் காப்பாற்றப் போகிறாரோ, பார்க்கலாம். எந்த நிமிடத்திலாவது கோபம் வந்து, 'டிரஸ்டும் இல்லை, மண்ணும் இல்லை, போங்கள்' என்றும் சொல்லிவிடலாம். இந்தச் சூடு தணிந்தபிறகு அவரிடம் பேச வேண்டும் என்றெண்ணிக் கொண்டான்.

ஆனால் ரவியையும் முந்திக் கொண்டு சர்மாவே இரண்டு நாட்களுக்குப் பிறகு அவனோடு பேசினார்.

ரவி எடை போட்டிருந்ததைக் காட்டிலும் பெரிய வியாபார மேதைதான் அவர்!

'நான் ஒன்றும் முட்டாளில்லை, உன்னை மேனேஜராய் போடுவதற்கு! எனக்கு அந்த பொறுமையும் கிடையாது. எனக்குத் தேவையான, மாதத்திற்கு இரண்டு லட்சம் செலவை இந்த கம்பெனியால் தாங்கிக்க முடியலை. என் ஷேரை அவ்வளவு லாபம் வராப்பல பண்ணு. உன்னை நிரந்தரமாய் எம்.டி. யாக்கிடறேன். நான் இந்த மாதிரி குதிரை பைத்தியமாகி குடிச்சுட்டே கழிச்சுடறேன் என் வாழ்நாளெல்லாம்' என்றார்.

வேறு யாராவதாயிருந்திருந்தால் ஒப்புக் கொண்டிருப் பார்கள். ஆனால் ரவியோ எதிர்காலத்தைப் பற்றி யோசித்தான்.

'நான் கடுமையாக உழைத்து, லாபத்தை நோக்கி இந்தக் கம்பெனியைக் கொண்டுவருவேன். அதற்குப்பிறகு என்னை திடீரென்று நீக்கினால்...'

'பின்னே என்ன பண்றது? ஷேர்களையெல்லாம் உன் பேருக்கு மாற்றணுமா?'

'தேவையில்லை, பதவியை எனக்குத் தாங்க. லாபத்தை நீங்க எடுத்துக்குங்க. ஆனால் நான் கேட்பது இதுதான். முடிவு மாற்ற முடியாததாக இருக்கணும், அவ்வளவு தான். நான் எதையாவது செய்து காட்டணுமானால் எல்லா அதிகாரமும் எனக்குத் தேவை. லாபம் அவசிய மில்லை.'

'எனக்குச் சம்மதந்தான்' என்றார் சர்மா. அந்த விதமாய் தொடங்கப்பட்டது ரவிதேஜா டெக்ஸ்டைல்ஸ் கம்பெனி.

அன்றையிலிருந்து தினமும் பதினெட்டு மணி நேரங்கள் பாடுபட்டு உழைக்கத் தொடங்கினான் ரவி.

# 9

அப்பொழுதே அவன் காமர்ஸில் டிப்ளோமா பாசாகி யிருந்தான். கம்பெனி முழுவதையும் ஒரு குடைக் கீழ் கொண்டு வந்தான்.

இரண்டாவது ஆண்டு கம்பெனியின் லாபத்தைப் பார்த்துவிட்டு, 'மைகாட்! தேஜா டெக்ஸ்டைல்ஸ் இவ் வளவு லாபத்தைத் திரும்பவும் தன் வாழ்நாளில் காண முடியும்னு நான் கனவிலும் எதிர்பார்க்கலை' என்றார் சர்மா.

அதுவரை நேற்று வந்தவனைத் தலைமேல் தூக்கி வைத்துக் கொண்டு விட்டதாய் முணுமுணுத்துக் கொண்டி ருந்த ஒரு சில டைரக்டர்கள் கூட மூன்றாம் ஆண்டு முடி வடைவதற்குள் திருப்தியடைந்து வாயை மூடிக் கொண் டார்கள்.

அணுவணுவாய் வளர்ச்சியடைந்து கொண்டிருந்த தேஜா டெக்ஸ்டைல்ஸின் மேல் அதிருப்தியடைந்தவர்களும் இல்லாமல் போகவில்லை.

அவர்களுள் முக்கியமானவர்கள் செஞ்சுராமய்யா கம்பெனிக்காரர்கள்.

தக்க சமயத்திற்காக கவனமாய் காத்துக் கொண்டிருந் தார்கள்.

1985 செப்டம்பரில் அந்த நாள் வந்து சேர்ந்தது. அதற் குள் 'ரவிதேஜா டெக்ஸ்டைல்ஸ்' துணி உலகில் முடிசூடா மன்னனாகத் திகழ்ந்து கொண்டிருந்தது. நூறு ரூபாய் ஷேர் ஆயிரமாக மாறிற்று. கம்பெனியை விரிவுபடுத்துவதற் காக மார்க்கெட்டிற்குள் நுழைந்தான் ரவி.

முதலீட்டைக் கோடி ரூபாய்க்குக் கொண்டு வந்துவிட வேண்டும் என்பதே அவன் ஆசை. நாட்டிலிருந்த நான்கு பெரிய பாங்கு சேர்மேன்களைச் சந்தித்தான். அவர்களுக்குப் பார்ட்டிகளைத் தந்தான். அவன் ஷேர்களை வாங்கு வதற்கு—சிறிய சிறிய கம்பெனிகளுக்கு அந்த நான்கு பாங்கு களும் கடன் வழங்குவதாய் ஏற்பாடாயிற்று.

நல்லதோ கெட்டதோ தெரியாது—இந்திய நாட்டு வர்த்தக வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயம் தொடங்கப் படுவதற்கு அவன் அந்த விதமாய் வழி ஏற்படுத்தி விட்டான்.

அவனுக்குத் தெரியாதது என்னவென்றால்... தன் ஒவ்வொரு நடவடிக்கையையும் மிக ரகசியமாய் செஞ்சு ராமய்யா கவனித்து வருவது...

ஒரு பிரபல தினத்தாள் இச் செய்திகளைப் பிரசுரித்து குண்டை வெடிக்கத் தயாராயிருப்பது...

அந்தக் குண்டு மட்டும் சரியாய் வெடித்துவிட்டால் ஆடை உலகத்திலிருந்து ரவியின் பெயர் நிரந்தரமாய் நீக்கப் பட்டுவிடும்.

இந்த ஏற்பாடுகள் எல்லாம் ஒருபுறம் நடந்து கொண்டிருந்த அதே சமயத்தில் ரவிதேஜா ஷேர்கள்—கோடி ரூபாய் விலை மதிப்புள்ளவை—மார்க்கெட்டில் விடுதலையாயின.

ரவிதேஜா கம்பெனி முதலீடு மார்க்கெட்டிற்கு வந்ததுமே, முதலில் தீர்மானித்திருந்தபடி சின்னச் சின்ன கம்பெனிகள் எல்லாம் அந்த ஷேர்களை வாங்கின. அது ஒரு பரபரப்பான செய்தியாய் பரவிவிட்டது. அப்பொழுதே 'ஆர். டி.' புடவைகளைப் பற்றி எல்லோருக்கும் தெரிந்திருந்ததால்—அது யாருக்குமே அவ்வளவாய் சந்தேகத்தை ஏற்படுத்தவில்லை. ரவிதேஜாவின் ஷேர் குறைந்தபட்சம் பத்தாவது தம்மிடம் இருப்பதைச் சொல்லிக் கொள்வதே ஒரு பெருமையாய் பாவித்தார்கள் எல்லோரும். எங்கே வளர்ச்சி உண்டோ அவ்விடத்தில் விரோதமும் இருக்கும். செஞ்சுராமய்யா அண்ட் கோ ஆட்களுக்கு மத்திய நிதி மந்திரியுடன் நெருங்கிய சம்பந்தமுண்டு. மத்திய அரசில் இருந்த கட்சி சம்பந்தப்பட்ட தினத்தாள் அந்தவிதமாய் செஞ்சுராமய்யாவுக்கு வேண்டிய பத்திரிகையாகி விட்டது.

வேடன் வலையை விரித்து உட்கார்ந்திருப்பது போல் இந்த பத்திரிகை சம்பந்தப்பட்ட ஆட்கள், ரவியைச் சுற்றி இருந்து வந்தது ரெண்டாம் பேருக்குத் தெரியாது. அவ்வளவு ரகசியமாய் நடந்தது. ரவிதேஜா கம்பெனியின் நிதி இலாகாவில் செஞ்சுராமய்யாவின் ஆட்கள் நியமிக்கப்பட்டார்கள்.

தன் சுற்றுப்புறத்தையெல்லாம் தயார் பண்ணிக் கொண்டு அந்த பத்திரிகை இதையெல்லாம் செய்தியாய் பிரசுரித்தது. பிறகு, இக்கோடி ரூபாய்க்குப் பின்னாலிருந்த விவகாரங்கள் எல்லாம், பாங்குகளின் பேருடன் கூட எங்கெங்கே எந்தெந்த விதத்தில் யார் யார் கூடியது, யார் யாரை எப்படி திருப்தியடையச் செய்தது என விவரமாய் ஒரு மாத காலம் வரையிலும் தொடர் கட்டுரை

யாய்ப் பிரசுரித்தது. சி.பி.ஐ. இதற்காகவே எதிர்பார்த்துக் கொண்டிருந்தாற்போல களத்தில் இறங்கிற்று. ஆடை உலகத்தில் துருவ நட்சத்திரமாய் பிரகாசித்துக் கொண்டிருந்த ரவிதேஜா டெக்ஸ்டைலை இது இடியாய் தாக்கிற்று.

சர்மா நிலைகுலைந்து போய் விட்டார். ஷேர்களை எல்லாம் விற்றுவிட்டு வியாபாரத்திலிருந்தே விலகி, தப்பித்துப்போய்விட நினைத்தார். ரவியும், இன்னும் மூன்று டைரக்டர்களும் தைரியமாயிருந்தார்கள். எது நேர்ந்தாலும் எதிர்த்து நிற்கத் துணிந்தார்கள்.

வியாபாரத்தில் இது நீதி அது அநீதி என்று எதுவுமே கிடையாது. கோர்ட் இது சட்ட விரோதம் என்று நிரூபிக்கும் வரையிலும் யாருமே குற்றவாளியாக மாட்டார்கள். மூன்று மாதங்கள் வரையிலும் ஷேர் மார்க்கெட்டே அதிர்ந்தது. நோட்டீசாய் விட்டுக் கொண்டிருந்தது. எல்லோர் பார்வையும் இந்தக் கம்பெனியின் மீதே லயித்திருந்தது. ஆனாலும் வழக்குப் போடப்படவில்லை. காரணம், ரவி தேஜா கம்பெனி செய்தது சட்ட விரோதமில்லை. நீதி முறையாய் பார்த்தால் தவறாயிருந்திருக்கலாம். அது வேறு விஷயம். இதனைச் சட்ட விரோதமாய் கொண்டு வருவதற்காக செஞ்சு ராமய்யா நிதிமந்திரியோடு சேர்ந்து பலவாறு பாடுபட்டான். ஒரு பக்கத்தில் இதைப் பண்ணிக் கொண்டு மற்றொரு பக்கத்தில் மக்களுக்கு ஆர்.டி. புடவைகளின் மேலிருக்கும் மோகம் போகும்படி பிரசாரத்தைத் தூண்டி விட்டான். மக்களின் சொத்தை விழுங்கிவிட்ட கம்பெனி என்ற உணர்ச்சியை மக்களிடையே பரப்ப முயற்சி பண்ணினான்.

மல்ட்டி-நேஷனல் கம்பெனிகளின் மீது போராட்டங்கள் இந்த விதத்தில்தான் நடக்கும். இந்தப் போராட்டமும் மூன்று மாதங்கள் அதே போல நீடித்தது.

செஞ்சுராமய்யா போட்டகணக்கு எங்கே பிசகியது என்றால் மக்கள் சாமான்களை உற்பத்தி பண்ணும் ஆட்களையோ அல்லது கம்பெனியையோ பொருட்படுத்த மாட்டார்கள் என்பதில்தான்.

'அதே விதமாய்த்தான் ரவிதேஜா கம்பெனியின் பொருளாதார விஷயம்—தற்காலிகமாய் வளர்ச்சிக்குக் குந்தகம் விளைவித்தபோதிலும், ஆர். டி. புடவைகளையும் ஆப்ளிக் புடவைகளையும் ஜனங்கள் விழுந்தடித்துக் கொண்டு வாங்கிக் கொண்டேதான் இருந்தார்கள். ஒரு பக்கத்தில் எந்த நேரத்திலும் இடி விழுந்து விடலாம் என்றிருந்த சமயத்தில், பிரதம மந்திரிக்கும் நிதிமந்திரிக்கும் இடையே கருத்து வேற்றுமை வந்து காபினெட் மாற்றப் பட்டதால் அவருக்குப் பதவி பறிபோய் கிழக்குப் பக்கமாய் தள்ளப்பட்டுவிட்டார். திடீரென்று முக்கியமான ஆள் பதவியிலிருந்து இறங்கிவிடவே, சின்னச் சின்ன விரோதி களைக் கைக்குள் போட்டுக்கொள்வது ரவி தேஜா டெக்ஸ் டைல்ஸ் போன்ற கம்பெனிக்கு பெரிய பிரச்சினையா யில்லை. செஞ்சு ராமய்யாவின் மேல் இவ்விதமாய் வெற்றி கொண்டதால் ரவிதேஜா கம்பெனியின் ஷேர் திடீரென்று மேலும் பெருகத் தொடங்கிற்று.

இந்த ரகளையில் சர்மா ஷேர்களை விற்றுவிட்டிருந் தால் வாழ்நாளெல்லாம் வருத்தப்பட்டிருப்பார். அவ் வாறு செய்யாமல் தடுத்தது ரவிதான்! ஷேர்களின் விற் பனை விஷயத்தில் பொருளாதார நிபுணர்கள் சிலரின் ஆலோசனையை ஒவ்வொரு வினாடியும் பெற்றான். அது பயன் தந்தது.

அன்றிரவு நன்றாய் குடித்து விட்டு அழுதுகொண்டிருந் தார் சர்மா. அவ்வளவு பெரியவர் ரவியின் கைகளைப் பிடித்துக்கொண்டு, 'ரவி! எங்கிருந்தோ சூறாவளியாய் வந்துச் சேர்ந்து என் கம்பெனி விவகாரங்களையெல்லாம் பிடுங்கிகொண்டு என்னைக் கட்டிப் போட்டுட்டாயேன்னு

இவ்வளவு நாளும் கொஞ்சம் கோபப்பட்டது நிஜந்தான் அப்பா! ஆனால் இன்றைக்கு அது போயிடுத்து' என்றார்.

'பரவாயில்லைங்க' என்று சொல்லவில்லை ரவி. ஆச்சரியத்தோடு அவரைப் பார்த்தான். இவர் எம்.டி. யாய் இருந்தபோது எந்த தீர்மானத்தையும் எடுத்துக் கொள்ள மாட்டார். எப்பொழுது பார்த்தாலும் குடித்துக் கொண்டேயிருப்பார். எந்த லாபத்தையும் எதிர்பார்க்காமல்தான் இதுவரையிலும் இவ்வளவு பாரத்தையும் தாங்கிய படி இத்தனை பண்ணிக் கொண்டிருக்கும்போது, இவருக்குத் தன் மேல் கோபமாயிருந்ததாம்! இவரைத் தன்னால் ஒன்றுமே புரிந்து கொள்ள முடியாது. தேஜா கம்பெனி முழுவதும் எவ்வளவு சம்பாதித்துத் தந்ததோ அவ்வளவையும் அவருடைய ஷேருக்கே தந்து கொண்டிருக்கிறான். குதிரைகளின் மீது மேலும் அதிகமாய் செலவழித்துக் கொண்டிருக்கிறார் அவர். அதற்கு அவர் நன்றியை எடுத்துக்காட்டும் விதம் இதுதானா?

அன்றிரவு அவன் டயரியில் இவ்வாறு எழுதிக் கொண்டான்.

'நான் இதையெல்லாம் ஏன் பண்ணுகிறேன்? உபாயத்துக்கு மேல் உபாயம். மனக்குமுறல்...ஒரு காலத்தில் என்னுள் இருந்த நெசவு உணர்ச்சி இப்போது என்ன ஆயிற்று? நிலா வெளிச்சத்தில் உட்கார்ந்துகொண்டு தறியில் துணி நெய்தபடி ஜரிகைப் பாட்டுப் பாடியவன் என்னவானான்? பசியால் துடிக்கும் வயிற்றோடு தலையில் துணி மூட்டை சுமந்துகொண்டு நடைபாதையில் உறங்கிக் கொண்டிருந்தபோது உள்ளிருந்து ஓடிப்போய் விட்டானா? என்னுள்ளிருக்கும் இந்த தாகம் எப்பொழுது தீரப் போகிறது? வாழ்க்கையை ஆனந்தமாய் அனுபவிப்பதை விட்டு விட்டு, இன்னும் இன்னும் ஏதோ சாதிக்க வேண்டுமென்ற தவிப்பே ஏன் அதிகமாகிறது? கேவலம், வீட்டில் குடும்ப சுகம் இல்லாததாலா? வீட்டில் சுகமில்லாதவர்

கள்தான் வெளித்துறைகளில் மிகவும் முன்னுக்கு வருகிறார்கள் என்பது உண்மைதானோ? சிறுவயதிலிருந்தே அன்பு இல்லாமையால்தான் நான் இவ்வாறு 'வேலை வேட்கை'யில் இறங்கி விட்டேனா? முன்னேற்றத்தில் ருசிகண்டு விட்டவனுக்கு அதற்குப் பிறகு வேறெந்த விஷயத்திலும் உற்சாகமே இராதோ? எது என்னவானாலும், எனக்குக் கொஞ்சம் விடுதலை கிடைக்க வேண்டும். இல்லாவிட்டால் என்னால் அதிக நாட்கள் வேலை பண்ணமுடியாது...'

டயரியை மூடிவைத்தான். வெளியே மழை தொடங்கி விட்டது. ஜன்னல் கதவுகளை மூடுவதற்காக எழுந்து போனான். ஆகாயத்தில் மேகங்கள் திரண்டிருந்தன—அவன் எதிர்காலத்தின் மீது—விதியைப் போல—பரவலாய்.

கொஞ்ச நேர விடுதலைக்காக சூரியன் கொஞ்சம் மேகத்திற்குள் நுழைந்ததுமே—காத்துக் கொண்டிருந்த இருளானது வேகமாய் வந்து சூழ்ந்து விட்டது!

# 10

வெளியே மழை வலுத்தது. பலமாய் இடி இடித்த ஓசை கேட்டது. தன் கடந்த கால நினைவுகளிலிருந்து அன்றிரவு அவனால் மீண்டு வரவே முடியவில்லை.

அவனுக்கு எந்தக் கெட்ட பழக்கமும் இல்லை. முக்கியமாய், பிறரை இம்சிக்கும் குணமில்லை. பிற ஆண்களைப் போல மனைவியின் பிறந்த வீட்டைக் குத்திப் பேசுவதோ கேலியாய் ஜோக் அடிக்கும் பழக்கமோ அவனுக்குக் கிடையாது. ஒவ்வொரு விஷயத்தையும் அணுவணுவாய் ஆலோசித்துப் பார்ப்பதால் அவனுக்குக் கோபம், ஆத்திரம் போன்றவைகூட வராது. மாதவியைத்தவிர வேறு எந்தப் பெண்ணாயிருந்தாலும் சரி, அந்த வீட்டில் அதிகமாய் சுகப்

பட்டிருப்பாள். எப்பொழுது எதிரான அபிப்ராயங்கள் உண்டாகி விட்டதோ அப்பொழுதே நிம்மதி போய் விட்டாற் போலத்தான்.

வெளியே மழை வலுத்தது. அவன் படுக்கையிலிருந்து எழுந்து ஜன்னலைத் திறந்து மழையை வேடிக்கை பார்க்கத் துவங்கினான். எப்படியும் இனி தூக்கம் வரப் போவதில்லை. மழைக்கு இறுக்கமாகிவிட்டிருந்த கதவு சட்டென்று திறந்துகொள்ளவில்லை—அவன் மனதைப் போலவே.

அந்த ஓசைக்கு மாதவி தூக்கத்தில் புரண்டு, 'நள்ளிர வில் கொட்டு கொட்டுனு முழிச்சுக்கிட்டு படுத்துக்கவும் மாட்டீங்க. மத்தவங்களை தூங்கவும் விடமாட்டீங்க. உங்களுக்கென்ன எட்டு மணிக்கு தூங்கி முழிப்பீங்க. விடியல்லேயே எழுந்திருக்கிறவங்களுக்குத்தானே கஷ்ட மெல்லாம் தெரியும்' என்றாள்.

வாழ்க்கையில் எதை இழந்து விட்டான் என்பது அவனுக்கு ஒரு வெளிநாட்டுப் பயணத்தின்போதுதான் தெரியவந்தது. தேஜா டெக்ஸ்டைல்ஸின் சார்பில் ஆறு மாதங்கள் பயிற்சிக்குப் போக வேண்டியிருந்தது. அப்பொழுது அவனுக்கு மாதவியோடு விவாகமாகி நான்கு வருடங்கள் ஆகி விட்டிருந்தது. கிளம்பும்போது மாதவி சொன்னாள் : 'மறந்துட மாட்டீங்களே. எனக்கு ஒரு வாட்ச் தங்கச் செயினுடன் வேணும்.' என்றாள். அவன் முறுவலுடன் தலையாட்டினான். கம்பெனிக்கார் விமான நிலையத்திற்கு கூட்டிச் செல்வதற்காக வீட்டிற்குமுன்னால் வந்து நின்றது. அவன் எல்லா சாமான்களும் சரியாயிருக் கிறதா என்று பார்த்துக்கொண்டிருந்தான்.

'ஆறுமாசம் இருக்கணும். உடம்பைப் பார்த்துக்குங்க. அதிகமாய் குடிக்காதீங்க,'

அவன் முறுவலுடன், 'என்னோடு இவ்வளவு வருடம் குடித்தனம் நடத்தியிருக்கிறாயே, இன்னுமா என்மேல் நம்பிக்கை ஏற்படலை மாதவி?' என்று கேட்டான்.

'டயலாக் போதும். கிளம்புங்க.'

இருவரும் காரை நெருங்கினார்கள்.

'வாட்ச் விஷயத்தை மறந்து விடாதீங்க—சீகோ.'

கார் விமான நிலையத்திற்கு வந்தது. பம்பாய்க்குச் செல்லும் விமானம்! அவன் இரண்டு மூன்று புத்தகங்களை வாங்கிக்கொண்டு வந்து உட்கார்ந்தான். கிளம்ப இன்னும் அரை மணி நேரமிருந்தது. அப்பொழுதுதான் அந்த ஜோடியை அவன் பார்த்தான். பக்கத்தில் திருதிருவென்று விழித்துக்கொண்டு நின்று கொண்டிருந்த இருவரும் அவர்களுடைய குழந்தைகள் போலிருந்தது. அவளது வயது முப்பத்தைந்திற்கு மேலேயே இருக்கும். கண்கள் சிவந்திருக்கத் தலைகுனிந்தவாறு புடவைத் தலைப்பால் துடைத்துக் கொண்டிருந்தாள். அவன் அவள் கன்னத்தில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டிருந்தான். ஆனால் அதில் எந்த செயற்கைத்தனமும் இல்லை. அது எவ்வளவு இயற்கையாயிருந்ததென்றால்-அவ்வளவு பெரிய விமான நிலையத்தில் அந்தக் காட்சியைக் கண்டுவிட்டு ஒருத்தருமே சிரித்துக் கொள்ளவில்லை. அந்தக் காட்சி மனம் முழுவதையும் உருக்கத்தில் ஆழ்த்தி விடவல்லதாய் இருந்தது. இரு குழந்தைகளும் அவளுமாய் கைகளை ஆட்டிக் கொண்டிருக்க, அவன் கவுண்டரை நோக்கிப் போனான், பின்னால் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே.

ரவிக்கு இதெல்லாம் மிக அருமையானதாய் தோன்றியது. வழியனுப்பும் விஷயம் கிடக்கட்டும். வரவேற்பும் அது போலவேதான். வந்ததுமே சூட்கேசைத் திறந்து பார்க்க வேண்டும் என்ற பரபரப்புதான் அதிகமாயிருக்கும். சில சமயம் கேம்ப்பிலிருந்து திரும்பி வர நாலைந்து நாட்கள் தாமதமாகிவிடும். வீட்டிற்குள் நுழைந்ததுமே, 'இன்னும்

நாலைந்து நாள் அங்கேயே இருந்துட்டு வரதுதானே? வீட்டைவிட கோவிலே தேவலைங்கறாப்பல...' என்று தொடங்கிவிடுவாள். வந்த சந்தோஷமெல்லாம் பறந்து விடும். போகட்டும். இந்த எரிச்சலெல்லாம் நான்கு நாள் அதிகரித்து விட்ட தனிமையால் ஏற்பட்டதாயிருந்தால், இவ்வாறு குத்தலாய் வெறுப்பாய் சொல்வதை விட சாதாரண வார்த்தைகளால் சொல்லலாம் அல்லவா? வார்த்தையால் சொல்ல முடியாவிட்டால் ஸ்பரிசத்தால்—அல்லது பார்வையால் சொல்லலாமே!

'நான் ஒன்றும் விளையாட்டுக்குப் போகலை மாதவி. வேலை இருந்ததால் தங்கிட்டேன்' என்று சொல்ல நினைப்பான். ஆனால் சொல்லமாட்டான். சொன்னால்—திரும்பி, 'வேலை—வேலை-யார் வெச்சுக்கச் சொன்னாங்க அவ்வளவு வேலையை?' என்பாள். திரும்பித் திரும்பி சம்பாஷணையை அதே ரீதிக்குக் கொண்டு வருவாள். அதனால்தான் பேசுவதே அனாவசியம்.

இறுதியில் அவன் தெரிந்து கொண்டது, தாமிருவரும் மனதால் ஒருநாளும் இணையமுடியாது என்பதுதான்.

வெளியே மழை தணிந்தது. அவன் வந்து படுக்கையில் படுத்தபடி யோசிக்கத் தொடங்கினான். மெல்ல பொழுது விடிந்து கொண்டிருந்தது.

சரியாய் அதே நேரம், மழைபெய்து ஓய்ந்தபின் வெளி வந்த சூரிய வெளிச்சத்தில் உட்கார்ந்து கொண்டு, பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னால் தான் முத்தமிட்ட ஒரு சிறுவனுக்கு - ஒரு விரிவான கடிதத்தை எழுதிக் கொண்டிருந்தாள் அவள்.

பத்து ஆண்டுகளாய் அவனுடைய வளர்ச்சியை தினந் தோறும் பார்த்து வந்து - தன்னைப்பற்றி இவ்வளவு நாளும் சொல்லிக்கொள்ளாமல் கட்டுப்படுத்திக் கொண்டு வந்தவள், இனி கட்டுப்படுத்த முடியாதவளாய்... தான்

யார், அவனை முதன் முதலாய் எங்கே சந்திக்க நேர்ந்தது, எவ்வளவு விநோதம் நேர்ந்தது என்பதையெல்லாம் எழுதிக் கொண்டிருந்தாள்.

காலை வெயிலில் முழங்காலிட்டு அமர்ந்தபடி அவள் எழுதிக்கொண்டிருந்த அக்கடிதம் அவனுடைய எதிர்காலம் என்ற வெள்ளைப் புடவையின்மேல் விதியானது கருப்புக் கரையைப் பின்னுவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தது என்பதை அவ்விருவருமே உணரவில்லை.

மறுநாள் அவன் அலுவலகம் சென்றபோது - முதல் நாள் நடந்த பிரசங்கத்தையொட்டி அவனுடைய உதவி யாளர் வாடிக்கையாளர்களுக்கு இலவசமாய் தரவிருந்த புத்தகத்தில் என்னென்ன சேர்க்கவேண்டும் என்பதைத் தயாரித்து வைத்திருந்தார்.

அதேபோல, விளம்பர இலாகாவைச் சேர்ந்தவர்கள் பிற துணி கம்பெனிகளின் போட்டிகளை எதிர்த்து நிற் பதற்காக எந்தவிதமாய் அறிக்கைகள் தரவேண்டும் என்று திட்டமிட்டு அவனிடம் சமர்ப்பித்தார்கள். அவைகளைப் படித்து முடிக்க அவனுக்கு மூன்று மணி நேரம் பிடித்தது.

பிற அறிக்கைகளுக்கும் புடவை சம்பந்தமான அறிக்கைகளுக்கும் நிறைய வித்தியாசம் உண்டு. நிறைய நிறங்களையும். விதவிதமான டிசைன்களையும், மிகச் செலவு பண்ணி, அழகாய் அறிக்கை தரவேண்டும்.

விளம்பரத்தில் வியாபாரிகள் முக்கியமாய் நினைவில் வைத்துக் கொள்ளும் விஷயம்—பெண்களின் மனத்தத்து வத்தைத்தான்! பக்கத்து வீட்டுக்காரி வாங்கி வந்திருக் கும் புடவைகளைப் பார்த்ததிலிருந்து தானும் கண்டிப்பாய் அது போன்றதே வாங்கிக்கொள்ள வேண்டும் என்று பர பரக்கும் பெண்களின் மனத்தத்துவத்தை இவர்கள் மிக நன்றாய் பயன்படுத்திக் கொள்கிறார்கள். குறைந்தது ஒரு பெரிய நிறுவனத்தின் புடவையாவது தம்மிடம் இல்லா

விட்டால் அவமானமாய் பாவிக்கும் நிலைக்குப் பெண் களை விளம்பர உத்தியின் மூலமாகவே கொண்டுவந்து விட்டார்கள்.

சாதாரண ஜனங்களின் சென்டிமென்டிற்குப் பொருத்த மாய் ஆலோசனைகளை உருவாக்கிக் கொண்டு அவர்களின் மனதில் அதை ஆழமாய்ப் பதியவைக்கிறார்கள்.

ரவி விளம்பர இலாகாவினர் வரிசையாய் பல்வேறு புடவை மில்களின் விளம்பரத் தந்திரங்களை எடுத்துக் காட்டியிருந்ததைப் படித்தான். அவர்கள் எல்லோரையும் விட பிரமாதமாய் எப்படி விளம்பரம் தரலாம் என்று யோசித்தான்.

அவன் இங்கே இந்த வேலையில் மூழ்கியிருந்த அதே சமயத்தில், அங்கே செஞ்சுராமையா அண்ட் கம்பெனி யில் அவனை எப்படி வீழ்த்துவோம் என்று சதி நடந்து கொண்டிருந்தது. இம்முறை மந்திரிகளும், தினசரித்தாள் களும் இல்லை. அதைக் காட்டிலும் அபாயமான திட்டம்! இங்கே ரவி தன் வியாபார முறைகளைப் பரிசீலித்துக் கொண்டிருந்தது போலவே, அங்கே செஞ்சுராமய்யா ரவியை வீழ்த்தும் சதியைப்பற்றி ஆராய்ந்து கொண்டிருந் தான்.ரவியைத் தள்ளிவிட்டால் ரவிதேஜா டெக்ஸ்டைல்ஸ் மூடப்பட்டுவிடும். எவ்வளவு புத்திசாலித்தனமாய் அவன் கைகளைக் கட்டிப்போடுவோம் என்பதுதான் கேள்வி. இதில் தான் சிக்கிக்கொள்ளக்கூடாது. வெகுநேரம் அந்த பிளானையே பார்த்துக் கொண்டிருந்தான். அது மட்டும் நடந்தேறிவிட்டால் ஆடை உலகத்திலிருந்து ரவியின் பெயர் நீக்கப்பட்டுவிடும்.

'இத்தனையும் நிறைவேற்ற என்ன செலவாகும்?'

'ஐந்து லட்சமாகலாம்.'

'இதில் அவன் சிக்கிப்பான் என்பது நிச்சயந்தானா?'

'சந்தேகம் இல்லை.'

'தண்டனை என்ன கிடைக்கலாம்?'

'குற்றம் ருசுவாகிவிட்டால் தூக்குத் தண்டனை கிடைக்கலாம். ஆயுள் தண்டனைக்குக் குறைவாய் மட்டும் இருக்காது'...இரண்டாவது டைரக்டர் சொன்னார்.

பணம் ஒரு பொருட்டில்லை.

'பிளான் நினைத்தபடி நடந்துவிட்டால் - ரவியின் வாழ்க்கை முடிந்துவிடும். இல்லாவிட்டால் - குறைந்த பட்சம் ஆறு மாதங்கள் இதிலிருந்து வெளியேற முடியா மல் பாடுபடுவான். அதற்குப் பிறகு அவனை இக்கட்டில் ஆழ்த்த வேறொன்றைப் பற்றி யோசிக்கலாம்.'

செஞ்சுராமய்யா தலையாட்டி விட்டு 'சரி, அப்படியே செய்வோம்' என்றான்.

ரகசியக் கூட்டம் முடிவடைந்தது. அவர்களின் திட் டத்தின் முதல் அம்சம் அந்த நிமிடத்திலிருந்தே தொடங் கப்பட்டுவிட்டது.

# 11

ரவி யோசித்துக் கொண்டிருந்தபோது, தள்ளுபடி விற்பனையில் நடக்கிற விஷயத்தையெல்லாம் தான் ஏன் வாடிக்கையாளர்களுக்கு சொல்லக்கூடாது? என்ற எண்ணம் உதித்தது. சர்மாவுடன் தொடர்பு ஏற்பட்ட பொழுதே அவன் சொன்னான்; 'முதலில் கஸ்டமர்களுக்கு நம் மேல் நம்பிக்கையை வளர்த்துக்கணும்' என்று.

இப்பொழுது அதையே ஏன் பயன்படுத்தக்கூடாது? நல்ல யோசனை! அந்த யோசனை உதித்ததுதான் தாமதம், அவன் உடனே செகரட்டரி சரஸ்வதியைக் கூப்பிட்டான். அவளுக்கு நாற்பத்தைந்து வயதிருக்கும். நல்லவள். புத்திசாலி.

'உட்காருங்கள்' என்றான்.

உட்கார்ந்தாள்.

'ரொம்ப நாட்களுக்கு முன்னால், இந்த கம்பெனிக்கு வருவதற்கு முன்னால், சர்மாவுடன் முதல் முதலாய் பரிச்சயமான போது நான் என்ன பேசினேன் தெரியுமா?'

அவன் உட்கார வைத்து திடீரென்று இவ்வாறு கேட்கவே, அவளுக்கு எதுவும் புரியவில்லை. ரவி சிரித்தான்.

'ஷோ கேசிலிருக்கும் புடவையை ஒரு நாளும் வாங்காதீங்க. சாயம் போயிருக்கும். அதேபோல் இன்னொன்றை உள்ளேயிருந்து வாங்கிக்குங்க என்றேன்' என்று சிரித்துவிட்டுத் தொடர்ந்து 'இப்படிப்பட்ட யோசனைகளை நாம் ஏன் நம்மிடமிருந்து வாடிக்கையாளர்களுக்குத் தரக்கூடாது?'

அவள் திக்பிரமையடைந்து அவனை ஏறிட்டாள்.

அவன் சொல்லிக்கொண்டே போனான். 'ஒவ்வொரு புடவைக்கும் நாம் ஒரு விலையைக் குறிப்பிடறோம். நம் சில்லறை வியாபாரிங்க அந்த விலைக்கே அவைகளை விற்றிருக்கலாம். ஆனால் இப்போதிலிருந்து அந்த பட்டியலை நாமே வாங்குறவங்களுக்கு, டைரக்டாய் கொடுப்போம். 'உள்ளூர் வரி தனி' என்பது எப்படியும் இருக்கும். புடவைகள் விஷயத்தில் இதுவரை யாருமே இந்த மாதிரி பண்ணியதில்லை. அதனால் வாங்குவோருக்கு நம்பிக்கை பிறக்கும். வியாபாரத்தில் முதல் படி நம்பிக்கை...' அவன் கையிலிருந்த காகிதங்களை அவளிடம் நீட்டினான்.

'முந்தாநாள் பிரசங்கத்தில் நான் வாடிக்கையாளர்களுக்குத் தரவேண்டிய இலவச வெகுமதியைப் பற்றித் தயாரித்திருக்கும் திட்டம் இது! அது போலவே மேக்அப் அலங்காரங்களைப் பற்றியும், எந்தெந்தப் புடவை யாருக்குப் பொருந்தும் என்ற விஷயங்களைப் பற்றியும்

சிறிய புத்தகம் ஒன்றைக் கூட தரலாம்னு எண்ணினோமே நினைவிருக்கா? அந்த புத்தகத்தில இந்த யோசனைகளைக் கூட சேர்த்துப்போம். அவைகளை எழுதி எடுத்துட்டு வாங்க. நீங்களே வாடிக்கையாளராயிருந்தால் என்னென்ன ஜாக்கிரதைகளை மேற்கொள்ள வேண்டும் என்பது...'

அவளுக்கு இப்பொழுது புரிந்தது. சிரித்து விட்டு, அக்காகிதங்களை எடுத்துக்கொண்டு போனவள், அரை மணி கழித்து திரும்பி வந்தாள். அவன் படித்துக் கொண்டிருந்தபோது, தான் எழுதியது தன் முதலாளிக்குப் பிடித்ததோ இல்லையோ என்று அவன் முகத்தையே பரபரப்புடன் பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் படிக்கத் தொடங்கினான். அவள் எல்லாவற்றையும் பாயிண்டுகளாய் எழுதியிருந்தாள்.

அதில் மாற்றங்கள் பல செய்தான். தள்ளுபடி என்றால் ஆசைப்படாதீர்கள். அது விலையைக் கூட்டி வைத்து குறைப்பது என்பது போன்ற குறிப்புகளைச் சேர்த்திருந்தான். அதை வாங்கிப் பார்த்தாள் சரஸ்வதி.

'இப்படி கொடுங்க. கையெழுத்துப் போடறேன். டைரக்டாய் கம்போஸிங்கிற்குக் கொடுத்துடுங்க' என்று கையை நீட்டினான். அவள் காகிதத்தைப் பெற்றுக் கொள்ளப் போனபோது அது நழுவி மேஜையடியில் விழுந்து விட்டது. அவள் எடுக்க குனிந்தபோது, 'நான் எடுத்துத் தரேன்' என்று அவனும் குனிந்தான்.

சரியாய் அந்த சமயத்தில்தான் கதவிற்கருகில் சந்தடி கேட்டது. இருவரும் ஒரே சமயத்தில் மேஜைக்கடியிலிருந்து நிமிர்ந்தார்கள். ஸ்பிரிங் கதவிற்குப் பக்கத்தில் மாதவி நின்று கொண்டிருந்தாள். சரஸ்வதி காகிதத்தை எடுத்துக்கொண்டு போய்விட்டாள். அவள் போகும்வரை மாதவியின் கண்கள் நெருப்பை உமிழ, அவளையே உறுத்துப் பார்த்தவள், அவள் வெளியேறியதும்—

'இதுக்குத்தானா இருபத்திநான்கு மணி நேரமும் ஆபீசு ஆபீசுன்னு உயிரை விடுறீங்க?' என்றாள்.

அவன் வாயடைத்துப் போய் நின்றான். கொஞ்ச நேரம் அவள் என்ன பேசுகிறாள் என்றே புரியவில்லை. புரிந்ததும், மேற்கொண்டு எதுவும் சொல்லாமல், 'மா...த...வீ' என்றான்.

'பூனை கண்ணை மூடிக்கிட்டா உலகமே அஸ்தமித்துடுத்துன்னு நினைச்சுதாம்!' பழிப்பதுபோல சொன்னாள். அவனுக்கு என்றுமே வராத கோபம் வந்து விட்டது.

'உனக்கு புத்தி பிசகிடுத்தா? அவள் என்னைவிட எவ்வளவு பெரியவள்!' என்றான் ஆவேசத்தை அடக்கிக் கொண்டு.

'அந்த வயசில்தான் புத்தி கிறுக்குப் பிடித்து அலையும். அவளை உள்ளே கூப்பிடுங்க. ரெண்டில் ஒன்று பார்த்துடறேன்.'

'நீ என்னத்தைப் பார்க்கறத்துக்கு இருக்கு? முதல்ல நீ இங்கே ஏன் வந்தே?'

'உங்க கிருஷ்ண லீலையைப் பார்க்கத்தான்!'

சுமார் ஐந்து நிமிடங்கள் இருவரும் என்ன பேசிக் கொண்டார்களோ ஒன்றுமே புரியவில்லை. அவனுக்கு மிக எரிச்சலாயிருந்தது. மிக நுட்பமான இடத்தில் ஓங்கி அறைந்துவிட்டாள் அவள். தன் மனைவிக்குத் தன்மேல் இவ்வளவு அவநம்பிக்கை இருந்ததை அப்பொழுதுதான் உணர்ந்து கொண்டான் அவன். அவன் காப்பாற்றிக் கொண்டு வந்திருக்கும் மதிப்புக்களையெல்லாம் ஒரே வார்த்தையில் தூக்கியெறிந்து விட்டாள்.

அவனுக்கு மனிதர்களைப் பற்றி நன்றாய்த் தெரியும். ஒரு மனிதனுக்கு இன்னொரு மனிதனின் மேலிருக்கும் அபிப்பிராயம் தெர்மாஸ்ஃபிளாஸ்கைப் போன்றதென்றும்

எந்த நேரத்திலும் மிகச் சிறிய சிறிய நிகழ்ச்சிகளாலும் அதன் பரிமாணம் மாறிவிடும் என்றும், அவ்வளவு பலவீன மானது என்றும் அறிவான். ஆனால் கணவன் மனைவியருக் கிடையே கூட அதே போன்ற பந்தந்தான் உண்டென்றும், தான் பல நாட்கள் பேணிப் பாதுகாத்துக் கொண்டிருந்த தன் பண்பானது ஒரு கண்ணாடி மாளிகையைப் போன் றதுதான் என்றும் அவனுக்குப் புரியத் தொடங்கிற்று. சிறிய வார்த்தை என்ற கல்லை விட்டெறிந்து அக்கண்ணாடி மாளிகையைத் தூள் தூளாக்கி விட்டாள் அவன் மனைவி.

மாதவியோடு அவன் சம்பந்தம் சாதாரண ஒரு மனித னுக்கு இருக்கக்கூடிய உடல் திருப்தியைத்தான் கொடுத்து வந்து கொண்டிருந்தது. ஆனால் இருவரும் நாளடைவில் மனத்தளவில் விலகி தொலைவிற்குப் போய்விட்டதால் அது ஒரு இயந்திர கதியாக, மட்டுமே மாறிப்போகத் தொடங்கிற்று.

பிறகு அவன் தன் வியாபாரங்களில் மூழ்கிப்போய், அந்தத் தேவையையே முற்றிலும் மறந்துவிட்டான். ‘மறந்து விட்ட அதனை’ மனைவி இந்த விதமாய் ஊகித்துக் கொள்வாள் என்று அவன் கனவிலும் நினைத் திருக்கவில்லை.

தன்னைத்தான் கட்டுப்படுத்திக் கொண்டு, ‘போ மாதவி! இது ஆபீசு. எல்லோரும் கேட்பாங்க’ என்றான்.

‘உங்களைப் பற்றி யாரோ சொன்னபோது என்ன வோன்னு நினைச்சேன். இப்போ கண்ணாரப் பார்த்ததும் நம்பித் தீரவேண்டியிருக்கு’ என்றாள்.

ரவியின் கைகள் முறுக்கேறிக் கொண்டன.

‘யாரு?’ என்றான்.

அவள் பேசவில்லை. அவன் அது ஆபீசு என்பதைக்கூட மறந்துபோய், அவள் கையை அழுத்தமாய் பிடித்து உறுமும் குரலில், ‘யார்?’ என்றான்.

'யாரோ, உங்களுக்கு எதுக்குச் சொல்லணும்? என் நலனைக் கருதுபவர்.'

ரவி ஏதோ உரக்கச் சொல்லப் போனான். அதற்குள் கண்ணாடிக் கதவுகளுக்கப்பாலிருந்து நிழலாடியது தென் பட்டது. எல்லோருக்கும் தம் பேச்சு கேட்டுவிடலாம் என் றெண்ணி, குரலைத் தாழ்த்திக் கொண்டு, 'சரி சரி, இப்போ எதுக்கு வந்தாய், அதைச் சொல்லு' என்றான்.

'உங்கள் சிருங்காரத்தைப் பார்க்கறதுக்குத்தான்.' ஏளனமாய் சொல்லிவிட்டுக் கதவை நோக்கிப் போனவள் திரும்பி, 'ஒன்றுமட்டும் நினைவில் வைச்சுக்குங்க. இன்றை யிலிருந்து நீங்க என்ன பண்ணினாலும் எனக்குத் தெரிய வந்துடும்' என்று மேற்கொண்டு அவன் பேச வழியில் லாமல் அங்கிருந்து போய்விட்டாள்.

தனித்து அந்த அறையில் வெகுநேரம் உட்கார்ந்திருந் தான் அவன். வெளியே நிறையப் பேர் தம் சச்சரவைக் கேட்டிருக்கிறார்கள் என்றும் உள்ளே வருவதற்கு அதனால் தான் தயங்கிக் கொண்டிருந்தார்கள் என்றும் அவன் அறிவான்.

அவனுக்கு இப்பொழுது மாதவியின் மேல் கோபத்தை விட அந்த விஷ விதையை நாட்டியது யார் என்று தெரிந்து கொள்ளும் பரபரப்புத்தான் அதிகரித்தது. முன்பே ஒரு உத்தேசத்துடன் அவள் நுழைந்திருக்கிறாள். அதற்கேற் றாற்போல இந்தக் காட்சியைப் பார்த்ததுமே பி. பி. நோயாளியான அவள் சகஜமாகவே கொதித்தெழுந்திருக் கிறாள். ஒருக்கால் அந்த நிலையிலிருக்கும் எந்தப் பெண்ணுமே அப்படித்தான் செய்வாள் போலும். ஆனால் அவ்வளவு பெரியதாய் கத்தியிருக்க வேண்டாம்.

—இங்கே இவ்வாறு கருத்து வேறுபாடுடன் இவன் தவித்துக் கொண்டிருந்த அதே சமயத்தில் அங்கே செஞ்சு ராமய்யா தன் திட்டத்தின் முதல் பகடைக்காயை நகர்த்தி வைத்தான்.

'தேஜா டெக்ஸ்டைல்' என்று எழுதியிருந்த பெரிய பாக்கெட் அவனுக்கு முன்னால் இருந்தது.

ரவி நாற்காலியைவிட்டு எழுந்திருக்கப் போனபோது சரஸ்வதி உள்ளே வந்தாள். அவள் முகம் வாடியிருந்தது.

அவர்களின் பேச்சை அவள் கேட்டிருக்கிறாள் என்பது அவள் முகத்திலிருந்தே தெரிந்தது.

அவன் சொன்னவைகளை டைப் செய்துகொண்டு வந்திருந்தாள். அவன் அதைப் பார்த்துவிட்டு அவளிடமே திருப்பித் தந்து, அவள் போகக் கிளம்பியபோது, 'சரஸ்வதி' என்றான்.

அவள் நின்றாள்.

'ஐயாம் சாரி'

அவள் தலைகுனிந்தாள். 'அதே வார்த்தையைத்தான் நானும் சொல்ல நினைத்தேன் சார்!' என்று அங்கிருந்து போய்விட்டாள்.

# 12

அவன் ஜன்னலுக்கருகில் வந்து நின்றான். மாலை ஐந்தரை மணியாகியிருந்தது. ஒவ்வொருத்தராய் ஆபீசிலிருந்து வெளியேறிக் கொண்டிருந்தது மேல் மாடியிலிருந்து தெளிவாய்த் தென்பட்டது. கைப்பையை எடுத்துக் கொண்டு சரஸ்வதி பஸ் ஸ்டாண்டை நோக்கிப் போய்க் கொண்டிருந்தாள். அவள் காதோரத்திலிருந்த நரைத்த மயிர்கள் சூரிய வெளிச்சத்தில் மினுமினுத்தது. இவளுக்கும் தனக்குமிடையே தன் மனைவி சம்பந்தப்படுத்திப் பேசியதை நினைத்தாலே விநோதமாயிருந்தது. சரஸ்வதி வீதியைக் கிராஸ் பண்ணிக் கொண்டிருந்தாள்.

அவன் பார்த்துக் கொண்டிருந்தபோதே தெருமுனையிலிருந்து ஒரு கார் வேகமாய் வந்தது. அவன் மனம் ஏதோ நடக்கக்கூடாத ஒன்றை எடைபோட்டது. கார் டிரைவர் பிரேக் போடமுடியாது போக, அந்தப் பேய் இரைச்சலுக்கு சரஸ்வதி திரும்பிப் பார்த்தாள். ஆனால் அதற்குள் தாமதமாகிவிட்டது. அவள் வீலென்று அலறியதும் கார் அவளைத் தள்ளியதும் நிமிட நேரத்தில் நடந்து முடிந்துவிட்டன.

அவன் சிலையாய் நின்றான்.

கார் நிற்காமல் போய்விட்டது. அவளைச் சுற்றி ஜனங்கள் கூடிவிட்டார்கள். அவன் அப்பொழுதுதான் கனவிலிருந்து மீண்டவனைப்போல தேறி, கீழே ஓடினான்.

சுமார் ஒரு மணி நேரம் கழித்து டாக்டர்கள் அவளுக்கு எந்த ஆபத்தும் இல்லை என்றும், ஃபிராக்சர் ஆன கால் எலும்பு சரியாவதற்கு மட்டும் இரண்டு மாதங்கள் ஆகும் என்றும் சொன்னபிறகுதான் அவன் நிம்மதியாய்ப் பெருமூச்சு விட்டான்.

அந்த இரண்டு மாத செலவுகளையும் கம்பெனி பெயருக்கே எழுதும்படி அகௌண்டன்டிடம் அவன் சொன்னான்.

அதற்குள் அவள் கணவனும் வந்துவிட்டான். அவனுக்கு தைரியம் சொல்லிவிட்டு, ரவி வீட்டிற்குக் கிளம்பினான்.

அன்று நடந்த நிகழ்ச்சியால் அவன் மிகவும் களைத்துப் போய் விட்டிருந்தான். வேறொன்றைப் பற்றியும் யோசித்துக்கொண்டிருக்காமல் குளித்துவிட்டு வந்து படுத்துத் தூங்கி விட்டான். மாதவி வீட்டில் இல்லை.

சரியாய் அதே சமயத்தில் ஒரு ஏர்கண்டிஷன் அறையில் உட்கார்ந்திருந்த ஒரு ஆள் தனக்கு முன்னாலிருந்த காகிதத்

தின் மேல் 'ஒன்று' என்று எழுதியிருந்ததை பேனாவி னால் அடித்தான் — அக்காரியம் முடிவடைந்து விட்டது என்று.

∴ ஃ ஃ

நாட்கள் கழிந்தன. வீட்டில் நிசப்தம் தவழ்ந்தது. இருவருள் யாருமே பேச முயற்சிக்கவில்லை. அவள் பண்ணிய இந்தப் புதிய முறுக்கலால் அவன் மனம் மேலும் முறிந்துவிட்டது.

ரவிதேஜா மார்க்கெட்டில் வெளியிட்ட புத்தகம் எதிர் பார்த்த பலனைத் தரவில்லை.

மற்றொரு பக்கம் புடவைகளின் விலையை கம்பெனியே நிர்ணயிப்பதுபற்றி கடைக்காரர்கள் பலமாய் எதிர்த்தார் கள். நிறைய புடவைகள் வருடக்கணக்காய் கடைகளில் நிறைய சந்தர்ப்பங்களில் இருந்து தீரவேண்டும். ஸ்டாக் டேக்கிங் சமயத்தில் அவற்றின் விலையை உணர்த்த வேண்டும்.

இவ்வளவு புடவை ரகங்களில் எதன் விலை எவ்வளவு எவ்வளவு என்று வாடிக்கையாளர்கள் தெரிந்துகொள்வது முடியாத காரியம் என்று புரியாமல் ரவி தவறாய் எடை போட்டுவிட்டான்.

ஏதோ ஒரு புதுமையை விரும்பியோ அல்லது புதுத் திருப்பத்தைக் கொண்டுவரவோ முனையும்போது இப்படிப் பட்ட எதிரடிகள் உண்டாவது சகஜமே. வியாபாரத்தில் இதெல்லாம் சர்வ சாதாரணம். ஆனால் அதைவிட பெரிய ஆபத்து - எதிர்பாராத கோணத்திலிருந்து வந்து சேர்ந்தது.

அன்றைக்கு அலுவலகத்துக்கு அவன் வந்து உட்கார்ந்து கொண்டதுமே இண்டர்காமில் அழைப்பு வந்தது. 'உனக் காக அரைமணியாய் காத்திட்டிருக்கேன். வீட்டிற்கு

போன் பண்ணினால் கிளம்பிவிட்டாய்னு சொன்னாங்க. அர்ஜென்ட்டாய் என் அறைக்கு வா' என்றார் சர்மா.

ரவி பரபரப்பாய் எழுந்து போனான். சர்மாவோடு ஒரு நடுத்தர வயது ஆசாமி உட்கார்ந்திருந்தார்.

'இவர் எல்.சி. ராவ். சென்ட்ரல் இன்டலிஜென்சி யிலேருந்து...'

ரவிக்கு புரியவில்லை.

சி.ஐ.டி. காரர்களுக்குத் தன்னோடு என்ன வேலையோ என்று நினைத்துக் கொண்டான்.

அதற்குள் ராவ், 'மிஸ்டர் ரவி, இந்தப் புடவைகள் உங்க ஃபேக்டரியிலிருந்து தயாரானவைகள்தானா?' என்று ஒரு பாக்கெட்டை அவனுக்கு முன்னால் தள்ளினார்.

ரவி, அந்த பாக்கெட்டிலிருந்து வெளியே தெரிந்த புடவைகளை ஒருமுறை பார்த்துவிட்டு, 'எங்களுடையவை தான்' என்றான்.

'ஒரு முறை நன்றாய் பரிசிலித்து சொல்லுங்கள்.'

'தேவையில்லை. எங்க கம்பெனியிலிருந்து தயாராகும் புடவைகளை எங்கேயிருந்தாலும் சரி என்னால் அடை யாளம் கண்டுக்க முடியும்.' பாக்கெட்டைப் பிரிக்காம லேயே புடவைகளைப் பார்த்துவிட்டு சொன்னான்.

சர்மா பார்வையால் தந்த குறிப்பையோ, சர்மாவின் முகத்தில் தெரிந்த கலவரத்தையோ அவன் கவனிக்க வில்லை.

'இன்னொரு தடவை பார்த்துச் சொல்லுங்க. வேணும் னால் பிரித்துப் பார்த்துவிட்டும் சொல்லலாம்.'

'தேவையில்லை.'

'உங்க புடவைகளை எந்தெந்த நாடுகளுக்கு ஏற்றுமதி பண்றீங்க?'

'பாகிஸ்தான், ஸ்ரீலங்கா, பங்களாதேஷ், சைனா...' ரவி சரளமாய் சொன்னான். 'எல்லாவற்றுக்கும் எங்களுக்கு லைசன்சு இருக்கு.'

அவன் வார்த்தைகளை முடிப்பதற்குள்ளாகவே ராவ் பாக்கெட்டுகளைப் பிரித்து அதிலிருந்த புடவையை எடுத்து நீளவாட்டில் பிடித்துக் கொண்டார்.

புடவையின் டிசைன் இப்பொழுது தெளிவாய் தெரிந்தது. கோடுகள்—வளையங்கள்—பார்டர்...

ரவிக்கு ஷாக் அடித்தாற் போலிருந்தது. அப்புடவை அவர்களுடைய தயாரிப்புதான். டிசைன் மட்டும் அவர்களுடையதில்லை. ரவி டெக்ஸ்டைல்ஸ்காரர்கள் பயன்படுத்தும் அதே பட்டு—அவர்கள் பயன்படுத்தும் அதே பாலியெஸ்டர்—அவர்கள் உபயோகிக்கும் அதே பார்டர்—எல்லாம் அதுவேதான். ஆனால் உள்ளே டிசைன் மட்டும் வேறு. அதனால்தான் அவனால் மேலோட்டமாய் பார்த்த போது அடையாளம் புரியவில்லை.

'எ...என்னது?' என்று கேட்டான்.

'மிக சாமர்த்தியமாய் நாட்டு ரகசியத்தை வெளி நாட்டிற்கு அனுப்புறீங்க. புடவையின் மேல் டிசைனாகப் போட்டால் ரெண்டாம் பேருக்குச் சந்தேகம் வராது. இந்த கெட்டிக்காரத்தனத்துக்கு என் பாராட்டுக்கள்.'

அதிர்ந்துபோய் நின்றான் ரவி.

# 13

கோபத்தையும் ஆவேசத்தையும் கட்டுப்படுத்திக் கொண்டு, 'உங்களுக்கு இந்தப் புடவைகள் எங்கே கிடைத்தன?' என்று கேட்டான் ரவி.

'கப்பலில் பாகிஸ்தானுக்குப் போகிற கன்சைன் மெண்ட்டில்' என்றவர் ரவி புடவைகளை உற்றுப் பார்ப்பதைப் பார்த்து விட்டுத் தொடர்ந்து, 'இது அந்தமானின் பாக்டரி டிசைன். இது திண்டுக்கல் ஏரியா. இது ஸ்ரீஹரிகோட்டா விவரங்களைச் சொல்லும் டிசைன்...'

ரவி மனதிற்குள் தன் எதிரியை மெச்சிக் கொண்டான். தன்னை வீழ்த்துவதற்கு மட்டுமே இந்த பிளானைப் போட்டிருந்தால் சரி. இல்லாவிட்டாலும் இந்த பிளான் மிகப் பெரிய பிளான். புடவைகளின் மீது டிசைன் போட்டு எதிரி நாடுகளுக்கு அனுப்புவது...

சர்மாவும் ரவியும் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக் கொண்டார்கள்.

சர்மா சொன்னார்—'நீங்க விசாரணை பண்ணுங்க. இந்த சரக்கு வந்து எங்க சரக்கோடு எப்படி கலந்ததுன்னு பரிசோதனை பண்ணிட்டால் தெரிந்துடுமில்லையா?'

'இப்ப என்ன பண்ணப் போறீங்க?'—கேட்டான் ரவி.

'உங்களையும், இந்த கம்பெனி சேர்மேனையும், எஞ்சிய டைரக்டர்களையும் அரஸ்ட் பண்ண வாரண்ட் கொண்டு வந்திருக்கேன், மிஸ்டர் ரவி.'

'நாங்க எங்க லாயரை கலந்தாலோசிக்கலாமா?'

'நாட்டு பாதுகாப்பு விஷயங்களில் லாயர்களால் எதுவும் பண்ணிட முடியாது!'

'ஜாமீன்?'

'அந்த விஷயத்தில் மட்டும் நீங்க லாயரைக் கலந்தாலோசிப்பதற்குத் தடையில்லை.'

'இந்த புடவைகள் எங்களுடையதுதான். ஆனால் டிசைன்கள் எங்களோடதில்லை. சாதாரணப் புடவையை

வாங்கி அதன்மேல் இந்த டிசைனை யாராவது போட்டிருக்கலாம். அங்கே பாகிஸ்தானுக்கு இந்த கன்சைன்மென்ட் போய்ச் சேர்ந்ததுமே அவங்க ஏஜெண்டுங்க இவற்றை வாங்கிக்கிறாப்போல ஏற்பாடு பண்ணிட்டிருக்கலாம். நீங்க இந்தப் புடவைகளை எந்த ரசாயனப் பரிசோதனை பண்ணிப் பார்த்தாலும் 'டிசைன் இங்க்' எங்களோடது இல்லைன்னு புரிஞ்சிடும். இன்னொரு விதமாய் யோசித்துப் பார்த்தால் இந்தத் திட்டமெல்லாம் எங்களை வீழ்த்துவதற்காக யாராவது பண்ணியிருக்கலாம்னு தோணுது..."

'அந்த மாதிரி விரோதிங்க உங்களுக்கு யாராவது உண்டா?'

'செஞ்சு ராமய்யா அண்ட் கோ.'

'நீங்க சொன்னதும் உண்மையாயிருக்கலாம். இல்லாது போனால் 'குறிப்பிட்ட கப்பலில் குறிப்பிட்ட ரவி பாக்கில்' என்று விவரமாய் சொல்லியிருக்க மாட்டாங்க.'

'யாரு?' கேட்டான் ரவி.

போனில் எங்களுக்குக் கிடைத்த செய்தியைக்கொண்டு தான் இதைப் பிடித்தோம்! அதெல்லாம் இருக்கட்டும். நீங்க சொன்னதுபோல இந்த டிசைன்கள் உங்க ஃபேக்டரியில் பிரிண்ட் பண்ணப் படாமலிருந்திருக்கலாம். ரசாயன இங்க்கில் கூட வித்தியாசம் இருக்கலாம். ஆனால் அதெல்லாம் விசாரணையின் பிற்பாடு தெரிந்துவிடும்.'

'அதற்கப்புறந்தான் எங்களை அரெஸ்ட் பண்ணணும் நீங்க'—சர்மா சொன்னார். அதற்குள் அவருக்கு பி.பி. அதிகரித்துவிட்டது.

ராவ் சிரித்தார். 'விசாரணை முடிந்துடுத்துன்னால் அதற்குப் பிறகு அரெஸ்ட் என்னத்துக்கு? நீங்க எங்க விசாரணையில் தலையிடாமலிருக்கத்தானே அரெஸ்ட் பண்றது?'—அவர் சொன்னது நிஜமே. இந்த வாதனையெல்லாம் இனி தேவையில்லாதவை...

ரவி அவர்களின் பேச்சைக் காதில் போட்டுக் கொள்ள வில்லை. யோசித்துப் பார்த்தான். நாளைக் காலையி லேயே இந்த விஷயம் பெரிய எழுத்துக்களோடு செய்தித் தாள்களில் வந்துவிடும். நாட்டின் மிகப் பெரிய துணிக் கம்பெனியைச் சேர்ந்த டைரக்டர்கள் தேசத் துரோகத்தின் கீழ் கைதாகிவிட்டதாய் எல்லோருக்கும் படும். நாளன் றைக்கு ஜாமீன் கீழ் விடுதலை பண்ணி வைப்பார்கள் என்றும் செய்தியில் தெரிவிப்பார்கள்.

இரண்டு வருடங்களுக்குப் பிறகு குற்றமற்றவர்களாய் ருசுவானதுபோல வெளிவரும். ஆனால் என்ன லாபம்? முதல்நாள் செய்தியிலேயே ஷேரின் விலை பட்டென்று படுத்துவிடும். ஜனங்களுக்கு ஞாபகசக்தி குறைவு என்று இங்கிலீஷில் ஒரு பழமொழிகூட உண்டு. செஞ்சு ராமய்யா! சரியான இடத்தைப் பார்த்துப் பதம் பார்த்துவிட்டாய்!

ரவி இவ்விதமான யோசனையில் ஆழ்ந்திருக்கும்போது சர்மா இன்ஸ்பெக்டரோடு பேரமாடிக் கொண்டிருந்தார்— 'இருபத்தைந்தாயிரம் தரோம், விட்டுடுங்க' என்ற டைப்பில்!

ராவ் சிரித்தார். 'உங்களுக்கு எங்க இலாகாவின் மீதும் ஏளனமான மனப்பான்மை இருப்பதாய் தோணுது! எல்லோருமே லட்சம் வாங்கற பேர்வழிங்க இல்லை. சாதாரணமாய் பார்க்கப்போனால் வந்ததுமே உங்களை அரெஸ்ட் பண்ணி அழைச்சுட்டுப் போய் அங்கே சொல் லணும் இந்த விவரங்களையெல்லாம். ஆனால் இது உங்க மேல் பகைமை கொண்டு யாரோ பண்ணியிருப்பதாய் எனக்கே பட்டுது. அதனால்தான் இந்தமாதிரி சாதாரண மாய் பேசறேன். ஆனால் அரெஸ்ட் பண்ணித் தீர வேண்டியதுதான். வேறு வழியில்லை. நாட்டுப் பாது காப்பு விஷயத்தில் யாருமே சொந்த அபிப்ராயத்தை எடுத்துக்க முடியாது. ஜாமீன் கிடைக்குமா என்பதுகூட சந்தேகந்தான். நான் இதுபோன்று சாதாரணமாய்

பேசுறேனென்னு நினைத்து நீங்க அதை பணத்தின்மேல் கண்ணுன்னு நினைச்சுட்டது துரதிர்ஷ்டம்!'

'சாரி...சாரி' என்றார் சர்மா.

அதற்குள் ரவி இடைமறித்து, 'நாங்களே இந்தப் புடவைங்களை வெளிநாட்டுக்கு அனுப்ப உத்தேசித்திருந் தால் எங்க துணி மூட்டைங்களோடு கட்டி ஏன் அனுப்பு றோம்? சாதாரணமாய் விமானத்தில் எந்த சூட்கேசிலா வது வைத்து அனுப்பலாமில்லையா?'

'ஆமாம். நானும் அப்படித்தான் நினைச்சேன். பாகிஸ் தானுக்கு இந்த மாதிரி சாமான்களை யாருமே கப்பலில் அனுப்ப மாட்டாங்க. அதனால்தான் இதை உங்க மேல் யாரோ பகைமை கொண்டு இப்படிப் பண்ணியிருப்பாங் கன்னு தோணிச்சு. இதில் அவங்க ஜெயிச்சிட்டாங்க.''

'ஒருமுறை அரெஸ்ட் ஆனதுமே ஒரே மணி நேரத்திற் குள் விடுதலையானாலும், அந்த செய்தி பேப்பர்களில் கொட்டைப் பாக்கத்தனை எழுத்தில் வெளியாயிடும்' —செய்வதறியாது சொன்னார் சர்மா. அவர் சொன்ன அந்த வார்த்தைகளை கேட்டதுமே ரவியின் மூளையில் ஒரு மின்னல் பளிச்சிட்டது.

'ஒரு விதத்தில் நாம் இதை—இதன் விளைவைக் குறைக்க முடியும்.'

'எப்படி?'

'இந்த இன்ஸ்பெக்டர் உதவி புரிந்தால்.'

'எப்படி?' இம்முறை ராவ் கேட்டார்.

'உண்மையாகவே நீங்க எங்களை நம்பிய பட்சத்தில், எங்களை அரெஸ்ட் பண்ண நாளைக்கு வருவீங்க. நாளைக்கு எங்களை அரெஸ்ட் பண்ணுவீங்க.'

'எனக்கொண்ணும் புரியலையே?'

'இன்னும் ஒரு மணி நேரத்தில் நாங்க நால்வரும் எங்க டைரக்டர் பதவிகளை ராஜினாமா பண்ணிடறோம்... டைரக்டர் ரவியை அரெஸ்ட் பண்ணுவதிலிருக்கும் சென்சேஷன் மாஜி டைரக்டரைப் பண்ணுவதில் இருக்காது. மீதி பேப்பர்காரங்களோடு நாம் பேசி ஏற்பாடு பண்ணிக்கலாம்—செய்தியின் பரபரப்பைக் குறைப்பதன் மூலம்.'

இன்ஸ்பெக்டர் குழப்பத்தோடு பார்த்தார். இதெல்லாம் வெளிப்பட்டுவிட்டால் உத்தியோகத்திற்கே ஆபத்து. ஆனால் இந்த மாதிரி நடக்கக்கூடாது என்று ரூல் இல்லை. உண்மையில் இந்த மாதிரி விவகாரங்கள் இவ்விதமாய் நடந்து கொண்டுதானிருக்கின்றது எங்கேயும். நிறைய பேருக்கு இதொன்றுமே தெரியாது. இங்கே 'குற்றம்' முக்கியமானதில்லை. இவர்களின் பெயரையும் புகழையும் அவர்கள் போக்கடித்துவிட வேண்டும். அதைப் போக்கடித்துக் கொள்ளாமலிருக்க இவர்கள் மறு உபாயத்தைப் பண்ண வேண்டியது.

இரண்டு பலகோடி மூலதனத்து கம்பெனிகளுக்கிடையே நடைபெறும் யுத்தம் அது. சில நாள் பேப்பர்களில் செய்தி வருவதற்காக லட்ச ரூபாய்களை ஒரு கம்பெனி செலவழித்தால், ஒரு நாள் அதைத் தள்ளிப் போடுவதற்காக இன்னொரு லட்சத்தைச் செலவழிப்பதற்கு மற்றொரு கம்பெனி தயாராயிருக்கும். ராவ் மட்டும் பணத்தை வாங்கிக்கொள்ளக் கூடிய மனிதனாயிருந்திருந்தால், அந்த வினாடியே லட்ச ரூபாய்களைத் தரவும் சித்தமாயிருந்தார் சர்மா.

'இந்த விஷயம் ரெண்டாம் பேருக்குத் தெரியக் கூடாது.' —இன்ஸ்பெக்டர் சொன்னார்.

'...நாளைக் காலையில் வந்து அரெஸ்ட் பண்றேன். அதற்குள் நீங்க ஜாமீனுக்கு முயற்சிகளைப் பண்ணிக்குங்க,

'நாங்க ஜெயிலிலிருக்கணுங்கறது கூட இல்லை எங்க விரோதிங்களுக்கு! எங்களை அரெஸ்ட் பண்ணிட்டாங் கங்கற சமாச்சாரமே அவங்களுக்குப் போதுமானது' —ரவி சொன்னான்.

இன்ஸ்பெக்டர் போய்விட்டார். மிகச் சர்வ சாதாரண மாய் நடந்து முடிந்துவிட்டது. வெகு நேரம் ஒருவருமே வாயைத் திறக்கவில்லை. நிசப்தத்தைச் சிதறடித்து, 'இவ்வளவு பாடும்பட்டு, கடைசியில் அரெஸ்ட் பண்ணித் தீரவேண்டிய நிலைக்கும் வந்து சேர்ந்துட்டோம்' என்றார் ஒரு டைரக்டர்.

'இப்போது இந்தச் செய்தி தெரிந்துவிட்டால் போதும், என் மனைவியின் இதயமே நின்றுவிடும்' என்றார் இன்னொருத்தர்.

'இந்தச் செய்தி கடைசிவரைக்கும் நமக்குத் தெரியாமல் போனதிலிருந்தே இது அவங்க ஜாக்கிரதையாய் திட்டம் போட்டு பண்ணியதாய்தானிருக்கும்.'—இது மற்றொரு டைரக்டர்.

சர்மா ரவியை உபாயம் கேட்கும் ரீதியில், 'நிதி மந்திரி யோடு பேசிப் பார்த்தால்...?' என்றார்.

ஒரு டைரக்டர் குறுக்கிட்டு, 'லாபமில்லை. இது சாதாரண கேசில்லை. யாருமே பயப்படத்தான் செய் வாங்க. முதலில் இந்த இன்ஸ்பெக்டர் தைரியத்துக்கு மெச்சிக்கணும்' என்றார்.

அதுவரையிலும் நிசப்தமாயிருந்த ரவி, 'எனக்கு ஒரு யோசனை தோணுது' என்றான். எல்லோரும் அவனையே பார்த்தார்கள். ரவி போனை எடுத்துக் கொண்டான்.

அவன் சுமார் மூன்று மணி நேரம் விடாமல் பல போன் களைப் பண்ணிக் கொண்டேயிருந்தான். அரை மணி நேரம்

டில்லிக்குப் பேசினான். பிறகு பம்பாய் ஷிப்பிங் கம்பெனிக் காரர்களோடு பேசினான். தனக்குத் தெரிந்த நண்ப னொருவன் ஹோம் டிபார்ட்மெண்ட்டில் பெரிய பதவியி லிருந்ததால் அவன் மூலம் இன்டெலிஜென்ஸ் டிபார்ட் மென்டிலிருந்த இன்னொரு உயர்ந்த அதிகாரியைப் பிடித்து உண்மையில் ஃபைல் எந்த நிலையில் இருந்தது என்பதைத் தெரிந்து கொண்டான்.

அதற்குள் சர்மா பி.பி. அதிகமாகிவிட்டதென்று போய் விட்டிருந்தார். போகும்போது, நாளைக் காலையில் போலீசார் வந்து அரெஸ்ட் பண்ணினால், எல்லோரையும் ஒரே லாக் அப்பில் வைக்கும்படியாய் ஏற்பாடு பண்ணச் சொல்லி கேட்டுக் கொண்டார்.

ரவி ஜாமீனுக்கு முயற்சி பண்ணினான். அதுவும், பலனில்லாமல் போய்விட்டது. நாளைக்கு மாஜிஸ்ட்ரேட் டின் முன்னால் ஆஜரானால்தான் எல்லா விஷயமும் தெரியும். மிக சங்கடமான நிலைமை. நாளைக்கு யாரோ வந்து கைது பண்ணப் போகிறார்கள் என்று எதிர்பார்த்த படி இருப்பது. அதைவிட கைதாகிவிடுவது மேல். எல்லாம் முடிந்துவிடும். அந்த டென்ஷனைத் தாங்க முடியாமல்தான் சர்மா போய்விட்டார்.

ரவி கடைசி நிமிஷம் வரையிலும் இதைத் தடுப்ப தற்குத் தன்னால் முடிந்தவரையிலும் முயற்சி பண்ணி னான். அரெஸ்ட் ஆவது என்பது கௌரவம் சம்பந்தப் பட்ட விஷயம். ஏதோ இன்ஸ்பெக்டருக்கு முன்னால் சாக்கு சொல்லி விட்டார்களேயன்றி ராஜினாமாவை இன் றைக்கே கொடுத்துவிட்டாலும் கூட, அதன் விளைவு நாளைக்கு இழக்கப்போகும் மதிப்பிற்கு பயன்படாது. ஷேர் விலையிலிருக்கும் மாறுதலை ஒன்றும் பண்ணிவிட முடியாது. ஆனால் இப்படிப்பட்ட வழக்குகளில் Purchasing Time மிக முக்கியம்.

ரவிக்கு அவ்வளவு பரபரப்பிலும் சிரிப்பு வந்தது யாரோ எங்கேயோ தம்மைக் கட்டிப் போட்டு வீழ்த்து வதற்காக ஏதோ பண்ணுகிறார்கள்.

அதோடு இந்த ரூல்ஸ் விவகாரங்கள் வேறு...கடைசி யில் ஒன்றுமே ஆகாது. ஷேர் விலை மாற்றத்தால் சிலர் நஷ்டமடையப் போகிறார்கள். இல்லாவிட்டால் எங்கோ ஒரு கப்பலில் தம் சரக்கோடுகூட வரைபட டிசைன்கள் வேறு கிடைப்பதாவது–அதற்கு இந்த அரெஸ்டுகள், விளம் பரம், வேறா? நாலைந்து நாள் பரபரப்பு! எல்லாம் ரூல்ஸ் ...ரூல்ஸ்...

இரவு பதினொன்றரை மணிவரையிலும் அவரவர்கள் தமக்கிருந்த செல்வாக்கைப் பயன்படுத்தி பல்வேறு விதங் களில் முயற்சி செய்து பார்த்தார்கள். அதுவரை கோடிக் கணக்கான முதலீட்டுடன் வியாபாரம் செய்து வந்த அவர்கள் அந்த நேரத்தில் யார் கிடைத்தாலும் சரி, அவர் களுடைய ஆலோசனைகளைப் பெறவும் எதையும் செய்ய வும் சித்தமாகிவிட்டிருந்தார்கள். நாளைக்கு போலீஸ் ஸ்டேஷனில் ஒரு மணி நேரம்...பிறகு கோர்ட்டில் இரண்டு மணி நேரங்கள்...

இதற்காக, நாளைக்குப் பேப்பர்களில் செய்தி வராம லிருப்பதற்காக லட்சம் ரூபாய்களைச் செலவு செய்யவும் சித்தமாகியிருந்தார்கள்.

இரவு பதினொன்றரை மணிக்கு ஒரு நண்பனைத் தேடிப்பிடித்து, அவனுக்குத் தெரிந்த இன்னொரு நண்ப னின் மூலமாய் மாஜிஸ்திரேட்டைச் சந்தித்து மனம் கனியும் படி பேசினார்கள். மறுநாள் கோர்ட்டில் ஆஜரானதுமே, ஜாமீன் கிடைக்கும்படியாய் உறுதி வாங்கிக் கொண்டார் கள்.

இனி செய்யக்கூடியது ஒன்றுமில்லை என்றுணர்ந்து டைரக்டர்கள் வீடு திரும்பினார்கள். ரவிமட்டும் வேறு

ஏதாவது வழி உண்டோ என்று யோசித்துக் கொண்டிருந் தான்.

அவன் வீட்டிற்குத் திரும்பியபோது இரவு பன்னிரண் டடிக்கவிருந்தது.

மாதவி விழித்துக்கொண்டு தானிருந்தாள்.

'முடிஞ்சுதா, பாதி ராத்திரி வரைக்கும் பார்ட்டிகளும் சிநேகிதர்களும்' என்று பிடித்துக் கொண்டுவிட்டாள் வந்ததுமே. ரவி சிலையாகிவிட்டான். அவன் எவ்வளவு டென்ஷனிலிருந்தான் என்றால், இந்த மோதலை அவன் எதிர்பார்க்கவேயில்லை. அவன் மௌனத்தை வேறுவித மாய் புரிந்து கொண்டு, 'வெளியே போயிட்டால் வீட்டில் மனைவின்னு ஒருத்தி இருப்பதாவது நினைவுக்கு வருமா உங்களுக்கு? அல்லது சமையல்காரியா விழுந்து கிடக்கட்டு மேன்னு எண்ணிட்டீங்களா? உங்களுக்கென்ன, காலையில் எட்டுமணி வரைக்கும் படுத்துட்டிருப்பீங்க. விடிந்ததுமே எழுந்துக்க வேண்டியவள் நான்தானே? தினந்தோறும் இப்படி பதினோரு மணி ஆனபிறகு வரது. கேட்டால் எனக்கு வெளியே எவ்வளவு வேலை இருக்கு தெரியு மான்னு டபாய்ப்பது!'

'நான் ராத்திரி வரவரைக்கும் உன்னை விழிச்சுட் டிருன்னு சொல்லலை. அல்லது விடியலிலேயே எழுந்திருந்து வீட்டைப் பெருக்குன்னும் சொல்லலை. இந்த ரெண்டை யுமே பண்ணாவிட்டாலும் எனக்குக் குடி முழுகிடாது.'

''அதை மட்டும் சொல்லுவீங்களே தவிர, வீட்டுக்குச் சீக்கிரமாய் வரேன்னுமட்டும் சொல்ல மாட்டீங்க.'

'இன்றைக்கு ரொம்ப கஷ்டத்தில் மூழ்கியிருந்தோம் மாதவி.'

''அதான் சொல்லிட்டேனே, எப்பப் பார்த்தாலும் இதே பதில்தான். அப்படி நீங்கள் கஷ்டத்திலில்லாத நாள்

தான் எது? வேறு யாராவதாயிருந்தால் குறைந்தது மாதத்துக்கு ஒரு நாளாவது மனைவியை வெளியே எங்காவது கூட்டிட்டுப் போகணும்னு நினைப்பாங்க. தலையெழுத்து, ஒரு பிக்னிக்குண்டா, உல்லாசந்தான் உண்டா?'

'முந்தாநாள்தானே கல்யாணத்துக்குப் போயிட்டு அங்கேயிருந்து நேராய் ஓட்டலுக்குப் போனோம்?' தன் பிரச்சினையை மறந்துபோய் அவன் வாக்குவாதத்தில் இறங்கிவிட்டான்.

'ஆங்...போனோம்...பேச ஆரம்பிச்சுட்டால் எந்த தாத்தா காலத்து சங்கதியையோ சொல்லத் தொடங்கிடுவீங்க.'

'நீ ஒருநாள் எங்க இடத்திலிருந்தால் புரியும் எங்க டென்ஷன் எப்படிப்பட்டதுன்னு.'

'யாரு படச்சொன்னாங்க டென்ஷன்? எல்லாரும் சம்பாதிக்கலையா? எல்லோரும் உங்களை மாதிரிதான் மனைவிகளை அலட்சியப்படுத்துறாங்களா?'

ரவி சொன்ன எந்த விளக்கத்தையும் அவள் ஏற்றுக் கொள்வதாகவே இல்லை.

அன்றுதான் தபாலில் வந்த கடிதங்களை மேலோட்டமாய் பார்க்கத் தொடங்கினான். ஒரு கனமான கவர் அவனைக் கவர்ந்தது. எங்கிருந்து வந்ததென்ற விலாசம் இல்லை. பிரித்துப் பார்த்தான். உள்ளேயும் விலாசமில்லை. கையொப்பத்தைப் பார்த்தான். மிஸ். கோயம்பத்தூர் என்றிருந்தது. அவனுக்குப் புரியவில்லை.

பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னால் நடந்த நிகழ்ச்சியை அவன் மறந்துபோய் எவ்வளவோ காலமாகி விட்டது.

# 14

'ரவி, இக்கடிதத்தைப் படிப்பதற்கு முன்பு இவ்வளவு பெரிய கடிதத்தை எழுதியது யார் என்று கீழே கையொப்பத்தைப் பார்த்து அதுவும் விளங்காமல் ஆச்சரியப்படுவாய். தெரியும் எனக்கு. பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னால் நிகழ்ந்த சம்பவம் உனக்கு நினைவிலிருக்க வேண்டிய அவசியமில்லை. ஒருவருக்கு தம் வாழ்க்கையில் மிக உயர்ந்த தாய் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டிய சம்பவம் வேறொருவருக்கு மிக சாதாரணமாய் நிகழ்ந்ததாய் இருக்கலாம். இதுவும் அதுபோன்றதுதான் என்பது என் எண்ணம்.

இத்தனை ஆண்டுகளாக உன் உழைப்பை நானும் கவனித்துக் கொண்டேதான் வருகிறேன். நீ இன்னும் என்னைப் புரிந்து கொள்ளவில்லை என்று உணருகிறேன். மேலும் கொஞ்சம் விவரிக்கட்டுமா?

சுமார் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு பெண்... வாழ்க்கையின் நெளிவு சுளிவுகளையும், கஷ்ட நஷ்டங்களையும் பற்றி ஒன்றுமே அறிந்திராத அப்பெண் பாடிக் கொண்டும், ஆடிக்கொண்டும் சந்தோஷமாய் இருந்து வந்தபோது, அப்பெண்ணிடமிருந்த புது அழகைத் தேடிப் பிடித்து அவளே ஆச்சரியப்படுமளவிற்கு மாற்றியமைத்த ஒரு சிறுவனை, தன்னைவிட சில வயது சிறியவனான அவனை திடீரென்று கட்டிப்பிடித்து அழுந்த முத்தமிட்டு விட்டாள். உலகத்தையே வென்றுவிட்ட சந்தோஷத்தில் தான் என்ன பண்ணுகிறோம் என்றே அந்த சமயத்தில் அவளுக்குத் தெரியவில்லை. ஆனால் நாட்கள் ஆக ஆக தன் வாழ்க்கையில் முதல் முதலாக முத்தமிட்ட

அந்த செயல் அவளை ஆக்கிரமித்துக்கொண்டே வரலாயிற்று! கலவரப்படுத்திற்று. குழப்பத்தை உண்டாக்கிற்று.

தன் முகவாய்க்குக் கீழே அச்சிறுவன் புதிதாய் வைத்த மச்சத்தைப் பார்த்து, 'முன்னைவிட இப்போது நீ எவ்வளவோ அழகாயிருக்காயே. இவ்வளவு மாறுதல் உன்னிடம் எப்படி வந்தது?' என்று யார் புகழ்ந்தாலும், அந்தப் புகழெல்லாம் உன்னைத்தான் சேரவேண்டும் என்பது போல 'நீ செதுக்கிய சிற்பம் நான்' என்ற உணர்ச்சி என்னுள் எழும். மிக அருமையானதும் மென்மையானதுமான உணர்ச்சியல்லவா இது?

இதெல்லாம் உனக்கு குழப்பமாயும், ஏன், முட்டாள் தனமாகவும் கூட தோன்றலாம். ஆனால் சில எண்ணங்களுக்கு அஸ்திவாரங்கள் உள்ளன. கட்டுவது ஆவற்றின் விருப்பம். அவ்வாறு நான் கொடுத்த முதல் முத்தம் என்னுள் அவ்விதமாய் படிந்து போய்விட்டது.

திருமணமாகாத ஒரு பெண்ணாயிருந்தால் இந்த உணர்ச்சிகள் எல்லாம் சகஜந்தான். என் விவாகம் சாதாரணமாய் நடந்து முடிந்துவிட்ட போதும், நீ திரும்பவும் என் கண்ணில் படாமலிருந்தபோதும், அந்த முத்தம் ஒரு இனிய நினைவாய் என் நினைவுத் திரையில் நிலைத்து விட்டது. அரசியலிலேயே முற்றும் திளைத்துவிட்டிருந்த தந்தை கடைசி சமயத்தில் வயது முதிர்ந்த சர்மாவோடு என் திருமணத்தை நடத்தாமலிருந்திருந்தாலோ-தன் ஆண்மையையெல்லாம் குதிரைப் பந்தயத்திலும் குடியிலுமே அவர் பணயம் வைக்காமலிருந்திருந்தாலோ-வேறொரு ஆண்மகனுக்கு நான் இவ்வாறு மனம் திறந்து எழுதி இளப்பமாய் பாவிக்கப்படும் நிலைமை ஏற்படாமலிருந்திருக்கலாமோ என்னவோ?

உனக்கு என்மேல் அருவருப்பு ஏற்பட்டால் என்னை மன்னித்து விடு. தாகத்தில் தவிக்கும் ஒரு உள்ளமானது நீதி போதனைகளைப் பொருட்படுத்தாது.

யாரோ ஒரு சிறுவன் ஷோகேஸிலிருந்த பொம்மைக்கு மிக அபாரமாய் புடவை கட்டியிருப்பதாய் என் கணவர் சொன்னபோது, ஆடை உற்பத்தியாளரையே அவ்வாறு திகைப்படையச் செய்த ஆள் யாராயிருக்கலாம் என்று நானே சுயமாய் வந்து திரும்பவும் உன்னை இரண்டாம் முறையாகப் பார்த்த அந்த நேரத்தில்...

இந்தப் பதினைந்தாண்டுகளில் நீ மிகப் பெரியவனாகி விட்டாய். இந்த நேரத்திலேயே முதல்முதலாய் நீ தென் பட்டிருந்தால் அப்பொழுது பண்ணினாற்போல சாகசத்தைப் பண்ணியிருப்பேனா என்றெண்ணியதுமே சிரிப்பு வந்தது. இத்தனை நாட்களாய் என் மனதிற்குள் புதைத்து வைத்துக்கொண்டிருந்த உணர்ச்சியோடு உன்னைப் பார்க்க நேர்ந்தபோது, சமுத்திரத்திற்கு நடுவில் எரிமலை உடைந்து சிதறினாற் போன்ற உணர்ச்சியையும், ஒழுக்கமானது நீராய் கரைந்து விடாமலிருக்கவும் என்னை நான் கட்டுப்படுத்திக்கொள்ள அரும்பாடுபட வேண்டியிருந்தது. அப்பொழுதிலிருந்து தொடங்கிவிட்டது நரகம்! ஓசையிடா அலையாகி விட்டேன் நான்.

அணுஅணுவாய் நீ முன்னேறிக்கொண்டே வருவதைத் திரைமறைவிலிருந்தபடியே கவனித்து வந்தேன். சிதிலமடைந்து கொண்டிருந்த எங்கள் குடும்பப் பொருளாதார நிலையை நீதான் தூக்கி நிறுத்தி வைத்தாய் என்றறிவேன் நான். எல்லாவற்றையும்விட என்னை ஆச்சரியமும் ஆனந்தமும் படுத்திய விஷயம் என்னவென்றால் - நீயும் கவிதையுணர்ச்சி கொண்டவன் என்ற விஷயந்தான். கவிதை உணர்ச்சியுடையவர்கள் உலகத்தைத் தவறாய் புரிந்து கொள்வார்கள் என்றும் வாழ்க்கை அவர்களுக்கு பூக்கள் பரப்பிய பாதையில்லை என்றும் அதுவரை நினைத்துக் கொண்டிருந்த நான் உன்னைப் பார்த்த பிறகுதான் என் எண்ணம் தவறு என்று உணர்ந்துகொண்டேன். மெல்ல மெல்ல என் யோசனைகள் எல்லாம் உன்னையே சுற்றிச் சுற்றி வரத் தொடங்கின.

பல ஆண்டுகளாய் என்னைக் கட்டுப்படுத்திக் கொண்டே வந்தேன். இனி முடியாமல் போனதால்தான் இக் கடிதம்!

நான் தவறிழைக்கிறேனா?

இல்லை என்பதுதான் என் அபிப்பிராயம். இத்தனை நாட்கள் மானசீகப் போராட்டத்திற்குப் பிறகு நான் இந்தத் தீர்மானத்திற்கு வந்திருக்கிறேன். இனி உன்னைச் சந்திக்காமல் என்னால் இருக்க முடியாது. முத்தத்தால் முளைவிட்டிருந்த செடி, அவருடைய தீய பழக்கத்தால் பெரிய விருட்சமாகி, மனம் முழுவதும் ஆக்கிரமித்துக் கொண்டுவிட்டிருக்கும் இந்தத் தருணத்தில் — இன்னும் ஒழுக்கம் ஒழுக்கம் என்று பிடித்துக்கொண்டு தொங்கினால் அது என்னை முற்றிலும் பைத்தியம் பிடிக்கச் செய்துவிடும் என்பது உண்மை!

உன்னை இரண்டாவது தடவை பார்த்தபோது என் டைரியில் 'மலையமாருதத்தில், மலர் ஊஞ்சலில் அமர்ந்து கொண்டிருக்கையில் தேவலோகத்திலிருந்து மலர் மாரி பொழிந்தாற்போலிருந்தது' - என்று எழுதிக்கொண்டேன். ஒரு திருமணமான பெண் இவ்வாறு எழுதுவது தப்பு என்று சமூகம் பழிக்கும். பணத்திற்காக மகளைக் கிழவனுக் களிக்கும் சமூகம்...தீய பழக்கத்தால் மனைவியைப் புறக் கணித்த சமூகம்...இந்த சமூகத்தை மதிக்கும் பொறுமை என்னுள் நசிந்துவிட்டது. இக்கடிதத்தை இவ்வாறு எழுது வது எனக்கு ஒரு பக்கம் பயமாய்த்தான் இருக்கிறது - என்னை நீ எப்படிப் புரிந்து கொள்வாயோ என்று.

ரவீ! நான் தவறு பண்ணுகிறேன் என்று எனக்குத் தெரியும். இதெல்லாம் உனக்குக் குழப்பமாய் தோன்ற லாம். அமைதியாயிருக்கும் உன் மனத் தடாகத்தில் இக் கடிதம் ஒரு கல்லை விட்டெறிந்தாற் போலாகலாம். ஆனால் ஐந்தாறு ஆண்டுகளாய் இந்த உள்மனப் போராட் டத்தால் மிகவும் நலிந்து விட்டேன் நான். நீ எங்கள் வீட்

டிற்கு வந்திருந்தாய். அவர் காபி கொடுக்கச் சொன்னார். அப்போதுகூட நான் வெளியே தலைகாட்டவில்லை. ரவி தேஜா டெக்ஸ்டைல்ஸ் கம்பெனி ஏற்பாடு பண்ணிய விழா விற்கு நான் வேண்டுமென்றே வராமல் போனதற்கும் பின்னால் இவ்வளவு மனப் போராட்டம் இருந்து வந்திருக் கிறது என்று நீ உணர்ந்து கொண்டால் போதும். என்னை ஒரு தாழ்ந்த பெண்ணாய் மட்டும் பார்க்காதே. என்னை நான் கட்டுப்படுத்திக் கொள்வதற்கும், சமூக நீதிக்கு மதிப் பளிக்கவும் எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பேன் என்று நீ புரிந்து கொண்டால் போதும். இவ்வுணர்ச்சிகள் எல்லாம் கேலிக் குரியதாகவும், என் விருப்பம் விரும்பத் தகாததாயும் தோன்றினால், இக் கடிதத்தை பற்றியே மறந்து விடு.

பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னால் — அன்றைய தினம் இன்னும் உனக்கு நினைவிருந்தால் - என்னைச் சந்திப்பது உன் ஒழுக்கத்திற்குக் களங்கம் என்று நீ எண்ணா மலிருந்தால் - நாம் திரும்பவும் சந்திப்போம்! நாளன் றைக்குப் பத்து மணிக்கு தாஜ் ஓட்டலில் உனக்காகக் காத் திருக்கிறேன். உனக்கு இது பைத்தியக்காரத்தனமாய் தோன்றினால், கட்டுப்பாடுகளிலிருந்து மீறி வர நான் பட்ட கஷ்டங்கள் எல்லாம் உனக்கு கட்டு மீறிய துணிச்ச லாய் தோன்றினால் இக்கடிதத்தைக் கிழித்தெறி.

மனமே காவேரியாகி, இதயமே கோதாவரியாகி, சமுத்திரத்தையே கண்ணீர்த் துளிகளாய் விட்டபடி இக் கடிதத்தை எழுதுகிறேன் என்றும், இது கண நேர ஆவேச மில்லை என்றும் நீ உணர்ந்தால் எனக்குப் போதும். நாம் சந்திக்காவிட்டாலும் பரவாயில்லை. இளப்பமாக மட்டும் பாவித்து விடாதே. ஒரு காலத்தில்...

மிஸ். கோயம்புத்தூர்.'

கடிதத்தைப் படித்து முடித்ததும் அவன் வெகுநேரம் சிலையாய் அப்படியே உட்கார்ந்து விட்டான். மனம் முழு

வதும் ஏதோ பனிக்கட்டிக்குள் வைத்தாற்போல ஆயிற்று. என்ன யோசித்தான் என்று அவனுக்கே புரியவில்லை.

நிசப்தமாய் அவனுடைய யோசனையலைகளைப் பரிசீலிப்பது போல உறைந்து கிடந்தது இருள்! நெற்றிப் பொட்டில் கைகளை ஊன்றியபடி கண்மூடிக் கொண்டிருந்தான் அவன்.

# 15

அந்தப் பெண்ணை மறந்து விடவில்லை. பதினைந்து. ஆண்டுகளுக்கு முன்னாலிருந்த அப் பெண்ணின் தோற்றம் ஒரு உயிர்த் தோற்றமாய் அவனுடைய மனம் என்ற பலகையின் மேல் செதுக்கப் பட்டு விட்டிருந்தது என்றே சொல்லலாம். ஆனால் ஒரு இனம்புரியாத திருப்பத்தில் எதிர்பாராத விதத்தில் இவ்வாறு அது வெளியாகுமென்று அவன் எதிர்பார்க்கவில்லை. அவனைப் பொறுத்தவரை அது ஒரு நினைவு! அவ்வளவுதான். அதைக் காட்டிலும் வேறில்லை. ஆனால் இக்கடிதம் வந்த பிறகு...

அதுவரையிலும் அமைதியாயிருந்த ஒரு தடாகத்தில் ஒரு அன்னப்பட்சியானது இந்தப் பக்கத்திலிருந்து அந்தப் பக்கமாய் நகர்ந்ததால் ஏற்பட்ட ஒய்யாரமான அலைகள்!

அவனுக்கும் வருத்தம் இருந்தது. ஆனால் ஐந்தாண்டுகளாய் அந்த வருத்தத்தையே பழக்கப்படுத்திக் கொண்டு ஈடு கட்டிக்கொண்டு வாழ்ந்து வருகிறான். வீட்டில் சுகமில்லாத ஆண்கள் வெளியே கெட்ட பழக்கங்களுக்கு அடிமையாகி விடுகிறார்கள். அவன் அவ்விதமாய் ‘வேலை’க்கு அடிமையாகிவிட்டான். அவனுக்கு சுகத்தைத்தேடி அலைவது பற்றியோ, வாழ்க்கையை அனுபவிப்பதுபற்றியோ தெரி

யாது. வீட்டில் கிடைக்காத அமைதி அவனுக்கு வேலையில் கிடைத்தது.

அவன் அக்கடிதத்தை அதற்குள் பத்துமுறை படித்து விட்டான். அவளுடைய எழுத்தும், மனதின் சஞ்சலத்தை வெளிப்படுத்திக் கொண்டிருந்த விதமும் அவன் மனதை நெகிழ்த்திற்று. வெறுமை எப்படியிருக்கும் என்பது அனு பவித்துப் பார்த்தவர்களுக்குத்தான் தெரியும். அவள் எவ்வளவு வேதனைப்பட்டு, மனம் குமுறி, ஓசையிடா அலையைப் போல எவ்வளவு நாட்கள் தன்னுள் போராடி இந்தத் தீர்மானத்திற்கு வந்திருப்பாள் என்பதை அக் கடிதம் சொல்லிற்று. முன்பு துணிக்கடையில் பெண்ணிடம் வம்பு செய்தவனை நீக்கியதற்கும், அவன் சர்மாவுடன் பேசிக்கொண்டிருந்தபோது திரைக்குப் பின்னால் கேட்ட காலடிச் சத்தத்திற்கும் அர்த்தம் புரிந்தது.

பாலைவனத்தில் எவ்வளவு வெயில் காய்ந்தாலும் பரவாயில்லை. ஆனால் கொஞ்சம் மழை வந்து நாலைந்து தூறல்கள் விழுந்து விட்டால், திரும்பவும் வெயிலைத் தாங்கிக் கொள்வது கஷ்டம். அதுவரை வெயிலுக்குப் பழக்கப்பட்டுப் பாலைவனத்தில் பிரயாணம் செய்து கொண்டிருந்த ஒருவனுக்கு எதிர்பாராத விதத்தில் மழை மேகம் தென்பட்டாற்போல ஆயிற்று. அது மழையைத் தான் பெய்யுமோ அல்லது புயலையே உண்டாக்குமோ அல்லது காற்றில் கலைந்து சிதறிப் போய்விடுமோ—காலந் தான் உணர்த்த வேண்டும்.

'நாளன்றைக்குப் பத்து மணிக்கு' என்று அவள் எழுதி யிருந்தாள். அக்கடிதம் எழுதியிருந்த தேதியைப் பார்த்த வனுக்கு பகீரென்றது!...நாளைக்கே!

நாளைக்கு சரியாக அதே நேரத்தில் அவன் கைது ஆகப் போவது தெரியும் அவனுக்கு. என்ன பாடுபட்டாலும் சரி; மாலை வரையிலும் போலீஸ் ஸ்டேஷனிலும் கோர்ட்டி லுமே கழிக்க வேண்டியிருக்கும்.

அவனுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. தனக்காக அவள் அங்கே எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் அதே சமயத்தில் இங்கே தன்னை அரெஸ்ட் பண்ண இன்ஸ்பெக்டர் வருவார். இந்த விஷயம் நடக்க முடியாதது பற்றி அவள் அறிந்து கொள்ள வேண்டுமானால் அதைச் சர்மா தான் சொல்ல வேண்டும்.

ஆனால் அவர் சொல்லுவார் என்று அவனுக்குத் தோன்றவில்லை. காலையிலேயே ஆபீசுக்குக் கிளம்புவது போல கிளம்பி விட்டு சாயந்திரம் கோர்ட்டிலிருந்து திரும்பி வந்துவிடுவார். அவள் இதையெல்லாம் பேப்பரில் பார்த்து தெரிந்துகொள்ள வேண்டியதுதான்.

எது எப்படியானால்தான் என்ன? நாளைக்கு அவள் அவனுக்காகக் காத்திருக்கப் போகிறாள்.

தான் அவளைச் சந்திக்க வேண்டும்.

அல்லது போன் பண்ணி புரோகிராமை நாளன்றைக்கு மாற்றிக் கொள்ளும் படிச் சொல்ல வேண்டும்.

அவன் கை போன் வரைக்கும் நீண்டு விட்டது.

ஒருக்கால் சர்மா எடுத்து விட்டால்?

ஏதோ தவறிழைப்பது போன்ற உணர்ச்சி.

ஒருகால் அவளே எடுத்தாலும் சரி, அவனால் என்ன பேச முடியும்? நாளைக்கு வேண்டாம். நாளைக்கு அரெஸ்ட் ஆகப்போகிறோம். நாளன்றைக்குச் சந்திப்போம் என்று சொல்லுவானா? முதலில்...சந்தித்த உடனேயே, அல்லது பேச வேண்டிய தருணம் வந்ததுமே சட்டென்று அவனால் பேச முடியுமா?

சர்மாவின் மனைவி மிக அழகாயிருப்பாள் என்று பலரும் பேசிக் கேட்டிருக்கிறான். எவ்வளவோ முறை மாதவி கூட பலமுறை பொறாமைப்பட்டுப் பேசியிருக்கிறாள்,

ஆனால் அவன் இப்பொழுது இந்த நிலையிலிருந்தது அவளுடைய அழகை நினைத்து இல்லை. தன் வாழ்க்கையின் சூனியமயமான வெறுமையை அவள் வெளிப்படுத்தியிருந்த விதத்தை நினைத்து! தன் வாழ்க்கையின் சூனியமான வெறுமையை யாருக்காவது கடிதம் எழுத முடிந்தால் அவனும், இதுபோலவேதான் எழுதுவான்!

ஒரு குருடனுக்கு ஓர் ஊமை துணையானது போன்ற உணர்ச்சி.

ஆனாலும் துணை இருப்பது போல் காட்டும் அபயம்.

பல்வேறுபட்ட யோசனைகளால் அவன் வெகு நேரம் உறக்கம் வராமல் கழித்தான்.

நாளைக்கு என்ன பண்ண வேண்டும் என்பதுதான் பிரச்னை.

எந்தச் சூழ்நிலையாயிருந்தாலும் சரி, 'தாஜ்' ஓட்டலுக்குப் போக வேண்டும். அவளைப் பார்க்க வேண்டும், சந்திக்க வேண்டும், பேச வேண்டும்.

அப்பொழுதுதான் அவனுக்கு திடீரென்று யோசனை வந்தது...எல்லா டைரக்டர்களையுமே விடுதலை பண்ணி விடும்படியான யோசனை.

அவன் மேற்கொண்டு தாமதிக்கவில்லை.

இரவு இரண்டு மணி ஆகியிருந்தது.

போனை அணுகி, வரிசையாய் போன்கள் பண்ணத் தொடங்கினான்.

அழுத்தம் என்பது ஒரு மேகத்தைப் போன்றது. சுற்றிலும் சூழ்ந்து கொண்டிருக்கும். அது மனம் சம்பந்தப்பட்டது. இந்த ஒரு அழுத்தத்தில் இருக்கும்போது எதுவுமே செய்யத் தோணாது.

ஆனால் சின்ன சூரிய கிரணம் மேகங்களைச் சிதறடித்து விடுவது போல, டிப்ரெஷனைப் போக்கிக் கொள்ள சின்ன நிகழ்ச்சியே போதும். அவன் விஷயத்தில் கூட அதுவேதான் நிகழ்ந்தது.

தன்னை ஒரு பெண் கவனித்துக் கொண்டிருக்கிறாள்! இவ்வளவு நாளும் தனக்குப் பின்னாலிருந்தபடி தன் வெற்றியை கவனித்துக் கொண்டே வந்திருக்கிறாள்.

அவளைப் பற்றி அவனுக்கு ஒன்றுமே தெரியாது. அழகானவள் என்று தெரியும்.

ஒரு சொட்டுத் தண்ணீருக்காக ஏங்கியவனுக்கு முன்னால் திடீரென்று பெரிய நதியே வந்து தோன்றினாற் போன்ற உத்வேகம். ஹஹூம், இது சரியான உவமான மில்லை...அவன் என்றுமே பிற பெண்களை விரும்பிய தில்லை. தன் துரதிர்ஷ்டம் தன்னோடு பிறந்தது, அதை ஒருவராலும் சரிபண்ண முடியாது என்றெண்ணி வந்தான் இவ்வளவு நாளும்! வேலையில் மூழ்கி எல்லாவற்றையும் மறந்து விட்டிருந்தான். ஆனால் இப்பொழுது திடீரென்று ஏதோ புதிய பாதை திறந்து கொண்டாற் போலிருந்தது.

அந்த நான்கு பக்கக் கடிதம் அவன் மனதைப் பிசைந் தெடுத்து உலுக்கு உலுக்கி விட்டது. கடுகளவு அன்பாவது கிடைக்காதா என்று தவித்தவர்களுக்கும், வாழ்க்கையில் அன்பிற்காகத் தவிதவித்தவர்களுக்கும், தாம் பண்ணும் காரியத்தைப் புரிந்துகொள்ளக் கூடியவர்கள் இல்லாமல் தவித்தவர்களுக்குந்தான் புரியும் அதன் மதிப்பு.

எங்கோ தொலை தூரத்திலிருந்து புல்லாங்குழல் ஓசை கேட்டு, மனதைப் பரவசப்படுத்தினாற் போலி ருந்தது.

இந்தப் பதினைந்தாண்டுகளில் அவள் முகம் அம்மை வந்து விகாரமாயும் போயிருக்கலாம். அல்லது முதுமை அவளை இந்த முப்பத்தைந்து வயதிலேயே ஆட்கொண்டு

விட்டிருக்கலாம் கூட. அவன் யோசனை அதைப் பற்றி யில்லை. பரிச்சயம் ஆவதற்கு வேட்கை க்ளைமாக்ஸாக இருக்கலாம். ஆனால் வேட்கையேதான் பரிச்சயத்திற்கு அடிகோலி என்றெண்ணிவிடக் கூடாது. முக்கியமாய் அவன் விஷயத்தில்...சிறுவனின் மனோநிலை...மட்டை யால் பந்தை உயரப் பறக்கச் செய்ய சுழன்று ஆடும் ஒரு விளையாட்டு வீரனுக்குத்தான் தெரியும்—ஒரு சிறிய பாராட்டு, பார்வையாளர்களிடமிருந்து கைத்தட்டல், புகழ்ச்சி...நிமிர்ந்து நின்று உன்னை நான் கவனித்துக் கொண்டேயிருக்கிறேன் என்ற சின்ன அறிவிப்பு...அதி லிருக்கும் ஆனந்தம் எவ்வளவென்று...

அந்த ஆனந்தம் கொடுத்த புது சக்தியோடு, இரவு இரண்டு மணியிலிருந்து போன் பண்ணிக் கொண்டே யிருந்தான். சுமார் ஐம்பதாயிரம் ரூபாய்க்கு, ஒரு சின்ன சைஸ்மாஃபியா தலைவருடன் உடன்படிக்கை ஏற்பட்டது. எஞ்சியதையெல்லாம் அவர்கள் பார்த்துக் கொள்வதாய் உறுதி தந்தார்கள்.

அவர்கள் சரியாய் அவ்வேலையை நிறைவேற்றுவார் களா என்ற யோசனையைவிட, நாளைக்குப் பத்து மணிக்கு நடக்கப்போகும் நிகழ்ச்சி சம்பந்தப்பட்ட யோசனையே அதிகமாய் அலைக்கழித்ததால் உறக்கம் வரவில்லை.

ஏழு மணிக்கு எழுந்து தயாரானான்.

எட்டு...எட்டரை.

டைரக்டர்களிடமிருந்து வரிசையாய் போன் வரத் தொடங்கிற்று. 'இன்னும் இன்ஸ்பெக்டர் வரலையே, ஏன்?' என்று.

தன் திட்டம் பலித்துக் கொண்டிருப்பது போல தோன் றிற்று. 'நான் இப்போ ஆபீசுக்குக் கிளம்பிட்டிருக்கேன். நீங்களும் அங்கே வந்து சேருங்க. அங்கே உங்களுக்கு விவரத்தைச் சொல்றேன்' என்றான்.

ஒன்பது மணிக்கெல்லாம் டைரக்டர்கள் எல்லோரும் ஆபீசில் வந்து கூடிவிட்டார்கள். எல்லோருடைய முகங்களிலும் கேள்விக்குறிகள் தெளிவாய் தென்பட்டன. அவன் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போன் பண்ணினான். மறு முனையிலிருந்து இன்ஸ்பெக்டர், 'நீங்களா? இப்பத்தான் உங்களுக்குப் போன் பண்ணலாம்னு எண்ணிட்டேயிருந்தேன். ஐயாம் சாரி, நேற்று உங்களைத் தொந்தரவு படுத்தியதற்கு...'

'என்ன, என்னவாச்சு?'

'இந்தப் புடவைங்க மீது டிசைன்களைப் பிரிண்ட் பண்ணும் சாதனங்கள் வைக்கப்பட்டிருக்கும் வீடு ஒன்று, ஊர் எல்லையைத் தாண்டி இருபது மைலுக்கப்பால் பிடிபட்டிருக்கு. யாரோ செய்தி சொன்னதின் பேரில் தெரிந்தது இந்த விஷயம். விடியற்காலை நாலு மணிக்கு வீட்டைச் சோதனை போட்டுட்டோம்.'

'யாராவது கிடைச்சாங்களா?'

'ஒருத்தர் கிடைச்சாரு, ஆனால் அவருக்கொண்ணுமே தெரியலை...அச்சு மட்டுந்தான் கோர்ப்பவன் அவன். வேறொன்றும் தெரியலை. எஞ்சியவங்களைத் தேடிட்டிருக்கோம். இந்தப் புற்றிலிருந்து ஈசல் சீக்கிரத்திலேயே வெளியாகிடும்னு நம்புறோம். அந்த வீட்டிலேயே பம்பாய் ரயில்வே டிக்கெட்கூட கிடைத்தது. இந்தப் புடவைங்களை எடுத்துக்கிட்டு அவங்க முதலாளி அடிக்கடி பம்பாய்க்குப் போவாருன்னு அந்தப் பையன் சொன்னான். அவனுக்கு அவ்வளவுதான் தெரிஞ்சிருக்கு...

'மொத்தத்தில் எங்களை அரெஸ்ட் பண்ணப் போவதில்லை. அவ்வளவுதானே?'

'இவ்வளவு விவரம் தெரிஞ்ச பிறகு கூட உங்களை அரெஸ்ட் பண்ணினேனானால் குறைந்த பட்சம் ஐந்து லட்சத்திற்காவது மான நஷ்ட வழக்குப் போட மாட்டீங்களா?'

'சே, அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. ஆனால் அவங்களைச் சீக்கிரமாய் பிடிச்சுக்குங்க இன்ஸ்பெக்டர் சார்.'

'கண்டிப்பாய்!'

போனை வைத்துவிட்டுத் தன்னையே பரபரப்போடு பார்த்துக் கொண்டிருந்த டைரக்டர்களுக்கு நடந்ததைச் சொன்னான் ரவி. தான் செய்த ஏற்பாடு பற்றிய விஷயத்தையும். அந்த அறையில் இரண்டு நிமிஷங்கள் வரையிலும் புயல் வந்து சேர்ந்தது போல சந்தோஷ மிகுதியால் சந்தடியும் கூச்சலுமாயிருந்தது. அவ்வளவு பேர் முகங்களிலும் அதுவரையிலும் இருந்து வந்த டென்ஷனை யாரோ துடைத்தெறிந்தாற்போல மாயமாயிற்று. மூழ்கடிக்கப் போகிறது என்றெண்ணியிருந்த அலையானது மெல்ல பின்னுக்குப் போய்ச் சேர்ந்து விட்டாற்போல எண்ணி எல்லோரும் நிம்மதியாய் பெருமூச்சு விட்டார்கள்.

ரவிக்குத் தோன்றிய யோசனைக்கு அவனை எல்லோரும் பாராட்டினார்கள். சட்டத்தின் எல்லை இவ்வளவு சிறியதாயிருந்ததை நினைத்து அவனுக்கும் ஆச்சரியமாய்த்தான் இருந்தது...ஆனால் சாதித்து விட்டான். அதுதான் சந்தோஷம். இன்றைக்கு அவன் சாதித்த விஷயம் குறைந்ததொன்றுமில்லை.

# 16

நேரம் 9.30 ஆயிற்று.

அன்று மாலையில் பிரஸ் மீட்டிங்கிற்கு ஏற்பாடு பண்ணிக் கொண்டிருந்தார் ஒரு டைரக்டர். தேச துரோகிகளின் வேலைகளை ரவியோடு சம்பந்தப்படுத்தியது தமக்கு மிக மன வருத்தத்தைத் தந்ததாய் பேப்பரில் செய்திகளைத் தந்திருந்தார்கள். அரை மணிக்கு முன்னால் வரையிலும் தாம் இதில் சிக்கிக்கொண்டு மீள முடியாமல் பலவாறு

அவஸ்தைப் பட்டவர்கள். இப்பொழுது இதனைக் கண்டித்துப் பேசினார்கள். இதுதான் 'சமூகம்' என்பது!

ஒரு சின்ன செய்தி பேப்பர்களில் வராமலிருப்பதற்கு ஆகும் செலவு ஐம்பதாயிரம். அதுதான் சமூக அந்தஸ்தின் மதிப்பு!

நேரம் 9.45 ஆயிற்று.

இந்த வெற்றியைப் பகிர்ந்து கொள்வதற்காக மாலையில் பார்ட்டிக்கு ஏற்பாடு பண்ணிக் கொண்டிருந்தார் இன்னொரு டைரக்டர். எங்கும் ஒரே பரபரப்பாயிருந்தது.

பத்தடிக்கவிருந்தபோது ரவியின் பரபரப்பு அதிகரித்தது. சாதித்தது ஒரு பக்கம். நடக்கப்போவது இன்னொரு பக்கம். பத்தடிக்கப் பத்து நிமிஷம் இருந்தபோது அவன் ஒட்டலுக்குக் கிளம்பினான். காரை பார்க்கிங்கில் நிறுத்தி விட்டு, ரிசப்ஷனில் போய், 'லௌஞ்சில்' உட்கார்ந்து கொண்டான்.

ஐந்து நிமிஷங்கள் கழிந்தன. அவன் பொறுமையின்றி நேரத்தைப் பார்த்துக் கொண்டான்.

சரியாய் பத்தடித்தது.

அவள் எங்கே வருவதாய் எழுதினாள்? ரிசப்ஷனிடமா? காபி பாருக்கா? லஞ்ச் ரூமுக்கா?

அவன் விடுவிடுவென்று நடந்துபோய் எல்லா இடங்களிலும் தேடினான். அங்கே நாலைந்து ஆண்களைத் தவிர வேறு யாருமேயில்லை.

நேரமாக ஆக அவன் பரபரப்பு அதிகரித்தது.

பத்தேகால்.

பத்தரை.

அவன் கடிதத்தை இன்னொரு முறை எடுத்துப் படித்தான். இன்னொரு முறை எல்லா இடங்களுக்கும் போய்த் தேடிப் பார்த்தான். அவள் ஜாடையைக் காணோம்!

நேரம் மெதுவாய் நழுவிக் கொண்டிருந்தது. அவனுக்கு முள்ளின் மேல் அமர்ந்திருப்பது போலிருந்தது. அவர்களுடைய காரின் நம்பர் அவனுக்குத் தெரியும், பார்க்கிங் இடத்திற்குப் போய் தேடினான். எந்த காருமே இல்லை. திரும்பி ரிஸப்ஷனுக்கு வந்தான். அவள் ஜாடை இல்லை.

அவனுக்குப் பைத்தியம் பிடிப்பது போலிருந்தது.

பதினொன்றரை...பன்னிரெண்டு.

அவன் போன் பண்ணுவோமா என்று நினைத்தான். அவள் வந்து பார்த்து விட்டுத் தான் தென்படாமல் போய், திரும்பிப் போயிருப்பாளோ என்ற சந்தேகம். அவள் மீது கொஞ்சம் கோபம்கூட வந்தது. வெறுமே 'தாஜ்' என்று எழுதியிராமல் இடத்தையும் குறிப்பிட்டிருக்கலாமில்லையா என்றெண்ணினான்.

ஏதோ கைக்கெட்டி வாய்க் கெட்டாமல் போய் விட்டது போன்ற உணர்ச்சி! எதிர்பார்த்தது நடக்கா விட்டால் ஏற்படும் ஆத்திரம்! யார் மீதென்றே தெரியாத கோபம். பொறுமையின்றி வெகு நேரமாய் சோபாவில் நெளிந்து கொண்டிருந்தான்.

பன்னிரெண்டரை மணிக்கு, இனி லாமில்லை என்றெண்ணி வீட்டிற்குப் புறப்பட்டான்.

கொஞ்ச நேரம் தடுமாற்ற மடைந்துவிட்டு, பிறகு ரிசீவரை எடுத்து டயல் பண்ணினான். மறுமுனையிலிருந்து போனை எடுத்த ஓசை, அதையும் மீறிக்கொண்டு அவன் மார்பு வேகமாய் படபடத்த ஓசை.

அரை நிமிஷத்திற்குப் பிறகு மறுமுனையில் போனை யாரோ எடுத்தார்கள். அவன் மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டான்.

''ஹலோ—'' மறுமுனையிலிருந்து இனிமையான குரல் கேட்டது.

''ஹலோ'' என்றான்.

'மிஸஸ். சர்மா ஹியர். யாரு வேணுங்க?'

'நான்தான்—ரவி...'

அவன் இன்னும் ஏதோ சொல்லப்போனபோது போன் கட் ஆகிவிட்டது. அவன் கையிலிருந்த ரிசீவரைப் பார்த் தான். அவள் போனைக் கட் பண்ணிவிட்டாள் என்றறிந்த துமே அவனுக்கு ஆவேசம் பிறந்தது. மறுபடியும் டயல் பண்ணினான். இம்முறை ஆண்குரல், 'சர்மா, பேசுகிறேன்' என்று கேட்டது.

போனை வைத்து விட்டான்.

மேற்கொண்டு என்ன பண்ணுவதென்று அவனுக்கு விளங்கவில்லை. ஒருக்கால் அவர் பக்கத்திலிருந்ததால் போனில் பேசப்பிடிக்காமலிருந்திருக்கலாம்.

ஃ ஃ ஃ

மாதவி வீட்டிலில்லை. எங்கேயோ ஃப்ளவர் ஷோ என்று போய்விட்டிருந்தாள். வீடு முழுவதும் சந்தடியில்லாம லிருந்தது. அவன் முன் ரூமிலிருந்த சோபாவில் அப்படியே படுத்துக் கொண்டான்.

பதினைந்தாண்டுகளுக்கு முன்னால் நடந்த அந்த சம்பவத்தை நினைவிற்குக் கொண்டு வந்தபடி படுத்திருந் தான். அது இரவு கூட இல்லை. வெறுமே கண்மூடிப் படுத்துக்கொண்டிருந்தான்.

இரண்டரை மணி வாக்கில் போன் ஒலித்தது. சட்டென்று எடுத்தான்.

சர்மா.

'காலையிலேருந்து தென்படலையே, என்னவாச்சு?'

அவன் பேசவில்லை.

'உனக்கு எப்படித்தான் தாங்க்ஸ் சொல்றதோ தெரியலை. ராத்திரியெல்லாம் தூக்கமில்லை. காலையில் நம்ப டைரக்டருங்க சொல்லும் வரையிலும் எனக்குத் தெரியாது. உன்னைத் தேடினேன். நீ போயிட்டாய்னு சொன்னாங்க. நீயே சுயமாய் சொல்லியிருந்தால் நன்றா யிருந்திருக்கும். நீ பெரிசாய் பிளான் போட்டுட்டாய்...'

அவன் காதில் போட்டுக் கொள்ளவில்லை. அவள் யோசனையைத் தவிர வேறெந்த யோசனையுமே ஆர்வத்தைத் தரவில்லை.

'என்ன, போன் சரியாய் வேலை பண்ணலையா?'

'எ...என்ன?'

'நான் சொன்னது கேட்டுதா?'

'ஆங்'

'அவசரமாய் போயிட்டதாய் சொன்னாங்க. வேறு ஏதாவது பிராப்ளமா?'

'சே சே, அதெல்லாம் ஒண்ணுமில்லை. நீங்க எங்கே யிருந்து பேசறீங்க?'

'ஆபீசிலேருந்து. வரயா?'

'ஒரு மணி நேரத்தில் வரேன்.'

அவர் போனை வைத்துவிட்டார். ரவி உடனே வீட்டிற்கு டயல் பண்ணினான்.

அவள் எடுத்தாள். 'ஹலோ...' என்றாள்.

'நான்தான் ரவி—'

சட்டென்று கட் ஆகிவிட்டது போன்.

அதைப் புரிந்துகொண்டு போனை பட்டென்று வைத்தான். அவனுக்கு வெறுப்பாயிருந்தது. அவள் ஏன்

அந்த மாதிரி பண்ணுகிறாள் என்று அவனுக்குப் புரியவில்லை.

அந்த வினாடியே அவள் வீட்டிற்கு நேராய் போய் ஏன் இவ்விதமாய் என்னை அலைக் கழிக்கிறாய் என்று கேட்டு விட வேண்டும் போலிருந்தது அவனுக்கு. ஏன் இவ்வாறு தூண்டிவிட்டு எதுவுமே தெரியாதது போல பேசாமலிருக்கிறாய் என்று உலுக்கி எடுக்க வேண்டும் போலிருந்தது.

ஒருக்கால் அந்தக் கடிதத்தை அவள் எழுதவில்லையோ என்ற சந்தேகம் கூட வந்தது. ஆனால் இவ்வளவு விவரமாய் அந்த நாளில் நடந்த விஷயத்தை அறிந்தவர்கள் வேறு யாருமில்லை. அதோடு கூட சர்மாவின் இரண்டாம் மனைவியின் தந்தை ஒரு காலத்தில் எம்.எல்.ஏ.வாக இருந்தார் என்றும் பிற்பாடு மோசமான நிலைக்குத் தாழ்ந்து விட்டார் என்றும் யாரோ சொல்லக் கேட்டிருக்கிறான்.

பின்னே அவள் ஏன் இவ்வாறு போனைக் கட் பண்ணுகிறாள்? தன்னோடு பேச ஏன் மறுக்கிறாள்?

இரண்டு நாட்கள் வரை இக்குழப்பத்திலேயே கழித்தான். எப்பொழுதும் அதே யோசனை. ஆபீசு விஷயங்களில் உதாசீனம் அதிகரித்தது. அவளை பலவந்தமாகவாவது சந்தித்துத் தீர வேண்டுமென்ற ஆவலை அடக்க முடியாதவனானான்.

இவ்வாறு இருக்கும்போது அதற்கு மறுநாள் தபாலில் கடிதம் வந்தது. அதே கையெழுத்து. நடுங்கும் கரங்களுடன் பரபரவென்று அதைப் பிரித்தான். அவன் வாழ்க்கையில் என்றுமே அவ்வளவு பரபரப்பை அடைந்ததில்லை.

கடிதத்தோடு கூட ரோஜாப்பூ இதழ்கள் பொல பொலவென்று கீழே விழுந்தன முதலில்.

ரவி பரபரப்போடு கடிதத்தைப் பிரித்துப் படிக்கத் தொடங்கினான்.

'ரவி,

இக்கடிதத்தைப் படித்ததும் நீ என் மேல் கோபமும் வெறுப்பும் அடைவாய் என்றறிவேன் நான். 'இவள் என்ன இப்படி, சொன்ன வார்த்தைப்படி நடக்கவில்லையே!' என்று என்னைத் திட்டித் தீர்ப்பாய் என்றும் தெரியும். ஆனால் எனக்குச் சக்தியில்லை. மன்னித்து விடு.

ஒவ்வொரு பெண்ணைச் சுற்றிலும் ஒரு கட்டுப்பாடு என்ற கோடு கிழிக்கப்பட்டிருக்கிறது என்று தோன்றுகிறது. இதனை ஆண்களோ, சமூகமோ ஏற்படுத்தவில்லை. பெண் தானே தன்னைச் சுற்றி ஏற்படுத்திக்கொள்கிறாள். அதிலிருந்து வெளியேறுவது அவ்வளவு சுலபமில்லை. பல ஆண்டுகளாய் மனதில் எந்த பந்தமுமில்லாமல் வீட்டில் சுகமில்லாமல்போய் இந்தக் கோட்டைத் தாண்டலாம் என்றெண்ணினேன்...ஊஹூம். இல்லை. அது ஒன்று மட்டுமே காரணமில்லை; நீயும்தான் என் சலனத்திற்குக் காரணம்.

உள்ளேயிருந்து கக்கிக் கொண்டு வெளிவரும் நெருப்புக் குழம்பு எரிமலையைப் பிளந்து கொண்டு வெளிப்படுவது போல, இந்த கட்டுப்பாட்டை மீறிக்கொண்டு ஆசையானது வெளிப்பட்டு உனக்கு என்னைக் கடிதம் எழுத வைத்தது.

ஆனால் அந்தச் சமயம் வந்து சேர்ந்தபோது என்னாலே வெளியே அடியெடுத்து வைக்க முடியவில்லை. பயமில்லை ரவி. என்னை நம்பு. நான் யாருக்கோ எதற்கோ பயந்துகொண்டு இருந்து விடவில்லை. குழப்பத்தால்தான் அவ்வாறு செய்தேன். இவ்வளவு நாளும் பொறுத்துக் கொண்டேன். இன்னும் ஒரு பத்து வருஷங்கள் பொறுத்து விட்டால் இந்தக் கட்டை போய்விடும். போகாவிட்டாலும்

என் ஆசைகள் நசிந்து விடும். நீ கேட்கலாம், பின்னே இதையெல்லாம் யோசித்துப் பாராமல் ஏன் கடிதம் எழுதினாய் என்று. சில காரியங்களுக்குத் தர்க்கமே கிடையாது ரவி. நீ புரிந்து கொள்வாய். புரிந்து கொள் வாய் என்றுதான் இக்கடிதத்தை எழுதுகிறேன்! மன்னிப் புக்களுடன்!

நீ போன் பண்ணியபோது கூட உடனே வைத்து விட்டதற்கும் என்னை மன்னித்து விடு. உன்னோடு பேசினால் இப்பொழுதுதான் மெல்ல மெல்ல சுட்டுக் கொண்டிருக்கும் இந்த மனத் துணிவு சிதறிவிடும் என்ற பயம். தயவு செய்து என்னோடு பேச முயற்சிக்காதே. என்னை நான் உறுதியாக்கிக் கொள்ள விடு. இது ஒன்று தான் நான் உன்னை வேண்டிக்கொள்வது.

உண்மையை விட கற்பனை நன்றாயிருக்கிறது. கற் பனையை உண்மையாக்கிக் கொள்ள வேண்டுமென்று விரும்பி, ஆனால் திரும்பவும் நிகழ்காலத்தை எதிர் காலத் தோடு ஒப்பிட்டுக் கற்பனைப் பண்ணிப் பாரித்து பின் வாங்கும் உன் சினேகிதி...'

கீழே கையொப்பமில்லை.

அவன் கடிதத்தைக் கசக்கி விட்டெறிந்தான்.

முகத்தைக் கைகளால் மூடிக்கொண்டு வெகுநேரம் அப்படியே உட்கார்ந்திருந்தான். சுமார் பத்து நிமிஷங் களுக்குப் பிறகு சுதாரித்துக் கொண்டான். கீழே விழுந்து கிடந்த கடிதத்தை எடுத்துக் கசங்கலை சரியாக்கித் திரும்ப வும் படித்தான்.

அவன் மனம் முழுவதும் ஒருவித கோபத்தால் நிரம்பி வழிந்தது. எவ்வளவு தொலைவு, ஆனால் எவ்வளவு அண் மையில்... அவள் பெயர்கூட தெரியாது. எவ்வளவு வேதனையை அனுபவித்தபிறகு அவள் இந்தத் தீர்மானத்

திற்கு வந்திருப்பாளோ? ஆனால் அவன் சார்பில் யோசித்துப் பார்த்தாலோ?...

சாதாரணமாய் போய்க்கொண்டிருந்த படகைச் சுழற்காற்றிற்குள் தள்ளி விட்டாற்போல செய்து விட்டாள். கஷ்டமோ, நஷ்டமோ தன் வாழ்க்கையில் அவன் வாழ்ந்து கொண்டிருந்தான். அப்படிப்பட்ட அவனைத் தட்டி எழுப்பினாள். ஒரு நாள் முழுவதும் பரபரப்போடும், பிறகு வாழ்நாளெல்லாம் நிராசையோடும் கழிக்கும்படிச் செய்து விட்டாள். அவளுக்கென்ன வந்தது? ஒரு சிறிய கடிதத்தை எழுதித் தள்ளி 'நான் மனதை மாற்றிக்கொண்டு விட்டேன்' என்று சொல்லிவிட்டால் தீர்ந்து விடுமா? இப்பெண்கள் எல்லோருமே இதுபோல்தான். பின்னாலிருந்து தோளைத் தட்டி விட்டு, திரும்பிப் பார்க்கும்போது மாயமாகி விடுவார்கள். அதற்கு அழகாய் 'பயம்' என்ற பெயரைச் சூட்டிவிடுவார்கள். மேலும் கொஞ்சம் சாமர்த்தியசாலிகளாயிருந்தால் 'கட்டுப்பாடு' என்று நாசூக்காய் சொல்லுவார்கள்.

ஐந்து வருஷங்களாய் அவனைப் பற்றியே யோசித்துக் கொண்டிருந்தபோது வராத தப்பு, ஐந்து நிமிஷம் அவனைச் சந்தித்து விடுவதால் வந்து விடுமோ? இவ்வளவு குழப்பம் எதற்கு? அவள் அவனைப்பற்றி என்னதான் எண்ணிக்கொண்டிருக்கிறாள்?

கட்டுப்பாட்டிற்கு ஏன் அவ்வளவு முக்கியத்துவம் தர வேண்டும்? தன் மனைவி பொருட்படுத்தாத கட்டுப்பாட்டிற்கு அவள் கணவன் பொருட்படுத்தாத அந்த கட்டுப்பாட்டிற்கு இவள் எதற்காக முக்கியத்துவம் தரவேண்டும்? மனிதன் ஏன் கட்டுப்பாட்டிற்கிடையே உழலவேண்டும்? சமூகத்திற்காகவா? சமூகம் என்றால் என்ன? மனைவி, சிநேகிதர்கள், இவர்கள் நிறைந்ததுதானே? செக்ரட்டரியோடு பேசியதற்கே தனக்கும் அவளுக்கும் சம்பந்தத்தை முடி போட்ட மனைவி. அவள் பார்வையில் என்றுமே

அவன் உயர்ந்தவனாக மாட்டான். பின்னே எதற்காக இதற்கு மதிப்பளிக்க வேண்டும்...

அவன் உள்ளங்கையில் ஓங்கிக் குத்திக் கொண்டான்.

கொஞ்சநேரம் நடை பயின்றான்.

பிறகு நின்று, தன் நினைவிலிருந்து அந்த விஷயத்தைத் துடைத்தெறிந்து விட முயன்றாற் போல தீப்பெட்டியை எடுத்து வந்து அக்கடிதத்தைப் பற்ற வைத்தான். அது முற்றிலும் தீக்கிரையாகி கரியாகும்வரையில் பார்த்துக் கொண்டிருந்தான்.

# 17

காகிதத்தை என்னவோ பொசுக்கிவிட்டான். நினைவு களையும் துடைந்தெறிந்துவிட எண்ணினான். ஆனால் நாளாக ஆக அது அத்தனை சுலபமான செயலில்லை என்று தோன்றிற்று.

எப்பொழுது போன் ஒலித்தாலும், அவளிடமிருந்து தான் என்றெண்ணி பரபரப்போடு சட்டென்று போனை எடுப்பான். எவ்வளவோ முறை போன் பண்ணுவோம் என்றெண்ணி கையை 'போன்' வரை கொண்டு போய்விட்டு நின்றுவிடுவான். மிகப் பிரயாசைப்பட்டுத் தன்னை சுதாரித் துக்கொள்வான்.

அவன் இதயத்தில் ஒரு பாகம் நிரந்தரமாய் இதைப் பற்றியே யோசனையில் ஆழ்ந்துவிட்டிருந்தது. மெல்ல மெல்ல அது முழு இதயத்தையும் ஆக்கிரமித்துக்கொண்டு விட்டது. அவள்மீது கோபமாய் எதாவது பண்ணி அவளுக்கு மறைமுகமாய் அது தெரியும்படிச் செய்யவேண்டும் என்ற தவிப்பு அதிகரித்தது. சில யோசனைகளுக்கு அர்த்தமே இராது. 'நீ ஒருத்திதானா இந்த உலகத்தில்... 'உம்' என்

றால் ஆயிரம் பேர்' என்ற உணர்ச்சி. உன் ஒருத்திக்குத் தானா இந்தக் கட்டுப்பாடெல்லாம். எல்லோருக்குமே உண்டு. ஆனால் ஏதோ வருத்தம் இருக்கக்கொண்டுதானே அதை மீறிக்கொண்டு எல்லோருமே வெளியே வர முயற்சிக் கிறார்கள். இதைப் பெரிதுபடுத்திக் காட்டும் உரிமை உனக்கு ஏது?

தொடர்ந்து அவன் யோசனைகள் வேறுவிதமாய் படர்ந்தன. அன்றைக்குத் தான் ஓட்டலில் அவளை எதிர் பார்த்துக் கொண்டிருந்த அதே சமயத்தில் அவள் வீட்டில் என்ன யோசித்துக் கொண்டிருந்திருப்பாள்? தன் மேல் இரக்கப்பட்டு, ஐயோ பாவம், இவன் தன் கட்டுப்பாடு என்ற கோட்டை மீறி வந்துட்டானே, என்றெண்ணிக் கொண்டிருந்திருப்பாளா? எனக்கிருக்கும் நெஞ்சழுத்தம்கூட இவனுக்கு இல்லாமல் போய்விட்டதே என்றெண்ணிச் சிரித்திருப்பாளா? பெண் என்றதுமே கண் மூக்குத் தெரியா மல் ஓடியிருக்கிறான் என்று இளப்பமாய் எண்ணிக்கொண்டி ருந்திருப்பாளா?

ரவிக்கு இந்த மாதிரி மனக்குழப்பங்களால் வேலையி லிருந்த உற்சாகம் போய் விட்டது.

ஒரு வாரம் கழிந்தது.

காலமே புண்ணான மனதைத் தேற்றிவிடும் என்பார் கள். அவன் விஷயத்திலும் அது சரியாயிருந்தது. மெல்ல அவன் தேறத் தொடங்கினான்.

இவ்வாறு இருக்கையில் அன்று அவனுக்கு இண்டர் காமில் பெர்சனல் ஆபீசர் போன் பண்ணினார்.

'சார், நம்ப பழைய செக்ரட்டரி உடல் நலம் தேற மூன்று மாதங்கள் பிடிக்குமாம். டெம்பரரியாய் இன் னொரு செக்ரட்டரியை எடுத்துக்கச் சொன்னீங்க.'

'ஆமாம்,'

'நீங்க இண்டர்வ்யூ பண்றீங்களா?'

'தேவையில்லை. நீங்களே பண்ணுங்க. சீக்கிரமாய் வேலையில் சேரணும்னு மட்டும் சொல்லிடுங்க.'

'சரி சார்.'

பிறகு இரண்டு நாள் கழித்து வேலையில் சேர்ந்தாள். அவள் பெயர் ப்ரியம்வதா.

ஃ ஃ ஃ

'மே ஐ கமின் சார்.'

டிராயரிலிருந்து காகிதங்களை எடுத்துக் கொண்டிருந்த ரவி நிமிர்ந்து பார்த்தான். கதவிற்கருகில் நின்று கொண் டிருந்தாள் அவள்.

'கூப்பிட்டீங்களாம்.'

அப்பெண்ணின் கையிலிருந்த சுருக்கெழுத்து புத்தகத் தைப் பார்த்து, புதிதாய் சேர்ந்திருக்கும் ஸ்டெனோ என்று தெரிந்து கொண்டான்.

'வாங்க, உட்காருங்க.'

அவள் கண்களில் பயத்தைவிட ஒருவிதமான கவர்ந் திருக்கும் தன்மை தென்பட்டது.

'உங்க பேரு?'

'ப்ரியம்வதா.'

'இதுதான் முதல் உத்தியோகமா?'

'ஆமாம் சார். போன மார்ச்சில்தான் பி.எஸ்சி. பாசானேன். அதே சமயத்தில் ஸ்டெனோகிராபி கூட முடித்தேன். இதான் முதல் உத்தியோகம். டெம்பரரின் னாங்க. மூன்று மாதந்தானாமே?...' அவள் கடகட வென்று பேசினாள்.

'டிக்டேஷன் எடுத்துக்கிறீங்களா?'

அவள் வாயை அடக்கிக்கொண்டு பென்சிலைக் கையி லெடுத்துக் கொண்டாள்.

அவன் அட்ரசைச் சொல்லிவிட்டு, 'டியர் சர்ஸ்' என்று கடிதத்தைத் தொடங்கினான். 'நீங்கள் கேட்டுக் கொண்ட தன் பேரில் மதுரை ரீடைல் ஏஜன்சி விஷயத்தைப் பற்றிப் பரிசீலித்தோம். நாங்கள் 'மாலினி' புடவைகளின் பேரில் பத்து சதவீதமும், அம்ருதா புடவைகளின் பேரில் ஐந்து சதவீதமும் ரிபேட் தருவதற்கு எங்களுக்கு ஆட்சேபணை யில்லை. ஆனால்...'

'சார்...'

அவன் நிறுத்தி என்ன என்பதுபோல் ஏறிட்டான்.

'மாலினி புடவைங்களுக்கு இப்போ டிமாண்ட் இல்லை சார். அம்ருதா புடவைங்களுக்குத்தான் டிமாண்ட். அவற் றுக்கு சலுகை அனாவசியம்.'

'நான் சொன்னதை நீங்க எழுதணுமா அல்லது நீங்க சொல்லும் ஆலோசனையை நான் கேட்கணுமா?'

'சாரி சார்' என்று அவள் திரும்பி எழுதத் தொடங்கி னாள். அவன் சொல்லி முடித்தான். முடித்துவிட்டு நிமிர்ந்து பார்த்தபோது அவள் பென்சிலை சீவியபடி தோற்றமளித்தாள்.

'ஊக்கு சரியாயிருக்கா இல்லையான்னு உள்ளே வரத் துக்கு முன்னாடியே பார்த்துக்க வேண்டாமா?'

'வரும்போது நன்றாய்தான் இருந்தது சார். எழுதிட் டிருக்கும் போது உடைந்துவிட்டது.'

'அப்படியானால் கொஞ்சம் இருங்கன்னு சொல்லியிருக் கணும்.'

'தேவையில்லை சார். கடிதம் எனக்கு மனப்பாடமாகி விட்டது' என்று அவன் சொன்னவைகளைத் திரும்பவும் அப்படியே ஒப்புவித்தாள். அவன் ஆச்சரியமடைந்தான். ஆனால் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல்' 'குட்' என்றான். 'போய் டைப் பண்ணி அனுப்புங்க.'

அவள் எழுந்திருக்காமலேயே, 'உங்களை ஒன்று கேட்க லாமா?' என்று கேட்டாள்.

'என்ன?' என்றான் அவன் வியப்படைந்தவனாய்.

'நாங்க காலேஜ் படிச்சிட்டிருந்தபோது ஆர். கே. புடவைங்கன்னா எங்களுக்கெல்லாம் ரொம்பப் பைத்தியம் சார்! ரவி டெக்ஸ்டைல்ஸில் உத்யோகம்னு சொன்னதுமே ரொம்பப் பெருமையாயிருந்தது. ஆனால் இங்கே வந்த துமே சாட்சாத் ரவிக்கே ஸ்டெனோ என்றபோது ரொம்ப த்ரில்லிங்காயிருந்தது சார்...'

அவனுக்குச் சிரிப்பு வந்தது. அவள் 'சாட்சாத்' என்று சொன்னதைக் கேட்டு.

'சார்...எந்த மாதிரி தேகக் கட்டுக்கு எந்த மாதிரி புடவை அழகாயிருக்கும்னு உங்களுக்கு நன்றாய் தெரியும். ப்ளீஸ், நான் எந்த மாதிரி புடவை கட்டிக்கிட்டால் அழகா யிருக்கும்னு சொல்லுவீங்களா?'

இந்தக் காலத்துக் கல்லூரிப் பெண்கள் மிகத் துடுக் கானவர்கள் என்று தெரியுமே தவிர, இவ்வளவு துடுக்காய் இருப்பார்கள் என்றெண்ணியிருக்கவில்லை அவன். அதிர்ச்சியடைந்தவனாய் பார்த்தான். ஆனால் சட் டென்று தேறிக்கொண்டு, 'புடவையைவிட முக்கிய விஷ யத்தைச் சொல்லட்டுமா?' என்றான்.

'என்ன சார்?'

'இது காலேஜ் இல்லை, ஆபீசு. காலேஜில் லெக்சரர் களை அழ வைத்தாற் போல, சிநேகிதிகளோடு பேசுவது போல பேசினால் இங்கே வேலை போயிடும்.'

அப்பெண்ணின் முகம் வாடிவிட்டது. தலை குனிந்த படி 'சாரி சார்' என்றாள்.

'சரி, நீங்க போகலாம்.'

அவள் மௌனமாய் புத்தகத்தை எடுத்துக்கொண்டு, எழுந்து கதவை நோக்கி நடந்தாள். அவனுக்குப் பாவமா யிருந்தது. அதுவரை முதல் மார்க்கு வாங்கிவிட்டு ஒரு பரீட்சையில் அது வராது போனால் குழந்தைகள் தாய் தந்தையரிடம் எவ்வாறு முகத்தைத் தொங்கப்போட்டுக் கொள்வார்களோ அதுபோல போய்க்கொண்டிருந்தாள் அவள்.

'ஒரு விஷயம்' என்றான். அவள் நின்று திரும்பினாள்.

'கனகாம்பர நிற ஜார்ஜெட்டிற்கு வெள்ளை ஜாக் கெட். இடது பக்கத்துத் தோளுக்கருகில் ரோஜாவைப் போன்ற பூ. அதே நிறத்தில் இரட்டைப் பின்னலை விட் டுட்டால் நல்லது' என்றான். அவள் முகம் மலர்ந்தது. சிறு குழந்தைகள் கைகொட்டி வேடிக்கையாய் சிரிப்பது போல சிரித்துவிட்டு, 'தாங்க்ஸ் சார்' என்றாள்.

அவன் திரும்பித் தன் வேலையில் மூழ்கிவிட்டான்.

மேலும் ஒரு வாரம் கழிந்தது. சாதாரணமாயிருந்தால் அவள் ஞாபகம் நினைவுத் திரையில் எங்கோ மறுமூலைக்கு மெல்ல மெல்லப் போய்ச் சேர்ந்து, கரைந்து விட்டிருக்கும். ஆனால் வீட்டில் தாண்டவமாடிய மயான நிசப்தம் அவ னுக்கு அவளையே நினைவு படுத்திக் கொண்டிருந்தது.

அவன் வாழ்க்கையில் எதையோ இழந்துவிட்ட உணர்ச்சி இப்பொழுதெல்லாம் அடிக்கடி வந்து கொண்டே யிருந்தது. இதற்கு முன்பாயிருந்தால் நாளெல்லாம் ஆபீசில் உழைத்துவிட்டு ஆயாசத்தோடு வீட்டிற்கு வந்து எதையோ சாப்பிட்டுவிட்டுப் படுத்துவிடுவான்.

இப்பொழுது உறக்கம் வர மறுத்தது. நிறைவேறாத விருப்பம் எதுவோ துளைத்தெடுத்துக் கொண்டிருந்தது. அதற்குத் தெளிவான உருவம் இல்லை.

அன்றைக்கு இன்னொரு உபத்திரவம் வந்து சேர்ந்து கொண்டது. அவன் வீட்டில் வேலை செய்யும் வேலைக்காரிக்கும் அவனுடைய மைத்துனனுக்கும் எவ்வளவு நாளாய் சம்பந்தம் இருந்து வந்திருக்குமோ தெரியாது. அன்றைக்குத்தான் அது வெளிப்பட்டது. அவளுக்கு நாலாம் மாதம். கூட்டமாய் தம் ஆட்களை வீட்டிற்கு அழைத்து வந்துவிட்டாள். பத்தாயிரம் தந்தால்தான் விடுவேன் என்றார்கள். பணத்தைக் கொடுத்தான்.

பணம் போனதற்காகக்கூட வருந்தவில்லை. மாத்வி தம்பிக்குப் பரிந்துகொண்டு வந்ததுதான்! அக்கா தம்பி இருவருமாய் சேர்ந்து கடைசியில் தப்பை அவன்மேல் தள்ளிவிட்டார்கள்.

'உங்களுக்குத் தெரியாதுங்க. பணம் நிறைய இருக்குன்னு தம்பியைப் பிடித்திருக்கிறாள். நீங்க என்னவோ பயந்துபோய் பத்தாயிரத்தை இழந்துட்டீங்க' என்றாள்.

அவன் வியப்படைந்தவனாய், 'பின்னே என்ன பண்ணியிருக்கணும்?' என்றான்.

'இந்த விஷயத்தை என்னிடமே விட்டிருந்தால் நான் பார்த்துட்டிருப்பேன்.'

அவனுக்கு அருவருப்பாயிருந்தது. இங்கே தப்பு யார் மீது என்பதில்லை கேள்வி. தவறிழைத்தவன் தம் வீட்டு மனிதன் என்றதுமே மாறிவிட்ட வாதனை முறை! தான் ஏதோ ஒரு நாள் ஒரு தடவை ஒரு வாய் குடித்து விட்டு வந்ததற்காக உலுக்கி உலுக்கி எடுத்துவிட்ட தன் மனைவி, அவள் தம்பி ஒரு வேலைக்காரியோடு கட்டிப் புரண்டாலும் அதற்கு அப்பாவித்தனம் என்ற பெயரைச் சூட்டி இழுத்து மூடிப் பேசுகிறாள்!

மனக்குமுறல் என்பது ஏற்படவே கூடாது. ஒரு முறை அது தொடங்கிவிட்டால் பிறகு அமைதி என்பதே இராது.

# 18

மறுநாள் அவன் அலுவலகம் சென்றதுமே மனத்துக்கு உற்சாகமூட்டும் சேதி தெரியவந்தது, கோடி ரூபாய்க்கான டெண்டர் ஒன்று தமக்கே கிடைத்திருப்பதாய்.

மிகப் புகழ்பெற்ற டெண்டர் அது முக்கிய போட்டியாளரான செஞ்சு ராமய்யாவுக்கு வராமல் தமக்கே வந்தது மகிழ்ச்சிக்குரிய சங்கதியாகும். அந்த டெண்டரைத் தயாரித்தது அவனுடைய பழைய செக்ரட்டரி.

அவளைப்பற்றி நினைத்ததால் அவள் உடல்நிலை நினைவுக்கு வந்தது. அதைப்பற்றி விசாரித்தபோது, இன்னும் ஒரு மாத காலத்திற்கு ஓய்விலிருக்க வேண்டும் என்று சொன்னதாய் தெரிய வந்தது.

அவனுடைய புது செக்ரட்டரியும் திருப்தியளிக்கும்படியாய்த்தான் வேலை செய்து வந்தாள். ஆனால் கல்லூரியிலிருந்து புதிதாய் வெளியேறி வந்திருக்கும் பெண்ணானதால் இன்னும் அடக்கம், பணிவு இதெல்லாம் படியவில்லை. வகுப்பில் ஜோக் அடிப்பதுபோல அடித்துவிட்டு நாக்கைக் கடித்துக் கொள்வாள். ஆனால் புத்திசாலி. சேர்ந்த மூன்றாம் நாளே ஒரு பத்து ஆட்டோகிராப் புத்தகங்களைக் கொண்டு வந்து, 'என் சிநேகிதிகளின் ஆட்டோகிராப் சார். கையெழுத்துப் போடுங்க' என்றாள்.

அவன் ஆச்சரியமடைந்தவனாய், 'விளையாட்டு வீரர்களையும், சினிமாக்காரங்களையும்தான் ஆட்டோகிராப் கேட்பாங்களே தவிர துணிக்கடை முதலாளிங்களையுமா?' என்றான்.

'உங்கள் பாப்புலாரிடி உங்களுக்குத் தெரியலை சார். ரவி டெக்ஸ்டைல்ஸில் நான் வேலை பார்ப்பதாய் சொன்னதுமே, ரவியை உனக்குத் தெரியுமான்னு என் சிநேகிதிங்கள்லாம் கேட்டாங்க. அவரிடம்தான் வேலைன்னு சொன்னதுமே இந்தப் புத்தகங்களைக் கொண்டுவந்து தந்தாங்க.'

அவன் சிரித்துக்கொண்டே கையொப்பமிட்டான். அது புதுவிதமான அனுபவமாயிருந்தது.

தனக்கு எந்தப் புடவை கட்டிக்கொண்டால் நன்றாயிருக்கும் என்று கேட்டுத் தெரிந்துகொண்ட மூன்றாம் நாளே அவள் அந்த ரகப் புடவையை வாங்கிவிட்டாள். வந்ததுமே சூறாவளியாய் வந்து, 'தாங்க்ஸ் சார். எல்லோரும் என்னைப் பார்த்து ஆச்சரியப்பட்டுட்டாங்க. என்னிடம் இவ்வளவு அழகு இருந்தது இவ்வளவு நாளாய் தெரியவேயில்லை, இடியட்ஸ்! ஆனால் எல்லா அழகுமே இதோ இந்தப் பூவால்தான் வந்தது சார்...' என்று தொடங்கிவிட்டாள்.

அவன் அலுப்போடு, 'பார் பிரியம்வதா! இந்த மாதிரி நினைத்த நேரத்தில் எல்லாம் கேபினுக்குள் ஓடி வரக் கூடாது. நான் கூப்பிட்டால்தான் வரணும்' என்றான்.

'சாரி சார்' என்றாள் அப்பாவியாய் முகத்தை வவத்துக் கொண்டு.

அவ்வளவு சின்னப் பெண் மனதை நோகடித்துவிட்டோமே என்று அவன் நொந்துகொண்டு, 'சரி, சரி, எப்படியும் வந்துட்டாய், டிக்டேஷனை எடுத்துக்கோ' என்றவன் தனக்கு முன்னாலிருந்த 'பேடை' அவளுக்கருகில் தள்ளி விட்டு, 'நிஜமாய் இந்தப் புடவை உனக்கு நன்றாய் பொருந்தியிருக்கு' என்றான்.

அச் சிறிய புகழ்ச்சிக்கு அவள் முகம் மலர்ந்தது. 'நிஜமாவா சார்? நான் சொல்லலை. இந்தப்பூ...'

'டிக்டேஷன் எடுத்துக்கிறியா?'

அவள் தேறி,

'சொல்லுங்க சார்' என்றாள்.

'டியர் சார்! தீபாவளி நெருங்கிக் கொண்டிருப்பதால் கூடுமானவரைக்கும் அதிக ஸ்டாக்குகளைத் தாங்கள் வைத்துக்கொள்ள வேண்டும். ஆனால் உங்கள் ஆர்டர்கள் திருப்திகரமாயில்லை. நம் போட்டியாளர்கள் கார்களைப் பரிசாகத் தந்து கொண்டிருப்பது உண்மையே! ஆனால் ஜனங்கள் சீக்கிரத்திலேயே இந்தக் கார்களின் விலைகூட தாம் வாங்கும் புடவை விலையோடு கூட்டப்பட்டிருக்கிற தென்று உணர்ந்து கொள்வார்கள் என்பது என் எண்ணம். சீக்கிரத்திலேயே பொங்கல்கூட வருகிறது. அப்ரோச்...

'காக்ரோச்' என்றாள் அவள்.

'காக்ரோச் இல்லை, அப்ரோச்' என்றான்.

அவள் கண்கள் பயத்தால் அகன்றன. எழுந்து நின்று, 'காக்ரோச்' என்றாள் மறுபடியும்.

அவள் நின்றதை அவன் கவனிக்கவில்லை. தன் தோரணையில்தான் இருந்தான்.

'இல்லைன்னு சொல்லலே?...' என்றான். அவன் அந்த வார்த்தையை முடிக்கக்கூட இல்லை. அவள் லேசாய் கத்திக்கொண்டே அவன் மேல் விழுந்து, அவனுக்குப் பின் னால் போய் நின்று மேஜைக்குக் கீழே பயந்தவாறு பார்த்தாள். எல்லாம் நிமிட நாழிகையில் நடந்து முடிந்து விட்டது.

அந்த எதிர்பாராத சம்பவத்தால் தூக்கிவாரிப் போட, 'என்னது?' என்றான்.

'க...கரப்பாம்பூச்சி' என்றாள் ஏறக்குறைய அழுகை வந்துவிட்டாற் போல. 'கரப்பாம்பூச்சின்னால் எனக்கு பயம்.'

அவன் தேறிக்கொண்டு, 'சரி, உட்காரு' என்றான். அவள் கைகள் இன்னும் நடுங்கிக்கொண்டேயிருந்தன. அந்த நிலையில் அவள் டிக்டேஷன் எடுத்துக் கொள்வது சாத்தியமில்லை என்றுணர்ந்து, 'கொஞ்ச நேரங் கழித்து திரும்பவும் கூப்பிடறேன்' என்றான்.

தப்பித்தோம் பிழைத்தோம் என்று அவள் அந்த அறையை விட்டு வெளியேறினாள். அப்பொழுதுதான் அவனுக்குப் புரிந்தது, தான் அவளை ஒருமையில் அழைத்த விஷயம். எப்பொழுதிலிருந்து இது தொடங்கிற்று என்று மட்டும் நினைவில்லை.

ரவி டிக்டேட் பண்ணிய கடிதத்தைக் கொண்டுவந்து கொடுத்துவிட்டு, பிரியம்வதா அவ்விடத்தை விட்டு அகலாமல், 'சார், எனக்கு ஒரு யோசனை தோன்றிற்று நேற்றிரவு' என்றாள்.

'என்ன?'

'நேற்று உங்க கடிதத்தை டைப் பண்ணிட்டிருந்தப்ப...'

'விஷயத்தைச் சீக்கிரமாய் சொல்லு.'

'நம்ப விரோதிங்க கார்களையும் ஸ்கூட்டர்களையும் தாராங்க இல்லையா?'

'ஆமாம்.'

'நாம்ப நம் கடைகளிலேயே ஃபாரின் புடவைப் பகுதி ஒன்றையும் வைப்போம். பெண்களுக்கு இந்த ஃபாரின் புடவைங்க மேல ரொம்ப மோகம் சார். கஸ்டம்ஸ்காரங்க ளோடு நாம்ப ஒப்பந்தம் பண்ணிக்கிட்டு சில புடவைங் களை மாத்திரமே அந்த மாதிரி வைப்போம். மீதியெல் லாம் நம்ப புடவைங்களாகவே இருக்கும். ரொம்பப் பேருக்கு ரெண்டிற்கும் வித்தியாசம் தெரியாது. விற்பனை அதிகரிக்கும்.'

'ஆனால் அது மோசடி.'

'அந்த விதத்தில் பார்த்தால் நாம் எந்த மோசடியும் பண்ணலைன்னு அர்த்தம்... உண்மையில் அவைகளைவிட நம்ப புடவைங்களே நன்றாயிருக்கு. இந்த விஷயம் அவங் களுக்குத் தெரியறதில்லை. அதனால அந்தப் பேரில் நாமே விற்போம் இவைகளையும்.'

ரவிக்கு இந்த யோசனை நன்றாயிருப்பது போல பட்டது.

அப்படியென்றால் ரவி டெக்ஸ்டைல்ஸ்கூட இதே பந்தாவில்தான் இறங்க வேண்டுமா? இவள் சொல்வதைப் பார்த்தால் வியாபாரத்தின் மதிப்பு நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வருகிறதோ?

'நீ சொன்னதைப் பற்றி யோசிக்கிறேன்' என்றான் ரவி. அவள் முகம் மலர்ந்தது. 'தாங்க்ஸ் சார்' என்றாள் எழுந்து.

'வீட்டில்கூட நீ கம்பெனி விவகாரங்களைப் பற்றியே யோசிச்சிட்டிக்கிறாய் என்றால் உனக்கு இந்தக் கம்பெனி யில் பர்மனென்ட் ஆகும் வாய்ப்பு இருக்குன்னு சொல்லு.'

'பர்மனன்ட் பண்ணினால் சந்தோஷந்தான் சார்! ஆனால் உண்மையைச் சொல்லச் சொல்றீங்களா? நான் வீட்டிற்குப் போய் கம்பெனியைப் பற்றி யோசிக்க மாட் டேன்.'

'பின்னே?'

'உங்களைப் பற்றித்தான் யோசிப்பேன்.'

யாரோ அடித்தாற்போல நிமிர்ந்தான் அவன். அவள் தன் தோரணையில் சொல்லிக்கொண்டே போனாள். 'நிஜந்தான் சார். இந்தக் கம்பெனியில் சேருவதற்கு முன்னால் இந்த மாதிரி கம்பெனிங்களைப் பற்றியும், பெரிய பெரிய டைரக்டர்களைப் பற்றியும் என்னென்னவோ

யோசிச்சிட்டிருந்தேன். எப்பப் பார்த்தாலும் டின்னர், ஏர்கண்டிஷன் கார் இதெல்லாம்தான் என்றெண்ணிட்டிருந்தேன். ஆனால் இங்கே சேர்ந்தப்புறம் உங்க ப்ராப்ளங்களையும் தினந்தினம் டென்ஷன்களையும் பார்த்ததும் உங்க மேலிருக்கும் மதிப்பு இன்னும் அதிகமாயிடுத்து. சினிமாக்களைப் பார்ப்பதாலும், கதைகளைப் படிப்பதாலும் வர தப்பபிப்ராயம் சார் அது. அதில் கதாநாயகர்களின் பிரச்சினை எல்லாமே காதல் மூலந்தான் சார் வரும். ஆனால் இப்பத் தெரியுது, நிஜ வாழ்க்கையில் கதாநாயகனாவது எவ்வளவு கஷ்டம்னு. தினமும் சாயந்திரம் நாங்க ஃப்ரெண்ட்ஸ் எல்லோரும் சந்திச்சுக்கிட்டால் என்ன பேசிப்போம்னு தெரியுமா சார்? ஊஹூம், வேண்டாம். ஆபீஸ் சீக்ரட் எல்லாவற்றையும் வெளியே சொல்கிறாயான்னு திட்டுவீங்க நீங்க. அன்புங்கறது எப்போது ஏன் தொடங்குதுன்னு சொல்ல முடியாது சார். இது ஆட்டோகிராப் அன்பு இல்லை. இதை மட்டும் நம்புங்க சார். அவ்வளவு ஏன்? நேற்று நீங்க 'உன் புடவை நன்றாயிருக்கு'ன்னு சொன்னதுமே, அன்றைக்கு ராத்திரி பூராவும் அதைப் பற்றியே யோசிச்சிட்டிருந்தேன்.' அவள் நிறுத்தினாள்.

அவன் பைத்தியம் பிடிக்காத குறையாய் அதிர்ச்சியோடு அவளையே பார்த்துக்கொண்டிருந்தான். அவள் சின்னப் பெண்ணா பெரியவளா என்றுகூட புரியவில்லை. ஒரு மேனேஜிங் டைரக்டரிடம் செக்ரட்டரி அந்த மாதிரி பேசக் கூடாது என்று அவளுக்குச் சொல்லுவதா கூடாதா என்று கூட புரியாத நிலை. சொன்னாலும் காதில் போட்டுக் கொள்ளமாட்டாள். சொல்லவும் முடியாது அவனால். அது வேறு சங்கதி.

'என்ன யோசிக்கிறாய்,' என்று கேட்டான்.

அதுவரையிலும் லொடலொடவென்று பேசிக்கொண்டிருந்தவள், அவன் கேள்விக்கு வெட்கப்பட்டு, 'நீங்க சிரிப்பீங்க, என்னைத் திட்டுவீங்க' என்றாள் நகத்தை பார்த்தபடி.

'சிரித்தால் சிரிக்கலாமோ என்னமோ, திட்ட மட்டும் மாட்டேன். சொல்லு.'

அவள் சொல்ல முயன்று, கொஞ்சம் நிறுத்தி, தடுமாற்றத்தோடு, 'அன்றிரவு வரிசையாய் பாயிண்டுகளை எழுதிக் கிட்டேன்' என்றாள். தலைகால் புரியாத அந்த பதிலைக் கேட்டுப் புரியாமல், 'பாயிண்டா, அதென்ன?' என்றான்.

அவள் கைப்பையைத் திறந்து, அதிலிருந்த காகிதத்தை எடுத்து அவனுக்கு முன்னால் தள்ளிவிட்டு, 'திட்ட வேண்டாம் சார்' என்றாள்.

அவன் காகிதத்தை வாங்கிப் பார்த்தான். அதில் இவ்வாறு இருந்தது.

'ஆண்கள் பெண்களைக் கவரும் முயற்சிகளில் புடவையை முக்கியமாய் பயன்படுத்தும் பலவித உரையாடல்கள் :

—நீங்க கட்டிட்டிருக்கிற புடவை ரொம்ப நன்றாயிருக்கு.

—நீங்க இந்தப் புடவையில் ரொம்ப நன்னாயிருக்கீங்க.

—இந்தப் புடவை நிறம் உங்களுக்கு ரொம்பப் பொருத்தமாய் இருக்கு. உங்க உடம்பு நிறத்துக்கு சேர்ந்து ஒரே நிறமாய் தோன்றுகிறது (ரோஜா நிறமானால்).

—புடவைகள் சிலருக்கு அழகைக் கொடுக்கும். உங்களால் புடவைக்கு அழகு வந்துடுத்து.

—நீங்க எந்தப் புடவை கட்டிக்கிட்டாலும் நன்றாயிருக்கும்.

—இந்த நிறம் ரொம்பப் பேருக்கு ஒத்து வராது. ஆனால் உங்களுக்கு ரொம்பப் பொருத்தமாயிருக்கு.

—உங்களுது ரொம்ப நல்ல செலக்ஷன். உங்க செலக்ஷனே உங்க நல்ல மனதை எடுத்துக் காட்டுகிறது.

பி. எஸ்.-கருப்புப்புடவை கட்டிக் கொண்டிருக்கும் போது மேற்குறிப்பிட்ட மூன்றாவது பிரயோகத்தைப் பயன் படுத்தக் கூடாது.'

அவனுக்கு ஒரு பக்கம் சிரிப்பும், இன்னொரு பக்கம் கோபமும் வந்தது. சிரிப்பை வெளிக்காட்டிக் கொள்ளா மல்,

'ராத்திரியெல்லாம் நீ பண்ற காரியம் இந்த மாதிரி புடவைங்களைப் பற்றிய ரிசர்ச்சா?' என்று கேட்க,

'புடவைங்களைப்பற்றி இல்லை சார். உங்க பேச்சைப் பற்றித்தான்...'

'நான் அந்த எண்ணத்தில் பேசலை.'

'இந்த வார்த்தைகளைப் பற்றித்தான் யோசிச்சிட் டிருந்தேன். பக்கத்திலேயே பேப்பரும் பேனாவும் இருந்தது. எழுதிட்டேன்... ஏன் தப்பா?' என்றாள் கொஞ்சலாக.

'இது காலேஜ் இல்லை ஆபீசு' என்று சொல்ல நினைத் தான். ஆனால் அதை இதுவரையிலும் ஐம்பது தடவை யாவது சொல்லியிருப்பான்.

இனி அதைச் சொல்லியும் லாபமில்லை என்றெண்ணி, 'சரி, சரி. போயிட்டு வா' என்றான்.

அவள் போகத் திரும்பியவள், நின்று, 'சார், நாளைக்கு என் கிளாஸ் மேட்ஸ் நாலுபேர் வரேன்னாங்க. கூட்டிட்டு வரவா?' என்று கேட்டாள்.

'எதுக்கு?'

'உங்களோடு பேசிட்டுப்போகத்தான். அப்படியே அவங் களுக்கு என்ன புடவை மாட்ச் ஆகும்னும் சொல்லி...'

'வாட் டு யூ மீன்? நான்...நான்...'

கோபத்தால் சிவந்துவிட்ட அவன் முகத்தைப் பார்த்து பயந்துபோய், 'சாரி, சார்' என்று வெளியே வந்து

விட்டாள். ஆனால் வெளியே வந்ததுமே, இத்தனை நேரமும் உள்ளேயிருந்தபோது இருந்த பயம் போய், அவ்விடத்தில் சிரிப்பு வந்து குடி கொண்டது.

தன் சீட்டிற்குப் போகும் வழியில் சூபரெண்டெண்டிடம் நின்று, 'நம்ம பழைய செக்ரட்டரி எப்போது சார் டியூட்டியில் சேருவாங்க?' என்று கேட்டாள்.

'இன்னும் ஒரு மாதத்தில் ஆசுபத்திரியிலிருந்து டிஸ்சார்ஜ் ஆகறாங்களாம்.'

அவள் மனத்திற்குள் எண்ணிக் கொண்டாள்: 'மை காட்! இன்னும் கொஞ்ச நாள்தானே பாக்கியிருக்கு?' என்று.

# 19

மேலும் ஒருநாள் கழிந்தது.

அதற்குள் ரவி 'மூடில்' ஆழ்ந்து விடுவது அதிகரித்தது. தன் வாழ்க்கையில் சிறிய சம்பவமாய் பிரவேசித்துவிட்டு மறைந்துவிட்ட அப்பெண்ணின் நினைவும் - அவள் எப்படியிருப்பாள் என்று பார்க்கவேண்டும் போலிருந்த ஆவலால் தோன்றிய எரிச்சலும்—வீட்டின் தனிமையும்!

அவன் இப்பொழுது செஞ்சு ராமய்யா பற்றி யோசிப்பதில்லை. தன் கம்பெனியைப் பற்றியே யோசிக்கலானான். இதுவரை ரவி தேஜாவின் புடவைகள் மார்க்கெட்டில் தன்னிகரற்று விளங்கின. இப்பொழுது அவற்றின் நிலைமை கொஞ்சமாய் ஆடத் தொடங்கி விட்டாற் போலிருந்தது. ஏதாவது பண்ண வேண்டும். அடுத்தவர்களைப் போல பரிசுகளை வழங்குவதன் மூலம் அல்ல. வேறு ஏதாவது செய்ய வேண்டும். எப்பொழுது பார்த்தாலும் இதே யோசனையே துளைத்தெடுத்துக் கொண்டிருந்தது அவனை. முன்பெல்

லாம் இப்படி இல்லை. இப்பொழுது அவன் வயது கூட முப்பதிற்கு மேலாகிவிட்டது. அந்த வயது வரையிலும் மனிதன் இயந்திரமாய் வேலை பண்ணுவான். அதற்குப் பிறகு வேலை பண்ண வேண்டுமானால் தூண்டுதல் இருந்தால்தான் முடியும்.

இந்தத் 'தூண்டுதல்' என்பது பலவிதங்களில் மனிதனுக்கு கிடைத்துக் கொண்டிருக்கிறது. வீட்டின் உற்சாகமான சூழ்நிலை, தம் வெற்றியால் குடும்பத்தாரின் முகத்தில் தோன்றும் மகிழ்ச்சி, பலரின் புகழ்ச்சி, சக வியாபாரிகளிடையே மதிப்பு, இதெல்லாம் அந்தத் தூண்டுதலுக்கு மூல காரணங்கள். துருதிர்ஷ்டவசமாய் முதலிரண்டும் அவனுக்குக் கிட்டவில்லை. அதனால்தான் சிறுவயதிலேயே அவன் மிகவும் அலுப்படைந்து விட்டவனாய் தோன்றுகிறான். நிறையப் பேர் வியாபாரிகளும், பெரிய அதிகாரிகளும், அதனால்தான் ஒரு வயதைத் தாண்டியதும் வீட்டு மனிதர்களோடு கழிப்பதைத் தவிர்த்து அவர்களிடமிருந்து மானசீகமாய்விலகி, வியாபாரிகளானால் பணத்தையும்,நிர்வாகியானால் பதவியையும் விரும்பத் தொடங்கி விடுகிறார்கள்.

இப்பொழுது அவன் இவ்விரண்டிற்கும் நடுவில் பந்தாடிக் கொண்டிருந்தான்.

பிரியம்வதாவின் வெளிநாட்டுப் புடவை விற்பனை பற்றிய யோசனை நன்றாய்த்தானிருந்தது. ஆனால் ஒரேயடியாய் விற்பனை பெருகாது. செஞ்சு ராமய்யாவைப் போல அவனால் ஜனங்களின் பலவீனத்தைப் பயன்படுத்தி பணம் பண்ண முடியாது. வேறு ஏதேனும் பலமான திட்டம் போடவேண்டும்.

பிரியம்வதாகூட பழைய செக்ரட்டரியைப் போலவே இந்த விவகாரங்களை ஆபீஸ் மட்டத்தோடு மட்டுமே வைத்துப் பார்க்காமல், சொந்த உற்சாகத்தைக் காட்டியது அவனுக்கு மகிழ்ச்சியாயிருந்தது.

பழைய செக்ரட்டரி வயதில் பெரியவள். பிரியம் வதாவோ இப்பொழுதுதான் படிப்பை முடித்துவிட்டு வந்திருப்பவள். அவளுக்குப் பலவித ஃபேஷன்கள் தெரியும். எங்கெங்கிருந்தெல்லாமோ செய்திகளை வாரிக் கொண்டு வந்து காதில் போடுவாள். அவனுக்கு சில விஷயங்கள் மிக வினோதமாயிருக்கும். எது எப்படியிருந்தால்தான் என்ன, அவள் டிக்டேஷனை எடுத்துக் கொண்டு போய் விடும் நிலையிலிருந்து, கொஞ்ச நேரம் உட்கார்ந்து பொது விஷயங்களைப் பற்றிக்கூட பேசும் நிலைக்கு வந்து விட்டாள்.

'ஒரு கேள்வி கேட்கிறேன், பதில் சொல்லுவீங்களா?' என்று கேட்டாள் ஒரு நாள்.

'என்ன?'

'ரொம்ப சிம்பிள் கேள்வி.'

'என்ன?'

'பெண்களுக்கு ஏன் புடைவங்கமேல் மோகம் ஏற்படுது?'

அவன் வியப்போடு பார்த்தான். ஏதோ பதில் சொல்ல முயற்சித்தானேயன்றி அது அவனுக்கே திருப்திகரமாய் இல்லை. எவ்வளவோ சிறிய கேள்வியாய் தோன்றினாலும் பதில் உடனே தோன்றவில்லை. ஆம்! ரேடியோ, டி.வி., பாங்கு சேமிப்பு உல்லாச யாத்திரை, சொத்து-பத்து இவற்றின் மீது இல்லாத ஆர்வத்தைப் பெண்கள் புடவை மீது மட்டுமே காட்டுவானேன்? தங்க நகைகள், புடவைகள் ...இவ்விரண்டும் மட்டுமே பெண்களை ஏன் வசியப்படுத்துகின்றன?

வீட்டிற்குத் திரும்பிய பிறகுகூட இதே கேள்விதான் அவனைச் சுற்றிச் சுற்றி வந்தது. பிரியம்வதா வெறுமே தான் கேட்டாளோ, அல்லது தானும் யோசித்துப் பார்த்து விட்டு பதில் கிடைக்காமல் போய் அவனைக் கேட்டாளோ

தெரியாது. ஆனால் அவனை மட்டும் யோசனையில் மூழ் கடித்து விட்டாள்.

'என்ன?' சிரித்துக்கொண்டே கேட்டாள்.

'முதல் காரணம் பெண்கள் அலங்காரப் பிரியைகள்... அலங்காரத்திலேயே முதன்மையானது புடவை கட்டுவது தான். ஆண்கள் சுகங்களுக்கும், நண்பர்களுக்கும், தீய பழக்கங்களுக்கும் சிறப்புத் தருவார்கள். பெண் அவ்வா றில்லை. அவள் உலகம் மிகச் சிறியது. புதுப் புடவையால் சந்தோஷம் கூடுவதாய் நிறையப்பேர் நினைத்திருக் கிறார்கள். அது நிஜமில்லை. ஆனால் நிச்சயமாய் புதுப் புடவை கட்டிக் கொள்வதால் பெண் புதுமையாய் தென் படுகிறாள். அதைப்பார்த்து ஆண்களின் கண்களில் புகழ்ச்சி தென்படுகிறது. இதுதான் முதல் காரணம்.

'பெண்களின் இந்த மன இயல்பை ஆண்கள் உள்ளூர உணர்ந்து மகிழ்ச்சியடைகிறார்கள். எவ்வளவோ ஆண்கள் பெண்களுக்குப் புடவைகளையும், நகைகளையும் வாங்கித் தருவதில் பெருமையடைகிறார்கள். மேலுக்கு கேலி பண்ணி னாலும் மனைவிக்குப் புடவை, நகைகள் வாங்கித் தருவ தைத் தன் ஆண்மைத் தன்மையாக பாவிக்கிறார்கள். இவ்விதமாய் புடவை மனித வாழ்க்கையில் ஒரு பாகமாகி விட்டிருப்பதால் புடவைகளின்பால் அவ்வளவு மோகம் கொண்டிருக்கிறார்கள் அவர்கள்.'

அவள் அவனை வியப்போடு பார்த்தாள். அப்பார்வை யில் புகழ்ச்சி தெரிந்தது. எதுவும் பேசாமல் போனவள் ஐந்து நிமிஷங் கழித்துத் திரும்பி வந்து ஒரு கார்டைத் தந்தாள். கையால் வரைந்த படம் அது. ஆணுக்கு அழகான பெண் ரோஜா மலரைத் தருவது போலிருந்தது அது.

'இதென்ன பிரியம்வதா?'

'வாழ்த்துக் கார்டு சார்.'

'இந்தப் படம்?'

'நான் போட்டதுதான்.'

'நீ இவ்வளவு அழகாய் படம் போடுவாய்னு எனக்குத் தெரியாதே? தாங்க்ஸ்.'

அவள் சிரித்துவிட்டு அங்கிருந்து போய்விட்டாள்' அவன் கார்டைப் பிரித்தான். உள்ளே நான்கு வாக்கியங்கள் இருந்தன.

'பதினாறு வயதுப் பெண்-வாயாடி ஆண்களை மிகவும் விரும்புகிறாள். இருபத்திரெண்டு வயதுப் பெண்—ஆஸ்தி அந்தஸ்துடையவனைத் தேடுகிறாள். இருபத்தெட்டான பெண்—கொஞ்சம் சிநேகமாய் பேசிவிட்டால் போதும் என்றெண்ணுகிறாள். உண்மையான பெண்கள் எப் பொழுதுமே புத்திசாலித்தனத்திற்குதான் அடிமையா கிறார்கள்.'

அவனுக்குத் திகைப்பாயிருந்தது. முதலில் புரியவில்லை இரண்டாம் முறை படித்தபோது உண்மைதான் என்று பட்டது. மூன்றாம் முறை சிரிப்பு வந்தது. நாலாம் முறை மறுபடியும் நிஜந்தான் என்று பட்டது. ஐந்தாம் முறை ஏனோ கொஞ்சம் பெருமையாயிருந்தது. நாட்டையே தன் புடவை டிசைன்களால் ஆட்டிப் படைத்துக் கொண்டி ருக்கும் அந்த நிர்வாகி அந்த நிமிஷம் அந்த நான்கு வரி களையும் சிறு பையனைப்போலப் படித்துக் கொண்டிருந் தான் என்றால் அதற்குக் காரணம் ஒன்றுதான்—வரம்பு என்று ஒன்றில்லாத உள்ளத்து உணர்ச்சிக்குப் பெரிது சிறிது என்ற பாகுபாடு தேவையில்லை.

சரியாய் அதே சமயத்தில் அவனுக்கு மின்னலைப்போல ஒரு யோசனை வந்தது. ஐந்தே நிமிஷத்தில் அது உருவெ டுத்துக் கொண்டது. அது மட்டும் சரியாய் அமுலாகி வெற்றியடைந்ததானால், இந்தியாவிலேயே துணி வியா பாரத்தில் ஒரு திருப்பம் ஏற்பட்டுவிடும். ரவிதேஜா டெக்ஸ் டைல்ஸ் ஒரு அசாதாரணமான வெற்றியை எட்டிவிடும்.

அரைமணி கழித்து அவன் கேபினில் அந்தக் கம்பெனியைச் சேர்ந்த எல்லா இலாகாக்களின் முக்கிய அதிகாரிகளும் வந்து கூடினார்கள். ஒரிரு டைரக்டர்கள் கூட வந்து உட்கார்ந்து விட்டார்கள். ரவி தன் யோசனைகளை அவர்களுக்கு விவரித்தான். ஊசி விழுந்தாலும் கேட்கும்படியான நிசப்தம். அவன் சொன்னவைகளை எல்லோரும் வியப்போடு கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

சரியாய் அதே சமயத்தில் ப்ரியம்வதா வெளியே யாருக்கோ போன் பண்ணிக் கொண்டிருந்தாள்.

ரவிக்கு ஒரு யோசனை பிறந்தது.

ஷோரூம்களின் மூலமாய் இல்லாமல் போஸ்ட் மூலமாய் விற்பனைப் பண்ணினால் என்ன—என்பது பற்றி!

இத்திட்டம் மட்டும் வெற்றியடைந்து விட்டால் இந்த மலிவு ரகப் புடவைகள் நாட்டைக் கொஞ்சநாள் ஒரு உலுக்கு உலுக்கி விடும் என்பதை அவன் அறிவான். அவன் திட்டத்தின்படி வெவ்வேறு விதமான புடவைகளைக் கட்டிக்கொண்டிருக்கும் பெண்களின் படங்களை விளம்பரத்தில் தரவேண்டும். டி.வி.யை நன்றாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு புடைவைக்கும் ஒரு நம்பரும் ஒவ்வொரு நிறத்திற்கும் ஒரு எழுத்தும் ஒவ்வொரு டிசைனுக்கும் ஒரு 'கோட்' முறையும் இருக்கும். (ஏ.பி. சி.டி. போல) தேவையான கஸ்டமர்கள் பத்திரிகையிலோ டி.வி.யிலோ தமக்குப் பிடித்த புடவையைப் பார்த்துவிட்டு, அந்த 'கோட்' நம்பரை எழுதி நூறுரூபாய் அனுப்ப வேண்டியது. புடவை போஸ்டில் வந்து சேரும். வாரந்தோறும் வாடிக்கையாளர்களைத் திணறச் செய்யும் விதம் விதவிதமான டிசைன்கள் வந்து குவிந்து கொண்டேயிருக்கும். மலிவு விலை, மாறும் ஃபேஷன்கள், புதுமை, எல்லாவற்றையும்விட செலவுகள் இல்லாமல் போவது, துரிதகாலத்தில் டர்ன் ஓவராவது—இதெல்லாம் இத்திட்டத்

தின் சிறப்புக்கள். இந்த ரகப் புடவைகளின்மேல் ஆர்.டி. என்று முத்திரை இருக்கும்.

ரவி இத்திட்டத்தைச் சொன்னதுமே எல்லோரிட மிருந்தும் சந்தோஷமான ஒப்புதல் கிடைத்தது.

இதில் சில எதிர்விளைவுகள் கூட ஏற்படலாம் என்றறி வான் அவன். எதிர்பார்த்தபடி வெற்றியடைந்தால் ரவி தேஜா டெக்ஸ்டைல்ஸ் ஆடை உலகத்தில் உச்சாணியில் நிற்கத் தொடங்கிவிடும்.

ஆனால் சோல் டிஸ்ட்ரிபியூட்டர்களும், கடைகளும் கொஞ்சம் பாதிக்கப்படலாம். இதனால் ரவிதேஜா கம்பெனிக்கு முதலுக்கே மோசம் வரலாம். அதோடு கூட தொலைக் காட்சி, பத்திரிகைகள் போன்றவற்றில் புடவை களை ஜனங்களுக்குப் பரிச்சயம் பண்ணி அவற்றின்பால் ஈடு பாடு கொள்ள வைப்பதற்காக லட்சக்கணக்கில் செல வாகலாம். திட்டம் பாதிக்கப்பட்டு விட்டாலோ இவ்வளவு செலவு பண்ணியதும் வீணாகி விடலாம்.

ஆனால் ஏதோ ஒன்றைப் பண்ணாவிட்டால் எப்படி? புடவைகளின் விலை ஆகாசத்தை எட்டிக் கொண்டிருக் கின்றன. நிறையப் பேர் இதே தொழிலைச் செய்து பிழைத்து வருகிறார்கள். ஆனாலும் போட்டி மார்க்கெட் டில் புதுமை இல்லாவிட்டால் கஷ்டம். ஒவ்வொரு வீட்டி லும் குறைந்தது ஒரு ரவிதேஜா புடவையாவது இருந்தே தீரவேண்டும் என்றிருந்தால் விலையைக் குறைக்க வேண்டும். நன்றாய் 'விளம்பரம்' பண்ண வேண்டும் என்று முடிவானதும் கூட்டம் முடிவடைந்தது.

ரவி திருப்தியடைந்தான். பிறகு ப்ரியம்வதாவைப் பார்த்து 'தாங்க்ஸ் ப்ரியம்வதா! உன்னோடு பேசிக்கொண் டிருந்த போது உதித்த யோசனைத்தான் இது' என்றான்.

'அப்படீன்னால், என் உத்யோகத்தைப் பர்மனென்ட் பண்ணுவீங்களா?'

'திட்டம் வெற்றியடைந்துட்டால் கண்டிப்பாய் பண்ணிடறேன்.'

'கண்டிப்பாய் ஆகும் சார். ஒன்று மட்டும் நிஜம். மோசமான ரகத்துணிகளை வாங்கி ஏமாந்து போறவங்களுக்கு இந்தத் திட்டம் உதவுகிறது. அதைவிட முக்கியமாய் தன் மனைவி, ஒரு பத்துப் புதுப் புடவைகளை கட்டிக்கொண்டிருந்தால் அதைப் பார்த்துச் சந்தோஷிக்கிற அவகாசமாவது குறைந்த சம்பாத்தியக்காரர்களுக்குக் கிட்டுமே, அது போதாதா?'

'தாங்க்ஸ் ப்ரியம்வதா! நான் அந்த கோணத்திலேருந்து யோசித்துப் பார்க்கலை. நீ சொன்னதும் நிஜந்தான்.'

'அதென்ன சார்?' அவன் கையிலிருந்த கார்டைப் பார்த்துக் கேட்டாள்.

'நாளைக்கு வரவேண்டியது. இன்றைக்கே வந்துடுத்து. என் பிறந்த நாள் வாழ்த்துக் கார்டு' என்று மேஜை மேல் வைத்தான்.

'நாளைக்கு டைரக்டர்கள் மீட்டிங்கிற்கு நானும் வரணுமா? ஞாயிற்றுக் கிழமையாச்சே?'

'தேவையில்லை. வரணும்னு இருந்தால் வா. நாளன்றைக்கு மட்டும் சாயந்திரம் அதிக நேரம் இருக்க வேண்டியிருக்கும்.'

அவள் தலையாட்டிவிட்டுப் போய்ச் சேர்ந்தாள்.

அன்று மாலைவரை அவன் தன் திட்டத்தைப் பற்றியே யோசித்துக் கொண்டிருந்தான். மாலையில் வீடு திரும்பும் போது மாதவி புதுப் புடவை ஒன்றை எடுத்து வந்து காண்பித்தாள். 'எப்படியிருக்கு? நாளைக்குக் கட்டிக்க வாங்கினேன்' என்றாள் புன்னகையோடு.

ரவிக்கு ஏனோ சந்தோஷமாயிருந்தது.

'எங்க கம்பெனி புடவை எதாயிருந்தாலும் சரி, நன்றாய்த்தான் இருக்கும் மாதவி' என்றான் தானும் சிரித்தபடியே.

'நான் கட்டிக்கிட்டால்?'

'பிரமாதமாய் இருக்கும்.'

'நாளைக்கு நிறையப் பேர் வருவாங்க. அதனால்தான் தனிப்பட வாங்கிட்டேன்.'

'ரொம்பப் பேரைக் கூப்பிட்டிருக்கியா?'

'ஆங்...நீங்களும் வாங்களேன்.'

ஏதோ லேசாய் சந்தேகம் ஏற்படவே, 'எங்கே?' என்றான்.

'கார்த்திகை மாசமில்லையா? ராத்திரியே புறப்பட றோம் எல்லோருமாய். ஆஃப்கோர்ஸ், லேடீஸ்தான் அதிகம் பேர்னு வைச்சுக்குங்க. ஆனால் உங்களைக் கூப்பிட்டாலும் நீங்க எப்படியும் வரமாட்டீங்கன்னுதான் கூப்பிடலை. உங்களுக்கு மனைவியைவிட உங்க கம்பெனி தானே உசத்தி.' அவள் எப்பொழுதும்போல குத்திக்காட் டத் தொடங்கினாள். அவன் தொய்ந்துவிட்ட முகத்துடன் அங்கிருந்து அகன்றான்.

இரவு பதினொன்றரை. தன் படுக்கையறையில் அவன் படுத்திருந்தான். வீட்டில் யாருமேயில்லை. வீடு முழுவதும் நிசப்தத்தில் உறைந்து கிடந்தது.

அவன் மனம்கூட அந்த அறையைப் போலவே உறைந் துக் கிடந்தது. எந்த யோசனையுமே இல்லை. உறக்கம்கூட வரவில்லை. சரியாய் 12.01க்கு போன் ஒலித்தது. அவன் ரிசீவரை எடுத்து, 'ஹலோ' என்றான்.

'சாரி சார். நான்தான் ப்ரியம்வதா. மெனி ரிடர்ன்ஸ் ஆஃப் தி டே—'

அந்த அர்த்த ராத்திரி வேளையில் அவ்வாறு எதிர் பாராமல் வந்த போனுக்கு அவன் கொஞ்சநேரம் ஆச்சரி யத்தில் திளைத்து விட்டான்.

'...இன்றைக்கு உங்க பிறந்த நாள்ன்னு சொன்னீங்க இல்லையா? எல்லோருக்கும் முந்தி பிறந்தநாள் வாழ்த்து சொல்லணும்னு மணி பனிரெண்டைத் தாண்டியதுமே போன் பண்ணினேன்! உங்க தூக்கத்தை கெடுத்திருந்தால் சாரி சார்.'

'எங்கேயிருந்து பண்றாய் ப்ரியம்வதா?'

'எங்க வீட்டுக்கெதிரில் இரானியன் ஓட்டல் இருக்கு சார். அங்கேயிருந்து. ஒரு காலுக்கு ஒன்றரை ரூபாயாம். எல்லோரும் என்னையே விநோதமாய் பார்க்கிறாங்க சார் —பாதி ராத்திரியில் இப்படி வந்து பண்றத்துக்கு...வெச்சுட றேன் சார். மெனி ஹேப்பி ரிடர்ன்ஸ் ஆஃப் திடே...' போனை வைத்துவிட்டாள்.

அவனும் போனை வைத்து விட்டு—கட்டிலில் மல் லாந்து படுத்தவாறு மேற்கூரையைப் பார்த்தபடி யோசித் துக்கொண்டிருந்தான்.

முதுகுத்தண்டு சிலிர்த்தாற் போலிருந்தது.

அன்றிரவெல்லாம் அவன் உறங்கவில்லை. ஏதேதோ யோசனைகளில் கழித்தான். அவன் யோசனைகளில் மிஸ் கோயம்புத்தூர் கூட இடம் பெற்றிருந்தாள். அவளை ஒரு விதத்தில் வெற்றி கொண்டுவிட்டாற் போலிருந்தது அவ னுக்கு! தன்னைத் தூண்டி விட்டுவிட்டு அவமானப் படுத் திய அவளுக்கு, தன்மேல் அன்பைக் காட்டுகிற இவள் மூலம் தான் பதில் சொல்லுவது போல உணர்ந்தான்.

# 20

சாதாரண பலவீனங்களுக்கு ரவி அப்பாற்பட்டவன் இல்லை என்பது இங்கே கவனிக்கப்பட வேண்டிய விஷயம். அன்பு துடைத்தெறிந்து விடப்பட்ட நிலையில் அதற்காகத் தவித்த தவிப்பு ஒரு பெண்ணால் தட்டி எழுப்பப்பட்டு விட்டது. வேறொரு பெண்ணால் அது கட்டவிழ்த்துக் கொண்டது. அது முற்றிலும் பால் உணர்ச்சி கூட இல்லை. ஆண், பெண்களுக்கு ஒருவர்பால் இன்னொருவருக்கு ஏற்படும் ஆறுதலும், புரிந்துகொள்ளும் தன்மையும் மட்டுமே!

மறுநாள் அவன் டைரக்டர்களிடம் முந்தையநாள் அதிகாரிகள் முன்வைத்த திட்டத்தைப் பற்றிய விவரங் களைச் சொன்னான். ஓரிரு டைரக்டர்களைத் தவிர மீதி எல்லோருமே ஏகமனதாய் ஆமோதித்தார்கள்.

இத்திட்டத்தை மனப்பூர்வமாய் பாராட்டாத இரு டைரக்டர்களுள் சர்மாவும் ஒருவர்.

‘இப்போது கம்பெனி நன்றாய்த்தானே நடக்குது! லாபம்கூட நன்றாய்த்தானே வருது! இவ்வளவு ரிஸ்க் ஏன் எடுத்துக்கணும்?’ என்று வாதித்தார் சர்மா.

‘இப்போது இந்த புது திட்டத்தில் கோடி ரூபாய்க்கு மேலே செலவழிக்கணும். ரெண்டு மூணு வருஷம் வரைக்கும் டிவிடெண்ட் இராது. இவ்வளவு பண்ணிய பிறகு நம் முயற்சி வெற்றியடையாது போனால் எல்லாம் வீண். எனக்கென்னவோ பெண்கள் புடவைங்களைக் கடைக்கு வந்து பார்த்துத்தான் வாங்கிக்குவாங்களே தவிர, விளம்பரங்களைப் பார்த்து வாங்க மாட்டாங்கன்னு தோணுது.’

‘நிஜந்தான். ஆனால் குறைந்தவிலைப் புடவைகளின் மூலமாய் நாம் ஜனங்களிடையே அமோகமாய் பெயரெடுக்

கலாம். நமக்கு எந்த நஷ்டமுமில்லாமல் சிலபேருக்கு சேவை பண்ணின மாதிரியாகும். வெற்றியடைந்துவிட்டால் அதற்குப்பிறகு நம்மை யாராலுமே தடுத்துவிடமுடியாது.'

'சரி உன்னிஷ்டம்...எனக்கு வேண்டியதெல்லாம் என் செலவுகளுக்குப் போதுமான அளவு டிவிடெண்ட் வர வேண்டியது. அவ்வளவுதான்.'— சிரித்தார் அவர்.

ரவியும் சிரித்துவிட்டு 'கண்டிப்பாய்' என்றான்.

சர்மா போய் விட்டார்.

இவர்கள் இவ்வாறு பேசிக்கொண்டிருக்கும் அதே சமயம் பக்கத்திலிருந்த தன் அறையிலிருந்து ப்ரியம்வதா யாருக்கோ போன் பண்ணிக்கொண்டிருந்தாள். மறுமுனை யில் குறிப்பிட்ட நபர் வந்ததுமே, 'ஐந்து நிமிஷமாய் முயற்சி பண்ணிட்டிருந்தேன்' என்றாள்.

'என்ன விஷயம்?'

'இன்றைக்கு ஆபீசில் தாமதமாகும் போலிருக்கு.'

'எதுக்கு?'

'ரவி ஏதோ வேலை இருக்குன்னார். வீட்டிற்குத் தாமதமாய்த்தான் வருவேன்.'

'வர எவ்வளவு நேரமாகலாம்?'

'எட்டாகலாம்னு தோணுது.'

'முடிந்தால் இன்னும் ஒரு மணி நேரம் தாமதமாய் வா.'

போன் கட் ஆகிவிட்டது.

சுமார் இரண்டு மணி நேரம் ரவி மூச்சுவிடவும் முடியாதபடி வேலையில் ஆழ்ந்திருந்தான். டைரக்டர்கள் தன் திட்டத்தை ஒப்புக் கொண்டதுமே, அவன் மேற்

கொண்டு தாமதிக்கவில்லை. போட்டியாளர்கள்கூட இத்திட்டத்தைப்பற்றி யோசிப்பதற்குள்ளாகவே தாம் மார்க்கெட்டிற்குள் இறங்கிவிடுவதுதான் சிறந்த வியாபாரி யின் லட்சணம். எல்லா இலாகாவைச் சேர்ந்தவர்களையும் பம்பரமாய் சுழலச் செய்துகொண்டிருந்தான்.

பிற்பகல் ஒரு மணிக்குள் எதிர்பார்த்த வேலைகளை யெல்லாம் முடித்துவிட்டான். டிபன் சாப்பிட கிளம்பி னான். அச்சமயம் போன் மணி அடித்தது. எடுத்தான்.

'ஹலோ யாரு?'

'நான் உங்கள் நலனைக் கருதும் நபர்.'

அவன் முகம் சுளித்து, 'என்ன வேணும்?' என்றான்.

'எனக்கொண்ணும் தேவையில்லை. உங்களுக்குத்தான் அவசியமான ஒரு விஷயத்தைப்பற்றித் தெரிவிக்க போன் பண்ணினேன்.'

'என்ன விஷயம்?'

'நேற்றிரவு உங்க மிஸஸ், கார்த்திகை மாதம் பிக்னிக் என்று கிளம்பினாங்க.'

'ஆமாம்.'

'இருபது பேர் பெண்களும் பத்துப்பேர் ஆண்களுமாய் ரொம்ப உற்சாகமாய்தான் புறப்பட்டிருக்காங்க. அஃப்கோர்ஸ், எல்லோருமே கல்யாணமானவங்க, தம்பதி கள்தான்னு வைச்சுக்குங்க. பாவம், உங்க மனைவி மட்டுந் தான் கணவரோடு வரலை. ஆனால் அவளுக்கு அது ஒன்றும் பிரச்னையாயில்லை. சுதாகர்னு அந்தக் கூட்டத் திலேயே ஒரு இளைஞன் இருந்தான். ராத்திரி பூராவும் சிட்டாட்டமும், ஆட்டமும், பாட்டமுமாய், நிஜமாய் நீங்க வராமல் போனது...'

'வாட் நான்சென்ஸ் யூ ஆர் டாக்கிங்?'

'ஒன்றும் பெரிதாய் வரம்பு கடந்துடலை...எல்லோரும் இருந்ததால்! இன்று மாலையே திரும்பி வந்துடலாம். இந்தப் பரிச்சயத்தை வளரவிடாமல் பார்த்துக்கறது கணவனான உங்கள் கடமை. உங்க நலனைக் கருதும் நபராய் எச்சரிப்பது என் கடமை.'

போனை வைத்துவிட்டு நாற்காலியில் வெகு நேரமாய் அப்படியே உட்கார்ந்திருந்தான் ரவி.

அந்த நபர் பேசியதே அவன் காதுகளில் ஒலித்துக் கொண்டிருந்தது.

அதற்குள் கதவைத் திறந்து கொண்டு ப்ரியம்வதா உள்ளே வந்தாள். 'காலையிலேருந்து நீங்க பிசியா இருந்தீங்க. அதனால்தான் வரலை. உங்களுக்காக...' என்று கேக்கை மேஜையில் எடுத்து வைத்தாள்...'மெனி ஹாப்பி ரிடர்ன்ஸ்.'

'என் மூடு சரியில்லை பிரியம்வதா! என்னைத் தொந்தரவு பண்ணாதே.'

அவள் முகம் வாடிவிட்டது. 'சாரி சார்' என்று அங்கிருந்து போய்விட்டாள்.

அவள் போனதும் அவன் வருத்தப்பட்டான்—ஏன் அவ்வாறு சொல்லிவிட்டோம் என்று. ஆனால் அதைப்பற்றி அதிகமாய் சிந்திக்கவில்லை. ஏனோ அவனுக்கு வீட்டிற்குப் போகவேண்டும் போலிருந்தது. இண்டர்காமில் பிரியம்வதாவிடம் ஒரு மணி நேரத்தில் திரும்பி வருவதாய் சொல்லிவிட்டுக் கிளம்பினான்.

காரில் வந்துகொண்டிருந்தபோது அவன் யோசித்தான். யார் இந்த சுதாகர்? அவனுக்குத் தெரிந்தவர்களில் யாரும் இல்லை. ஒருகால் அங்கு வந்திருந்த பெண்கள் யாருக்காவது தம்பியாயிருக்க வேண்டும். சாதாரணமாய் அப்படிப்பட்டவர்கள்தாம் இப்படிப்பட்ட சமயத்தைப் பாழடிக்க பயன்படுவார்கள்.

தன் மனைவியின் மீது தப்பு இருந்ததா இல்லையா என்பதைப் பற்றி அவன் யோசிக்கவில்லை. அவள் அந்த இளைஞனிடம் கொஞ்சம் ஃப்ரீயாய் பேசியிருப்பாள். அதைப் பார்த்துவிட்டு யாரோ தனக்குப் போன் பண்ணி யிருப்பார்கள். அல்லது அவனிடம் கிடைக்காத 'நெருக்கம்' அந்த இளைஞனிடம் கிடைத்திருக்கலாம். அது கொஞ்ச நாட்களில் உடல் ரீதியாய் மாறலாம். அல்லது சிநேகத் துடனேயே நின்று விடலாம். இதைப்பற்றியெல்லாம் யோசிக்கவில்லை அவன்.

தன்னிடமில்லாத எதை அந்த சுதாகரிடத்தில் கண்டி ருப்பாள் என்பது பற்றித்தான் யோசித்தான். பணம் சம்பாதிப்பதில் மூழ்கிப்போய், வீட்டில் தங்காமல் சுற்றும் கணவனின் அலட்சியத்தன்மையால், சாப்பிடுவதைத் தவிர வேறெதுவுமே வேலையில்லாமல் வீட்டிலேயே உழன்று கொண்டிருக்கும் சில பெண்கள்...சரியாய் அதே சமயத்தில் வேறொரு இளைஞன் கொஞ்ச ஃப்ரீயாய் பேசிவிட்டால் அதையே காதல் என்றெண்ணி கணவனிடம் கிடைக்காத அன்பை அந்த இருட்டில் அவனிடமிருந்து பெற விரும்புவது சில குடும்பங்களில் நிகழ்ந்து வருவதைப் பற்றி அவன் கேட்டதுண்டு. இப்பொழுது தானும் அந்தக் குடும்பங்களுள் ஒன்றாகி விட்டானா?

அவனுக்குப் ப்ரியம்வதா எழுதிய வாக்கியங்கள் நினை வுக்கு வந்தன. '...பதினாறு வயதுப் பெண்கள் வாயாடிப் பையன்களை மிகவும் விரும்புவார்கள்' என்பது. விரும்பு வதற்கும் வயதிற்கும் சம்பந்தமில்லை என்று அவன் மனைவி நிரூபித்துவிட்டாள்.

திடீரென்று அவனுக்கு மேகம் விலகினாற் போலிருந்தது. தான் பண்ணியது மட்டும் என்னவாம் என்ற யோசனை வந்தது!...ஒரு பெண் தனக்குக் கடிதம் எழுதிய விஷயத்தை மனைவியிடம் சொல்லவில்லை. மேலும் பைத்தியக் காரனைப்போல ஒரு நாளெல்லாம் அந்த தாஜ் ஓட்டலைச்

சுற்றி வந்தான் வேறு. இன்னொரு பெண் நள்ளிரவில் போன் பண்ணியபோது அதை ஒரு இனிய உணர்ச்சியாய் பாவித்து இரவெல்லாம் உறங்காமல் கழித்திருக்கிறான்.

அப்படிப்பட்ட அவனுக்குத் தன் மனைவியை உலுக்கி எடுக்கும் உரிமை ஏது? ஒரு காரியத்தை இருவருமே பண்ணியபோது ஒருவர் மீது மட்டுந்தானா தவறு? தம் மிருவரின் வாழ்க்கையிலும் எப்படியும் பரஸ்பரக் கவர்ச்சி இல்லாதபோது அவள் தனக்குள்ள சின்ன வட்டத்திற்குள் சந்தோஷமாயிருக்க முயற்சி பண்ணினால் அதிலென்ன தவறு?

இந்தவிதமான யோசனை வந்ததுதான் தாமதம், அவன் சாதாரணமாய் மாறிப்போனான். இது கையாலா காத்தனம் இல்லை. அடுத்தவரின் நிலையைத் தன் நிலை போல் பாவித்து யோசிப்பது.

அவன் காரைத் திருப்பிக் கொண்டு அலுவலகம் போவோமா என்றெண்ணினான். ஆனால் அதற்குள் வீடு வந்துவிடவே—கொஞ்சம் மாறுதலுக்காக ஒய்வெடுத்துக் கொண்டு திரும்பிப் போவோம் என்றெண்ணிக் கொண்டு காரை வீட்டுக் காம்பவுண்டிற்குள் கொண்டு வந்து நிறுத்தினான்.

வெளியே தோட்டக்காரன் செடிகளுக்குத் தண்ணீர் விட்டுக் கொண்டிருந்தான். வராந்தாவில் சமையல்காரன் தென்படவே ஒரு கப் தேநீர் தன் அறைக்குக் கொண்டு வரச் சொல்லிவிட்டு முன் ஹாலுக்குள் அடியெடுத்து வைத்தான்.

சோபாவில் அருகருகே உட்கார்ந்திருந்தார்கள் அவன் மனைவியும் அவனும். மாதவி கையை நீட்டி அவன் சொல்வதை ஆர்வத்துடன் கேட்டுக் கொண்டிருந்தாள். அவன் அவள் கையைப் பார்த்து கைரேகைப் பலன் சொல்லிக் கொண்டிருந்தான், ஒரு கையால் அவள்

கையைப் பிடித்துக் கொண்டு இன்னொரு கையால் ரேகைகளை விவரித்துக் கொண்டிருந்தான். ஏனோ ரவிக்கு முதலில் அந்தக் காட்சியைப் பார்த்ததுமே 'பக்'கென்றது. சட்டென்று, 'இதென்னது, இப்பொழுதுதானே இதைப் பற்றி யோசித்து முடிவுக்கு வந்தேன்?' என்றெண்ணிக் கொண்டான்.

அதற்குள் ரவியைப் பார்த்துவிட்டு எழுந்து நின்ற மாதவி, 'வாங்க, வாங்க' என்றாள். 'இவர் பேர் சுதாகர்; நம்ப வனஜாவின் தம்பி.'

'ஹலோ' என்றான் அவனும்.

'என்ன பண்ணிட்டிருக்கீங்க?'

'படிப்பை முடிச்சுட்டு தற்சமயம் சும்மாதான் இருக்கேன்.' ஒரு இளைஞனிடமிருந்து வெளிவரும் பதில்கள் எல்லாவற்றைக் காட்டிலும் மிக பலகீனமான பதில் அது தான்!

'இவர் நன்றாய் கைரேகை பார்ப்பார்! இருங்க, இருவருக்கும் டீ கொண்டு வரேன்' என்று மாதவி உள்ளே போனாள்.

'எங்கே, என் கையைப் பார்த்துச் சொல்லுங்கள், நாங்க புதுத்திட்டம் ஒன்றைக் கொண்டுவரப் போகிறோம். எங்க எதிர்காலமே அதில்தான். அதில் நாங்க ஜெயிப்போமா?'

சுதாகர் அவன் கையை வெகுநேரம் பரிசீலித்துவிட்டுக் கொஞ்ச நேரம் கண்களை மூடிக் கொண்டிருந்துவிட்டு, பிறகு திறந்தவன், 'அதிர்ஷ்ட ரேகை ரொம்பப் பிரகாசமாயிருக்கு. கண்டிப்பாய் வெற்றி பெறுவீங்க' என்றான்.

'ஆனால் சுக்கிரமேட்டில் புதிதாய் நட்சத்திரம் தயாராயிட்டிருக்கு. அது தீய அறிகுறி அல்லவா?'

சுதாகர் வியப்படைந்தவன் தன் முகத்தில் அது தென்படாதவண்ணம் சுதாரித்துக் கொண்டதை கவனித்தான் ரவி.

'அது நிஜந்தான். ஆனால் பரவாயில்லை. ஹெட்லைன் நன்றாயிருக்கே.'

'மௌண்ட் ஆஃப் மூனின் மேலிருக்கும் குழிவைப் பாருங்க. அங்கே இல்லை. மௌண்ட் ஆஃப் மூன் எங்கன்னே தெரியலைபோலிருக்கு உங்களுக்கு. சரி. போகட்டும். இனி அந்த விஷயத்தை விடுங்க.' ரவி அவன் முகத்தையே பார்த்தபடி சொன்னான்.

வாடிய முகத்துடன் சுதாகர் சிரிப்பை வரவழைத்துக் கொண்டு, 'இப்பத்தான் கத்துக்கிட்டிருக்கேன்' என்றான்.

அதற்குள் மாதவி இரண்டு கப்புகளுடன் வந்தாள்.

'டீ எடுத்துக்குங்க.'

ரவி டீயைக் குடித்துவிட்டு உள்ளே போனான்.

'நான் போயிட்டு வரேன்' என்று சுதாகர் சொன்னது கேட்டது.

'பரவாயில்லை, உட்காருங்க' என்கிறாள் மாதவி.

ஐந்து நிமிஷங்களுக்குப் பிறகு ரவி திரும்பி வந்தான். அவ்விருவரும் நிசப்தமாய் உட்கார்ந்திருந்தார்கள். சுதாகர் ஏதோ சங்கடத்தில் நெளிந்து கொண்டிருந்தான்.

'என்ன இது? ஏன் இப்படி மௌனமாய் உட்கார்ந்திருக்கீங்க?' என்றான் ரவி. அதற்குள் அவன் பார்வை மேஜை மேலிருந்த சிறிய பாக்கெட்டின் மேல் படிந்தது. 'அதென்னது?' கேட்டான்.

'சின்னப் பரிசு. மாதவி அவங்களுக்காக' என்றான்.

'நேற்று நீங்க கூட பிக்னிக்குக்குப் போனீங்களா?'. கைக்கடியாரத்தை அணிந்துகொண்டே கேட்டான்,

'அங்கேதான் இவங்க பரிச்சயமானங்க' என்றான் சுதாகர்.

நேற்று பரிச்சயமாகி இன்றைக்கே பரிசைக் கொண்டு வருவது பெரிய ட்ரிக். கேவலம் ஹெட்லைன், லைஃப் லைன் போன்ற ஓரிரண்டு வார்த்தைகளைத் தெரிந்துகொண்டு வந்து பெண்களுக்கு கைரேகை பார்த்துச் சொல்லுவது அதைவிட மலிவு ரக ட்ரிக். பெண்களுக்கு இந்த விஷயம் தெரியாதோ, அல்லது தெரிந்துதான் தெரியாதது போல நடிக்கிறார்களோ என்று புரியவில்லை.

'நான் போயிட்டுவரேன். ஆபீசில் வேலை இருக்கு' என்று கிளம்பினான் ரவி.

மாதவி போர்ட்டிகோ வரைக்கும் வந்து, 'சாயந்திரம் சீக்கிரமாய் வருவீங்களா?' என்று கேட்டாள்.

'எனக்கு ரொம்ப ஆச்சரியமாயிருக்கு.'

'எது?'

'கல்யாணமாகி இவ்வளவு நாளான பிறகு முதல் முதலாக நீ இந்த கேள்வியைக் கேட்டது.'

அவள் முகத்தைச் சுளித்துவிட்டு, 'உங்க உத்தேசந்தான் என்ன?' என்றாள்.

அவன் காரைக் கிளப்பிக் கொண்டு போகும்போது தனக்குள் எண்ணிக்கொண்டான், 'குற்ற உணர்ச்சி மனிதனை லேசாய் மாற்றிவிடும்போலும்' என்று.

# 21

அவன் ஆபீசிற்கு வந்தபோது ஏறக்குறைய ஆபீஸ் முடிவடையும் நேரமாயிருந்தது. நிறையப் பேர் போய் விட்டார்கள். ப்ரியம்வதா அவனுக்காகக் காத்திருந்தாள்,

'இன்னிக்குத் தாமதமாகும் இருன்னீங்க' என்றாள்.

'ஆமாம். ரொம்ப வேலை இருக்கு. வீட்டில் சொல்லி விட்டு வந்தாயா?'

'சொல்லிட்டேங்க.'

அவன் வரிசையாய் கடிதங்களை டிக்டேட் பண்ணத் தொடங்கினான். எட்டுமணி வரையிலும் அவள் டைப் செய்த கடிதங்களைப் பார்த்துக் கையொப்பமிட்டு முடித் தான். கடைசி கடிதத்தை டிக்டேட் பண்ணிக் கொண் டிருந்தபோது போன் ஒலித்தது.

ஆபீஸ் முழுவதும் ஆளரவமில்லாமலிருந்தது.

'ஹலோ.'

'நான்தான் மாதவி.'

'என்ன, சொல்லு.'

'எனக்கு கார் வேணும்.'

'அதென்ன... ஃபியட்தான் இருக்கே?'

'அது கிளம்பமாட்டேங்குது. ஆயிரந்தடவை சொல் லிட்டேன். அதை விற்றுத் தொலைங்கன்னு. நீங்க என் பேச்சை...'

'சரி, சரி, திருப்பி அனுப்பி வைச்சுடுவியா? நான் இன்னும் ஒரு மணி நேரம் இங்கே இருப்பேன். அதுசரி, எங்கே போகிறாய்?'

'செகண்ட் ஷோவுக்கு.'

'நீ இறங்கினதும் எனக்கு அனுப்பிவை.'

'உங்களுக்கு ஞாபகமறதி ஜாஸ்தியாயிடுத்து. நீங்க வீட்டில் இறங்கிட்டதுமே திரும்பி தியேட்டருக்கு அனுப்பி வைக்காவிட்டால் அவங்களுக்கு முன்னால் கேலிக்கு ஆளாக நேரிடும்.'

'யாரோடு போகிறாய்? அவங்களுக்குக் கார் இல்லையா?'

'மிஸஸ் பாண்டேயோடு. அவங்களுக்கு முன்னால் இளிச்சிட்டு உங்க காரில் வரேன்னு சொல்லச் சொல்றீங்களா?'

'தேவையில்லை. அனுப்பறேன்.' அவன் போனை வைத்துவிட்டு, மணியை அடித்து, டிரைவரை வீட்டிற்குப் போகச் சொன்னான். அவ்வளவு நேரம் ப்ரியம்வதா புத்தகத்தின்மீது ஏதோ கிறுக்கிக் கொண்டேயிருந்தாள்.

அவன் திரும்பவும் டிக்டேஷனைத் தொடங்கினான். மேலும் பத்து நிமிஷங்கள் டிக்டேஷன் தந்தான். அந்தக் கடிதங்களை அவள் டைப் அடித்துக்கொண்டு வருவதற்கு அரைமணியாகிவிட்டது. நேரம் ஒன்பதரை அடிக்கவிருந்தது.

கார் வரவில்லை. அவன் எரிச்சலோடு நேரத்தைப் பார்த்தான். இதற்குள் சினிமா கூட ஆரம்பமாகியிருக்கும். இன்னும் அவர்களின் மேக் அப்புகள் முடியவில்லையோ?

'நான் போயிட்டு வரட்டுமா சார்?' என்று கேட்டாள்.

'ரொம்ப நேரமாயிடுத்து. நான் கொண்டு விடறேன். இரு' என்று அவன் தன் வீட்டிற்குப் போன் பண்ணினான். சமையல்காரன் எடுத்து, 'அம்மா சினிமாவுக்குப் போயிட்டாங்க சார்' என்றான்.

'கார் அனுப்பினேனே, வந்ததா?'

'வந்தது சார். அதில்தான் போனாங்க. அரைமணி ஆயிடுத்து.'

அவன் எரிச்சலுடன் போனை வைத்தான். மேலும் பத்து நிமிஷங்கள் கழிந்தன.

கண்ணாடிக்கப்பால்ருந்து ப்ரியம்வதா டைப் மிஷினுக்கு முன்னால் உட்கார்ந்துகொண்டு நகங்களுக்குச் சின்ன

துணியால் பாலிஷ் கொடுத்துக் கொண்டிருந்தாள். ஹால் முழுவதும் ஆளரவமில்லாமல் நிசப்தமாயிருந்தது. வெளியே கதவிற்கருகில் பையன் இன்னும் எவ்வளவு நேரமாகுமோ என்று அலுப்போடு கொட்டாவி விட்டுக் கொண்டிருந் தான்.

அவன் இண்டர்காமில் அவளைக் கூப்பிட்டு, "நீ போயிடு. எனக்குக் கார் வரத்துக்கு ரொம்ப நேரமாகும் போலிருக்கு' என்றான்.

'பரவாயில்லை, இருக்கிறேன்' என்றாள் அவள்.

நேரம் ஒன்பதே முக்கால் ஆயிற்று. அவன் ரிசீவரை எடுத்து மிஸஸ் பாண்டேயின் வீட்டிற்குப் போன் பண்ணி னான். பாண்டே போனை எடுத்தார். 'என்ன விசேஷம்? இவ்வளவு ராத்திரியிலே போன் பண்றீங்களே?' என்று கேட்டார்.

'மாதவி கார் அனுப்பறேன்னாள், இன்னும் வரலை. முதல்ல ரெடியாகிக் கிளம்பிப் போனாங்களா இல்லவே யில்லையான்னு...'

பாண்டே பெரிதாய் சிரித்தார். 'இன்னும் மேக்கப் பண்ணிகிட்டிருக்காங்களோன்னு சந்தேகம் வந்திரிச்சா? அதுவும் நிஜந்தான். அரைமணி தாமதமாய்த்தான் கிளம்பிப் போனாங்க. ஆனாலும் எப்படியோ கிளம்பினாங் களே... வனஜா அவங்க வரத்துக்குதான் தாமதமாயிருச்சி.'

ரவியின் கையிலிருந்த ரிசீவர் தன்னையறியாமல் முறுக்கேறிக் கொண்டது.

வ...ன...ஜா...அவங்க...

'ஹலோ.'

'......'

'ஹலோ,'

'அங், சொல்லுங்க.'

'என் காரை அனுப்பட்டுமா?'

'வேண்டாம் வேண்டாம். ஒரு கால் தியேட்டருக்குப் போய்ச் சேர்ந்த பிறகு அனுப்பி வைப்பாளோ என்னவோ?' என்றான் ரவி, அனாவசியமாய் அவருக்கு ஏன் சிரமம் தர வேண்டும் என்றெண்ணி.

'வீட்டில்தான் யாருமில்லையே, இங்கே வாங்களேன். ஒரு மணிநேரம் உட்கார்ந்துட்டுப் போகலாம்' என்றார் பாண்டே.

'இல்லை இன்னொரு சமயத்தில் எப்போதாவது வரேன்.'

'சரி, உங்களிஷ்டம். அதுசரி, உங்க கம்பெனி இந்த வருஷம் போனஸ் ஷேர் தரதாமில்லே.கங்கிராஜுலேஷன்ஸ். உங்க பேலன்ஸ் ஷீட்ஸ்களைப் பார்த்தேன். உங்க அபிவிருத்தியைப் பார்த்து ஆச்சரியப்பட்டுட்டேன்.'

'தாங்க்யூ.' போனை வைத்துவிட்டான்.

'வனஜா அவர்கள்...'

அவன் தலையைச் சிலிர்த்துக் கொண்டான்.

ப்ரியம்வதா அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவன் பையனைக் கூப்பிட்டு, 'நீ போ. ஒரு டாக்சியை அனுப்பி வைக்கச் சொல்லி கீழே டைம் ஆபீசில் சொல் லிட்டுப்போ' என்றான்.

'சரிங்க சார்' என்று பையன் சல்யூட் பண்ணிவிட்டுப் போய் விட்டான். அவர்களிருவரும் மட்டுமே எஞ்சி நின் றார்கள். போனில் அவன் பேசியவிதம், பிறகு டாக்சியை அனுப்பச் சொல்லி பையனுக்குச் சொன்னது, இதையெல் லாம் கேட்ட ப்ரியம்வதா, விஷயம் என்னவென்று புரிந்தது போல மௌனமாய் இருந்து விட்டாள். நிசப்தத்தைச் சிதறடித்தபடி ரவி சொன்னான்;

'நீ ஒரு கார்டு தந்தாயே, ஞாபகமிருக்கா ப்ரியம்வதா? எந்த வயதில் பெண்கள் எப்படிப்பட்ட ஆண்களை விரும்புகிறார்கள் என்று. நீ கல்யாணமாகாத பெண்களைப் பற்றி மட்டுந்தான் அதில் எழுதினாய். கல்யாணமானவங்களைப் பற்றி ஒருகால் உனக்குத் தெரிந்திருக்காது...' அவன் முடிக்க முடியாமல் நிறுத்தினான்.

அவன் சொல்ல நினைத்தது—கணவன் கஷ்டப்பட்டு சம்பாதித்து எல்லா சௌகரியங்களையும் ஏற்படுத்தித் தந்தால் வீட்டில் வேலை வெட்டியில்லாத பெண்கள், முக்கியமாய் பெரிய இடத்தைச் சேர்ந்தவர்கள் - விதம்விதமான விஷயங்களால் கவரப்படுகிறார்கள் என்றும்-வீட்டில் கணவனிடம் கிடைக்காத 'பாராட்டு' வெளியாரிடமிருந்து கிடைத்துவிட்டால் அதையே உண்மையான அன்பாய் நினைத்துவிடுகிறார்கள் என்றும்! ஆனால் அவனால் முடிக்க முடியவில்லை. அவனுக்குத் தன் பதவி நினைவுக்கு வரவே நிறுத்திக் கொண்டான். வியாபார சம்பந்தப்பட்ட விஷயங்களில் எவ்வளவோ அளந்து அளந்து பேசும் அந்த நிர்வாகி ஒரு செக்ரட்டரியிடம் அந்த கொஞ்சம் வார்த்தைகளை முணுமுணுத்தானென்றால் - அவன் அந்த சமயத்தில் எவ்வளவு வேதனையை அனுபவித்துக் கொண்டிருக்கிறான் என்று புரிந்தது. அவன் முழுவதுமாய் சொல்லாத போதிலும் அவள் புரிந்து கொண்டாற்போலச் சொன்னாள் :

'நீங்க பெண்களைப்பற்றி மட்டுமே ஏன் சார் சொல்றீங்க? உண்மையில் தொண்ணூறு சதவீதம் ஆண்கள்கூட அந்த மாதிரிதான். எங்க குடும்ப விஷயத்தையே எடுத்துக்கிட்டால்...' என்று நிறுத்தினாள். அவன், என்ன என்பது போல ஏறிட்டான். அவள் சொல்லத் தொடங்கினாள் :

'அம்மா ரொம்ப நல்லவங்க. அப்பா அவங்களை என்றுமே புரிஞ்சுகிட்டதில்லை. நாங்க எல்லோரும் மனம் போனபடி வளர்ந்தோம். இருபத்தைந்து வருஷங்கள்

எங்கம்மா தன் விருப்பங்களையெல்லாம் ஒதுக்கி வைச்சிட்டு ஒரு ஜடத்தைப் போல காலம் கழித்து வந்தாள், பெண்ணாகப் பிறந்ததனாலேயே! அப்பாவுக்குத் தன் உலகந்தான் தன்னுடையது, அம்மாவை என்றுமே ஒரு மனுஷியாய் பாவித்ததேயில்லை.'' அவள் அத்துடன் நிறுத்திக்கொண்டான்.

அந்த நினைவுகளால் அவள் முகம் உணர்ச்சி வசமாயிற்று. அச்சூழ்நிலையை மேலும் வளர்த்த விரும்பாத அவன் எழுந்திருந்து, 'போவோமா? கீழே டாக்சி வந்திருக்கும்' என்றான். அவளும் புரிந்து கொண்டதுபோல எழுந்து கைப்பையை எடுத்துக்கொண்டாள்.

இருவரும் ஹாலுக்கு வந்து கொண்டிருந்தபோது, 'சர்மா சார் தன் கேபினில் இருக்காரோ, என்னவோ?' என்று அவள் தன்னிடமிருந்த இண்டர்காம் பட்டனை அழுத்தினாள். அவன் நின்று பார்த்துக் கொண்டிருந்தான். ஒரு நிமிஷமாகியும் மறுமுனையிலிருந்து எந்த பதிலுமே இல்லாததால், 'இவ்வளவு ராத்திரி வரைக்கும் அவர் ஏன் இருக்கப் போகிறார்? வா...போவோம்' என்று லிப்டை நோக்கி நடந்தான்.

இருவரும் லிஃப்டில் கீழே இறங்கிக் கொண்டிருந்த போது அவன் சொன்னான்: 'நீ சொன்னது நிஜந்தான். கணவன் மனைவியருள் தப்பு யாருடையதென்று தீர்மானிக்க முடியாது. அவங்கவங்க அபிப்ராயமே அவங்கவங்களுக்குப் பெரிது! தப்பெல்லாம் நம்மோட விவாகம் சம்பந்தப்பட்ட சமூகக் கட்டுப்பாட்டின் மேல்தான் இருக்கு?'

லிஃப்ட் மூன்றாம் தளத்தைத் தாண்டி, இரண்டாம் தளத்தில் இறங்கிக் கொண்டிருந்தது.

'இந்தச் சமூகத்தில் கணவன் மனைவியருக்கிடையே எவ்வளவு மனஸ்தாபங்கள் இருந்தாலும் சரி, சேர்ந்து வாழ்ந்துதான் தீரணும். சரி போகட்டும், இது தப்பானால்

விரும்பியபோது தனியாய்ப் பிரிந்து போகக்கூடிய அவகாச முள்ள அமெரிக்காவில்கூட தம்பதிகள் சுகமாயிருப்பதாய் நான்எண்ணிடலை. பின்னே-தப்பு எங்கேதான் இருக்கோ?'

அவன் பேச்சை ப்ரியம்வதா முறுவலுடன் கேட்டுக் கொண்டிருந்தப்பாதே லிஃப்ட் நின்றுவிட்டது.

முதல் மாடிக்கும் இரண்டாவது மாடிக்கும் நடுவில் - முதல் மாடியில் பாதி இறங்கிய நிலையில், அந்த எதிர் பாராத நிகழ்ச்சி அவனுக்கு தூக்கி வாரிப்போட, 'மை காட்! அந்தப் பையன் போய் டைம் ஆபீசில் என்ன சொன்னானோ? கார் இல்லாததால் எல்லோரும் போயிட் டாங்கன்னு நினைச்சுக்கிட்டு மெயின் ஸ்விட்ச்சை ஆஃப் பண்ணியிருப்பாங்க, ஒருகால் அப்படி இருந்துட்டால்...'

ப்ரியம்வதா அவனைக் குழப்பத்தோடு பார்த்தாள். முதல் மாடி வராந்தாவிலிருந்து வந்த காற்று லிஃப்டின் இரும்புக் கம்பிகள் வழியாய் விர்ரென்று உள்ளே வந்து வீசிற்று. வராந்தா வெளிச்சம் பாதங்களில் பட்டது.

'அதுவே நிஜமாயிருந்துட்டால் காலை வரையிலும் இது நகராது' என்று முடித்தான் ரவி, பலமாய் பெல்லை அடித்தபடி. லிஃப்ட் நகரவில்லை.

'இப்ப என்ன பண்றது?' என்றாள் ப்ரியம்வதா குழப் பத்தோடு.

'பண்றத்துக்கு ஒன்றுமேயில்லை. யாருக்காவது மேலே வரவேண்டிய தேவையிருந்து லிப்ஃடை உபயோகித்தால் தான் உண்டு. இல்லாது போனால் காலை வரையிலும் இப்படியேதான்...உங்க வீட்டில் யாராவது கவலரப்படு வாங்களா?'

அவள் பதில் சொல்லவில்லை.

'சினிமா தியேட்டரிலிருந்து திரும்பி வரும் எங்க டிரைவருக்கு ஏதாவது சந்தேகம் வந்தால் ஒருகால் மேலே

வரலாம். இந்த ஆபீஸ் பையன் என்னதான் போய் சொன்னானோ தெரியலையே?' எரிச்சலுடன் கைக்கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டான் ரவி.

# 22

நேரம் பதினொன்றரை அடிக்க இருந்தது.

'எவ்வளவு நேரந்தான் நின்னுட்டே இருப்பாய். உட்காரு' என்றான். அவள் சங்கோஜத்தோடு சிரித்தாள். கண்களில் சோர்வு தெரிந்தது. அவனுக்கு இரக்கமாயிருந்தது. பாவம் காலையில் வந்தவள், தன்னால் இப்படி சிக்கிக்கொண்டு விட்டாள்.

'உட்காரு.'

'பரவாயில்லை சார்.'

தான் உட்காராவிட்டால் அவளும் உட்காரமாட்டாள் என்றெண்ணி அவன் ஒரு பக்கத்தில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டு அவளைப் பார்த்து சைகை காட்டினான். அவள் பீதியோடு ஒரு மூலையில் அடக்கமாய் உட்கார்ந்து கொண்டாள். அவளிடம் முன்பிருந்த பயமும் கலவரமும் குறைந்து கொண்டிருந்ததை கவனித்தான்.

'ஒரு விதத்தில் நாம் அதிர்ஷ்டசாலிகள்தாம். முதல் மாடியில் பாதி தூரத்தில் வந்து நின்றதால் இந்தக் காற்றாவது வருது. இரண்டு மாடிக்கு நடுவே நின்றுவிட்டிருந்தால் மூச்சு விட முடியாமல் செத்துவிட்டிருப்போம்' என்றான்.

அவனுக்கு மாதவியின் மேல் சொல்லமுடியாத ஆத்திரம் வந்தது. இந்த நேரத்தில் என்ன பண்ணிட்டிருப்பாள்? சுதாகருக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருப்பாளா? அதற்குள் அவன் பார்வை தனக்குத்தானே சிரித்துக்கொண்டிருந்த ப்ரியம்வதாவின் மேல் படிந்தது.

'ஏன் சிரிக்கிறாய்?'

அவள் முதலில் சொல்லவில்லை. திரும்பவும் கேட்ட பிறகு, 'நாம் இம்மாதிரி சிக்குண்டிருப்பதைப் பார்த்தால் என் ஃபெரண்ட் சொன்ன கதை ஞாபகத்துக்கு வருது சார்...இந்த மாதிரி டெக்ஸ்டைல்ஸ் ஃபேக்டரியில் உத்யோ கம்னு சொன்னதுமே புடவையைப் பற்றி ஒரு கதை சொன்னாள்.'

'அதென்ன கதை?'

'நான்கு வேலையில்லாப் பட்டதாரிகள் என்ன முயன் றும் வேலை கிடைக்காமல் போகவே, ஒரு பாங்கில் திருட முனைந்தார்களாம். அதில் ஒரு கெட்டிக்காரன் இருந்தா னாம். பாங்கில் திருடுவதென்றால் நமக்கு அத்தனை அனுபவம் கிடையாது. நான் இன்னொரு திட்டத்தைச் சொல்றேன். அதற்கு பதிலாய் என் பங்குக்கு நான் கேட்ப தைத் தரணும். இன்னும் சொல்லப்போனால் உங்களுக்கு பங்கைவிட அதிகமாய் கிடைக்கும் என்றானாம். அதையும் பார்த்துவிடலாம் என்றெண்ணி எஞ்சியவர்களும் சரி என்று ஒப்புக்கொண்டார்கள்.

கொஞ்ச நாளில் அந்த ஊரிலிருந்த பிரமுகரின் பெண்ணிற்குத் திருமணம் நடந்ததாம். நகரத்திலிருந்த பிரமுகர்களும், பட்டுபுடவைகள் சலசலக்க அவர்களின் மனைவிமார்களும் திருமணத்திற்கு வந்து கூடவே, கார் கள், ஸ்கூட்டர்கள் என்று ஒரே தடபுடலாய் இருந்ததாம். அங்கிருந்தவர்கள் எல்லோரும் தங்க நகைகளில் மின்னிக் கொண்டிருந்தார்களாம்.

கல்யாணத்திற்கு இரண்டு மணி நேரத்திற்கு முன்னால் யாரோ பாட்டுக்கச்சேரி பண்ண ஏற்பாடு பண்ணியிருந்தார் களாம். இவர்கள் நால்வரும் எல்லா கதவுகளையும் மூடி விட்டு ஸ்டேஜிலிருந்த மைக்கிற்கருகில் வந்து விளை

யாட்டுத் துப்பாக்கியை வைத்துக்கொண்டு பயமுறுத்தவே எல்லோருக்கும் என்ன செய்வதென்றே புரியவில்லையாம். கல்யாணக் கூட்டமாதலால் போலீசார் ஏது?

பெண்கள் எல்லோரையும் ஸ்டேஜிற்குப் பக்கத்திலிருந்த க்ரீன் ரூமுக்குள் அனுப்பிவைத்தார்களாம். அங்கே இருநூறு நூல் புடவைகள் இருந்ததாம். அவைகளைக் கட்டிக்கொண்டு சீதா காட்டிற்குப் புறப்படும் முன்னால் தயாரானாற்போல ஐந்து நிமிஷத்தில் தயாராகி எல்லோரும் ஹாலுக்குள் வரவேண்டும் என்று பயமுறுத்தினார்களாம். அவங்க புடவைகளையும் நகைகளையும் மூட்டை கட்டிக்கொண்டு அந்நால்வரும் அங்கிருந்து அகன்றார்கள். எல்லாம் கால்மணிக்குள் முடிந்துவிட்டது.

ஊரெல்லைக்குப் போய்ச் சேர்ந்த பிறகு கெட்டிக்காரனைப் பார்த்து மூவரும் கேட்டார்களாம், 'இதுவே பாங்காயிருந்தால் நாலைந்து லட்சத்திற்கு மேல் கிடைத்திருக்காது. கலியாணத்தில் இவ்வளவு தேறும்னு ஊகித்திருக்கவே இல்லை! இவ்வளவு நல்ல ஆலோசனை தந்ததற்கு உனக்கு என்ன வேணுமோ அதை எடுத்துக்கோ' என்றார்களாம். 'தங்கத்தை நீங்க வைச்சுக்குங்க. புடவைகளை எனக்குத் தந்துடுங்கோ' என்றானாம் அவன்...' என்று நிறுத்தினான் ப்ரியம்வதா.

'அதென்ன? தங்கத்தை விட்டுட்டுப் புடவைகளை ஏன் எடுத்துக்கணும்?'

ப்ரியம்வதா, 'அவங்களுக்குக் கூட அதே சந்தேகந்தான் வந்தது. ஆனால் அவன் பிடிவாதம் பிடித்ததால் புடவைகளை அவனுக்கு விட்டுவிட்டு, தங்கத்தை தாம் பங்கிட்டுக் கொண்டு பிரிந்தார்களாம். ஒவ்வொரு புடவையும் ஆயிரம் ரூபாய்க்குக் குறையாது. அதனால் அவன் பங்கு இரண்டு லட்சம் வந்தது. தங்கத்தை விற்கப் போனவர்களுக்கு தலைக்கு அதில் பாதி கூட வரவில்லையாம்' என்றான்.

'அதெப்படி?'

'அதில் பாதிக்கு மேல் கவரிங் நகையாதலால்!'

ரவி சட்டென்று பெரிதாய் சிரித்துவிட்டான். அவன் அவ்வளவு பெரியதாய் சிரித்தது அதுதான் முதல் தடவை. ப்ரியம்வதாவும் முறுவலுடன் 'உங்களிடம் வேலைன்னு சொன்னதுமே என் சிநேகிதி இதையேதான் சொன்னாள். தங்கத்தில் மோசடி பண்ணலாமோ என்னவோ, ஆனால் புடவைகளில் அப்படி பண்ண முடியாதாம். அது மட்டு மில்லை, தங்கத்தை விட விலையுயர்ந்த புடவைகள் அண்மையிலேயே வரவிருக்கின்றனவாம்.'

'அண்மையில் என்ன, வந்தேதான் இருக்கே?' என் றான் அவன்.

இரவு மணி ஒன்று தாண்டிற்று.

அசந்துபோய் தூக்கத்தில் ஆழ்ந்துவிட்ட அவனுக்கு திடீரென்று விழிப்பு வந்தது. தான் உட்கார்ந்திருந்த தோற்றத்தைப் பார்த்து அவனுக்கே சிரிப்பு வந்தது. அவள் கொட்டாவி விட்டபடியே தலையைப் பின்னுக்குச் சாய்த் துக் கொண்டது தெரியும். அவனும் உறக்கத்தில் ஆழ்ந்து விடுவான் என்று ஊகித்திருக்கவில்லை.

வெளியே வராந்தாவில் எங்கேயுமே சந்தடி இல்லை. பகலெல்லாம் சந்தடியாயிருந்துவிட்டு, ராத்திரியில் தானும் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தது போல இருந்தது ஆபீஸ்!

வெளியேயிருந்து வந்த வெளிச்சம் அவள் மேல் பட்டுக் கொண்டிருந்தது. முதலில் முழங்காலில் தலையைப் புதைத்துக்கொண்டு படுத்தவள், தூக்கத்தில் ஒரு பக்கமாய் சாய்ந்திருந்தாள். தலைக்குக் கீழேயிருந்த கையின் மேல் கேசங்கள் புரண்டு கொண்டிருந்தன. வெண்மையான சரீரத்தின் மேல் கரிய கேசங்கள்! அவன் கைகளை நீட்டி னான்.

அவள் சிறு பெண்ணைப் போல உடலைக் குறுக்கிக் கொண்டு படுத்திருந்தாள். லிஃப்ட் நீளமாயிருந்தாலும் அகலம் போதவில்லை. ஒருகையைத் தலைக்குக் கீழே வைத்தும் இன்னொரு கையை கன்னத்தில் வைத்திருந் தவள், தூக்கத்தில் அந்தப் பக்கத்திலிருந்து இந்தப் பக்க மாய் புரண்டு படுத்தாள்.

அவன் அவளையே பார்த்தான். அதற்கு முன்னால் இந்த மாதிரி என்றுமே பார்த்ததில்லை. உறக்கத்தில் களைப்புற்றிருந்த முகம் மேலும் அழகாய் தென்பட்டது. என்ன வேடிக்கையென்றால் தன் மனைவியைக் கூட அவன் என்றுமே கூர்ந்து பார்த்ததில்லை. பார்க்க எதுவுமில்லை. ஆவலை விட உயர்ந்த உணர்ச்சியானது மனதை நிரப்பி விட்டால் பார்வை வானவில்லாகி விடுகிறது.

அவள் தூக்கத்தில் புரண்டபோது புடவை நழுவி விழுந்தது. அவன் பலவந்தமாய் கண்களைத் திருப்பிக் கொண்டு, காற்றில் பறந்த அவள் புடவையைச் சரியாகப் போர்த்தினான். அவ்வாறு போர்த்திக்கொண்டிருந்த போது அவளுக்குப் பாதி விழிப்பு வந்து, அந்த அரைத் தூக்கத்திலேயே அவன் கையை கெட்டியாய் பிடித்துக் கொண்டு அப்படியே உறக்கத்தில் ஆழ்ந்தாள். அவள் ஸ்பரிசம் இதயத்தின் அடித்தளத்தில் சந்தனத்தைப் பூசினாற் போலிருந்தது. அவனுக்குத் தன் மனைவி நினைவிற்கு வந்தாள். மாதவி என்றைக்காவது இம்மாதிரி படுத்திருப்பாளா?

ஒரே தலையணையில் அவ்விருவரின் தலைகளும்
ஒன்று சேரமுடியாத வட-தென் துருவங்கள்...
அவன் கண்களை மூடிக் கொண்டான்.

இதற்குள் சினிமா விட்டிருப்பார்கள். வீடு வரைக்கும் கொண்டு வந்து விடுதலும், புன்னகைத் தவழ கையாட்டு தல், சிரித்துக் கொண்டே படி ஏறுதல் எல்லாம் ஆகியிருக் கும்...

யோசித்துக் கொண்டிருந்தபோதே அவன் உறக்கத்தில் ஆழ்ந்து விட்டான்.

உறக்கத்தில் கனவு வந்தது. அவள் யாரோ அவனுக்குத் தெரியாது. பதினைந்தாண்டுகளுக்கு முந்தைய நினைவோ, தூக்கத்தில் ஆழ்வதற்கு பதினைந்து வினாடிகளுக்கு முந்தைய அனுபவமோ, தெரியாது, அவனை நோக்கி ஓடி வருகிறாள்.

முத்தமிட்ட ஓசைக்கு அதரங்களின் நிசப்தம் படீரென்று உடைந்தது. கையின் தீண்டலுக்கு சரீரம் பாம்பாய் நெளிந்தது. துவந்த யுத்தத்திற்கு ரணகளம் தேவையில்லை. சொந்தமாவதற்கு முகூர்த்தம் தேவையில்லை.

அவன் கனவில் ஆழ்ந்திருக்கையிலேயே, எப்பொழுது விடிந்ததோ தெரியாது. லிஃப்ட் மெல்ல கீழே நழுவத் தொடங்கிற்று. கனவுக்கும் நினைவுக்கும் வேறுபாடு தெரியாத நிலையில் இருந்தார்கள் அவர்களிருவரும். கீழே வாட்ச்மேனும் இன்னும் மூவரும் மேலே போவதற்காக நின்று கொண்டிருந்தார்கள்.

# 23

லிஃப்ட் எதிர்பாராமல் நிற்கவே, ஒரு கனவு லோகத்திலிருந்து வெளிப்பட்டாற் போலிருந்தது ரவிக்கு. முதலில் ஒரு வினாடி எதுவுமே புரியவில்லை. எதிர்பாராமல் மேகங்கள் விலகினாற் போல் தோன்றவே, தன்னைப் பார்த்துக் கொண்டவனுக்கு மார்பிலிருந்து விலகி தொலைவிற்குப் போய்க் கொண்டிருந்த ப்ரியம்வதா தென்பட்டாள்.

அதற்குப் பிறகு லிஃப்டிற்கு வெளியே சிலையாய் நின்று பார்த்துக் கொண்டிருந்த மூவரும் தென்பட்டார்கள்,

வாட்ச்மேன், அறையைக் கூட்டுபவனும் இன்னொருத்தனும். ஒரு நிமிஷம் ஐந்து பேருமே அப்படியே நின்றுவிட்டார்கள். எதிர்பாராத விதத்தில் கம்பெனி மேனேஜரை அந்த அதிகாலை வேளையில் லிஃப்டில் பார்க்க நேர்ந்ததற்கு பயப்படுவதா அல்லது இன்னொரு பெண்ணோடு பார்க்க நேர்ந்ததற்கு முகத்தைத் திருப்பிக் கொள்வதா என்று அம்மூவருக்குமே தெரியவில்லை.

ரவிக்கோ, எப்பொழுது தான் உறக்கத்தில் ஆழ்ந்தோம் என்றோ, எப்பொழுது அவள் தன் மார்பைத் தலையணையாய் வைத்துக் கொண்டாளோ புரியவில்லை.

எல்லோரைக் காட்டிலும் ப்ரியம்வதாவின் நிலைதான் மிக மோசமாயிருந்தது. வெட்கமும் கூச்சமும் பிடுங்கித் தின்ன, அவள் சட்டென்று எழுந்து நின்றாள்.

எல்லோருக்கும் முன்பாகத் தேறிக் கொண்டது ரவி தான்.

திறந்திருந்த கதவைத் தாண்டி வெளியே வந்தான். அடுத்த நிமிஷத்தில் அவன் அந்தக் கம்பெனியின் அதிகாரியாக மாறிவிட்டான்.

‘டைம் ஆபீசில் யார் இருக்காங்கன்னு பாரு’ என்று வாட்ச்மேனுக்கு உத்தரவு பிறப்பித்தான். அடுத்த நிமிஷம் செக்யூரிட்டிகள் எல்லோருமே அவனுக்கு முன்னால் திபுதிபு வென்று வந்து நின்றார்கள் - நடுங்கியவாறு.

‘லிஃப்டை ஆஃப் பண்றதுக்கு முன்னாடி மேலே இன்னும் யாராவது இருக்காங்களான்னு பார்க்க வேண்டாமா?’

யாருமே வாயைத் திறக்கவில்லை.

‘பாய் என்ன சொன்னான், உங்களிடம்?’

‘டாக்சி அனுப்பும்படி சொன்னார் சார்,’

'பின்னே, அனுப்பினீங்களா?'

'அனுப்பினோம் சார்.'

'எங்கே?'

'வீட்டுக்கு' என்றான் அந்த சர்தார்ஜி.

ரவிக்கு அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை. இனி அவர்களைத் திட்டினாலும் லாபமில்லை என்று புரிந்தது.

'வெளியே ஏதாவது வாகனம் இருக்கா?'—கேட்டான்.

'சரக்கு வேன் இருக்கு சார்.'

'அனுப்பு.'

எங்கும் ஒரே பரபரப்பாயிருந்தது. வேனில் பிரியம் வதாவை இறக்கி விட்டுவிட்டு அவன் புறப்பட்டான். உட்கார்ந்த நிலையிலேயே உறங்கியதால் உடம்பெல்லாம் வலியெடுத்தது. தலை கனத்தது. வேனில் போய்க் கொண்டிருந்தபோது பின்னுக்கு சாய்ந்தாற்போல் உட்கார்ந்து கண்களை மூடிக்கொண்டான் அசதியோடு.

எம். டி. போய்விட்டதுமே சட்டென்று கீழே ஜனங்களிடையே இருந்த பரபரப்பு நீங்கிற்று. டென்ஷன் போனதுமே இச் செய்தி அழகாய் கண் காது மூக்கு வைக்கப் பட்டு இறக்கைக் கட்டிக்கொண்டு எங்கும் பறக்கத் தொடங்கி விட்டது.

ரவி டெக்ஸ்டைல்ஸ் எம்.டி. தன் செக்ரட்டரியோடு இரவெல்லாம் லிஃப்டில் கழித்தான் என்றபோது...ஏதோ தவறுதலாய் லிஃப்ட் இடையிலேயே நின்றுபோய் விட்டது என்றபோது...அதில் கலப்படம் ஒன்றுமில்லை. ஆனால் முதல் நபரிலிருந்து இரண்டாவது நபருக்கும்—இரண்டாவது நபரிலிருந்து மூன்றாவது நபருக்கும் அச்செய்தி சாதாரணமாய்தான் பரவிற்று. அடுத்தவருக்கு இக்கதையை இதேபோல சொன்னால் கேட்பதில் அவ்வளவு ஆர்வம்

இல்லாததை உணர்ந்து அதற்கடுத்தவர் '...காலை வரை யிலும் அறையிலேயே கழித்துவிட்டு, ரெண்டாம் பேர் அறியாமல் வெளியேறப் போனபோது செக்யூரிட்டியிடம் பிடிபட்டுட்டாங்க.' என்று உப்பு காரம் தெளித்து, கேட்ப வர்களின் முகங்களில் வியப்பைத் தோற்றுவித்தார்கள்.

இச்செய்தி, வேனைக் காட்டிலும் மிக வேகமாய் பயணித்து, ரவிக்கும் முன்பாக மாதவிக்குப் போய்ச் சேர்ந் தது. அவன் போனபோது அவள் யுத்தத்திற்குத் தயாரா யிருந்தாள்.

'வந்தீர்களா? விடிஞ்சுதா? அங்கேயே இருந்துக் கலாமே, எதுக்கு வந்தீங்களாம்?' என்று தொடங்கினாள்.

அவனுக்கு முதலில் புரியவில்லை.

'ஏன் அந்தமாதிரி எதுவுமே தெரியாதது போல மூஞ்சியை வெச்சுட்டிருக்கீங்க? நாம்ப பார்க்காட்டியும் நம்பளை லட்சம் கண்கள் பார்த்துட்டிருக்குங்கறது புரிஞ்சால் நல்லது! சரி, யார் அவள்?'

'நீ என்ன பேசுகிறாய்னு உனக்கே புரியுதா?'

'ஏன் புரியாது? எனக்குப் புரியாட்டாலும் உலகத் துக்குப் புரியும். நீங்க இவ்வளவு தூரத்துக்குக் கட்டவிழ்த்த காளையாய் மாறிடுவீங்கன்னு நினைச்சிருக்கலை. பட்டப் பகலிலேயே அந்தக் கிழவி செக்ரடரியோடு கண்ணால பார்த்து மூஞ்சியில காரி உமிழ்ந்தாலும் உங்களுக்கு புத்தி வரலை போலிருக்கு.'

'...மாதவி'

'இப்ப அவளைத் தள்ளிட்டு, யாரோ லம்பாடிக்கு வேலை போட்டுக் கொடுத்து, இனி ராத்திரியெல்லாம் கூட அங்கேயே முகாமிட்டுட்டீங்க போலிருக்கு. ஐயோ கடவுளே—நான் என்ன பண்ணுவேன்?' என்று பெருத்த குரலில் ராகம் பாடத் தொடங்கினாள்.

'உனக்கு புத்தி ஏதாவது பிசகிடுத்தா? ஆபீசில் வேலை அதிகமாயிருந்ததால் தாமதமாய் வர நேர்ந்தது. வந்துட்டிருந்தப்ப லிஃப்ட் நின்று போயிடுத்து.'

'சொல்லுங்க, சொல்லுங்க. கேட்கிறவங்க இருந்துட்டால் எவ்வளவு கதை வேணும்னாலும் சொல்லுவீங்க. எங்கப்பா அம்மாகிட்டே நான் பண்ணிக்கவே மாட்டேன்னேன். இப்போ, ஏதாவது குளமோ, குட்டையோ பார்த்துக்க வேண்டியதுதான் இனிமே...'

இவளா இவ்வாறு பேசுகிறாள்? விக்கித்துப்போய் பார்த்தான் அவளை. அதற்குள் வெளியே சந்தடி கேட்டது. அவன் குரலைத் தாழ்த்திக்கொண்டு, 'மாதவி, வெளியே வேலையாட்கள் எல்லாரும் கேட்பாங்க. கொஞ்சம் தணிவாய்ப்பேசு' என்றான்.

'ஏன்? எதுக்குத் தணிஞ்சு பேசணும்? யாருக்குத் தெரியாது இந்த லீலையெல்லாம்? ராத்திரிபூரா ஆபீசு ரூமில் கொட்டமடித்தால் வராத ஆபத்து வீட்டிலிருப்பவங்க கேட்டுட்டால் மட்டும் வந்துடுமாக்கும்? இன்னிக்கு ரெண்டில் ஒன்று தெரிஞ்சுடணும்.'

'எது தெரியணும்? எதைத் தெரிஞ்சுக்கணுமோ சொல்லு!' என்று பொறுமை இழந்து கத்தினான்.

அவன் அவ்வாறு எதிர்த்து நின்றதைப் பார்த்து அவள் கொஞ்சம் பயந்தாலும், விட்டுக் கொடுக்காமல் தானும் குரலை உயர்த்தி, 'ஐயோ! அவ்வளவு தூரத்துக்கு வந்தாச்சா? அவ யாரோ உங்களுக்கு நல்லா மருந்து வெச்சிருக்கா...இனிமேல் இந்தக் குடும்பத்தை அந்த தெய்வந்தான் காப்பாற்றணும்' என்று ஒப்பாரி வைக்கத் தொடங்கினாள்.

'ஒருத்தரும் எனக்கு மருந்தும் வெக்கலை, மாயமும் வைக்கலை. இந்தக் குடும்பத்தில் விஷத்தைக் கலக்கறது

நீதான். என்றைக்காவது ஒரே ஒரு நாளாவது சுகமாய் இருந்திருக்கேனா?'

'சொல்லுங்க,...சொல்லுங்க, என்னைத்தான் சொல்லு வீங்க.'

அவன் திடீரென்று குரலை உயர்த்தி, 'நீ நினைக்கிறாப் போல எனக்கு யாரோடும் எந்த சம்பந்தமும் இல்லை. நான் யாரோடும் டிராயிங் ரூமில் உட்கார்ந்துட்டு கையைக் காட்டிக்கலை. யாரோடும் செகண்ட் ஷோவுக்குப் போகலை' என்று கத்தினான்.

'என்ன? என்ன சொன்னீங்க?' என்று பாய்ந்து வந் தாள் மாதவி.

'மானசீக விபச்சாரத்தை விட விபச்சாரமே மேலுன் னேன். ஏன் தப்பா?'

'மஞ்சள் காமாலைக்காரனுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள்! நீங்க ஊர் சுற்றியானதால்—குடிகாரனானதால் —என்னையும்—'

அவள் வார்த்தையை முடிக்கவில்லை. அவன் இழுத்து அவள் கன்னத்தில் பலமாய் ஒன்று கொடுத்தான். அவ்வளவு தான். அவ்வறையில் திடீரென்று நிசப்தம் வந்து சூழ்ந்து கொண்டது. அவள் கண்கள் செருகிக் கொண்டாற் போலாயிற்று. 'எக்—எக்' என்ற சப்தம் அவள் குரல் வளையிலிருந்து வெளிவந்தது. கைகால் இழுத்துக்கொள்ள வேரோடு சாய்ந்தாற்போல கீழே விழுந்தாள்.

அவள் முகம் அப்படியும் இப்படியும் ஆடிற்று. நாக்கு பற்களுக்கிடையே நலிந்தது. மின்னலாய் மூளையில் ஏதோ பளிச்சிடவே அவன் ஓடிப்போய் சாவிக் கொத்தைக் கொண்டு வந்து அவள் கைக்குள் வைத்தான். அப்பொழுது தான் வந்தாற்போல இரண்டு வேலையாட்கள் உள்ளே நுழைந்தார்கள். அதைப் பொருட்படுத்தாமல் அவர்களைக்

கொண்டு அவளைப் படுக்கையில் படுக்கவைத்து, டாக்டருக்கு போன் பண்ணினான்.

ஐந்து நிமிஷத்திற்கெல்லாம் டாக்டர் வந்தார். இஞ்ஜக்ஷன் தந்துவிட்டு, ஹிஸ்டீரியா லட்சணங்கள் காணப்படுவதாய் சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

வீடு முழுவதும் மயான அமைதி தவழ்ந்து கொண்டிருந்தது. வேலையாட்கள் எல்லோரும் கூடிக்கூடி கிசுகிசுத்துக் கொண்டார்கள். நடந்த அருவருப்பான சம்பவத்தால் அவனுக்குத் தலைக்குனிவாயிருந்தது. தன் அறையிலேயே வெகு நேரமாய் உட்கார்ந்திருந்தான். ஆனால் இன்றைக்கு இல்லாவிட்டாலும் நாளைக்காவது இது வெளியுலகத்திற்குப் பரவத்தானே போகிறது என்று மனதைத் திடப்படுத்திக் கொண்டு வெளியே வந்தான்.

அவன் மனம் தளர்ந்து போவதைப் பார்ப்போம் என்ற துடிப்பில் இருந்த வேலையாட்களுக்கு, ஐந்தே நிமிஷத்தில் அவன் பழைய ரீதிக்கு மாறிப்போய் உத்தரவுகளைப் பிறப்பித்ததைப் பார்த்து தலையைச் சுற்றிற்று. எதுவுமே நடக்காததுபோல - பார்க்கப் போனால் இன்னும் கடுமையாக நடந்துகொள்ளத் தொடங்கினான் அவன்.

அன்றைக்கு ஆபீசுக்குக்கூட எப்பொழுதும் போலவே வந்துவிட்டான். அவனுக்குப் பின்னால் என்ன பேசிக் கொண்டார்களோ தெரியாது, முன்னால் மட்டும் எதையும் பேசவில்லை. சர்மாவிடம் மட்டும் நடந்ததையெல்லாம் சொன்னான். அவர் ஆத்திரமடைந்து டைம் ஆபீஸ் ஸ்டாஃப் எல்லோரையுமே மாற்றிவிடுவதாய் கொதித்தெழுந்தார். அவருக்கு நயமாய் எடுத்துச் சொல்வதற்குள் போதும் போதுமென்றாகி விட்டது.

அவனுக்கு ஒரு விஷயம் தெளிவாய்ப் புரிந்தது. இந்த உலகம் நாயைப் போன்றது. ஓடினால் குரைத்துக் கொண்டே துரத்தி வரும். எதிர் நின்று வேட்டையாடினால் ஓட்டம் பிடிக்கும்.

இச் செய்தி எல்லோருக்கும் தெரிந்துவிட்டது என்றறிந்து தளர்ந்துவிட்டான் அவன். என்னவாகுமோ என்றஞ்சினான். ஆனால் அவன் கொஞ்சம் சுதாரித்துத் தலை நிமிர்ந்து நிற்பதற்குள்ளாகவே எல்லாமே பிசுபிசுத்து விட்டது.

மேனேஜர் வந்து புதுத்திட்டம் சம்பந்தப்பட்ட ஃபைலைக் காட்டினார். தன் யோசனைகளை ஒதுக்கி வைத்துவிட்டு ஃபைலைப் பார்வையிட்டான். தபால் மூலமாய் மலிவு விலைக்குப் புடவைகளை வழங்கும் திட்டம் அது. அது நடைமுறைக்கு வந்தால் - சுமார் நூறு ரூபாய்க்கே நல்ல புடவைகளை வழங்கலாம்.

'திரும்பவும் இந்த ஃபைல் என்னிடம் எதுக்கு வந்தது?' என்று கேட்டான்.

'ஒரு டைரக்டர் இதைப்பற்றி திரும்பவும் யோசிக்கலாம்னு எழுதியிருக்கார்.'

'ஒரு முறை மீட்டிங்கில் மெஜாரிட்டி ஒப்புக்கொண்ட பிறகு திரும்பவும் சர்ச்சை புரிய வேண்டிய அவசியமில்லைன்னு சொல்லுங்க' என்றான். அதுவே முதல் நாளாயிருந்தால் அவ்வளவு திடமாய் சொல்லியிருந்திருக்க மாட்டான். அவனுக்கே ஆச்சரியமாயிருந்தது.

மேனேஜர் போனதும் சர்மாவுடன் போனில் பேசினான்.

'பலவிதமான வீண் செலவுகளை குறைச்சுக்கிட்டால்- இருநூறு ரூபாய் புடவையை நூறு ரூபாய்க்கே விற்கலாம். இவ்வளவு நாளாய் ஜனங்கமீதே இந்தச் செலவுகளையெல்லாம் திணித்தோம். எதுக்கு யாரோ டைரக்டர் அதை எதிர்க்கிறாராம்?' என்று கேட்டான்.

'புத்தகமாயிருந்தாலும் சரி, புடவையாயிருந்தாலும் சரி, அழகாய் அதிக விலையைக் காட்டினால்தான் வாங்கு

வாங்கன்னும், மலிவாய் கொடுத்தால் மட்ட ரகமோன்னு சந்தேகப்படுவாங்கன்னும் நம்ப டைரக்டரின் பயம்' என்றார் மறுமுனையிலிருந்து சர்மா.

'பார்ப்போம், என்னதான் ஆகிறதுன்னு. இந்தத் திட்டம் தோற்றால் அதே புடவையை முன்னூறு ரூபாய்க்கு விற்றுடுவோம். அப்போது குறைந்த பட்சம் இந்த ஜனங்களின் முட்டாள்தனத்தை நம்மால் மாற்ற முடியாதுங்கற திருப்தியாவது நமக்குக் கிட்டும்.'

சர்மா சிரித்தார். 'இத்தனைக்கும் விளம்பர பட்ஜெட் எவ்வளவு போட்டிருக்கிறாய்?'

'எழுபத்தைந்து லட்சங்கள்.'

'மை காட்! அவ்வளவா?'

'ஆமாம். அவ்வளவு இல்லாட்டி இந்தத் திட்டம் ஜனங்களிடையே செல்லாது!'

'சரி, பெஸ்ட் ஆஃப் லக்.'

ரவி போனை வைத்துவிட்டு, ட்ரேயிலிருந்த காகிதத்தை எடுத்துக்கொண்டான். எதேச்சையாய் பார்த்துக் கொண்டே வந்தவன், எஞ்சியவைகளைப் படித்துவிட்டு திடுக்கிட்டான்.

அது ப்ரியம்வதாவின் ராஜினாமா கடிதம்.

வெகுநேரம் அதையே பார்த்தபடி உட்கார்ந்திருந்தான். அன்று மாலையில் ஆபீஸ்விட்டதும், சாதாரணமாய் கேட்பதுபோல கேட்டு பெர்சனல் பைலை வரவழைத்தான். அதில் அவள் விலாசம் இருந்தது.

காரில் அங்கே போனான். யாராவது பார்க்கப் போகிறார்களே என்று அவன் இம்முறை பயப்படவில்லை. நேற்றிரவு நிகழ்ந்த சம்பவம் அவனுக்கு புது தைரியத்தைத் தந்தது.

ப்ரியம்வதாவின் வீடு மாடியில் இருந்தது.

படியேறி பெல்லை அடித்தான். அவளே வந்து கதவைத் திறந்தாள். காலையிலிருந்து அழுது கொண்டிருந்தாற் போல கண்கள் உப்பியிருந்தன. அவனை அந்த நேரத்தில் எதிர்பார்த்திராத அவள் ஓரடி பின் வாங்கினாள்.

அவன் உள்ளே நுழைந்தான். இருவரும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டார்கள். அவள்தான் கிட்டே வந்தாளோ—அல்ல அவன்தான் அவளை இழுத்துக் கொண் டானோ தெரியாது—அடுத்த நிமிஷம் அவன் மார்பின்மேல் அவள் தலையைச் சாய்த்துக்கொண்டு விசும்பினாள். அவன் மெதுவாய் அவள் தலையைத் தூக்கிக் கண்ணீரைத் துடைத்தான்.

விவரமறிந்த பிறகு மனைவிக்குப் பிறகு அவனே விரும்பித் தொட்ட முதல் பெண் அவள்தான். அந்த ஸ்பரிசத்தைத் தொடர்ந்து மூளை யோசித்துப் பார்க்கும் நிலைக்கு வந்து சேர்ந்தவுடன் அவனுக்கு அந்த வித்தியாசம் தெரிந்தது. புத்தம் புதுமை! ஊகூம். அது மட்டுமில்லை. இன்னும் ஏதோ கூட ஒன்று தெரிந்தது. அவள் நெருங்கி வந்ததிலும், கழுத்தை சுற்றிக் கைகளைப் போட்டதிலும்...அதற்கு முன்னால் மாதவியின் நெருக்கத்தில் இல்லாத பரிமளம் ஏதோ தென்பட்டது அவனுக்கு. கண்களுக்குப் புலப்படாத பரிமளம் அது.

உலகமே விரல் சுட்டிக்காட்டியபிறகு, இறுதியில் மனைவியே கூட அவனைத் துரத்திவிட்ட பிறகு, அவனுக்கு இந்த மயக்கத்தில் புதிய அனுபவம் ஏற்படத்தொடங் கிற்று. தினந்தோறும் பார்க்கும் மாதவி—பிறந்ததிலிருந்தே தூக்கிக்கொண்டு திரிந்த மாதவி—தனக்கு முன்பாகவே கவுனால் மூக்கைத் துடைத்துக் கொண்ட மாதவி—இறுதி யில் மனைவியாக, மனைவியான நாளிலிருந்தே தொலை விற்குப் போய்விட்டவள் தராத சுகத்தை அவள் அந்த ஒரு

முத்தத்தில் அவனுக்குத் தந்துவிட்டாள், அவ்வளவு பெரிய டெக்ஸ்டைல்ஸ் நிர்வாகிக்கு.

# 24

டெக்ஸ்டைல்ஸ் நிர்வாகி ரவிக்கு முத்தத்தில் அவ்வளவு இன்பம் உண்டென்று அப்பொழுதுதான் முதல் முதலாகத் தெரிந்தது. துக்கமானது சட்டென்று ஆவேசமாய் மாறி அவனைத் திணறடிக்கத் தொடங்கிற்று. அவள் தோளில் கைவைத்து முதலில் அவளைத் தேற்றினான். அவன் மார்பின் மேல் அவள் தலையைச் சாய்த்துக்கொண்டு தேம்பித் தேம்பி அழத் தொடங்கினாள். அவன் கைதான் தன்னையறியாமல் முதலில் கீழே இறங்கிற்றோ, அல்லது அவள் தலைதான் தன்னையறியாமல் நிமிர்ந்ததோ தெரியாது. கீழே இறங்கிய கை இடுப்பின் திருப்பத்தில் தடைப்பட்டு அப்படியே நின்றுவிட்டது. கீழே இறங்கிய தலைக்கு அதரங்களின் அமிர்தம் கிடைத்தது.

ஆனால் அது வினாடி நேரந்தான்.

அவள் சட்டென்று ஓரடி பின்வாங்கிக்கொண்டு, 'வேண்டாங்க. ப்ளீஸ் போயிடுங்க' என்றாள் கலவரத் தோடு....'இவ்வளவு நடந்ததே போதும்...'

அவன் அவளை விடாமல், 'இல்லை ப்ரியம்வதா, இவ்வளவு நாளும் அவசியமில்லாத விஷயங்களுக்கு மதிப் பளித்து நான் ரொம்பவும் இழந்துவிட்டேன். இனி இதை விட விரும்பவில்லை' என்றான்.

அவள் தர்மசங்கடத்துடன் தலை குனிந்தாள். அவன் திரும்பவும் அவளைத் தன்னோடு இழுத்து அணைத்துக் கொண்டான். இம்முறை அவளே அவனை முத்தமிட் டாள்.

டெக்னிக்!

அதுதான் அவளிடமிருந்த தனித்தன்மை! அது அவளுக்குப் பிறவியிலேயே இயல்பாய் வந்திருக்க வேண்டும். அனுபவத்தால் வராது. அந்தக் கலை அவளிடம் பரிபூரணமாய் ஒன்றியிருந்தது போலும். விவாக வாழ்க்கையில் அவ்வளவு அனுபவமுடைய அவனுக்கே அவளுடைய அந்த நெருக்கத்தைப் பார்த்து தலை சுற்றிற்று. பெண்ணானவள் ஆணின் ஸ்பரிசம் முதல் முதலாகப்பட்ட மாத்திரத்திலேயே அவ்வாறு மெழுகாய் உருகிக் கரைந்து விடுவாள் என்பதை அவன் அறிந்திருக்கவில்லை. மாதவியிடத்தில் அப்படிப் பட்ட துடிப்பை அவன் என்றுமே கண்டதில்லை. இன்னும் சொல்லப்போனால், அவளை இப்படிப்பட்ட நெருக்கத்திற்குக் கொண்டு வரவே அவனுக்கு ஆறு மாதங்கள் பிடித்தன. மாதவியின் எண்ணப்படி 'அது' மனைவிக்கு விருப்பமில்லாவிட்டாலும் கணவனின் ஆனந்தத்திற்காகப் பண்ணும் ஒரு தியாகம்! அவள் அவனை எவ்வளவு தூரம் பதப்படுத்தி வைத்திருந்தாள் என்றால், அவனே கூட அதுதான் உண்மை போலும். கேவலம் கணவனைத் திருப்தியுறச் செய்வதற்காகத்தான் ஒப்புக்கொள்கிறாள் போலும் என்று நம்பும் நிலைக்குக் கொண்டு வந்திருந்தாள்.

அணுவணுவாய் அவனுடைய சந்தேகத்தைத் தகர்த்தெறிந்தது அவள் நடவடிக்கை. ஒரு துறையில் எவ்வளவோ நிபுணனான ஒருத்தன், இன்னொரு விஷயத்தில்தான் எவ்வளவு அந்தகாரத்தில் ஆழ்ந்திருக்கிறான்? அதற்கு இது ஒரு உதாரணந்தான்.

அதற்குள் சந்தடிகேட்டு அவன் அவளைச் சட்டென்று விட்டுவிட்டுத் திரும்பினான். அவளும் சுதாரித்துக் கொண்டு பின் வாங்கினாள்.

'என்னம்மா, என்னவோ சந்தடி கேட்டாப்பல இருந்துதேன்னு வந்தேன்' என்று உள்ளே வந்தார் ஒரு ஆள்.

'வாங்க, வாங்க' என்று அவரை வரவேற்றுவிட்டு, 'சுந்தரராஜன், இந்த வீட்டுக்காரர்' என்று பரிச்சயம் பண்ணினாள். அப்படியா என்றாற்போல தலையாட்டினான் ரவி. இக்கட்டான ஒரு நிலைமையிலிருந்து சட்டென்று தேறிக் கொள்வது பெண்களுக்குக் கைவந்தாற்போல ஆண்களுக்கு வராது. அவன் இன்னும் மயக்கத்திலிருந்து விடுபடவில்லை.

'இவர்...' என்று கேட்டார் - யார் என்று தெரிந்து கொள்ளும் ஆர்வத்தோடு சுந்தர்ராஜன்.

'நான் வேலை பார்க்கும் துணிக் கம்பெனியில் என்னோடு கூட வேலை பண்றார். பேர் சுப்பராமன்' என்றாள் ப்ரியம்வதா, ரவியின் நிஜப்பெயரைச் சொல்ல விரும்பாமல்.

அவ்வளவுதான்!

தொடர்ந்து அரை மணி நேரம் வரை துணிகளைப் பற்றியும், குழாய்த் தண்ணீரைப் பற்றியும் போரடிக்கத் தொடங்கிவிட்டார்... இடையிடையே ப்ரியம்வதாவின் நல்ல குணத்தைப் பற்றியும், இந்தக் காலத்துப் பெண்கள் எப்படி கெட்டு போய்க் கொண்டிருக்கிறார்கள் என்றும், ஆனால் ப்ரியம்வதா அவர்களுக்கெல்லாம் எந்தவிதத்தில் மாறுபட்டிருக்கிறாள் என்றும் சொன்னார். அரைமணி கழித்து ப்ரியம்வதா கொடுத்த காபியைக் குடித்துவிட்டுப் போய்ச் சேர்ந்தார்.

'ஐயாம் சாரி' என்றாள் அவள், அவர் போனதும்.

'பரவாயில்லை. ஒரு விதத்தில் நம்மை அந்த மூடிலிருந்து மீளச் செய்தார். முக்கியமாக நான் வந்தது எதற்கென்றால், உன்னுடைய ராஜினாமாவை வாபஸ் வாங்கிக்கோன்னு சொல்லத்தான். யாரோ ஏதாவது நினைச்சுப்பாங்கன்னு எண்ணி நாம்ப பயப்படத் தேவையில்லை

ப்ரியம்வதா! நாளைக்கு நீ ஆபீசுக்கு வருகிறாய். அவ்வளவு தான்' என்று எழுந்தான்.

அவள் ஏதோ சொல்ல வந்தாள்.

'உன் சார்பிலிருந்தும், என் சார்பிலிருந்தும் நானே யோசித்துப் பார்த்துவிட்டேன். என் வார்த்தையில் கொஞ்சமாவது மதிப்பு இருந்ததானால், என்மேல் கொஞ்சமாவது அன்பு இருந்ததானால் நீ திரும்பி வேலை யில் சேருகிறாய்' என்றான்.

அவள் கொஞ்சம் நிதானித்து, பிறகு மெல்ல 'சரி' என்பதுபோல தலையாட்டினாள்.

ரவிதேஜா டெக்ஸ்டைல்ஸ் கம்பெனியின் புதிய 'ஜனதா' புடவை சம்பந்தப்பட்ட டி.வி. விளம்பரம் வெளி வந்து மூன்று நாட்கள் ஆகிவிட்டன. அதற்குப் பத்து நாட் கள் முன்புவரையிலும் பத்திரிகைகளில் மட்டுமே விளம்பரங் களைக் கொடுத்து வந்தனர். இந்த விற்பனைத் திட்டத்தை முதலில் தமிழ் நாட்டு எல்லைக்குள் மட்டுமே கொண்டு வந்திருந்தார்கள்.

விதம்விதமான அழகான மாடல்களுடன் இந்த ஜனதா புடவைகளைக் கட்டிக்கொண்டு கேமிராவுக்கு முன்னால் நடந்து கொண்டிருக்கும்போது, அந்தப் புடவையின் 'கோட்' நம்பரையும் நிறங்களையும் விவரித்துச் சொல்லி ஒரு காமண்ட்டரியைப்போல செய்தார்கள். அதே புடவை யைக் கடைகளில் வாங்கினால் எவ்வளவு அதிகமாய் செல வாகும், அதற்குக் காரணங்கள் என்னென்ன நேராய் ஃபேக் டரியில்ருந்தே வரவழைத்துக் கொண்டால் எவ்வளவு மலி வாய் கிடைக்கிறது. அவ்வாறு வரவழைக்க வேண்டுமானால் தபால்மூலம் என்ன பண்ணவேண்டும்... போன்ற விவரங் களை பத்திரிகைகளிலேயே விளம்பரத்தின்மூலம் தந்திருந் தார்கள். அந்த விளம்பரங்களிலேயே குறிப்பிட்ட நாட் களில் டி.வி.யைப் பாருங்கள் என்றும் அறிவிப்பு கொடுத் திருந்தார்கள்.

அன்றிரவு தொலைக்காட்சியில் வெளிவந்த அந்த நிகழ்ச்சியை ரவி தானே சுயமாய் கூட இருந்து நிர்வகித்தான். அதை மிக ஜாக்கிரதையாக மேற்கொண்டான். குள்ளம் — ஒல்லி — கருப்பு, உயரம்—ஒல்லி — வெள்ளை, நடுத்தர ரகம் — ஒல்லி — மாநிறம், உயரம் — ஒல்லி— வெள்ளை — இதுபோல விதம்விதமான சேர்க்கைகளோடு மாடல்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு தனக்குப் புடவைகளின் மேலிருக்கும் அறிவையெல்லாம் பயன்படுத்தி அந்தந்தப் புடவைகளைக் கட்டிக்கொள்ளச்செய்து கேமிராவில் அடக்கிக் கொள்ளச் செய்தான்.

அவன் எதில் அதிக ஜாக்கிரதையை எடுத்துக்கொண்டான் என்றால், 'இந்தப் புடவை நன்றாயிருக்கிறது' என்று பார்ப்பவர்களுக்கு வெறுமே தோன்றும்படி இல்லாமல், 'இந்தப் புடவையைத் தான் கட்டிக்கொண்டால் நன்றாயிருக்கும்' என்று தோன்றும் விதத்தில் அத்தனை ரகப் புடவைகளையும் அவைகளைத் தரித்த பெண்மணிகளையும் வெளிப்படுத்தினான். அவர்களின் உள் மனதில், 'ஓஹோ! நானும் இந்த மாதிரி இருக்கிறதால், இந்தப் புடவையைக் கட்டிக்கிட்டால் நானும் இதுபோலவே அழகாயிருப்பேன் போலும்!' என்று தோன்றும்படி பண்ணினான்.

இரண்டுநாட்கள் ஆனதுமே கடிதங்கள் வரத்தொடங்கின. மூன்றாம் நாள் மாலைக்குள் இரண்டு அறைகள் நிரம்பி வழிந்தன. சாதாரண வரும்படி உள்ளவர்களும், அதைக் காட்டிலும் கீழ்மட்டத்தைச் சேர்ந்தவர்களும்கூட நூறு ரூபாய்க்கு ஆர். டி. புடவை என்றதுமே—பட்டுப்புடவையே நூறு ரூபாய்க்கு கிடைத்ததுபோல மகிழ்ந்து போனார்கள்.

சேல்ஸ் டைரக்டர் அவ்வறைக்குள் நுழைந்தபோது ரவியும் இன்னொரு டைரக்டரும் உட்கார்ந்து காபி குடித்துக்கொண்டிருந்தார்கள்.

'இந்த ரெண்டு நாளில் நம் புடவைகளுக்கு எவ்வளவு ஆர்டர்கள் வந்திருக்கு?' என்று கேட்டான் ரவி.

'லட்சத்து ஐம்பதாயிரம் சார்.'

காபி குடித்துக்கொண்டிருந்த டைரக்டருக்குப் புரை ஏறி காபி மேலே சிந்திற்று. 'லட்சத்து ஐ ம் ப தா...யி...ர...மா?' என்று கேட்டார் இருமிக்கொண்டே. ரவி அதைப்பற்றி யோசிக்கவில்லை.

தமிழ்நாட்டில் ஆறுகோடி ஜனத்தொகையில் டி.வி. பார்ப்பவர்களும், விளம்பரங்களைப் படிப்பவர்களும், இதைப்பற்றிக் கேள்விப்பட்டவர்களும் ஒருகோடி ஜனங்கள் என்று வைத்துக்கொண்டால் அதில் புடவை கட்டுபவர்கள் ஐம்பது லட்சம்பேர் என்று வைத்துக்கொண்டால், குறைந்த பட்சம் மூன்று சதவீதம் பேர் இதில் உட்பட்டிருக்கிறார்கள். இவ்வளவு சிறிய வட்டத்திற்குள் இத்தனை பெரிய சாதனை மகத்தானது. இந்தக் கணக்குப்படி முழு விளம்பரத்தாலும் ஏறக்குறைய எல்லா எதிரிகளையுமே வீழ்த்தி விடலாம்...

கங்கிராட்ஸ் ரவி. இவ்வளவு நாட்களுக்குப்பிறகு திரும்பவும் எனக்குத் தீர்ப்புக் கிடைத்து விட்டது! குறைந்த சம்பாத்தியக்காரர்களுக்கு மட்டுமே என்றில்லாமல், தினம் ஒரு புதுப் புடவை என்று மாற்றும் வழக்கமுடையவர்களுக்குக்கூட இந்த ஃபேஷன் பிடித்துவிட்டிருப்பது அதிர்ஷ்டந்தான்!

ரவி கம்பெனியில் அவன் இவ்வாறு வெற்றியின் முதல் படியை ருசி பார்த்துக்கொண்டிருந்த அதே சமயத்தில் அங்கே செஞ்சு ராமய்யா கம்பெனியில் டைரக்டர்கள் எல்லோரும் கூட்டம் கூடியிருந்தார்கள்.

# 25

ரவி கொண்டு வந்திருக்கும் திட்டம், பிரசாரம், இவற்றைப்பற்றி சர்ச்சை புரிவதற்காகத்தான் கூடியிருந்தார்கள் அவர்கள். 'தகவல் சேகரிப்போர்' சிலர் எதிரியின் கம்பெனியில் ரகசியமாய் அமர்த்தப் பட்டிருந்தார்கள். இங்கு நடக்கும் விஷயங்களை அங்கே கொண்டு வந்து சேர்ப்பது இவர்கள் வேலை.

ஆனால் இங்கே இன்னொரு விஷயத்தைக்கூட சொல்ல வேண்டும். அடுத்தவர்களின் வெற்றியை இன்னொரு குழு லேசில் ஒப்புக்கொண்டு விடாது. ஒரு சினிமா வெளியானால் மற்ற சினிமா கம்பெனிகளெல்லாம் எப்படி அதை 'ஃப்ளாப்' என்று சொல்லி விடுமோ, அதே மனோதத்துவந்தான் பிற எல்லா துறைகளிலுமே நடைபெறும். அப்படிப்பட்ட நிலையில்தான் செஞ்சுராமய்யா கூட ரவி சாதித்த இந்த வெற்றியை உடனே ஒப்புக்கொண்டுவிடவில்லை. 'இரண்டே நாளில் லட்சத்து ஐம்பதாயிரம் ஆர்டராவது, இன்னொருவாட்டி நன்றாய் பார்த்துத் தெரிஞ்சுண்டு வாங்க' என்று சொல்லி அனுப்பிவிட்டான். ரவி முற்றிலும் வீழ்ந்து போக இன்னும் அதிகநாள் இல்லை என்பது அவன் எண்ணம்.

இந்தப் பக்கத்தில் ரவி யாருக்குமே யோசிப்பதற்குக்கூட அவகாசம் தரவில்லை இந்த அலை மோதலிலிருந்து தேறி மீண்டும் வெளியே வருவதற்குள்ளாகவே அவர்களை ஆச்சரியத்தில் திணறடித்து விடவேண்டும் என்பது அவன் எண்ணம்.

தமிழ்நாட்டில் வெற்றியடைந்த இத்திட்டத்தை இந்தியா முழுவதற்குமே கொண்டு வரவேண்டும் என்பது அவன் விருப்பம். ஆனால் அது மெதுவாய் நடந்தேறாமல், தன் விரோதி விழித்தெழுந்திருப்பதற்குள் நடந்தேறி விடவேண்டும் என்று துடித்தான். திட்டமிட்டபடியே இதற்காக

எண்பத்தைந்து லட்சம் ஒதுக்கப்பட்டது. ஒதுக்கப்பட்டதே தவிர பணப்புழக்கம் ஆக வேண்டியது பாக்கியிருந்தது!

இதைவிட பெரிய பிரச்னை இன்னொன்றுகூட இருந்தது. நாட்டின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் திடீரென்று மொத்தமாய் இப்புடவைகளுக்காக ஆர்டர்கள் வந்தால் சுமார் கோடி புடவைகளை இரண்டே மாதங்களுக்குள் சப்ளை பண்ண வேண்டியிருக்கும். அதையெல்லாம் தயாராக்கிக் கொள்ளவேண்டுமானால் பரபரப்பாய் வேலை பண்ண வேண்டியிருக்கும். இதற்காக மேலும் கோடி ரூபாய் ஒதுக்கவேண்டும்.

ரவி பின்வாங்கத் தயாராயில்லை.

பாலியெஸ்டர் புடவைகளை ஒரு வருடத்திற்கு 'லீஸி'ற்குத்தர எண்ணியிருந்தான். அதற்கு ராயல்டியாய் இரண்டுகோடி ரூபாய்களைத்தர சித்தமாயிருந்தது வேறொரு கம்பெனி. ஒரு சிறிய கம்பெனி அது. இவர்களோடு எந்தவிதத்திலும் போட்டிக்கு வராது. ரவியின் ஊகப்படி இந்த ஜனதா புடவையின் பரபரப்பு இன்னும் ஒரு வருடம்வரை இருக்கும். அதற்குப்பிறகு அந்த வியாபாரமும் சாதாரணமாகிவிடும். அதனால் ஒரு வருடத்திற்கு பாலியெஸ்டர் பகுதியை வேறொருத்தருக்கு லீஸிற்குத் தருவதால் நஷ்டம் ஒன்றுமில்லை.

இந்த ஜனதா புடவைகளால் சில லட்சம் பேர்களுக்கு வேலை கிடைக்கும். மேலும் ப்ரியம்வதாவின் வார்த்தைகள் அவன் மனதில் மிக நன்றாய் படிந்து போய் விட்டிருந்தன. எவ்வளவோ கீழ்மட்டத்துக் குடும்பங்களுக்கு உதவி பண்ணினாற் போலிருக்கும், இவ்வளவு அழகான புடவைகளை மலிவு விலைக்குத் தருவதால்!

இதனால் கம்பெனிக்குக்கூட எந்த நஷ்டமும் இல்லை. ஒரு லைனில் வியாபாரத்தைக் குறைத்து வேறொரு லைனில் போவதுதானே இது! எதை நிர்ணயித்துக்கொள்

வது? இவ்வாறு தொடங்கியதுதான், ஒரே நாளில் உச்சாணிக்கு ஏறி விட்டிருந்தது.

ஆனால் ரவி தேஜா டெக்ஸ்டைல்ஸ் டைரக்டர்கள் அவ்வாறு எண்ணவில்லை. எல்லாப் பாகங்களிலுமே அதிக லாபம் கிடைப்பது பாலியெஸ்டர்கள் மூலம்தான்! ஜனங்கள் என்ன விலையானாலும் சரி, இந்தப் புடவைகளை வாங்குவார்கள். ஜனதா புடவைகளினால் புடவை ஒன்றிற்கு ஐந்து ரூபாய்க்கு மேல் லாபம் இராது. இவ்வளவு பேர் கடைக்காரர்களை விட்டுவிட்டு, இவ்வளவு பாடு பட்டு கோடிக்கணக்கான புடவைகளைத் தயாரித்து, இவ்வளவு முதலீட்டைப் போட்டு ஜனதா புடவைகளை விற்பானேன்? கேவலம் புடவை ஒன்றிற்கு ஐந்து ரூபாய் லாபத்திற்காகவா? அதுவே கொஞ்சம் புடவைகளானாலும் விலையுயர்ந்த புடவைகளைத் தயாரித்துக் கொண்டோமானால் லாபம் புடவை யொன்றிற்கு ஐநூறு ரூபாய்வீதம் கிடைக்கும். நூறு ஜனதா புடவைகளை விற்பதைவிட ஒரு விலை யுயர்ந்த புடவையை விற்பது லாபகரமானது.

மாலையில் ஒரு டைரக்டர் அவசர கூட்டத்திற்கு நோட்டீஸ் கொடுத்தார்.

ஐம்பதாண்டு கம்பெனி சரித்திரத்திலேயே இந்த மாதிரி மீட்டிங் நடந்தது அதுதான் முதல்தடவை.

ரவி மனத்தளவில் மிகவும் தளர்ந்து விட்டான். ஒரு நல்ல காரியத்திற்குக் கூட இவ்வளவு தடங்கல்கள்! அதுவும் தம்மைச் சேர்ந்தவர்களிடமிருந்தே! பணம் சம்பாதித்துக் கொண்டிருந்த வரையிலும் மிக அன்போடு நடந்து கொண்டிருந்தவர்கள்—நிலைமை கொஞ்சம் எதிர்க்கத் தொடங்கியதுமே எப்படி மாறிவிடுகிறார்கள் என்பது நன்றாய் புரியத்தொடங்கிற்று அவனுக்கு.

பத்தரைக்கு மீட்டிங்,

ராஜினாமா உத்தரவை பாக்கெட்டில் வைத்துக் கொண்டு அவன் வீட்டிலிருந்து கிளம்பினான்.

அரை மணிக்குப் பிறகு மீட்டிங் தொடங்கிற்று. நோட்டீஸ் கொடுத்த டைரக்டர் தன் ஆட்சேபணையை போர்டிற்கு முன்னால் சமர்ப்பித்தார். ரவிக்கு இவ்வளவு பணத்தை ஒரு திட்டத்தின் மூலம் செலவழிக்க அதிகாரமில்லை என்றும், அவன் அவைகளை கெட்ட வழியில் பயன்படுத்திக் கொள்கிறான் என்றும் அவர் தெரிவித்திருந்தார். இப்பொழுது கம்பெனி நல்ல லாபத்தில் நடந்து வருகிறது. அனாவசியமான 'ரிஸ்க்' ஏன் எடுத்துக்கொள்ள வேண்டும்? முக்கியமாய் பாலியெஸ்டர் பகுதி பொன் முட்டையிடும் வாத்தைப் போன்றது. அதை வெளியே தந்துவிடுவது சுத்த விவேகமற்ற செயல். ஒரு முறை இந்த மார்க்கெட் போய் விட்டால் திரும்பவும் சம்பாதித்துக் கொள்வது மிகக் கஷ்டம்.

அவர் பேசியவைகளை போர்டு அங்கத்தினர்கள் மிக கவனமாய் கேட்டார்கள். அவர் சொல்லியது மிகவும் சரியாய் தோன்றிற்று. முக்கியமாய் லாப விஷயங்களிலும், அனாவசியமான ஜனதா புடவை தயாரிப்பு விஷயத்திலும், அவர் சாமர்த்தியமாய் பிற டைரக்டர்களை வசப்படுத்தி விட்டார் என்று புரிந்து கொண்டான் ரவி.

ஒருக்கால் தன் ஆலோசனைகளைப் புறக்கணித்து, இந்த ஜனதா புடவை தயாரிப்பைத் தொடரும்பட்சத்தில் தன்னோடு சேர்ந்து மேலும் சில டைரக்டர்களும் கம்பெனியிலிருந்து நீங்கிவிட சித்தமாயிருப்பதாயும் மறைமுகமாய் எச்சரித்தார் அவர்.

அவருக்கு அந்தக் கம்பெனியில் பெரிதாய் பாகம் ஒன்றும் இல்லை. ஆனால் தன் பேச்சால் எஞ்சியவர்களை நன்றாய் வசப்படுத்திவிட்டார் என்று புரிந்தது. தான் கம்பெனியிலிருந்து நீங்கிவிடுவதாய் சொன்னது கூட பயமுறுத்தல் தான். போய்விட்டால் அவருக்குத்தான் நஷ்டமே தவிர,

கம்பெனிக்கு ஒன்றுமில்லை. கேவலம் அடுத்தவரின் சைக்கலாஜியின் மேல் ஆடிக்கொண்டிருந்தார். அவ்வளவு தான்!

ரவி அவரையே உற்றுப் பார்த்தான்.

இப்படிப்பட்டவர்கள் ஒவ்வொரு குழுவிலும் ஓரிருவர் இருப்பார்கள். சாதாரணமாய் ட்ரேட் யூனியன்களில் இரண்டு பிரிவினர் இருந்தால், அதில் மைனாரிடி பிரிவில் அதிகம் பேர் இருப்பார்கள். எதிர்க்கட்சிகளிலும், அசெம்பிளியிலும் கூட இம்மாதிரி இருப்பார்கள். இவர்கள் எந்த ஆக்க வேலையும் பண்ணமாட்டார்கள். தம் அபிப் பிராயம் ஒன்றால் மட்டுமே அடுத்தவரைக் கவர வல்லவர் கள். சாதாரணமாய் இவர்களுடையது எல்லாமே விதண்டா வாதங்களாய்த்தான் இருக்கும். ஆனாலும் மிக பலமாய் அடுத்தவர்களைத் தம் பக்கமாய் திருப்பிக்கொண்டு விடு வார்கள். தற்சமயம் அந்த டைரக்டரும் அம்மாதிரிதான் இருந்தார். கம்பெனி சாதாரணமாய் நன்றாய் நடந்து வரும்போது இந்த ரிஸ்க்கை ஏன் எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கும் பிறந்தது.

மீட்டிங் லஞ்சிற்காக ஒத்திப் போடப்பட்டது. லஞ்சில் சர்மாவும் ரவியும் தொலைவில் நின்று பேசிக் கொண்டிருந் தார்கள்.

'நான் எந்த நிலையிலும் என் தீர்மானத்தை விட்டு மாறமுடியாது. இந்த திட்டத்தை மற்ற டைரக்டர்கள் ஒப்புக்காவிட்டால் நான் இந்தப் பதவியிலேயே இருக்கப் போறதில்லை. அவ்வளவுதான்'—ரவி, சர்மாவிடம் தன் மனத்திலிருந்ததைச் சொல்லி விட்டான்.

'என் மனைவிக்கும் எனக்கும் காலையிலேருந்து இதே போராட்டம்தான் நடந்தது' என்றார் சர்மா. ரவி சிலை யாகி விட்டான், எதிர்பாராமல் அவளைப் பற்றிய பேச்சு வந்ததற்கு. சர்மா சொல்லிக்கொண்டே போனார்,,,

அவள் உன்னைத்தான் சப்போர்ட் பண்ணினாள். என்னைப் பற்றிக் கேட்கிறாயா—எல்லா டைரக்டர்களும் ஏகமனதாய் என்ன சொல்றாங்களோ அதற்குதான் என் ஓட்டும்.'

ரவிக்கு அவர் பேச்சு எதுவுமே காதில் விழவில்லை. அவளைப் பற்றிய பேச்சு வந்ததுமே சலனமில்லாமல் இருக்கும் நீரில் அலைகள் கிளம்பினாற்போல ஞாபகங்கள் எழும்பின. ஓசையிடா அலைகள்......

'என்ன, நான் சொல்றதைக் கேட்கிறாயா?'

அவன் தேறிக்கொண்டு, 'சொல்லுங்க' என்றான்.

'ஒன்றுமில்லை. என்னால் எந்த முடிவுக்குமே வர முடியவில்லை. எல்லோரும் என்ன சொல்றாங்களோ அதையே நானும்...'

அதற்குள் ப்யூன் வந்து ரவிக்குப் போன் வந்திருப்பதாய் சொன்னான். அவன் போய் போனை வாங்கிக் கொண் டான். எஞ்சிய டைரக்டர்கள் எல்லோரும் திரும்பவும் கூட்டம் கூடுவதற்காக போர்டு ரூமுக்குள் நுழைந்து கொண் டிருந்தார்கள்.

மாதவியிடமிருந்து போன். 'என்னது? ஏதோ மலிவு ரகப் புடவையைக் கொண்டு வந்து கம்பெனியையே மூழ்க டிக்கப் பார்க்கிறீங்களாமில்லே?' என்றாள்.

'உனக்கு யார் சொன்னது அதற்குள்ளே?'

'பூர்ண சந்திரனின் மனைவி.'

பூர்ணசந்திரன், காலையில் மீட்டிங்கில் இந்தத் திட்டத் தைப் பற்றி எதிர்த்துப் பேசியவர். அதற்குள் இது வீடு வரைக்கும் எட்டிவிட்டது போலும்.

'ஏன் பேச்சையே காணோம்?'

'என்னத்தைப் பேசறது?'

'யாருக்குமில்லாத இது உங்களுக்கு என்னத்துக்காம்? சும்மா இருக்கக்கூடாதா?'

'எல்லோரும் சும்மாயிருந்துட்டால் உலகம் இந்த மாதிரி இருக்காது'—மனத்திற்குள் எண்ணிக்கொண்டான்.

'இப்பவே சொல்லிட்டேன். அவங்களோட தகராறு வெச்சுக்காதீங்க. இருப்பதைக் கொண்டு ஏறக் கட்டிக் கணுமே தவிர, புதுப்புது ஐடியாவெல்லாம் நமக்கு வேண் டாம்.'

ரவியும் அதே ஸ்தாயியில், 'நானும் இப்பவே சொல் லிட்டேன். இனி ஒருபோதும் இம்மாதிரி ஆபீசுக்கு போன் பண்ணாதே. அதுமட்டுமில்லை—அந்தப் பூர்ணசந்திரனின் மனைவியிடமும் சொல்லு—கணவன்மார்களின் விவகாரங் களில் மனைவிமார்கள் தலையிட்டு இலவச ஆலோசனை களை வழங்குவது அவ்வளவு நல்லதில்லைன்னு—' மாதவி குறுக்கிட்டு இன்னும் ஏதோ சொல்ல வருவதற்குள்ளேயே போனை வைத்துவிட்டான்.

போனை வைத்துக் கொண்டிருந்த போது கண்ணில் பட்டது, ஆபீஸ் பைல்களுக்கு நடுவில்—தன் நாற்காலிக்கு எதிரே, மேஜையின்மேல் ரோஜா வண்ண உறை! அவ னுக்கு அது பரிச்சயமானதே. அந்த கையெழுத்துக் கூட தெரிந்ததே. இன்றைக்கும் அவனைப் பின் தொடர்ந்து கொண்டே வந்து பைத்தியமடித்துக் கொண்டிருக்கும் கையெழுத்து.

இதயம் வேகமாய் படபடக்க, சட்டென்று அந்தக் கவரைக் கையில் எடுத்துக்கொண்டான். அதை அங்கே யார் கொண்டு வந்து வைத்தார்கள் என்று விசாரிக்க கூட முயற்சிக்கவில்லை அவன். கவரைப் பிரித்துக் கொண் டிருந்த பொழுதே சர்மாவின் வார்த்தைகள் நினைவுக்கு வந்தன.

'எனக்கும் என் மனைவிக்கும் காலையிலேருந்து இதே வாதம்தான்' என்ற வார்த்தைகள்.

அதற்குள் கவரிலிருந்த தாளை அவன் வெளியே உருவினான். அதில் ஐந்தாறு வாக்கியங்கள் இருந்தன. முத்து முத்தான கையெழுத்துக்கள்.

அவள் திரும்பவும் எங்கேயாவது வரச்சொல்லப் போகிறாளோ என்னவோ? முதலில் கொஞ்சம் தயக்கத்தைக் காட்டவேண்டும்...போன்ற ஆலோசனைகளுடனேயே கடிதத்தைப் படிக்கத் தொடங்கிய அவன் அதிலிருந்ததைப் பார்த்து ஆச்சரியமடைந்துவிட்டான். 'ரிஸ்க்' என்று தலைப்பு கொடுக்கப்பட்டிருந்தது.

'ரிஸ்க்.

—சிரிப்பதில் முட்டாள்தனத்தை வெளிப்படுத்தும் 'ரிஸ்க்' உண்டு. அழுவதில் பலவீனத்தை எடுத்துக்காட்டும் 'ரிஸ்க்' உண்டு. கலகலப்பாய் வம்பு பேசுவதில் நம் மனதை வெளிப்படுத்திக் கொள்ளும் 'ரிஸ்க்' இருக்கிறது. காதலிப்பதில், திரும்பவும் காதலிக்கப்படாமலிருக்கும் 'ரிஸ்க்' உள்ளது. வாழ்வதில் சாகும் ரிஸ்க், ஆசையில் நிராசை ரிஸ்க், முயற்சியிலேயே தோல்வி 'ரிஸ்க்' உள்ளது. அதற்காகக் கொஞ்சமேனும் ரிஸ்க் எடுத்துக் கொள்ளாத, எடுத்துக் கொள்ள முடியாத ஆண்மகனால் எதையுமே செய்ய முடியாது. செய்யவும் மாட்டான்கூட. அவனுக்கு வருத்தங்கள் இல்லாமலிருக்கலாம். ஆனால் வெற்றியின் மூலமாய் கிட்டும் சந்தோஷம் கூட இராது.'

சுமார் நாலைந்து முறை அவ்வாக்கியங்களைப் படித்து விட்டான் ரவி. அவன் உதடுகளில் குறுநகை படர்ந்தது. அதை மடித்து பாக்கெட்டில் வைத்துக்கொண்டு, அப்படியே போர்டு அறைக்குள் நுழைந்தான். பாக்கெட்டில் அந்தக் கடிதத்தை வைத்துக் கொண்டிருந்தபோது அதற்கு முன்னால் வைத்திருந்த ராஜினாமா கடிதம் கைக்குத்

தட்டுப்பட்டது. அதை வெளியே எடுத்து, கடைசியாய் இன்னொரு வாக்கியத்தை எழுதினான்.

'...நான் வேறு கம்பெனியில் சேருவதற்கு தயவு செய்து அனுமதி தாருங்கள். ரூல்ஸ் பிரகாரம் எனக்கு இந்த அனுமதி தேவையில்லாத போதிலும், இவ்வளவு நாள் உங்களோடு சேர்ந்து சேவை செய்ததற்கு என் எதிர்கால நிகழ்ச்சிகளை உங்களுக்குத் தெரிவிப்பதை என் கடமை யாய் நினைக்கிறேன்...'

அவன் போர்டு அறைக்குள் நுழையப்போய் கதவிற் கருகிலேயே நின்றுவிட்டான். அப்பொழுதுதான் வராந் தாவிலிருந்து வந்து கொண்டிருந்த இன்னொரு டைரக்டர் தென்பட்டார். சேல்ஸ் மேனேஜர் தன் அறைக்குள் வந்து லட்சத்து ஐம்பதாயிரத்திற்கு புடவை ஆர்டர்கள் வந்திருப் பதாய் சொன்னபோது காபி குடித்துப் புரையேறிய டைரக்டர்தான் அவர்.

'ஏன் இங்கே நின்னுட்டீங்க?' என்று ரவியைக் கேட்டார்.

அவரை தொலைவிலிருந்து பார்த்துவிட்டு, பாக்கெட்டி லிருந்து காகிதத்தை எடுத்துப் படிப்பதுபோல நின்று கொண்டிருந்தான் ரவி. அவர் கேள்வியைக் கேட்டு, அப்பொழுதுதான் அவரைப் பார்த்தாற்போல நிமிர்ந்து 'ஒன்றுமில்லை. டைப்பிஸ்டிற்குத் தரதுக்கு முன்னால் இதில் ஏதாவது தப்பு இருக்கான்னு பார்த்துட்டிருக்கேன்' என்றான்.

'என்ன கடிதம்?'

'படிங்க' என்று ராஜினாமா கடிதத்தை அவரிடம் தந்தான். படித்துக் கொண்டிருந்தபோது அவர் முகம் நிறம் மாறுவதை கவனித்தான்.

படித்து முடித்துவிட்டு அவர் நிமிர்ந்தபோது, 'இப்படி எழுதுவதில் தப்பில்லையே?' என்று கேட்டான் அவரை மதித்து ஆலோசனை கேட்பதுபோல.

'என்னது இது?...இதுக்கு நாங்க செத்தாலும் ஒப்புக்க மாட்டோம்' என்றார் அவர் கலவரமடைந்தவராய்.

'என் பேச்சை கம்பெனி ஒத்துக்காத பட்சத்தில், நான் இனி டைரக்டராய் இந்தக் கம்பெனி விவகாரங்களை நடத்துவது இயலாது. இன்றைக்குத் தேவையானால் கொடுப்போம்னுதான் இதைத் தயாராய் வெச்சுட்டிருக்கேன். அஃப்கோர்ஸ்! இதைத் தரவேண்டிய நிலைமை வராதுன்னு நினைக்கிறேன். ஆனால் என்னவோ—யாரால் என்ன சொல்லிட முடியும்? நான் சொன்ன திட்டம் டைரக்டர்களுக்குப் பிடிக்காத பட்சத்தில் விட்டு விலகுவது தானே நல்லது? நீங்க போங்க. இதை டைப்பிற்குத் தந்துட்டு வரேன்' என்று மேற்கொண்டு அவர் யோசிப்ப தற்குக்கூட அவகாசம் தராமல் அதை எடுத்துக்கொண்டு டைப்பிங் செக்ஷன் வரைக்கும் போனான். ஆனால் அவன் அதை அங்கே யாருக்கும் கொடுக்கவில்லை. கொஞ்ச நேரம் அவ்விடத்திலேயே நின்றான்.

போர்டு அறைக்குள் நுழைந்த டைரக்டர் இந்த விஷயத்தை உள்ளே இருந்த எல்லோருக்கும் சொல்லி விட்டிருப்பார் என்று தெரியும் அவனுக்கு. அதைப்பற்றி விவாதம் நிகழும் என்றும் தெரியும்.

அவனுக்கு வேண்டியது அதுதான்.

அவன் போகப்போவதை மீட்டிங்கின் இறுதியில் ஒரு 'ஆயுதமாய்' அறிவுறுத்தினான். ரவி இந்த விஷயத்தை உண்மையில் பண்ண நினைத்திருக்கவில்லை. ஆனால் எல்லோரும் அறியும்படியாய் செய்தான். பயமுறுத்தல் மூலமாய் எல்லாவற்றையும் ஒரு உதை உதைத்துவிட முடியும்.

தன் பிரசங்கத்திற்கு ராஜினாமா க்ளைமாக்ஸ்—அது ஒரு அஸ்திவாரம் மட்டுந்தான். அந்த விதமாய் டைரக்டர்களை முதலில் மானசீகமாய் தயார்படுத்தி வைத்துவிட்டு, பிறகுதான் சொல்லவேண்டியதை சொல்ல எண்ணியிருந்தான் அவன். அதற்காகவே அவன் இந்த 'டரிக்' கைப் பயன்படுத்தினான். அது சரியாய் நடந்தேறிவிட்டது.

அவன் அவ்வறைக்குள் நுழைந்தபோது, எல்லோரும் அதைப்பற்றிதான் பேசிக்கொண்டிருந்தார்கள் என்பது அவன் உள்ளே நுழைந்ததுமே டக்கென்று நின்றுவிட்ட சம்பாஷணைகளின் மூலமாய் தெரிந்தது. அவன் ஒன்றுமே அறியாதது போல நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான். மீட்டிங் திரும்பவும் தொடங்கியது.

அவன் தன் விவாதங்களைச் சொல்லத் தொடங்கினான். முதலில் சொன்னதேதான். ஆனால் இம்முறை எல்லோருக்கும் முன்னால், சன்னமான குரலில், ஒரு உத்வேக உணர்ச்சியோடு சுமார் கால்மணி நேரம் பேசினான் :

'...நம் கம்பெனி இப்ப நன்றாய்தான் நடந்து வருது. ஆனால் அமோகமாய் நடக்கலை. நன்றாய் நடப்பது இல்லை இங்கே வேண்டியது. எதிரிகளை வீழ்த்துவது கூட வேணுந்தான். இந்தப் புதுத்திட்டம் ஜனங்களிடையே அமோகமாய் படரும் என்று நம்புகிறேன். இதற்குரிய அறிகுறி இப்போதே நமக்குத் தெரியத் தொடங்கி விட்டது கூட. ஒருகால் நாம் இந்தத் திட்டத்தைத் தொடரா விட்டால் நம் எதிரிகள் இதை உடனேயே கையாளத் தொடங்கி விடுவார்கள் என்பது என் ஊகம். என் நண்பர் சொன்னது போல இதன் மூலமாய் நமக்கு வரும் ஆண்டு லாபம் குறையலாம். ஆனால் கம்பெனி என்றால் கேவலம் லாபத்தை எதிர்பார்ப்பது ஒன்று மட்டுமேயில்லை. நம் முதலீடு நாலு மடங்கு அதிகரித்துவிடும் என்பது என் ஊகம். இந்

தத்திட்டம் வெற்றியடையும் பட்சத்தில் இரண்டாண்டுகள் வரையிலும் இந்த எல்லைக்குள் யாருமே நுழைந்துவிடாத விதத்தில் இக்கம்பெனி அவ்வளவு தூரம் வளர்ந்தோங்கி விடும். இதற்காக நாம் 'ரிஸ்க்' எடுத்துக் கொள்வது மிக இன்றியமையாதது. What would life be like - if you never took a risk? You would never - go out of your house- find a job-ask for a raise -' என்று நிறுத்தி விட்டு மெதுவாய் முடித்தான். 'Fall in love.'

அறையில் சன்னமான சிரிப்பொலிகள்.

தொடர்ந்து அந்தப் பிரச்சினை வாக்கெடுப்பிற்கு வைக்கப்பட்டது.

ரவி பரபரப்புடன் கவனித்துக் கொண்டிருந்தான்.

சர்மா தன் காகிதத்தையும் பேனாவையும் கையில் எடுத்துக் கொண்டார்.

# 26

செஞ்சு ராமய்யா அண்ட் கோ. சம்பந்தப்பட்ட நான்கு அங்கத்தினர்கள் தம் போர்டு அறையில் உட்கார்ந்திருந்தார்கள். வெகு நேரமாய் அவர்களிடையே சம்பாஷணையே இல்லை. பேச்சுகூட எதுவுமேயில்லை. தம் எதிரி கம்பெனியின் மீட்டிங் அதே சமயத்தில் நான்கு பர்லாங் தொலைவிலிருந்த அவர்களின் இடத்தில் நடந்து கொண்டிருப்பது பற்றி அவர்களுக்குத் தெரியும். அந்தக் கம்பெனி என்ன தீர்மானத்திற்கு வரப் போகிறதோ என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். டெக்ஸ்டைல்ஸ் மார்க்கெட்டில் ஒரு புயலாய் வந்து எதிர்ப்படப் போகிற அத்தீர்மானத்தின் பிரவாகத்தை எப்படி தாங்கி நிற்பது என்று தான் யோசித்துக் கொண்டிருந்தார்கள்.

இந்த உதையால் ரவி கம்பெனி 'அப்படியோ அல்லது இப்படியோ' என்று ஆகிவிடப் போவதும் அவர்கள் அறிந்ததுதான். 'அப்படி' என்றால் பரவாயில்லை. ஆனால் 'இப்படி' என்று ஆகிவிட்டால் கஷ்டம். கஷ்டமாவது! பிற கம்பெனிகள் எல்லாம் புயலில் அகப்பட்டுக்கொண்ட படகைப் போலாகிவிட வேண்டியதுதான். இதே முறையைப் பிற்பாடு கொண்டு வந்தாலும், முதல் தடவை கொண்டு வந்தவர்களுக்குக் கிடைக்கும் லாபம் இரண்டாவது கொண்டு வந்தவர்களுக்குக் கிட்டாது. மாருதி கார் பரிசுத் திட்டம் பற்றிய யோசனை அவர்களுக்கு வந்தது. பிறகு நிறைய பேர் என்னென்னவோ பரிசுகளை வைத்தார்கள். ஆனால் அவர்களின் திட்டம் வெற்றி பெற்றாற் போல் ஜனங்கள் அவ்வளவாய் சிலாக்கியமாய் பேசவில்லை.

தம் ஆள் ஒருவரை ரவியின் கம்பெனியில் நுழைப்பதற்காகப் பாடுபட்டு டைரக்டர் உருவில் அதை நிறைவேற்றிக் கொண்டான் செஞ்சு ராமய்யா. மேலுக்கு அப்பாவியைப் போலவும் ஏதும் அறியாதவரைப் போலவும் தென்பட்டாலும் செஞ்சு ராமய்யா மிக அழுத்தமான ஆள். வேட்டி, கதர்சட்டை, மேலுக்குத் தூக்கி வாரப்பட்ட கேசம், ஃப்ரேம் இல்லாத மூக்குக் கண்ணாடி, வெற்றிலைப் பாக்கு மெல்லும் வாய்...அவனை சாதாரணமாய் பார்ப்பவர்கள் கோடிக்கணக்கில் வியாபாரம் பண்ணுபவன் என்று நம்ப முடியாது. அக்கண்களுக்குப் பின்னால் என்னதான் இருந்ததோ யாருக்குமே தெரியாது.

இருபத்தைந்து ஆண்டுகளாய் அவன் இந்தத் துணி உலகத்தை ஆண்டு கொண்டிருக்கிறான். திட்டங்களைத் தீட்டுவதில் மன்னன். உபாயங்கள், எதிர் உபாயங்கள், காபிடல் மார்க்கெட் இதெல்லாம் அவனுக்குக் கைவந்த கலைகள். டிசைன் ஃபாஷன்களில் மட்டும் அவன் கொஞ்சம் பின் தங்கியிருந்தான். ரவி சரியாய் அந்த இடத்

தில்தான் அவனை உதைத்தான். அவனுக்குப் பிறவியி லேயே படிந்திருந்த கலை அது. அவன் எம். டி. ஆனதுமே பிற எல்லா பாகங்களிலும் சீக்கிரத்திலேயே அனுபவம் பெற்றுவிட்டான்.

செஞ்சு ராமய்யாவோ என்ன பாடுபட்ட போதிலும் பெண்களின் ஃபேஷன்களைப் பற்றியும், அவர்களின் விருப் பங்கள், டிசைன்கள் பற்றியெல்லாம் புரிந்துகொள்ள முடியவில்லை. 'ரவிக்கிருந்த திறமையில் பாதியாவது என் கம்பெனி டிசைன் பகுதியில் யாருக்கேனும் இருந்திருந்தால் இந்நேரம் என் கம்பெனியை யாராலும் பிடிக்க முடியாத படி உச்சாணிக்கு ஏற்றி வைத்திருப்பேன்' என்று அடிக்கடி அங்கலாய்த்துக் கொள்வான்.

இப்பொழுது ரவி இந்தப் புதுத் திட்டத்தில் இனி புலி யாய் மிளிரப் போகிறான். தினம் ஒரு புது டிசைன், புதுப் புது நிறச் சேர்க்கைகளுடன் வெளிக்கொணரத் தவற மாட்டான். இதன்மூலம் தம் கம்பெனி ஆட்டங்காணப் போவது உறுதி.

இதற்கு முன்பானால் யோசிக்க வேண்டியதுதான்— தயாரிப்பதற்குத் தந்துவிடலாம்—அதை மெல்ல மார்க் கெட்டில் கொண்டுவர வேண்டியது—பெண்கள் கடை களுக்கு வந்து பார்க்க வேண்டியது—ஒருவர் கட்டிக் கொண்டு அது நன்றாயிருந்து விட்டால் எஞ்சியவர் களிடையேயும் அது பரவிவிட வேண்டியது—உற்பத்தி அந்தவிதமாய் பெயர் பெற வேண்டியது—அதைத் தொடர்ந்து இன்னொரு ஃபாஷனை மாற்ற வேண்டும்... இவ்வளவுதான் சடங்குகள்.

ஆனால் இந்தப் புதுத்திட்டத்தில் அவ்வாறு இல்லை. குளித்துக் கொண்டிருக்கும் பொழுதோ பட்டாம்பூச்சியைப் பார்க்கும் போதோ, நீலநிறக் காரிலிருந்து பச்சைப்புடவை கட்டிய பெண் ஒருத்தி இறங்கிக் கொண்டிருப்பதை பார்க் கும்போதோ — ரவிக்கு ஒரு மின்னலைப் போன்று

ஆலோசனை உதிக்கும். மூன்றே நாட்களில் ஒரு பக்கம் கோடி ரூபாய் விலை மதிப்புள்ள மிஷின்கள் மூலம் லட்சக் கணக்கான புடவைகள் தயாராகிக் குவிந்துவிடும். இன்னொரு பக்கம் டி.வி.யில் விதம் விதமான புடவைகளை உடுத்திக் கொண்டு பல பெண்கள் அடுத்த பெண்களின் இதயங்களுக்குள் நுழைந்து கொண்டிருப்பார்கள். ஐந்தே நாட்களில் நூறு ரூபாய் நோட்டுக்கள் அவர்களிடமிருந்து ரவி தேஜாவை நோக்கிப் பிரயாணம் பண்ணிக் கொண்டிருக்கும். ஒரு மாதம் ஓடி மறைவதற்குள் திரும்பவும் இன்னொரு டிசைன்—திரும்பவும் டி.வி.யில் பெண்கள்—இம்முறை மேலும் அழகாய்—ரவி! நீ சினிமா டைரக்டராகியிருந்தால் நம்பர் ஒன் ஆகியிருப்பாய். எழுத்தாளனாயிருந்திருந்தால் ஞானபீடம் ஏறியிருப்பாய். இந்தத் துணி வியாபாரத்தில் புகுந்து எங்களை ஏனய்யா கொல்லுகிறாய்?

செஞ்சு ராமய்யா எரிச்சலோடு மோவாயைத் தடவிக் கொண்டான். இன்னும் அடுத்த கம்பெனியின் தீர்மானம் வெளிவரவில்லை. லஞ்ச் முடிந்தபிறகு திரும்பவும் கூடப் போவதாய் மட்டும் விஷயம் தெரிந்தது. தன் ஆள் (உளவாளி) கொண்டு வந்த தீர்மானத்தால் எஞ்சிய டைரக்டர்கள் எல்லோரும் கூட ஒருமித்ததாய் தெரிந்தது. மிக மகிழ்ச்சிகரமான விஷயம் இது. செஞ்சுராமய்யா கம்பெனியைச் சேர்ந்தவர்கள் எல்லோரும் தம் மகிழ்ச்சியை அடக்கிக் கொண்டு இறுதிச் செய்திக்காகக் காத்திருந்தார்கள்.

சரியாய் ஐந்து நிமிஷங்களுக்குப் பிறகு செய்தி வந்தது. ஜனதா புடவைகள் திட்டத்திற்கு ரவிதேஜா டெக்ஸ்டைல்ஸ் கம்பெனி போர்டு ஆஃப் டைரக்டர்ஸ் அதனை ஒப்புக்கொண்டு ஓட்டுப்போட்டதாயும், ஒரே ஒரு டைரக்டர் மட்டும் அதற்கு எதிர்த்து ஓட்டுப்போட்டதாயும்!

இதுதான் செய்தி.

அதுவரையிலும் பலவிதமாய் ஊகித்துக் கொண்டு மகிழ்ச்சியோடு குதித்துக்கொண்டிருந்த செஞ்சு ராமய்யாவின் டைரக்டர்கள் திடீரென்று உதையுண்டாற்போல மௌனம் வகிக்கலானார்கள்.

செஞ்சு ராமய்யா எழுந்து தன் அறைக்குள் போனான். அப்பொழுதே அவன் மனதில் ஒரு திட்டம் உருவாகி விட்டது. போனதுமே மேனேஜரை அழைத்தான்.

'நம் கைக்குள் எவ்வளவு பேப்பருங்க இருக்கு? எவ்வளவு பேர் நம் பேச்சைக் கேட்பாங்க?' என்று கேட்டான்.

'ரெண்டு இங்கிலீஷ் தினசரி பேப்பர்காரங்க இருக்காங்க. மீதி ரிபோர்ட்டருங்களைக் கூட நன்றாய் தெரியும். தமிழில் ஒரிரு சீஃப் ஏஜெண்டுகளைக் கூடத் தெரியும்.'

'நாளைக்கு சாயந்திரம் எல்லோரையும் தாஜ்மகாலுக்கு டின்னருக்குக் கூப்பிடு. நம்ப கம்பெனி அவங்களுக்கு காக்டெயில் தரப்போவுது...காரணம் கேட்டால் ஏதோ ஒன்றைச் சொல்லு, வெள்ளி விழா—போன்ற ஏதாவது காரணம்.'

காரணம் அதில்லை என்று மேனேஜருக்குத் தெரியும். ஆனால் கேட்கும் தைரியமில்லாமல் 'சரி சார்' என்று அங்கிருந்து போய் விட்டான்.

செஞ்சு ராமய்யா அங்கிருந்து காரில் கிளம்பினான். இந்த இரண்டாவது விவகாரத்தை மட்டும் தானே சுயமாய் பண்ணவேண்டும். மிக ரகசியமாய் பண்ண வேண்டும். அவனுக்கு மிக வேண்டிய ஆள் ஒருத்தன் அந்த ஆபீசில் இருந்தான். அவனைப் பிடித்துக் கொண்டு நாட்டின் மூலை முடுக்குகளிலெல்லாம் இந்தக் காரியத்தைச் செய்யச் சொல்ல வேண்டும். லட்சம் ரூபாய் செலவானாலும் பரவாயில்லை. ஆனால் இதற்குப் பின்னால் செஞ்சு ராமய்யா கம்பெனி இருப்பது மட்டும் தெரியக்கூடாது. இந்த பிளான் பலித்துவிட்டால், கோடிக்

கணக்கான செலவில் ரவிதேஜா கொண்டு வரப்போகும் திட்டம் ஆதியிலேயே மண்ணோடு மண்ணாகி விடும்.

செஞ்சு ராமய்யா போய்க் கொண்டிருந்தது போஸ்ட் மாஸ்டர் ஜெனரல் ஆபீசுக்கு!

செஞ்சு ராமய்யா சந்தித்தது அந்த ஆபீசிலிருந்த பெரிய அதிகாரியை அல்ல. இந்த மாதிரி காரியங்களுக்குப் பெரிய அதிகாரிகள் பலனில்லை. கீழே இருப்பவர்களே அமோக மாய் வேலை பண்ணுவார்கள்.

இருவருக்குமிடையே ரகசிய சர்ச்சைகள் அரைமணி நேரம் நடந்தன. இருபத்தைந்தாயிரம் ரூபாய் கை மாறிற்று.

ஒரு போஸ்ட் ஆபீசிலிருந்து பெருத்த அளவில் அதிக விலையுயர்ந்த சாமான் ஏதேனும் அனுப்ப வேண்டியிருந் தால் அந்த ஆபீசு சம்பந்தப்பட்ட போஸ்ட் மாஸ்டர் அந்தக் கஸ்டமருக்காக தனியாய் ஒரு கிளார்க்கை நியமிப்பார். இப் பொழுது ரவிதேஜா கம்பெனிக்கு அந்த விதமாய் சுமார் நூறு கிளார்க்குகளை அந்த வேலைக்காக நியமிக்க வேண்டி யிருக்கும். ஆனால் இது அரசாங்கத்திற்கு நல்ல லாபகர மானதால் இதில் தொந்தரவு எதுவுமில்லை.

ரவி முதல் விடுப்பாய் சுமார் பத்தாயிரம் புடவைகளை அனுப்ப உத்தேசித்தான். ஆனால் அது சாம்பிள் மட்டுமே. அவனுக்கு சில யோசனைகள் இருந்தன. லட்சக் கணக்கான தொகைக்கு அனுப்பும் பொழுது தபால்மூலம் அதற்காக இவ்வளவு செலவழிப்பது அனாவசியம். குறுகிய காலத் திட்டத்தின் கீழ் நூறுபேர் வேலையில்லாதவர்களை சொந்தப் பொறுப்பின் மீது நியமித்துக் கொள்ளலாம். நாட்டைப் பல பிரிவுகளாக்கி, இவ்வாறு ஒவ்வொரு பாகத் திற்கும் சில இளைஞர்களை நியமித்தால் மேலும் துரித மாய் அனுப்பலாம். இதற்கு 'கோட்' நம்பர் வாடிக்கை யாளர்களின் விலாசம் இவ்விரண்டையும் அனுப்பினால்

போதுமானது. அவர்களே சுயமாய் புடவைகளை வீட்டிற்குக்கொண்டு போய் கொடுப்பார்கள். அவர்களுக்கு ஆகும் செலவு புடவை ஒன்றிற்குப் பத்து பைசாவிற்கு மேலிராது.

இவ்வளவு பேருக்கு வேலை தருவதற்கு இது கண்டிப்பாய் அரசாங்கத்தைக் கவர்ந்து தீரும். இதன் திறப்பு விழாவை ஏதாவது மந்திரியைக் கொண்டு திறக்க செய்து விட்டால், எல்லா பேப்பர்களும், ரேடியோவும், டி.வி.யும் இதைப் பெரியதாய் போடும். பத்து லட்ச ரூபாய் மதிப்புள்ள வியாபார அறிக்கை, விளம்பரச் செலவு எதுவுமில்லாமல் ரவி தேஜா டெக்ஸ்டைல்ஸுக்கு பிரசாரம் கிடைத்துவிடும். பெரிய பெரிய கம்பெனிகள் பிரபலமானவர்களை ஏன் தஞ்சமடைகின்றன என்பதுபற்றி ரவிக்கு நன்றாய் தெரியும். ஆனால் தன் மனதிலிருந்த விஷயங்களை அவன் யாரிடமும் சொல்லவில்லை. சமயம் வரும் போது சொல்லலாம் என்றிருந்தான். போர்டுக்கு மாத்திரம் மறைமுகமாய் புரியும்படி பத்து வரிகள் எழுதி சேர்த்து வைத்திருந்தான்.

புரிந்துகொள்ளக் கூடியவர்களுக்கு இதிலும் வியாபார லட்சணங்கள் தென்படும். 'மற்றவர்களின் சம்மதத்திற்காக நீ ஒரு தீர்மானத்தைக் கொண்டுவர வேண்டுமானால், அதில் சிறிய ஓட்டை இருப்பதாய் உன் மனதின் ஒரு மூலையில் கொஞ்சமாவது சந்தேகம் இருக்குமானால், அதே தீர்மானத்தில் மேலும் இரண்டு மூன்று ஓட்டைகளைச் சேர்த்து, எல்லோர் பார்வையும் அதிலேயே லயித்து நேரமெல்லாம் அதைப்பற்றி வாதாடவே சரியாயிருக்கும். அந்த ஓட்டைகளை நீக்குவதன் மூலம் எஞ்சியவர்களுக்கு நீ இறங்கி வந்து விட்டாற்போலத் தோன்றும். நீ பண்ணத் தீர்மானித்த காரியமும், அதன்மூலம் நிறைவேறிவிடும்—' என்ற குறிக்கோளின்படி நடந்து வந்தான் அவன்.

அவன் யோசனை பலித்தது. டைரக்டர்கள் எல்லோரும் இந்த திட்டத்தைப் பற்றியே ஆலோசித்தார்களே

யன்றி, இவ்வளவு லட்சக்கணக்கான புடவைகளைத் தபால் மூலம் எப்படி அனுப்புவது என்ற விஷயத்தைப் வாதாட வில்லை. டீலர்களின் வியாபாரத்தைக் குறைத்துக்கொண்டு புதிதாய் கமிஷன் ஏஜெண்டுகளை நியமித்துக் கொள்வது பற்றி விவாதத்துக்கு வந்திருந்தால் எல்லோரும் ஏகமனதாய் அதனை மறுத்திருப்பார்கள். சுமார் பத்து லட்சம் தயாரான பிறகு தன் யோசனைகளை மெதுவாய் போர்டிற்குக் கொண்டு வரலாம் என்றிருந்தான்.

ஆனால் அதற்கும் முன்பாகவே செஞ்சுராமய்யா தன் திட்டத்தைக் கவிழ்க்க முயல்வான் என்று எதிர்பார்த்திருக்கவில்லை அவன். அதிர்ஷ்டவசமாய் முன்கூட்டியே வெளிப்பட்டு விட்டது அது.

# 27

மறுநாள் அவன் ஆபீசில் இருந்தபோது ஒரு ஆள் அவனைச் சந்திக்க வந்தான்.

'யாரது?' கேட்டான் ரவி.

'சொல்லமாட்டேங்கிறாரு அவரு. உங்களோடதான் பேசணுமாம்.'

'சரி வரச்சொல்.'

ஒரு நிமிஷங் கழித்து அவன் உள்ளே வந்தான். காலருக்கருகில் சட்டை கொஞ்சம் கிழிந்திருந்தது. தாடி மண்டிக் கிடந்தது.

'என்ன வேணும்?'

அவன் தடுமாற்றமடைந்து, 'ஒரு ஐந்து நிமிஷம் உங்களோடு பேசணும்' என்றான்.

ரவி முகம் சுளித்து, 'என்ன விஷயம்?' என்றான்,

'ரொம்ப முக்கியமான விஷயம். நான் உட்கார்ந்துக் கலாமா?'

ரவி தலையாட்டினான்.

அந்த ஆள் உட்கார்ந்துகொண்டு, 'நேற்று செஞ்சு ராமய்யா எங்களிடம் வந்தார்' என்றான். செஞ்சு ராமய்யாவின் பெயரைக் கேட்டதுமே ரவி நிமிர்ந்து உட்கார்ந்தான். 'உங்களிடம் என்றால் யார்?'

'சொல்லமாட்டேன்.'

ரவி ஆச்சரியமடைந்தவனாய், 'சொல்ல மாட்டீங்களா? பின்னே எதுக்கு என்னிடம் வந்தீங்களாம்?' என்றான்.

'எங்க ஆபீசில் ஒருத்தருக்கு இருபத்தைந்தாயிரம் லஞ்சம் கொடுத்தாரு, நாங்க எல்லோருமாய் சேர்ந்து ஒருவேலை பண்றத்துக்கு.'

'என்ன வேலை?'

'சொல்லமாட்டேன்.'

ரவிக்குக் கோபம் வந்தது. ஆனால் விஷயம் ஆர்வத்தைத் தூண்டும் விதத்தில் இருந்ததாலும் அதிலேயும் தன் விரோதியின் பெயர் அடிப்பட்டதாலும் சுதாரித்துக் கொண்டு, 'சரி, உனக்கு என்ன வேணுங்கறதை முதல்ல சொல்லு!' என்றான்.

'இதற்கு முன்னால் நாங்க இந்த மாதிரி காரியங்களைச் சின்ன அளவில் செய்வது வழக்கம். ஆனால் இருபத்தைந்தாயிரத்தைக் கண்ணால் கண்ட போது எங்களுக்கெல்லாம் தலை சுற்றத் தொடங்கிருச்சி. இதுக்கு முன்னாடி எங்களுக்கெல்லாம் சமமாய் பங்கிட்டுக்கிட்டிருந்த எங்க ஆளு இப்போ இருபதாயிரத்தைத் தான் வெச்சுக்கிட்டு மீதியை மாத்திரமே எங்களுக்குத் தந்தான்.'

'என்னதான் விஷயம்? செஞ்சு ராமய்யா உங்களுக்கு எதுக்குப் பணம் தந்தார்? நீங்க பங்கு போட்டுக் கொள்வதாவது? இதுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்?'

'அவரு திட்டம் நினைத்தாற்போல நடந்துட்டால் உங்களுக்கு லட்சக் கணக்கில நஷ்டம் வரும்.'

ரவி எதிரே உட்கார்ந்திருந்தவனை உற்றுப்பார்த்தான். ஏழ்மை அவன் முகத்தில் தீனத்தையும், ஒரு வித துணிச்சலையும் கூட அள்ளி வீசியிருந்தது. ஆனால் புத்தி சாதுரியம் அவ்வளவாய் தெரியவில்லை.

'எனக்குப் புரிஞ்சிருச்சி, சரி, சொல்லு, உனக்கென்ன வேணும்?'

'இருபத்தைந்தாயிரம்'

'மைகாட்! அவ்வளவு பணமா?'

'நான் அந்த விஷயத்தைச் சொல்லா விட்டால் நீங்கள் அபரிமிதமாய் நஷ்டமாவீங்க.'

'கம்பெனி சார்பில் அவ்வளவு பணத்தைத் தர எனக்கு உரிமை இல்லையே?'

'கடைசியாய் கேட்கறேன், இருபதாயிரம் கொடுங்க.'

ரவி தலையாட்டிவிட்டு, 'அவ்வளவு கூட தரமுடியாது. விஷயம் என்னன்னு சொன்னால் எங்க ஆளுங்களுக்கு அதன் மதிப்பை நயமாய் எடுத்துச் சொல்லி தரச் சொல்லுவேன். விஷயமே தெரியாமல் அவ்வளவு பணத்தைத் தந்தால் கடைசியில் நீ சொன்னது எங்களுக்கு எந்தவிதத்திலுமே லாபகரமாய் இல்லாவிட்டால் நான் பேச்சுக்கேட்க வேண்டியிருக்கும்' என்றான்.

'நான் அதைச் சொல்லிட்ட பிறகு நீங்கள் பணம் தராவிட்டால்?'

'இந்த மாதிரி விஷயங்கள்ளாம் பரஸ்பர நம்பிக்கையின் மீதுதான் நடந்தாகணும்னு உனக்கு நன்றாய் தெரிந்திருக்கணுமே...' என்று சிரித்துவிட்டு, 'இப்ப நீ சொல்லாவிட்டால் போலீசைக் கூப்பிட்டேன்னு வை. அப்ப நிஜ விஷயம் தெரியாமலா போகும்?'

'நீங்க போலீசைக் கூப்பிட்டால் வெளியே எல்லோருக்கும் இந்த விஷயம் தெரிந்து போயிடும். உங்க ஆபீசிலேயே செஞ்சுராமய்யா ஆளுங்க இருக்காங்க. என்னைப் போலீசுங்க பிடிச்சுட்டுப் போற விஷயம் அவங்களுக்குத் தெரிஞ்சால் அவங்க இதை விட்டுட்டு வேறொன்றைப் பிடிச்சுக்குவாங்க. புதியதைக் கண்டுபிடிப்பதற்கு பதிலாய் இருக்கிற விஷயத்தைத் தெரிஞ்சுக்கிறது உங்களுக்கு நல்லதில்லையா?'

'நீ துப்பறியும் நாவல்களை நன்றாய் படிப்பவனாய் தெரிகிறது.'

'எனக்குப் பணம் வேணும். ரொம்ப முக்கியம்.'

'எனக்கு நாளைவரைக்கும் அவகாசம் தா. அவ்வளவு பணத்தைக் கம்பெனிக்குச் சொல்லாமல் தரதுன்னால் கஷ்டம். கொஞ்சம் யோசிக்க டயம் கொடு' என்றான் ரவி.

அவன் எழுந்திருந்தான்.

'சரி, நாளைக்கு வரேன். ஊஹூம், நான் வரமாட்டேன். நாளைக்கு நீங்க ஏதாவது யோசிச்சு வெச்சுட்டு என்னைக் கைது பண்ண ஏற்பாடு பண்ணுவீங்க. நாளைக்குப் போன் பண்றேன். பணத்தை எப்படிக் கொடுத்தனுப்பணும்னு கூட சொல்றேன்' என்று கதவு வரைக்கும் போனவன், நின்று, 'இதெல்லாம் முடிய ஒரு வாரமாகலாமோ என்னவோ, இப்போவே பணத்தைக் கொடுத்துடக்கூடாதா? விஷயத்தைச் சொல்லிடறேன்'' என்றான் ஆசையாய்.

'நாளைக்குப் போன் பண்ணு' என்றான் ரவி.

அவன் போனதுமே, தானும் புறப்பட்டான். பதினைந்து நிமிஷத்தில் திரும்பி வருவதாய் செக்ரட்டரியிடம் சொல்லிவிட்டு, கீழே வந்தான். அப்பொழுதுதான் அந்த ஆள் தெருவைக் கடந்து நகர பஸ்ஸில் ஏறிக் கொண்டிருந்தான். ரவி தன் காரில் அவனைத் தொடர்ந்து கொண்டிருந்தான்.

அவனுக்கு இந்த விவகாரங்களிலெல்லாம் அதிகமாய் அனுபவமே இல்லை என்பதை அவன் நடந்து கொண்ட விதமே நன்கு காட்டிற்று. ஒரு முறைகூட பின்னால் திரும்பிப் பார்க்கவேயில்லை. பெரிய மார்க்கெட்டிற்கருகில் இறங்கி, கொஞ்ச தூரம் நடந்து போய் ஒரு சந்திற்குள் நுழைந்தான். ரவி தன் காரை ஒரு பக்கத்தில் நிறுத்தி விட்டுத் தானும் இறங்கி அந்தப் பக்கமாய் நடந்தான். மிகக் குறுகிய சந்து அது. தாழ்ந்து இருந்த ஒரு வீட்டிற்குள் அவன் நுழைந்ததைக் கவனித்தான் ரவி. அதுதான் அவன் வீடாயிருக்க வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டு, திரும்பப் போனபோது, அந்த ஆள் திரும்பவும் வெளியே வந்ததைப் பார்த்துவிட்டு மறைந்து ஒதுங்கி நின்றான். நேரம் பத்தரை அடிக்கவிருந்தது. அவன் கையிலிருந்த டிபன் பாக்ஸைக்கொண்டு அவன் ஆபீசுக்குப் போய்க் கொண்டிருக்கிறான் என்பது புரிந்தது.

ரவி அவனைப் பின் தொடர்ந்து போகும் முயற்சி ஏதும் பண்ணாமல், அவன் சந்து முனையில் திரும்பும் வரையிலும் காத்திருந்து, அவன் ஆபீசிற்குப் போய்விட்டான் என்ற நம்பிக்கை ஏற்பட்ட பிறகு மெதுவாய் அந்த வீட்டிற்குள் நுழைந்தான். உள்ளே ஒரே அறை. அந்த அறையில் ஒரு பெண் புடவைக்கு ஃபால்ஸ் தைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். அவனைப் பார்த்துவிட்டு நிமிர்ந்து, 'யாரு வேணுங்க?' என்றாள்.

'அப்பா இருக்காரா?' என்று கேட்டான்,

'இல்லீங்க, இப்பத்தான் ஆபீசுக்குப் போனாரு. ஒரு கால் உங்களை வழியில்கூட பார்த்திருக்கலாமே?'

அந்தப் பெண்ணைப் பார்த்த யாருமே ஒரு பிளாக் மெயிலரின் பெண் என்று நம்பமாட்டார்கள். படித்தவளைப் போலிருந்தாள். ஏதோ ஒரு இனம் புரியாத அடக்கம் அவளிடம் குடிகொண்டிருந்தது. ரவி ஃபுல் சூட்டில் இருந்தான். பணத்தால் வரும் கம்பீரத்தைக் காட்டிலும் அதிகப்படியான மிடுக்கு அவனிடம் இருந்தது. அப்படிப்பட்ட ஒருவன் தன் தந்தையைத் தேடிக்கொண்டு தம் இருப்பிடத்திற்கு வருவானேன் என்று புரியாமல் அவள் கலவரமடைந்தாள். உட்காரச் சொல்வதற்கு சரியான நாற்காலி கூட இல்லை அவ்வீட்டில். அதனால் சங்கடத்துடன் நின்று கொண்டிருந்தாள்.

தந்தை இல்லை என்று அவள் சொன்னதுமே வெளியே போகத் திரும்பிய அவன், 'அவரை இப்போ எங்கே பார்க்க முடியும்? ஆபீசு எங்கே?' என்று கேட்டான் ஏதும் அறியாதவனைப் போல.

'ஜெனரல் போஸ்ட் ஆபீசு.'

ரவி அதிர்ந்து விட்டான்...ஜெ...ன...ர...ல் போஸ்ட் ஆபீசு!

அங்கே வேலை பண்ணும் ஒரு ஆள் தனக்கு ஏதோ ரகசியத்தைச் சொல்ல முயற்சித்தான் என்றால், செஞ்சு ராமய்யா அங்கே ஏதோ தில்லு முல்லு பண்ணியிருக்க வேண்டும். ரவியின் மனம் தீங்கை எடை போட்டது. இது தான் நினைத்தாற்போல சிறிய விஷயம் ஒன்றுமில்லை என்று தோன்றிற்று.

அவன் யோசித்ததைப் பார்த்து விட்டு அப்பெண், 'அப்பாவிடம் எதாவது சொல்லணுங்களா?' என்று கேட்டாள்.

'வேண்டாம். நான் போய் சந்திச்சுக்கறேன். கொஞ்சம், பேரு, செக்ஷன் ரெண்டையும் எழுதித் தறீங்களா?' என்றான்.

அவள் ஏதோ சொல்ல வந்தவள், உடனே மனதை மாற்றிக்கொண்டு, உள்ளே போய் தந்தையின் பெயரையும் செக்ஷனையும் ஒரு பேப்பரில் எழுதிக்கொண்டு வந்து கொடுத்தாள். கையெழுத்து முத்து முத்தாயிருந்தது. பெயரைப் பார்த்தான். ராகவன் என்றிருந்தது.

'கொஞ்சம் காபி குடிச்சுட்டுப் போங்க' என்றாள் அவள் தயக்கத்தோடு.

'தாங்க்ஸ். வேண்டாம், போயிட்டு வரேன்' என்று அவன் வாசலைத் தாண்டிப் போனவன் திரும்பி, 'நீங்கள் ஃபால்சைத் தலைகீழாய் தைக்கிறீங்க, பார்த்துக்குங்க' என்று சொல்லிவிட்டு அங்கிருந்து திரும்பினான்.

அப்பெண் வியப்படைந்துவிட்டாள், ஓடிப்போய் புடவையைப் பார்த்துக்கொண்டாள். அவன் சொன்னது நிஜந்தான். அவ்வளவு தொலைவிலிருந்து அவனுக்கு அது எப்படித்தான் தெரிந்ததோ என்றெண்ணி ஆச்சரியமடைந்தாள். அவள் திரும்பி வாசலுக்கு வருவதற்குள் அவன் போய்விட்டிருந்தான்.

ரவி அலுவலகம் வருவதற்குள் பதினொன்று ஆகிவிட்டது. இனி என்ன பண்ணலாம் என்று யோசனையில் ஆழ்ந்தான். அவன் ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருந்ததைப் பார்த்துவிட்டு, 'என்ன யோசிச்சுக்கிட்டிருக்கீங்க?' என்று கேட்டாள் ப்ரியம்வதா. அவன் நடந்ததையெல்லாம் சொன்னான்.

'போலீசில் ரிபோர்ட் தந்தால் அவங்களே எல்லாத்தையும் பார்த்துப்பாங்க இல்லையா?'

'முதல்ல அப்படித்தான் நினைத்தேன். அவன் நம்ப ஆபீசுக்கு வந்தப்பவே அரெஸ்ட் பண்ணியிருக்கலாம்,

ஆனால் இந்த விஷயம் ராமய்யாவுக்குத் தெரிந்துவிட்டால் உஷாராயிடுவார். அதனால்தான் அவன் எங்கே இருக்கான்னு தெரிஞ்சுக்க நானே முயற்சி பண்ணினேன். இப்போ அவன் அட்ரஸ் தெரிந்துவிட்டது. ரெண்டாம் பேருக்குத் தெரியாமல் அவனைப் போலீசில் பிடிச்சுக் கொடுத்துடலாம். அவங்களே நிஜத்தைக் கக்க வெச்சுடுவாங்க. ஆனால் அந்த வீட்டைப் பார்க்காத வரைக்கும் நானும் அப்படித்தான் எண்ணிட்டிருந்தேன். ஆனால் இப்ப ஏனோ அந்த மாதிரி செய்யத் தோணலை' என்றான்.

தொடர்ந்து, 'ப்ரியம்வதா, அவன் சுபாவத்திலேயே ரௌடியோ அல்லது பிளாக் மெயிலரோ இல்லை. ஒரு வயதான குமாஸ்தா. கொஞ்ச நாளில் ரிடையராகிடப் போறவன். மயிற்தோகை மேலே பிரம்மாஸ்திரத்தை விட்டாற்போல ஒருவாட்டி நாம்ப ரிபோர்ட் கொடுத்துட்டால் அவனுடைய அரெஸ்ட்-சஸ்பென்ஷன் எல்லாம் சேர்ந்து வாழ்க்கையே நரகமாயிடும். அதைப் பற்றித்தான் யோசிக்கிறேன்.'

'நாம்ப அவனை பயமுறுத்தி ரகசியத்தை வரவழைக்கணும். அவ்வளவுதானே?'

'அவ்வளவுதான்.'

'எனக்கு ஒரு சின்ன யோசனை தோணுது.'

'என்ன?'

'எங்க கஸின் ஒருத்தர் இருக்கார். போலீஸ் இன்ஸ்பெக்டர். அண்ணன் முறை உறவாகணும். அவர் மூலமாய் அவனை பயமுறுத்தி ரகசியத்தைக் கக்கவைச்சுடலாம்.'

ரவி ஒரு வினாடி யோசித்துவிட்டு, 'இந்த யோசனை நன்றாக இருக்கு. ஆனால் இது எவ்வளவு சீக்கிரத்தில் நடக்குதோ அவ்வளவு நல்லது' என்றான்.

'இப்போதே ஒரு மணி நேரத்தில் வரச்சொல்றேன்' என்று அவள் திரும்பிப் போனாள். அரை மணி கழித்து இண்டர்காம் ஒலித்தது. இன்ஸ்பெக்டர் வந்திருக்கிறார் என்றும் கீழே காத்திருக்கிறார் என்றும் அவள் சொல்லவே அவன் கீழே போனான்

'இவர் பாஸ்கர், எஸ்.ஐ.' என்று ரவிக்கு அறிமுகம் செய்து வைத்தாள்.

'நான் மேலே வந்தால் அனாவசியமாய் எல்லோர் பார்வையும் என்மேல் படும்னுதான் வரலை. ப்ரியம்வதா போன் செய்து அவசரமாய் வரச் சொன்னாள். என்ன விஷயம்?' என்று கேட்டான் பாஸ்கர்.

ரவிக்கு அவன் சொன்னதில் உண்மை இருந்ததாகப் பட்டது. இன்ஸ்பெக்டர் தன்னிடம் வந்தால் எல்லோ ருக்கும் என்ன விஷயமோ என்ற ஆர்வம் எழும்பும். ராமய்யாவின் ஆட்கள் தம் ஆபீசிலேயே இருக்கிறார்கள்.

'வாங்க, போயிட்டே பேசிக்கலாம்' என்றான். மூவரும் காரில் ஏறி உட்கார்ந்ததும், ரவி நடந்ததை சொன்னான். சொல்லிவிட்டு, 'போலீஸ் ரிபோர்ட்டில் வராமல் நிஜ விஷயத்தை வரவழைக்கணும்' என்றான்.

'அதற்கென்ன வந்தது? அவன் ப்ரொபஷனல் இல்லா விட்டால் ரெண்டே நிமிஷத்தில் பயந்துபோய் எல்லாவற் றையும் ஒப்பிச்சுடுவான். அதையெல்லாம் என்னிடம் விடுங்க' என்றான்.

கார் போஸ்ட் ஆபீசிற்கு முன்னால் வந்து நின்றது. பாஸ்கர், 'என்ன பண்ணலாம்?' என்றாற்போல் ரவியை எறிட்டுப் பார்த்துவிட்டு, 'நீங்க முன்னாடியே சொல்லி யிருந்தால் சாதாரண டிரஸ்ஸில் வந்திருப்பேன்' என்றான்.

'அப்படி வந்திருந்தால் சொல்லியே இருக்க மாட் டேன்' என்றான்.

'இப்போ இந்த டிரஸ்ஸோடு நான் உள்ளே போனே னானால் திரும்பவும் இதே பிரச்சனை வரும். அங்கே யிருந்து இந்தச் செய்தி அணு அணுவாய்ப் பரவிவிடும்' என் றான் பாஸ்கர்.

'என்னைப் பார்த்தால் இன்னும் பயந்துடுவான்' என்றான் ரவி.

'நான் போய் அவனை வெளியில் கூட்டிட்டு வரவா?' என்றாள் ப்ரியம்வதா.

'நீயா?'

'ஆமாம். ஏதாவது சாக்கில் கூட்டிட்டு வரேன். வெளி யில் உங்களைப் பார்த்தாலும் எந்த ஆபத்தும் வராது. பாஸ்கர் எப்படியும் யூனிஃபாரத்தில் இருப்பதால் ஜனங்கள் கூட ஒண்ணும் நினைச்சுக்க மாட்டாங்க. அவனை கார்ல ஏத்திக்கிட்டு நாம அழைச்சுட்டுப் போயிடலாம்.'

எஞ்சிய இருவருக்கும்கூட இந்த யோசனை பரவா யில்லை என்று தோன்றிற்று.

ப்ரியம்வதா உள்ளே போய் ராகவனைத் தேடிப் பிடித்து நெருங்கினாள்.

'நமஸ்காரம்.'

வேலையில் ஆழ்ந்திருந்த அவன் நிமிர்ந்து பார்த்து விட்டு, ''யார் வேணும்?'' என்று கேட்டான்.

'உங்க மகளும் நானும் சிநேகிதிகள்'—ப்ரியம்வதா வினயமாய் தொடர்ந்தாள். 'அவள் போன் பண்ணி முடிந்தால் இன்றைக்கு ஒரு இருநூறு ரூபாய் தரச்சொன் னாள். வீட்டுவரைக்கும் போவதென்றால் ரொம்ப தூர மில்லையா? உங்கப்பாவிடம் கொடுத்துடறேன்'னு சொன் னேன், சரியென்றாள். அப்ப அதை உங்களிடம் தரட்டுமா?' என்று பர்சைத் திறந்தாள்.

'என் பெண் கேட்டாளா?'—என்றான் அவன். அவன் பேச்சை காதில் போட்டுக் கொள்ளாமல் ப்ரியம்வதா மள மளவென்று—

'அடடே! பர்சை வெளியில் காரிலேயே மறந்துபோய் விட்டுட்டேன் போலிருக்கு. நீங்க தப்பாய் எண்ணிக்கா விட்டால் வரீங்களா—கொடுத்துட்டுப் போறேன். எனக்கு ரொம்ப அவசர வேலை இருக்கு' என்று வெளியே நடந்தாள்.

அவன் அவளைத் தொடர்ந்து கார்வரைக்கும் வந்தான். கார் அருகில் வந்ததுமே, ரவியும் இன்ஸ்பெக்டரும் இரண்டு பக்கத்திலிருந்தும் காரின் கதவைத் திறந்து கொண்டு இறங்கினார்கள். ராகவன் அவர்களைப் பார்த்து விட்டு, தூக்கிவாரிப் போட திரும்பிப்போக முனைந்தான். பாஸ்கரின் கை அவன் கழுத்தில் பட்டது. பலமாய் காருக்குள் பிடித்துத் தள்ளினான். பின்சீட்டில் மூவரும் உட்கார்ந்ததுமே ரவி காரைக் கிளப்பினான்.

எல்லாம் இமைக்கும் நேரத்தில் நடந்தேறிவிட்டது.

'என்ன இது? எனக்கொண்ணும் தெரியாது. என்னை விட்டுடுங்க' என்று திணறிக் கொண்டிருந்தான் அவன். ரவி மெதுவாய் காரை ஓட்டிக்கொண்டே, 'எங்கே ஓட்டச் சொல்றீங்க இன்ஸ்பெக்டர்?' என்று கேட்டான்.

'எங்க போலீஸ் ஸ்டேஷனுக்கு.'

'வேண்டாம். என்னை லாக் அப்பில் மட்டும் போட்டுடாதீங்க. என் உத்யோகம் போயிடும். பிள்ளைக் குட்டிக்காரன்.'

'ப்ளாக்மெயில் பண்றப்போ அது ஞாபகத்துக்கு வரலையா?' இன்ஸ்பெக்டர் உறுமினார்.

அவன் பதில் பேசவில்லை.

'வேணும்னால் நான் ஒரு சான்சு கொடுக்கச் சொல்றேன். என்னதான் விஷயம்னு விவரமாய் சொல்லிடு. யார் யார் சம்பந்தப்பட்டிருக்காங்க? ஒன்றையும் ஒளிக்காமல் சொல்லிடு. நீ சொன்னதெல்லாம் உண்மையாயிருந்தால் நான் வாபஸ் வாங்கிக்கறேன்' என்றான் ரவி.

'அவங்க என்னைக் கொன்னுடுவாங்க.'

'சொல்லாவிட்டால் நாங்க கொன்னுடுவோம்'—இன்ஸ்பெக்டர் அதட்டினார். ரவி இன்ஸ்பெக்டரைத் தடுத்துவிட்டு, அந்த ஆளைப் பார்த்து, 'நீ இந்த விஷயத்தை எனக்குச் சொன்னாய்னு மத்தவங்களுக்குச் தெரியவேண்டிய அவசியம் இல்லை. வேண்டுமானால் இவரைக்கூட இறக்கி விட்டுடறேன். எனக்கு மட்டும் சொல்லு, போதும்' என்றான்.

அவன் பதில் பேசாமல் இருந்தான்.

'உங்களை போலீஸ் ஸ்டேஷனில் இறக்கிவிட்டுடட்டுமா?'

'வேண்டாம், இங்கேயே இறங்கிக்கிறேன்.'

ப்ரியம்வதா, 'நானும் இறங்கிக்கறேன். இங்கேயிருந்து ஆபீசு கிட்டத்தில்தானே?' என்றாள். அவன் தெரிந்து கொள்ளப் போகும் விஷயத்தைக் கேட்க தமக்கு இஷ்டமில்லை என்பதுபோல அவ்விருவரும் ரவி காரை நிறுத்தியதுமே இறங்கிவிட்டார்கள்.

ரவி அவனை தன் வீட்டிற்குக் கூட்டிப்போனான். மாடியறைக்குக் கூட்டிச் சென்று, கதவைச் சாத்தி விட்டு 'இப்பச் சொல்லு' என்றான்.

'நான் மனது வைத்தால் ஒரு நொடியில் இன்ஸ்பெக்டருக்கு போன்பண்ணி வரவழைக்க முடியும். உன்னையும் உன் குடும்பத்தையும் பாழடிக்கக் கூடாதுன்னுதான் இங்கே

கூட்டிட்டு வந்தேன். இங்கே வந்து கூட நீ பிடிவாதமாயிருந்தால் என்னால் இனி எதுவும் பண்ண முடியாது.'

அவன் மெல்ல சொன்னான்: 'நீங்க போஸ்ட் மூலம் அனுப்பும் புடவைகளைப் பாக்கெட்டிலிருந்து எடுத்துட்டு அதற்கு பதில் பழைய துணிகளை வைக்கணும்.'

ரவிக்கு ஷாக் அடித்தது. 'எப்படி முடியும் இது? எவ்வளவு புடவைங்களை அந்த மாதிரி எடுக்க முடியும்? உங்க மேலே உயர் அதிகாரியின் கண்காணிப்பு இருக்காதா?'

அவன் தலைகுனிந்தபடி பதில் சொன்னான் : 'இன்ஷ்யூர் பண்ணிய பாக்கெட்டிலிருந்துகூட சாமான்களைத் திருடிட்டு, குப்பைக் கூளங்களை அதில் வைத்து திரும்பவும் சாதாரணமாய் அவைகளை அனுப்பி வைப்பது போஸ்ட் ஆபீசில் ஒன்றும் புதிதில்லை. ரிஜிஸ்தர் போஸ்டில் இன்னும் சுலபம்.'

'ஆனால் எவ்வளவு புடவைங்களைத்தான் அந்த மாதிரி எடுக்க முடியும்? என்றாவது இது தெரிந்து விடாதா?'

'எவ்வளவோ இல்லை. நாங்க எடுக்க வேண்டியதுகூட ஒரு பத்துப் பதினைந்து புடவைங்களை மாத்திரந்தான். அவற்றின் விலாசங்களைக்கூட எங்களுக்குத் தந்தார். அந்த அட்ரஸங்களுக்கு நீங்க அனுப்பும் புடவைகளை மட்டும் விலக்கிட்டு, வேறு ஒன்றை வைத்து அனுப்ப வேண்டும். அதற்காக எங்களுக்கு ஆயிரம் ரூபாய் லஞ்சம் தந்தார்.'

ரவி அதைக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. அவன் மனதில் கொஞ்ச நாட்களுக்கு முன்னால் ராமய்யா பத்திரிகை நிருபர்களுக்குத் தந்த விலையுயர்ந்த விருந்து சட்டென்று நினைவுக்கு வந்தது.

இத்திட்டத்திற்குப் பின்னாலிருந்த ரகசியம் மெல்ல புரியத் தொடங்கிவிட்டது. ரவிதேஜா டெக்ஸடைல்ஸ் போஸ்ட் மூலம் அனுப்பும் திட்டத்தில் ராமய்யா சம்பந்தப் பட்ட கஸ்டமர்களே சுமார் பத்துப்பேர், 'எங்களுக்குப் புடவைகள் வேண்டும்' என்று குறிப்பிட்டுக் கடிதங்கள் எழுதுவார்கள். அவர்களுக்கு அனுப்பும் பார்சல்களில் போஸ்ட் ஆபீசிலேயே புடவை மாற்றம் பண்ணப் பட்டுவிடும்.

பத்து பேரும் கோர்ட்டுக்குப் போவார்கள்.

எங்களிடம் நூறு ரூபாய் வாங்கிக் கொண்டு புடவை களுக்கு பதில் பழைய பேப்பர்களை வைத்து அனுப்பி விட்டதாய் ரவிதேஜா கம்பெனியின் மேல் வழக்குப் போடு வார்கள். ரிஜிஸ்தர் போஸ்ட்ஆனதால் ரவிதேஜா கம்பெனி போஸ்ட் ஆபீசை உலுக்கி எடுக்கும். ஆனால் இதெல்லாம் ஒரு பக்கந்தான்.

பத்திரிகைகளில் இந்த விஷயத்தை கொட்டையாய்ப் போடுவார்கள், ''போஸ்ட்மூலம் புடவைகள் விற்பனை என்பதெல்லாம் மோசடி. ரவிதேஜா கம்பெனிக்காரர்கள் புதிதாய் கொண்டு வந்திருக்கும் திட்டத்தின் மூலமாய் அனுப்பிய பார்சல்களில் புடவைகள் மாயமாகிவிடுகின்றன என்ற காரணத்தாலும், பார்சலில் புடவைகள் இல்லை என்ற காரணத்தாலும் சுமார் பத்துபேர் ரவிதேஜா கம்பெனியின் மீது வேறு வேறு கோர்ட்டுகளில் வழக்குப் போட்டிருக்கிறார்கள். வழக்குகள் நடந்துகொண்டிருக் கின்றன'—இவைபோதும்.

இச்செய்தி காட்டுத் தீயாய் பரவிவிடும்.

சுமார் லட்சம் புடவைகள் அனுப்பினால் அதில் பத்துப் புடவைகள்தான் இவ்வாறு மாயமாகி விடுகின்றன என்று யாருமே யோசித்துப் பார்க்க மாட்டார்கள். தம் புடவைக்கே ஆபத்து வந்துவிடப் போவதாய் நினைப்பார் கள். 'யாருக்கு வேணும் இதெல்லாம், கடைகளுக்கே போய்

வாங்கிண்டால் போறது!' என்றெண்ணிக் கொள்ளுவார்கள்.

இவ்விதமாய் வீழ்த்துவதுதான் ராமய்யாவுக்கு வேண்டியது.

தான் இவ்வளவு கஷ்டப்பட்டு யோசித்து கொண்டு வந்த திட்டமே மண்ணோடு மண்ணாகிவிடப் போகிறது.

இதை திருப்பி முறியடிக்க வேண்டுமானால் எதிர் உபாயம் பண்ணவேண்டும்.

ரவி யோசனையில் ஆழ்ந்தான்.

கொஞ்ச நேரங்கழித்து 'எனக்கு அந்தப் பத்துப் பேரின் அட்ரஸூம் வேணும்' என்றான்.

'கஷ்டம். முடியாது.'

'என் ஆபீசுக்கு வந்து இருபதாயிரம் வேணும்னு கேட்டு பயமுறுத்த மட்டும் தைரியம் இருக்கு உனக்கு! உனக்குக் கஷ்டமாவது? என்ன பண்ணுவாயோ எனக்குத் தெரியாது. எனக்கு அந்த முகவரிகளை மட்டும்சொல்லிடு.'

'சொல்லாவிட்டால்?'

ரவி சிரித்தான். 'இப்போ நாம் பேசிய சம்பாஷணையெல்லாம் ரிக்கார்டாயிடுத்து. கேட்கிறாயா?' என்று அலமாரியைக் காட்டினான். அந்த ஆளின் முகம் வாடிவிட்டது.

'இது அநியாயம்' என்று கத்தினான்.

'பிளாக் மெயில் குற்றத்துக்கு உனக்கு ஆறு வருஷம் தண்டனை கிடைக்காமலிருக்கணும்னால் இந்தக் காரியத்தைப் பண்ணித் தரவேண்டியதுதான்.'

'அந்த லிஸ்ட் என்னிடம் இல்லை. எங்க மேலதிகாரியிடம் இருக்கும்' என்றான் ராகவன்.

'அதைக் கொண்டுவான்னுதான் சொல்றேன்.'

'எனக்கு அவ்வளவு துணிச்சல் இல்லை.'

'இருபதாயிரம் கேட்க மட்டும் துணிச்சல் இருந்ததா?'

ராகவனின் முகம் சிவந்தது. அவன் முகம் ஒரு மாதிரியாயிற்று.

'ஆமாம், இருந்தது...' என்று கத்தினான் இஸ்டீரியா வந்தவனைப் போல. தொடர்ந்து, 'என் பெண்ணுக்குக் கல்யாணம் பண்ணணும். இருபதாயிரம் வரதட்சணைக் கேட்டாங்க. முகூர்த்தத்துக்கு இன்னும் நாலு நாள்தான் இருக்கு. எதையாவது பண்ணி பணம் சம்பாதிக்கணும்.'

அவன் கத்தி முடித்ததுமே அந்த அறையில் நிசப்தம் வந்து சூழ்ந்து கொண்டது. ரவியிடம் எந்த மாறுதலும் இல்லை. ரவி அவனை உற்றுப் பார்த்தபடி, 'ஆமாம். ஏழ்மை உன்னை அந்த மாதிரி சாகசம் பண்ண வைத்தது. அவ்வளவு பேர் இருக்கும்போதே ஆபீசில் வந்து என்னோடு பேசி பயமுறுத்த வைத்தது! இப்போ உன் வேலை போயிடப் போறது. உன் மகளுக்கு நாலு நாளில் இல்லை, ஜென்மத்துக்குமே கல்யாணம் ஆகாது இனி. யோசித்துப் பார்த்துக்கொள். எனக்கு அந்தப் பெயர்கள் வேண்டும். அவர் கொடுத்த பணத்துக்காக அவர் செய்யச் சொன்ன வேலைக்கு ஒத்துக்கிட்டே. அந்த ரகசியத்தை என்னிடம் பேரமாடி மேலும் பணம் சம்பாதிக்க எண்ணினாய். இப்போ அந்த அம்பு உன் மீதே திரும்பிவிட்டது. உன்னை நிர்மூலமாக்கப் போகிறது. எங்க ரெண்டு பேருக்கும் நடுவில் நீ நலிந்து போயிடுவாய்' என்றான்.

'நீங்க மனுஷங்களே இல்லை. ராட்சதர்கள்' செய்வ தறியாது கத்தினான் ராகவன்.

'இல்லை வியாபாரிங்க!'

# 28

இரண்டு நாட்கள் கழிந்தன. ரவி இன்னும் ஸ்டாக் பட்டு வாடா பண்ணவில்லை. கோடவுனில் அடுக்கி வைத்திருந் தான். கொஞ்ச நாட்கள் தாக்குப் பிடிக்க எண்ணியிருந் தான். அவனுக்கு ஏனோ ராகவன் அந்தப் பெயர்களையும் விலாசங்களையும் கொண்டு வருவான் என்று பட்டது. சரியாய் அதே சமயத்தில் அவன் ஒரு சயின்ஸ் பத்திரிகை யில் ஒரு விஷயத்தைப் படித்தான்.

ஒரு முக்கியமான தீர்மானத்தை மேற்கொள்வதற்கும், வாழ்க்கையில் ஒரு மாறுபாடு தோன்றுவதற்கும் சின்னச் சின்ன நிகழ்ச்சிகளே போதும்.

பத்திரிகையில் வந்த சின்ன செய்தி இதுதான்:

**மாஜிக் கண்ணாடி**

என்ற தலைப்பின் கீழ் வந்திருந்தது. பேடண்ட் நம்பர் 0296139. ஃபேஷன்ஸ் சிஸ்டம்ஸ் கார்பொரேஷன், நியூயார்க் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது இது.

அவன் அச்செய்தியைப் படித்து விட்டு நிமிர்ந்து உட் கார்ந்தான். பத்து நிமிஷம் ஆழ்ந்து யோசித்தான். அதைப் பற்றியே இந்தியாவில் இப்படி ஏதாவது ஒன்று அறிமுகமாக வேண்டுமானால் அது அவன் ஒருவனால்தான் ஆகித் தீர வேண்டும். இந்த விஷயம் இரண்டாம் பேர் அறிய வாய்ப் பில்லை.

மறுநாள் சர்மாவிடம் மட்டுமே சொன்னான். அவர் கூட இப்படிப்பட்ட முறை துணி உலகத்தில்கூட வரும் என்று ஊகித்திருக்கவேயில்லை. வியப்படைந்தார்.

'இதைப்பற்றி இன்னும் நிறைய விவரங்களைச் சேகரித் துக் கொண்டாயா?'

'நேற்றிரவே நியூயார்க்குக்குப் போனில் பேசினேன். ஒரு வருஷ காலத்திற்கு இந்தியாவில் நாம் ஒருத்தர் மட்டுமே பயன்படுத்திக்கிறாப்போல காண்ட்ராக்ட் தருவ தாய் சொன்னாங்க. ரேட்கூட குறைவாய்த்தான் இருக்கு. மீதி விபரங்களைப் பேசுவதற்காக நேரில் வரச்சொன் னாங்க.'

'எப்பொழுது போகிறாய்?'

'இந்த ராமய்யா ரகளை ஓய்ந்த பிறகு.'

'நம்ப டைரக்டர்களுக்குச் சொல்ல வேண்டியிருக்கும். திரும்பவும் ஐம்பது அறுபது லட்சம் முதலீடு விஷயமாச்சே.'

'நான் போயிட்டு வந்த பிறகு சொல்லிப்போம். இப் போதே சொல்லிவிட்டால் விஷயம் தளர்ந்து போயிடும்.'

'சரி'

ரவி விசா, பாஸ்போர்ட் எல்லாவற்றையும் தயார் பண்ணிக்கொண்டான். ப்ரியம்வதாவிடம்கூட இந்த விஷயத்தைச் சொல்லவில்லை. அவனுக்கு ஒரு விஷயம் வியப்பாய் இருந்தது.

அன்றைக்கு ப்ரியம்வதாவின் வீட்டில் அவளை முத்த மிட்ட பிறகு, மறுபடியும் திரும்பி அந்த மாதிரி ஆசையே ஏற்படாமல் போனது!

எவ்வளவோ நிசப்தமான நள்ளிரவு நேரங்களில் தூக்கம் வராமலிருக்கும்போது, இந்த விஷயத்தைப் பற்றி யோசித் துப் பார்த்துக் கொண்டான். அவனுக்கு ஒரு விஷயம் புரிந்தது!

அவன் ப்ரியம்வதாவைக் காதலிக்கவில்லை. அவன் அவளால் காதலிக்கப்படுவதை விரும்புகிறான். வீட்டில் மயான அமைதி தாண்டவமாடிக் கொண்டிருந்தது. அவனுக்கும் மாதவிக்கும் இனி முற்றிலும் சம்பந்தமே

முறிந்துவிட்டாற் போலத்தான்! வாழ்நாளெல்லாம் ஒரே வீட்டில் இருந்தாலும் இனி அவர்களிருவரும் கணவன் மனைவியராய் வாழ்வதுகூட சந்தேகந்தான்! கேவலம் சமூகத்திற்காக சேர்ந்து வசிக்கிறார்கள்.

இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் அன்பிற்காக ஏங்கும் அவன் தவிப்பை மிஸ். கோயம்புத்தூர் தட்டி எழுப்பினாள். ப்ரியம்வதா மதுக் கிண்ணத்தோடு நெருங்கி வந்தாள். இதற்குக் 'காதல்' என்ற பெயர் அனாவசியம். 'நிழல்' என்பதுதான் சரியான வார்த்தை.

அதற்குள் ராமய்யா ரகளை வந்து சேர்ந்ததால் தற்காலிகமாய் அந்த நிழலின் அவசியமும் விட்டு நீங்கி விட்டது. காதல், தொழில் இவ்விரண்டுமே இரு வேறு துருவங்கள். ஒன்றில் ஈடுபட்டால் இன்னொன்றில் மனம் செல்லாது. காதலில் முற்றிலும் மூழ்கியிருப்பவனால் எந்த வேலையையும் செய்ய முடியாது. அப்படிப் பண்ணக்கூடியவனின் காதல் உண்மையான காதலாயிராது.

அவனது யோசனை அவனுக்கே சிரிப்பை வரவழைத்தது. அவள் அவனுடைய பிறந்தநாள் ராத்திரியில் போன் பண்ணியதும், லிஃப்டில் இரவெல்லாம் கழித்ததும் இன்பமான நினைவுகளாய் எஞ்சி நின்றன.

அவன் தன் வியாபார நினைவுகளைக்கூட மறந்து விடவில்லை. அதைப்பற்றியும் யோசிக்கலானான். ஒருகால் ராகவன் அந்த லிஸ்ட்டைக் கொண்டு வந்து தராவிட்டால் இந்தப் பிரச்சினைக்கு முடிவு என்ன என்று யோசிக்கத் தொடங்கினான். அவன் புடவைகளை விநியோகம் செய்யத் தொடங்கியதுமே பேப்பர்களில் புடவைகள் மாயமான செய்தியும், கோர்ட் கேசுகளும் தயாராயிருக்கும் என்றறிவான் அவன்.

அவன் என்ன பண்ணலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தபோது ராகவன் அவனிடம் வந்தான். அவன்

தோற்றமே முற்றிலும் மாறிப் போயிருந்தது. தாடி மண்டி யிருந்தது. கன்னங்கள் ஒட்டிப்போயிருந்தன.

'இந்தாங்க நீங்க கேட்ட லிஸ்ட். ரெண்டு நாள் பாடு பட்டபிறகுதான் கிடைத்தது' என்று கொண்டுவந்து தந்தான். அந்தக் கஷ்டம் அவன் முகத்திலேயே தெரிந்தது. 'தாங்க்ஸ்' என்றான் ரவி அதை வாங்கிக் கொண்டு.

'தயவு செய்து என் பேச்சை ரிகார்டு எடுத்த காஸெட் டைத் தந்துடறீங்களா?'

'இனி அந்த விஷயத்தை மறந்துடுங்க. உங்க வேலைக்கு எந்த ஆபத்தும் வராது. ஒரு ஆலோசனை மட்டும் தரேன். திருட்டுத்தனம், பிளாக்மெயில் இதெல்லாம்கூட ஒரு கலை தான்! அது எல்லோருக்கும் வராது. பை தி பை, உங்க மகளின் கல்யாண விஷயம் என்னவாச்சு?'

அவன் தலை குனிந்து, 'நின்னுடுத்து. நாளைக்குதான் முகூர்த்தம். நேற்று சாயந்திரம் வரை அவங்க கேட்ட பணத்தைத் தராததால் சம்பந்தத்தை முறிச்சுக்கிட் டாங்க.'

'இப்போ அந்தப் பணத்தைக் கொடுத்தால் அவங்க ஒத்துக்குவாங்களா?'

எதேச்சையாய் அந்தக் கேள்வியைக் கேட்டு ராகவன் புரிந்து கொண்டு சட்டென்று நிமிர்ந்தான். 'எ...என்னது?' என்றான் தடுமாற்றமாய்.

ரவி பீரோவைத் திறந்து இருபதாயிரத்தை எடுத்து அவனுக்கு முன்னால் வைத்தான். 'எடுத்துக்குங்க. நீங்க எங்க கம்பெனிக்குப் பண்ணிய உதவிக்கு இது வெகுமதி.'

ராகவனின் கண்கள் கலங்கின. அவனால் இன்னும் இதெல்லாம் உண்மையா என்றே நம்பமுடியவில்லை. கைகள் நடுங்க, அப்பணத்தைப் பெற்றுக் கொண்டான்.

ரவி சொன்னான் : 'முந்தாநாள் நீங்க ஒரு வார்த்தை சொன்னீங்களே நினைவிருக்கா? நாங்க ராட்சதர்கள்னு! ஆமாம், ராட்சதர்கள்தான்! வியாபாரத்தில் ஒழுக்கத்திற்கு மதிப்பில்லை. உங்க பலவீனத்தை பயன்படுத்திக்கொள்ள எங்க விரோதிங்க முயற்சி பண்ணினாங்க. நீங்க இருந்த சூழ்நிலையைப் பயன்படுத்திக்க நான் முயன்றேன். இந்தச் சதுரங்கத்தில் நீங்க ஒரு காய். ஆபீசர்கள், குமாஸ்தாக்கள், ஓட்டுப் போடுபவர்கள் எல்லோரும் காய்கள்தாம். எங்களைப்போல புத்தி சாதுரியம் உங்களுக்கு இல்லை. அதனால் தான் பிடிபட்டுட்டீங்க. அந்த லெவலில் யோசித்துப் பார்த்தபோது உங்க மேலே எந்த தப்புமே எனக்குத் தென் படலை. ஏழைகளுக்கு மலிவு விலையில் புடவைகளைத் தரணுங்கற என் எண்ணத்தை மிகக் கொடுமையாய் வீழ்த்தியிருக்கும் ராமய்யாவை எதுவுமே பண்ண முடியாத அரசாங்கத்திற்கு உங்கமேல் லஞ்சக் குற்றச்சாட்டைச் சுமத்துவதற்கும்கூட அதிகாரம் இல்லை. உங்க வழியில் நீங்க பணம் சம்பாதிக்க முயற்சித்தீங்க, அவ்வளவுதான். எங்களைக் காட்டிலும் உங்களுக்குத்தான் பணத்தேவை ரொம்ப அவசியமாயிருக்கு. இதை எடுத்துட்டுப்போய் உங்க மகளின் திருமணத்தை குறை இல்லாம நடத்தி வையுங்க.'

ராகவன் இரு கைகளாலும் நோட்டுக் கற்றைகளை வாங்கிக் கொண்டு அதே கைகளால் வணங்கினான். அர சாங்க இயந்திரத்திலிருந்து கழன்று விழுந்த போல்ட்டைப் போல இருந்தான் அவன் இப்பொழுது.

'என் மகளின் வாழ்க்கையை நிலைக்க வைத்தாய் அப்பா. இதெல்லாம் என் பெண்ணுக்குச் சொன்னால்...'

'இதையெல்லாம் சொல்லத் தேவையில்லை. ஆனால்...' ரவி சிரித்துக்கொண்டே, 'புடவைக்கு எந்தப் பக்கமாய் ஃபால்ஸ் தைக்கணும்னு கல்யாணமான பிறகாவது தெரிஞ்சுக்கச் சொன்னேன்னு சொல்லுங்க. புரியும்.'

# 29

தொடர்ந்து நடக்க வேண்டிய காரியமெல்லாம் சீராய் நடந்தேறின. போஸ்ட் பார்சல்கள் சீராய் போகத் தொடங்கின. பாட்ச் பாட்சாகப் புடவைகள் போய்க்கொண்டிருந்தன.

செஞ்சுராமய்யா இந்த விஷயத்திலெல்லாம் ஒரு கண் வைத்துக் கொண்டேதான் இருந்தான்.

பண்ண வேண்டிய ஏற்பாடுகளை யெல்லாம் செய்து முடித்ததும், ரவி அமெரிக்காவுக்குப் புறப்பட்டுப்போனான். உல்லாச யாத்திரைக்காகப் போவதாய் செய்தி கொடுக்கப் பட்டது. செஞ்சுராமய்யாகூட அதற்கு அவ்வளவு முக்கியத் துவம் தரவில்லை. அவன் கவனமெல்லாம் தம் ஆட்களுக்கு ரவியின் புடவைகள் எப்பொழுது வந்துசேரும், எப்பொழுது அச்செய்தியைப் பேப்பர்களுக்குத் தரலாம் என்பதிலேயே இருந்தது. இன்னும் பதினைந்து நாட்களுக்குப் பிறகுதான் அந்தப் பெயர்களுடைய பாட்சிற்குப் பட்டுவாடா பண்ணப் படும் என்று தெரிந்தது அவனுக்கு.

அதற்குள் அவனுக்கு ஒரு செய்தி எட்டிற்று. சுமார் பத்துப் பதினைந்து இடங்களில் நுகர்வோர்க்கு (தம் ஆட்கள் இல்லை. சாதாரணமாகவே) காலி பாக்கெட்டுகள் தான் கிடைத்தனவென்றும், அவர்கள் போஸ்டல் இலாக்காவுக்கு இந்த விஷயமாய் புகார் கொடுத்துள்ளார்கள் என்றும்!

செஞ்சுராமய்யா மனதிற்குள் மகிழ்ந்து போனான். தான் பண்ண நினைத்தது எந்த முயற்சியுமில்லாமலேயே நடந்தேறிக் கொண்டிருக்கிறது.

உடனே தனக்கு நன்றாய்த் தெரிந்த இரண்டு பத்திரிகைக்காரர்களை அப்படிப்பட்ட இரு கஸ்டமர்களிடம் அனுப்பி வைத்தான். அவர்களை இண்டர்வ்யூ பண்ணி

னார்கள். அந்தக் கஸ்டமர்கள், ரவி கம்பெனிக்கு தமக்குத் தபாலில் புடவைகள் கிடைக்கவில்லை என்று புகார் கொடுத்து எழுதியிருந்த லீகல் நோட்டீசுகளின் காபிகளைக் காட்டினார்கள். செஞ்சுராமய்யா பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல மகிழ்ந்து போனான்.

மறுநாள் பேப்பர்களில் இந்தச் செய்தி வெளிவந்துவிட்டது. 'ரவிதேஜா டெக்ஸ்டைல்ஸின் தபால் வழிப் புடவைத்திட்டத்தில் மோசடி'—என்ற தலைப்புடன்!

தபாலில் புடவைகள் மாயமாய் மறைந்த காரணத்தால் கஸ்டமர்கள் கோர்ட்டிற்குப் போகிறார்கள் என்றும், இந்தத்திட்டமே மோசடியான தென்றும் அவ்விரண்டு பத்திரிகைகளும் பிரசுரித்திருந்தன. இரண்டு மூன்று கஸ்டமர்களின் போட்டோக்களைகூட பிரசுரித்திருந்தார்கள்.

அந்த இரண்டு பத்திரிகைகளுக்கும் லாயர் நோட்டீசு வந்தது. அதை அனுப்பியிருந்தது ரவி கம்பெனி!

புடவைகள் கிடைக்கவில்லையென்று புகார்தந்த கஸ்டமர்களைத் தம் கம்பெனி பிரதிநிதிகள் சந்தித்தார்கள் என்றும், அந்த கஸ்டமர்கள் தாம் அவ்விதமாய் எந்தப் புகாரும் பண்ணவில்லையென்றும், பத்திரிகையில் வெளி வந்த செய்தி தமக்கே ஆச்சரியமாயிருந்ததென்றும், தம் போட்டோக்கள் அந்தப் பத்திரிகைக்காரர்களுக்கு எப்படிக் கிடைத்தன என்பது புரியவில்லையென்றும் அவர்கள் சொன்னார்கள் என்றும், இந்த விதமாய் தம் வியாபாரத்திற்குப் பொய்ச்செய்தியால் நஷ்டம் ஏற்படுத்தினதற்கு ஏன் சிவில், கிரிமினல் நடவடிக்கை எடுத்துக் கொள்ளக்கூடாது என்பதைத் தெரிவிக்குமாறு ரவிதேஜா கம்பெனி அந்தப் பத்திகைக்காரர்களுக்கு அனுப்பியிருந்த நோட்டீசு அது!

பத்திரிகை முதலாளிகள் நடு நடுங்கி விட்டார்கள்.

இந்தப் பொய்த் தகவல் முதலில் தம் பத்திரிகைகளில் எப்படி பிரசுரமாயிற்று? அதுவே புரியவில்லை அவர்களுக்கு.

இந்தக் கஸ்டமர்களின் விலாசங்கள் தம் நிருபர்களுக்கு எப்படிக் கிடைத்தன என்ற கேள்வி எழும்பிற்று. புற்றிலிருந்து ஈசல் வெளிவந்தாற்போல் இதற்குப் பின்னால் செஞ்சுராமய்யா இருந்த விஷயம் வெளிவந்தது. ஒரு செய்தியைப் பொய்யாக உருவாக்கி, ஒரு பிரபல கம்பெனிக்கு மான நஷ்டத்தை ஏற்படுத்தியதற்காக அந்தச் செய்தி நிருபர்களை சஸ்பெண்ட் பண்ணிவிட்டார்கள்.

அமெரிக்காவிலிருந்து ரவி திரும்பி வந்த சமயத்தில் இங்கே நிலவிய சூழ்நிலை அதுதான்! (அந்தக் கஸ்டமர்கள் தம் ஆட்கள்தான் என்று அவன் இரண்டாம்பேர் அறியவிடவில்லை)

பத்திரிகைக்காரர்கள் போராடினார்கள். கேஸை வாபஸ் வாங்கிக் கொள்ளும்படியும் அதற்கு பதிலாய் அவர்கள் ரவிதேஜா கம்பெனிக்குச் சில உதவிகள் பண்ணுவதாயும் ஒப்புக் கொள்ளப்பட்டது. தபாலில் புடவைகள் மாயமாகி விடுவதாய் வந்த செய்தி பொய் என்று மறுநாள் கொட்டைப் பாக்களவு எழுத்துக்களுடன் செய்திகள் பத்திரிகைகளில் வெளியிட்டார்கள்.

பிறகு தொடர்ந்து வரிசையாய் இந்த மலிவுத் திட்டப் புடவைகளைப் பற்றியும், ரவி தேஜா டெக்ஸ்டைல்ஸின் அபார முயற்சியைப் பற்றியும், வரிசையாய் கட்டுரைகள் வெளிவந்தன. புடவைகள் பற்றி கட்டுரைகள் பிரசுரிக்கப்பட்டன. பத்திரிகைக்காரர்களுக்கும் ரவிதேஜாவிற்கும் நெருங்கிய தொடர்பு ஏற்படலாயிற்று! ஒருமுறை நட்பு ஏற்பட்டுவிட்டால் நெருங்கிப் போவது ஒன்றும் பெரிய பிரச்னையில்லை. அதெல்லாம் வேறுவிஷயம்.

மொத்தத்தில் மேலே விழத் தெரிந்த அஸ்திரத்தை அனுசக்தியாய் மாற்றிக்கொண்டு ரவி, செஞ்சுராமய்யாவை சரியான இடத்தில் பலமாய் அடி கொடுத்து விட்டான்.

வியாபாரத்தில் இப்படிப்பட்ட வெற்றிகள் தரும் மகிழ்ச்சியை வேறெதுமே தந்துவிடாது. ரவி மிக உற்சாக மாயிருந்தான். ப்ரியம்வதாவுக்கு நன்றி சொன்னான்.

'அன்றைக்கு நீ இன்ஸ்பெக்டரைக் கூட்டிட்டு வந்து உதவியதால்தான் நாம் இதை சாதிக்க முடிந்தது. என் சார்பில் உங்கள் அண்ணனுக்கு நன்றி சொல்லு.'

ப்ரியம்வதா சிரித்துவிட்டு, 'நீங்க என்னை மன்னிக்கணும்' என்றாள்.

அவன் ஆச்சரிய மடைந்தவனாய் 'எதுக்கு?' என்று கேட்டான்.

'நீங்க திட்டமாட்டேன்னு சொன்னால் சொல்றேன்.'

'என்ன விஷயம்?'

'பாஸ்கர் எங்க அண்ணன் இல்லை.'

அவன் மேலும் வியப்படைந்து, 'பின்னே?' என்றான்.

'என்னோடு சேர்ந்து படித்தவன். அவ்வளவுதான். அதைவிட பெரிதாய் ஒன்றும் பரிச்சயமில்லை. இரண்டு மாதத்திற்கு முன்னால் சந்தித்தேன். உத்யோகம் எதுவும் பண்ணவில்லை என்றும், நாடகக் குழு ஒன்றை நடத்தி வருவதாயும் சொன்னான். காலேஜில் படிக்கும் காலத்தில் கூட அவன் நாடகம் போடுபவன். சார்... நீங்க இன்ஸ் பெக்டர்னு சொன்னதுமே எனக்கு அவன்தான் நினைவுக்கு வந்தான். இந்த விஷயத்தை அவனுக்குச் சொன்னேன். கண்டிப்பாய் பண்றேன்னான். துணிங்களை வாடகைக்கு விடும் நாடகக் கம்பெனியிலிருந்து டிரஸ்ஸை வாங்கிட் டான். உங்களிடம் முதலிலேயே சொல்லிட்டால் திட்டுவீங் கன்னு...' மென்று விழுங்கிக்கொண்டே நிறுத்தினாள்.

ரவி ஒரு வினாடி திகைத்துப் போய் அப்படியே இருந்த வன், பிறகு பெரிதாய் சிரிக்கத் தொடங்கினான்.

'இவ்வளவும் நன்றாய் முடிந்ததால் சரியாயிற்று. ஆனால் அந்த ராகவன் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கூட்டிட்டுப்போகச் சொல்லியிருந்தால் என்னவாகியிருக்கும்?' என்றான்.

அவள் பதிலளிக்கவில்லை.

'போகட்டும், மொத்தத்தில் நினைத்ததை சாதிச்சிட்டோம்.'—

சரியாய் இந்த சம்பாஷணை நடந்துக் கொண்டிருந்த அதே சமயத்தில், அங்கே பாஸ்கர் என்ற ஆள் போனில் யாருடனோ பேசிக்கொண்டிருந்தான். 'ஆமாம், ப்ரியம் வதாவைச் சந்தித்தேன். நீங்க சொன்னாற் போலவே நாடகக் கம்பெனி இருப்பதாய் சொன்னேன். அதே சமயத்தில் ரவிக்கும் ஏதோ உதவி தேவையாயிருந்தது. என்னை இன்ஸ்பெக்டராய் ரவிக்குப் பரிச்சயம்ப ண்ணி வைத்தாள். அவனுக்கு வேண்டிய வேலையைப் பண்ணித்தந்தேன். நான் இன்ஸ்பெக்டரில்லை, அவனுக்கு வெறுமே உதவத்தான் இப்படிப் பண்ணினேன்னு ப்ரியம்வதா அவனிடம் சொன்னாளா இல்லையான்னு எனக்குத் தெரியாது. போதுமா, இன்னும் ஏதாவது பண்ணணுமா?'

'தற்சமயத்துக்குப் போதும்.' போன் கட் ஆகிவிட்டது.

# 30

அன்று மாலை டைரக்டர்களின் அவசரக் கூட்டம் கூடியது. டைரக்டர்கள் எல்லோரும் கவலையோடு இருந்தார்கள்.

நடந்த நிகழ்ச்சியால் ரவி டெக்ஸ்டைல்ஸிற்கும் பத்திரிகைக் காரர்களுக்கும் நெருங்கிய உறவு ஏற்பட்டது உண்மையே. மான நஷ்ட வழக்கு விஷயத்தில் மிக கெட்டிக்

காரத்தனமாய் நடந்துகொண்டு அந்த விதத்தில் லாபம் சம்பாதித்துக் கொண்டது ரவி கம்பெனி. செஞ்சுராமய்யா திருடனைத் தேள் கொட்டியதுபோல சும்மாயிருந்து விட நேர்ந்தது.

ஆனாலும் டைரக்டர்கள் அவ்வளவு சந்தோஷமாயில் லாததற்குக் காரணம்—நஷ்டம் ஏற்பட்டு விட்டதனால்!

தபாலில் பார்சல்கள் மாயமாகி விடும் செய்தி ஒரு முறை ஜனங்களிடையே பரவி விட்டபிறகு, அது தவறான செய்தி என்று மறுபடியும் பிரசுரித்தாலும்கூட முதலில் வெளி வந்த செய்தியைப்போல இருக்காது அதன் பிர வாகம். பொய்ப்பிரச்சாரம் பரவும் வேகத்தில் உண்மைச் செய்தி பரவாது. சுமார் கோடி ரூபாய் முதலீட்டில் தொடங் கப்பட்ட இந்தத் திட்டம், எடுத்த எடுப்பிலேயே இம் மாதி பின்வாங்கத் தொடங்கிவிட்டால்—மறுபடியும் முன்னுக்கு வருவது எப்பொழுது? ஏற்கெனவே பாதி எதிர்ப் போடு தொடங்கப்பட்ட இந்தத் திட்டம் இந்த விதமாய் பெரிய தலைவலியைக் கொடுக்கும் விவகாரமாகி விட்டது அவர்களுக்கு.

ரவி மட்டும் உற்சாகத்துடன் இருந்தான். மீட்டிங் தொடங்கியதும், தான் அமெரிக்காவிற்குப் போகவேண்டி யிருந்த காரணத்தைச் சொல்லிவிட்டு தன்னோடு கொண்டு வந்திருந்த துண்டுப் பிரசுரங்களை அவர்களுக்கு முன்னால் வைத்தான்.

'இதெல்லாம் என்ன?' ஒரு டைரக்டர் கேட்டார்.

'கம்ப்யூட்டரால் செய்யப்பட்ட கண்ணாடி. வேறு விதத்தில் சொல்லணும்னால் 'மாஜிக் மிர்ரர்'. இவற்றைப் பற்றிய விவரங்களைத் தெரிவிக்கும் பத்திரங்கள்தான் இவை. துரித காலத்திலேயே துணிக் கடைகளிலும் ரெடி மேட் ஆடைகள், புடவைகள் விற்கும் கடைகளிலும் பெயர்

பெறப் போகிற இந்தக் கண்ணாடியை நம் கம்பெனி ஒரு வருடகாலத்திற்கு இந்தியாவில் குத்தகைக்கு எடுத்துக் கொண்டுள்ளது. அதாவது இந்த வருஷம் பூராவும் நம் கடைகளிலேதான் இவை இருக்கும்னு அர்த்தம்.'

'அப்படி என்ன விசேஷம் இதில்? நாம்ப பண்றது கண்ணாடி வியாபாரமா அல்லது துணி வியாபாரமா?'

அவன் சொல்லத் தொடங்கினான்—

'நாம்ப துணிக் கடைகளில் தினந்தோறும் எதைப் பார்க்கிறோம்? நாலைந்து பெண்மணிகள் மணிக்கணக்கில் கடைப்பையன்களை நூற்றுக்கணக்கான புடவைகளை எடுத்துப் போட வைத்து விட்டுக் கடைசியில் ஒன்றிலுமே திருப்தியடையாமல் வாங்காமலேயே போய்விடுவது மிகச் சர்வ சாதாரணமான விஷயம் இல்லையா?

'ஒரு புடவை வாங்குவதற்காகக் காலையிலேருந்து சாயந்திரம் வரைக்கும் கடைவீதி யெல்லாம் அலசித் திரியும் பெண்களும் உண்டு...நம் புடவை விலையில் பத்தில் ஒரு பாகத்தை இந்தக் கடை வாடகைக்கும், மின்சாரச் செலவுகளுக்கும், முக்கியமாய் விற்கும் பையன்களின் சம்பளங்களுக்கும் செலவு பண்ணுகிறோம்,

'இந்தப் பையன்களின் நிலைமையோ மிகக் கொடுமை யானது. புடவைகளின் தலைப்புக்களை யெல்லாம் பிரித்துக்காட்டவேண்டும். கடைசியில் நூற்றுக்கணக்கான புடவைகளையும் திரும்பவும் அதனதன் இடத்தில் மடித்து வைக்க வேண்டும்.

காலையிலேருந்து மாலை வரையிலும் எந்திரமாய் வேலை பண்ணிக்கிட்டேதான் இருப்பாங்க. ஒரு புடவையை விற்பதற்காக நூறு புடவைங்களை எடுத்துப் போட்டுப் பிரித்துக்காட்டித் திரும்பவும் மடித்து அடுக்கி வைக்கிறார்கள். இப்படிப்பட்ட வேலையைப் போக்குவது

தான் இந்த ஹோம் கம்ப்யூட்டர்—மாஜிக் மிர்ரரின் வேலை!

இந்த முறைப்படி வாடிக்கையாளர்களுக்குப் புடவை களும் ரெடிமேட் ஆடைகளும்... மேஜையின் மேல் இல்லாமல் தம் உடம்பில் கட்டிக்கொண்டால் எப்படி யிருக்கும் என்று கண்ணாடியில் தென்படும்.'

ஆர்வமில்லாமல் கேட்டுக் கொண்டிருந்த டைரக்டர் கள் நிமிர்ந்து உட்கார்ந்தார்கள் பரபரப்போடு.

'ஷோ கேசுகளிலிருந்து புடவைகளைத் திரும்பத்திரும்ப எடுப்பது பிடிக்காவிட்டால் திரும்பி எடுத்து வைப்பதன் மூலம் துணிகளின் தரம் கூட குறைந்துவிடும். இந்தச் சின்னக் கண்ணாடி மூலம் அந்த வேலை குறையும். இனி இந்தக் கண்ணாடி எப்படி வேலை பணணுதுன்னு விவரிக் கிறேன்.'

அவன் நிறுத்தினான். பிறகு மெல்ல சொல்லத் தொடங்கினான்.

'துணி வேண்டுமென்று கஸ்டமர்கள் கடைக்கு வந்ததுமே அந்தப் பெண்மணியின் உயரம் பருமனுக்குத் தகுந்தாற்போல கண்ணாடியை அட்ஜஸ்ட் பண்ணணும். அதற்கு முன்னால் அந்த கஸ்டமர் நின்றதுமே கம்ப்யூட்ட ருக்கு இந்த விவரங்களை ஃபீட் பண்ணவேண்டும். முகங் களும் கைகளும் சாதாரண கண்ணாடியில் தென்படுவது போலத்தான் தென்படும். கம்ப்யூட்டர் இயங்கத் தொடங்கி யதுமே ஐந்து வினாடிக்கொரு புடவை வீதம் ஃபோட்டோ மாறிக்கொண்டேயிருக்கும். அதாவது இன்னொரு விதத்தில் சொல்லணும்னால், ஒவ்வொரு புடவையையும் கட்டிக் கிட்டால் தான் எப்படி இருப்போம் என்பதை மளமள வென்று போட்டோக்கள் அவளுக்குக் காண்பித்துக் கொண்டேயிருக்கும். நம் கடைகளில் இருக்கும் எல்லா தினுசுப் புடவைங்களையும் சுமார் அரைமணிக்குள் அவள் அந்த விதமாய் பார்த்து முடித்து விடலாம்.'

'நடக்காத காரியம்...இம்பாசிபிள்' என்ற வார்த்தைகள் கேட்டன.

ரவி சிரித்தான்.

'இதைவிட நிறையவே சாதிச்சிட்டோம் நாம் விஞ்ஞானத்தில். இத்தனைச் சின்ன விஷயம் இவ்வளவு நாளாய் நமக்கு இந்த மாதிரி பண்ண முடியும்னும்கூட தோணாமல் போயிட்டதுதான் ஆச்சரியமாய் இருக்கு. இதில் உண்மையில் என்ன கஷ்டம் இருக்கு? புறத்தோற்றத்தை சாதாரணமாய் கண்ணாடியில் பிரதிபலிக்கச் செய்து நம்மிடமிருக்கும் எல்லா புடவைகளையும் 'கோட்' உருவில் கம்ப்யூட்டருக்கு ஃபீட் பண்ண வேண்டியது அவ்வளவுதானே?' என்றான்.

'ஃபேஷன்ஸ் சிஸ்டம் நியூயார்க் நிறுவனம் ஆறுமாதத்திற்கு முன்னால் இந்த கம்ப்யூட்டர் மிர்ரரை அறிமுகப் படுத்தினாங்க. அந்தக் கடைகளில் இருக்கும் ரெடிமேட் ஆடைகளைத் தாம் உடுத்தினால் எப்படித் தென்படுவோம்னு கஸ்டமர்களே கண்ணாடிக்கு முன்னால் நின்னு பார்த்துக்கலாம்னு அர்த்தம். பத்தே நிமிஷத்தில் எண்பது தினுசு பாண்ட்களையும் ஷர்ட்டுகளையும் இந்த மாதிரி பார்த்துக்கலாம். 2-டைமென்ஷனில் இது தென்படும். தத்ரூபம் தொண்ணூற்றொன்பது சதவீதம். எல்.எஸ். அய்ரிஸ் என்ற டிபார்ட்மென்ட்டில் இந்தக் கண்ணாடியை அறிமுகப்படுத்திய முதல் மாதத்தில் விற்பனை 867 சதம் பெருகியதாய் தெரிந்தது. இன்னும் ஐந்தாண்டுகளில் துணிக்கடைகளில் புடவைகள் எல்லாம் கண்ணாடி பீரோக்களில் இருக்காது. கடைகளில் கண்ணாடிகள் மட்டும்தான் இருக்கும். இதை ரவிதேஜா டெக்ஸ்டைல்ஸ் தான் முதல் முதலாய் அறிமுகப்படுத்தப் போகிறது.'

அவ்வறை கைத்தட்டல் ஓசையால் அதிர்ந்தது.

(இத்தொடரில் இதுவரை அறிமுகப்படுத்தப்பட்ட 'தபால் மூலம் விற்பனை' 'மாஜிக் மிர்ரர்' இதெல்லாம்

இட்டுக்கட்டப்பட்ட கற்பனைகள் அல்ல. ஒரு பிரபல கம்பெனி தபால் மூலம் புடவைகளை விற்பதை 1982-ல் தொடங்கிற்று. ஆனால் சில காரணங்களால் நம் நாட்டில் அத்திட்டம் வெற்றி பெறவில்லை 'மாஜிக் மிர்ரர்' கூட ஒரு வருடத்திற்கு முன்புதான் கண்டு பிடிக்கப்பட்டது.)

'தபால் மூலமாய் மலிவுப் புடவைகளை விற்பனை பண்ணும் நம் திட்டத்தை செஞ்சுராமய்யா பாழடித்து விட்டான். நாம் அவனை எதிர்த்து உதை கொடுத்தோம். அது வேறு சங்கதி. இப்பொழுது இந்த போஸ்டல் சிஸ்டம் மூலமாய் ஒதுக்கிய முதலீட்டுத் தொகையைத் திரும்பவும் பெற வேண்டுமானால்—மேஜிக் மிர்ரரை இந்தத் திட்டத் தோடு சேர்த்துக்கணும். இதுவரை நாம் வியாபார விளம் பரங்களுக்காக ஐம்பது லட்சம் செலவழித்து ஜனங்களின் மனதில் இந்த மலிவுப் புடவைகளைப் பற்றி நன்றாய் பதியும்படி பண்ணிட்டோம். இப்பொழுது ஜனங்களின் பயமெல்லாம் என்னவென்றால் புடவைக்கு மணியார்டர் பண்ணிய பிறகு புடவைகள் இந்த மாதிரி தபாலில் மாய மாயிட்டால் என்ன பண்றதுங்கறதுதான்.'

எல்லோரும் ரவி பேசுவதையே கூர்ந்து கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

'பம்பாய், ஐதராபாத், மெட்ராஸ் போன்ற பெரிய ஊர்களில் இந்த கௌண்டர்களைத் தொடங்குவோம். பெரிய பெரிய துணிக் கடைகளைப்போல இருக்கும் அவை. சின்னச் சின்ன போட்டோ ஸ்டுடியோக்களைப்போல டார்க் ரூம் கம்ப்யூட்டரைஸ்டு கண்ணாடி இருக்கும். அவ்வளவுதான். நுழைவுக் கட்டணம் ஐந்து ரூபாய் வைத்து புடவை விலையிலிருந்து அதைக் கழித்துக் கொள்வோம். நான் போட்ட எடை சரியாயிருந்தால் விதம்விதமான புடவைகளில் தாம் எப்படி இருப்போம்னு பார்ப்பதற் காகவே பெண்கள் விழுந்தடித்துக்கொண்டு வந்து மொய்ப்

பார்கள். நாம் கண்ணாடிக்குப் போட்ட முதலீடு ஒரே மாதத்தில் திருப்பி வந்துவிடும்.'

சிரிப்புகள்.

'நமக்கு இப்போதே லட்சத்து ஐம்பதாயிரம் புடவைகளுக்கு ஆர்டர்கள் வந்திருக்கு. இந்த ஊர் கஸ்டமர்களுக்கு ரிஜிஸ்தர் போஸ்டில் கூப்பன்களை அனுப்புவோம். நீங்க கேட்ட புடவை மட்டுமேயில்லை. எங்களிடம் இன்னும் பல ரகப்புடவைகளும் இருக்கின்றன. எங்கள் கம்ப்யூட்டரைஸ்டு பகுதிக்கு விஜயம் பண்ணுங்கன்னு வரவேற்று அனுப்புவோம். இந்த விதம் ஒரே வாரத்தில் ஊரெல்லாம் இச்செய்தி பரவிவிடும். நாம் பண்ண வேண்டியதெல்லாம் நம்ம கோடவுன்களை அந்தந்த நகரங்களில் விசாலப் படுத்துவதுதான். தம் பருமனுக்கும் உயரத்திற்கும் உடல் நிறத்திற்கும் எந்தப் புடவை நன்றாயிருப்பதாய் வாடிக்கையாளர்கள் நினைக்கிறார்களோ அந்த 'கோட்' நம்பரை அழுத்தினால் அழகான பாக்கெட் வந்துவிடும். நமக்குப் பத்துப் பேர் ஆட்கள், கண்ணாடி பீரோக்கள் பரபரப்பு இதெல்லாம் தேவையே இல்லை. வரும் வாடிக்கையாளர் உயரம் பருமனை மிஷினுக்கு ஃபீட்பண்ணும் ஆள் பணத்தைப் பெற்றுக் கொள்ளும் கேஷியர் இருந்தால் போதும். வாடிக்கையாளர்கள் தொட்டுப் பார்த்து துணியின் தன்மையைத் தெரிந்துகொள்ள மட்டும் ரகத்திற்கு ஒரு புடவை வீதம் பக்கத்தில் வைத்திருப்போம். பலதரப்பட்ட விலைகளாய் இல்லாமல் மொத்தமாய் எல்லா ரகப் புடவை விலைகளையும் ஐந்தாறு லெவல்களில் வரையறுப்போம். இதற்குள் இந்தக் கண்ணாடிகளை அறிமுகப்படுத்திய கடைகளில் விற்பனை பத்து மடங்கு பெருகியிருக்குங்கிற விஷயத்தை நாம் மறந்துடக்கூடாது.'

'சரி, இந்த கண்ணாடிக்கு என்ன செலவாகும்? அதைச் சொல்லவேயில்லையே?'

'வெளிநாடுகளில் இதுவரைக்கும் ரெடிமேட் ஆடைகளைப் போட்டுக் கொண்டால் எப்படி இருப்பார்கள் என்று காட்டும் கண்ணாடி மட்டுந்தான் இருக்கின்றனவே தவிர புடவைகளுக்கு இல்லை. இதை நாம் ஸ்பெஷலாய் தயாரிக்கணும். அதோடு கூட நம்மிடமுள்ள புடவைகளையெல்லாம் அவ்வப்பொழுது புதுப்புது டிசைன்களோடும் சேர்த்து தனித்தனி உயரம் பருமன் உள்ள பொம்மைகளுக்குக் கட்டி போட்டோக்களை எடுத்து கம்ப்யூட்டருக்கு ஃபீட் பண்ணிக்கிட்டேயிருக்கணும். இதற்குத் தனியாய் இன்னும் ஒரு டிபார்ட்மெண்ட் இருக்கணும். இந்த மெஷின்களுக்கும் இந்தச் செலவுகளுக்குமாய் சேர்ந்து ஐம்பது லட்சம் வரைக்கும் ஆகும்.'

'ஆ' என்றார்கள் எல்லோரும் ஏககாலத்தில்.

ரவி எல்லோரையும் கூர்ந்து பார்த்தான். இனி விஷயத்தைச் சொல்லிவிட வேண்டிய தருணம் வந்து விட்டது.

'நான் இந்த காண்ட்ராக்ட்டை வாங்கிட்டு வந்துட்டேன்' என்றான் மெதுவாய். அந்த அறையில் திடீரென்று நிசப்தம் வந்து சூழ்ந்து கொண்டது.

'உங்களுக்குத் தெரியாமல் இவ்வளவு பெரிய தீர்மானத்தை நானும் சர்மாவும் எடுத்துக்கிட்டதற்கு உங்களுக்கெல்லாம் அதிருப்தியாயிருக்கும்னு எனக்கும் தெரியும். ஆனால் நாட்டில் நாம்தான் முதன் முதலில் இதைக் கொண்டு வரணும்னு எண்ணியபோது இந்தச் செய்தி கடைசிவரைக்கும் வெளியே பரவாமலிருப்பது நல்லது. இது உங்கள் மேலிருக்கும் அவநம்பிக்கையா? இல்லை. நாம் என்ன நினைத்தாலும் அது செஞ்சு ராமய்யாவுக்குத் தெரிந்துவிடும்.

'அதனால் இப்படி ஒரு முடிவுக்கு வரவேண்டியிருந்தது.'

'போர்டு இதற்கு ஒப்புக்காவிட்டால்?' யாரோ கேட்டார்கள்.

'அதைப் பற்றிக்கூட நாங்க யோசித்துவிட்டோம். ஒரு வருஷ காலம் வரைக்கும் இந்தியாவில் வேறு யாருக்குமே இந்த வாய்ப்பைத் தரக்கூடாதுன்னு நாங்க கண்டிஷன் போட்டதற்கு அவங்க நம்மிடமிருந்து பெரிய தொகையை அட்வான்சாகக் கேட்டாங்க. அதை ஒரு வாரத்தில் நான் போய் கொடுக்கப் போகிறேன். நம்ப கம்பெனி இவ்வளவு லட்சங்களைத் திரும்பவும் முதலீட்டில் போட ஒப்புக்காத பட்சத்தில் இன்னொரு கம்பெனியை ப்ரைவேட்டாய் வைத்து, விற்பனையைச் சீராக்கத் தீர்மானித்திருக்கிறேன். அதற்கான முதலீட்டை என்னை நம்பினவங்க என்னோடு சேர்ந்து போடுவாங்க.'

'இல்லை, இல்லை. இது நமக்கு மட்டுந்தான் இருக்கணும்.' யாரோ மூலையிலிருந்து சொன்னார்கள்.

'ஆமாம், இருக்கணும்.'

'இருக்கணும்.'

ஏறக்குறைய ஒரு மனத்துடன் இத்தீர்மானம் ஆமோதிக்கப்பட்டது. அங்கத்தினர்கள் எல்லோரும் மிக உற்சாகமடைந்தார்கள். கம்ப்யூட்டரைஸ்டு மிர்ரர் திட்டத்தை ஒரு புரட்சிகரமான மாறுபாடாய் வாழ்த்தினார்கள்.

# 31

தம் டைரக்டர்கள் தான் இவ்வாறு அமெரிக்கா போனதற்காக மனம் கோணுவார்களோ என்னவோ என்று எதிர் பார்த்த ரவிக்கு அவர்கள் ஏகமனதாய் ஒப்புக் கொண்டது

மகிழ்ச்சியை அளித்தது. இனி முழு வெற்றி அடையலாம் என்று அவனுக்கு உள்ளுணர்வு உணர்த்திற்று. போட்டியாளர்கள் எல்லோரும் தலையைக் கவிழ்த்துக்கொண்டு விட வேண்டியதுதான். மேலும் பத்து லட்சம் அதிக செலவானாலும் சரி, இன்னொரு வருடத்திற்கு அதிகமாய் காண்ட்ராக்ட்டை சம்பாதித்துக் கொண்டுவிட வேண்டும். இந்த விதமான கடைகளை எவ்வளவு முடியுமோ அவ்வளவு வைக்க வேண்டும். தான் செய்ததை டைரக்டர்கள் எல்லோரும் இவ்வளவு எளிதில் ஏகமனதாய் ஒப்புக் கொண்டது அவனுக்குப் பெரிய வெற்றி!

சந்தோஷமாய் வீட்டிற்கு வந்தான். சமீப காலத்தில் அவன் அவ்வளவு சந்தோஷமாயிருந்த நாட்கள் வெகு சொற்பமே.

மாதவி குளியலறையில் குளித்துக்கொண்டிருந்தாள். அவன் லேசாய் பாட்டு ஒன்றை முணுமுணுத்துக்கொண்டே பெட் ரூமிற்குள் வந்தான். அவன் பார்வை... தன்னையறியாமல் கட்டிலுக்குப் பக்கத்திலிருந்த மேஜை மீது படிந்தது!

அவன் அந்த நேரத்தில் வருவான் என்றறிந்திராத மாதவி, அவிழ்த்த புடவையைக் கட்டிலின் மீதே போட்டு விட்டுக் குளியலறையில் குளித்துக் கொண்டிருந்தாள். படுக்கை கசங்கியிருந்தது. மத்யான வேளையில் தினமும் இரண்டு மணி நேரமாவது தூங்குவது அவள் வழக்கம். அவளுக்கு அவ்வப்போது ஒல்லியாக வேண்டும் என்ற ஆசை வந்துவிடும். அப்போதெல்லாம் நாலைந்து நாட்கள் இரவு வேளைகளில் ஆகாரக் கட்டுப்பாட்டில் இருப்பாள். மத்தியான வேளைகளில் தூங்குவதை மட்டும் விடமாட்டாள். திருமணமான புதிதில் அவன் சொன்னான்: 'நீ அந்த மாதிரி இளைக்க வேண்டுமானால் மத்தியான வேளையில் தூங்குவதை விட்டுடணும் மாதவி' என்று.

'உங்களுக்கு என்ன வந்தது. அப்படிச் சொல்லிவிட்டுப் போயிடுவீங்க. இவ்வளவு வேலையும் நான் ஒருத்தியாய்

செய்யணும். அவ்வளவாவது கண் அயராவிட்டால் பிழைப்பது எப்படி? வீட்டு வேலைன்னால் ஆபீசில் மேஜைக்கு முன்னால் உட்கார்ந்துவிட்டு வம்பளப்பது மாதிரியில்லை.'

'அப்படீன்னால் இந்த ஆகாரக் கட்டுப்பாட்டை விட்டுடு. அதனால் இன்னும் களைப்பாயிடும்.'

'என்னிஷ்டம். 'டயடிங்' பண்ணிக்கிற உரிமை கூடவா எனக்கில்லை இந்த வீட்டில்?'

சம்பாஷணை அந்த ரீதியில் நடக்கும். அப்பொழுது தான் வீட்டு வேலையால் களைப்பு. இப்பொழுது தூக்கம் இன்னும் ஒரு மணி நேரம் கூடுதலாகி விட்டதே, ஏன்?

அவன் மேஜ்ஜையை நோக்கிப் போனான். அதன் மேல் ஒரு கவர் இருந்தது. பிற்பகல் தபாலில் வந்திருக்க வேண்டும். மேலே மாதவி பெயர் இருந்தது. நாலைந்து காகிதங்கள் இருந்தன உள்ளே. அவ்வளவு பெரிய கடிதத்தை மாதவிக்கு யார் எழுதுவார்கள் என்ற ஆர்வத்தில் எடுத்துப் படித்தான்.

'மாதவி அவர்களுக்கு வணக்கம். நீங்கள் இக்கடிதத்தைப் பார்த்து ஆச்சரியப்படுவீர்கள், இவ்வளவு பெரிய கடிதம் யார் எழுதியிருப்பார்கள் என்று! நான்தான் சுதாகர், ஆமாம் மாதவி, எவ்வளவுதான் சேர்ந்து பழகினாலும் கூட சில விஷயங்களைக் கடிதம் மூலமாய்த்தான் பேசிக்கொள்ள வேண்டும் போலிருக்கிறது. முக்கியமாய் நம்மைப் போன்ற இந்த சாதாரண உலகத்தோடு ஒட்டிவர முடியாதவர்கள்.

இப்பொழுது இங்கே சுற்றுச் சூழ்நிலை மிகவும் அமைதியாயிருக்கிறது. இந்த மாதிரி சூழ்நிலையில் உங்களிடம் நிறைய சொல்ல வேண்டும் போலிருக்கிறது. ஜன்னல் வழியாய் குளிர்ந்த காற்று வந்து வீசுகிறது. மெர்க்குரி

விளக்கின் வெளிச்சத்தில் என்னைச் சுற்றிலும் இன்னும் சில பொருள்களும் கூட உள்ளன என்று தெரிந்து கொள்ளவே பிடிக்கவில்லை எனக்கு. அதனால்தான் குழல் விளக்கை அணைத்து விட்டு மேஜை விளக்கைப் போட்டுக் கொண்டு எழுதுகிறேன். அதோடு கூட நான் எப்பொழுதும் இந்த மாதிரி சமயங்களில் விரும்பிக்கேட்கும் பாட்டு ஹெட்போன் மூலமாய் காதுகளின் வழியே மூளைக்குச் சென்று கொண்டிருக்கிறது.

ஒரு நிமிஷம் கடிதத்தை நிறுத்திவிட்டு ஜன்னல் வழியாய் பார்த்தால் ஒய்யாரமாய் காற்றிற்குத் தவழ்ந்து ஆடிக் கொண்டிருக்கும் மல்லிகைக் கொடி தென்படுகிறது. கீழே குரோட்டன்ஸ் செடிகள்... மாதவி இச்சூழ்நிலை எவ்வளவு ரம்மியமாய் இருக்கிறது தெரியுமா? வாயால் சொன்னால் போதாது. அனுபவித்தால்தான் புரியும். இதயம் என்று ஒன்று இருக்கும் யாருமே இந்தச் சமயத்தில் பண்ணும் காரியம் ஒன்றே ஒன்றுதான். கவிஞனானால் கவி பாடுவான், காதலனானால் காதலிக்கு மௌன மொழியால் உள்ளத்தை அர்ப்பணிப்பான் அல்லது என்னைப் போல சிநேகிதிக்குக் கடிதம் எழுதுவான்... ஆகாயத்தில் வேகமாய் ஓடுகிற மேகங்கள் இந்தக் கடிதத்தைவிட அதி வேகமாய் என் உணர்ச்சிகளை உங்களிடம் தெரிவிப்பதற்காக அவசரப்படுகின்றன.

உண்மைதான் மாதவி. நட்பில் ஆண் பெண் என்ற வேறுபாட்டை ஏற்படுத்துவது எனக்குப் பிடிக்காது. ஆண், பெண் என்ற வேறுபாடு உடலுக்குத்தானேயன்றி அந்தரங்க உள்ளத்திற்கு இல்லை என்ற சத்தியத்தை உணர்ந்து மனத்தளவில் பக்குவமடைந்து, ஆதரிக்கக்கூடிய மனத்திண்மை உள்ளவர்களின் விஷயத்தில்தான் அந்த நட்பிற்கு முழுமை கிட்டுகிறது. நம் நட்பு புனிதமாயிருக்கும்போது உலகத்தைப் பற்றிப் பொருட்படுத்த வேண்டியதில்லை நாம். முந்தாநாள் நாம் செகண்ட் ஷோவுக்குப் போன போதே இதைப் பற்றிச் சொல்ல நினைத்தேன் உங்களிடம்,

உங்களைப் போலவேதான் நானும் மனத்தளவில் தனியன் எவ்வளவு பேருக்கு நடுவில் இருந்தாலும் தனியாய்த்தான் இருப்பேன். உங்கள் கையை என் கையில் எடுத்துக் கொண்டபோது என் விரல்கள் நடுங்கின! எவ்வளவோ பேர்களின் கைகளைப் பரிசோதித்திருக்கிறேன். ஆனால் என்றுமே எனக்கு இந்த மாதிரி அனுபவம் ஏற்பட்டதில்லை. உங்கள் கைகள் மிகவும் மென்மையாயிருந்தன.

மாதவி, நட்பில் தன்னலத்திற்கு இடம் கிடையாதாம். நான் நம்பிய புனிதமான சிநேகத்திற்காக உயிரையும் தருவதற்குத் தயார்தான். ஆனால் என் முயற்சி வெற்றியாக வேண்டுமானால்—உங்கள் ஒத்துழைப்போடு கூடிய சிறு புன்முறுவலே எனக்கு இன்ஸ்பிரேஷனாக வேண்டும். நீங்கள் சிரித்தால் மிகவும் அழகாயிருக்கிறது. இந்த மரங்களும் செடிகளும் என்ன சொல்லுகின்றன தெரியுமா? எங்களைப் போலவே நீயும் உன் சிநேகிதியோடு மௌனமாய் சம்பாஷணை பண்ணு—என்று.

எனக்குப் பிடித்த விஷயங்கள் என்னென்னவென்று தெரியுமா மாதவி?

1. லூசாக பைஜாமா, லால்சி, போட்டுக்கொண்டு ரோஜாச் செடிகளுக்கு நடுவில் உட்காருவது.

2. நிலா வெளிச்சத்தில் நீலகிரி தோட்டங்களில் பேசிக்கொண்டே நடப்பது.

3. பௌர்ணமி இரவில் சமுத்திரக் கரையில் சிநேகிதர்களுடன் பேசிக்கொண்டே உட்கார்ந்திருப்பது.

4. மல்லாந்து படுத்தபடி எனக்குப் பிடித்தமான நாட்டிய பொம்மையை மார்பில் வைத்துக்கொண்டு அதை ஆட்டி ஆட்டி ஆடவைத்துப் பார்ப்பது. (நீங்கள் நடனம் கற்றிருந்தால் நன்றாயிருக்கும் மேடம். உங்கள் உடற்

கட்டு அதற்கு நன்றாய் பொருந்தும். உங்கள் கணவருக்கு இந்த மாதிரி ரசனை ஏதும் இல்லை போலிருக்கிறது. அவர் எப்போதும் பிசினஸ் என்று அலைபவர் போலிருக்கிறது.)

5. மார்புவரை துப்பட்டியைப் போர்த்திக்கொண்டு மேற் கூறையைப் பார்த்தபடி யோசிப்பது (இப்பொழுதெல்லாம் உங்களைப் பற்றி).

இப்படிப்பட்ட ஆசைகளும், பழக்கங்களும் எவ்வளவோ இருக்கின்றன. இவற்றையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு வியாபார ரீதியில் வாழவேண்டும். வேறு வழியில்லை. அத்தான் திட்டுகிறார், படிப்பை முடித்து மூன்றாண்டுகள் ஆகிவிட்டது. ஏதாவது வேலை பண்ணக் கூடாதா என்று. வீட்டில் கொஞ்சங்கூட அன்பைப் பெற முடியவில்லை என்னால்.

ஏனோ உங்களைப் பார்த்தால் நீங்களும் என்னைப் போன்ற நிலையிலேயே இருப்பதாய் தோன்றுகிறது. பாலைவனத்தில் ஒரு சோலையைப் போல நாமிருவரும் ஒருவருக்கொருவர் இந்தப் புனித நட்பின் மூலம் புனிதமான யோசனைகளைப் பகிர்ந்து கொண்டு உயிர் சிநேகிதர்களாய் இருந்து விடுவோமா? நல்ல சிநேகத்தைவிட வேறெந்த விதத்திலும் நமக்கு விமோசனம் இல்லை மாதவி!

அன்று உங்கள் கையைப் பார்த்தபோது நீங்கள் எதற்காகவோ மானசீகமாய் வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள் என்றும் இவ்வுலகத்தில் யாருமே உங்கள் நல்ல குணத்தைப் புரிந்து கொள்வதில்லை என்றும் தெரிந்தது. அந்தக் கையை அப்படியே பிடித்துக்கொண்டு வெகு நேரம் இருக்க வேண்டும் போலிருந்தது. ஆனால் அதற்குள் உங்கள் கணவர் வந்துவிட்டார். புனிதமான நட்பை உலகம் புரிந்து கொள்ளாது. எனக்கு வேண்டியதெல்லாம் கொஞ்சம் ஆறுதல், வருத்தத்தில் இருக்கும்போது மார்போடணைத்

துக்கொண்டு 'நான் இருக்கிறேன் வருந்தாதே' என்பது போல நட்பு வேண்டும் எனக்கு.

'மார்போடணைத்துக் கொண்டு' என்று எழுதியதற்கு உங்களுக்கு கோபம் வந்து விட்டதா? அல்லது சிரிப்பு வந்ததா? உங்கள் மார்...... அய்யோ வேண்டாங்க. உங் களுக்குக் கோபம் வந்துவிடும்.

நான் ஒரு அழகான திருப்பம் என்று நினைத்தால், உங்களை ஆராதிக்கும் நபரான என்னை உங்களுக்குப் பிடிக்குமானால்...இந்தக் கடிதம் உங்களுக்கு 14—ம் தேதி கிடைக்கும். அன்றைக்கு சாயந்திரம் உங்கள் வீட்டிற்கு வருகிறேன். வெள்ளை நிறப் புடவை கட்டிக் கொள்ளுங் கள். வெள்ளை நிறம் புனிதத்திற்கு அடையாளம். ரோஜா மலரையொத்த உங்கள் உதடுகளின் மீது மல்லிகை மலரைப் போன்ற புன்னகையோடு இந்த நண்பனுக்கு வரவேற்புக் கூற வேண்டும்.

இப்படிக்கு,
ஜி.எஸ். சுதாகர்.'

ரவியின் கையிலிருந்து நழுவி விழுந்தன காகிதங்கள். கொஞ்ச நேரம் சிலையாய் அப்படியே நின்று விட்டான். பிறகு குனிந்து, அக் காகிதங்களை எடுத்துத் திரும்பவும் கவரில் வைத்து முன்பிருந்த இடத்திலேயே வைத்தான். முன் அறையில் வந்து உட்கார்ந்தான்.

ஆபீஸ் வேலையாலும், வீட்டிற்கு வந்ததுமே இக் கடிதத்தால் ஏற்பட்ட அதிர்ச்சியாலும் மனம் செயலிழந்து உறக்கம் எளிதில் வரமறுத்தது.

'எவ்வளவு நேரமாச்சு நீங்க வந்து!'

திடீரென்று வந்த அந்த வார்த்தைக்குக் கண் திறந் தான் ரவி. மாதவி பெட்ரூமிலிருந்து வெளியே வந்தவள்

கேட்டாள். ஒரு நிமிஷம் ரவிக்கு என்ன நடந்ததென்றே புரியவில்லை. அக்கடிதத்தைத் தான் படித்தது கனவா நிஜமா என்று புரியவில்லை. கொஞ்சம் திரும்பிப் பார்த்தான். பெட் ரூமில் அந்தக் கவரைக் காணோம். ஆனால் 'எவ்வளவு நேரமாச்சு நீங்க வந்து?' என்று கேட்ட மாதவியின் குரலிலிருந்த தடுமாற்றத்தைக் கண்டபோது அவள் அந்தக் கவரை எடுத்து உள்ளே வைத்திருப்பாள் என்று சந்தேகம் திட்டமாகத் தெரிந்தது. மொத்தத்தில் அவன் கடிதத்தைப் படித்தது நிஜந்தான், கனவில்லை.

கடிதத்தில் இருந்த ஒவ்வொரு எழுத்தும் அவனுக்கு நினைவிலிருந்து அகலவில்லை. அதிலிருந்த கடைசி வரிகள் நினைவுக்கு வரவே சட்டென்று நிமிர்ந்து மனைவியைப் பார்த்தான். இன்னும் அவளிடம் கலவரம் தணிந்ததாய்த் தோன்றவில்லை. தேநீர் கொண்டு வருவதற்காக உள்ளே போனாள்.

அவள் அப்பொழுதுதான் குளித்துவிட்டு கறுப்பு பார்டருடைய புடவை கட்டிக் கொண்டிருந்தாள். வெள்ளைப் புடவை. கருப்பு பார்டர் வெள்ளைப் புடவை!

# 32

ரவி டெக்ஸ்டைல்ஸ் கம்பெனி போர்டு மீட்டிங்கில் கம்ப்யூட்டரைஸ்ட் கண்ணாடிகளை அறிமுகப்படுத்துவதற்காக எடுத்துக்கொண்ட தீர்மானம் சரியாய் ஐந்தே நிமிஷங்களில் செஞ்சுராமய்யாவுக்குத் தெரிந்து விட்டது.

'இதென்னவோ நமக்குத் தெரியாத புது தினுசாய் இருக்கே' என்றான் அவன். டைரக்டர்களில் ஒருவர் தான் படித்த விவரங்களைச் சொன்னார். செஞ்சு ராமய்யா எல்லாவற்றையும் கேட்டு முடித்துவிட்டு, கடைசியில், 'இது தோற்றுடும்' என்றான்.

'ஏன்?'

பெண்மணிங்களை கண்ணாடிக்கு முன்னால் நிறுத்தி வைத்து வரிசையாய் ஸ்விட்சைப் போட்டு 'நீ இந்தப் புடவையில் அழகாயிருக்கிறாய்'னு அவசரம் அவசரமாய் சொல்லிண்டே போனால் அவங்களுக்குப் பிடிக்காது. பத்துப் பேரோட சேர்ந்து வந்து இருநூறு புடவைங்களை வெளியே எடுத்துப் போடச் செய்து நம்ப சேல்ஸ்மேனுங்க கைகள் ஓஞ்சுபோகும்படிச் செய்தாலொழிய அவங்களுக்குத் திருப்தி இராது. கையால் பார்டரைத் தொட்டுக் கசக்கிப் பார்த்தாலேயொழிய பார்த்தாற்போலவே இருக்காது அவங்களுக்கு. அப்படி நூறு புடவைங்களைத் தொட்டுப் பார்த்தாலேயொழிய ஒரு புடவையை வாங்கத்தோணாது அவங்களுக்கு.'

அங்கிருந்த டைரக்டருக்கு அவன் கூற்று சரியானதாய்த் தோன்றவில்லை. முன்பெல்லாம்போல பெண்களுக்கு இந்தக் காலத்தில் அவ்வளவு நேரம் கிடைப்பதில்லை. முக்கியமாய் நூறு, நூற்றைம்பது ரூபாய் புடவைக்காக மணிக்கணக்கில் கடைகளில் பொறுக்கும் பொறுமை யாருக்குமே இருப்பதில்லை. ஆனால் இந்த யோசனையை அவரால் மேனேஜிங் டைரக்டரிடம் சொல்லத் துணிச்சல் வரவில்லை.

காலமே அதை உணர்த்திவிடும் என்று பேசாமலிருந்து கொண்டார்.

ஒரே துறையில் இருக்கும்பொழுது தன்னைவிட அடுத்த வன் ஒருத்தன் கெட்டிக்காரத்தனமான பிளான் ஒன்றைப் போட்டால் அதை ஒப்புக்கொள்வதற்கு நிறைய பாலன்ஸ் ஆஃப் மைண்ட் வேண்டும்.

தம் மேனேஜிங் டைரக்டருக்கு அது இல்லை என்று அந்த டைரக்டருக்குத் தெரியும்.

இருள் சூழ்ந்து கொண்டிருந்த வேளை—மனதில்கூட அந்த இருள் படரத் தொடங்கிய வேளை—நகரத்திலேயே நாகரீகமான ஒரு உயர்ரக 'பாரில்' ஒரு மூலையிலிருந்த மேஜைக்கு முன்னால் தனியாய் உட்கார்ந்திருந்தான் ரவி. 'பார்' ஆளரவமில்லாமல் இருந்தது. இன்னும் மணி ஆறரைகூட ஆகாததால் 'பார்' சந்தடியில்லாமல் இருந்தது. மனிதனின் வெற்றிக்கும்—சந்தோஷமான மன நிலைக்கும் சம்பந்தமே இல்லை.

வெற்றியில் ஒவ்வொரு படியாய் ஏறிக்கொண்டே, அந்த ஆனந்தத்தை அனுபவிக்க வேண்டுமானால், எல்லாச் சூழ்நிலையுமே அதற்கு ஒத்துழைக்க வேண்டும். ஒருவிதத்தில் சொல்ல வேண்டுமானால், வெற்றி அதிகரிக்க அதிகரிக்க, அதன் மூலம் வரும் டென்ஷனால் வேதனையும் அதிகரிக்கும் போலும்! வியாபார ரீதியில் எவ்வளவு சிக்குகள் எதிர்ப்பட்டபோதிலும் அவைகளை எதிர்த்து நிற்க அவனால் முடிந்தது. ஆனால் மானசீகமாய் மிக நுட்பமான இந்த வருத்தம் நவநாடிகளையும் தாக்கிக் கொண்டிருந்தது.

அவன் ஆண்மைக்கு இது ஒரு சவுக்கடி! ஆணுக்கு அதைவிட வேதனை தரவல்லது வேறொன்றில்லை. ஆணின் மேதாவித்தனம், பெர்சனாலிடி, வாழ்க்கையில் அவன் சாதித்த வெற்றி, இதொன்றுமே பெண்ணைக் கவர்ந்துவிடாது. அவளுக்கு அவன் முக்கியத்துவம் கொடுக்கிறானா இல்லையா? என்பது மட்டுந்தான் அவளுக்கு வேண்டியது. எப்பொழுது அவன் அவளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதை விட்டுவிட்டானோ அப்பொழுதிலிருந்து அவளுக்கும் அவன் மீதிருக்கும் ஆர்வம் போய்விடுகிறது.

அவன் கணவனாய்த்தான் இருக்கட்டும் அல்லது வேறு யாராய்த்தான் இருக்கட்டும்—அவள் அவனைவிட்டு மனத்தளவில் தொலைவிற்குப் போய் வேறு வியாபகங்களில்

மூழ்கிவிடுகிறாள். இந்த வியாபகம் 'கிளப்'பாகவும் இருக்கலாம். குழந்தைகளை வளர்ப்பது அல்லது நகைகளின் மீது மோகமாயும் ஆகலாம். அல்லது, சுதாகரைப் போன்றவர்களின் சிநேகமாகவும் ஆகலாம். பெண்ணுக்கு வேண்டியது முக்கியத்துவம் ஒன்றே!

ரவி இந்தக் கோணத்திலிருந்து யோசித்துப் பார்க்கவில்லை. அவன் ஆண். அந்த நிலைமையில் யதார்த்தத்தைப் பற்றி யோசித்துப் பார்ப்பது ஒருவருக்குமே சாத்தியமில்லை. படிப்பு, வேலைவெட்டி எதுவுமில்லாமல் பெண்களைக் கவரக்கூடிய கலை ஒன்றை மட்டுமே தெரிந்துகொண்டு அதற்கும் பொழுது கிடைத்துக் கொண்டிருக்கிற சுதாகரைப் போன்றவர்களின் பேச்சில் மாதவி மயங்கியதுதான் வேதனையை உண்டாக்கிற்று.

இங்கே இன்னொரு கேள்வியும் தோன்றிற்று அவனுக்கு. சுதாகரைப்போன்ற, எதற்குமே உதவாத ஆளாயிராமல், ஒரு உன்னதமான ஆள் அவன் மனைவிக்கு இக்கடிதத்தை எழுதியிருந்தால் அவனால் சகித்துக்கொண்டு இருக்க முடியுமா? அதுவும் சாத்தியமில்லைதான். அப்பொழுது அவன் இன்னொரு விதமாய் யோசித்திருப்பான்.

மனிதன் தான் இருக்கும் சூழ்நிலையைப் பொறுத்து, தனக்கு எதிர்ப்படும் பிரச்சினைகளைப் பொறுத்து தன் யோசனைகளைக் கடைப்பிடிப்பதுதான் தொன்றுதொட்டு வழிவழியாய் வந்துகொண்டிருக்கும் முறை. இப்பொழுது இக்கடிதத்தை எழுதியிருப்பது சுதாகராதலால் இவ்வாறு யோசிக்கிறான். அவ்வளவுதான்.

ரவி மகாத்மாவோ பரம புருஷனோ ஒன்றுமில்லை. அவனுக்கும் ஒரு பெண் கடிதம் எழுதினாள். சமூகக் கோட்டை விட்டு வெளியே வரமுடியாமல் பின்வாங்கிவிட்டாள். ஆனால் அவளைப்பற்றி அவன் என்ன நினைக்கிறான்? அந்தக் கடிதத்திலிருந்த நேர்மை இந்தக் கடிதத்

தில் இல்லை என்றெண்ணியிருப்பான். அது உண்மையா யிருக்கலாம்.

தப்பு என்பதற்கு அர்த்தந்தான் என்ன? நேர்மையாய் செய்த தப்பு தப்பில்லையா? அல்லது பலமான ஒரு காரணம் இருந்துவிட்டால் அது தப்பு இல்லையா? அவள் கணவன் ஒரு சாடிஸ்ட்டோ அல்லது குடிகாரனோ அல்லது குதிரைப்பந்தயத்தில் வெறி கொண்டவனோ ஆக இருக்கலாம். அந்த துக்கத்திலிருந்து தேறுவதற்காக அவள் ஒரு வழியைத் தேர்ந்தெடுத்துக் கொண்டிருந்திருக்கலாம்,

பின்னே அது அவனுக்கு த்ரில்லாகத்தானே இருந்தது! குண்டான அவன் மனைவிக்கு, 'உங்களுக்கு பரதநாட்டியம் பண்ணத் தக்க உடற்கட்டு இருக்கிறது' என்று ஒரு வேற்று மனிதன் சொன்னால் அது அவளுக்குக்கூட அதேபோன்ற த்ரில்லை உண்டாக்கியிருக்கலாம். நம் மனோநிலையைப் பொறுத்து நமக்கு 'த்ரில்' உண்டாகும் விதமும் மாறுபடு கிறது. சில பெண்களுக்கு சித்திரம் வரைதல், வீணை வாசித்தல் போன்றவை 'த்ரில்'லை உண்டாக்கலாம். வேறு சிலருக்கோ தம் பீரோவில் ஆயிரம் புடவைகள் இருப்பது த்ரில்லை உண்டாக்கலாம்.

ரவி இதைப்பற்றியெல்லாம் யோசிக்கவில்லை பார்க்கப்போனால் எந்த ஆணுமே அத்தகைய சூழ்நிலை யில் அகப்பட்டுக்கொண்டு விட்டால் இதைப் பற்றியெல் லாம் சாவதானமாய் யோசித்துப் பார்க்கமாட்டான். அவனோ கேட்கவே வேண்டாம்.

அதற்குள் அவன் ஆறு பெக் குடித்துவிட்டான். அவ னுக்குக் குடித்துப் பழக்கமில்லை. கம்பெனிக்காக மட்டுமே ஒன்றிரண்டு விழுங்கு குடித்ததோடு சரி. அதனால் ஆள் ஆடி விழத் தெரிந்தான். குடி மனிதனின் புறத்தோற்றத் தைப் பிளந்துகொண்டு அகத்தோற்றத்தை வெளிக்குக் கொண்டுவர வல்லது. அவன் மனம் முழுவதும் யார் மீது என்றே தெரியாத வெறுப்பு நிரம்பி வழிந்தது. மனத்தின்

அடித்தளத்திலிருந்து ஒரு நினைவு எரிமலை வெடித்துக் கிளம்பினாற்போல மேலே வந்து பொங்கிக்கொண்டே யிருந்தது.

எல்லோரும் சுகமாய் இருக்கிறார்கள். அவன் ஒருத்தன் மட்டுமே இந்த ஏமாற்றத்தோடும், உற்சாகமற்றும் இருக்கிறான். எல்லோரும் கைக்குச் கிடைத்த ஆனந்தத்தை ஏற்றபடி அனுபவிக்கிறார்கள். நான் ஒருத்தன் மட்டும்தான் ஏதோ பண்ணவேண்டும்...எதையோ சாதிக்க வேண்டும் என்று மனதையும் நேரத்தையும் பாழடித்துக் கொண்டிருக் கிறேன்—என்ற உணர்ச்சி பொங்கி எழும்பிற்று. அவனுக்கு ஆறுதலளிக்கக்கூடியவர் ஒருவரே ஒருவர்தான். அந்த ஆறு தலின் பெயர் மிஸ். கோயம்புத்தூர்!

அவன் எழுந்திருந்தான்.

தட்டுத்தடுமாறிக்கொண்டே வந்து காரை ஸ்டார்ட் பண்ணினான். இன்றைக்கு இரண்டில் ஒன்று தீர்மானித்துக் கொண்டுவிட வேண்டியதுதான் என்றெண்ணிக்கொண் டான். ஆனால் அவன் தீர்மானித்துக் கொள்ள வேண்டும் என்றெண்ணியது மனிதர்களோடில்லை; தன் மனத்தோடு.

'நான் இன்றிரவு என் கவலைகளை மறந்து போக ணும்னு நினைக்கிறேன். இன்றிரவு நான் எல்லாவற்றையும் அனுபவிக்கணும். உங்க வீட்டில் விஸ்கி இருக்கா?'

வீட்டிற்கு முன்னால் காரை நிறுத்திவிட்டு படியேறி வந்து கதவைத் தட்டிய ரவியைப் பார்த்து ப்ரியம்வதா தன்னையறியாமல் ஓரடி பின்வாங்கினாள்.

'ப்ரியம்வதா! வெற்றிகளிலேயே பெரிய வெற்றி எது தெரியுமா? அந்த வெற்றிக்கு நிறையப்பேர் முக்கியத் துவம் தருவதுதான். அவ்வளவுதான்! அவ்வளவு சிம்பிள் அது! அது போலவே எல்லா தோல்விகளிலும் மிகப் பெரிய தோல்வி எது தெரியுமா? மனிதனுக்குத் தன் மீதே நம்பிக்கை போய்விடுவதுதான்.'

'என்ன? என்ன நடந்தது?'

'இதற்கு முன்பே ஒரு தடவை சொல்லியிருக்கேன். இப்போ மறுபடியும் சொல்றேன். நான் இனி யாரையுமே பொருட்படுத்தப் போறதில்லை. நான் எல்லாவற்றையும் அனுபவிக்கபோறேன்.'

அதற்குள் யாரோ படியேறி மேலே வந்துகொண்டிருந்த சப்தம் கேட்டது. அவன் மெல்ல பழைய நிலைக்கு வந்தான். அந்த ஆள் மேலே வருவதற்குள் முற்றிலும் பழைய மனிதனாகிவிட்டான். என்ன இருந்தாலும் அவன் சமூகத்தில் ஒரு கௌரவமான ஆள். அந்த உணர்ச்சி அவனைத் தட்டி எழுப்பி மயக்கத்திலிருந்து விடுபடச் செய்தது.

'யாரோ வந்தாற்போல சந்தடி கேட்டது. பார்த்துட்டுப் போகலாம்னு வந்தேன்' என்றார் சுந்தரராஜன்.

'எங்க ஆபீசில் வேலை பண்றவர் சார். அன்றைக்குப் பரிச்சயம் பண்ணிவைத்தேனே?'

'ஆமாம். குட் ஈவினிங் சார். என்ன விஷயம், வீட்டுக்கு வந்திருக்கீங்களே?'

ரவி ஏதோ சொல்ல வருவதற்குள் ப்ரியம்வதா இடைமறித்து,

'நாளை ஏதோ முக்கியமான மீட்டிங் இருக்காம். சீக்கிரமாய் வான்னு சொல்றதுக்குதான் வந்திருக்காரு' என்றாள்.

'ரொம்ப சந்தோஷம். சுயமாய் வந்து கூப்பிட்டிருக்காருன்னா அது ரொம்ப அர்ஜென்ட் வேலையாய்த்தான் இருக்கும். போயிட்டு வாம்மா.'

'சே! அதெல்லாம் ஒன்றுமில்லை சார். வீட்டிற்குப் போறவழிதான் இது. அப்படியே சொல்லிட்டுப் போக

லாம்னு வந்தேன். நாளைக்கு எட்டு மணிக்கெல்லாம் வந்துடு' என்று படியிறங்கினான்.

அவன் இறங்கிக் கொண்டிருந்தபோது பின்னாலிருந்து கேட்டது. வீட்டுக்காரர் ப்ரியம்வதாவிடம் சொல்லிக் கொண்டிருந்தார்: 'ராத்திரியில் கதவைத் திறக்கறப்ப ஜாக்கிரதையாய் இருக்ணும்மா. ஏதாவது வேலையைச் சாக்காய் வெச்சுட்டு இப்படித்தான் வந்துட்டிருப்பாங்க.'

அவன் முகம் வெட்கத்தாலும் ரோஷத்தாலும் சிவந்தது. காரின் கதவை தடாலென்று சாத்திவிட்டு வீட்டை நோக்கி ஸ்டார்ட் செய்தான்.

∴ ஃ ஃ

'என்னை மன்னிச்சிடுங்க' என்றாள் அவள் தலை குனிந்தவாறு.

'அதை நான் சொல்லணும் ப்ரியம்வதா! எல்லாவற்றையும் மறந்து போய் அர்த்தராத்திரியில் அப்படி வந்ததற்கு எனக்கே வெட்கமாயிருக்கு.'

'உங்களுக்கு எப்படி இருக்கோ தெரியாது. எனக்கு மட்டும்...'

'ஏன் நிறுத்திட்டே? சொல்லு.'

'ரொம்ப த்ரில்லாகவும் சந்தோஷமாகவும் இருந்தது.'

அவன் வியப்போடு நிமிர்ந்து, 'த்ரில்லிங்காகவா?' என்றான்.

'அதாவது...' என்ற அவள் தொடர்ந்து என்ன சொல்வது என்று சரியாய் தெரியாமல் தடுமாற்றமடைந்து விட்டு,

'பாருங்க! நமக்கு வேண்டியவங்க ஏதாவது கஷ்டத்தில் இருக்கறப்ப வேறெங்கேயும் போகாமல் நம்மிட்டே

விரும்பி வந்தாங்கன்னு வையுங்க, அது எவ்வளவு சந்தோஷமாயிருக்கும்! உங்களுக்குத் தெரியுமில்லே?'

அவன் சிரித்துவிட்டு—சட்டென்று ஏதோ சந்தேகம் வரவே, 'நான் கஷ்டத்தில் இருப்பதாய் உனக்கு யார் சொன்னாங்க ப்ரியம்வதா?' என்றான்.

அவள் திரும்பவும் தடுமாற்ற மடைந்து, 'ஆபீசில் எல்லோரும் அப்படித்தான் எண்ணிட்டிருக்காங்க' என்றாள்.

'எப்படி எண்ணிட்டிருக்காங்க?' துப்பாக்கி ரவையைப் போல வெளிவந்தது அவன் வாயிலிருந்து கேள்வி.

'......'

'எப்படி எண்ணிட்டிருக்காங்க?' திரும்பவும் கேட்டான்.

'உங்களுக்கும் மாதவிக்கும் சரிப்படாதுன்னு.'

அவன் சிலையாகிவிட்டான். ஆனால் அதைப்பற்றி மேலும் தொடர விரும்பாமல், 'அதைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய் ப்ரியம்வதா?' என்று கேட்டான்.

'உங்களுக்காக ஏதாவது செய்ய முடிந்தால் நன்றாயிருக்கும்னு தோணுது.'

அவன் ஆச்சரியத்தோடு நிமிர்ந்து 'ப்ரியம்வதா' என்றான்.

'ஆமாம்' என்றாள் அவள் ஏதோ மயக்கத்தில் இருந்தாற்போல. 'உங்களுக்கு இதெல்லாம் சின்னப்பசங்களின் காரியங்களைப்போல தோணலாம் சார். ஆனால் நான் உங்களைப் பற்றி எவ்வளவு தூரம் யோசித்துப் பார்த்திருக்கேன் தெரியுமா? இவ்வளவு தூரம் வந்துட்ட பிறகு இனி மறைத்து வைத்தால் மனசாட்சிக்கு விரோதமாயிடும். உங்களுக்காக நான் எதற்குமே சித்தமாயிருக்கிறேன். உங்க

சந்தோஷத்துக்காக எதையும் இழக்கத் தயாராயிருக்கேன். இன்னும் எப்படிச் சொல்லுவேன்?'

'ஆனால் நாளைக்கு உன் எதிர்காலம்?'

'எதிர்காலத்துக்கென்ன வந்தது சார்? அதுபாட்டுக்கு நடந்துக்கிட்டிருக்கும்.'

'கல்யாணம்?'

'யாராவது பையன்கள் கிடைத்தால்தானே அந்தப் பேச்சு...' என்றவள் கொஞ்சம் பொறுத்து, 'என்ன கேட்க நினைக்கிறீங்கன்னு எனக்குப் புரியுது. இஷ்டத்தைப் பொறுத்தவரை மனம், உடல் என்று இரு வேறு விதம் இருப்பதாய் தெரியலை சார் எனக்கு. எப்பொழுது ஒருத்தர் தன் மனத்தை அடக்கிக்க முடியலையோ அப்போது உடலளவில் தொலைவில் இருந்துகொண்டு புனிதமாய் இருப்பதாய் நினைச்சுக்கிட்டால் அது மனசாட்சியை வஞ்சிப்பது போலத்தான். இதை நான் உங்களுக்காக ஒப்புக்கலை சார். எனக்காகவே முன்னோக்கி அடியெடுத்து வைக்கிறேன். உங்க புத்திசாலித்தனம், உங்க வெற்றி இதைப்பற்றியேதான் சார் எப்போதுமே நினைச்சிட்டிருப்பேன் நான். ரவி இப்ப என்ன பண்ணிட்டிருப்பார்? குறிப்பிட்ட டிசைனைக் குறிப்பிட்ட விதத்தில் மார்க்கெட்டிங்கிற்கு அறிமுகப்படுத்தினால் எப்படியிருக்கும்னு யோசிச்சிட்டிப்பாரோ என்னவோன்னு நினைச்சுப்பேன்.' சிரித்தாள்.

அவன் உருகிப்போய், 'ப்ரியம்வதா!' என்றான்.

'ஆனால் ஒரு விஷயம். இப்போதே நம்மேல் ஆயிரம் கண்ணுங்க இருப்பதாய் சந்தேகிக்கிறேன் நான். எனக்குப் பரவாயில்லை சார். நீங்க ஜாக்கிரதையாய் இருங்க.'

'நான் பொருட்படுத்தமாட்டேன் எதையுமே,'

'ஆவேசத்தில் அப்படித்தோணும். இது ஓர் இனிய கனவாய் நின்றுவிட வேண்டியதுதானே தவிர 'ஏண்டாப்பா இப்படிப்பண்ணினோம்னு எண்ணிக்கிறாப்போல ஆயிடக்கூடாது.'

'நீ சொன்னது நிஜந்தான் ப்ரியம்வதா. ஆனால் எனக்குக் கொஞ்சம் மனத்தளவில் தெம்பு வேண்டும். ஒரு பத்து நாள் எங்கேயாவது போயிட்டு வருவோம்.'

'அப்போ நம்மைப்பற்றி சுவரொட்டிகள் ஒட்டிடுவாங்க.' சிரித்தாள்.

'பத்துநாள் இல்லாவிட்டால் ஐந்து—நாலு—ரெண்டு...'

'அப்போ உங்கள் மனைவிக்கு சந்தேகம் வந்துடும், அவள் இப்படிப்பட்ட விஷயங்களை ரொம்பச் சுலபமாய் கண்டுபிடிச்சுடுவான்னு நீங்களே சொல்லியிருக்கீங்க ஒரு வாட்டி.'

'ஆமாம். நம்ப ஆபீசிலேயே அவளுக்கு இந்த விஷயத்தைப்போய்ச் சொல்றவங்க சிலபேர் இருக்காங்க.'

'அப்படியிருக்கும்போது, நீங்க ஊரில் இல்லாமல் நானும் லீவு கேட்டால் உடனே சந்தேகம் வந்துடாதா?''

'எனக்கு ஒரு யோசனை தோணுது.'

'என்ன?'

''இந்த கம்ப்யூட்டரைஸ்டு மிர்ரரை வாங்குவதற்காக எப்படியும் நான் அமெரிக்காவுக்குப் போகப் போறேன். நான் திரும்பி வரும்போது பம்பாயில் காத்திருக்கேன். நீ அங்கே வந்துடு.''

'மைகாட்!'

'ஆமாம். இது எக்ஸலன்ட் ஐடியா. இந்த மாதிரி ஒரு ரெண்டுமணி நேரம் சந்திப்பதும், யாராவது பார்த்துடு

வாங்களோன்னு பயப்படுவதும் வேண்டவே வேண்டாம். நாலு நாள் இதெல்லாவற்றையும் மறந்து போகணும்னால் இந்த இடத்திலேயே இருக்கக்கூடாது முதலில். இந்த உலகத் துக்கே தூரத்தில்...நம்ப உலகத்தில் நாலுநாள் இருந்துக் கணும்.'

அவள் பதில் பேசவில்லை.

'மறுக்காதே ப்ரியம்வதா! ஐயாம் பேட்லி இன் நீட் ஆஃப் இட்' கெஞ்சினான் அவன்.

'இல்லையில்லை. நான் அதற்குச் சொல்லலை.'

'பின்னே?'

'இங்கேயிருந்து நான் தனியாய் பம்பாய்க்கு வந்து, திரும்பவும் அங்கேயிருந்து நாமிருவரும் சேர்ந்து வருவ தெல்லாம் ரொம்பக் கஷ்டம். மேலும் நீங்க அமெரிக்காவி லிருந்து குறிப்பிட்ட தேதிக்குத் திரும்பி வராவிட்டால், அல்லது தாமதமானால், முன்பின் தெரியாத அந்த ஊரில் நான் என்ன பண்ணுவேன்? அதனால் எனக்கு வேறொரு யோசனை வரது.'

'அதென்ன?'

'நம்ப பம்பாயில் இல்லை இங்கேயே சந்திச்சுக்கலாம்.'

'அப்படீன்னால்'—என்று கேட்கப் போய் நின்று விட்டான். அவள் சொன்னதில் உண்மை இருந்தது. ஒரு வினாடி யோசித்துவிட்டு, 'நிஜந்தான். நான் ஸ்டேட்ஸி' லிருந்து எப்போது திரும்பி வருவேன்னு இங்கே எல்லாருக் குமே தெரியும். அவகாசமே இல்லை. இரண்டு நாள் தாமத மாய் வந்ததாய் நினைச்சுப்பாங்க. அல்லது பம்பாயில் தங்கி விட்டிருப்பேன் என்று எண்ணிப்பாங்க. நம்மை யாருமே கண்டுக்க மாட்டாங்க.'

அவள் எழுந்து நின்றாள். 'நீங்க எப்போ வரீங்க ஸ்டேட்ஸிலிருந்து?' என்று கேட்டாள்,

அவன் சொன்னான்.

'அதற்கு நாலு நாளைக்கு முன்னாலிருந்தே லீவு போட்டுடறேன்.'

'ஆமாம், அதுதான் நல்ல யோசனை. நான் வந்ததுமே உன்னை பிக் அப் பண்ணிக்கிறேன்.'

'நீங்க வந்தது நம்பளைச் சேர்ந்தவங்க யாருக்காவது தெரிஞ்சுட்டால் ரொம்ப ஆபத்தாயிடும்' என்றாள் சிரித்துக்கொண்டே.

'அதை நான் பார்த்துக்கறேன்.'

சம்பாஷணை முடிந்ததுமே அவள் எழுந்து போகத் திரும்பினாள். 'ப்ரியம்வதா' என்றான் அவன். அவள் நின்றாள். 'நன்றி என்பது மூன்று எழுத்துச் சொல். அதைக் காட்டிலும் இன்னும் எப்படிச் சொல்றதுன்னு புரியலை எனக்கு' என்றான்.

அவள் சிரித்துவிட்டு, 'அந்த நாலு நாளும் ஆன பிறகு என்னிடம் சொல்ல வேண்டிய வார்த்தை அது' என்று போய்விட்டாள். அவள் போன ஒரு நிமிஷம் வரையிலும் புரியவில்லை. புரிந்ததுமே முகம் சிரிப்பால் மலர்ந்தது. அவன் இதயம் ஏதோ இனம் புரியாத உற்சாகத்தால் குதித்துக் கூத்தாடிக்கொண்டிருந்தது.

வெளியே மழை வரத் தயாராயிருந்தது.

# 33

இது நடந்து ஒரு வாரங்கழித்து அவன் அமெரிக்காவுக்குப் போனான். எஞ்சிய விவகாரங்களையெல்லாம் நான்கு நாட்களில் செய்து முடித்தான். இரண்டு கம்பெனிகளும் காண்ட்ராக்ட் பாரத்தில் கையொப்பமிட்டன. அதற்கு

முன்பே உடன் படிக்கை ஏற்பட்டு விட்டது. அதனால் எல். சி. விடுதலை பண்ணுவது மட்டுந்தான் எஞ்சி நின்றது.

அதுவரை ரெடிமேட் ஆடைகளிலேயே புடவைக் கட்டின் பிரதிபலிப்பைக் காட்டி வந்தார்கள் கம்பெனிக்காரர்கள். ரவி முதல் முறை போயிருந்த போதே இந்தப் புடவைக்கட்டின் ஸ்கெட்சுகளைப் போட்டுக் கொடுத்தான். அந்த டெமான்ஸ்ட்ரேஷனில் திருப்தியடைந்தான்.

இந்த உடன்படிக்கையை இந்தியாவில் வேறெந்த கம்பெனிக்கும் ஒரு வருடத்திற்குத் தராமலிருக்க ஏற்பாடு நடந்தது. நியூயார்க்கில் இந்த 'மேஜிக் மிர்ரர்' இருந்த கடைகளில் கூட்டம் நிரம்பி வழிந்ததைப் பார்த்து வியப்படைந்தான். மிக துரித கதியில் நடந்தேறிக் கொண்டிருந்தது வியாபாரம். சிரமமும் இல்லை. நான்கே நாட்களில் காரியம் வெற்றிகரமாய் நடந்து முடிந்தது. அவனுக்கு எப்பொழுது திரும்பிப் போவோமோ என்றிருந்தது. காரியம் நடந்து முடிந்து விடுவது வேறு, அதற்காக எதிர்பார்த்துக் கொண்டிருப்பது வேறு. இரண்டாவதில் இருக்கும் 'த்ரில்' முதலாவதில் இருக்காது. எந்த வேலையைச் செய்தாலும் அவன் மனமெல்லாம் நடக்கப் போவதின் மேலேயே இருந்து வந்தது. ஏதோ இனம் புரியாத உத்வேகம்.

கோடி ரூபாய்க்கு டெண்டர் எடுக்கும்போதுகூட அவன் அவ்வளவு டென்ஷனாய் இருந்ததில்லை. ஏனோ அவனுக்கே தெரியாமல் உதடுகளில் குறுநகை படர்ந்து கொண்டிருந்தது. அமெரிக்கன் டைரக்டரோடு பேசிக் கொண்டிருந்த போது கூட இந்த யோசனை அவனை விட்டு அகலவில்லை. அவனுக்கு இதெல்லாம் வினோதமாய்க் கூட இருந்தது. இது வெற்றிகரமான த்ரில்தானா என்று கேட்டால் அவனால் பதில் சொல்ல முடியாது. ஆனால் இதில் இவ்வளவு த்ரில் இருக்குமென்று அவனுக்கு இன்றுதான் தெரிந்தது. ஒருத்தரை எதிர்பார்ப்பதில் இருக்கும் த்ரில்...

மாதவியோடு அவன் திருமணம் சிறுவயதிலேயே நடந்து முடிந்து விட்டதாலும் அதற்குப்பிறகு அவனுக்கு அப்படிப்பட்ட 'த்ரில்' எதையுமே தர அவள் முயற்சிக்காத தாலும், இவ்வளவு நாட்களாய் அதிலிருந்த ஆனந்தத்தை உணரவில்லை. வேலையை முடித்துக் கொண்டு அவன் தாய்நாட்டிற்குக் கிளம்பினான். முதலில் தீர்மானித்திருந்த நாளே வேலையும் முடிந்தது.

பம்பாயில் இறங்கும்போது இரவு பத்து மணி. அன்றிரவு அங்கேயே தங்கிவிட்டு மறுநாள் காலை சென்னைக்குக் கிளம்பினான்.

பம்பாய் விமான நிலையத்தில் டிக்கெட் வாங்கும் பொழுது எழுதி நிரப்ப வேண்டிய பாரத்தில் எப்பொழுதும் போலவே 'ரவி' என்று எழுதி முடித்தான். அவ்வளவு பயப் படவேண்டிய தேவையிருப்பதாய்த் தோன்றவில்லை அவனுக்கு. விஷயம் அவ்வளவு தூரத்திற்கு வந்தாலும் கூட 'ஆமாம், பண்ணினேன். ஏன்?' என்று எதிர்த்துக் கேட்கும் தைரியம் அவனுக்கிருந்தது. ப்ரியம்வதாவுக்காகத்தான் அவன் ஜாக்கிரதை எடுத்துக்கொண்டான்.

விமானத்தில் மட்டும் தெரிந்தவர்கள் யாராவது தென் படுகிறார்களா என்று பார்த்தான். யாருமே இல்லை. விமானநிலையத்தில் இறங்கி, டாக்சி பிடித்து, ப்ரியம்வதா வின் வீட்டிற்குக் கிளம்பினான்.

அதிர்ஷ்டவசமாய் கீழே வீட்டுக்காரரின் வீடு பூட்டி யிருந்தது. மேலே அவனுக்காக ப்ரியம்வதா காத்துக்கொண் டிருந்தாள். அவனைப் பார்த்ததுமே அவள் முகம் மலர்ந் தது. அவன் சிரித்துவிட்டு, 'கிளம்புவோமா?' என்றான். தயாராய் எடுத்து வைத்திருந்த சிறிய ப்ரீஃப்கேசுடன் அவள் வெளியே வந்தாள். இருவரும் ஏறி உட்கார்ந்ததும் டாக்சி புறப்பட்டது. அரை மணிக்கெல்லாம் நகரத்திலேயே பெரிய ஓட்டலுக்கு முன்னால் வந்து நின்றது. அங்கே பாரத்தை நிரப்பும்பொழுது மட்டும் 'சந்திர பிரியா' என்று

எழுதினான், பம்பாயிலிருந்து வருவது போல. அதற்குள் ரூம் பையன் சாமான்களை வாங்கிக் கொண்டான். அவள் அந்த அறையைப் பார்த்து விட்டு ஆச்சரியமடைந்து 'மை காட்!' என்றாள் தன்னையுமறியாமல்.

விசாலமான அறை. நீல நிற கால்மிதி. ஒரு மூலையில் ஃபிரிட்ஜ். மேஜையின் மேல் ரோஜாப்பூக்கள். பளிச்சென்ற விளக்குகள். சானல் மியூசிக்கில் கிதார் இசை குறுக்காய் விசாலமான கண்ணாடி. ஒரு மூலையில் டி.வி. உயரமான கட்டில். தண்ணீர் கூஜா. வாட்டர் பில்டர், தம்ளர்கள், மிதமான வாசனை குளிர்ந்த காற்றோடு கலந்து வந்து மோதி மேனியைச் சிலிர்க்கச் செய்யும் புதுமை...

பையன் போனதுமே சிறிய ஓசையுடன் கதவு மூடிக் கொண்டது. கதவிற்குத் தாழிட்டுவிட்டுத் திரும்பினான். எதிரேயிருந்த ப்ரியம்வதாவின் கண்களைப் பார்த்ததுமே...

ரவிக்குப் ப்ரியம்வதா தென்படவில்லை. மாதவியும் தென்படவில்லை. பார்க்கப் போனால் அந்த நேரத்தில் அவனுக்குத் தன்னைத் தவிர எதுவுமே தென்படவில்லை. ஆனால் அது தனிமை இல்லை. கவிஞனாகி, கவிதையாகி, கோடை வெப்பத்தில்...நிலா வெளிச்சத்தில்.

பன்னீர் அருவியில் கண்ணீரில் குளித்தபடி....அவனுக்குள் அவனே ஒன்றுகூடி, அவனுக்குள் அவனே மெய் மறந்து...

திக்பிரமையடையாமல் மனத்தின் அடித்தளத்தில் அலைமோதிக் கொண்டிருக்கும் இந்த வார்த்தைகள் தட்டி எழுப்பவே சோம்பல் முறித்துக்கொண்டு விழித்தெழுந்தான் ரவி. அவனை அந்த நேரத்தில் அந்த புடவை கட்டிய நங்கை வென்றுவிட்டாள்.

அவன் இதுவரை எந்த ஒரு பொருளையும்கூட அவ் வளவு முரட்டுத்தனமாய் தொடக்கூடியவனில்லை. அவன்

அணைப்பில் மூச்சுவிடக்கூட முடியாமல் திணறிக் கொண் டிருந்த ப்ரியம்வதாவுக்கு அது வியப்பு. ஆனால் அவளுக்கு இன்னொரு சங்கதிகூடத் தெரியாது- அந்த நிமிஷத்தில் அவன் பாலுணர்ச்சிக்கும், உணர்ச்சித் துடிப்பிற்கும் அதீத மான நிலையில், ஒரு பெண் உடலைத் தழுவுவது போலில் லாமல், அப்பொழுதுதான் உறக்கத்திலிருந்து விழித் தெழுந்த தன்னையே தான் தழுவிக் கொண்டிருந்தான் என்று!

அவளுக்கு இன்னொரு விஷயம் கூட தெரியாது—அவன் கண்கள் அருவியைப் பொழிந்துகொண்டிருந்தன என்று!

தன்னைத்தான் மறந்துபோகும் முயற்சியில் அவன் தன்னையே தான் தெரிந்து கொள்ளலானான்.

கன்னத்தில் விழுந்த நீர்த்துளி அவன் கண்களிலிருந்து தான் உருண்டு விழுந்ததோ, அவன் கேசக்கற்றைகளி லிருந்து தெறித்து விழுந்ததோ தெரியாது. காலை வெளிச் சத்தில் பளபளத்துக் கொண்டிருந்தது.

காலை நேரம் போய் பிற்பகல் நேரம் வந்தபோது அவனுக்கு விழிப்பு வந்தது! ப்ரியம்வதா இன்னும் உறங்கிக் கொண்டிருந்தாள. ஜன்னல் திரையை விலக்கியதுமே சூரிய வெளிச்சம் அறைக்குள் பிரகாசமாய் வந்து மோதிற்று. வெளியே சூரியனின் வெப்பத்திற்கும் உள்ளே குளிர்ந்த காற்றிற்கும் எதிராக இருந்தது.

டி.வி.யைப் போட்டான். டென்னிஸ் மாட்ச் நடந்து கொண்டிருந்தது. அவன் பாத்ரூமுக்குப் போய் ஷவரைத் திருகினான், வெதுவெதுப்பான நீர் உடம்பில் பட்டு களைப் பைப் போக்கி ஆனந்தத்தைத் தந்தது.

சுமார் ஐந்து நிமிஷம் அப்படியே பாத்டப்பில் கண் களை மூடிக்கொண்டு படுத்திருந்தான். அறையெங்கும் வெண்ணிற நீராவிப் புகை. மேகங்களுக்கிடையே மிதந்து கொண்டிருந்த தேகம். சானலில் 'லவ் பிட்வீன் ரெயின்

ட்ராப்...' என்ற பாட்டு லேசாய் வந்து மோதிக் கொண்டி ருந்தது

வெளியே போன் பண்ணிக் கொண்டிருந்த சப்தம் அவனைத் தட்டி எழுப்பிற்று. அவனுக்குப் புரியவில்லை. ப்ரியம்வதா யாருக்கு டயல் பண்ணுகிறாள்? அவள் மேல் கொஞ்சம் கோபம்கூட வந்தது. இந்த ஓட்டலில் தாம் இருவரும் இருப்பதாய் வெளியே இருப்பவர்களுக்குக் கொஞ்சமேனும் சந்தேகம் வந்தாலும் ஆபத்தாயிற்றே! அதை மறந்துவிட்டாளா அவள்?

அவன் பாத் டப்பிலிருந்து எழுந்திருந்து டவலைச் சுற்றிக்கொண்டு அறைக்குள் வந்தான். அதற்குள் அவள் சம்பாஷணையைத் தொடர்ந்து விட்டிருந்தாள்.

'ஆமாம். இன்றைக்குதான் வந்தேன். நாளைன்றைக்கு ஜாயின் ஆகிறேன். ஆபீசு விஷயம் ஏதாவது உண்டா?'

மறுமுனையில் என்ன பதில் வந்ததோ தெரியவில்லை.

'எம்.டி. எப்போது வராராம்?'

ரவி வந்து கட்டிலில் உட்கார்ந்தபோது அவள் அவனைப் பார்த்துச் சிரித்தாள். 'நம்ப ஆபீஸ்காரங்க ளோடு பேசுகிறாயா?' என்று கேட்டவன் சட்டென்று போனில் தன் குரல் கேட்டுவிடப் போகிறதே என்று மௌனமானான்.

'எங்கே? இன்னுமா ஸ்டேட்ஸிலேயே இருக்கார்?' குறும் பாய்க் கேட்டாள். ஆனால் அதற்குள் அவள் முகத்திலிருந்த சிரிப்பு மாயமாயிற்று. மறுமுனையிலிருந்து கேட்ட செய்தி அவள் முகத்தில் மாறுபாட்டை ஏற்படுத்தியதைக் கவனித் தான் அவன்.

'யாரு? சர்மா சாரா?'

'......'

'அவ்வளவு அர்ஜெண்ட் வேலையா, அதென்ன?'

'............'

ரவி கலவரமடைந்தவனாய் அவளைப் பார்த்தான். ஏதோ எதிர்பாராதது நடந்து விட்டிருக்கிறது என்பது அவள் முகத்திலிருந்து புரிந்தது.

'இப்போ ட்ரை பண்ணப் போறீங்களா?'

ரவி எழுந்திருந்து போய் டி.வி.யை அணைத்தான். திரும்பி வந்து உட்கார்ந்துக் கொண்டான்.

'சரி, நான் நாளன்னைக்கு வரேன். அதுவரை லீவு இருக்கு' என்று போனை வைத்து விட்டாள்.

'யாருக்கு? நம்ப ஆபீசுக்குப் போன் பண்ணினாயா? ஏன் இங்கேயிருந்து பண்ணினாய்?' ரவி கேட்டான்.

'பண்ணினதே நல்லதாச்சு. உங்களுக்காக டைரக்டர் அமெரிக்காவுக்குப் போன் முயற்சி பண்ணிட்டிருக்காராம்.'

ரவி திடுக்கிட்டான். அவ்வளவு அர்ஜெண்ட்டாய் தன் தேவை அவர்களுக்கு ஏன் ஏற்பட்டது என்று யோசிக்க வில்லை அவன். அமெரிக்காவிலிருந்து அவன் கிளம்பி இன்றைக்கு மூன்று நாட்கள் ஆகிவிட்ட செய்தி அவர்களுக் குத் தெரிந்தால் என்னவாகும் என்றுதான கலங்கினான். அவன் மனதிலிருந்த குற்ற உணர்ச்சி இக்கலவரத்தை அதிகப்படுத்திற்று.

'இப்பொழுது என்ன பண்றது?' இருவரும் கொஞ்ச நேரம் யோசனையில் மூழ்கியிருந்தார்கள்.

'எனக்கு ஒன்று தோணுது' என்றாள் பரியம்வதா நிசப்தத்தைப் பிளந்து கொண்டு.

என்ன என்பது போல ஏறிட்டான் அவளை.

'அவங்களுக்கும் முன்னாடி நீங்களே அவங்களுக்குப் போன் பண்ணுங்க. இன்னும் ரெண்டு நாள் வேலை இருக்கிறாப்போல பேசுங்க. அதற்குள் அவங்களே உங்களுக்கு அவங்க எதுக்குப் போன் பண்ணணும்னு இருக்காங்களோ அந்த விஷயத்தைச் சொல்லிடுவாங்க.'

அவன் புரியாமல், 'நான் அமெரிக்காவிலிருந்து பேசுவது போலவா?' என்றான்.

'ஆம்' என்று தலையாட்டினாள்.

அவன் கொஞ்சம் யோசித்தான். அந்த ஐடியா நன்றாயிருப்பது போலத்தான் பட்டது. இண்டர் நேஷனல் கால் லோகல் காலைப்போல தெளிவாய் கேட்கும். அதனால் அவர்களுக்கு சந்தேகம் வராது. முதலில் அவர்கள் தனக்காக ஏன் போன் முயற்சி பண்ணுகிறார்கள் என்று தெரிய வேண்டும். இல்லாவிட்டால் மனநிம்மதி இராது. அவன் போனை எடுத்தான்.

பொய் சொல்லுவது அத்தனை எளிதல்ல.

அவன் கை கொஞ்சம் நடுங்கிற்று.

ப்ரியம்வதா அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். கடைசியில் எப்படியோ ஒருவழியாய் டயல் பண்ணினான். ரிஸப்ஷனிஸ்ட் 'ஹலோ...ரவி டெக்ஸ்டைல்ஸ்' என்றாள்.

'நான்தான் ரவி. சர்மா சார் இருக்காரா?'

மறுமுனையிலிருந்து பேசியது முதலாளி என்று தெரிந்ததுமே ரிஸப்ஷனிஸட் கலவரமடைந்தவளாய் '...சார்' என்றாள். அந்தக் கொஞ்ச நேரத்தில் அவன் சுதாரித்துக் கொண்டு விட்டான்.

'நான்தான் ரவி. சர்மா சார் இருக்காரா?' திரும்பவும் கேட்டான்.

'இருக்கார் சார், இப்பத்தான் உங்களுக்காக ஸ்டேட்ஸுக்கு முயற்சி பண்ணினோம் சார். இப்பத்தான் கிடைச்சுது அந்த கால். நீங்க அங்கேயிருந்து புறப்பட்டு ரெண்டு நாளாயிடுத்தாமில்லே? நீங்க எங்கே இருக்கீங்களோ தெரியலை.'

ரவி திடுக்கிட்டான். போனோடு கூட அந்த அறையிலிருந்த சாமான்கள் எல்லாம் கிர்ரென்று சுழல்வது போலிருந்தது.

'சர்மா சாருக்கு கனெக்ஷன் த்ரேன் லைனில் இருங்க' மறுமுனையில் கேட்டது.

'என்னவாச்சு?' ப்ரியம்வதா குனிந்து மெல்லிய குரலில் கேட்டாள். அவன் ரிசீவரின் வாயைக் கையால் மூடிக்கொண்டு, 'நான் அமெரிக்காவிலிருந்து புறப்பட்டு வந்துவிட்டது அவங்களுக்குத் தெரிஞ்சுடுத்து' என்றான்.

'அதனாலென்ன? பம்பாயிலிருந்து பண்றதாய் சொல்லுங்க.' அதற்குள் சர்மா லைனுக்கு வந்தார்.

'ரவி'

'ஆமாம். நான்தான் பேசறேன், பம்பாயிலிருந்து.'

'பம்பாய்க்கு வந்துட்டாயா? நாங்க இங்கே ஸ்டேட்ஸுக்கு முயற்சி பண்ணினோம். அங்கே விசாரித்தபோது நீ எப்போதோ கிளம்பிப்போயிட்டதாய் சொன்னாங்க.'

'ஆமாம். நேற்றுதான் பம்பாய்க்கு வந்தேன். இங்கே கொஞ்சம் பெர்சனல் வேலை இருந்ததால் தங்கிட்டேன். என்ன, ஏதோ அர்ஜென்ட் வேலையாமே?'

'அர்ஜென்ட் ஒன்றுமில்லை. நமக்கு இந்த வருஷம் சிறந்த கம்பெனின்னு ஜனாதிபதி பரிசு கிடைச்சிருக்கு. அதைச் சொல்லத்தான்.'

ரவி அம்மாடா என்று பெருமூச்சு விட்டான். பார மெல்லாம் திடீரென்று குறைந்து விட்டாற்போலிருந்தது. 'கங்கிராட்ஸ்' என்றான்.

'உனக்குத்தான் நாங்க சொல்லணும். எப்ப வராய்?'

டென்ஷன் குறைந்ததுமே மிக நிம்மதியடைந்தான். அந்த உற்சாகத்தில், 'எப்ப வரச்சொல்றீங்க?' என்று கேட்டான்.

'உன்னிஷ்டம்...வேலையை முடிச்சிட்டு வா போதும். இங்கே ஒன்றும் அர்ஜென்ட் இல்லை. பம்பாயில் எங்கே தங்கியிருக்கிறாய்?'

'நாளன்றைக்கு வரேன். இங்கே 'சீ ராக்'கில் தங்கி யிருக்கேன்.'

'ஓகே. வெச்சுடறேன்'

அவன் போனை வைத்துவிட்டு, அருகிலேயே நின்றுக் கொண்டிருந்த ப்ரியம்வதாவை பின்னாலிருந்த படுக்கை யில் அப்படியே தள்ளி உதட்டின் மேல் அழுத்தாய் முத்த மிட்டான். உற்சாகத்தோடு, ''என்னவாச்சு?' என்று கேட்டாள் அவள். ஜனாதிபதி அவார்டைப் பற்றிச் சொன்னான் அவன். 'ஓஹோ' என்றாள் அவள் கண்கள் பளபளக்க. 'கங்கிராஜுலேஷன்ஸ்'

'தாங்க்ஸ்'

'மைகாட்! எனக்கு மூச்சுவிட முடியலை.'

அவன் எழுந்திருக்கும் முயற்சியைப் பண்ணாமலேயே, 'நான் உனக்கு இன்னொன்றுக்குக்கூட தாங்க்ஸ் சொல்ல ணும்' என்றான்.

'எதுக்கு?'

''நீ யாருக்கோ போன் பண்ற சப்தம் பாத்ருமிலிருந்த போது கேட்கவே, உன் மேல் கோபம் வந்தது. ஆனால்

நீ போன் பண்ணினதே நல்லதாச்சு. இல்லாவிட்டால் இவங்க எனக்காக அமெரிக்காவுக்குப் போன் பண்ணின விஷயமே எனக்குத் தெரிந்திருக்காது. நாளன்றைக்கு நேரில் சந்திக்கும்போது அவங்க இந்த விஷயத்தைச் சொல்லியிருந்தால் சட்டென்று தேறிக்க முடியாமல் கலவரப்பட்டிருப்பேன். அதுக்குதான் தாங்ஸ்.'

'தாங்க்ஸையும் முந்திக்கிட்டு இன்னொரு காரியத்தைக்கூட பண்ணணும் நீங்க. பாரத்தையெல்லாம் என் மேல் போடாமல் கொஞ்சம் நகர்ந்துக்கணும்'

அவன் நகராமல், 'இன்னொன்றுக்குக்கூட தாங்ஸ் சொல்லணும். அதைச் சொல்லிட்டு அப்புறம் நகர்ந்துக்கறேன்...கேளு! பம்பாயிலிருந்து பேசறதாய் யோசனையை நீ எனக்குத் தந்திருக்காவிட்டால் உடனே இங்கேயிருந்து ஏறக்கட்டிட்டு நாம் புறப்பட்டிருக்க வேண்டியிருந்திருக்கும். இந்த இரண்டு நாளும் இந்த மாதிரி நாம் சேர்ந்திருக்கும் படியாய் யோசனை சொன்னதற்கு இரண்டாவது தாங்ஸ்' என்று நகர்ந்து கொண்டான். அவள் அம்மாடா என்று பெருமூச்சு விட்டுக்கொண்டாள்.

'என்ன, உனக்குச் சந்தோஷமாயில்லையா?'

'ரொம்ப ரிலீஃபாய் இருக்கு.'

'உன் யோசனைதானே!'

'அதுக்கில்லை. என் மேலிருந்து நகர்ந்துகிட்டதற்கு.' சிரித்தாள். கோவில் பிராகாரத்தில் அரளிப்பூ மொட்ட விழ்ந்தது போலிருந்தது அவள் சிரிப்பு. அவன், அவள் கழுத்திற்குப் பின்னால் முத்தமிட்டான். அவள் சிலிர்த்துக் கொண்டாள்.

போய்விட்டு வருவதாய் விடைப் பெற்றுக்கொண்டு பிற்பகலிலிருந்து மாலைவரையிலும் கொஞ்ச நேரம் தனியே போய்விட்டாள். மூன்றரை மணி அடித்தது.

வந்தவள், 'நீங்கள் குளிக்கவாவது குளிச்சிங்க. நானோ அதுவும் பண்ணலை. கொஞ்ச நேரம் காத்திருந்தால் குளிச்சிட்டு வரேன்.'

'சாரி, நாம காலை டிபன் கூட சாப்பிடலை. அதை மறந்துட்டேன்.'

அவள் துவாலையை எடுத்துக்கொண்டு கிளம்பியவள், 'காலை டிபன், லஞ்ச் எல்லாம் தீர்ந்து விட்டிருக்கும். குறைந்த பட்சம் டின்னராவது கொஞ்சம் சீக்கிரமாகச் சாப்பிடுவோம்' என்று சிரித்துவிட்டு உள்ளே போய் கதவைத் தாழிட்டுக் கொண்டாள்.

பெண்கள் ஆண்களோடு சரிசமானமாய் பேசக்கூடியவர்கள் என்று அவனுக்கு இப்பொழுதுதான் தெரிந்தது. இந்த வயதில் அந்த அனுபவம் புதுமையாயிருந்தது. முக்கியமாய் நேற்றிரவிற்கும் இன்றைக்கும் நிறைய வித்தியாசம் தெரிந்தது. நேற்றிரவு அவள் வெட்கத்தை விட்டு வெளியே வரபண்ணிய முயற்சி, இன்றைக்கு அவன் தேகத்தின் மீது எடுத்துக்கொண்ட உரிமை வரைக்கும் மாறிவிட்டது. அது அவனுக்கு மிக திருப்தியளித்தது.

உள்ளே தண்ணீர் சத்தத்தைக் கேட்டபடியே அவன் யோசனையில் ஆழ்ந்தான்—'நான் செய்தது தப்பு என்றோ யாருக்காவது துரோகம் பண்ணி விட்டேன் என்றோ யார் நினைத்தாலும் நினைத்துக் கொள்ளட்டும். நான் பொருட்படுத்தப் போவதில்லை. வாழ்க்கையில் இவ்வளவு ஆனந்தம் இருக்கும் விஷயம் இப்பொழுதுதான் புரிந்தது. இவளோடு பரிச்சயமாகாமலிருந்திருந்தால் என் வாழ்க்கைப் புத்தகத்தில் ஒரு பாகம் நிரந்தரமாய் திறந்து கொள்ளப்படாமலேயே வாழ்நாளெல்லாம் அப்படியே இருந்து விட்டிருக்கும். அரசியலிலும், வியாபாரத்திலும், சதுரங்கத்திலுந்தான் புத்திசாதுரியம் வேண்டும் என்று இத்தனை நாளும் நினைத்திருந்தேன். இப்பொழுதுதான் தெரிகிறது. தம் துணைவி அல்லது துணைவரைத் திருப்தி படுத்துவதற்குக்

கூட ஒரு மனிதனுக்கு அதைக்காட்டிலும் மிக புத்திசாதுரியம் தேவை என்று!

இப்படியே மல்லாந்து படுத்தவாறு—சுழலும் மின் விசிறியையும், காற்றில் ஆடும் ஜன்னல் திரைச் சீலையையும், படபடக்கும் காகிதத்தையும் பார்த்தால் கூட ஆனந்தத்தை உண்டாக்கக்கூடிய திருப்தி இதில் இருக்கிறதென்றால்... ஓ மாதவிகளே, எவ்வளவு பேர் ஆண்களை நீங்கள் இருட்டிலேயே வைத்திருக்கிறீர்கள்?

எவ்வளவோ மன வேற்றுமைகளைக் கூட இந்த வழியால் போக்கடித்துக் கொள்ளலாம் என்று உங்களுக்கு எப்பொழுது தெரியப் போகிறது? தெரிந்து கொள்ள வேண்டியது ஆண்தான் என்பது உங்களுடைய எதிர்க் கேள்வியானால், என்னிடமிருந்து முழு பதிலும் கிடைக்காது. ஆனால் சூரியனின் கிரணம் பட்டதுமே இதழ் விரிந்துகொள்ள வேண்டும் என்று தெரிந்து வைத்திருக்க வேண்டியது சூரியனா? தாமரைப்பூவா? பந்தலைக் கண்டதுமே சுற்றிக் கொள்ளவேண்டுமென்று மல்லிகைக் கொடிக்கு யார் சொல்லித்தந்தார்கள்? இவ்வளவு இயற்கையான ஆனந்தத்தைக் கூட உங்கள் அகம்பாவத்தால் ஏன் போக்கடித்துக் கொள்கிறீர்கள்?......

அவன் அந்தக் கனவில் சஞ்சரித்துக் கொண்டிருந்த போது, அவள் வந்து அவனுக்கருகில் உட்கார்ந்து கொண்டாள். அவள் மேனியிலிருந்து வந்த மணத்தை அனுபவித்தபடியே அவன் தன் மனைவியை நினைத்துக்கொண்டான்.

'இப்பத்தான் குளிச்சுட்டு வந்திருக்கேன். பாழடிக் காதீங்க' என்று அவனைக் காட்டிலும் அவள் கட்டிக் கொண்டிருக்கும் புடவைக்குத்தான் அதிக முக்கியம் தரும் மனைவியையும், இவ்வளவு நாட்களாய் இதனைக் குளியலுக்கு ஒப்பான புனிதமான நடவடிக்கையாய்ப் பாவித்ததற்கு வெட்கமடைந்தவனாய், இவ்வளவு நாட்கள் கழித்த வெறுமையையும் அசை போட்டபடியே இருந்த சமயத்தில்

அங்கே பம்பாய் சீ-ராக் ஓட்டலில் ஒரு வினோதமான நிகழ்ச்சி நடந்தது.

# 34

இதற்கு முன்னால் இன்ஸ்பெக்டராய் நடித்து ரவிக்கு உதவி செய்த ஆள் பாஸ்கர்......இப்பொழுது ஃபுல் சூட்டில் இருந்தான். கேசங்களை முகத்தில் வந்து விழும்படி வாரிக் கொண்டிருந்தான். முன்பிருந்த மீசைக்கும் இப்பொழுது இருந்ததற்கும் வேறுபாடு இருந்தது. மேக்கப் நன்றாய்த் தெரிந்த ஆள் அவன் முகத்தை ரவியைப்போலவே மாற்றி விட்டிருந்தான்.

அவன் ரிஸப்ஷனிடம் வந்து '401 ப்ளீஸ்' என்றான். ரிஸப்ஷனிஸ்ட் அந்த அறையின் சாவியை அவனிடம் தந்தாள். அவன் அவளை உற்றுப் பார்த்துவிட்டு, 'இந்தப் புடவை உங்களுக்கு ரொம்ப நன்றாய் பொருந்தியிருக்கு' என்றான்.

'தாங்க்யூ சார்' என்றாள் அவள்.

'உங்களுக்குத் தெரியுமா, இது நாங்க தயாரித்த புடவை.'

அவள் ஒன்றும் புரியாதவளாய் அவனைப் பார்த்து 'நீங்களா?' என்றாள். அவள் பார்வை தன்னையறியாமல் மேஜையின் மேலிருந்த கார்டின் மேல் பட்டது. அங்கிருந்த பெயரைப் பார்த்துவிட்டு, 'ர...வி...தே...ஜா...வா? என்றாள். அவன் புன்முறுவலுடன் தலையாட்டினான்.

'யூ மீன் ரவிதேஜா டெக்ஸ்டைல்ஸ்?'

'ஆமாம்'

'நீங்கதானா ரவி?'

'ஆமாம். அதில் ஏதாவது சந்தேகமா?'

'அதில்லை. சாரி சர், ஐயாம் ஜஸ்ட் த்ரில்ட். அதான்.'

'இட்ஸ் ஆல் ரைட்-உங்க பேர்?'

'சந்திரிகா ப்ரியதர்சினி'

'பெயர்கூட புடவையைப் போலவே அழகாயிருக்கு' என்று சொல்லிவிட்டு அவன் லிஃப்டை நோக்கி நடந்தான். லிஃப்ட் கதவு மூடிக் கொண்டிருந்தபோது அவளைப் பார்த்தான். அவள் இந்தப் பக்கமே பார்த்துக் கொண்டிருந்ததைக் கவனித்து விட்டு, கட்டை விரலை மேலே தூக்கினான். அவள் சிரித்துக்கொண்டே ஏதோ வேலை இருப்பதுபோல பின் பக்கம் திரும்பிப் போய்விட்டாள்.

நாலாம் மாடியில் லிஃப்ட் நின்றதுமே அவன் தன் அறைக்குள் போனான். ஐந்து நிமிஷத்தில் ரிஸப்ஷனிஸ்டிற்குப் போன் பண்ணினான்.

'ஹலோ' என்று கேட்டது.

'சந்திரிகா ப்ரியதர்சனி?'

'ஸ்பீக்கிங்'

'நான்தான் ரவி'

'சொல்லுங்க'

'நான் எட்டு மணி நேரம் டிஸ்டர்ப் ஆகாமல் பார்த்துக்கணும்னு கொஞ்சம் ஆபரேடருக்குச் சொல்றீங்களா? போன் எது வந்தாலும் நான் அறையில் இல்லைன்னு சொல்லுங்க.'

அவன் உடனே போனை வைத்து விடவில்லை. அவளும் கூட.

'நீங்க புதிதாய் வேலைக்குச் சேர்ந்திருக்கீங்களா?'

'ஆமாம் சர்'

'அதான் என்னை அடையாளம் புரிஞ்சுக்கலை. நான் எப்ப வந்தாலும் இந்த ஓட்டலில்தான் தங்குவேன்.

இங்கே எல்லோரையுமே எனக்குத் தெரியும். ஆபரேட்டர் கூட புதிதாய் வந்து சேர்ந்திருப்பதாய் தெரியுது. இந்த விஷயத்தை அவளிடம் சொன்னால், இன்னும் ஒரிரண்டு மணி நேரத்தில் தான் டியூடி முடிந்து அவள் போய்ச் சேர்ந் துடுவாள். அடுத்ததாய் டியூடிக்குவர ஆபரேட்டருக்கு இந்த விஷயத்தைச் சொல்லுவாளோ இல்லையோன்னுதான் சந்தேகப்பட்டு உங்களைத் தொந்தரவு படுத்தறேன்.'

'அதெல்லாம் ஒன்றுமில்லை. இட்ஸ் ப்ளஷர். அடுத்து வரப்போற ஆபரேட்டரண்டையும் சொல்லிடறேன் சார்.'

'தாங்ஸ். இன்னும் ஏதாவது விசேஷம் உண்டா?'

'ஒன்றுமில்லை...சார்'

'ஒன்றுமில்லையா? இருந்தால் போன் பண்ணுங்க. உங்கள் ஒருத்தருக்கு மட்டும் இந்த போன் நிபந்தனை கிடையாது.'

சின்னதாய் சிரிப்பு—

'சரி' போனை வைத்து விட்டாள்.

சம்பாஷணையெல்லாம் மறைமுகமான 'கோட்'. அவன் சிரித்துக்கொண்டே போனை வைத்து விட்டான். இரண்டு நிமிஷங் கழித்து எழுந்து வெளியே வந்தான். பூட்டிவிட்டு சாவியை பாக்கெட்டில் வைத்துக்கொண்டான். சாதாரண லிஃப்டில் இல்லாமல் சர்வீஸ் லிஃப்ட்டில் கீழே இறங்கினான்.

ரிஸப்ஷனிஸ்டின் பின்பக்கமாய் இறங்கிற்று அது. சந்திரிகா ப்ரியதர்சினி அந்தப் பக்கமாய் திரும்பி என்னவோ வேலை பண்ணிக் கொண்டிருந்தாள். அவள் கவனிக்காத வாறு வெளியே வந்தான். டாக்சியில் ஏறி, 'ப்ரெசிடென்ட் ஓட்டல்' என்றான்.

டாக்சியிலிருந்து இறங்கி '304' என்றான்.

'மிஸ்டர் பாஸ்கர்?'

'ஆமாம்'

ரிசப்ஷனிஸ்ட் தந்த சாவியை வாங்கிக்கொண்டு, தன் அறைக்கு வந்தான். ஆபரேட்டருக்குப் போன் பண்ணி, 'மெட்ராசிலிருந்து காலையில் வரும் விமானம் எப்பொழுது வரும்னு தெரிந்துகொண்டு, அது வரும் சமயத்துக்குச் சரியாய் அரை மணிக்கு முன்னால் என்னை எழுப்புங்க. நான் போய் ரிசீவ் பண்ணணும்' என்றான்.

'ஷ்யூர் சர்'

அவன் போனை வைத்துவிட்டு குடிக்கத் தொடங்கினான். பாட்டிலை முடித்துவிட்டு உறக்கத்தில் ஆழ்ந்தான்...... பம்பாய் பட்டணம் கூட விளக்கு வெளிச்சத்தில் உறங்கத் தொடங்கியிருந்தது.

இங்கே ஓட்டல் சீ-ராக்கில்...

சந்திரிகா ப்ரியதர்சினிக்கு போனை வைத்த ஐந்து நிமிஷத்திற்கெல்லாம் சந்தேகம் தட்டிற்று. பெரிய பெரிய பிசினஸ் எக்ஸிக்யூடிவ்கள் தம்மை யாரும் டிஸ்டர்ப் பண்ண வேண்டாம் என்று சொல்வது வழக்கந்தான். ஆனால் அர்ஜென்ட் வேலையாய் ஏதாவது ட்ரங்க்கால் வந்தால் தரலாமா வேண்டாமா என்பதைக் கேட்க மறந்துவிட்டாள்.

அவள் அவன் அறைக்குப் போன் பண்ணினாள். மறுமுனையிலிருந்து யாருமே போனை எடுக்கவில்லை. அவன் பாத்ரூமில் இருக்கிறானோ என்னவோ என்றெண்ணி அரைமணி கழித்துத் திரும்பவும் போன் பண்ணினாள். பதில் இல்லை. அதற்குப் பிறகு வேலை மும்முரத்தில் ஆழ்ந்து போய் அந்த விஷயத்தையே மறந்துவிட்டாள்.

இரவு எட்டுமணிக்குத்தான் அவளுக்கு ஓய்வு கிடைத்தது. பண்ணவும் வேலை எதுவுமில்லை, 'உங்கள் ஒருவ

ருக்கு மட்டும் இந்த போன் நிபந்தனை கிடையாது' என்று அவன் சொன்னது நினைவுக்கு வந்தது. சிரித்துக்கொண்டே அவனுக்குப் போன் பண்ணினாள். பேசுவதற்கு விசேஷம் எதுவும் இருக்க வேண்டுமென்றில்லை. விசேஷங்கள் அதுவே தானாய் வந்துவிடும். போனை யாருமே எடுக்க வில்லை. அவள் போனை வைத்துவிட்டாள். அவள் பெரி தாய் சோர்ந்து விடவில்லை.

முன்னூறு அறைகளுக்கு மேல் இருக்கும் அந்த ஓட்ட லில் மாதத்திற்கு சுமார் நாலாயிரம் பேர் வாடிக்கையாளர் கள் மாறி மாறி வந்துக் கொண்டேயிருப்பார்கள். அதில் சுமார் பத்து சதவீதம் பேர் விசேஷம் என்ன என்று கேட் பது வழக்கம். விசேஷம் இருந்தால் பேசச் சொல்லிக் கேட் பார்கள். அதில் பாதி பேர் அழகானவர்களும் பெரிய அந்தஸ்தில் இருப்பவர்களுமாய் இருப்பார்கள்...அங்கே காதலிப்பது ஒரு பொழுதுபோக்கு...

மறுநாள் காலையில் திரும்பவும் சீராக் ஓட்டலுக்கு வந்தான் பாஸ்கர். ரிஸப்ஷனில் சந்திரிகா ப்ரியதர்சினி இல்லை. அவன் தன் அறைக்கு வந்தான். தான் இல்லாத சமயத்தில் அவள் குறைந்தது இரண்டு முறையாவது தன் அறைக்குப் போன் பண்ணியிருப்பாள் என்று அவனுக்குத் தெரியும்.

அங்கே பாஸ்கர் சீ-ராக் ஓட்டலிலிருந்து ப்ரெசிடெண்ட் ஓட்டலை நோக்கிப் போய்க்கொண்டிருந்த அதே சமயத் தில் இங்கே சென்னையில் சுதாகர் ரவியின் வீட்டில் சாப் பிட்டு முடித்துவிட்டுக் கையைக் கழுவிக் கொண்டிருந்தான்.

'நீங்க ஒன்றும் நினைச்சுக்காவிட்டால் ஒரு விஷயம் சொல்றேன்.'

என்ன என்பதுபோல் ஏறிட்டாள் மாதவி.

'என் வாழ்க்கையில் இவ்வளவு நல்ல சாப்பாடு—சாப் பாடே இல்லை—இவ்வளவு பரிவோடு யாராவது பரிமாறிச் சாப்பிட்டது இதுதான் முதல் தடவை.'

'பொய். என்னை சந்தோஷப்படுத்தணும்னு இப்படிச் சொல்றீங்க.'

'எனக்கு இஷ்டமானவங்கன்னு யாருமே கிடையாது உங்களைத்தவிர. உங்கள்மேல் ஆணையிட்டுச் சொல்றேன். நிஜம்...'

'சுதாகர்! நீங்க எதுக்கு எப்பப் பார்த்தாலும் எதையோ இழந்துட்டாப் போல தென்படறீங்க?'

'எனக்கே தெரியாது மாதவி! ஆனால் ஒன்று மட்டும் சொல்லுவேன். உங்களோடு பரிச்சயமான பிறகு என் இதயத்தில் புதிய கதவுகள் திறந்துக்கிட்டாற்போலிருக்கு. ஏதோ இனம் புரியாத புதிய உற்சாகம் என்னுள் பெருக்கெடுத்துட்டிருக்கு. இவ்வளவு நல்ல சிநேகிதியை எனக்குக் கொடுத்ததற்குக் கடவுளுக்கு நன்றி சொல்லணும். நீங்க சம்மதித்தால் மாதத்திற்கொரு முறையாவது உங்கக் கையால் பண்ணிய சமையலைச் சாப்பிடணும்னு ஆசையா இருக்கு.'

'நிஜமாய் சமையல் அவ்வளவு நன்றாய் இருக்கா? அவருமட்டும் ஒருதடவைகூட என் சமையலைப் பற்றிப் புகழவே மாட்டாரு.'

'வீட்டுக் கொல்லையில் வளர்ந்த மூலிகை மருந்துக்கு உதவாதும்பாங்க. எனக்கு மட்டும் உங்களைப் போன்ற மனைவி இருந்தால் இருபத்திநான்கு மணி நேரமும் உங்க கிட்டயே உட்கார்ந்துட்டிருப்பேன். இந்த வியாபாரம், பணம் சம்பாதிப்பது இதையெல்லாம் சுண்டுவிரலால் தூக்கி எறிஞ்சுடுவேன்' என்றவன் நிறுத்தி, 'மன்னிச்சுக் குங்க. ரொம்பவும் உரிமை எடுத்துக்கிட்டேனா?' என்றான்.

'சே! அதெல்லாம் ஒண்ணுமில்லை.'

'அதுசரி, நீங்க இன்னும் சொல்லவேயில்லையே. உங்க சமையல் ருசியைத் திரும்பவும் எப்போது காட்டப் போறீங்க?'

'உங்களுக்கு எப்ப வேணுமோ அப்போ.'

'அப்படீன்னால் நாளைக் காலையிலேயே வந்துடறேன்.'

'வாங்க. ஏன், பயந்துடுவேன்னு நினைச்சீங்களா?'

'சரி, போயிட்டு வரட்டுமா? ரொம்ப ராத்திரியாயிடுத்து.'

'சரி'

அவன் எழுந்திருக்காமலேயே 'இன்னும் கொஞ்ச நேரம் உட்கார்ந்திருக்கணும்னுதான் இருக்கு. ஆனால் வேலையாட்களும், கூர்க்காவும் ஏதாவது நினைச்சுப்பாங்க' என்றான்.

'அவங்க மூஞ்சி! அவங்க என்ன பண்ணிடுவாங்க?'

'புனிதமான நமது நட்பை உலகம் புரிஞ்சுக்காது மாதவீ. எனக்கென்னவோ ராத்திரி பூராவும் உங்களோடு உட்கார்ந்துட்டுப் பேசிட்டிருக்கணும்னுதான் இருக்கு. ஆனால் நம்மால் அப்படிப் பண்ண முடியாதே. அதனால்தான் இந்த நாட்டைக் கண்டாலே எனக்குப் பிடிக்கலை. சீக்கிரத்திலேயே அமெரிக்காவுக்குப் போயிடலாம்னு இருக்கேன்.'

மல்லிகைக் கொடி அவனை இரக்கத்தோடு பார்த்தது. சந்திரகிரகணம் கண்ணாடியில் பட்டு பிரதிபலித்துக் கொண்டிருந்தது. இருள் மனிதனின் மனத்தைப் போலிருந்தது. நிசப்தம் மனிதனின் அசட்டுத்தனத்தைப் போலிருந்தது.

கடியாரம் பத்தடித்தது.

'நான் போயிட்டு வரட்டுமா!' 'என்றான். இம்முறை அவள் பதில் பேசவில்லை. அவன் எழுந்திருக்காமலேயே, 'நீங்க எத்தனை மணிக்குத் தூங்கப் போவீங்க?' என்று கேட்டான்.

'பத்தரை – பதினொன்று'

'அப்படீன்னால் இன்னும் ஒரு மணி நேரம் இருக்குன்னு சொல்லுங்க. ஒரு விஷயம் கேட்கிறேன். நிஜத்தைச் சொல்லுங்க. படுத்ததுமே என்னைப்பற்றி ஒரு தடவை யாவது ஞாபகம் வருமா?'

'வராது.'

'பொய் சொல்றீங்க. ஒரு ராத்திரி கூடவா ஞாபகத் துக்கு வரலை? முக்கியமாய் நான் கட்டிக்கச் சொன்ன புடவையைக் கட்டிக்கிட்ட அன்றைக்கு...'

'அப்போதே கேட்கணும்னு இருந்து மறந்துட்டேன். அதுசரி. கடிதத்தில் அப்படியா எழுதுவாங்க? கொஞ்சம் தப்பியிருந்தால் அவர் கையில் சிக்கியிருக்கும்.'

'சிக்கட்டும். புனிதமான சிநேகத்தைப் புரிஞ்சுக்காதது அவர் தப்பு '

'எனக்கெவ்வளவு பயமாயிருந்தது தெரியுமா?'

'இனிமேல் கையிலேயே கொடுத்துடறேன். அது சரி, அவரு எப்போது வராரு?'

'அமெரிக்காவுக்கில்லே போயிருக்காரு. அப்புறமாய் வீட்டு ஞாபகந்தான் வருமா? இரண்டு மூன்று நாளில் வரலாம்.'

'நான் கேட்டுக்கிட்டது போலவே நீங்க அந்த வெள்ளைப் புடவையைக் கட்டிக்கிட்டப்ப எனக்கு என்ன தோணிச்சு தெரியுமா? அப்படியே ஓட்டமாய் ஓடிவந்து உங்க கையைப் பிடிச்சிக்கணும் போலிருந்தது. நீங்க தப்பாய் நினைத்துக்காமலிருந்தால்...எனக்காக இன் னொரு தடவை திரும்பவும் அந்தப் புடவையைக் கட்டிக் கிறீங்களா?'

'இப்போவா?'

'ஆமாம். இப்போதே. அதைப் பார்த்துட்டுப் போறேன். இன்றிரவெல்லாம் அதைப்பற்றியே யோசிச்

சிட்டு அப்படியே தூங்கிடறேன். வாழ்க்கையில் எனக்கு ஆனந்தம்னு எதுவுமே இல்லை. இவ்வளவு சின்ன ஆனந் தத்தை இந்த சிநேகிதனுக்காகப் பண்ணித் தரமாட்டீங் களா?'

'ஆனால்...'

'வேண்டாம் மாதவீ, தடை சொல்லாதீங்க. ப்ளீஸ்... எனக்காக...'

கொஞ்சம் தடுமாறியபடி அவள் எழுந்து உள்ளே போனாள். சுதாகர் வாசலுக்கு வந்து வெளியே புல் தரை யைப் பார்த்தான். கூர்க்கா கண்ணயர்ந்து கொண்டிருந் தான். அவுட் ஹவுசில் மங்கலான வெளிச்சத்தைத் தவிர மீதி எங்குமே இருட்டாயிருந்தது. வேலையாட்களின் சந்தடியையே காணோம்.

பின்னால் சப்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தான்.

மாதவி நின்று கொண்டிருந்தாள். அந்த சமயத்தில் அவளை ரவி பார்த்திருந்தால், 'கஞ்சி போட்ட புடவையை குண்டாய் இருப்பவர்கள் கட்டிக்கொண்டால் நன்றாயி ராது' என்று சொல்லியிருப்பான்!

சுதாகர் அவளைப் பார்த்து, 'மாதவீ! இந்தப் புடவை உங்களுக்கு எவ்வளவு நன்றாயிருக்கு, தெரியுமா?' என் றான்.

'சரி போதும். போயிட்டு வாங்க' என்றாள் அவள் பயந்து.

'ஏனோ தெரியலை. என் கண்ணிலேருந்து பொல பொலன்னு கண்ணீர் வருது. உங்க கையால் துடையுங்க' என்று அவள் கையைப்பற்றி தன் சிறிய கண்களைத் துடைத் துக்கொண்டான். அவள் ஓரடி பின்வாங்கி, 'போதும், போயிட்டு வாங்க' என்றாள்.

'நீங்க அனாவசியமாய் பயப்படறீங்க.'

'பயமுமில்லை . கியமுமில்லை, ரொம்ப ராத்திரியா யிடுத்து. போங்க. யாராவது பார்த்தால் நன்றா யிராது.'

'ஓஹோ! யார்ாவது பார்க்கப் போறாங்களேன்னு பயமா?'

'அதெல்லாம் ஒண்ணுமில்லே. சரி. போயிட்டு வாங்க.'

'போறேன். ஆனால் சரியாய் இன்னும் ஒரு மணி நேரங் கழித்து பின்பக்கத்திலேருந்து வரேன். கொல்லைக் கத வைத் திறந்து வையுங்க. அப்படியானால் ராத்திரி நாம்ப எவ்வளவு நேரம் பேசிட்டிருந்தாலும் யாருக்குமே தெரி யாது.'

எதிர்பாராத இந்த திட்டத்தைக் கேட்டு அவள் முதலில் வாயடைத்துப் போய் நின்றவள், உடனே சுதா ரித்துக் கொண்டு, விட்டேற்றியாய், 'தேவையில்லை, வேணுமானால் நாளைக் காலையில் வாங்க' என்று வெளியே வந்தாள்.

வேறு வழியில்லாமல் அவளோடு வெளியே வந்த அவன், 'உண்மையிலேயே உங்களுக்கு என் நேர்மையில் நம்பிக்கையிருந்தால், நம் பரிசுத்தமான அன்பின்மேல் நம்பிக்கை இருந்தால், நீங்கள் எனக்காகக் காத்துட்டிருப் பீங்க. இல்லாவிட்டால் என்னை நீங்க நம்பலைன்னு அர்த்தம். என் வாழ்க்கையில் நான் யாரையுமே எதுவுமே வேண்டியதில்லை. நான் யாரையுமே என் மனசில் இவ் வளவு நெருக்கமாய் பாவித்ததுமில்லை. நீங்க இன்றிரவு கதவைத் திறந்து வைக்காமல் போனால்...' என்று நிறுத்தி 'நாளைக் காலையில் என் பிணத்தைத்தான் பார்ப்பீங்க. உண்மையான சிநேகத்துக்கு அர்த்தம் அப்பத்தான் புரியும்' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

அவள் சிலையாய் நின்றுவிட்டாள் .

இரவு பதினொன்றாயிற்று.

# 35

இரவு பதினொரு மணிக்கு ரவி தேஜா டெக்ஸ்டைல் கம்பெனியில் போர்டு அறையில் சர்மா எஞ்சிய நான்கு டைரக்டர்களுடன் உட்கார்ந்திருந்தார். தாம் வாங்கப் போகிற மேஜிக் மிர்ரரைப் போன்ற ஒன்றையே செஞ்சு ராமய்யா கம்பெனி ஜப்பானில் தயாரிக்கச் செய்து வர வழைத்துக் கொள்ளப் போகிறது என்ற செய்தி கிடைத் ததுமே, சர்மா இந்த மீட்டிங்கைக் கூட்டினார். ஜப்பான் கம்பெனி மூலம் செஞ்சு ராமய்யாவுக்கு இந்த மிஷின் வந்து சேருவதற்கு ஆறு ஏழு மாதங்கள் பிடிக்கலாம். அதற்குள் ரவிதேஜா கம்பெனிக்கு கொஞ்சம் லாபம் இருந்து வரும். அதுவரை பரவாயில்லை.

ஆனால் இந்தியாவில் இந்தக் கண்ணாடி வேறெந்த கம்பெனிக்கும் விற்காமலிருப்பதற்காக ரவி அமெரிக்கன் கம்பெனிக்கு அதிக அளவில் பணம் தந்து உடன்படிக் கையை ஏற்படுத்திக் கொள்ளப் போகிறான். எப்படியும் ஆறு ஏழு மாதங்களானதும் ஜப்பான் இதை சப்ளை பண்ணப் போவதால் இனி அது தேவையில்லாத ஒன்று.

ரவி இதற்குள் உடன்படிக்கையை ஏற்படுத்திக்கொண்டு விட்டிருந்தால் இனி தம்மால் செய்யக் கூடியது ஒன்று மில்லை. ஏற்படுத்திக் கொள்ளாமலிருந்தால் மட்டும், உடனே அதை நிறுத்திவிட்டு, 'நீங்கள் எங்கள் நாட்டில் யாருக்குத் தந்தாலும் எங்களுக்கு ஆட்பேசனை இல்லை' என்று சொல்ல வேண்டும். அதன்மூலம் இப்பொழுது அவர் களுக்குக் கூடுதலாய் தரப்போகிற லட்சம் டாலர் செலவு மிஞ்சும்.

அதனால்தான் இந்த அவசர மீட்டிங்.

'நமக்கு இங்கே இப்பொழுது ராத்திரி. அமெரிக்காவில் இப்பொழுது பகல் நேரம். அங்கே ஏஜெண்டிற்குப் போன் பண்ணி இந்த உடன்படிக்கையை நீக்கிவிடச் சொல்லு வோம்' என்றார் சர்மா.

'ஆனால் அந்த ஏஜெண்ட் விவரமெல்லாம் ரவிக்குத் தான் தெரியும். அவருக்குப் போனில் பேச முயற்சிப்பது நல்லது! பம்பாய்க்குப் போன் பேசுவோம்.'

'ஒரு மணிநேரமாய் முயற்சி பண்ணிட்டேதானிருக் கேன். ஓட்டலில் அவர் அறை இருக்கே யொழிய அவர் அங்கே இல்லை.'

'ஏதாவது பார்ட்டிக்குப் போயிருப்பாரோ என் னவோ?'

'பன்னெண்டு மணி வரைக்கும் பார்ட்டியா?' ஒரு டைரக்டர் அலுத்துக் கொண்டார்.

'ஒரு நாளில் என்ன வந்துடுத்து? நாளைக் காலையில் பேசலாம்.'

'காண்ட்ராக்ட்டில் கையொப்பம் அமெரிக்காவில் போடப்பட்டு விட்டிருந்தால் இன்றிரவே நாம் அதைத் தடுத்து நிறுத்தாமல் போனால் பிற்பாடு ரொம்ப வருந்த வேண்டியிருக்கும்...அனாவசியமாய் அவ்வளவு பணத்தை இழந்துட்டோமேன்னு.'

இவ்வாறு தலைக்குத் தலை தம் அபிப்பிராயங்களைச் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

கடைசியில் ஒரு டைரக்டர் சொன்னார். 'இந்த நேரத் தில் காண்ட்ராக்ட் ஏற்பாடு நடந்து முடிந்திருந்தால் இனி நாம் என்ன பண்ணினாலும் லாபமில்லை. அதனால் இந்த

அர்த்த ராத்திரியில் போன் பண்ணுவதும் அனாவசியந் தான்.’

எல்லோருக்கும் அது சரியெனப்பட்டது. கடைசி முறை யாய் சர்மா ஸீராக் ஓட்டலுக்குப் போன் பண்ணி, ரிசப்ஷ னிஸ்ட்டிடம், ‘ரவி இன்றிரவு தன் அறைக்கு வந்து சேர்ந்த துமே எங்களோடு தொடர்பு கொள்ளச் சொல்லுங்க’ என்று சொல்லிவிட்டுப் போனை வைத்து விட்டார்.

அதற்குப்பிறகு அவரவர் வீடுகளுக்குப் போய் சேர்ந் தார்கள். நேரம் பன்னிரெண்டடித்து ஒரு நிமிஷம் ஆயிற்று.

தொலைவில் மாதா கோவிலின் மணி பன்னிரெண் டடித்து ஓய்ந்தது.

ரவி மல்லாந்து படுத்தவாறு யோசித்துக் கொண்டிருந் தான். பக்கத்தில் ப்ரியம்வதா ஆழ்ந்த உறக்கத்தில் இருந் தாள். ரவிக்கு உறக்கம் வரவில்லை. அவனுக்கு ஏனோ சங்கடமாயிருந்தது. ஒரே ஊரில் இருந்துகொண்டு பம்பாய் என்று பொய் சொன்னதும், பிறகு வரிசையாய் சொன்ன பொய்களும் அவனைத் தொந்தரவுக்குள்ளாக்கின.

மழை பெய்யும்போது பார்த்துக் கொண்டிருக்கும் ஆனந்தம், அது நின்றதும் சேற்றையும் ஈரத்தையும் பார்க் கும்போது ஏற்படாது. மனைவியைத் தவிர பிற பெண்க ளுடன் தொடர்பு வைத்துக் கொண்டால், அந்த கொஞ்ச நேரத்திற்குப் பிறகு எப்பொழுது அந்த நான்கு சுவரிலிருந்து வெளியே வருவோமோ என்றுதானிருக்கும், அந்த மற்றொரு நபரை மிக ஆழ்ந்து நேசித்தாலேயொழிய. ப்ரியம்வதாவை அவன் என்றுமே நேசித்ததில்லை. அவனது தனிமை என்ற பாலைவனத்தில் அவள் ஒரு சோலை, அவ்வளவுதான்! பாலைவனச் சோலைதான் தென்பட்டுவிட்டதே என் றெண்ணி அங்கேயே பாலைவனத்தில் தங்கிவிட மாட்டார் கள் யாருமே. தெம்பை ஏற்படுத்திக் கொண்டு அங்கிருந்து

பிரயாணத்தைத் தொடரத்தான் செய்வார்கள். இப்பொழுது அவன் நிலைமைகூட அதுபோலத்தான் இருந்தது.

மூன்று நாட்கள் இந்த உலகத்தை விட்டே தொலைவிற்குப் போய் விட வேண்டும் என்றிருந்தான். ஆனால் இரண்டே நாளில் இது போரடித்து விட்டது. அவனுக்குத் தேவையானது இதில்லை என்றும் புரிந்தது. காலையிலிருந்து மாலை வரையிலும் தன் தினசரி நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக் கொண்டு, உற்சாகம் நிரம்பிய பகல் கதைக்கு இரவு க்ளைமாக்ஸ் ஆகவேண்டுமேயொழிய இந்த விதமான சிருங்காரமில்லை என்று தெரிந்துவிட்டது. எப்பொழுது திரும்பிப் போய் தன் வியாபார விஷயத்தில் மூழ்கிப் போவோமோ என்றிருந்தது. அவன் யோசனையில் ஆழ்ந்தவாறே உறங்கி விட்டான்.

அவனுக்கு விழிப்பு வந்தபோது மணி எட்டாகியிருந்தது. மிகக் களைத்துப் போயிருந்ததால் ஆழ்ந்த உறக்கம் ஏற்பட்டுவிட்டது. எழுந்ததுமே கொஞ்ச நேரம் தான் எங்கேயிருக்கிறோம் என்றே புரியவில்லை அவனுக்கு. ஓட்டல் அறையைப் பார்த்ததுந்தான் புரியத் தொடங்கிற்று. அருகில் ப்ரியம்வதாவைக் காணவில்லை.

அவன் திரும்பிக் கண்களை மூடிக்கொண்டான். எழுந்ததுமே அவனுக்குத் தோன்றிய உணர்ச்சி, 'இன்னொரு நாள் பூராவும் இங்கே இருக்க வேண்டுமே' என்பதுதான். அவனுக்கே அது ஆச்சரியமாயிருந்தது. நேற்று முந்தாநாள் வரையிலும் அந்த அனுபவத்திற்காகத் தவித்துக் கொண்டிருந்தான். இன்றைக்கு 'போதும் இனி' என்றாகிவிட்டது.

ஐந்து நிமிஷம் கழிந்தது.

பாத்ரூமில் கூட சந்தடியே இல்லை. அவனுக்கு ஏதோ சந்தேகம் வரவே, அங்கே போய்ப் பார்த்தான். கதவு திறந்தேயிருந்தது. உள்ளே அவள் இல்லை.

அறைக்கு வந்தான்.

அவனுக்கு 'ஷாக்' அடித்தாற் போலிருந்தது.

அவள் தன்னோடு கொண்டு வந்திருந்த சூட்கேசைக் காணோம். வார்ட் ரோபுக்குள் ஓடிப் போய் பார்த்தான். அவிழ்த்த துணிகளைக்கூட காணோம்.

கண்ணாடிக்குப் பக்கத்தில் லிப்ஸ்டிக் சீசா, அவள் கைப் பை கூட இல்லை. அவள் அந்த அறையில் இரண்டு நாள் கழித்த சுவடே இல்லை. அவனுக்கு முதலில் ஒன்றுமே புரிய வில்லை. குழப்பமாயிருந்தது. ப்ரியம்வதா என்னவானாள்.

நேரமாக ஆக அவனுடைய பரபரப்பும் அதிகரித்தது. அவனிடம் சொல்லாமல் அவள் மாயமாகி விட்டாள் என்பதையே அவனால் நம்ப முடியவில்லை. ஆனால் நடந்திருக்கிறதே! அவன் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தபோது அவள் தன் சாமான்களையெல்லாம் எடுத்துக் கொண்டு போயிருப்பது அப்பட்டமான உண்மைதானே.

என்ன பண்ணுவதென்றே அவனுக்குப் புரியவில்லை. காட்டில் நடந்து கொண்டிருக்கும்போது புதரிலிருந்து ஏதோ சலசலவென்று ஊர்ந்து போனாற்போன்ற உணர்ச்சி. ஐந்து நிமிஷம் கடந்தது... அரைமணி...ஒரு மணி...

அவன் அப்படியே சிலையாய் உட்கார்ந்திருந்தான். ஆபிசுக்குப் போன் பண்ணுவோம் என்று கை போன் வரை நீண்டு விட்டது. ஆனால் அந்த யோசனையைத் தவிர்த்துக் கொண்டான்.

இன்னும் ஒரு மணி நேரமானதும் அவனுக்கு அந்த டென்ஷனைத் தாங்கவே முடியவில்லை. அந்த அறை... அந்த அறையிலிருந்த தனிமை அவனைப் பைத்தியம் பிடித்தவனைப் போலாக்கிற்று. என்னவானாலும் ஆகட்டும் என்று கீழே வந்தான். டாக்சியைப் பிடித்துக் கொண்டு ப்ரியம்வதாவின் வீட்டிற்குப் புறப்பட்டான். அவள் ஏன்

அவ்வாறு சொல்லாமல் கொள்ளாமல் வந்து விட்டாள் என்று தெரிந்து கொள்ளாவிட்டால் நிம்மதியாயிருக்க முடியாது போலிருந்தது.

ஐந்து நிமிஷத்தில் டாக்சி அவள் வீட்டிற்கு முன்னால் வந்து நின்றது. ரவி நிமிர்ந்து பார்த்தான். மாடிப்போர்ஷனில் 'டு—லெட்' போர்டு தொங்கிக்கொண்டிருந்தது.

டு டௌன் போலீஸ் ஸ்டேஷன் சப் இன்ஸ்பெக்டர் ராஜசேகர் நாற்காலியில் சாய்ந்தபடியே உறங்கிக் கொண்டிருந்தார். நேற்றிரவெல்லாம் ஏதோ கேசால் தூக்கமே இல்லை அவருக்கு. அந்த ஸ்டேஷன் எல்லைக்குள் இருந்ததெல்லாமே பணக்காரர்கள் நிறைந்த காலனியாதலால் அதிகமாய் வேலையிருக்காது அங்கே.

எங்கும் நிசப்தமாயிருந்தது. வராந்தாவில் சென்ட்ரி நின்றுகொண்டிருந்தான். தொலைவில் இரண்டு போலீஸ்காரர்கள் விளக்கின் மேல் கருப்பு நிறத்தைப் பூசாத ஸ்கூட்டர்வாலாவைப் பிடித்து போராடிக் கொண்டிருந்தார்கள். எஸ். ஐ. ராஜசேகருக்கு இந்த மாதிரி விஷயங்கள் எல்லாம் பிடிக்காது. அதனால் குரலைத் தாழ்த்திப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அதற்குள் போன் ஒலித்தது. ராஜசேகர் எடுத்து, 'ஹலோ' என்றார். மறுமுனையிலிருந்து கேட்ட சங்கதி அவரை நிமிர்ந்து உட்கார வைத்தது.

'அட்ரஸ்?' மறுமுனையில் அவர்கள் சொன்னதை எழுதிக்கொண்டு, இரு போலீசார் கூட வர ஜீப்பில் போய் உட்கார்ந்து கொண்டார். ஜீப் ரவியின் வீட்டை நோக்கிப் போயிற்று!

ஃ ∴ ஃ

அதே டாக்சியில் ரவி ஓட்டலுக்குக் கிளம்பினான். சுந்தரராஜன் கொடுத்த ஷாக்கிலிருந்து அவன் இன்னும்

தெறிக்கொள்ளவில்லை. அந்த வீட்டுக்காரன் ஏன் அப்படிப் பேச வேண்டும் என்று புரியவில்லை அவனுக்கு. ஒருக்கால் அவனை அடையாளம் புரிந்து கொண்டிருக்க மாட்டார்.

டாக்சி வந்து ஓட்டலுக்கு முன்னால் நின்றது. இறங்கி பணத்தைக் கொடுத்துவிட்டு, ரிஸப்ஷனிடம் போனான். ரிஸப்ஷனிஸ்ட் சாவியைத் தேடிவிட்டு அது அங்கே இல் லாததால், 'அறையில் யாரோ இருக்காங்க சார்' என் றாள். ரவியின் மனம் திடீரென்று லேசாயிற்று. ப்ரியம்வதா வந்திருப்பாள். அனாவசியமாய் டென்ஷன் அடைந்து அவன் அவளை வெளியேயெல்லாம் தேடியிருக்கிறான். அவள் மேல் அவனுக்குக் கோபம்கூட வந்தது. அப்படிச் சொல்லாமல் கொள்ளாமல் போனதற்கு நன்றாய் கண் டிக்க வேண்டும் என்றெண்ணிக் கொண்டான்.

லிஃப்டிலிருந்து வெளியே வந்தான். நீண்ட வராந்தா ஆளரவமில்லாமல் இருந்தது. அறைக்கு முன்னால் வந்து நின்று பெல்லை அடிக்கப் போனவன், அது திறந்தேயிருந் ததைப் பார்த்துவிட்டு உள்ளே நுழைந்தான். ஆனால் அவன் எண்ணியது போல் உள்ளே ப்ரியம்வதா இல்லை. பாஸ்கர்!

ஃ ஃ ஃ

இன்ஸ்பெக்டர் ராஜசேகரின் ஜீப் ரவியின் வீட்டுக் காம்பவுண்டிற்குள் நுழைந்தது. பத்துப் பதினைந்து பேர் கூடியிருந்தார்கள் அங்கே. அதிலிருந்த ஒருவரை அவருக் குத் தெரியும். ரவி டெக்ஸ்டைல்ஸின் டைரக்டர்களுள் ஒருவர் அவர். அவர் முன்னுக்கு வந்து, 'இவர்தான் சர்மா, சேர்மேன்' என்று அறிமுகம் செய்தார். ராஜசேகர் அவ ருக்குக் கைகுலுக்கினார். 'ரவி இன்னும் வரலையா?' என்று கேட்டார்.

'இல்லை. பம்பாயிலிருந்து காலையில்தான் புறப் பட்டார். விமான நிலையத்துக்குக் கார் அனுப்பியிருக் கோம். இன்னும் ஐந்து பத்து நிமிஷத்தில் வந்துடலாம்.'

ராஜசேகர் நேரத்தைப் பார்த்துக் கொண்டார். பம்பாயிலிருந்து வரும் விமானம் இங்கே இறங்கி ஐந்து நிமிஷம் ஆகியிருக்கும். அவர் வர இன்னும் பத்து நிமிஷங்கள் ஆகலாம்.

'அவருக்கு இந்த விஷயம் தெரியுமா?' இன்ஸ்பெக்டர் கேட்டார்.

'தெரியாது. எனக்கே அரைமணிக்கு முன்னாடிதான் தெரிந்தது. உடனே பம்பாய்க்குப் போன் பண்ணினேன். அதற்குள் அறையை காலி பண்ணிட்டதாய் சொல்லிட்டாங்க. ஒருக்கால் விமான நிலையத்துக்குக் கிளம்பிப் போயிருப்பாருன்னு நினைச்சேன்.'

'உள்ளே போய்ப் பார்க்கலாமா?' 'ஷ்யூர்'—இன்ஸ்பெக்டரைத் தொடர்ந்து சர்மா உள்ளே நுழைந்தபோது எஞ்சியவர்கள் விலகி வழிவிட்டார்கள். ராஜசேகர் மாடியிலிருந்த அறைக்குப் போனார். கீழே எல்லோரும் பம்பாயிலிருந்து வரப்போகும் ரவியை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தார்கள்.

# 36

'நீங்களா?' என்றான் ரவி பாஸ்கரைப் பார்த்து வியப்படைந்து. 'உங்களுக்கு நான் இங்கே இருந்தது எப்படித் தெரிந்தது?'

'ப்ரியம்வதா சொன்னாள்.'

ரவி மேலும் வியப்படைந்து, 'ப்ரியம்வதாவா?' என்றான்.

'காலையில அவள் எழுந்திருந்த போது நீங்க தூங்கிட்டிருந்தீங்களாம். உங்களை எதுக்கு டிஸ்டர்ப் பண்ணணும்னு

கீழே வந்து போன் பண்ணப் போனாளாம். அங்கே மாதவி நின்னுட்டிருந்தாங்களாம்...'

ரவி நாக்கு உலர, 'மா...த...வி...யா?' என்றான். 'ஆமாம். அவங்களுக்கு சந்தேகம் வந்துட்டதாய் ப்ரியம்வதா ஊகிச்சுக்கிட்டாள். அவங்க எதாவது விசாரித்துத் தெரிந்துகொண்டு விட்டால் உங்களிருவரைப் பற்றியும் தெரிஞ்சுப் போயிடும்னு மளமளன்னு மேலே வந்து தன் சாமான்களை எடுத்துக்கிட்டுப் போயிட்டாள்.'

ரவி குழப்பத்தோடு பாஸ்கரைப் பார்த்தான். அவன் மனைவி இந்த ஓட்டலுக்கு ஏன் வந்தாள் என்று தெரியவில்லை. சரி எதற்கோ வந்திருக்கிறாள் என்று வைத்துக் கொண்டாலும், இங்கே ப்ரியம்வதாவைப் பார்த்தால்தான் என்ன? அதிலென்ன தப்பு? ப்ரியம்வதா அனாவசியமாய் பயந்து அவனையும் எழுப்பாமல் அவ்வளவு அவசரமாய் போவானேன்?

பாஸ்கர் சொன்னான்: 'ப்ரியம்வதா இதையெல்லாம் உங்களிடம் சொல்லும்படிச் சொன்னாள் என்னிடம். அவள் ரொம்பப் பயந்துட்டாள். மாதவிக்கு ரொம்ப சந்தேகம் வந்திருக்கும்னு நினைக்கிறாள்.'

'சந்தேகம் ஏற்பட வழியில்லை. நான் பம்பாயில் இருப்பதாய்த்தான் நினைச்சுட்டிருக்காங்க எல்லோரும். ப்ரியம்வதா ஸ்டார் ஓட்டலுக்கு வரக்கூடாதா என்ன? யாரோ பார்த்துட்டு அது என்னோடதுன்னு நினைச்சுக்கணுமா என்ன?'

'அவள் சார்பில் இருந்து யோசித்துப் பாருங்க.'

'இப்ப எங்கேயிருக்கிறாள் அவள்?'

'தெரியாது? இந்த விஷயத்தை மட்டும் உங்களிடம் சொல்லச் சொன்னாள். உங்களை ஏமாற்றியதற்கு மன்னிச்சுடச் சொன்னாள்,'

'அப்படீன்னால் திரும்பி வர மாட்டாளா?'

பாஸ்கர் பதில் பேசவில்லை.

ரவி ஒன்றும் ஏமாற்றத்திற்குள்ளானதாய் நினைக்க வில்லை. ஒருவிதத்தில் சொல்லப் போனால் அவனே சீக்கிர மாய் வீட்டிற்குப் போய்விட வேண்டும் என்று அவசரப் பட்டான். ரிஸப்ஷனிஸ்டிற்குப் போன் பண்ணி, பில்லைக் கொண்டுவரச் சொன்னான்.

அதற்குள் பையன் காப்பி கொணர்ந்தான்.

'நீங்க என்னை மன்னிக்கணும்...உரிமை எடுத்துட்டு வந்து அறையில் உட்கார்ந்துட்டேன். மேலும் காப்பிக்கு வேறு ஆர்டர் கொடுத்துட்டேன்' என்றான் பாஸ்கர்.

'அதனாலென்ன, பரவாயில்லை.'

'நீங்க ஒரு வாட்டி வீட்டிற்கு போன் பண்ணினால் நன்றாயிருக்கும். பம்பாயிலிருந்து விமானம் வந்து அரை மணியாகிறது. உங்க மனைவி நீங்க இன்னும் வரலையேன்னு சந்தேகப்பட்டுட்டிருப்பாங்க.'

'அதற்கென்ன வந்தது? பில் வந்ததுமே அறையைக் காலி பண்ணிட்டுப் போயிடலாம்...' அவனுக்குக் குற்ற உணர்ச்சி மேலிட்டது. ப்ரியம்வதா தம் விஷயத்தையெல் லாம் இவனுக்குச் சொல்லிவிட்டிருக்கிறாளே என்று.

'நீங்க விமானநிலையத்திலிருந்து போன் பண்றாப் போல ஒருமுறை வீட்டிற்குப் போன் பண்ணினால் நல்ல துன்னு படுது எனக்கு.'

ரவி வீட்டிற்குப் போன் பண்ணிக் கொண்டிருந்தபோது பாஸ்கர் காப்பியைக் கலந்து அவனிடம் தந்தான். அதற் குள் பில் வந்தது. அதைக் கொடுத்து விட்டு ரவி வீட்டிற்கு போன் பண்ணினான். வெகுநேரம் ரிங் ஆன பிறகு போனை யாரோ எடுத்தார்கள். 'ஹலோ'—அந்தக் குரலை அடை யாளம் கண்டு கொண்டான் ரவி.

சர்மாவின் குரல்!

அவன் ஆச்சரியமடைந்தான், சர்மா தன் வீட்டிலிருந்த தற்கு!

'நான்தான் ரவி. விமான நிலையத்திலிருந்து பேசறேன்.'

'அடடா! உனக்காகவே கார் அனுப்பினோம். இன்னும் வரலையேன்னு எல்லோருமாய் பார்த்துட்டிருக்கோம்.'

'எல்...லோ...ருமா? என்ன நடந்தது?'

சர்மா தடுமாற்றமடைந்தவராய் 'வரயா? சீக்கிரமாய் வந்துடு.'

'என்ன நடந்தது?' ரவி திருப்பிக் கேட்டான்.

'சீக்கிரமாய் வா.'

'சர்மா சார், என்னதான் நடந்தது? அதைச் சொல்லுங்க முதலில்.'

ஒரு வினாடி நிசப்தம். 'ரவி! ஐயாம் சாரி. நேற்றிரவு மாதவியை யாரோ கொலை பண்ணிட்டாங்க...'

மாதவியைக் கொலை பண்ணி விட்டார்கள். மாதவியைக் கொலை...மாதவி...

கனவிலும் ஊகித்திராத விஷயத்தை திடீரென்று கேட்டால், அந்தச் செய்தியால் உண்டாகும் ஆனந்தமோ அல்லது துன்பமோ சட்டென்று உணரமுடியாது. ஊகித்து உணரும் சக்தியானது தற்காலிகமாய் அடைபட்டு, ஒரு விதமான சலனமற்ற தன்மை மூளையில் ஏற்பட்டுவிடும். அவன் நிலைமையும் அது போல்தான் இருந்தது. சர்மா சொன்னது முதலில் புரியவில்லை. வெகுநேரம் அப்படியே இருந்து விட்டான். மறுமுனையிலிருந்து சர்மா, 'ஹலோ, ஹலோ' என்று கூப்பிட்டுக் கொண்டே யிருந்தார். இறுதியில் ஒரு

வாறு தெம்பை ஏற்படுத்திக் கொண்டு ஈனஸ்வரத்தில், ‘ஹலோ’ என்றான்.

‘உடனே வரயா?’

‘வரேன்’

போனை வைத்துவிட்டு நாற்காலியில் அப்படியே சரிந்தான். பக்கத்திலேயே நின்று கொண்டிருந்த பாஸ்கர், ‘என்னவாச்சு?’ என்று கேட்டான். ரவி பதில் சொல்லவில்லை. அவனுக்குக் கொஞ்ச நேரம் தனிமையில் இருக்க வேண்டும் போலிருந்தது. ‘என்னவாச்சு?’ என்று பாஸ்கர் மறுபடியும் கேட்டான். அதற்குமேல் அவனால் சொல்லாமலிருக்க முடியவில்லை.

‘மை காட்...’ என்று நிறுத்தி, ‘ஐயாம் சாரி’ என்றான் மெதுவாய். ரவி கண்களை மூடிக்கொண்டான். அதற்குள் பாஸ்கர் மீதியிருந்த காபியைக் கலந்து அவனுக்குத் தந்தான். ரவிக்கு மிக பலவீனமாயிருந்தது. வேண்டாம் என்று சொல்லாமல் குடித்து விட்டான்.

‘நாம்ப போவோமா? அங்கே உங்களுக்காக எல்லோரும் காத்திட்டிருப்பாங்க’ என்றான் பாஸ்கர். ரவி மயக்கத்தில் ஆழ்ந்தவனைப் போல எழுந்திருந்தான். பாஸ்கரே அவனுடைய சாமான்களை எடுத்து டாக்சியில் வைத்தான்.

இருவரும் டாக்சியில் ஏறிக் கொண்டிருக்கும்போது, ‘நான் வழியிலேயே இறங்கிக்கறேன்’ என்றான் பாஸ்கர். ரவி அதை காதில் வாங்கிக் கொள்ளவில்லை. சீட்டில் பின்னுக்குச் சாய்ந்து கண்களை மூடிக் கொண்டான். டாக்சி புறப்பட்டது.

மூன்று நாட்களை மிகச் சந்தோஷமாய் கழிக்க வேண்டும் என்றிருந்தவனுக்கு இவ்வாறு திடீரென்று திருப்பம் ஏற்பட்டதால் தன் வாழ்க்கையின் மீதே வெறுப்புத் தட்டிற்று. ஏன் இப்படி நடந்தது? இப்படி ஏன் நடந்தது?—என்று

திரும்பத் திரும்ப நினைத்துப் பார்த்தான். நெருங்கியவளின் மரணம் வேதனையை ஏற்படுத்திற்று. ஆனால் அங்கே அவன் வேறொரு பெண்ணோடு குலுங்கிக்கொண்டிருந்த போது இங்கே மனைவி இறந்தது அவனுக்குத் தாங்க முடியாத குற்ற உணர்ச்சியைத் தந்தது.

இந்த யோசனையில் ஆழ்ந்திருந்த போது அவனுக்குச் சிறிய சந்தேகம் மின்னலாய் தோன்றிற்று. நேற்றிரவு மாதவியை யாரோ கொன்று விட்டதாய் சர்மா சொன்னார். பின்னே காலையில் ஓட்டலில் ப்ரியம்வதா அவளை எப்படிப் பார்த்திருப்பாள்?...அதாவது பொய் சொல்லியிருக்கிறாள். ப்ரியம்வதாவின் வீட்டுக்காரர் சுந்தரராஜன் சொன்னதற்கும் இந்தப் பொய்க்கும் ஏதாவது சம்பந்தம் இருக்குமா?

அவன் ஏதோ கேட்க நிமிர்ந்தான். அதற்குள் மெல்ல மெல்ல அவனை மயக்கம் ஆட்கொண்டுவிட்டது. ஓட்டல் அறையில் காபி குடித்ததிலிருந்தே மிகத் தளர்ந்து விட்டிருந்த அவன் தேகம் மெதுவாய் உறக்கத்தில் ஆழ்ந்து விட்டது. முன் சீட்டில் உட்கார்ந்திருந்த பாஸ்கர் திரும்பி, சீட்டில் சரிந்துகொண்டிருந்த அவனைப் பார்த்தான்.

டாக்சி போய்க்கொண்டேயிருந்தது.

கார் வந்து நின்றதுமே எல்லோரும் போர்டிகோவுக்கு வந்தார்கள். ஆனால் காரிலிருந்து டிரைவர் மட்டுமே இறங்கினான்.

'விமானம் ஒரு மணி நேரம் லேட்டாம் சார்' என்றான். இன்ஸ்பெக்டர் ராஜசேகரும் சர்மாவும் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக் கொண்டார்கள்.

'லேட்டா? இப்பத்தானே விமான நிலையத்திலேயிருந்து ரவி எங்களோடு பேசினார்?' என்றார் சர்மா ஆச்சரியமடைந்தவராய்.

டிரைவர் குழப்பமடைந்தவனாய், 'நான் நன்றாய் தெரிஞ்சுட்டுதான் வந்திருக்கேன் சார். ஒரு மணி நேரம் தாமதம்னாங்க' என்றான். சர்மா திரும்பவும் விமான நிலையத்திற்கு போன் பண்ணினார். டிரைவர் சொன்ன விஷயம் உண்மைதான் என்று தெரிந்தது. ராஜசேகர் சர்மாவைப் பார்த்து, 'அவரு எந்த ஏர்போர்ட்டிலிருந்து பேசினார்? இங்கேயிருந்தா, அல்லது பம்பாயிலிருந்தா?' என்று கேட்டார்.

'அதைச் சொல்லலை. உடனே வந்துடுவாயான்னு கேட்டதற்கு வந்துடறேன்னான். அவ்வளவுதான்.'

ராஜசேகர் யோசித்தார். 'அவரு நமக்குப் போன் பண்ணி ஐந்து நிமிஷமாகிறது. பின்னே எங்கேயிருந்து பேசியிருப்பார்?' என்றார்.

யாருமே பேசவில்லை. மிக சங்கடமான நிசப்தம் அவ்விடத்தில் சூழ்ந்து நின்றது.

ராஜசேகர் உள்ளே நடந்தார். இன்னும் போட்டோக்கள் எடுத்துக் கொண்டிருந்தார்கள். கான்ஸ்டபிள் அவரிடம் வந்து, 'சவத்தை ஏற்றலாமா சார்?' என்று கேட்டார்.

'வேண்டாம். அவள் கணவன் வரட்டும்—'

மேலும் ஐந்து நிமிஷங்கள் கழிந்தன. அதற்குள் சர்மா வந்து, 'நான் விமான நிலையத்துக்குப் போறேன்' என்றார். ராஜசேகர் தலையாட்டினார். சர்மாவோடு சேர்ந்து பிற டைரக்டர்களும் கூட போய்விட்டார்கள். வீட்டிலிருந்த வேலையாட்களுடன் பேசுவதற்கு இன்ஸ்பெக்டருக்கு அவகாசம் கிடைத்தது.

'அம்மாவைக் கடைசியாய் யார் பார்த்தாங்க?' என்று கேட்டார்.

'வேலைக்காரி காலையில் வந்து கதவைத் தட்டினப்ப அம்மா வந்து கதவைத் திறக்கலைங்க. இன்னும் தூங்கு றாங்க போலிருக்குன்னு போயிட்டாள்.'

'கடைசியாய் யார் பேசினாங்க?'

'சுதாகர் அய்யா. ராத்திரி பதினோரு மணி வரைக்கும் இங்கத்தான் இருந்தாரு. சாப்பாடானதும் ரெண்டுபேரும் ரொம்ப நேரமாய் பேசிட்டிருந்தாங்க.'

'சுதாகர் யாரு?'

'அடிக்கடி வந்துட்டிருப்பாரு.'

இன்னும் நாலைந்து கேள்விகளைக் கேட்டு விஷயத் தைக் கூடுமானவரைக்கும் வரவழைத்தார்.

இன்ஸ்பெக்டர் ராஜசேகர் பிற எல்லா போலீஸ் இலாகாவைச் சேர்ந்த நபர்களைப் போல குடித்து மூளையை மழுங்கடித்துக் கொள்பவரல்ல. சுறுசுறுப்பாய் வேலை பண்ணுபவர்.

வேலையாட்களுடன் பேசி முடித்ததுமே அவர் சுதாகரை வரச்சொல்லி ஆள் அனுப்பினார். பிறகு உள்ளே போனார். உள்ளே படுக்கையின்மீது மாதவியின் உடல் அப்படியே தூங்குவது போலவேயிருந்தது. மிக கவனமாய் பார்த்தாலேயொழிய தெரியாது. கருப்பு பார்டர் வெள்ளைப் புடவையில் மார்பு பக்கத்தில் சிவப்பாயிருந் தது.

தலையணைக்கருகில் பீரோ சாவி இருந்தது. அவர் கொஞ்சம் தடுமாற்றமடைந்து அந்த சாவிக்கொத்தால் பீரோவைத் திறந்தார். சுமார் ஐநூறு புடவைகள் வரிசை யாய் ஹேங்கரில் மாட்டப்பட்டிருந்தன. முக்கியமான விஷயம் ஏதாவது தென்படுமோ என்னவோ என்று பார்த் தார். புடவைக்கடியில் சுதாகரின் கடிதம் கிடைத்தது. வேறெதுவும் இல்லை. முன் அறைக்கு வந்து அந்த கடிதத்

தைப் பொறுமையாய் படித்தார். பெரிய குடும்பங்களில் இப்படிப்பட்டவை சகஜந்தான் என்று தெரியும். ஆனால் இந்த சுதாகர் எழுதிய கடிதம் நேர்த்தியாய் இருந்தது. இது காதல் கடிதம் இல்லை. ஆனால் அடுத்தவரின் இதயத்திற்குள் நேராய் துளைத்துக்கொண்டு போகவல்லது. காதல் என்றால் இவ்வளவு உயர்ந்ததா என்ற உணர்ச்சியைத் தோற்றுவித்து, இப்படிப்பட்ட காதலை அனுபவிக்காமல் போனால் வாழ்க்கையே வீண் என்பதுபோல செய்யக் கூடியது. தம் இறுதி நோக்கத்தைக் கடைசிவரையிலும் தெரிந்துகொண்டு விடாமலிருக்க இப்படிப்பட்ட ரகத்தைச் சேர்ந்த ஆண்கள் ஜாக்கிரதையாயிருப்பார்கள்.

அவர் கடிதம் எழுதியிருந்த தேதியைப் பார்த்தார். வந்து பத்து நாட்கள்கூட ஆகவில்லை. அப்படியானால் இந்தப் பரிச்சயம் புதிதாய் ஏற்பட்டிருக்க வேண்டும் என்று புரிந்தது.

அவருக்கு வேலையாட்கள் சொன்னதுகூட நினைவுக்கு வந்தது. நேற்றிரவு சுதாகர் சாப்பிட வந்துவிட்டு, பதினோரு மணிவரையிலும் பேசிக் கொண்டிருந்துவிட்டுப் போயிருக்கிறான். அப்படியானால் இந்தப் பரிச்சயத்தை இன்னும் வளர்த்துக் கொள்ளவில்லை அவன்.

அவருக்கு மாதவியின்மேல் இரக்கம் ஏற்பட்டது. அவர் யோசனையில் ஆழ்ந்திருந்தபோதே சுதாகர் வந்தான். ஆள் நடுங்கிவிட்டான்.

ராஜசேகர் அவனை அனுதாபத்தோடு பார்த்தார். அருவருப்பைக் காட்டிலும் மோசமானது அனுதாபம்.

சாதாரண சமயங்களில் ரொம்பவும் வாய்கிழிய வம்பளக்கும் இப்படிப்பட்டவர்களுக்கு கூட்டம் குறைவாயிருக்கும் சினிமா மார்னிங் ஷோக்களில் தம்மோடு கூட்டி வரும் பெண்களின் தோளில் தலைசாய்ந்து கொண்டு வம்பு

பேசுவதில்தான் துணிச்சல் இருக்குமே தவிர, பிரச்னை என்று வந்துவிட்டால் பெண்களைவிட அதிகமாய் பயந்து போவார்கள்.

'மாதவியைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்?' சாதாரணக் கேள்விகள் கேட்டு முடிந்ததும் விசாரித்தார்.

'அந்த குடும்பத்துக்கும் எனக்கும் சமீபத்தில்தான் பரிச்சயம் ஆயிற்று. என்னை சொந்தத் தம்பியைக் காட்டிலும் அதிகமாய் பாவிப்பாள்.'

இன்ஸ்பெக்டர் அவனை முறுவல் தவழ பார்த்தார். அனுதாபத்தைவிட மோசமானது புன்முறுவல். 'சொந்த அக்காவோடுகூட ராத்திரி பன்னெண்டு மணி வரைக்கும் யாருமே வம்பு பேசிட்டிருக்க மாட்டாங்களே' என்றார். சுதாகர் ஏதோ சொல்ல முன் வருவதற்குள் குறுக்கிட்டு, 'உங்களுக்கு ஜோதிடம் நன்றாய் வரும்னு நினைக்கிறேன், ...எங்கே, எனக்குக் கொஞ்சம் பார்த்துச் சொல்லுங்க. இந்த கொலைக்கேசில் நான் குற்றவாளியைப் பிடிக்க முடியுமா இல்லையான்னு.'

சுதாகரின் முகம் களையிழந்தது. 'எனக்கு ஜோதிடம்...' என்று ஏதோ சொல்லப் போனான்.

இன்ஸ்பெக்டர் அவன் பேச்சை இடையிலேயே தடுத்து நிறுத்திவிட்டு, 'மாதவிக்கு தினமும் டைரி எழுதும் பழக்கம் உண்டு. நேற்றிரவு நீங்க போனபிறகு உங்களுக்குள் நடந்த சம்பாஷணையையெல்லாம் முழுவதும் எழுதியிருக்கிறாள். உங்கள் 'வெள்ளைப் புடவை' விஷயத்தைக் கூட' என்றார், கடிதத்திலிருந்த வார்த்தைகளை நினைவில் வைத்துக்கொண்டு.

அவர் இருட்டில் எய்த அம்பு சரியாய் போய் தைத்துக் கொண்டது. சுதாகர் அழாத குறைதான். அந்தக் கவிஞன், எப்பொழுதும் பைஜாமா லால்சி போட்டுக் கொள்ளும் பழக்கமுடையவன், அமெரிக்காவிற்குப் போகக்கூடிய படிப்

பும் பணமும் இருப்பவன், அந்த நேரத்தில் இன்ஸ்பெக்டரின் காலில் விழாத குறையாய் 'நேற்றிரவு நான் கட்டிக்கச் சொன்னது அந்த எண்ணத்தில் இல்லைங்க, அக்கா என்னைத் தப்பாய் புரிஞ்சுக்கிட்டுது,' என்றான்.

'அப்படீன்னால் நேற்றிரவு கூட இந்த நிர்மலமான இதயமுடையவன் தன் அக்காவை வெள்ளைப்புடவை கட்டிக்கச் சொல்லிக்கேட்டிருக்கிறான் போலும்'— என்றெண்ணிக் கொண்டார் இன்ஸ்பெக்டர். 'உன்னை என்னால் காப்பாற்ற முடியாது, அரெஸ்ட் பண்ணித்திருவேன்' என்றார் கம்பீரமாய். அவ்வளவுதான், சுதாகர் திடீரென்று ஓவென்று கதறத் தொடங்கி விட்டான்.

'ஒரு விதத்தில் என்னால் உன்னைக் காப்பாற்றிட முடியும்.'

'எப்படி சார்?'

'நடந்தது நடந்தவாறு சொல்லு. ஆனால் ஒரு விஷயத்தை விட்டுட்டாலும் நான் உன்னை விட்டுவைக்க மாட்டேன். நேற்றிரவு நடந்ததை மாதவி டைரியில் உள்ளது உள்ளவாறு எழுதிவைத்திருக்கிறாள். அதற்கும் நீ சொல்வதற்கும் கொஞ்சமாவது வித்தியாசமிருந்ததானால் உன்னை அரெஸ்ட் பண்ணித்திருவேன்.'

சுதாகர் எல்லாவற்றையும் சொல்லிவிட்டான். 'அக்கா என்னைத் தப்பாய் புரிஞ்சுக்கிட்டுது. ராத்திரி தனியாய் படுத்துக்க பயமாயிருக்குமேன்னு வெளியே ஹாலில் படுத்துக்கறேன்னேன் நான். அதனால் அவளுக்குக் கோபம் வந்துடுத்து போலிருக்கு சார். அந்த கோபத்தால் டைரியில் என்னைப்பற்றி வித்தியாசமாய் எழுதிட்டிருக்கலாம். அதானேயொழிய நான் நல்லவன். என்னை நம்புங்க.'

'இதெல்லாம் எத்தனை மணிக்கு நடந்தது?'

'பதினோறு மணிக்கு.'

'உடனே நீ போயிட்டாயா?'

'போயிட்டேன்.'

'பொய்' என்றார் ராஜசேகர். சுதாகரைப்போன்றவர்கள் அத்தனை சுலபமாய் போய்விடமாட்டார்கள் என்று தெரியும் அவருக்கு. 'மாதவி போன்னதுமே நீ போயிடலை, இல்லையா?'

'அதைக்கூட எழுதியிருக்காங்களா சார் அதில்?' குரல் வெடிக்கக் கேட்டான் சுதாகர்.

'எழுதியிருக்காங்க.'

'அவங்களுக்கு ஏதாவது பயமாயிருந்தால் திரும்பவும் ஒரு மணி நேரங்கழித்து வரேன், கதவைத் திறந்து வையுங்கன்னு சொன்னேன். சத்தியமாய் சார்! அதைத் தவிர வேறு ஒன்றுமே பேசலை.'

'ஆனால் நீ ஒரு மணி நேரமில்லை, ரொம்ப நேரம் இருந்தாய், மாதவியும் இதைத்தான் எழுதியிருக்கிறாள்.' இப்படிப்பட்ட இளைஞர்கள் பெண்களைச் சுற்றிச் சுற்றி விடாமல் வந்து கொண்டிருப்பார்கள் என்பதை அவர் அறிவார்.

'எழுதியிருக்காங்களா?'

'ஆமாம் எழுதியிருக்காங்க.'

'நான் நினைச்சுட்டே இருந்தேன் சார். அவங்க ஜன்னல் வழியாய் ரெண்டு மூணு தடவை பார்த்தாங்க. ஆனால் கதவைத் திறக்கலை. நான் வெளியேவே இருந்தேன். வேணுமானால் கூர்க்காவைக் கேளுங்க—'

அப்படியே தரதரவென்று இழுத்து பூட்ஸ் காலால் நாலு உதைக்க வேண்டும் போலிருந்தது. அரும்பாடு பட்டு அடக்கிக் கொண்டார். பெண்களை எப்படிச் சிறைப் பிடிப்பது என்று இவனுக்கு நன்றாய் தெரிந்திருக்கிறது. ஆனால் இவன் கொலை செய்யவில்லை. அந்த விஷயத்தை மட்டும்

உறுதியாகத்தெரிந்து கொண்டார். 'எவ்வளவு மணி வரைக்கும் நீ இந்த வீட்டைச் சுற்றிக்கிட்டிருந்தாய்?'

'ராத்திரி இரண்டு மணி வரைக்கும்.'

மாதவி இரண்டிலிருந்து மூன்று மணிக்குள் இறந்து போயிருப்பதாய் பூர்வாங்க சோதனையின் மூலம் டாக்டர் தெரிவித்திருந்தார்.

இன்ஸ்பெக்டர் நிமிர்ந்தார். 'நன்றாய் யோசித்துச் சொல்லு. அந்த நேரத்தில் யாராவது வீட்டிற்குள் நுழைந்தார்களா?' என்று கேட்டார்.

சுதாகர் யோசனையில் ஆழ்ந்தான். இதுதான் நல்ல அவகாசம். இந்தக் கேள்வித்துளைகளிலிருந்து தப்பிக்க வேண்டுமானால் இப்பொழுதுதான் நல்ல பதிலைச் சொல்ல வேண்டும். அந்த மாதவியின் டைரியால்தான் இவ்வளவு தூரம் இதில் சிக்கிக்கொண்டுவிட்டேன். இப்பொழுது இது பேப்பர்களில் வந்து விட்டால் தன் யோக்கியதையே உலகத்தின் கண்முன் கெட்டு விடும்.

'நான் போயிடலாம்னு நினைச்சேன் சார். ஆனால் அந்த சமயத்தில்தான் யாரோ பின்பக்கமாய் வீட்டிற்குள் நுழைஞ்சுட்டிருந்தாங்க. அதைப் பார்த்துட்டு நின்னுட்டேன்.'

'திருடனைப் போலிருந்ததா?'

சுதாகரின் யோசனை மின்னலைக் காட்டிலும் வேகமாய் இயங்கிற்று. திருடனைப் போலிருந்ததாய் சொன்னால் அந்த விஷயத்தை ஏன் யாருக்கும் சொல்லவில்லை என்று கேட்பார்கள். அதனால் இவ்வாறு சொன்னான் :

'இல்லை சார். பரிச்சயமான ஆளாய்த்தான் தெரிஞ்சுது.'

'அந்த ராத்திரி இரண்டு மணிக்கு பரிச்சயமான ஆள் பின்பக்கத்திலேருந்து வந்துட்டிருந்தானானால் அவனும் உன்னைப்போல் அவங்க தம்பியாகவோ அண்ணனாகவோ இருந்திருக்கணும் இல்லையா?'

'ஆமாம் சார்'

அதுவரை அவள் அவனுடைய பாலைவன வாழ்க்கையில் ஒரு சோலை. இப்பொழுதோ செத்துவிட்ட அவள் குணத்தை அவ்வளவு கொடுமையாய் குறைத்துச் சொல்வதற்குக்கூட அவன் தயங்கவில்லை. தமக்கு ஒரு பைசா அளவு லாபம் வருமானால் அடுத்தவருக்கு ரூபாயளவு நஷ்டம் ஏற்படுத்தக்கூட இவர்கள் பின்வாங்கமாட்டார்கள்.

'அந்த ஆளைப் பார்த்தால் அடையாளம் சொல்ல முடியுமா இப்போ?'

சுதாகருக்குத் தொண்டையில் ஏதோ சிக்கிக்கொண்டாற் போலாயிற்று. அடையாளம் சொல்ல முடியும் என்று சொல்லிவிட்டால் நாளையிலிருந்து போலீஸ் ஸ்டேஷனைச் சுற்றித் திரிந்து கொண்டிருக்க வேண்டிவரும்.

'சொல்ல முடியாது. பின்னாலிருந்து பார்த்தேன். கோட்டு போட்டிருந்தார்.'

'உயரம்?'

'ஐந்தரை அடியிருக்கலாம்.'

'பின்னாலிருந்துதான் பார்த்தேன், முன்னால் சரியாய் பார்க்கலைங்கிறாய், இல்லையா?'

'ஆமாம் சார்.'

'திரும்பி எத்தனை மணிக்கு வெளியே போனாரு?'

'நான் பார்க்கலை. நான் மனப்பூர்வமாய் நேசித்த அக்கா இப்படிப்பட்டவரினு தெரிஞ்சு மனமுடைஞ்சு போய் திரும்பிப் போயிட்டேன்.'

இன்ஸ்பெக்டர் ராஜசேகர் உள்ளே போய்விட்டு, இரண்டு நிமிஷங்களுக்குப் பிறகு தன் இலாக்காவைச் சேர்ந்த ஒரு ஆளுடன் திரும்பி வந்தார். அவன் ஐந்தரை அடி உயரமிருந்தான். அவன் போட்டுக் கொண்டிருந்த கோட்டு அவனுக்கு சரியாய் பொருந்தியிருந்தது. அவனை சுவர்ப் பக்கமாய் நிற்க வைத்துவிட்டு சுதாகரிடம், 'சரி யாய் பாரு. இந்த மாதிரி அடையாளந்தான் தெரிஞ்சுதா?' என்று கேட்டார்.

இல்லை என்று சொன்னால் பின்னே எப்படியிருந்தான் என்று கேட்பார். சுதாகருக்கு இந்தக் கேள்விக் கணை களிலிருந்து எப்பொழுது தப்பித்துப் போவோமோ என் றிருந்தது.

'ஆமாம் சார், பின்னாலிருந்து பார்த்தப்ப அசல் இது போலவேதான் சார் இருந்தான்' என்றான்.

இன்ஸ்பெக்டர் தன் ஆளைப் பார்த்து, 'அந்த கோட்டை எடுத்துட்டுப்போய், எடுத்த இடத்திலேயே வெச்சுடு' என்றார். அந்த ஆளுக்கு இன்ஸ்பெக்டர் தன்னை ரவியின் கோட்டை ஏன் போட்டுக்கச் சொன்னார் என்று புரியவில்லை. எடுத்துக் கொண்டு போய் பீரோவில் வைத்துவிட்டான். ரவியின் உயரம் ஐந்தரை அடி.

# 37

சுதாகர் போய்ச்சேர்ந்த ஐந்து நிமிஷங் கழித்து, சர்மா பிற டைரக்டர்களுடன் காரில் வந்து இறங்கினார். 'பம்பாய் விமானம் வந்தது. ரவி அதில் இல்லை' என்றார் குழப்பத்தோடு.

'இருக்க மாட்டார். எனக்குத் தெரியும்' என்றார் இன்ஸ்பெக்டர் ஒரே வரியில்,

'ஏன்?' சர்மா ஆச்சரியத்தோடு கேட்டார். இன்ஸ்பெக்டர் பதில் சொல்லவில்லை. உள்ளே போனார். ஜேபியிலிருந்து மாதவிக்கு சுதாகர் எழுதிய கடிதத்தை வெளியே எடுத்தார். ஆனால் இம்முறை எடுத்தபோது ஜாக்கிரதையாய் கைக்குட்டையால் பிடித்துக்கொண்டு அதை எடுத்தார்.

விரலடையாள நிபுணரிடம் அதைத் தந்து, 'இதன் மேல் யார் யாருடைய விரலடையாளங்கள் தெரிகின்றன என்று பார், கவனமாய்' என்றார்.

முன் அறையில் சர்மா முதலியவர்கள் உட்கார்ந்திருந்தார்கள். இன்ஸ்பெக்டர் போனை எடுத்து ஏர்லைன்ஸ் ஆபீசுக்குப் போன் பண்ணினார். தன்னை யார் என்று அறிமுகம் பண்ணிக்கொண்டு, 'இங்கிருந்து பம்பாய்க்குச் செல்லும் விமானம் காலையில் எத்தனை மணிக்குப் போயிற்று?' என்று கேட்டார்.

'காலையில் எட்டு மணிக்கு' மறுமுனையிலிருந்து பதில் கிடைத்தது.

'அங்கிருந்து வரும் விமானம் எத்தனை மணிக்குப் புறப்படுகிறது?'

'பதினோரு மணிக்கு.'

ராஜசேகர் போனை வைத்துவிட்டார். டைரக்டர்கள் எல்லோரும் அவர் இந்த விஷயத்தை ஏன் விசாரிக்கிறார் என்று புரியாமல் பார்த்தார்கள். அதற்குள் விரலடையாள நிபுணர் வந்து, 'இந்த கடிதத்தில் நான்கு விதமான விரலடையாளங்கள் இருக்கின்றன சார்' என்று சொன்னான்.

ராஜசேகர் அவனோடு சேர்ந்து ரவியின் ஆபீஸ் அறைக்குப் போய், 'இங்கே பரிசோதி. ரவியின் விரலடையாளங்கள் நிறைய கிடைக்கும். உனக்கு அந்தக் கடிதத்தின் மீது கிடைத்த நான்கு விரலடையாளங்களில் என்னுடையது, சுதாகருடையது, மாதவியுடையதைத் தவிர அந்த

நாலாவது யாருடையதுன்னு கண்டுபிடித்துச் சொல்லு' என்றார்.

கால்மணி கழித்து நிபுணர் வந்து, 'அந்த நாலாவது ரவியுடையது' என்று சொன்னான்.

அதாவது -

தன் மனைவிக்கு சுதாகர் எழுதிய கடிதத்தை ரவி படித்திருக்கிறான் என்று அர்த்தம்.

∴ ∴ ∴

செஞ்சுராமய்யா நிமிர்ந்து உட்கார்ந்து, 'அப்படியா?' என்றான்.

'அவங்க ரொம்ப கலவரப்பட்டுட்டிருக்காங்க. விமான நிலையத்திலேருந்து கிளம்பி வருவதாய் போன் பண்ணி னானாம். ஆனால் இங்கே வந்து இறங்கலை.'

செஞ்சு ராமய்யா சிரித்துவிட்டு, 'மனைவி போயிட் டாங்கற ஷாக்கில் விமானத்திலேருந்து குதித்து விட்டா னோ என்னவோ?' என்றான். எது என்னவானாலும், ஒரு விளையாட்டுப் பந்தயத்தில் அடுத்தவனின் கால் உடைந்து அதன் மூலம் தன்னை வெற்றி பெற்றவனாய் அறிவித்தால் ஒரு சாடிஸ்ட் ஆட்டக்காரன் அடையும் செயற்கை ஆனந் தத்தை அடைந்தான் அவன்.

∴ ∴ ∴

இன்ஸ்பெக்டர் சர்மாவைப் பார்த்து. 'நீங்க பம்பாயி லிருந்து ரவியோடு நேற்றோ முந்தாநாளோ பேசினீங் களா?' என்று கேட்டார்.

'முந்தாநாள் பேசினேன். எங்களுக்கு ஜனாதிபதி பரிசு வந்திருக்கு. அந்த விஷயத்தை சொன்னேன்.'

'நேற்று பேசலையா?'

இந்த சம்பாஷணையைக் கேட்டுக் கொண்டிருந்த மற்றொரு டைரக்டர் இடைமறித்து, 'நேற்று பாதிராத்திரி வரைக்கும் அவருக்காக முயற்சி பண்ணிட்டேயிருந்தோம். அவசரமாய் ஒரு காண்ட்ராக்ட் விஷயமாய் பேச வேண்டி யிருந்தது. அவர் அறையில் கிடைக்கலை. காலையில் கூட அவரிடமிருந்து போன் வருமோன்னு எதிர்பார்த்திட்டிருந் தோம். வரலை. அதற்குள் அவரிடமிருந்தே போன் வந்தது. விமான நிலையத்திலிருந்துன்னு சொன்னார்' என்று விவரித்தார்.

'பம்பாயில் ரவிக்குத் தெரிந்தவங்க யாராவது உண்டா?'

'தெரியாது.'

'நான் சவத்தை மார்ச்சுவரிக்கு அனுப்பறேன்.'

யாருமே பதில் பேசவில்லை.

அடுத்த பத்தாவது நிமிஷம் மாதவியின் உடல் சவப் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டது.

சர்மா முதலியோர் போய்விட்டார்கள்.

இன்ஸ்பெக்டர் போகவில்லை. ரவி வருவதற்குள் அன் அஃபீஷியலாய் சில காரியங்களைப் பண்ண நினைத்தார். ரவி டிராயரைத் திறப்பதொன்றும் கஷ்டமாயில்லை. கொஞ்ச நேரத்திலே அவருக்குத் தேவையானது கிடைத்து விட்டது. ஆனால் அதற்குக் கீழே 'மிஸ் கோயம்புத்தூர்' என்று இருந்ததால் கொஞ்சம் குழப்பத்தில் ஆழ்ந்தார். யார் இந்த மிஸ் கோயம்புத்தூர்?

அவர் அன்று மாலை வரையிலும் பார்த்துவிட்டு மறு நாள் பம்பாய்க்குப் புறப்பட்டார். நேரத்தை வீணாக்க விரும்பவில்லை. மாதவியைக் கொலை பண்ணிய ஆள் நிச்சயமாய் மிக சாமர்த்தியமான ஆளாய்த்தான் இருக்க வேண்டும். சந்தேகமில்லை. இக்கொலை ரகசியத்தை

வெளிக்கொண்டு வருவதை ஒரு சவாலாய் ஏற்றுக்கொண்டார்.

கொலையாளி யார் என்று அவருக்கு உத்தேசமாய் தெரிந்திருந்தது. விமானம் தாமதமானதால் அவன் சிறிய தப்புப் பண்ணிவிட்டது கூட புரிந்துவிட்டது. அவன் அதைத் திருத்திக் கொள்வதற்குள்ளாகவே நான்கு புறத்திலிருந்தும் வழியை அடைத்துவிடவேண்டும். அதனால்தான் அவர் அவ்வளவு அவசரமாய் பம்பாய்க்குப் பயணமானார்.

ஊரில் இறங்கியதுமே, அவர் ஸீ-ராக் ஓட்டலுக்கு நேராய் போனார். ரிஸப்ஷனில் ஒரு பெண் உட்கார்ந்திருந்தாள். 'நமஸ்தே, நான் சென்னையைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர். பெயர் ராஜசேகர். நீங்க?' என்று பாதியிலேயே நிறுத்திக்கொண்டார்.

'என் பேர் ப்ரியதர்சினி. சந்திரிகா ப்ரியதர்சினி' என்றாள் அவள் முறுவலுடன். 'சொல்லுங்க, உங்களுக்கு நான் என்ன உதவி பண்ணணும்?'

'ரவின்னு ஒருத்தர் நேற்றுவரை உங்க ஓட்டலில் இருந்தாரா?'

'ரவி... மேனேஜிங் டைரக்டர்?'

'அவர்தான்.'

'ஆமாம், இருந்தார். நேற்று காலையில் காலி பண்ணிட்டுப் போயிட்டார்.'

அவர் மேலும் இரண்டு நிமிஷம் பேச்சில் கழித்தார். தான் அன்று கட்டிக்கொண்டிருந்த புடவை ரவிதேஜா டெக்ஸ்டைல்ஸில் தயாரான புடவைதான் என்று அவன் அன்றைக்குச் சொன்னதைக்கூட அவரிடம் சொன்னாள்.

'முந்தாநாள் ராத்திரி டியூடியில் யார் இருந்தாங்க?'

'நான்தான்.'

'ரவி முந்தாநாள் ராத்திரி பூராவும் அறையில் இருந்தாரா?'

அவள் தடுமாற்றமடைந்து, 'தெரியாது' என்றாள். அவள் தடுமாற்றத்தைக் கவனித்துக்கொண்டார் அவர். 'உங்க பில் புத்தகம் போன்றதையெல்லாம் பார்த்துவிட்டால் விஷயம் தெரிஞ்சுடுமில்லே! ராத்திரி டின்னர் எடுத்துட்டது, போன்கால் பண்ணியது இதெல்லாம்...'

அவள் ஏதோ நினைவுக்கு வந்தாற்போல, 'அவர் அறையில் இல்லை ராத்திரி' என்றாள்.

'எப்படிச் சொல்றீங்க?'

'எந்த போன் வந்தாலும் கொடுக்க வேண்டாம்னாரு. அப்புறமாய் எனக்குச் சந்தேகம் வந்தது. டிரங்க்கால்கூட தராமல் தடுத்துடணுமான்னு தெரிஞ்சுக்கணும்னு திரும்பவும் போன் பண்ணினேன். அவர் போனை எடுக்கலை.'

'ஒருக்கால் தூங்கிட்டிருந்திருக்கலாமில்லே?'

'இருக்கலாம். எனக்குத் தெரியாது. ஆனால் எனக்குப் போன் பண்ணின ரெண்டே நிமிஷத்திற்கெல்லாம் தூங்கிட்டாருன்னு சொன்னால்...' அவள் பாதியிலேயே நிறுத்திக் கொண்டாள். அவர் புரிந்து கொண்டது போல தலையாட்டி விட்டு, 'உங்க ஹவுஸ் கீப்பிங் ரிகார்டில் ரவியின் அறையை மறுநாள் காலையில் எத்தனை மணிக்கு பெருக்கி சுத்தம் பண்ணியதுங்கற விஷயத்தை எழுதிட்டிருப்பாங்களில்லையா?'

அவள் தலையாட்டினாள்.

அந்த ரிகார்டுகளைப் பரிசோதித்துப் பார்த்தார்.

'பத்தரைக்கு' என்றிருந்தது.

அப்படியானால்—

இரவு தன்னைத் தொந்தரவு பண்ண வேண்டாம் என்று சொல்லிவிட்டு அறைக்கு முன்னால் 'DO NOT DISTURB'

போர்டை வைத்திருந்த ரவி—காலையில் பத்தரை மணி வரைக்கும் அந்த போர்டை எடுக்கவில்லை.

அதுவரையிலும் ரவி அறைக்குள் என்ன பண்ணிக் கொண்டிருந்தான்?

அவர் நிமிர்ந்து, 'ராத்திரி எத்தனை மணிக்கு ரவி தன் அறையிலிருந்து போன் பண்ணினார்?' என்று கேட்டார்.

'ராத்திரி எட்டு மணிக்கு.' அவள் பதிலளித்தாள். அவர் யோசனையிலாழ்ந்தார்.

பம்பாயிலிருந்து சென்னைக்குப் போகும் விமானம் இரவு ஒன்பது மணிக்கு இருந்தது. அதில் போய்—வேலையை முடித்துக்கொண்டு காலையில் ஆறுமணிக்குக் கிளம்பித் திரும்பவும் பம்பாய்க்கு வந்துவிட்டு அறைக்கு முன்னாலிருந்த 'நோ டிஸ்டர்ப்' போர்டை எடுத்துவிட்டு—மெல்ல அறையைக் காலி பண்ணி விட்டு திரும்பவும் பதினோரு மணிக்கு விமானத்தில் அப்பொழுதுதான் பம்பாயிலிருந்து திரும்பினாற்போல சென்னையில் இறங்கி... அபார திட்டம் போட்டிருக்கிறான் கொலையாளி! அவன் போட்ட இந்த மிக அபாரமான திட்டம்பற்றி இரண்டாம் பேருக்குச் சந்தேகம் ஏற்பட வழியில்லை. விமானம் மட்டும் தாமதமாகியிராவிட்டால்...

இன்ஸ்பெக்டர் தன் மேஜைக்கு முன்னால் உட்கார்ந்தபடி ரிபோர்ட் எழுதத் தொடங்கினார். மிக விரிவான ரிபோர்ட் அது.

'ரவிதேஜா டெக்ஸ்டைல்ஸ் மேனேஜிங் டைரக்டர் ரவிக்கும் அவர் மனைவிக்கும் ஒரு வினாடிகூட ஒத்து வராது. வீட்டில் வேலை பார்க்கும் எல்லோருக்குமே இந்த விஷயம் தெரியும். ஆபீசில் வேலை பண்ணும் பெண்களோடுகூட தொடர்பு உண்டு. அவர் மனைவிக்கு சுதாகர் என்ற இளைஞன் எழுதிய கடிதத்தை அவர் படித்திருக்

கிறார். அதிலிருந்து அவள்மேல் வெறுப்படைந்திருக்கிறார். அவர் டைரி இதற்கு உதாரணம். ரவியின் மனைவிக்கும் அவருக்கும் ஏற்படும் தகராறால் அவளுக்கு ஹிஸ்டீரியா கூட தோன்றுவதற்கான அறிகுறிகள் தென்பட்டன என்று டாக்டர் சொல்லுகிறார்.

ரவியும் யாரோ ஒரு பெண்ணைக் காதலித்திருக்கிறார். இந்தப் பெண் ஒரு காலத்தில் மிஸ் கோயம்புத்தூராய் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறாள் என்பது தெரிகிறது. அதற்குப் பிறகு அவள் அவரை ஒதுக்கியிருக்கிறாள். அதனால் அவருக்கு அதிக ஏமாற்றம் ஏற்பட்டிருக்கிறது. அவர் ஆபீசில் தற்காலிகமாய் வேலையில் சேர்ந்திருக்கும் ப்ரியம்வதா என்ற பெண்ணிடம் உரிமை எடுத்துக் கொண்டிருக்கிறார். அவர் தன் ஆபீசரானதாலும், தான் தற்காலிக வேலையில் இருந்ததாலும் இந்த விஷயத்தை மேலதிகாரிகளுக்குத் தெரிவிக்க பயப்பட்டிருக்கிறாள். சக ஊழியர்களிடம் இதைப்பற்றி சொல்லி என்ன பண்ணலாம் என்று ஆலோசனை கேட்டிருக்கிறாள். அதே ஆபீசில் வேலை பண்ணுகிற இரண்டு பெண்கள் இந்த விஷயத்தில் சாட்சி சொல்லுகிறார்கள். இந்தத் தொந்தரவு தாங்க மாட்டாமல் ப்ரியம்வதா வேலையை ராஜினாமா பண்ணி விட்டுப் போய்விட்டாள்.

தன் ஹிஸ்டீரியா மனைவியைக் கொல்ல ரவி நன்றாய் திட்டம் போட்டிருக்கிறார். வெளிநாட்டிலிருந்து அப்பொழுதுதான் வந்து இறங்கினாற்போல மூன்று நாட்களுக் கப்புறம் வந்து இறங்கி, அதற்கிடையே மனைவியைக் கொன்று போட்டுவிடத் திட்டம் தீட்டியிருக்கிறார். எல்லாம் சரிவர நடந்திருந்தால் இவர் மேல் சந்தேகமே ஏற்பட்டிருக்காது. எல்லோருமே, கொலை நடந்த அன்றைக்கு இவர் வெளிநாட்டில்தான் இருந்தார் என்று நினைத்திருப்பார்கள். ஆனால் துரதிர்ஷ்டம் இவரைப் பின் தொடர்ந்து விட்டது. அதே சமயத்தில் ஜனாதிபதி பரிசு வந்ததால் டைரக்டர்கள் அவருக்காக அமெரிக்கா

வுக்குப் போன் பண்ணினார்கள். அப்பொழுதே பம்பாய்க்கு வந்து சேர்ந்து விட்டிருந்த அவர், இந்த விஷயத்தைத் தெரிந்துகொண்டு கதையை மாற்றிவிட்டார். ஏதோ வேலை இருப்பதுபோல சீ-ராக் ஓட்டலில் தங்கிவிட்டார். ராத்திரி சென்னைக்கு வந்துவிட்டு காலையிலேயே பம்பாய்க்குப் புறப்பட்டுப் போய்விட்டார்.

கொலையாளியை துரதிர்ஷ்டம் விடவில்லை, வேறு ஏதோ அவசர வேலையாய் டைரக்டர்கள் சீ-ராக் ஓட்டலுக்குப் போன் பண்ணியபோது இரவெல்லாம் அவர் அந்த அறையில் இல்லை என்ற விஷயம் தெரியவந்தது. ரவி சென்னையிலிருந்து ஒன்றுமே தெரியாததுபோல போன் பண்ணினார். விமான நிலையத்திற்குக் கார் போயிருக்கிறது என்று தெரிந்து கலவரமடைந்துவிட்டார். அன்றைக்கு விமானம் தாமதமாய் வந்திருக்கிறது என்ற விஷயம் அவருக்குப் புரிந்ததுமே தான் செய்த தப்பு புரிந்துவிட்டது. விமானத்தைக் காட்டிலும் முன்பாகவே தான் சென்னைக்கு வந்து சேர்ந்துவிட்டதாய் போலீசாருக்கு சந்தேகம் வந்துவிட்டதால் திரும்பிப்போய் எல்லாவற்றையும் விசாரிப்பார்கள் என்று அவருக்குத் தெரியும்.

அதிலிருந்து அவர் தலைமறைவாகியுள்ளார். அவர்மீது அரெஸ்ட்வாரண்ட் இஷ்யூ பண்ணப்பட்டுள்ளது. அவர் போட்டோக்கள் எல்லா போலீஸ் ஸ்டேஷன்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன. கொலையாளி மிக செல்வாக்குள்ள ஆள். வெளியே இருந்தால் சாட்சிகளைத் தாறுமாறாக்கி விடக் கூடியவர். அதனால் நான் பெயிலபிள் வாரண்ட் (ஜாமீன் இல்லாத உத்தரவு) மட்டுமே தரவேண்டியது.'

ரிப்போர்ட்டை எழுதி முடித்துவிட்டு பாரமாய் மூச்சு விட்டார் ராஜசேகர்.

'எவ்வளவு நாளைக்குத்தான் தலைமறைவாய் தப்பிச்சுக்க முடியும் ரவி! எங்கேயிருந்தாலும் சரி உன்னைப் பிடிச்சுடறேன்' என்றெண்ணிக்கொண்டார் மனதிற்குள்.

மறுநாள் எல்லா பேப்பர்களிலும் இந்தச் செய்தி பிரபலமாகி வெளிவந்தது. 'ரவி டெக்ஸ்டைல்ஸ் மேனேஜிங் டைரக்டர் தலைமறைவு - போலீசார் தேடுகிறார்கள்', 'மனைவியைக் கொன்ற ரவி', 'பெண் பித்தால் மனித உரு தாங்கிய அரக்கனாகிவிட்ட கணவன்' - போன்ற செய்திகள்.

இந்த பேப்பர்களைப் பார்த்துவிட்டு எல்லோரைக் காட்டிலும் அதிகமாய் மகிழ்ந்து போனது செஞ்சுராமய்யா தான்!

அன்றைக்கு அந்த எதிரி கம்பெனியில் பெரிய பார்ட்டி நடந்தது.

# 38

மெல்ல மெல்ல மயக்கம் விடுபட்டாற் போலிருந்தது ரவிக்கு. மெல்ல கண்ணைத் திறந்தான். கொஞ்ச நேரம் தான் எங்கேயிருந்தோம் என்று புரியவில்லை. திரும்பிப் பக்கத்தில் பார்த்தான்.

பக்கத்தில் ஸ்டூலின்மேல் உட்கார்ந்தபடி தன்னையே பார்த்துக் கொண்டிருந்த பாஸ்கர் தென்பட்டான். சட்டென்று கட்டிலை விட்டு எழுந்திருக்கப் போனான். பல வீனமாயிருந்தது. பாஸ்கர் சிரித்தான்.

'ஹலோ சார், ஹௌ ஆர் யூ?'

'என்ன இது? என்ன நடந்திட்டிருக்கு?'

'நாடகத்தின் கடைசி கட்டம்.' பாஸ்கர் எழுந்து பக்கத்து அறைக்குப் போய் சில பேப்பர்களைக் கொண்டு வந்து ரவிக்கு முன்னால் போட்டான். கடந்த ஒரு வாரகால தினசரி பத்திரிகைகள் அவை. ரவி புரியாமல் அவற்றை வாங்கி முதல் பக்கத்தைப் பார்த்துவிட்டு அதிர்ந்தான்.

சில பத்திரிகைகள் இறந்துபோன மாதவியின் போட்டோவைப் போட்டிருந்தன. வேறு சில அவன் போட்டோவைப் போட்டிருந்தன. 'ரவியின் மேல் அரெஸ்ட் வாரண்ட்' 'ரவி தலைமறைவு' 'ரவியை போலீசார் வேட்டையாடுகிறார்கள்' போன்ற தலைப்புக்கள், விதம் விதமான கட்டுரைகள், செய்திகள். அவன் கடைசி பத்திரிகையின் மீதிருந்த தேதியைப் பார்த்து அதிர்ந்துவிட்டான். மாதவி இறந்து போய் ஒரு வாரமாகிவிட்டது.

அப்படியானால்—

ஒரு வார காலம் அவன் கோமாவில் இருந்திருக்கிறானா?

ரவியின் முகத்தில் தோன்றிய மாறுதல்களைக் கவனித்த பாஸ்கர் சிரித்தான். முழுக்கதையையும் விவரிக்கத் தொடங்கினான்—

'வியாபார ரீதியாக உங்களை எப்படி வீழ்த்துவதுன்னு எங்களுக்குத் தெரியலை. இந்த வேலையை முடிக்கச் சொல்லி என்னைத் தேர்ந்தெடுத்தாங்க. ஆனால் நான் உடனே களத்தில் குதிச்சிடலை. முதலில் உங்களையும் உங்களைச் சுற்றிலுமிருக்கும் சூழ்நிலையையும் கவனித்து வந்தேன். உங்களுக்கும் உங்க மனைவிக்கும் ஒத்துவராதுன்னு தெரிஞ்சிக்கிட்டேன். உங்களை வலையில் சிக்க வைக்கணுமானால் ஒரு பெண் மூலந்தான் அது முடியும்னு தோன்றிற்று. உங்க பழைய செக்ரட்டரிக்கு ஆக்சிடெண்ட் ஏற்படுத்திட்டு, ப்ரியம்வதாவை அந்த இடத்தில் வேலைக்கு அமரச் செய்தோம். அந்த விதமாய்த்தான் ப்ரியம்வதா உங்களிடம் செக்ரட்டரியாய் வந்து சேர்ந்தாள்.'

ரவிக்கு உலகமே கிர்ரென்று சுழலுவது போலிருந்தது. சரஸ்வதி தெருநடுவில் விபத்துக்குள்ளானது எதேச்சையான செயலில்லை என்பது புரிந்தது. அவன் உள்ளங்கைகள் முறுக்கேறிக் கொண்டன.

'டேய்! உங்க சுயநலத்துக்காக அப்பாவிகளை பலிவாங்கிட்டீங்களே!' என்று கத்தினான்.

பாஸ்கர் சிரித்தான். 'வியாபாரத்தில் இந்த மாதிரியெல்லாம் கிடையாதுன்னு உங்களுக்குச் சொல்லத் தேவையில்லை ரவி! சரி... எதுவரை சொன்னேன்? உங்க பழைய செக்ரட்டரி ஆஸ்பத்திரியில் இருந்தபோது அந்த இருப்பிடத்தில் ப்ரியம்வதாவைக் கொண்டு வந்தோம். ஆனால் நாங்க எதிர்பார்த்தாற்போல அவளால் அவ்வளவு சீக்கிரத்தில் உங்களைக் கவர்ந்துட முடியலை. பலவிதங்களில் முயற்சி பண்ணினாள் அவள். ஆட்டோகிராப்புகள், பிறந்த நாளன்று நள்ளிரவில் போன்...பாவம் ப்ரியம்வதா, உங்க மேல் தன் அன்பைக் காட்ட பலவிதத்தில் கஷ்டப்பட்டாள். நீங்க கொஞ்சமாய் மாறத் தொடங்கினாப்போல எங்களுக்குத் தோன்றிய அதே சமயத்தில் சுதாகர் என்ற இளைஞன் கார்த்திகை மாத பிக்னிக்கில் மாதவியோடு நெருங்கிப் பழகியதைப் பார்த்தோம் நாங்க. உங்களுக்கு அன்றைக்கு, 'உங்க நலனைக் கருதும் ஆள்' என்று சொல்லி விட்டு போன் பேசியதுகூட நான்தான். எங்க அதிர்ஷ்டம் நன்றாயிருந்தது. அந்த சுதாகர் உங்க மனைவியை அட்டையாய் ஒட்டிக்கிட்டான். நீங்க மானசீகமாய் மிகத் தளர்ந்து போயிட்டீங்க.'

அவன் கொஞ்சம் நிறுத்திவிட்டுத் திரும்பவும் தொடர்ந்தான்.

'ஒருநாள் ராத்திரி ரொம்ப நேரம் வரை நீங்க டிக்டேஷன் கொடுத்துட்டிருந்தீங்க. கிளம்புவதற்கு முன்னால் ப்ரியம்வதா தந்த சைகை மூலமாய் லிஃப்ட் ராத்திரியெல்லாம் நடுவிலேயே நின்றுவிடறாப்போல செய்துட்டோம். ஒரு பக்கத்தில் வீட்டில் சுகமில்லாமல் போனதும், மறு பக்கத்தில் அழகான பெண்ணின் நெருக்கமும்...யார்தான் மையலில் விழாமலிருக்க முடியும்? ஒருமுறை நெருக்கமானதுமே ப்ரியம்வதா உங்களைத் திணறடித்து விடுவாள்

என்று தெரியும் எங்களுக்கு. பாலுறவு விஷயத்தில் அவள் கைதேர்ந்தவள்.' யாரோ ஓங்கி முகத்தில் அறைந்தாற் போல ரவியின் முகம் வெளுத்துவிட்டது.

பெண் ஒருத்தி தந்திரக்காரியாயிருந்து விட்டால் ஆணைத்தான் எப்படி ஆட்டுவிக்கிறாள்! பாலுறவில் கை தேர்ந்தவளாம்! அவள் பேசியதெல்லாம் நினைவுக்கு வந்தன.

'எப்போதுமே நான் உங்க புத்திசாலித்தனத்தைப் பற்றியும், வெற்றியைப் பற்றியுமேதான் நினைச்சிட்டிருப் பேன் சார்! உடல் வழியாய் தொலைவில் இருந்துட்டு மானசீகமாய் நினைச்சிட்டிருந்தால் அது மனச்சாட்சியை வஞ்சிப்பதுபோல! உங்களுக்காக எதை வேணுமானாலும் இழக்கத்தயார். இன்னும் எப்படித்தான் சொல்லு வேனோ?...'

எவ்வளவு அப்பாவியைப் போல நடித்தாள்! அதுதான் முதல் முதலாக ஒருத்தரோடு உறவு கொண்டதுபோல எவ்வளவு பயந்தாங்கொள்ளியைப் போல நடித்தாள்!

அவளைச் சொல்லி என்ன பிரயோஜனம்? அவனை யல்லவா சொல்லவேண்டும். அவன் ஒரு முட்டாள். அவள் நடிப்பையெல்லாம் உண்மையென்று நம்பி, தன் ஆண்மை யின் மீது அமோக நம்பிக்கையை வளர்த்துக் கொண்டு விட்டான். அவளோடு அனுபவம் கொள்வது தன் வெற்றி யின் அடையாளம் என்றெண்ணிவிட்டான்.

அவனுக்கு கொஞ்சமாவது புத்தி இருந்திருந்தால் அவள் முதல் முதலாய் முத்தமிட்ட விதத்தைப் பார்த்தே அது அவளுக்கு அனுபவம் வாய்ந்த செயல் என்று தெரிந்து கொண்டிருந்திருப்பான். மயக்கத்தில் ஆழ்ந்துவிட்டவனுக்கு யோசிக்கும் பக்குவந்தான் ஏது? அவ்வளவு கைதேர்ந்த தொழில் திறமை அவளிடம் இருந்ததால்தான் சந்தேகமே வராதவாறு நடிக்க முடிந்திருக்கிறது!

ஆனால் அந்த செயற்கைத்தனத்தை அவன் மனம் எங்கோ ஒரு மூலையில் வாசனை பிடித்துவிட்டது. மேலுக்குத் தெரியவில்லை. அதனால்தான் இரண்டே நாளில் அங்கேயிருந்து வெளிவந்துவிடவேண்டும் போலிருந்தது. ரவி யோசித்துக் கொண்டிருந்தபோது பாஸ்கர் சொன்னான்:

'சரி, இனி கதையின் கடைசிக்கு வரேன். நீங்க அவளோடு சேர்ந்து வெளியே கொஞ்சநாள் கழிக்கணும்னு பிளான் போடுவதாய் ப்ரியம்வதா எங்களிடம் சொன்னாள். உங்களைச் சிக்க வைப்பதற்கு இதுதான் நல்ல சமயம்னு பட்டுது எங்களுக்கு. நாங்கள் சேர்ந்து யோசித்தோம்.'

ரவி கடைசி கேள்வியைக் கேட்டான்: 'ஏன் இதையெல்லாம் பண்ணினீங்க நீங்க? வியாபாரத்தில் எதிரியை வீழ்த்துவதற்கு இதல்ல முறை. சாமர்த்தியமிருந்தால் அந்தத் துறையிலேயே உங்க புத்திசாலித்தனத்தை உபயோகப்படுத்திக்கணும், உங்களுக்குத் தேவையானது ரவி டெக்ஸ்டைல்ஸின் வீழ்ச்சியேயானால் அதற்கு இவ்வளவு பெரிய திட்டத்தைப் போட்டு, என் மனைவியைக் கொன்று, அதில் என்னை சிக்கவைக்கத் தேவையில்லை. ஒரு துப்பாக்கிக் குண்டால் என்னைக் கொன்றிருந்தாலே போதும்.'

பாஸ்கர் சிரித்துவிட்டு, 'வியாபாரத்தில் இருக்கிற புத்திசாலித்தனம் உங்களுக்கு மீதி விஷயத்தில் இல்லை ரவி' என்றான் ஒரே வார்த்தையில்.

'எனக்குப் புரியலை.'

'சில விஷயங்கள் புரியாமலிருப்பதே நல்லது ரவி.'

பாஸ்கர் எழுந்து போகக் கிளம்பினான். ரவி பின்னாலிருந்து கத்தினான்: 'இப்ப நான் என்ன பண்றது?'

பாஸ்கரின் முகத்தில் சாடிஸ்டிக் சிரிப்பு தவழ்ந்தது. 'அது உங்களிஷ்டம். வெளியே போலீசார் உங்களுக்காக வேட்டையாடிட்டிருக்காங்க. தூக்குமேடை கூட தயாரா யிருக்கு.'

ரவியின் உள்ளங்கை முறுக்கேறிக் கொண்டது. போய்க் கொண்டிருந்த பாஸ்கரைப் பார்த்துச் செய்வதறியாது கேட்டான்—'ப்ரியம்வதா எங்கே இருக்கிறாள்?'

பாஸ்கர் மெல்ல திரும்பி நிதானமாய் சொன்னான்— 'அவளையும் கொன்று விட்டோம்.'

ரவி நடுநடுங்கிவிட்டான். அவள் அவனுக்குக் கணக்கில் லாத அநியாயம் இழைத்திருக்கலாம். சொர்க்கத்தைக் காட்டிவிட்டு நரகத்திற்குள் தள்ளிவிட்டவளாயும் இருக்க லாம். வலைக்குள் சிக்க வைத்திருக்கலாம். ஆனால் என்ன தான் மறுத்தாலும் அவள் நெருக்கம் அவனுக்கு ஒரு அனு பவம். அவள் மரணம் மின் அதிர்ச்சி!

'உங்களை இவ்வளவு நம்பி உங்களுக்கு உதவி பண் ணிய பெண்ணை வேலையானதும் கொல்லுவாங்களா?'

'ஆம். ரொம்ப நம்பிக்கையாய்த்தான் வேலை பண்ணி னாள் எங்களுக்கு. ஆனால் என்னவோ யாரால் சொல்ல முடியும்? நாளைக்குக் கோர்ட்டில் கேசு நடந்துட்டிருக்கும் போது அவள் உங்க பக்கமாய் சாய்ந்துவிட்டால்?... நாளைக்குக் கோர்ட்டில் மாதவி இறந்த அன்றைக்கு ராத்திரி நான் ப்ரியம்வதாவோடு இருந்தேன்னு நீங்க சொன் னீங்கன்னு வெச்சுக்குங்க. அதுக்கு ப்ரியம்வதா சாட்சி சொன்னால்? அதனால்தான் அவளைக்கூடக் கொன்று குழிதோண்டிப் புதைச்சிட்டோம். நீங்க ப்ரியம்வதா சாட்சி யைப் பற்றி கோர்ட்டில் சொன்னதுமே அவள் சவத்தை வெளியே கொண்டுவரச் செய்வோம். உங்களுக்கும் ப்ரியம்வதாவுக்கும் இருந்த சம்பந்தத்தைப் பற்றியும் நீங்கள் அடிக்கடி அவள் வீட்டிற்குப் போவீர்கள் என்றும் வீட்டுக்

காரர் சாட்சி சொல்லுவார். நீங்களிருவருமாய் சேர்ந்து மாதவியைக் கொன்னுட்டீங்கன்னும், அதற்குப் பிறகு ப்ரியம்வதா தன்னைக் கல்யாணம் பண்ணிக்கச் சொல்லி உங்களை பலவந்தம் பண்ணினாள் என்றும் அவள் தொல்லையை நீக்கிக் கொள்வதற்காக நீங்க அவளையும் கொன்னுட்டீங்கன்னும் ப்ராசிக்யூஷன் வாதாடும். அதன் மூலம் இரட்டைக் கொலைகாரனாய் உங்க அத்தியாயம் முடிஞ்சிடும்...'

ரவி சிலையாய் பார்த்துக் கொண்டிருந்தான். பாஸ்கர் அவனை விட்டு வெளியேறினான். ஏதோ மயக்கத்திலிருந்து அப்பொழுதுதான் மீண்டவனைப் போல ரவி பெரிதாய் கத்தத் தொடங்கினான். 'நீங்க மனுஷங்க இல்ல... ராட்சதர்கள்.'

அந்த வார்த்தைகள் அறைச்சுவரில் பட்டு எதிரொலித்ததே தவிர எந்த பதிலுமில்லை.

அவன் அந்த குட்டிச் சுவருக்குப் பக்கத்தில் வெகுநேரம் அப்படியே உட்கார்ந்துவிட்டான். உடலெல்லாம் அசதியாயிருந்தது. கைக்கடியாரத்தில் தேதியைப் பார்த்தான்.

மாதவி இறந்து ஏழு நாட்கள் ஆகியிருந்தன. ஏழு நாட்கள் தன்னை மயக்கத்தில் வெளியுலகத்திலிருந்து தொலைவில் கொண்டு வைத்திருக்கிறார்கள். வெளியே என்ன நடந்து கொண்டிருக்கும் என்று அவனால் ஊகிக்க முடிந்தது. சமூகத்தின் பார்வையில், தன் மனைவியைக் கொன்றுவிட்டு ஓடிப்போய்விட்ட கொலையாளி. போலீசார் அவனுக்காக வேட்டையாடிக் கொண்டிருப்பார்கள்.

அவன் எழுந்து நின்றான். கால்கள் தள்ளாடின. வெளியே வந்தான்.

ஜனசஞ்சாரம் இல்லை. ஊர்க்கோடியில் இருந்த வீடாய் தோன்றிற்று. முற்றிலும் வீடாய்கூட இல்லை அது. அவனுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. அவன்

மனநிலை எவ்வளவு பலவீனமாயிருந்ததென்றால்—தானே போய் போலீஸ் ஸ்டேஷனில் தஞ்சமடைந்து விடலாம் போலிருந்தது. இந்த டென்ஷன், கோர்ட்டில் வாதங்கள்... இதையெல்லாம் தாங்கிக்கொண்டிருப்பதைவிட தப்பை ஒப்புக்கொண்டு விடுவதே நல்லதாய் பட்டது. ஆபத்துக் காலத்தில் மனிதன் எவ்வளவு கோழையாகி விடுகிறான் என்பது தெரிந்ததுதான் அவனுக்கு.

பாக்கெட்டைத் தடவிப் பார்த்துக் கொண்டான். பர்சில் பத்து ருபாய் இருந்தது. ஐந்து நிமிஷம் நடந்ததும் ஒரு மளிகைக் கடை எதிர்ப்பட்டது. போன்பண்ண சம்மதம் கேட்டு வாங்கிக்கொண்டான். போலீஸ் ஸ்டேஷனுக்குப் போன் பண்ணலாம் என்பது அவன் உத்தேசம். ஆனால் கடைசி சமயத்தில் மனத்தை மாற்றிக்கொண்டு சர்மாவுக்கு போன் பண்ணினான். 'ஹலோ' என்று மறுமுனையிலிருந்து சர்மாவின் குரல் கேட்டது.

'நான்தான் ரவி.'

'யாரு?' மறுமுனையிலிருந்து சர்மா ஆச்சரியமடைந்தவராய் கத்தினார். 'ரவி...? ரவியா?' கீச்சென்று வந்தது சர்மாவின் குரல்.

'நான்தான்.'

'எங்கேயிருந்து?'

தான் எங்கேயிருந்தான் என்பதைச் சொல்லிவிட்டு, 'என்ன பண்ணுவதென்றே புரியலை எனக்கு' என்றான்.

'உடனே இங்கே வா' என்றவர் சட்டென்று, 'வேண்டாம், வேண்டாம், எங்க வீட்டுக்கு முன்னாடி கூட ஒரு சி.ஐ.டி. நின்னுட்டிருக்கிறாப்போல தோணுது. நானே வரேன். அங்கேயே இரு' என்று பரபரப்புடன் சொல்லி விட்டு போனை வைத்துவிட்டார். ரவியும் போனை வைத்து விட்டான். அவன் வீட்டிற்குப் போகாததே நல்லதாயிற்று. அங்கேயும் நிச்சயம் காவல் இருந்திருக்கும்.

போனுக்குப் பணம் கொடுத்து விட்டு, அங்கேயே ஸ்டூலின் மேல் உட்கார்ந்து கொண்டான். எதேச்சையாய் அவன் பார்வை பக்கத்திலிருந்த பேப்பரின்மேல் பட்டது. எல்லாவற்றிற்கும் முன்னால் முதல் பக்கத்தில் அவன் போட்டோ...பெரிய அளவில்...

அவன் சட்டென்று ஸ்டூலை விட்டு எழுந்திருந்தான். கடைக்காரன் அவனையே சந்தேகத்தோடு பார்த்துக் கொண்டிருந்தான்.

ரவி தொலைவில் போய் நின்று கொண்டான். ஐந்து நிமிஷத்தில் சர்மாவின் கார் வந்து கொண்டிருந்ததைப் பார்த்தான். மரத்திற்குப் பின்னாலிருந்து வெளியே வந்து கையை ஆட்டினான். சர்மா காரை நிறுத்தி அவனை ஏற்றிக் கொண்டார். ஐந்து நிமிஷம் பயணம் தொடர்ந்தது, யாரும் பேசவில்லை. ரவி குற்றவாளியைப் போலக் கூசினான். எல்லோர் பார்வையிலும் அவன் மனைவியைக் கொன்ற கொலைகாரன்!

அவன் மனத்தை நோகடிக்காமலிருப்பதற்காக அவர் எதைப் பற்றியும் பேச்செடுக்காமல் வாயை மூடிக்கொண்டிருக்கிறார். அவனுக்கு சர்மாவின்பால் நன்றி ததும்பிற்று.

'எங்கே போயிட்டிருக்கோம்?'

'எங்க வீட்டுக்கு.'

'வேண்டாம்.'

'ஏன்?'

ரவி பதில் பேசவில்லை. அவன் நினைத்தது—நாளைக்கு அவன் அந்த வீட்டில் பிடிபட்டுவிட்டால், ஒரு கொலைகாரனுக்குத் தஞ்சமளித்ததற்காக சர்மாவும் இதில் சிக்கிக்க வேண்டியிருக்கும். அது அவனுக்குப் பிடிக்கவில்லை.

'நீ சொன்னதும் நிஜந்தான். எங்க வீட்டைச் சுற்றிக் கூட கண்காணிப்பு இருக்கும்.'

'நான் அதைப்பற்றி நினைக்கலை.'

கார் சந்திற்குள் திரும்பிற்று. ஃபேக்டரியின் கெஸ்ட் ஹவுஸ் அது. இருவரும் உள்ளே நுழைந்தார்கள். சர்மா சாவிக்கொத்தை எடுத்தார்.

'காபி குடிக்கிறாயா?'

மறுக்கவில்லை அவன். சர்மா காரில் எப்பொழுதும் வைத்துக் கொண்டிருக்கும் ஃபிளாஸ்க்கை எடுத்து வந்து அதிலிருந்த காபியை ஊற்றித்தந்தார். மடமடவென்று குடித்தான் அதை.

'குளி முதலில். நான் உட்கார்ந்துட்டிருக்கேன்.'

ரவி தலையாட்டிவிட்டு உள்ளே போனான். குளித்து ஒரு வாரத்திற்கு மேலாகியிருக்கும் போலிருந்தது. இழந்த பலம் கூடி வந்தாற் போலிருந்தது. அதற்குள் சர்மா வாழைப்பழங்களை வாங்கி வந்தார். ரவி அவரை நன்றியோடு பார்த்தான்.

'சாப்பிடு.'

'வாட்ச்மேன் இல்லையா?'

'இல்லை. லீவில் போயிருக்கான்.'

கெஸ்ட் ஹவுஸ் ஆளரவமில்லாமல் இருந்தது. சாதாரணமாய் அதை அதிகமாய் பயன்படுத்த மாட்டார்கள். ரவி சோபாவில் வந்து உட்கார்ந்து கொண்டான். அவன் கண்களை உறக்கம் சுற்றிக்கொண்டு வந்தது. அதைப் பார்த்த சர்மா, 'நீ தூங்கு. எதைப்பற்றியும் யோசிக்கவேண்டாம். சாயந்திரம் நான் லாயரைக் கூட்டிட்டு வரேன். ஒன்றும் பயமில்லை' என்றார்.

அப்படி அவர் கூறிய ஆறுதலுக்கே மனம் உருகி விட்டான். 'தாங்க்ஸ்' என்றான் ஈனஸ்வரத்தில்.

சர்மா படியிறங்கிப் போகத் தொடங்கியபோது— 'அப்ப...நான்...' என்றான்.

என்னசொல்வதென்று புரியாமல் சர்மா நின்றார்.

'நான் மாதவியைக் கொலை பண்ணலை.'

சர்மா ஏதோ சொல்லவந்தவர், மனம் மாறி, 'எனக்குத் தெரியும்' என்றார்.

ரவி ஏதோ பேச முனைந்தபோது. 'எதைப்பற்றியும் யோசிக்க வேண்டாங்கலை. இங்கே போலீசார் யாருமே வரமாட்டாங்க. சாயந்திரம் வரையிலும் நிம்மதியாய்த் தூங்கு' என்று சொல்லிவிட்டுப்போய் விட்டார்.

ரவி படுக்கையறைக்குள் நுழைந்தான். ஒரு வார காலமாய் அவன் எங்கே படுத்திருந்தானோ தெரியாது. உடம்பெல்லாம் வலி, அசதி, வருத்தம், பயம் எல்லாம் சேர்ந்து உறக்கமாய் மாறிவிடவே, அடுத்த நிமிஷம் அவன் படுக்கையில் அப்படியே சாய்ந்தான்.

## 39

இன்ஸ்பெக்டர் ராஜசேகரின் மேஜைக்கு முன்னா லிருந்த போன் மணியடித்தது.

'சார், நான் 314.'

'சொல்லு.'

'சர்மா சாரைத் தொடர்ந்து போனேன். அவர் படேல் நகருக்குப் போய் ரவியை ஏற்றிட்டுப் போனார்.'

ராஜசேகர் நாற்காலியில் நிமிர்ந்து உட்கார்ந்தார். 'ரவியா?' என்றார்.

'ஆமாம் சார்.'

ராஜசேகர் நிம்மதியாய் மூச்சு விட்டார். ஒரு வார காலமாய் சர்மாவின் வீட்டிற்கு முன்னால் போட்டிருந்த காபந்து பலித்துவிட்டது.

'அவங்க ரெண்டுபேரும் எங்கே போனாங்க?'

'ரோடு நம்பர் 30 பக்கமாய் போனாங்க சார். நடுவில் ட்ராஃபிக் ஜாம் ஆயிட்டதால் என்னால் தொடர முடியலை.'

ராஜசேகர் மனமொடிந்து விடவில்லை. சர்மாவும் ரவியும் கொலை செய்து பழக்கப்பட்டவர்கள் இல்லை. அவர்களுக்கு இந்தத் துறையில் ரொம்ப சாமர்த்தியமோ அனுபவமோ இராது. சர்மாவுக்குத் தெரிந்தவர்களின் வீடாவது, இடமாவது அந்த 30-ம் நம்பர் ரோடில் இருக்கிறதா என்று தெரிந்து கொள்ள முயன்றார். சுமார் நான்கு மணி நேரமாயிற்று தெரிந்து கொள்வதற்கு.

ரவிதேஜா டெக்ஸ்டைல்ஸின் கெஸ்ட் ஹவுஸ் அந்தத் தெருவில் இருந்தது. அதை வழக்கமாய் யாருமே அதிகமாய் பயன்படுத்த மாட்டார்கள்.

ராஜசேகர் நான்கு போலீசாரை உடன் அழைத்துக் கொண்டு புறப்பட்டார்.

ரவி தூக்கத்திலிருந்து விழித்தெழுந்தபோது நன்றாய் இருட்டி விட்டிருந்தது. அந்த அறையில் சூழ்ந்திருந்த நிசப்தமும், தனிமையும் அந்த இருட்டிற்குத் துணையாகி அவனை பயமுறுத்திற்று. ஜன்னல் வழியாய் வெளியே பார்த்தான். தெருவில் ஜனங்கள் நடமாடிக் கொண்டிருந்தார்கள். சுயேச்சைக்கு இருக்கும் மதிப்பு அதை இழந்த பிறகுதான் புரியும். சாதாரண மனிதர்கள் எல்லோரும் அவரவர்கள் வழியில்

போய்க்கொண்டிருந்தார்கள். அவன் ஒருத்தன் மட்டுந் தான் இந்த இருட்டில் ஒளிந்து கிடக்கிறான்.

அவனுக்கு அங்கிருந்து ஓடிப் போய்விட வேண்டும் போலிருந்தது. முடிந்தால் இந்த வீதியைவிட்டே தொலை தூரத்திற்கு ஓடிவிட வேண்டும் போலிருந்தது! எதிரிகள் எவ்வளவு சாமர்த்தியமாய் அவனை வலையில் வீழ்த்திவிட் டார்கள் என்பது புரிந்ததுமே தன்மீதே கோபம் வந்தது அவனுக்கு. அவன் பார்வை எதிரே வந்துகொண்டிருந்த ஒரு வாகனத்தின்மேல் பட்டது. அவன் இதயம் ஒரு வினாடி துடிப்பதை நிறுத்திவிட்டது.

போலீஸ் வேன்!

வந்து அந்த வீட்டிற்கு முன்னாடியே நின்றது. அதி லிருந்து ராஜசேகர் இறங்கினார். கேட்டை திறந்து கொண்டு உள்ளே வந்து கொண்டிருந்தார். ரவிக்கு என்ன பண்ணுவதென்றே புரியவில்லை. மின்னலைக்காட்டிலும் வேகமாய் பின்பக்கத்து அறைக்குள் ஓடினான். அந்தக் கதவைத் திறந்துகொண்டு கொல்லைப்புறம் வந்தான். கெஸ்ட் ஹவுசானதால் சரியான பராமரிப்பு இன்றி செடி கொடிகள் மண்டிக்கிடந்தன. அங்கே பின்பக்கத்துச் சுவர் கூட சரியாயில்லை. அவன் எதைப்பற்றியும் யோசியாமல் அடுத்த காம்பவுண்டிற்குள் நுழைந்தான். அடுத்த பக்கத்தி லிருந்த வீட்டின் பின்பாகம் அது.

ஒரு போலீஸ் ஆள் வீட்டிற்குப் பின்பக்கமாய் வந்து கொண்டிருந்ததை அங்கிருந்தவாறே பார்த்தான். சுற்றி லும் சூழ்ந்து கிடந்த இருள் அவனுக்கு உதவிற்று. அதிர்ஷ்ட வசமாய் அந்த வீடு பூட்டப்பட்டிருந்தது. அவன் சுற்றிக் கொண்டு அந்த வீட்டிற்கு வெளியே வந்து சேர்ந்தான். அதற்குள் சர்மாவின் கார் தென்பட்டது. அது கெஸ்ட் ஹவுசை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது. ரவியைப் பார்த்துச் சட்டென்று காரை நிறுத்தி, ‘வெளியே சுற்றிக் கொண்டிருக்கிறாயா?’ என்றார் கோபமாய்,

ரவி நடந்ததையெல்லாம் சொன்னான்.

சர்மா காரை சர்ரென்று இடப் பக்கமாய் திருப்பினார். 'போலீசார் கெஸ்ட் ஹவுசைச் சுற்றிட்டிருக்காங்க' என்றான் ரவி.

'பரவாயில்லை. அது ஆட்டோ மாடிக் லாக் சிஸ்டம். அவங்க கதவை உடைத்தெறிந்தாலும் சந்தேகம் வராது.'

இரண்டு நிமிஷங்களானதும், 'நாம்ப எங்கே போகிறோம்?' என்று கேட்டான் ரவி.

'லாயரிடம்.'

அடுத்த ஐந்தாவது நிமிஷம் அவன் கார் லாயர் வீட்டுக் காம்பவுண்டிற்குள் நுழைந்தது. நகரத்திலேயே பெரிய கிரிமினல் லாயர் ரங்கநாதனின் வீடு அது. ரவிக்கு அவரோடு பரிச்சயம் இல்லை.

பக்கத்திலிருந்த வராந்தா வழியாய் உள்ளே நுழைந்தார்கள் இருவரும். ஆபீசு அறையில் இராமல் உள்ளே வரவேற்பறையில் உட்கார்ந்திருந்தார் ரங்கநாதன். அதைக் கொண்டு, சர்மா முன்கூட்டியே தம் வரவை அவருக்குத் தெரிவித்திருப்பார் என்று தோன்றிற்று. அவன் எண்ணத்தை உறுதிப்படுத்துவதுபோல, 'இவர்தான் ரவி, எங்க எம். டி.' என்றார் சர்மா. எஞ்சிய விவரங்களை முன்பே சொல்லிவிட்டிருந்தாற் போலிருந்தது.

ரங்கநாதன் ரவிக்கு கைக்குலுக்கி விட்டு, 'உட்காருங்கள்' என்றார். சாதாரண சம்பாஷணைகள் முடிந்ததும் நேராய் விஷயத்திற்கு வந்தவராய், 'நீங்க எதற்கும் பயப்படத் தேவையில்லை ரவி. உள்ளது உள்ளவாறு சொல்லுங்கள். கிரிமினல் சட்டமானது விரிசல் கண்ட பாத்திரத்தைப் போன்றது. எங்கேயாவது நமக்குக் கண்டிப்பாய் சந்து கிடைச்சிடும். உங்களை வெளியே கொண்டு வந்துடற பொறுப்பு என்னைச் சேர்ந்தது. நீங்க மாத்திரம் நடந்தது நடந்தாற்போல சொல்லிடுங்க. எங்கெங்கே எந்தெந்த

மாதிரி 'கவரப்' பண்ணனும், எந்தெந்த மாதிரி சாட்சியங்களை உண்டாக்கிக்கணும் என்றெல்லாம் பிற்பாடு யோசிப்போம். சரியாய் எத்தனை மணிக்கு நீங்க இந்தக் கொலையைப் பண்ணினீங்க?' என்று கேட்டார்.

ரவி விக்கித்துப்போய், 'நான் இந்தக் கொலையைப் பண்ணலை' என்றான்.

ரங்கநாதன் சிரித்துவிட்டு, 'லாயரிடமும், டாக்டரிடமும் பொய் சொன்னால் பலனில்லை. நீங்க சொல்ற எதுவுமே இந்த நான்கு சுவரை தாண்டிப் போயிடாது. பயமில்லாமல் சொல்லுங்க' என்றார்.

''நான் நிஜந்தான் சொல்கிறேன். நான் இந்தக் கொலையைப் பண்ணலை.'

'பின்னே யார் பண்ணினாங்க?'

'என்னை இதில் சிக்கவைப்பதற்காக செஞ்சுராமய்யா கும்பல் பண்ணியிருக்காங்க.'

சர்மாவும், ரங்கநாதனும் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக் கொண்டார்கள். ரங்கநாதன் ரவியைப் பார்த்து 'அன்றிரவு கொலை நடந்தபோது சர்மா சார் சொன்னது போல நீங்க பம்பாயில்தான் இருந்தீங்களா?' என்று கேட்டார்.

ரவி யோசித்தான். அவன் அதற்கு முன்பே பேப்பரைப் படித்திருந்தான். பாஸ்கர் சொன்னது கூட நினைவுக்கு வந்தது. அவன் பெயரில் பம்பாயில் பாஸ்கர் அறை எடுத்துக் கொண்டிருந்திருக்கிறான். இப்பொழுது தான் பொய் சொல்லிப் பலனில்லை.

'கொலை நடந்த சமயத்தில் உங்களோடு யாராவது இருந்தாங்களா?'

'ப்ரியம்வதா இருந்தாள்.'

'அவள் இப்போ எங்கேயிருக்கிறாள்?'

'அவளையும் அவர்கள் கொன்றுவிட்டார்கள். சரியான சமயம் வரும்போது அதை வெளிப்படுத்தப்போகிறார்கள்.'

'அந்தத் தப்பும் உங்கள் மேல்தான் வரும்.'

'ஆம், அதுதான் அவங்க உத்தேசம்.'

ஆனால் நிஜத்தைச் சொல்லிவிட்டால்?

நாளைக்குப் பேப்பரில் இந்த விஷயமெல்லாம் வரும். அவனும் ப்ரியம்வதாவும் சேர்ந்து இரண்டு பகலும், இரண்டு ராத்திரியும் ஓட்டலில் தங்கியிருந்த விவரமும் சேர்ந்து...அதனால் தண்டனை ஒன்றும் குறையாது. மேலும் கொலையாளி என்ற பெயருடன் சேர்ந்து 'விபச்சாரி' என்று பெயரும் அவளுக்கு வந்துவிடும்.

ரவியின் மௌனத்தைப் பார்த்துவிட்டு ரங்கநாதன் சிரித்தார். சட்டென்று பதில் சொல்லாமல் யோசனையில் ஆழ்ந்துவிட்டான் என்றால் எங்கெங்கே பொய் சொல்ல லாம் என்று யோசித்துக் கொண்டிருக்கிறான் என்று அர்த்தம்.

'அதெல்லாம் வேண்டாம் ரவி. எதையும் மறைக்க வேண்டாம்' என்றார்.

அதற்குள் சர்மா ஏதோ வேலையிருந்தாற்போல வெளியே போய்விட்டார். மூன்றாம் ஆளாய் தான் இருப் பது பிடிக்காமல் அவர் அவ்வாறு போய் விட்டார் என் றறிந்து ரவி மனத்திற்குள் நன்றி சொல்லிக் கொண்டான்.

அதற்குமேல் அவன் எதையும் மறைத்துவைக்க விரும்ப வில்லை.

ப்ரியம்வதாவின் பரிச்சயமானதிலிருந்து, அவளோடு சேர்ந்து தான் ஓட்டலில் கழித்ததுவரை எல்லாவற்றையும் விவரமாய் சொல்லி முடித்தான்.

கேட்டுக் கொண்டிருந்த ரங்கநாதனின் முகம் மாறு பட்டது. '...மை காட்! ரொம்பப் பெரிய கதையா யிருக்கே!' என்றார்.

ரவி பதில் பேசவில்லை.

'நீங்க எந்த ஓட்டலில் தங்கினீங்க? எந்தப் பேரில்?'

ரவி ஓட்டலின் பெயரைச் சொல்லிவிட்டு, 'என் பெயரை எழுதவில்லை. சந்திரப்ரியான்னு எழுதினேன்' என்றான்.

'நீங்க அந்த ஓட்டலில் இரண்டு நாள் இருந்ததாய் யாராவது அடையாளம் சொல்ல முடியுமா?'

'வெயிட்டர்கள்கூட கண்டுபிடிச்சுட முடியாமல் ரகசிய மாய் இருந்தோம்.'

'ஆமாம். வேற்றுப் பெண்ணோடு என்றால் வழிதான் ஏது? அதுவும் நீங்க வேற பிரபலமான ஆளாச்சே! இப்ப உங்க கதையே தலைகீழாகி விட்டது. உங்க மனைவி இறந்த சமயத்தில் நீங்க இந்த ஊரிலேயே இருந்திருக்கீங்க. மேலும் வேறு பெயரில் இருந்திருக்கீங்க. உங்க டைரக்டர்களுக்கு மட்டும் பம்பாயிலிருந்து பேசுவதுபோல போன் பண்ணி யிருக்கீங்க. நீங்க பம்பாயில் இருப்பதுபோல தோன்றச் செய்திருக்கீங்க...உங்க எதிரிங்க ரொம்ப புத்திசாலித்தன மாய் - அங்கே பம்பாயில் உங்க பேரில் ரூம் எடுத்துட்டு நீங்களே இங்கே வந்து கொலையைப் பண்ணிட்டுப் போனாப்போல நாடகத்தை உருவாக்கியிருக்காங்க. விழுங் கவும் முடியாத, துப்பவும் முடியாத நிலைமை. நீங்க அன் றிரவெல்லாம் தன்னோடுதான் இருந்தீங்கன்னு சாட்சி சொல்லக்கூடிய ஒரே ஆள் ப்ரியம்வதாதான். அவளும் இப்போ இல்லை. ரவி, நீங்க புதைமணலில் சிக்கிட்டிருக் கீங்க.'

'எனக்கும் தெரிந்ததுதான்.'

இங்கே இந்தச் சம்பாஷணை நடந்துகொண்டிருந்த அதே சமயத்தில் அங்கே ராஜசேகர் தன் அறையில் நடை பயின்று கொண்டிருந்தார். ரவி அந்த கெஸ்ட் ஹவுஸில் தான் அதுவரை இருந்திருக்கிறான் என்று அவருக்குத் தோன்றிற்று. கைக்கு அகப்படவிருந்தவன் கடைசி நிமிஷத்தில் தப்பித்துப் போய்விட்டான். சர்மாவின் கார் அங்கே வந்ததாய் பக்கத்து வீடுகளில் இருந்தவர்கள் சொன்னார்கள்.

சட்டென்று அவருக்கு ஒரு யோசனை தோன்றிற்று. அடுத்த நிமிஷமே அதை அமலாக்கத் தொடங்கினார்.

அன்றைய தினத்திலிருந்து சர்மாவின் போன் 'ட்ராப்'பில் வைக்கப்பட்டது. எங்கேயிருந்தாலும் சரி, ரவியும் சர்மாவும் ஒருவரையொருவர் தொடர்பு கொள்வார்கள் என்றறிவார் அவர்.

சர்மாவின் போனை 'ட்ராப்' பண்ணிவிட்டு, சர்மாவின் வீட்டைச் சுற்றி இரண்டு பேரைக் காபந்து போட்டுவிட்டு, இன்ஸ்பெக்டர் ராஜசேகர் நிம்மதியாய் காத்திருக்கத் தொடங்கினார். அவருக்குப் போலீஸ் பயிற்சியில் சொல்லிக் கொடுத்திருந்தார்கள்—'எங்கோ ஓரிடத்தில் ஒரு தப்புப் பண்ணி விட்டவன் மற்றொரு தப்பையும் செய்யாமலிருக்க மாட்டான்'—என்று.

கொலையாளி மிக சாமர்த்தியமாய் இக்கொலையைப் பண்ணியிருக்கிறான் என்றறிவார் அவர். பம்பாயிலிருந்து வரும் விமானம் தாமதமாகியிராவிட்டால் அவன் வெளிப் பட்டே இருந்திருக்க முடியாது.

இரண்டு நாட்கள் வரை ரவியின் ஜாடையே இல்லை. சர்மாவுக்கு வரும் எல்லா போன்களுமே 'டாப்' பண்ணப் பட்டன. அதில் ரவியின் போன் இல்லை. ஒருக்கால் சர்மா வுக்கே சந்தேகம் வந்து தன் வீட்டிற்கு போன் பண்ண வேண்டாம் என்று ரவிக்குச் சொல்லியிருப்பாரோ என்ற

சந்தேகம்கூட வராமலில்லை. மேலும் ஒரு நாள் கழிந்தது. ராஜசேகரின் பொறுமை அதிகரித்தது. என்ன பண்ணலாம் என்று யோசித்துக் கொண்டிருந்த சமயத்தில் அன்றைக்கு ஒரு எதிர்பாராத சம்பவம் ஏற்பட்டது.

சர்மாவுக்கு வரும் போன் சம்பாஷணைகளையெல்லாம் உடனுக்குடன் டேப் மூலமாய் அவருக்குத் தந்து கொண்டிருந்தார்கள். ஒரு சம்பாஷணையைக் கேட்டு ஆச்சரியத்தோடு நின்றுவிட்டார். பேசிக்கொண்டிருந்தது ரவி! ஆனால் சர்மாவுடனில்லை.

மிஸ். கோயம்புத்தூருடன்.

அவரால் தன் செவிகளையே நம்ப முடியவில்லை. ரவி பேசிக் கொண்டிருந்தது சர்மாவின் மனைவியோடு. சர்மாவின் மனைவிதான் மிஸ். கோயம்புத்தூர். ரவிக்குக் கடிதம் எழுதியது அவளே! ரவிக்கும், அவளுக்கும் பல நாட்களாய் பரிச்சயம் இருந்து வருகிறது என்று புரிந்தது! அவருக்கு இன்னொரு 'க்ளு' கிடைத்துவிட்டது.

அவர் டேப்பை மேலும் ஆர்வத்தோடு கேட்கத் தொடங்கினார்.

'நான்தான் ரவி... இருங்க மிஸ் கோயம்புத்தூர், போனை வெச்சுடாதீங்க...' என்று தொடங்கிற்று அந்தச் சம்பாஷணை.

# 40

இது நடந்ததற்குச் சரியாய் நான்கு நாட்களுக்கு முன்னால்—'நான் கேஸ் விவரத்தையெல்லாம் நன்றாய் சோதிச்சிட்டேன்' என்றார் ரங்கநாதன் ஃபைலை மூடியபடி. ரவி அவரையே பரபரப்போடு பார்த்தான். சர்மா அருகிலேயே உட்கார்ந்திருந்தார்.

தனக்கு இரண்டு நாள் டயம் கொடுக்கும்படியும், தான் எல்லாவற்றையும் பார்த்துவிட்டு என்ன செய்ய வேண்டும் என்று சொல்வதாயும் ரங்கநாதன் கேட்டுக் கொண்டிருந்தார். சர்மா ரவியை வேறொரு இடத்தில் மறைவாய் தங்க வைத்தார். முன்ஜாக்கிரதையாய் ரவியைத் தன் வீட்டிற்குப் போன் பண்ணவேண்டாம் என்று சொல்லியிருந்தார். ரங்கநாதன் சொன்ன நேரத்தில் ரவியைக்கூட்டிக்கொண்டு அவர் வீட்டிற்கு வந்திருந்தார். அதற்குள் மாதவி இறந்து பத்து நாட்கள் ஆகிவிட்டிருந்தன.

பத்திரிகைகள்கூட இந்தவிஷயத்தைப்பற்றி எழுதுவதை நிறுத்திக்கொண்டன. ஜனங்களும் மறக்கத் தொடங்கியிருந்தார்கள்.

'நாம்ப இரண்டு விதமாய் வாதாடலாம் இந்தக்கேசில்' என்று தொடர்ந்தார் ரங்கநாதன். 'வெளிநாட்டிலிருந்து வந்ததுமே பம்பாயில் இறங்கினேன்னும் மாதவியின் மரணத்துக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லைன்னும் நாம்ப சொல்லலாம். ஆனால் அப்படியானால் ரெண்டுநாள் பம்பாயில் என்ன பண்ணினீங்கங்கற கேள்வி வரும். அதோடுகூட, உங்க டைரக்டர்களே இங்கேயிருந்து போன் பண்ணினப்ப நீங்க அறையில் இல்லைன்னு தெரிஞ்சிருக்கு. போலீசுக்கு இந்த விஷயம்கூட தெரியும். அன்றிரவெல்லாம் பம்பாயில் தன்னோடு இருந்ததாய் வேறொருத்தர் சாட்சி சொல்ல வேண்டியிருக்கும். எந்த விபச்சார விடுதிக்காவது பணத்தைக் கொடுத்து சாட்சிக்கு ஆள் நியமிச்சிக்கலாம். ஆனால் நாளைக்குக் குறுக்கு விசாரணையில் அவள் நிஜத்தைச் சொல்லிட்டால் கஷ்டம்.'

ரவி லாயரை வியப்போடு பார்த்தான். இந்த சாட்சிகளை நியமித்துக்கொள்வது எல்லாம் அவனுக்குத் தெரியாத ஒரு துறை!

'அப்படி வேண்டாம். நாம்ப நடந்தது நடந்தாப் போல நிஜத்தைச் சொல்லிடுவோம்' என்றான் ரவி. ரங்கநாதன் சர்மாவைப் பார்த்தார். சர்மா எழுந்து வெளியே போகப் போனார். 'சர்மா சாரும் கேட்கட்டும், பரவாயில்லை' என்றான் ரவி. இவ்வளவு தூரத்திற்கு வந்து விட்ட பிறகு ப்ரியம்வதா விஷயத்தை மறைக்கப் பிடிக்கவில்லை அவனுக்கு.

'நான் அதைப்பற்றிக்கூட யோசிச்சிட்டேன். வெளி நாட்டிலிருந்து நீங்க நேராய் சென்னைக்கு வந்தீங்க. மாறு பெயரில் அறை எடுத்துக்கிட்டு, உங்க ஆபீஸ் பெண்ணோடு மூன்று நாட்கள் கழிச்சீங்க. உங்க ஆபீசிலிருப்பவங்களுக்குச் சந்தேகம் ஏற்படாமலிருப்பதற்காக ஒரே ஊரில் இருந்துட்டு பம்பாயிலிருந்து பேசுவதுபோல பேசினீங்க. உங்க மனைவி இறந்த அன்றைக்குக்கூட நீங்க ஓட்டலில்தான் இருந்திருக்கீங்க. இதுதானே நடந்தது?'

'ஆமாம்—இதுதான்...'

'இதில் ரொம்ப சிக்கல்கள் இருக்கின்றன. உங்களோடு இருந்த ப்ரியம்வதா என்னவானாள்? மூன்று நாளும் ஆன பிறகு வீட்டிற்குத் திரும்பாமல் என்னவானீங்க நீங்க? ஒரு வாரமாய் ஏன் தலைமறைவானீங்க? பின்னே 'விமான நிலையத்திலிருந்து'ன்னு வரும் முன்னால் போன் பண்ண வேண்டிய அவசியம் ஏன் வந்தது? ஒரு பெண்ணோடு தனியாய் கழிப்பது தப்பில்லையே! அதற்கு ஒரு மூணுநாள் அவளைக் கூட்டிட்டு எந்த மகாபலிபுரமாவது போனால் உங்களை யார் என்ன செய்துட முடியும்?...இவ்வளவு கேள்வியும் வரும் நாளைக்குக் கோர்ட்டில்...'

ரவி தலைகுனிந்தான். இப்பொழுது லாயர் கேட்ட பொழுது உண்மைதான் என்று பட்டது. ஆனால் அப்பொழுது இது தோன்றவேயில்லையே. அந்த சூட்டில் விளைவுகளைப்பற்றியே யோசிக்காமல் போய்விட்டான். ப்ரியம்வதா சொன்னதைக் கண்ணை மூடிக்கொண்டு

ஒப்புக்கொண்டு விட்டான். உண்மையிலேயே இவ்வளவு திருட்டுத்தனமாய் நடந்துகொள்ள வேண்டிய காரணந் தான் என்ன?

அதற்குள் ரங்கநாதன் சொன்னார்: 'எல்லாவற்றை யும்விட முக்கியமானது பம்பாயில் உங்க பேரில் அறை எடுத்துட்டிருந்தது யார் என்பதுதான்...'

'எனக்குத் தெரியாது; யாரோ பாஸ்கராம்.'

'அப்படீன்னு நீங்க சொல்றீங்க. ஆனால் இவ்வளவு பயந்துட்டு இத்தனை ஏற்பாடு பண்ணிட்டிருக்கிறவரு இதைக்கூடத்தான் அரேஞ்ஜ் பண்ணிட்டிருப்பாருன்னு நினைப்பாங்க, உங்களை அவங்க. யாராயிருந்தாலும் சரி, குறைந்த பட்சம் அந்த ஆளின் சாட்சியத்தையாவது நாம்ப சம்பாதிச்சிக்க முடியணும்.'

சர்மா குறுக்கிட்டு, 'சரி போகட்டும், ப்ரியம்வதாவும் நீயும் தங்கிய ஓட்டலிலிருந்தவங்க சாட்சிதருவாங்க ளில்லையா?' என்றார்.

ரவி சொன்னான்—'யாருமே தரமாட்டாங்க. யாருக் குமே நான் தென்படலை. மேலும் ரிஜிஸ்தரில் கையெழுத் தைக்கூட மாற்றி எழுதினேன்.'

'இதையெல்லாவற்றையும் தவிர சுதாகரின் சாட்சி வேறிருக்கு. நள்ளிரவில் உங்களைப் போன்ற ஒருத்தரை வீட்டிற்குப் பின்னால் பார்த்ததாய் சொல்கிறான் அவன்.'

'பொய்.'

'நீங்க அதைச் சொல்லிவிட்டால் போதுமா? இப்போது விஷயத்துக்கு வரேன். நான் சொல்ல எண்ணி யிருப்பதை இப்ப சொல்றேன். நமக்கு ரெண்டு வழிகள் இருக்கு. இரண்டில் உங்களுக்கு எது நன்றாய் தோணுதோ

அதைத் தீர்மானிச்சுக்குங்க.' முடிவாய் சொன்னார் லாயர்.

ரவி நிமிர்ந்து உட்கார்ந்தான்.

'நம்மிடமிருக்கும் சாட்சிகளை வெச்சுக்கிட்டு நீங்க கொலையாளி இல்லைன்னு நம்மால் நிரூபிச்சிட முடியாது...போலீசார் கூட அதேபோல நீங்க கொலை யாளின்னு நூற்றுக்கு நூறு சதவீதம் நிரூபிச்சிட முடியாது.'

கேட்டுக்கொண்டிருந்த இருவருமே வாயைத் திறக்க வில்லை.

'சாதாரணமாய் எந்த லாயருமே வந்த கேஸை விட்டுவிட மாட்டார்கள். ஆனால் நான் அப்படிப்பட்டவ னில்லை. எனக்குப் பணம் ஒன்றுதான் முக்கியம்னு இல்லை. நாம்ப விஷயத்தை உள்ளது உள்ளபடிப் பேசித் தீர்த்துப்போம்... ரவி மனைவி ஹிஸ்டீரியா நோயாளி. அவள் வாயிலிருந்து நுரைகூட அவ்வப்போது வருவது வழக்கம்னு டாக்டர்களே சொல்லுகிறார்கள். ரவி சொன் னாற் போல நாம்ப கோர்ட்டில் உள்ளது உள்ளபடியே சொல்லுவோம். அதாவது ப்ரியம்வதாவுக்கும் ரவிக்கும் சம்பந்தம் இருந்த விஷயத்தைக் கூட ஒப்புக்குவோம். செஞ்சு ராமய்யாவின் ஆள் இந்தக் கேசில் ரவியைச் சிக்க வைப்பதற்காகவே ப்ரியம்வதாவையும் மாதவியையும் கொன்றதாய் வாதாடுவோம். ஆனால் கோர்ட் நம்பாது. இந்தக்கேசில்ரவியின்மேல் பகைமை இருந்ததானால் அதற்கு மாதவியைக் கொல்ல வேண்டிய அவசியம் செஞ்சு ராமய்யா வுக்கு இல்லை. சரி, ஒருக்கால் ரவியை மானசீகமாய்த் துன்புறுத்துவதற்காகத்தான் செஞ்சு ராமய்யா இந்தத் திட்டத்தைப் போட்டிருப்பாருன்னு சொல்லலாம்னால், அதற்கும் வேறு நல்ல திட்டத்தைப் போட்டிருக்கலா மில்லையா? எல்லாவற்றையும் விட முக்கியமானது, நீங்க இந்த ஊரிலேயே இல்லைன்னு கொண்டு வருவதற்குப் பண்ணும் முயற்சி எல்லாமே உங்களுக்கு எதிராகிவிடும்.

நமக்குப் 'பெனிஃபிட் ஆஃப் டவுட்' கிடைக்கும்னு கூட நான் நினைக்கலை. உங்க டைரி, ஆபீஸில் ஃப்ரியம்வதாவுடன் உங்களுக்கு ஏற்பட்டதாய்ச் சொல்லும் கெட்ட நடத்தை, வீட்டில் நிம்மதியின்மை, இதெல்லாம் போலீசாருக்குத் தெரியும். நாளைக்கு இதெல்லாம் கோர்ட்டிற்கு வரும். பேப்பர்களில் வரும். இறுதியில் கொஞ்சமோ நஞ்சமோ தண்டனையும் கிடைக்கும். நாம்ப மேல் கோர்ட்டுக்குப் போனாலும் லாபமில்லாமல் போயிடும்.'

'அப்படீன்னால் என்னதான் பண்றது?' என்றான் ரவி, லாயர் என்ன சொல்லப் போகிறாரோ என்று புரியாமல்.

'உங்களுக்குப் பணம் நிறைய இருக்கு. பெயரும் இருக்கு. கொஞ்சநாள் இருட்டறைக்குள் போய் இருங்கள்.'

ரவி திடுக்கிட்டான். குழப்பத்துடன் ரங்கநாதனைப் பார்த்தான். அவர் சொன்னதை மனம் அசைபோட இரண்டு நிமிஷங்கள் ஆயிற்று.

ரவியின் முகத்தில் மாறத்தொடங்கிய உணர்ச்சிகளைப் பார்த்து ரங்கநாதன் சிரித்தார்.

'உங்களுக்கு இதெல்லாம் அதிர்ச்சியாயிருக்கலாம். வீட்டிற்குப் போய் சாவதானமாய் யோசியுங்கள். பேப்பர்கள்... கோர்ட்டுகள்... கடைசியில் தண்டனை... இதற்கெல்லாம் பதிலாய் இந்த கேஸ் மூடப்படும் வரையிலும் அண்டர்கிரவுண்டில் இருப்பது நல்லதுங்கறது என் ஆலோசனை... நாம்ப திரும்பவும் நாளைக்குச் சந்திப்போம்' எழுந்திருந்தார்.

சர்மாவும் ரவியும் கூட எழுந்தார்கள். ரங்கநாதன் சொன்னது போலவே அவன் ஆழ்ந்த அதிர்ச்சியில் இருந்தான். இருவரும் வெளியே வந்து காரில் உட்கார்ந்ததும் ரவி ஏதோ சொல்ல வந்தான்.

'வேண்டாம் ரவி! இப்ப எதைப்பற்றியும் பேசிக்க வேண்டாம், கொஞ்சம் யோசிப்போம்' என்றார் சர்மா.

தன் அறையில் உட்கார்ந்து நான்கு மணிநேரம் யோசித்துப் பார்த்த பிறகு ரங்கநாதனின் வார்த்தையி லிருந்த கசப்பான உண்மை புரியத் தொடங்கிற்று. அவர் சொன்னது நிஜந்தான் என்று தோன்றிற்று. அவனை எப்படியும் எம். டி.யாய் தொடர்ந்து வைத்திருக்க மாட் டார்கள். ஜாமீன் வாங்கிக் கொண்டாலும் வெளியுலகத் தில் நடமாட முடியாது. கேஸ் முடிவடைந்ததுமே ஜெயி லுக்குப் போக வேண்டும். இதுதான் அவன் எதிர்காலம்.

சிறிய ஒளிக்கீற்றுக்கூட புலப்படாத அந்தகாரம். அவன் எதிர்காலம் நிரந்தரமாய் மூடிக்கொண்டுவிடப் போகிறது. அதற்குத்தான் அந்த அறிகுறி...

ஆனால் அண்டர்கிரவுண்ட் என்றால்...

எவ்வளவு நாளைக்குத்தான் போலீசாருக்கு அகப்படா மல் இருக்க முடியும்? ஒவ்வொரு நிமிஷமும் பயந்து செத்துக்கொண்டே எவ்வளவு காலம் வாழ முடியும்? அதற்கு பதில் அவனுக்கு அன்று மாலையில் கிடைத்தது.

ஏறக்குறைய கிரவுண்ட் வேலைகளையெல்லாம் முடித் துக்கொண்டு வந்து சேர்ந்தார் சர்மா. ரவி மிக பயந்த விஷயமெல்லாம் மிக சுலபத்தில் நிறைவேறின. இந்தியா வில் பணத்தால் சாதிக்க முடியாதது எதுவுமேயில்லை என்பது மற்றொரு முறை நிரூபிக்கப்பட்டது.

கொஞ்ச நாட்கள் வரை சிங்கப்பூரில் இருந்து வருவான் ரவி... மாறு பெயரில்... பாஸ்போர்ட் இரண்டு நாளில் தயாராகி விடும். வெளிநாட்டில் புதுவாழ்க்கையைத் தொடங்குவான். போலீஸ் ரிகார்டில் கேஸ் கூடிய சீக்கிரத் தில் மூடப்படும்படி லாயர் ரங்கநாதன் பார்த்துக் கொள் வார். அதற்கும் செலவாகும்.

அவ்வளவு வேதனையிலும் கூட ரவிக்குச் சிரிப்பு வந்தது. எங்கே தொடங்கிய வாழ்க்கை எப்படிப் போய்,

எதில் முடிகிறது? மேடு பள்ளங்கள்... சந்தோஷத்தின் உச்சாணி... துன்பத்தின் படுகுழி...

அவன் வாழ்க்கையில் என்றாவது பரிபூர்ணமாய் சந்தோஷம் ஏற்பட்டிருக்கிறதா என்று யோசித்துப் பார்த்தான். அணுவணுவாய் முன்னுக்கு வரத்தொடங்கியது... மிஸ் கோயம்புத்தூரிடமிருந்து கடிதம்—ப்ரியம்வதாவுடன் இரண்டு நாள்... எல்லாம் தற்காலிகமான சந்தோஷத்தைத் தந்துவிட்டுக் கடைசியில் வேதனையில் போய் முடிந்து விட்டவைதான். சந்தோஷம் தரும் ஒவ்வொரு விஷயத்திற்குப் பின்னாடியும் வேதனை இருக்கும் போலும். அவன் விரக்தியாய்ச் சிரித்துக் கொண்டான்.

அடுத்த இரண்டு நாளில் எல்லாம் தயாராகி விட்டது. ரவியின் முயற்சி எதுவும் இல்லாமலேயே விதி அவன் வாழ்க்கையைத் தன் கைகளில் எடுத்துக் கொண்டு விட்டது. அவனுக்கு இப்பொழுது பயம்கூட ஏற்படவில்லை. முற்றிலும் மூழ்கி விட்டவனின் நிலை. பாஸ்போர்ட்டில் அவன் மாறுபெயர் என்ன, அவன் தன் எதிர்காலத்தை எந்தப் பெயருடன் கழிக்க வேண்டும் என்ற ஆர்வம் இல்லாத அளவிற்கு விரக்தி சூழ்ந்திருந்தது.

அவன் பிரயாணம் எல்லாம் ஒரு ஏஜென்சியிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இப்படிப்பட்ட விஷயங்களில் அந்த ஏஜென்சிக்கு நிறைய அனுபவம் உண்டு. இந்தப் பிரயாண விஷயம் தெரிந்தவர்கள் லாயர் ரங்கநாதன், சர்மா... இருவர் மட்டுமே.

அவ்வளவு கஷ்டத்திலும் கூட ரவியின் மனம் சர்மாவின் பால் நன்றியால் நிரம்பிற்று. எல்லா வேலைகளும் மிக ஜாக்கிரதையாய் நடந்தன, யாருக்கும் சந்தேகம் ஏற்படாதவாறு.

# 41

அவன் நாட்டை விட்டுப் புறப்படும் நாள் நெருங்க நெருங்க கலவரமும் அதிகரிக்கத் தொடங்கிற்று. வெளி யுலகத்தோடு சம்பந்தம் இல்லாவிட்டாலும் தினந்தோறும் செய்தித் தாள்களைப் படித்து வருவதை மட்டும் நிறுத்த வில்லை அவன். இவனைப் பற்றியோ, மாதவியின் மரணத் தைப் பற்றியோ பேப்பர்களில் மேற்கொண்டு வருவ தில்லை. அவன் பார்த்தது பங்கு மார்க்கெட் பற்றிய விவரங்களை.

அவனுக்கு ஆச்சரியம் உண்டாகுமளவிற்கு ஷேரின் விலை மிகவும் படுத்துவிட்டது. தான் இருந்த நிலையை எண்ணி வருத்தப்படுவதா அல்லது தான் இல்லாததால் கம்பெனியின் எதிர்காலம் எவ்வாறு மாறப்போகிறது என்பதற்கு இப்பொழுது தென்பட்ட இந்த உதாரணத் தால் உணர்ந்துகொண்டு பெருமைப்படுவதா என்று புரிய வில்லை அவனுக்கு. அவன் இல்லாவிட்டால் ‘ரவி தேஜா டெக்ஸ்டைல்ஸே இல்லை என்று ஜனங்கள் தெரிந்துகொண் டிருந்த விஷயம் மட்டும் புரிந்தது. ஷேரின் விலை படுத்து விட்டதற்கு அதுதான் காரணம்.

எஞ்சிய நிகழ்ச்சிகள்கூட ஜாக்கிரதையாய் நடந்தேறி விட்டன. அந்த மாதிரி ஒரு ஏஜென்சி இருந்ததுகூட தெரியாத ரவி, அந்த ஏஜென்சிகாரர்கள் செய்த ஏற்பாடு களைப் பார்த்து ஆச்சரியமடைந்துவிட்டான். திருட்டு பாஸ்போர்ட் ஏற்பாடு பண்ணியது மட்டுமேயில்லை, அவன் போகும் நாட்டில் கொஞ்ச நாட்கள் வசிப்பதற்குத் தேவையான டாலர்கள், எஞ்சிய விஷயங்கள் எல்லா வற்றையும்கூட அந்த ஏஜென்ஸியே பார்த்துக் கொண்டது. அதற்கான செலவுகளை மட்டும் அவர்களிடமிருந்து வாங்கிக் கொண்டது.

பழைய தேதியை எழுதி, தன் ஷேர்களை அந்தத் தேதி யில் விற்றுவிட்டாற்போல எழுதித்தந்தான் ரவி. அப்படியே பத்து வருஷங்களுக்கு முன்னால் சர்மாவோடு பண்ணிக் கொண்ட ஒப்பந்தக் காகிதங்கள் கிழித்தெறியப்பட்டன. பேரம் எல்லாம் ரகசியமாய் முடிவடைந்தன. அவன் பெயரிலிருந்த ஸ்திர சொத்துக்கள் விஷயத்தில் மட்டும் அவனால் ஒன்றும் பண்ண முடியவில்லை. இரண்டு மூன்று வருஷங்களானதும் அவைகளைப் பற்றிப் பார்த்துக் கொள்ளலாம் என்று ஏஜென்சிகாரர்கள் ஆலோசனை தந்தார்கள்.

கிளம்ப வேண்டிய நாள் வந்தது. அதற்கு முன்தினம் இரவு...அவனுக்கு உறக்கம் வரவில்லை. அவன் ஒரு சிறிய பங்களாவில் தன்னந்தனியாய் இருந்து வந்தான். வாட்ச் மேன் கூட இல்லை. கடைசி நிமிஷம் வரையிலும் அவன் விஷயம் இரண்டாம் பேருக்குத் தெரியக்கூடாது என்று ஏஜென்சி காரர்கள் ஆலோசனை தந்திருந்தார்கள். அதனால்தான் வாட்ச்மேனை நியமிக்கவில்லை.

இரவு பத்தடித்தது.

அவனுக்குப் பைத்தியம் பிடித்தாற்போலிருந்தது, நேற்று முந்தாநாள் வரையிலும் அனுபவித்து வந்த அந்தஸ்து, சமூகத்தில் ஒரு கௌரவமான இடம் எல்லாம் போய்விட்டன என்பது புரிந்தது. திருட்டு வாழ்க்கையில் எவ்வளவு மனத்துன்பம் இருந்ததென்பது விளங்கிற்று. தன்னைப் பற்றித் தெரிந்த ஒவ்வொருவரும் இதையெல் லாம் ஒரு டாபிக்காய் வைத்துப் பேசத் தொடங்குவார்கள் இனி. 'நேற்றுவரை நம்மோடு பழகித் திரிந்து வந்த ரவி இப்படிப்பட்ட ஆளா? கனவிலும் நினைக்கலையே! என்ன மோசம்!' என்று பேசிக்கொள்வார்கள் அவனைப்பற்றி.

அவனுக்குத் தன் ஹீனமான நிலைமைக்குத் தன் மீதே இரக்கம் ஏற்பட்டது. இவ்வளவு உதவி பண்ணிய சர்மாவே அவன் சொன்னதையெல்லாம் நிஜந்தான் என்று நம்பி

னாரா இல்லையா என்று தெரியாது. ஆனால் அதைப் பற்றிய பேச்சை மட்டும் அவர் எடுக்கவேயில்லை. ஒருக்கால் அவன் மனதை நோகடிக்கக்கூடாது என்றுதானோ என்னவோ?

அவனுக்கு இந்த உலகத்தில் இனி யாருமேயில்லை. கொஞ்ச நாட்களில் எல்லோரும் அவனை மறந்துவிடுவார்கள். எல்லோர் மனதிலும் அவன் ஒரு ஓடிப்போய்விட்ட கொலையாளி என்ற அவப்பெயர் நிரந்தரமாய் நிலைத்துவிடும். எதிர்காலத்தில் இவ்வளவு அதிகாரமும் பணபலமும் இல்லாவிட்டாலும், அவன் திறமைக்கு வெளிநாட்டில் ஏதாவது சின்ன வேலையாவது கிடைத்து வாழ்க்கை ஓடாமல் போகாது.

அவன் ஒரே ஒருத்தரிடம் மட்டும் தன் நிரபராதித் தன்மையைப் பற்றிச் சொல்லிக்கொள்ள விரும்பினான். அந்த ஒருத்தர்—மிஸ். கோயம்புத்தூர். உலகமே அவனைப் பற்றிக் கெட்டதாய் நினைத்தாலும் பரவாயில்லை.

அவள் ஒருத்தி மட்டும் உண்மையைத் தெரிந்து கொண்டால் அது போதும்.

அவள் அவனுக்கு ஒன்றும் ஆகவேண்டியதில்லை. அவள் எப்படி இருப்பாள் என்றுகூட அவனுக்குத் தெரியாது. ஒரு அபூர்வமான கடிதத்தின் வாயிலாய் அவன் மனதிற்குள் புதையுண்டுகிடந்த அன்புத்தாகத்தைத் தட்டி எழுப்பி, பெரிய விருட்சமாய் மாற்றிவிட்டிருந்தாள் அவள். அவள் இப்பொழுது அவனைப்பற்றி என்ன நினைத்திருப்பாள்? சொந்த மனைவியையே கொன்றுவிட்ட கொலையாளியையா தான் நேசித்தோம் என்றெண்ணி வருந்தியிருப்பாளோ? அவனை வெறுத்து ஒதுக்கியிருப்பாளோ?

அவன் விருப்பம் வரவர பெருகிற்று. அன்றிரவு அவனுக்கு உறக்கம் வர மறுத்தது. பதினொன்றடித்ததும், மேற்கொண்டு அவனால் இருக்க முடியவில்லை. ஒருக்கால்

சர்மா இருப்பாரோ, அவரே போனை எடுத்தால் என்ன செய்வது என்றெல்லாம் அவன் யோசித்துப் பார்க்க வில்லை.

பங்களாவைவிட்டு வெளியே வந்தான். வீதி ஆளரவ மின்றி இருந்தது. வீதி திருப்பத்தில் ஒரு மிலிடரி ஓட்டலில் போன் தென்பட்டது. டயல் பண்ணிக் கொண்டிருந்த போது அவன் கைவிரல்கள் நடுங்கின. 'ஹலோ' என்று மறுமுனையிலிருந்து கேட்டது.

சட்டென்று பதில் சொல்ல முடியவில்லை அவனால்.

'ஹலோ...மிஸஸ் சர்மா ஹியர்!'

'நான்தான் ரவி... இருங்க, மிஸ். கோயம்புத்தூர், போனை வெச்சுடாதீங்க, ப்ளீஸ்!' என்றான் அவசர அவசரமாய்.

அந்த வார்த்தையைக் கேட்டு அவள் தூக்கிவாரிப் போட அப்படியே நின்றுவிட்டதை அவனால் ஊகிக்க முடிந்தது.

'போனை வெச்சுடாதீங்க. இதான் கடைசிமுறை நான் பேசுவது. இனி உங்களை எந்தத் தொந்தரவும் பண்ண மாட்டேன். நாளைக்கே நான் இந்த நாட்டை விட்டே போய் விடுகிறேன். போவதற்கு முன்னால் குறைந்தபட்சம் உங்கள் ஒருத்தருக்காவது நான் நிரபராதிங்கற நிஜத்தைச் சொல்லிடணும்னுதான் இப்படிப் போன் பண்றேன். அதானே தவிர வேறில்லை.'

மறுமுனையிலிருந்து பதில் இல்லை.

'ஹலோ.'

'சொல்லுங்கள் கேட்கிறேன்.'

அதே குரல் மெதுவாய் கேட்டது. அக்குரலிலிருந்த நடுக்கத்தைக் கொண்டு, இந்த பாதி ராத்திரி வேளையில் அவனிடமிருந்து வந்த போன்கால் அவளை எப்படி நடுங்க

வைத்திருக்கும் என்று புரிந்தது. ஆனாலும் ஏதோ புரி படாத அழுத்தம் அக்குரலிலிருந்ததும் புரிந்தது. கடிதத்தில் தென்பட்ட அன்பு அக்குரலில் பிரதிபலித்தது.

'எனக்கு ஏனோ நீங்க கொலை பண்ணலைன்னு தோன்றிற்று ரவி' என்றாள் மென்மையாய்.

திடீரென்று மனதிலிருந்த திகிலெல்லாம் போய்விட் டாற் போலாயிற்று அவனுக்கு.

'போதும், போதும்!' என்றெண்ணிக் கொண்டான். 'எனக்கு என்று ஒருத்தருமே எஞ்சியில்லை. என்னைப்பற்றி நீங்கள் ஒருத்தராவது நல்லபடியாய் எண்ணிக் கொண்டால் அதுவே போதும். என் நல்ல குணத்தின் மீது நம்பிக்கை யுள்ள ஒருவராவது இருக்கிறீர்களே.'

அவள் வார்த்தைகளைக் கேட்ட அவனுக்கு ஆயிரம் யானை பலம் கூடிவிட்டது.

அன்றிலிருந்து இன்றுவரை நடந்தது நடந்தாற் போல சொல்லி முடித்தான். ஒன்றைக்கூட விடவில்லை.

எல்லாவற்றையும் சொல்லிவிட்டு, 'இதான் நடந்தது. நீங்க எழுதின கடிதத்தினால் ஏற்பட்ட குழப்பம் ப்ரியம்வதா வின் மேல் காதல் போன்ற பிரமையில் ஆழ்த்தி புயலாய் மாற்றி விட்டது. அந்தப் புயல் என்னை இப்படி அடித்துக் கொண்டுபோய் விட்டது.' ஜீவனில்லாத சிரிப்பொன்றை உதிர்த்தான் அவன்.

அவளுக்கு அது அதிர்ச்சி. அதிலிருந்து மீள கொஞ்ச நேரம் பிடித்தது. அவள் தனக்குள் இவ்வாறு எண்ணிக் கொண்டாள். 'ஐயாம் சாரி' என்ற வார்த்தையை உதிர்த்து விட்டு, 'நடந்தவைகளைத் தள்ளிட முடியலை ரவி! ஆனால் நான் எந்தமாதிரிச் சூழ்நிலையில் அந்தக் கடிதத்தை எழுதினேனோ — திரும்பவும் அதன் பிரவாகத்திலிருந்து மீண்டு வெளியேறி மனதைக் கட்டுப்படுத்திக் கொள்ள

எவ்வளவு கஷ்டப்பட்டேனோ? இந்த அர்த்த ராத்திரி வேளையில் போனில் அதையெல்லாம் எப்படிச் சொல்லு வேன்? எவ்வளவு சொன்னாலும் உங்களுக்கு நேர்ந்து விட்ட நஷ்டத்தைச் சரிபண்ணிவிட முடியாதில்லையா?'

'எங்கே இருக்கீங்க ரவி நீங்க?'

'ஏன்?'

'நான் வரேன்.'

'இப்பவா?'

'ஆமாம். இப்போதே!'

'வேண்டாம். வேண்டாம்' என்றான் அவன்.

'இதென்ன, ஏன் ரவி?'

அவன் பதில் சொல்ல தடுமாறினான். அவளையும் ஆபத்தில் சிக்கவைக்க அவனுக்குப் பிடிக்கவில்லை. ஆனாலும் முக்கியமான காரணம் அதில்லை. இந்த ஊர், நாடு, மனிதர்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு அவன் வெகு தொலைவிற்குப் போய் விட மானசீகமாய் தயா ராகிக் கொண்டிருந்தான். அப்படிப்பட்ட சூழ்நிலையில் அவளைப் பார்க்க விரும்பவில்லை அவன்.

அவனுக்கு 'Whose life is it any way' என்ற ஆங்கில சினிமா நினைவிற்கு வந்தது. அதில் கதாநாயகன் ஒரு ஓவியன். இயற்கையை ஆராதிக்கும் ஒரு இளைஞன். அவ னுக்கு வாழ்க்கையே ஒரு பூப்படுக்கை. அப்படிப்பட்ட சூழ்நிலையில் ஒரு விபத்து ஏற்பட்டு கழுத்திற்குக் கீழ்ப் பாகமெல்லாம் முற்றிலும் பழுதாகி விட்டது. தலையை மட்டுந்தான் அசைக்க முடிந்தது அவனால்.

அவன் காதலி இன்னொரு இளைஞனின் காதலில் வீழ்ந்து அவனை விட்டுவிட்டுப் போய் விடுகிறாள். அவன் தான் சாவதற்கு அனுமதி தரச்சொல்லி கோர்ட்டாரை வேண்டுகிறான். ஜட்ஜ் ஆசுபத்திரிக்கு வந்து அவன்

கோரிக்கையைக் கேட்கிறார். தான் ஏன் சாக விரும்பு கிறான் என்பதை அவன் உருக்கமாய் வாதாடுகிறான். அவனைக் கருணைக்கொலை பண்ணிக் கொள்ள கோர்ட் அனுமதிக்கிறது.

அவனைப் பார்த்துவந்த லேடி டாக்டர் உருகிப்போ கிறாள். அவனைக் கடைசியாய் முத்தமிடத் துணிகிறாள். அவன் வேண்டாம் என்கிறான்.

'இந்த இயற்கை. இப்பூக்கள், எல்லாவற்றிடமிருந்தும் விடை பெற்றுக் கொள்கிறேன். வாழ்க்கை என்றால் ஒன்றுமேயில்லை என்ற வைராக்கிய உணர்ச்சியை வளர்த் துக்கொண்டு மரணத்தை வரவேற்றுக் கொண்டிருக்கும் என்னை உங்கள் இந்த முத்தம் திரும்பவும் வாழ்க்கையை நோக்கி இழுக்கத் தொடங்கிவிடும். வாழ வேண்டுமென்ற ஆசை பெருகிவிடும். வேண்டாம்' என்கிறான்.

ரவிக்குக் கூட அதே போன்ற உணர்ச்சிதான் ஏற்பட்டது. இச்சூழ்நிலையைவிட்டே வெகு தொலை விற்குப் போய்விட இருக்கும்போது, திரும்பவும் சஞ்ச லத்தை ஏற்படுத்தக் கூடிய உணர்ச்சிகள் எதற்காக?

அவன் தன் மனத்திலிருந்த உணர்ச்சிகளை அவளுக்குச் சொல்லவில்லை. சுருக்கமாய், 'வேண்டாம்' என்றான். 'நம்ப இதுவரை ஒரு தடவை கூட சந்திச்சுக்கவேயில்லை. எனக்கு உங்கள் பேர்கூட தெரியாது. இது ஏதோ புரியாத பந்தம். நான் கொலை பண்ணலைங்கற விஷயத்தை நீங்கள் ஒருவராவது நம்பினால் போதும்னுதான் போன் பண்ணினேன். சரி, வைச்சுடறேன்...'

'ரவி...'
'சொல்லுங்க.'

'இன்னொரு தடவை நன்றாய் யோசித்துப் பாருங்க, இந்த மாதிரி ஓடிப்போவதைவிட கோர்ட்டுக்குப்போய் உண்டு இல்லைன்னு தெரிஞ்சுக்கிறது மேலில்லையா?'

'அதைப் பற்றிக்கூட ரொம்ப யோசித்தோம். இந்த மனிதர்களின் அலட்சிய பாவத்தையும் கோர்ட்டையும் என்னால் தலைநிமிர்ந்து பார்க்க முடியாது. சரி, வைச்சுட றேன்'—போனை வைத்துவிட்டான். இன்ஸ்பெக்டர் கேட்டது இந்தப் போன்காலைத்தான்.

சர்மாவின் வீட்டிற்கு வரும் போன்கால்களெல்லாம் ட்ரேஸ் பண்ணப்பட்டு, அவ்வப்பொழுது டேப்புடன் சேர்த்து அவருக்கு அனுப்பப்பட்டுக் கொண்டிருந்தன.

முதலில் சர்மாவின் மனைவிதான் மிஸ். கோயம்புத்தூர் என்று தெரிந்ததுமே அவருக்கு அதிர்ச்சியாக இருந்தது. இவ்விருவருக்குமிடையே பல நாட்களாய் சம்பந்தம் இருந்து வருகிறது போலும் என்றெண்ணினார். ஆனால் அவர்களின் பேச்சை முழுவதுமாய் கேட்டபிறகு, அவர்கள் ஒருமுறைகூட சந்தித்துக் கொள்ளவில்லை என்று தெரிந்தது.

அதற்குமேல் அவர் அதைப்பற்றி யோசிக்கவில்லை.

அவர் யோசித்தது ரவி அவளுக்குச் சொன்ன கதை யைப்பற்றித்தான். அவன் சொன்னதெல்லாம் நிஜமாயிருந் தால் உண்மையிலேயே ரவி புதைமண்ணில் சிக்கிக் கொண்டுதானிருக்கிறான். இன்ஸ்பெக்டருக்கு இரக்கம் ஏற்பட்டது. மிகக் கெட்டிக்காரர்கள் என்றும், அந்தந்தத் துறைகளில் நிபுணர்கள் என்றும் பெயர் பெற்ற மிக உயர்ந் தவர்களேகூட சில சமயம் புத்திசாலித்தனமாய் திட்டம் தீட்டிவிட்டோம் என்றெண்ணிக் கொண்டே குழியில் விழுந்துவிடுகிறார்கள்.

ரவி சொன்னவைகளில் எவ்வளவு உண்மையிருந்த தென்று தெரிந்துகொள்வதற்காக அவர் உடனே முயற்சி களை மேற்கொண்டார். அப்பொழுது இரவு பன்னிரெண்டு மணி. ஆனாலும் அவர் நாளை வரை இந்த விஷயத்தை

ஒத்திப்போட விரும்பவில்லை. ஊரிலிருந்த பன்னிரெண்டு பெரிய பெரிய ஓட்டல்களுக்குப் போனார். நிதானமாய் பழைய ரிஜிஸ்தர்களை வரவழைத்துப் பார்த்தார்...

அந்த இலாக்காவில் மிகக் குறைவாகவே இருக்கும் நேர்மையாளர்களுள் அவர் ஒருத்தர். டியூட்டியின் மேல் மதிப்பு வைத்திருப்பவர். மொத்தம் பன்னிரெண்டு ஓட்டல் களிலும் ஜோடியாய் வந்து இறங்கி, அந்த மூன்றுநாட்களும் இருந்தவர்கள் எவ்வளவுபேர் என்று பார்த்தார். மூன்று ஜோடிகள் கிடைத்தார்கள். மாதவி இறந்த அன்று பிற் பகல் அறையை காலி பண்ணியவர்கள் அதில் இரண்டு ஜோடிகள். இரண்டுபேருமே தம் விலாசங்களைத் தந்திருந் தனர். இரண்டும் தப்பு விலாசங்கள்தான்.

அவர் ஓட்டல் புத்தகத்தைப் பார்த்தார். ஒரு ஜோடி இரவெல்லாம் டின்னருக்கு வெளியே போயிருந்தது. ரவி-ப்ரியம்வதா அவ்வாறு போயிருக்க மாட்டார்கள் என்று ஊகித்துக்கொண்டார் அவர். அதனால் அந்த ஜோடி இல்லை.

அப்படிப் பார்த்தபோது கடைசியாய் ஒரு ஜோடி எஞ்சிநின்றது... அந்த அறையிலிருந்து வெளியே போன போன்கள் எவ்வளவு என்று பார்த்தார்.

அறையை காலி பண்ணுவதற்கு ஐந்து நிமிஷத்திற்கு முன்னால் அந்த அறையிலிருந்து வெளியே போயிருக்கிறது ஒரு போன்.

...அதன் நம்பரைப் பார்த்தார்.

ரவியின் வீட்டு நம்பர் அது!

அப்படியானால்—

தானும் ப்ரியம்வதாவும் இங்கே கழித்ததாய் ரவி சொன்ன விஷயம் நிஜமே! குறைந்த பட்சம் அதுவரை யாவது நிஜத்தைச் சொல்லியிருக்கிறான் அவன். இனி

தெரிய வேண்டியது அவன் தன் மனைவியைக் கொன் றானா இல்லையா என்பதுதான்.

# 42

இங்கே இன்ஸ்பெக்டர் துப்புத் துலக்கிக் கொண்டிருந்த அதே சமயத்தில் அங்கே ரவி மிஸ். கோயம்புத்தூரோடு பேசி முடித்து விட்டு வெளியே தெருவில் வந்து கொண்டி ருந்தான். நள்ளிரவைத் தாண்டிவிட்டது. இந்த நாட்டில் இதுதான் அவனுடைய கடைசி இரவு. வெளிநாட்டில் அவனைப் போலீசார் தெரிந்துகொண்டு பிடித்துவிட் டால்தான் திரும்பவும் இந்த நாட்டிற்கு வருவான். இவ் வாறு சுயேச்சையாய் சுற்ற இல்லை. லாக்கப், கோர்ட், ஜெயில் இவற்றில் கழிப்பதற்கு...

அவன் தன் பங்களாவிற்கு முன்னால் வந்து நின்றான். இருட்டில் உயரமாய், நிழல்களுக்கிடையே தெரிந்தது பங்களா. அவன் இழந்து விட்ட மதிப்பைப் போலிருந்தது அது நின்ற தோற்றம். தரையில் படுத்துறங்கிய நிலையி லிருந்து ஏர்கண்டிஷன் படுக்கையறை நிலைக்கு உயர்ந்த அவன் வாழ்க்கையானது பரமபத சோபனத்தில் கீழே சரிந் தாற்போல சரிந்துவிட்டது. அவனுக்கு இப்பொழுது ப்ரியம் வதாவின் மேல்கூட கோபம் இல்லை. அவளும் இந்த ஆட் டத்தில் ஒரு பகடைக்காயைப்போல உயிரை இழந்துவிட் டாள். அவனுக்குத் தன்மீதே கோபம் வந்தது.

தன் பங்களாவிலிருந்து, தான் இதுவரை கழித்த கெஸ்ட்ஹவுசிற்குப் போய்க் கொண்டிருந்தபோது இடது பக்கத்தில் தென்பட்டது மயானம். அங்கேதான் மாதவியை தகனம் பண்ணினார்கள். அவனுக்கு சர்மா சொன்னார்.

நள்ளிரவு நிசப்தம் அந்த மயானத்திற்கு முக்காடாகி, சமாதிகளுக்கிடையேயிருந்து வீசிய காற்றானது, மூங்கில்

மரத்துக் கிளைகளில் மோதி ஊளை சப்தத்தைப் போல மாறி சுவர்க்கோழிகளின் இரைச்சலோடு சேர்ந்து ஒலித்தது. இராப்பொழுது தனது இராஜ்யத்தை ஆண்டு கொண்டிருந்தது அங்கே.

அவனுக்குப் பயம் உண்டாகவில்லை. அவனே ஒரு நடைப்பிணமாயிருந்தான். தொலைவில் நாய் ஒன்று அழுதுகொண்டிருந்தது. மயானத்தில் காவலர்கள் இல்லை.

அவன் உள்ளே நுழைந்தான். இருபத்தைந்து ஆண்டுகள் கலந்து ஒன்றாய் வளர்ந்து... அவனோடு சேர்ந்து பத்து ஆண்டுகள் குடித்தனம் பண்ணிய மாதவி இங்கேதான் எங்கேயோ சாம்பலாய் மாறிவிட்டாள். இந்த மண்ணில் தான் அவளுடைய சிதை எரிந்து சாம்பலாய் மண்ணோடு மண் கலந்து விட்டிருக்கிறது. இவ்வளவு சமாதிகளுக்கிடையே எதையென்று தேடுவான். உயிரோடு வாழ்ந்து கொண்டிருந்தவரை மனதில் என்ன இருந்ததோ, ஆராய்ந்து தெரிந்து கொள்ளாமல் போய்விட்டான். இப்பொழுது இறந்த பிறகு எவ்வாறு தெரிந்து கொள்வான் ?

அதே வாக்கியம்—

'ஒரே தலையணையில் படுத்து உறங்கிய நம்மிரு தலைகளும்... வடதென் துருவங்கள். நீ இறந்து நான் தனியான பிறகு என்னையே நான் சாவதானமாய் பரிசீலித்துக் கொள்ளும்படி நேர்ந்தது. உன் மேலிருந்த கோபம் போனதும், உன்சாரிபில் இருந்து யோசித்துப் பார்க்கும் பரந்த மனம் ஏற்பட்டது.

தொடக்கத்தில் நான் - முடிவில் நீ - நடுவில் உன் சமாதியின் மேல் எரிந்து கொண்டிருக்கும் தீபம் என் மனதிலிருக்கும் இருளைப் பிரகாசம் பண்ணி விரட்டியடித்துக்கொண்டிருக்கிறது. நம் விவாக வாழ்க்கையில் நீ எனக்கு என்ன கொடுத்தாய் என்ற கேள்வி இருக்கட்டும். அதை விடு. நான் உனக்கு என்ன செய்தேன்

என்று என்னையே நான் கேட்டுக்கொண்டால் அந்தக் கேள்வி விஸ்வரூபமெடுத்து என்னைக் கசக்கிப் பிழிந்து கொண்டிருக்கிறது.

உன்னை முட்டாள் என்ற நானே இப்பொழுது முட்டாளாகி இருக்கிறேன். என் கஷ்டத்தை நீ புரிந்து கொள்ளவில்லை என்று வருந்தினேனே தவிர உன் நிலைக்கு இறங்கி வந்து (பார்த்தாயா! இறங்கி வருவது என்ற இச்சொல்லே என் அகம்பாவத்தை எடுத்துக் காட்டுகிறது!)

உன்னை என் வழிக்கு இட்டுச் செல்ல எந்த முயற்சியும் பண்ணாமல் போய் விட்டேன். உறங்கிக் கிடக்கும் அந்த காரத்தை வைகறைப் பொழுதானது துயிலெழுப்பும் வரையிலும் ஒளிக்கீற்று எவ்வாறு உதயமாகாதோ அது போலவே மரணத்தின் கடைசிப்படிக்கு நடந்து போய்ச் சேரும் வரையிலும் வாழ்க்கையில் புரிந்து கொள்ளும் பக்குவம் வராது.

நள்ளிரவு விருந்துக்கு வந்த அறுபது பேருக்கு முன்னால் ஒரு வாய் குடித்து விட்டு, 'ஆஹா, பணம் தருபவன் நான்' என்ற அகம்பாவத்தில் மனச்சாட்சியை வஞ்சித்துக்கொண்ட நான்...அதே இரவில், நேசத்திற்காக ஏங்கிப் படுக்கையில் விடிவிளக்கே துணையாய் தன்னந்தனியாய் படுத்துக் கொண்டு, அந்த ஆத்திரத்தை நான் வந்ததுமே அதிருப்தியாய் வெளிப்படுத்திய உன் மேல் கோபப்பட மட்டும் எப்படி உரிமையைப் பெற்றுவிட்டேனோ?

சக டைரக்டர் வாங்கிய புதுக்கார் நன்றாயிருக்கிறதென்று மகிழ்ந்து ஒரு முறை ஓட்டிப் பார்க்க ஆசைப்படும் நான், பக்கத்து வீட்டவள் வாங்கிய புது நகை நன்றாயிருக்கிறதென்று நீ கழுத்தில் அணிந்து கொண்டபோது மட்டும் ஏன் வெடித்தேன்? 'நீங்கள் கட்டிக் கொண்டிருக்கும் டை ரொம்ப நன்றாயிருக்கிறது, வருகிறேன்' என்று ஒரு பெண் சொன்னபோது பெருமையாய் சிரித்துக்கொண்ட நான்—

'நீ இந்தப் புடவையில் அழகாயிருக்கிறாய்' என்று உன்னை யாராவது சொன்னால் மட்டும் ஏன் பொங்கி எழுந்தேன்?

கழிந்து போய்விட்ட கடந்த காலத்திலிருந்து நான் பாடம் கற்றுக்கொண்டுவிட்டேன். உண்மை உணரப்பெற்று பச்சாத்தாபத்தால் என் கண்களிலிருந்து கண்ணீர் ஊற்றெடுக்கிறது. வாழ்க்கைப் பயணம் மரணப்பாதையை நோக்கிப் போகத் தொடங்கும் சமயத்தில்தான் உண்மையான சத்தியங்கள் வெளிப்படுகின்றன.

உன் சிநேகிதன் உனக்குக் காதலைப்பற்றி, எழுதிய கடிதத்தைப் படித்துவிட்டு, 'இரண்டு முட்டாள்கள் சேர்ந்து அறிவைப்பற்றி வாதாடிக் கொண்டாற் போலிருக்கிறது'— என்றெண்ணிச் சிரித்துக் கொண்டேன். என் காதலி எனக்கு எழுதிய கடிதத்தைப் படித்துவிட்டு அதிர்ஷ்டசாலி என்று பொங்கிவிட்டேன். ஒரே தப்பை இருவருமே செய்தபோது அக்கடிதத்தை யார் எழுதினால் என்ன? தப்பு தப்புதானே என்ற உண்மையை மறந்துவிட்டேன். நீ தெற்கே உட்கார்ந்து கொண்டிருந்தபோது நான் உன்னை வடக்கே தேடிக் கொண்டிருந்தேன்.

எத்தனை ஆயிரக்கணக்கான சமாதிகள் இங்கே! எத்தனை நூற்றுக்கணக்கான சிதைகள் இங்கே! எவ்வளவு உடைந்த மனதுகள் தம் துணையோடு மனம் இணைய முடியாமல் மரணத்தோடு இணைந்து விட்டனவோ? எவ்வளவு அன்பு இதயங்கள் சிதைத்தீயில் குளிர்ந்து விட்டனவோ? ஓ என் அன்பான துணைவியே, என்னை மன்னித்துவிடு. என்னால் நியாயத்தை ஏற்படுத்த முடியாமல் போய்விட்டது. திருமணமானதிலிருந்து உன்னை ஒரு மனுஷியாய் பார்க்காமல் போய் விட்டேன். உனக்கும் ஒரு மனமுண்டு என்றும் அதற்கும் சில ஆசைகள் இருக்கும் என்றும் தெரிந்து கொள்ளாமல் போய்விட்டேன்.

என் அறிவற்ற கண்களால் உன்னுள்ளிருந்த முட்டாள் தனத்தைத்தான் கண்டேனேயன்றி என் புத்தி நுட்பத்தைக்

கொண்டு உன் அந்தரங்க மனதைப் புரிந்து கொள்ளாமல் போய்விட்டேன். கண்ணீருடன் விமான நிலையத்தில் கணவனுக்கு விடை கொடுத்த மனைவியைத்தான் பார்த்தேனே தவிர, என் பிரிவால் என் மனைவியின் கண்களிலிருந்து ஒரே ஒரு சொட்டுக் கண்ணீரைக்கூட வரவழைக்க முடியாமல் போய்விட்ட என் அன்புவற்றிய உள்ளத்தைப் பற்றி யோசித்துப் பார்க்கவில்லையே.

உன் சமாதிக்கு முன்னால் நின்றபடி மன்னிப்பு வேண்டுகிறேன். என்னை அருவருத்துக் கொள்ளாதே. இரக்கப்படு...போய் வருகிறேன்.'

அவன் எழுந்து தட்டுத் தடுமாறிக்கொண்டே மயானத்தை விட்டு வெளியே வந்தான்.

அவன் அந்த சந்திலிருந்து பிரதான சாலைக்கு வந்தவன் அங்கு தோன்றிய சூழ்நிலையைக் கண்டு ஆச்சரியமடைந்து விட்டான். அதுவரை ஆளரவமில்லாமலிருந்த வீதியில் திடீரென்று சந்தடி ஏற்பட்டு விட்டது. ஸ்கூட்டர்கள், கார் ஹாரன்கள், ஜனங்கள்...நள்ளிரவு நேரத்தில் திடீரென்று அவ்வளவு ஜனங்கள் ஏன் வெளியே வந்தார்கள் என்று புரியவில்லை அவனுக்கு. அவர்களின் கத்தலைக் கேட்டான்.

'ஹாப்பி நியூ இயர்...' என்று ஒருவருக்கொருவர் வாழ்த்துக்களைப் பரிமாறிக்கொண்டும் கத்திக்கொண்டும் போய்க்கொண்டிருந்தார்கள் ஜனங்கள். அன்றைக்குப் புது வருடம் பிறக்கவிருந்தது என்ற விஷயம் அப்பொழுதுதான் நினைவிற்கு வந்தது அவனுக்கு.

ஜனவரி முதல் தேதியன்றைக்கே தன் பிரயாணமும் ஏன் தீர்மானிக்கப்பட்டிருந்தது என்ற விஷயம் புரிந்தது. அன்றைக்கு அரசாங்க அதிகாரிகளின் காவல்கள் அதிகமாய் இராது. எல்லோருமே விடுமுறை 'மூடி'ல் இருப்பார்கள்.

ஒரு மோட்டார்காரர் அவனைக் கடந்து போய் கொண்டிருந்தபோது, அவனைப்பார்த்து 'ஹாப்பி நியூ இயர்' என்றார். ரவிக்குச் சிரிப்பு வந்தது. 'ஹாப்பி—ஹாப்பி' என்றான். எனக்குத்தான் எப்படியும் இல்லை, நீயாவது சந்தோஷமாய் இரு தம்பீ—என்ற தோரணையில்.

அதற்குள் அவனுக்குப் பக்கத்திலிருந்து ஒரு கார் வேகமாய் விர்ரென்று போயிற்று. காரை ஓட்டியவன் நன்றாய் குடித்திருப்பான் போலிருந்தது. ஸ்டீரிங்கைக் கோணல் மாணலாய் திருப்பியபடி ஓட்டிக் கொண்டிருந்தான். காருக்குள்ளேயிருந்து சிரிப்புக்கள் உரக்கக் கேட்டன. மின்சாரக் கம்பத்தில் மோதிக் கொள்ளவிருந்தது மயிரிழையில் தப்பித்துக்கொண்டு முன் நோக்கி ஓடிப்போயிற்று. அதை ஓட்டுபவருக்கு மட்டுமில்லை, அந்த காருக்கே தலைகால் புரியாத சந்தோஷம் ஏற்பட்டுவிட்டது போலிருந்தது.

அவனுக்கு மிஸ். கோயம்புத்தூர் எழுதிய காகிதம் நினைவிற்கு வந்தது. அந்த கொடேஷன்களைக் கொஞ்சம் மாற்றி நினைத்துக் கொண்டான்.

'பெரிதாய் சிரிப்பதில் புரையேறும் ரிஸ்க் உண்டு. மருந்து அதிகமாய் போடுவதால் ஆக்ஸிடெண்ட் ரிஸ்க் உண்டு. மனைவியை விட்டுவிட்டு வெளியேறுவதில் புதை மணலில் சிக்கி இடுப்பொடியும் ரிஸ்க் உண்டு...'

அடுத்த இரண்டு நிமிஷத்தில் நடந்து முனை திரும்பினான். அங்கே தெருவில் ஜனங்கள் கும்பலாய் கூடி பார்த்துக்கொண்டிருந்தார்கள். பக்கத்திலிருந்து கோணல் மாணலாய் விர்ரென்று போன கார் எதிரே வந்த இன்னொரு காருடன் மோதியிருந்தது. அதுதான் காரணம்.

யாருக்கும் பெரிதாய் அடி எதுவும் படவில்லை. அவன் அந்த இடத்திற்குப் போய்ச் சேர்ந்த சமயத்தில் இரு கார் காரர்களும் ஒருவரையொருவர் திட்டித் தீர்த்துக்கொண்டு திரும்பிப் போகத் தயாராயிருந்தார்கள். இரு கார்களின்

முன் பாகங்களும் நன்றாய் நசுங்கிச் சப்பையாகி விட்டிருந் தன. சாதாரண நிலையாயிருந்தால் போலீஸ் கேஸ் என்று ரகளை ஏற்பட்டிருக்கலாமோ என்னவோ? ஆனால் அன்று புது வருடமானதாலும் எல்லோரும் குடி மயக்கத்தில் இருந்ததாலும், நேர்ந்து விட்ட நஷ்டத்தைப்பற்றி யாருமே பொருட்படுத்தவில்லை. எதிரே வந்து மோதிய கார் அவனைத் தாண்டிக்கொண்டு போயிற்று. அப்பொழுது தான் கவனித்தான் அவன். வலது பக்கம் முன் சீட்டில், ஒரு கையை ஜன்னல் பக்கமாய் மடக்கிக்கொண்டு காற்றில் பறக்கும் கேசங்களை ஒதுக்கிக்கொண்டு ஸ்டீரிங்கிற்கு அருகில் அமர்ந்திருந்த ஆள் சொன்ன ஜோக்கைக் கேட்டுச் சிரித்துக்கொண்டே அவனைத் தாண்டிப் போய்க் கொண் டிருந்த அவள்—

ப்ரியம்வதா!

# 43

ஓட்டலில் விசாரணையை முடித்துக்கொண்டு வெளியே வந்த ராஜசேகர் உடனே போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் விடவில்லை. ஒரே ஒரு கேள்வி அவரை அலைக்கழித்துக் கொண்டிருந்தது. ரவி போனில் பேசியதுபோல அவன் கொலை பண்ணவில்லையென்றால் ஏன் இவ்வளவு நாள் ஒளிந்து கொண்டிருந்தான்?

ப்ரியம்வதாவின் கொலைக்கு பயந்துவிட்டானா? அவனை இவ்வளவு தூரம் புதை மணலில் சிக்க வைத்து விட்டு செஞ்சுராமய்யா என்னத்தை சாதிக்க எண்ணியிருந் தார்? போட்டி வியாபாரியின் வியாபாரத்தை முற்றிலும் வீழ்த்திவிட வேண்டும் என்பதுதானா அவன் உத்தேசம்? அதுவே நிஜமானால் நடுவில் இந்த பாஸ்கர் ஒருத்தன் யார்?

ராஜசேகர் ரிசீவரை எடுத்து செஞ்சு ராமய்யாவுக்குப் போன் பண்ணினார். 'ஹலோ... ராமய்யா ஹியர்' என்று கேட்டதுமே, 'நான்தான் பாஸ்கர்' என்றார்.

'பாஸ்கரா? எந்த பாஸ்கர்?' மறுமுனையில் செஞ்சு ராய்யா கேட்டான்.

'ரவியிடம் பாஸ்கர்னு பேர் வெச்சிட்டுத் திரிந்து கொண்டிருந்தவன். போலீசார் என்னைச் சூழ்ந்துகிட்டி ருக்காங்க. நான் சொல்ல வந்தது என்னவென்றால்...' லைன் கட்டாகி விட்டது.

ராஜசேகர் யோசனையில் ஆழ்ந்தார். செஞ்சுராமய்யா ஏன் போனைக் கட் பண்ணிவிட்டார்? நான் பேசிக் கொண்டிருந்த அதே சமயத்தில் பாஸ்கர் அங்கே இருந்திருப் பானா? அதனால்தான் இருட்டில் எய்திய தன் அம்பு தைத் துக்கொள்ளவில்லையா?

அவர் மனமொடிந்துவிடவில்லை. போலீஸ் இலாக் காவில் இப்படிப்பட்டவை சர்வசாதாரணந்தான்.

∴ ∴ ∴

ரவியால் தன் கண்களையே நம்ப முடியவில்லை. கொஞ்ச நேரம் தான் கண்டது பிரமையோ என்றெண்ணி னான். இல்லை. அவள் ப்ரியம்வதாவேதான். அவனைத் தாண்டிக்கொண்டே காரில் போயிருக்கிறாள்.

அவன் ரத்தம் கொதித்தது. இவ்வளவு நாளும் இருந்து வந்த செய்வதறியாத தன்மை ஆவேசமாய் மாறிற்று. தன்னை முட்டாளாக்கி நாடகமாடியிருக்கும் இவர்களைப் பழிவாங்காமல் ஏன் போகவேண்டும்? எப்படியோ அவன் கொலையாளி என்ற முத்திரை படிந்து போய்விட்டது.

போவதற்கு முன்னால், தன்னை அதலபாதாளத்தில் தள்ளிவிட்டு, சந்தோஷமாய் சிரித்துக்கொண்டிருக்கும் அந்தச் செஞ்சு ராமய்யாவிற்கும் ப்ரியம்வதாவிற்கும் நல்ல

பாடத்தைப் போதித்துவிட்டுப் போவதால் என்ன நஷ்டம் ஏற்பட்டுவிடப் போகிறது? குறைந்தது அவனுக்கு அந்த திருப்தியாவது கிட்டுமே.

அவன் திரும்பிப் பார்த்தான். அதற்குள் ப்ரியம்வதா இருந்த கார் வெகுதூரத்திற்குப் போய் முனை திரும்பி விட்டிருந்தது.

ஆக்ஸிடென்ட் நடந்த இடத்திலிருந்து ஜனங்கள் மெது வாய் கலைந்து போய்க் கொண்டிருந்தார்கள்.

ரவி ஒரு மோட்டார் சைக்கிள் காரனிடம் வந்து, 'லிஃப்ட் ப்ளீஸ்' என்றான்.

'ஷ்யூர்' என்றான் மோட்டார் சைக்கிள்காரன். 'புது வருடம்! யார் என்ன கேட்டாலும் மறுக்கக்கூடாது. எங்கே போகணும்?'—கேட்டான் அவன். குப்பென்று அவன் வாயிலிருந்து மதுவின் நெடி வெளிவந்தது.

'என் கேர்ள்ஃபிரண்ட் யாருடனோ காரில் போகிறாள். அவளைப் பின் தொடரணும்.'

கண்களைக் கொட்டினான் மோட்டார் சைக்கிளின் மேல் ஹிப்பியைப்போல உட்கார்ந்திருந்த அந்த இளைஞன்.

ரவி சொன்னது முதலில் அவனுக்குப் புரியவில்லை. புரிந்ததுமே, 'ஹுர்ரே' என்று பெரிதாய் கத்திவிட்டு, 'எங்கே?' என்றான், தன்னையே ஒரு ஜேம்ஸ்பாண்டாய் பாவித்தபடி.

அடுத்த நிமிஷம் அந்தக் கார் போன திசையை நோக்கி மோட்டார் சைக்கிள் ராக்கெட்டைப் போலப் பறந்தது.

மெல்ல மெல்ல காருக்கும் மோட்டார் சைக்கிளுக்கும் இடைப்பட்ட தூரம் குறைந்து கொண்டே வந்தது.

'அதை நிறுத்தி உள்ளே இருப்பவர்களை இழுத்து உதைக்கலாமா பிரதர்?' கேட்டான் அந்த இளைஞன்.

'வேண்டாம். வேண்டாம். உங்களுக்கு ஆட்சேபணை இல்லையென்றால் அவங்க எங்கே போறாங்கன்னு பின் தொடர்ந்து பார்ப்போம்' என்றான் ரவி.

அவன் உத்தேசம் காரில் பாஸ்கராவது, செஞ்சு ராமய்யாவாவது இருப்பார்கள் என்றும், மொத்தமாய் அம்மூவரையுமே சேர்த்துப் பிடித்துவிட வேண்டும், பிடித்து ஒரேயடியாய் உதைத்துக் கொன்றுவிட வேண்டும் என்றிருந்ததேயொழிய, வெறுமே ரோடில் தகராறு பண்ணுவதால் தன்னையேதான் அரெஸ்ட் பண்ணுவார்கள் என்று தோன்றிற்று.

அவன் மனதில் தான் அன்றிரவு என்ன பண்ணவேண்டும் என்ற உத்தேசம் உருவாகிவிட்டது. ப்ரியம்வதா எந்த வீட்டிற்குப் போகிறாள் என்று முதலில் கவனிக்க வேண்டும். பிறகு அவனும் உள்ளே நுழைந்து ஒவ்வொருவராய் மூவரையும் கொன்று குவித்துவிட்டு வெளிநாட்டிற்கு ஓடிப்போய்விட வேண்டும். குறைந்த பட்சம் பழி தீர்த்துக் கொண்டோம் என்ற திருப்தியாவது கிட்டும்.

'உங்க பேர் என்ன பிரதர்?'

'ரவி'

'புதுவருடத் தொடக்கத்திலேயே உங்க கேர்ள் ஃபிரண்டை இன்னொருத்தருடன் பார்க்க நேர்ந்ததுக்கு... சாரி பிரதர்! நானாயிருந்தால் வெட்டிக் கொன்று போட்டிருப்பன்.'

'நான் பண்ணப் போவதும் அதுதான்' மனதிற்குள் நினைத்துக்கொண்டான். கார் ஒரு வீட்டிற்கு முன்னால் நின்றது. ரவி மோட்டார் சைக்கிளை விட்டிறங்கி, 'தாங்க்ஸ்' என்றான்.

'ஹாப்பி நியூ இயர்! பழைய கேர்ள் ஃபிரண்டை மறந்துடுங்க! 'உம்' என்றால் ஆயிரம் பெண்கள் கிடைப்பாங்க. புது வருடத்தில்...'

'புது வாழ்க்கை. தாங்க்யூ...' என்று முடித்தான் ரவி. தொடர்ந்து 'நான் கேட்டதுமே ஏற்றிக்கிட்டு வந்ததுக்கு நன்றி. உங்களுக்கும் ஹாப்பி நியூ இயர்' என்றான்.

'வரேன் பிரதர்! அதப்பாருங்க, அதப்பாருங்க, உங்க கேர்ள் ஃபிரண்ட் அந்த வீட்டுக்குள் நுழைவதை! அந்த நடையைப் பார்த்தால் கொஞ்சம் மருந்தடிச்சிருப்பாள் போலிருக்கு. சாரி பிரதர்! பேட் செலக்ஷன்!' மோட்டார் சைக்கிளைக் கிளப்பிக்கொண்டு போய் விட்டான்—அவனுக்குக் கைகுலுக்கி முடித்துவிட்டு.

ரவி இரண்டு நிமிஷம் இருட்டில் நின்று கொண்டிருந்தான். காரிலிருந்து இறங்கிய உருவங்களை இருட்டில் நன்றாய் அடையாளம் புரிந்துகொள்ள முடியவில்லை. ஒரு ஆண், ஒரு பெண் என்பது மட்டுமே தெரிந்தது. 'தான் நன்றாய் பார்த்தோமா? அது ப்ரியம்வதாதானா? அருகில் இருந்தவன் பாஸ்கரா?' அவனை அண்ணனாகப் பரிச்சயம் பண்ணி வைத்தது நினைவிற்கு வந்தது. இருவரும் பழகியதைப் பார்த்தால்... காதலி என்ற பெயரில் இவ்வளவு மோசடி பண்ணிவிட்ட ஒருத்தி காதலனையே அண்ணனாய் பரிச்சயம் பண்ணி வைத்தது ஒன்றும் ஆச்சரியமில்லை.

அவ்விருவரும் உள்ளே போனார்கள்.

ரவி மேலும் கொஞ்ச நேரமும் அங்கேயே நின்று கொண்டிருந்து விட்டு, பிறகு அந்த வீட்டை நோக்கிப் போனான். அந்த வீடு மற்ற வீடுகளை விட்டுக் கொஞ்சம் ஒதுக்குப்புறத்தில் இருந்தது. குடும்பத்தார் வசிக்கும் வீடாய் தோன்றவில்லை அது. இந்த மாதிரி சல்லாபங்களுக்கு, வைப்பாட்டிகளை வைத்துக் கொண்டிருப்பவர்கள் எடுத்துக்கொண்டிருக்கும் வீட்டைப் போலிருந்தது அது. தெருவிளக்குகள்கூட இல்லை.

அவன் அருகில் போய் அந்த வீட்டைப் பரிசோதித்தான். கதவு மூடியிருந்தது. உள்ளே விளக்கு எரிந்துகொண்

டிருந்ததால் புது வருடத்தை இன்னும் அவர்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரிந்தது. மிகச் சந்தோஷமாய் இருந்து கொண்டிருப்பார்கள். இல்லாமல் வேறு எப்படியிருப்பார்கள்? அவர்களின் கண்ணோட்டத்தில் அவன் தோல்வி முடிவடைந்துவிட்டது. ரவிதேஜா டெக்ஸ்டைல்ஸின் தூண் விழுந்து விட்டது. அந்த மகிழ்ச்சியை இப்புத்தாண்டுடன் சேர்ந்து அனுபவித்துக் கொண்டிருப்பார்கள்.

வாசல் கேட் சாத்தியிருந்தது. அவன் பின்பக்கமாய் போனான். அங்கே சந்தடியில்லை. ஓசையிடாமல் சுவரேறி உள்ளே குதித்தான். பின்பக்கம் களைப்பூண்டுகள் தான் தோன்றித்தனமாய் புதரைப்போல மண்டிக்கிடந்தன. அவன் சப்தம் போடாமல் முன்பக்கமாய் வந்தான். தெரு விளக்கு இல்லாததால் அவ்விடம் எல்லாம் இருட்டாயிருந்தது.

உள்ளே எத்தனைப் பேர் இருந்தார்கள் என்று தெரியவில்லை. முதலில் அதைத் தெரிந்து கொள்ளவேண்டும். உள்ளே இரண்டிற்குமேல் ஆண்கள் இருந்து விட்டால் அவன் பாடு கஷ்டமாகிவிடும். உள்ளே போனதுமே ஒருத்தனை நினைவிழக்கச் செய்துவிட்டால் அதைப் பார்த்து அடுத்தவனும், எவ்வளவு தைரியசாலியானாலும் சரி, பயந்து விடுவான்.

அவன் சுற்றிலும் பார்த்தான். கொடிக்குக் கட்டியிருந்த இரும்புக் கம்பி கண்ணில் பட்டது. அதை மண்ணோடு பிடுங்கி எடுத்துக்கொண்டான். பருமனாய் இரண்டடி நீளத்தில் இருந்தது அது. ஒரே அடி போதும் ஆளை நினைவு தப்பச்செய்வதற்கு. அதைக் கையில் வைத்துக் கொண்டான்.

முதலில் காலிங் பெல்லை அடிக்கலாம் என்றெண்ணினான். ஆனால் அவனைப் பார்த்ததுமே ப்ரியம்வதா பெரிதாய் கத்திவிடலாம். அதோடு கூட இந்த அர்த்த

ராத்திரியில் பெல் அடிப்பது யாராயிருக்கும் என சந்தேகம் கூட உள்ளேயிருப்பவர்களுக்கு வரலாம். ஜன்னல் வழியாய் பார்த்துவிட்டால் ஆபத்து.

அவன் திரும்பவும் பின்பக்கமாய் போனான். பாத்ரூம் வென்ட்டிலேட்டர் வழியாய் வெளிச்சம் வெளியே வந்து விழுந்துகொண்டிருந்தது. சிறிய சிறிய பிளேட்டுகளைப் போன்ற கண்ணாடிகள் பொருத்தப்பட்டிருந்தன வென்ட்டிலேட்டரில்.

அவன் சப்தம் போடாமல் ஒவ்வொரு கண்ணாடியாய் உடைத்து வெளியே எறிந்தான். சுமார் பதினைந்து நிமிடம் ஆயிற்று அதைச் செய்து முடிக்க. குறுக்கேயிருந்த இரும்புக் கம்பியை அப்புறப்படுத்துவதற்கு மேலும் பத்து நிமிஷங்கள்...

அரும்பாடுபட்டு அவன் உள்ளே நுழைந்தான். மேனியில் அங்கங்கே சிராய்ப்பு ஏற்பட்டு ரத்தம் வந்தது. அவன் பொருட்படுத்தவில்லை,

வெளியறையிலிருந்து எந்த சந்தடியுமே இல்லை. விளக்கைப் போட்டுக்கொண்டே தூங்கத் தொடங்கி விட்டார்களோ என்றெண்ணினான். அதற்குள் அவன் சந்தேகத்தைத் தெளிவிப்பதுபோல, பெண் குரல் ஒன்று கேட்டது—'தாங்க்ஸ், என் இச்சையைத் தீர்த்ததற்கு' என்று. அவனுள் ஆவேசம் கட்டு மீறிக்கொண்டு எழும்பியது.

அது ப்ரியம்வதாவின் குரல்தான்.

தன் கண்கள் தன்னை மோசம் பண்ணிவிடவில்லை.

அவன் கையிலிருந்த இரும்புக் கம்பி முறுக்கிக் கொண்டது.

'நாளை வரைக்கும் வெளியே போகக்கூடாதுன்னீங்க. ஆனால் நியூ இயர் ஆனதால்... விட்டதற்கு... இதோ வரேன். ஒரு நிமிஷம்.'

காலடியோசை பாத்ரூமை நோக்கி வந்ததால் ரவி கலவரமடைந்தான். சட்டென்று பாத் டப்பிற்குப் பின்னால் போய் பிளாஸ்டிக் திரையை முன்னுக்கு இழுத்துக் கொண்டான். ஒரு விநாடி தாமதித்திருந்தாலும் அவள் பார்த்திருப்பாள். அவன் திரைமறைவிற்குப் போனதும் அவள் உள்ளே நுழைந்ததும் ஒரே சமயத்தில் நடந்தேறின.

அவள் மேனியில் எந்த ஆடையுமே இல்லை. வாஷ்பேஸினிடம் போய் முகத்தைக் கழுவிக்கொண்டாள். பின் பாகம் நன்றாய் தெரிந்தது. கொஞ்சம் முன் நோக்கிப் போய் கண்ணாடியில் தன் மேனியைப் பார்த்துக்கொண்டே சோம்பல் முறித்துக்கொண்டாள்.

அவ்வளவு வெளிச்சத்தில் பிறந்த மேனியோடு ஒருத்தியைப் பார்த்தது இதுதான் முதல் தடவை.

இந்த உடம்பைப் பார்த்தா புடம் போட்ட பொன் என்றெண்ணினான். இரண்டு உறக்கமில்லாத இரவுகளையும், அதுதான் 'காதல்' என்றெண்ணி பிரமை கொண்டு கனவுகள் கண்டு கழித்தும் வந்திருக்கிறானே! எவ்வளவு முட்டாளா யிருக்கிறான் ஆண். வெட்கத்திரைக்கும், கசங்கிய படுக்கைக்கும் இடையேயுள்ள வித்தியாசத்தைக் கூடப் புரிந்துகொள்ளத் தெரியாதவன். நலுங்காத உதடுகளுக்கும் மதுவை ருசிகண்ட உதடுகளுக்குமுள்ள வேறுபாட்டைத் தெரிந்து கொள்ளத் தெரியாதவன். காதலுக்கும் காமத்திற்கும் இடையேயுள்ள வித்தியாசத்தைத் தெரிந்துகொள்ளத் தெரியாதவன்!

...பாரமான நிசப்தத்திற்கிடையே அவள் போய் விட்டாள்.

...அவன் சாதாரண மனிதனானான்.

...கடமை நினைவிற்கு வந்தது.

அவள் போகும்போது கதவைச் சாத்தவில்லை. அது சாதகமாயிருந்தது. அவன் கதவு சந்திலிருந்து மெல்ல முன்னுக்கு வந்தான்.

சோபாவில் உட்கார்ந்திருந்த ஆளும் பிறந்தமேனியுடன் இருந்தான். புது வருடத் தொடக்கத்தை அவர்கள் இன்னும் கொண்டாடிக் கொண்டிருந்தார்கள். நடுவில் பாதி சீசா காலியாய் இருந்தது. சிகரெட் புகை அறை முழுவதும் நிரம்பி வழிந்தது. அவள் போய் அவன் மடியில் உட்கார்ந்து கொண்டாள். 'கமான் டார்லிங்' என்று அவன் குனிந்து அவள் வாயில் கண்ணாடித் தம்ளரைப் பொருத்துவதற்காக இந்தப் பக்கமாய் திரும்பியபோது ரவிக்கு விளக்கு வெளிச்சத்தில் அவன் முகம் நன்றாய்த் தெரிந்தது.

பூமியே ஸ்தம்பித்து நின்றுவிட்டாற் போலாயிற்று ரவிக்கு.

நட்சத்திரங்கள் ஆகாயத்திலிருந்து பெரிய பள்ளத் தாக்கில் விழுந்துவிட்டாற் போலவும், மலைப்பாம்பு பயங்கர ரூபமெடுத்துத் தன்னை விழுங்க வந்தாற்போலவும் நடுநடுங்கி விட்டான்.

அவள் மேனியைச் சுற்றிக் கைகளைப் போட்டுக் கொண்டு, அவள் மார்பின் மேல் சிகரெட்டை வைப்பேன் என்று காட்டி பயமுறுத்தி, அவள் நழுவிப் போகும்போது அதைப்பார்த்து மகிழ்ச்சியடைந்து, இடையிடையே அவள் வாயில் பலவந்தமாய் மதுவை ஊற்றியபடி-சாடிஸ்டிக்காய் மகிழ்ச்சியடைந்து கொண்டிருந்தது ரவி தேஜா டெக்ஸ் டைல்ஸ் சேர்மேன் சர்மா!

ப்ரியம்வதாவோடு சேர்ந்து இருந்தது சர்மாவாய் இருந்ததால் அவன் அதுவரை பண்ணவேண்டுமென்று எண்ணிக் கொண்டிருந்த எல்லாவற்றையும் ஒரேயடியாய் மறந்துவிட்டான். அவன் கையிலிருந்த இரும்புக் கம்பி தன்னையறியாமல் நழுவிக் கீழே விழுந்து ஓசையை எழுப்பிற்று. அந்த சப்தத்தைக் கேட்டு பாத்ரூம் பக்கமாய் திரும்பிப் பார்த்த ப்ரியம்வதா வீலென்று கத்திவிட்டாள்.

ரவி சட்டென்று விழித்தெழுந்து, குனிந்து கீழேயிருந்த கம்பியை எடுக்கப் போனான். அந்த சப்தத்தைக் கேட்டு அடுத்த அறையிலிருந்த இன்னொரு ஆள் கதவைத் தட்டினான். சர்மா போர்வையைச் சுற்றிக்கொண்டு கதவைத் திறந்தார். ரவி பாத்ரூமிலிருந்து அந்த ரூமிற்குள் நுழைவதற்கும் அந்த ஆள் உள்ளே வந்து பாக்கெட்டிலிருந்த பிஸ்டலை எடுப்பதற்கும் சரியாயிருந்தது.

சர்மா சுதாரித்துக்கொண்டு, சிரித்துக்கொண்டே, 'வெல்கம் ரவி! கடைசி சமயத்தில் எல்லாவற்றையும் கண்டு பிடித்துட்டாய்னு சொல்லு! கங்கிராஜுலேஷன்ஸ்!' என்றார், அடுத்த அறையிலிருந்து வந்த ஆளின் கையிலிருந்த பிஸ்டலைத் தான் வாங்கிக்கொண்டு. அடுத்த அறையிலிருந்து வந்த அந்த ஆள் பாஸ்கர்!

# 44

செஞ்சுராமய்யாவுடன் பேசிமுடித்துவிட்டுப் போனை வைத்தபிறகு, என்ன பண்ணுவதென்று புரியவில்லை இன்ஸ்பெக்டர் ராஜசேகருக்கு.

போலீஸ் ஸ்டேஷன் ஆளரவமில்லாமலிருந்தது. புத்தாண்டு சந்தர்ப்பத்தில் எல்லாரும் அவரவர்கள் டியூடியில் இருந்தார்கள். இனி இன்றிரவு இந்த கேஸ் விஷயமாய் தன்னால் பண்ணக்கூடியது ஒன்றுமில்லை என்றெண்ணிய படி வெளியே போகத் தொடங்கியபோது போன் ஒலித்தது.

'ஹலோ, போலீஸ் ஸ்டேஷன்' என்றார் தன் ஏரியாவைக் குறிப்பிட்டு.

'மாதவி கொலைக் கேசில் துப்பறிந்து கொண்டிருக்கும் ஆபீசரோடு பேசணும்' என்றது இனிமையான ஒரு பெண் குரல் மறுமுனையிலிருந்து.

'இன்ஸ்பெக்டர் ராஜசேகர் ஹியர். நான்தான் அந்தக் கேசைப் பார்த்துட்டிருப்பது. சொல்லுங்கள், நீங்க யாரு?'

'அதற்கு அவ்வளவு முக்கியத்துவம் வேண்டாம் இன்ஸ்பெக்டர் சார். நான் ஒரு முக்கியமான விஷயத்தை உங்களுக்குச் சொல்லணும்.'

'சொல்லுங்கள்.'

'மாதவியைக் கொன்றது ரவி இல்லை.'

'பின்னே?'

'அவர் அந்த சமயத்தில் பம்பாயில் இல்லை, இந்த ஊரிலேயேதான் இருந்தார்.'

'உங்களுக்கு எப்படித் தெரியும்?'

மறுமுனையிலிருந்து பேசிக்கொண்டிருந்த அவள் அதற்குப் பதில் சொல்லாமலேயே, 'நான் ரொம்ப ரிஸ்க் எடுத்துட்டு இந்தப் போனைப் பண்றேன் இன்ஸ்பெக்டர் சார்! ரவி இந்த நாட்டிலிருந்தே போய் விடுவதற்கு ஏற்பாடுகள் நடந்து விட்டன. நாளைக்குத்தான் அவர் பிரயாணம். துரதிர்ஷ்டம் என்னவென்றால் கொலை பண்ணாதபோதே அவர்மேல் இந்தக் குற்றம் சுமத்தப்பட்டிருக்கு. அந்த அவப் பெயருடனேயே அவர் இந்த நாட்டை விட்டுப் போகிறார்.'

'அவர் கொலையாளி இல்லாவிட்டால் இந்த விஷயத்தைப் போலீசாருக்குத் தெரியப்படுத்தலாமில்லையா?'

'பயப்படுகிறார், பயத்தால் என்ன பண்ணுகிறோம்னே தெரியவில்லை அவருக்கு. இதில் நன்றாய் சிக்கிக்கிட்டோம் என்றும் இதிலிருந்து மீளவே முடியாதுன்னும் நிராசை ஏற்பட்டிருச்சி அவருக்கு. இதைவிட பெரிய பெரிய விஷயங்களையெல்லாம்கூட அவர் எதிர்த்து நின்றிருக்கிறார் சகஜமாய். ரொம்ப தைரியசாலிதான். ஆனால் ப்ரியம்வதா விஷயத்தில் அவர் மனதில் தான் தப்புப் பண்ணிவிட்டதாய் ஒரு உணர்ச்சி படிந்து போய்விட்டது. மனிதனிடம் குற்ற உணர்ச்சி ஏற்படும்போதுதான் அதைரியமும் வந்து விடுகிறது. இதுதான் காரணம் இன்ஸ்பெக்டர் சார். எந்த கோர்ட்டிலுமே நிரூபிக்க முடியாத காரணம்...'

'உங்களுக்கு அவரைப்பற்றி நன்றாய் தெரியும் போலிருக்கே...'

'அதெல்லாமில்லை, ஆனால் அவர் நிஜம் சொல்வதாய் நம்பிக்கை இருக்கு. நீங்க விசாரணை பண்ணுங்க. அவர் இந்த ஊரிலேயே இருந்ததாய் சாட்சி கிடைத்து விடும்.'

'இந்த ஊரிலேயே இருந்துகொண்டு கொலையைப் பண்ணியிருக்கலாமில்லே?'

'அதைப் பண்றத்துக்கு இவ்வளவு திட்டமெல்லாம் அனாவசியம்.'

'அவர் எங்களுக்குக் கிடைத்தால்தான் எல்லா விஷயமும் தெரியும்.'

'ரவி நாளைக்கே இந்த நாட்டைவிட்டுப் போய்விடுகிறார். அதை நீங்க தடுக்கணும்! உங்களை நம்பி இந்த விஷயத்தைச் சொல்றேன். அவரைத் தூக்குமேடைக்கு ஏற்றுவதற்காக இல்லை. அவர் மூலமாய் நிஜ கொலையாளியைக் கண்டுபிடிப்பதற்கு! நாளைக்கு அவர் இந்த நாட்டை விட்டுப் போய்விட்டால் நிரந்தரமாய் அவரையே தேடத் தொடங்கிவிடுவார்கள் போலீசார் - உண்மையான கொலையாளியை விட்டுவிட்டு—'

'அது சரி, அவங்க யாராயிருக்கும்னு உங்களுக்கு ஏதாவது சந்தேகம் வந்திருக்கா?'

'அவர் வியாபாரத்திற்குக் குறுக்கேயிருப்பவங்கதான் இந்த வேலையைப் பண்ணியிருப்பாங்கன்னு நினைக்கிறார் அவர்.'

'சரி, அவர் இந்த நாட்டை விட்டுப் போவதற்கு யார் உதவி பண்றாங்கன்னு உங்களுக்கு ஏதாவது தெரியுமா?'

'தெரியாது இன்ஸ்பெக்டர்.'

'உங்க கணவர்தான்'—மெதுவாய் சொன்னார் இன்ஸ்பெக்டர்.

அவர் அதைச் சொன்னதுமே, திடீரென்று மறுமுனையில் ஏற்பட்ட சலனத்தை போனிலேயே நன்றாய் உணர முடிந்தது. 'நான்...நான்...' அப்பெண்ணின் குரல் தடுமாறிற்று.

'நீங்க சர்மாவின் மனைவின்னு எனக்குத் தெரியும்... அரை மணிக்கு முன்னாடிதான் ரவி உங்களோடு பேசினார் என்பதுகூட தெரியும் எனக்கு.'

மறுமுனையிலிருந்து நீண்ட நிசப்தம்.

'நீங்க எங்க சம்பாஷணையை முழுவதுமாய் கேட்டிருந்தால் எங்களிருவருக்குமிடையேயிருந்த நட்பு எப்படிப்பட்டதுன்னும் தெரிஞ்சிருப்பீங்க.'

'தெரியும். ரவிக்காக இவ்வளவு தைரியமாய் நீங்க எனக்குப் போன் பண்ணுவது மெச்சத் தகுந்த விஷயம். உங்களுக்கு அவர் போன் பண்ணிய உடனேயே நான் ஓட்டல்கள் எல்லாவற்றிற்கும் போய் தேடினேன். ரவி ப்ரியம்வதாவுடன் சேர்ந்து இதே ஊரில் இருந்த விஷயம் நிஜந்தான். ஆனால் அது எந்த விதத்திலும் அவருடைய குற்றமற்ற தன்மையை நிரூபிக்காது...'

'அப்படியானால் அவர் பிடிபட்டால் தண்டனையை அனுபவிச்சு தீர வேண்டியதுதானா? அனாவசியமாய் நான் போன் பண்ணிவிட்டேனா?'

'நீங்க போன் பண்ணாவிட்டாலும் இந்த விஷயம் எங்களுக்குத் தெரிஞ்சிடும். உங்க போனை 'டாப்'பண்ணினாற்போலவே உங்க கணவருக்குப் பின்னாடியும் எங்க ஆட்கள் சுத்திக்கிட்டிருக்காங்க. அவங்க ரவியைக் கண்டு பிடிச்சிடுவாங்க.'

'கஷ்டம்.'

'ஏன்?'

''தனக்குப் பின்னால் சி.ஐ.டி.க்கள் சுற்றுவது என் கணவருக்குத் தெரியும். முந்தாநாள் யாருடனோ போனில் பேசிட்டிருந்தப்ப 'எங்க வீட்டுக்கு முன்னாடிகூட சி.ஐ.டி. காவல் இருப்பாங்கன்னு சந்தேகப்படறேன்'னு சொல்லிட்டிருந்ததைக் கேட்டேன்' என்றாள் அவள்.

'ஓ.கே. மேடம் நாளைக்கு விரிவாய் உங்களோடு பேசிக்கிறேன்...'

'நான் இந்த மாதிரி போன் பண்ணிய விஷயத்தை யாருக்கும் சொல்லிடாதீங்க. ரவியிடம்கூட...ப்ளீஸ்...'

'ஷ்யூர்' என்று போனை வைத்து விட்டார் ராஜசேகர். அவருக்குக் கொஞ்சம் குழப்பமாயிருந்தது.

ரவி எப்படியாவது சர்மாவைச் சந்திப்பான் என்ற நம்பிக்கையில் சர்மாவின் வீட்டிற்கு முன்னால் போலீஸ் காவலை வைத்திருந்தார். அவர் நினைத்தாற்போலவே நடந்தும்விட்டது. ஆனால், போலீசாரின் அசட்டுத்தனத்தால் கெஸ்ட் ஹவுசிலிருந்து ரவி தப்பித்துக்கொண்டான். பிறகு சர்மாவின் போனும் 'டாப்' பண்ணப்பட்டது.

ஆனால் சர்மா போனில் பேசிய எந்தச் சம்பாஷணையிலுமே 'எங்க வீட்டிற்கு முன்னால்கூட காவல் வைச்சிருக்காங்க' என்ற வாக்கியம் வரவேயில்லை. அதாவது இந்த சம்பாஷணை போனை 'டாப்' பண்ணுவதற்கு முன்பே நிகழ்ந்திருக்க வேண்டும்.

அதாவது...

ரவியை கெஸ்ட் ஹவுசிற்குக் கொண்டு வந்த சமயத்திலேயே சர்மாவுக்குத் தனக்குப் பின்னால் போலீசார் காவலிருந்த விஷயம் தெரிந்திருக்கிறது.

இனி அவர் ரவியைச் சந்திக்க மாட்டார். தான் இதுவரை சர்மா எப்படியும் ரவியைச் சந்திப்பாரில்லையா, அப்பொழுது ரவியை அரெஸ்ட் பண்ணிவிடலாம் என்ற பிரமையில் இருந்து வந்திருக்கிறார்.

தான் உடனே சர்மாவைச் சந்தித்து விசாரணை புரிந்து, நியாயமாகவோ, பயமுறுத்தியோ, உண்மையைக் கக்க வைத்தாலேயொழிய ரவி இருக்குமிடத்தைத் தெரிந்து கொள்ள முடியாது. ரவி வெளிநாட்டிற்கு ஓடிப் போய்விடுவதற்குள்ளாகவே இது நடந்து தீரவேண்டும். அதாவது நாளைக் காலைக்குள் இது நடந்துவிட வேண்டும். சர்மா எங்கிருப்பார் என்று அவருக்குத் தெரியும்.

அவர் மோட்டார் சைக்கிளில் ஏறி கிளப்பிற்குக் கிளம்பினார். கிளப்பிற்கு முன்னால் போலீசார் மஃப்டியில் இருந்தார்கள். 'சர்மாசார் உள்ளே இருக்கார் சார். ரவி தேஜா டெக்ஸ்டைல்ஸ் டைரக்டர்கள் எல்லோருமே இருக்காங்க உள்ளே' என்றான் ஒரு போலீஸ் ஆள்.

ராஜசேகர் உள்ளே நுழைந்தார். சரியாய் அப்பொழுது தான் புது வருஷம் தொடங்கிற்று, எல்லோரும்

எழுந்து, 'ஹாப்பி நியூ இயர், ஹாப்பி நியூ இயர்' என்று பரஸ்பரம் விஷ் பண்ணிக்கொண்டார்கள். எங்கும் ஒரே சந்தடியாயிருந்தது.

போர்டு டைரக்டர்கள் உட்கார்ந்திருந்த இடத்திற்கு ராஜசேகர் போனார்.

அங்கே, அவர்களுக்கிடையே சர்மா இல்லை. ராஜசேகருக்குத் தன் இலாக்கா ஆட்களின் முட்டாள்தனத்தின்மேல் கோபம் வந்தது. வெளியே வந்தார். வெளியே நின்று கொண்டிருந்த போலீஸ் ஆள் அவரை பயந்தபடியே பார்த்தான். ராஜசேகர் அவனைப் பார்த்து, 'சர்மா உள்ளே இல்லை. வெளியே போனதை நீ எங்காவது பார்த்தாயா?' என்றார்.

'கார் இங்கேதான் இருக்கு சார்.'

'உன் மூஞ்சி! நான் கேட்டது காரைப்பற்றி இல்லை. ஆளைப் பற்றி.'

போலீஸ் ஆள் திருதிருவென்று விழித்தான். உள்ளேயிருந்து கூச்சலும், கும்மாளமும் கேட்டுக் கொண்டிருந்தது. தொலைவில் பட்டாசுகளை வெடித்துக்கொண்டிருந்தார்கள். எங்கும் ஒரே ஆரவாரமாயிருந்தது. வெயிட்டர் அவரிடம் வந்து, 'ஹாப்பி நியூ இயர் சார்' என்றான்.

'ஹெக்டிக் நியூ இயர்' என்றெண்ணிக் கொண்டார் மனதிற்குள். இந்த வருடம் தொடங்கும்பொழுதே ஆளைத் திணறடிக்கத் தொடங்கி விட்டது. இந்தமாதிரி வேலைகள் இன்னும் எவ்வளவு வந்து சிக்கிக் கொள்ளப் போகிறதோ இந்த ஆண்டு...

அவர் திரும்பி உள்ளே போனார்.

டைரக்டர்கள் எல்லோரும் முழு மயக்கத்தில் ஆடிக் கொண்டிருந்தார்கள். அவருக்கு ஒரு விஷயம் ஆச்சரியத்தை யளித்தது. அவர்களின் மேனேஜிங் டைரக்டர் தலைமறைவாகி பத்து நாட்கள்கூட ஆகவில்லை. இவர்களோ இங்கே அந்த விஷயத்திற்காக ஆனந்தத்தை அனுபவித்துக் கொண்டிருந்தார்கள்.

வியாபாரிகளுக்கிடையே சிநேகமும், அன்பும்கூட இந்த விதமாய்த்தான் வியாபார ரீதியில் இருக்கும் போலிருக்கிறது என்றெண்ணிக் கொண்டார். 'போகிறவர்கள் போய்க் கொண்டேயிருப்பார்கள். அவர்களால் வரப் போகும் நஷ்டம் என்ன? அதை எவ்வாறு துடைத்தெறிவது?...இதுதான் அவர்களின் யோசனையெல்லாம். உலகம் அதன் வழியில் நடந்துகொண்டேதானிருக்கும்.

ஒரு டைரக்டரிடம் போய், 'சர்மா சார் எங்கே போனாருன்னு ஏதாவது உங்களுக்கு தெரியுமா?' என்று கேட்டார்.

'தெரியாது, ஏதோ போன் வந்தது, போயிட்டார்.'

ராஜசேகர் திடுக்கிட்டார்.

நள்ளிரவில் பன்னிரெண்டு மணிக்குப் போன் வந்தால்? பாதியில் பார்ட்டிக்கிடையே போய்விட்டார் என்றால்...? ஒருகால் இன்றிரவே ரவியை இந்த ஊர் எல்லையைத் தாண்டிப் போய்விடும்படி முயற்சி பண்ணிக் கொண்டிருக்கிறாரோ? வெளியே போட்டிருந்த காவலை நம்பித் தான் ஏமாந்து விட்டோமே!

ரவி மட்டும் தப்பித்துப் போய்விட்டால் பிறகு தன்னால் எதுவுமே பண்ணமுடியாது.

அவர் கிளப்பிற்குள்ளிருந்த இன்னொரு அறைக்குள் நுழைந்தார்.

அங்கே டெலிபோன் ஆபரேட்டர் உட்கார்ந்திருந்தான். அந்தச் சமயத்தில் போன்கள் வருவதோ போவதோ வேலையில்லாததால் பி.பி. எக்ஸிற்கு முன்னால் வெறுமே உட்கார்ந்திருந்தான். யூனிபாரத்திலிருந்த இன்ஸ்பெக்டரைப் பார்த்ததும் எழுந்து நின்றான்.

'எவ்வளவு எக்ஸ்டென்ஷன்கள் இருக்கு இங்கே!' கேட்டார்.

'எட்டு சார்.'

'பத்து நிமிஷத்துக்கு முன்னாடி சர்மாவுக்குப் போன் தந்தது நீதானா?'

'நான்தான் சார்,'

'யார், பண்ணினாங்க போன்?'

'தெரியாது சார்.'

'தெரியாதா அல்லது மறந்துட்டயா?'

'ம...மறந்துட்டேன் சார்.'

ராஜசேகர் அவனை உற்றுப்பார்த்தார். அவன் தலை குனிந்தான். அந்தப் பார்வை போதும் பிடிபடுவதற்கு.

'வா, போவோம்' என்றார்.

ஆபரேட்டர் பயந்துபோய், 'எங்கே சார்' என்றான்.

'போலீஸ் ஸ்டேஷனுக்கு.'

'எ...எதுக்கு சார்?'

'சர்மாவுக்கு யார் போன் பேசினாங்கன்னு ஞாபகப் படுத்திப்பதற்கு...!'

அழாதகுறையாய், 'ஞாபகம் வந்திருச்சி சார்' என்றான் ஆபரேட்டர்.

'யார்?'

'ஒரு பெண்.'

'பேர்?' ஆச்சரியமடைந்தார். அந்த சமயத்தில் சர்மாவுக்கு ஒரு பெண் போன் பண்ணுவாள் என்பதை எதிர் பார்க்கவில்லை அவர். அவள் நிச்சயமாய் சர்மாவின் மனைவியாயிருந்திருக்க முடியாது.

'சொல்லலை சார்.'

பொய் சொல்ல வேண்டி வரும் போதெல்லாம் தடுமாறுவது உன்னிடமிருக்கும் கெட்ட பழக்கம் போலி ருக்கு. இதைப் பார்த்தால், நீ முழு சம்பாஷணையையும் கேட்டிருப்பாய்னு தோணுது.'

ஆபரேட்டர் மேலும் கலவரமடைந்தவனாய், 'இல்லை சார்' எல்லா சம்பாஷணையையும் கேட்கலை' என்றான்.

'எல்லாவற்றையும் கேட்கலைன்னால் கொஞ்சம் கேட்டிருக்கேனு அர்த்தம்.'

அவன் முகம் வெளுத்தது.

'நள்ளிரவு நேரத்தில் ஒரு பெண் ஆண் ஒருத்தருக்குப் போன் பண்ணினால் கேட்காமல் இருந்திருப்பாயா? அது வும் இந்த மாதிரி வெறுமே உட்கார்ந்துட்டு...சீக்கிரமாய்

சொல்லிவிட்டால் நல்லது. இங்கே சொல்றயா அல்லது போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்து சொல்றயா?'

'இங்கேயே சொல்லிடறேன் சார்.'

'சொல்லு.'

அவன் பாடம் ஒப்புவிப்பது போல மளமளவென்று சொல்லிவிட்டான்.

'...என்னை இங்கே கெஸ்ட் ஹவுசில் தன்னந்தனியாய் வெச்சுட்டு நீங்க அங்கே ஹாய்யாய் நியூஇயரைக் கொண்டாடிக்கிட்டிருக்கீங்களா? அதெல்லாம் நடவாது. என்னால் இங்கே தனியாய் இருக்கமுடியாது. எனக்கு போரடிக்கிறது. நீங்க வந்துடுங்க. இருவருமாய் சேர்ந்து வெளியே போவோம்.' என்றாள் அவள். 'இப்பவா?' என்றார் சர்மா. 'ஆங். இப்போதே! நீங்க வராவிட்டால் சும்மாயிருக்க மாட்டேன். வந்தே தீரவேண்டும்' என்றாள் அவள். சர்மா அலுத்துக் கொண்டே, 'சரி வரேன்' என்றார் அவ்வளவுதான் சார் நடந்தது.'

'அவள் பேர்?'

'எனக்கு ஞாபகமில்லை சார். என்னவோ சொன்னாள்.'

'நிஜமாய் ஞாபகமில்லையா?'

'நிஜமாய்த்தான் சார். இந்தவாட்டி என் பேச்சுத் தடுமாறவேயில்லையே, நீங்களே பார்த்தீங்க இல்லையா?'

'...கொஞ்சம் ஞாபகப்படுத்திக்கோ........ராதா...... சாவித்திரி...பத்மா...கமலா...சுப்ரியா...'

'ஆங்...அதேதான்...'

'எது? சுப்ரியாவா?'

'இல்லை சார்...ஆனால்...அந்த ப்ரியா...அதான்...'

சட்டென்று ஏதோ நினைவிற்கு வரவே, 'ப்ரியம் வதாவா?' என்று கேட்டார்.

'கரெக்ட் சார். ப்ரியம்வதாவேதான்.' கத்திவிட்டான் ஆபரேட்டர்.

தன் பதினைந்து வருட சர்வீஸில் என்றுமே அவ்வளவு திக்பிரமை அடைந்ததில்லை ராஜசேகர்.

டெலிபோன் ஆபரேட்டர் சொன்ன பெயரைக் கேட்ட தால் உண்டான அதிர்ச்சியிலிருந்து மெதுவாய் மீண்டார்.

போலீஸ் பயிற்சியின்போது சொல்லித் தந்திருந்த வாக்கியம் நினைவிற்கு வந்தது—'ஒரு தப்புப்பண்ணிய ஆள் இன்னொரு தப்பைப் பண்ணாமல் போகமாட்டான்...தன் தப்பை உலகம் தெரிந்து கொள்ளவில்லை என்ற நம்பிக்கை ஏற்பட்டதுமே மேலும் தைரியமாய் இரண்டாவது தப்பைப் பண்ணி பிடிபட்டு விடுகிறான்...'

அதுதான் நடந்திருக்கிறது இப்பொழுதும்.

ரவி வெளிநாட்டிற்குப் போய்ச் சேரும் வரையிலும் ப்ரியம்வதாவை வெளியுலகத்தில் வந்து நடமாட வேண் டாம் என்று சொல்லியிருக்கிறார் சர்மா. சரியென்று ஒப்புக் கொண்டிருக்கிறாள் அவள். ஆனால், இந்தப் புது வருட கேளிக்கைகளைப் பார்த்துவிட்டு, எல்லோரும் அனுபவிக் கிறார்கள், தான் மட்டும் ஏன் அனுபவிக்கக்கூடாது என்ற உணர்ச்சித்துடிப்புடன் சர்மாவுக்குப் போன் பண்ணியிருக் கிறாள். சர்மாவுக்கு இருந்த விழிப்புணர்வு அவளுக்குத் தேவையில்லாத விஷயம். அதனால்தான் யார் கேட்டுவிடப் போகிறார்கள் என்ற துணிச்சலில் நிஜப் பெயரைச் சொல்லிவிட்டாள்.

அவர் நேரத்தைப் பார்த்துக் கொண்டார்.

12.10 ஆகியிருந்தது.

இதுவரை சர்மா ரவியைக் காப்பாற்றுவதற்காகத்தான் இவ்வளவும் பண்ணிவருவதாய் நினைத்திருந்தார். இப் பொழுது உண்மை விஷயம் தெரிந்துவிட்டதால் சர்மா ரவியை வெளிநாட்டிற்கு அனுப்பும் ஏற்பாடுகள் எதையுமே பண்ணியிருக்கமாட்டார் என்று தோன்றிற்று ராஜசேக ருக்கு.

பின்னே என்ன பண்ணியிருப்பார்?

கொலையா?

அதனால் அவருக்கு என்ன லாபம்?

இன்ஸ்பெக்டர் பொறுமையின்றி தலையைச் சிலிர்த்துக்கொண்டார்.

அதிக நேரமும் இல்லை. ரவியின் உயிர் ஆபத்தில் இருப்பது புரிந்தது. ஆனால் இந்த நள்ளிரவில் ரவியை எங்கேயிருந்து தேடுவது?

சர்மா ரவியின் மேல் இவ்வளவு பகைமை ஏற்படுத்திக் கொள்ள காரணந்தான் என்ன?

# 45

'பிரேம மஞ்சரி என்ற குதிரை என் வாழ்க்கை முழுவதையும் உன் கையில் கொண்டு வந்து வைத்து விட்டது' என்றார் சர்மா. 'அன்றைக்குதானே என் ஷேர்களையெல்லாம் உன் பெயருக்கு மாற்றினேன்?'

'எல்லாவற்றையும் இல்லை. மெஜாரிட்டி சதவீதம்.'

'ஆமாம். அப்போதிலிருந்தே எல்லா தீர்மானங்களையும் நீயே பண்ணக்கூடிய 'சந்தர்ப்பம் கிடைத்தது உனக்கு. எம்.டி. ஆனாய்.'

'இந்தக் காரணத்துக்காகவா என்னை இந்த மாதிரி சக்கரத்துக்குக் கீழே சிக்க வெச்சு நசுக்கியிருக்கீங்க? இவ்வளவு சின்ன காரணத்துக்காகவா என் மனைவியை நீங்க கொன்னீங்க?'

'பின்னே... உன்னை எந்தவிதத்திலாவது இக்கட்டில் ஆழ்த்தாமல் போனால் - ஷேர்களைத் திரும்பி என் பேருக்கு ட்ரான்ஸ்ஃபர் பண்ண மாட்டாயே! இப்பப்பாரு! வெளி நாட்டுக்குப் போற அவசரத்தில் எல்லா காகிதத்தின் மேலும் பழைய தேதியைப் போட்டுக் கையொப்பமிட்டு விட்டாய்...'

'மனிதர்களுக்குள் ராட்சதர்கள் இருக்காங்கன்னு தெரியும். ஆனால் மனதிற்குள் இவ்வளவு விஷத்தை வெச்சுக்கிட்டு மேலுக்கு அன்பாய் நடிப்பாங்கன்னு மட்டும் தெரிஞ்

சுக்காமல் போயிட்டேன். உங்களுக்கு நான் எந்தவிதத்தில் குறை வெச்சுட்டேன்? திட்டமிட்டபடியே லாபத்தைப் பகிர்ந்து தந்து கொண்டுதானே வந்தேன்...'

'குடியும் குதிரைப் பந்தயமும் என் பலவீனங்கள். அவற்றைப் பயன்படுத்திக்கிட்டு என்னிடமிருந்த தலைமையை நீ உன் கைக்கு எடுத்துக்கிட்டாய். அதற்காக நீ லாபத்தில் பங்கு தந்தாய். ஆனால் அவை எந்த மூலைக்கு? ஒரு குதிரையின் மேல் பந்தயம் கட்டக்கூட அவை போதவில்லை. பணத்துக்காகத் தவிதவித்துப் போயிட்டேன். கம்பெனி என் கையிலிருந்த போது...'

அவர் பேச்சைப் பாதியிலேயே இடைமறித்து, ரவி வெறுப்போடு, 'கம்பெனி உங்க கையிலிருந்த நாட்களில் அதைக் கிழித்துக் குதறியெடுத்துட்டீங்க. உங்கமேல் நம்பிக்கை வைத்துப் பணத்தைப் போட்டிருக்கும் டைரக்டர்கள் எல்லோருக்கும் விண்டோ-ஷோ பண்ணிக் காட்டிட்டீங்க' என்றான்.

'ஆமாம் கரெக்ட்' சிரித்தார் சர்மா.

'ஆனால் நான் வந்து அதற்கு உயிரூட்டினேன். இந்த நிலைக்கு கொண்டு வந்திருக்கிறேன்.'

'என்ன லாபம்? கம்பெனி வளரத் தொடங்கிற்று. லாபங்களை எங்களுக்குக் குறைச்சலாய் தந்துட்டு, மீதி பணத்தையெல்லாம் கம்பெனியிலேயே திரும்பவும் போடத் தொடங்கிட்டாய். புடவை வாங்கினவங்களுக்கு பெடல்ஸ் ப்ரா, ஃபால்ஸ் தைத்துத் தருவது இனாம் என்றெல்லாம் சொன்னாய். மேக்கப் பாக்ஸ், ப்ளவுஸ் பீஸ் இனாம் என்றாய். எல்லாவற்றையும்விட முக்கியமாய், பிரபலமான புடவைகள்னு பேரை வெச்சு இருநூறு ரூபாய் விலை மதிப்புள்ள புடவைகளைத் தபால் மூலம் நூறு ரூபாய்க்கே அனுப்பக் கூடிய திட்டத்தை வேறு ஏற்பாடு பண்ணிட்டாய். அதற்கு விளம்பரத்திற்கு எழுபத்தைந்து லட்சம் செலவாகும் என்றாய்.

அதற்குள் செஞ்சு ராமய்யா போஸ்டல் திருட்டுத் தனத்தை ஏற்பாடு பண்ணவைத்து இந்தத் திட்டத்தை

முறியடித்தான். அதனால் மாஜிக் மிர்ரர் என்றாய். மேலும் ஒரு கோடி ரூபாயை அதில் போட டைரக்டர்களையெல்லாம் ஒப்புக் கொள்ளச் செய்தாய். பணம்—பணம்—பணம் —எதில் பார்த்தாலும் முதலீடே தவிர வரும்படி ஒன்றுமேயில்லை. எனக்குக் கோபம் பொத்துக்கொண்டு வரத் தொடங்கிற்று. உன்னை இந்தப் பதவியிலிருந்து எப்படித் தள்ளுவதுன்னு யோசிக்கத் தொடங்கினேன். ஆனால் போர்டு ஆஃப் டைரக்டர்கள் நிறைய பேர் உன் பக்கந்தான் இருந்தாங்க. நீ சொன்னது போல கம்பெனி நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே வரத் தொடங்கிற்று.

மற்ற ரகப்புடவைகளோடு போட்டிபோட்டு ஒரு நிலையில் அவைகளையும் தாண்டிவிட்டது. டைரக்டர்கள் எல்லோருக்கும் நீ தெய்வம்! ஆனால் எனக்கு, கையிலிருந்த சுவர்க்கத்தை பலவந்தமாய் பிடுங்கிக் கொண்டுவிட்ட அயோக்கியன்! என் கைக்கு ஒரு பைசாகூட வரவிடாமல், வந்ததையும் திரும்பி முதலீட்டில் முடுக்கி விட்டுவிடும் ராட்சதன். என் கைகளை கட்டிப்போட்டாற் போலாகி விட்டது. சாதாரணமாய் கேட்டால் தரமாட்டாய்னு உன்னை இக்கட்டில் ஆழ்த்தக்கூடிய சூழ்நிலைகளை ஏற்படுத்தினேன்...'

'நான் உங்களிடமிருந்து கம்பெனியை என் வசப்படுத்திக் கொண்டபோது நாதியற்ற நிலையில் இருநதது கம்பெனி. அதனைப் பொன் முட்டையிடும் வாத்தாய் மாற்றினேன் நான்.'

'நிஜந்தான். ஆனால் எனக்கு தினந்தினம் பொன் முட்டை தேவையில்லை. என் வாழ்க்கையின் இறுதி நாட்களில் பொன் வாத்தையே கொன்னு தின்னுடலாம்னு இருந்தேன் நான். அதற்கு நீயும், உன் டைரக்டர்களும் ஒப்புக்கொள்ள மாட்டீங்க...எப்போதோ எதிர்காலத்தில் கம்பெனி நம்பர் ஒன் கம்பெனியாவதால் எனக்கென்ன லாபம்? எனக்கிருந்த கடனுக்கு அதற்குள் நான் திவாலாகிவிட்டிருப்பேன். என் எஞ்சிய ஷேர்களைக்கூட உனக்கே வித்துட்டு பிச்சைக்காரனாகிவிட்டிருப்பேன்...'

ரவி அவரை வியப்போடு பார்த்தான்... 'உங்க மனதில் இப்படிப்பட்ட யோசனை இருப்பதாய் சொல்லியிருந்தால் நானே வேறு ஏதாவது வழி இருக்கான்னு யோசித்துப் பார்த்திருப்பேனே. நான் உங்களுக்கு என்ன துரோகம் பண்ணிட்டேன்? என்னை எதுக்கு இந்த ஈனமான நிலைக்குக் கொண்டுவந்தீங்க? உங்க சொந்த மனுஷங்களைவிட அதிகமாய்...'

'சொந்த மனுஷங்களா?' பெரியதாய் சிரித்தார் சர்மா. பிறகு, 'என் மனைவிகூட அப்படித்தான் சொந்த மனுஷின்னு நினைச்சுட்டு உனக்குக் காதல் கடிதம் எழுதியிருக்கான்னு நினைக்கிறேன்.'

முகத்தின் மேல் ஓங்கி அறைந்தாற் போலிருந்தது ரவிக்கு.

'காதல் கடிதமா?' என்றான்.

'ஆமாம். என் மனைவி உனக்கு எழுதிய விரிவான கடிதத்தை நானும் படித்தேன். அப்போதே அவளைக் கொன்று புதைச்சிடணும்னு நினைச்சேன். ஆனால் மெதுவாய் யோசித்துப் பார்த்தபோது எனக்கு ஒரு பிளான் தோன்றிற்று. ஒரே கல்லில் இரண்டு மாங்காய்! சொந்த மனைவி இன்னொருத்தனைப் பார்த்து ஆசைப்பட்டால் எந்தக் கணவன்தான் சும்மாயிருப்பான்? நீ சும்மாயிருந்தாயோ என்னவோ, ஆனால் எனக்கு அத்தனை பொறுமையும் சாந்தமும் கிடையாது.

அன்றிலிருந்து உன் மேலிருந்த கோபம் அதிகரித்தது. எல்லோருக்கும் உன் மேல் ஒரு கவர்ச்சிதான். ஆட்டோகிராப் வாங்கிக்கொள்ளும் பெண்கள்...உன்மேல் கண்மூடித்தனமான பக்திவைத்திருக்கும் டைரக்டர்கள்...இதுவரை எந்த கம்பெனி நிர்வாகிக்குமே இருந்திராத பெருமை உனக்குக் கிடைத்தது. இதுவரை இந்தத் துறையில் யாருக்குமே இவ்வளவு புகழ் கிட்டியதில்லை! ஒரு கம்பெனி நிர்வாகிக்கு ஜனங்களிடையே இவ்வளவு புகழா! எவ்வளவோ ஆண்டுகளாய் இந்தத் துறையிலேயே ஊறிப்

போயிருந்த எங்கள் யாருக்குமே இல்லாத பெயர் உனக்குக் கிட்டியதைப் பார்த்து, என் மனம் புழுங்கித் தவிக்கத் தொடங்கிற்று.

புடவைகளோடு நீ விளையாடினாய். புடவை கட்டிய ஒவ்வொரு பெண்ணின் வாயிலும் நீ புரண்டு விளையாடி னாய். எங்கள் வாழ்நாள் முழுவதும் முயன்றாலும் எங்க ளால் சாதிக்க முடியாததை முப்பது வயதிலேயே நீ சாதித்து விட்டாய். கடைசியில் என் மனைவியும்கூட உனக்கு காதல் கடிதம் எழுதியது எரியும் நெருப்பில் எண்ணெய் வார்த்தாற் போலாயிற்று. அந்தக் கடிதத்தால் எரிமலை வெடித்தது. உன்னைக் கொல்லக்கூடாது. நீ குமுறிக்குமுறிப் போகும் படி செய்ய வேண்டும்.

இதுவரை வெற்றியின் இனிப்பை மட்டுமே ருசி பார்த்தாய். கசப்பைக் கூட காட்டிட வேண்டும். சரியாய் அந்த நேரத்தில்தான் சுதாகர்கூட பிக்னிக்கில் உன் மனைவி சிநேகமாய் பழகியது என் கண்ணில் பட்டது. அந்த விஷயத்தை உனக்குப் போனில் சொல்லச் செய்தது நான் தான்.'

ரவி திகைப்படைந்தவனாய் அவரைப் பார்த்தான்.

சர்மா அவனை ஒரு கோணத்திலிருந்து மட்டுமே பார்த்திருக்கிறார். இந்த நிலைக்கு வருவதற்காக அவன் எவ்வளவு சுகங்களைத் தியாகம் பண்ணியிருப்பான் என்று அவருக்குத் தெரியாது. சொந்த வீட்டையும், மனைவியை யும்கூட அலட்சியம் பண்ணிவிட்டு இந்த யாகத்தை மேற் கொண்டிருக்கிறான். இந்த நிலைக்கு வருவதற்காக வாழ்க்கையையே தாரை வார்த்திருக்கிறான். இந்தத் துறைக்கே ஒரு மதிப்பை ஏற்படுத்தியிருக்கிறான். ஒரு வெற்றிக்கு பின்னால் இவ்வளவு கஷ்டம் இருப்பதை உணராத இவர்கள் வெற்றியை மட்டும் பார்த்துப் பொறாமைப்படுகிறார்கள். அவனுக்கு இருப்பது ஒரே உலகம்—டெக்ஸ்டைல்ஸ். வெளியுலகத்தில் இவ்வளவு பொறாமையும் துவேஷமும் இருப்பதுகூட தெரியாத அளவிற்குத் தன் உலகத்திலேயே அவன் மூழ்கிவிட்டான்.

அதுவும் தப்பா? இதெல்லாம் எதற்காகப் பண்ணினான்? பெயருக்காகவா? ஒரேயடியாய் அது போய்விட்டது. பணத்திற்காகவா? அது எத்தனை பாவி என்பது எதிரேயிருந்த சர்மாவின் உருவில் தெரிந்து கொண்டுதான் இருக்கிறது.

'உன் மனைவி விஷயம் தெரிந்ததும் நீ கொதித்தெழுவாய்னு நினைத்தேன். பெரிய ரகளை உண்டாகிவிடும்னு நினைத்தேன். ஆனால் உன் வருத்தத்தை நீ உனக்குள்ளேயே அடக்கிக்கொண்டு விட்டாய். அந்தவிதத்தில் என் திட்டம் தோல்வியடைந்துவிட்டது. ஆனால் உன் அதிருப்தியை ப்ரியம்வதாவோடு கழிப்பதன்மூலம் தீர்த்துக் கொள்ள எண்ணிவிட்டாய். மூன்று நாட்கள் வரை ஓட்டலில் கழிப்பது பற்றிய யோசனையை ப்ரியம்வதாவுக்குச் சொன்னது நான்தான். நீ பம்பாயில் இல்லை என்பது எஞ்சிய டைரக்டர்களுக்குத் தெரியணும்னுதான் பம்பாய்க்குப் போன் பண்ணினேன். உன்னைக்கொண்டு வீட்டிற்குப் போன் பண்ண வைத்தார்கள். ப்ரியம்வதாவும், பாஸ்கரும் அந்தவிதமாய் உன்னைச் சுற்றிலும் அழுத்தமாய் வலை பின்னினார்கள்.'

ரவி பேசவில்லை. மௌனமாய் சர்மாவையே பார்த்துக் கொண்டிருந்தான்.

'இதெல்லாம் செஞ்சுராமய்யாதான் பண்ணி வருவதாய் நீ நினைப்பாய்னு எனக்குத் தெரியும். அதனால்தான் உனக்கு யோசிப்பதற்குக்கூட டைம் தரவேயில்லை. லாயரிடம் இந்தக் கேஸ் இனி பிரயோஜனமில்லைன்னு நான்தான் சொன்னேன். ஒப்புக்கச் செய்தேன். குட்டி போட்ட பூனையாய் நீ சுற்றித் திரிந்து கொண்டிருந்ததைப் பார்த்து எனக்குள் மகிழ்ச்சியடைந்தேன். சில மாதங்களுக்கு முன்னால் இந்த மாதிரியே கலவரத்தோடு சுற்றி வந்து கொண்டிருந்தாய். நினைவிருக்கா? என் மனைவி தாஜ் ஓட்டலில் உன்னைச் சந்திக்கச் சொன்னபோது...''

'நாங்களிருவரும் இதுவரை சந்திச்சுக்கவேயில்லை, நீங்க அனாவசியமாய் சந்தேகப்படறீங்க...'

'சீக்கிரமாய் சந்திச்சிக்குவீங்க...' சிரித்தார் சர்மா. 'சுவர்க்கத்தில்...'

ரவி அவரையே உற்றுப்பார்த்தான்.

அதற்குள் ப்ரியம்வதா புடவை கட்டிக்கொண்டு வந்தாள். சர்மா அவளிடம், 'நீ இங்கேயே இரு. நாங்களிருவரும் இவருடன் போய் எஞ்சிய வேலைகளைக்கூட முடிச்சிக்கிட்டு வந்துடறோம்' என்றார். ப்ரியம்வதா ரவியைப் பார்த்துச் சிரித்தாள். 'புறப்படு' என்றான் பாஸ்கர்.

ரவி உடனே நகராமல் ப்ரியம்வதாவைப் பார்த்துச் சொன்னான் : 'அர்த்த ராத்திரியில் பிறந்த நாளன்றைக்குப் போன் பண்ணுவதிலிருந்து, அதான் முதல் முறையாய் ஒரு ஆணை முத்தமிடுவது என்பதுவரை அபாரமாய் நடித்தாய். நீ எனக்குத் தந்த காகிதத்தைப்பற்றி இன்னும் நினைவு வெச்சிருக்கியா? 'பதினாறு வயதுப் பெண் வாயாடிப் பையன்களை மிகவும் விரும்புகிறாள்...உண்மையான பெண் எப்பொழுதும் புத்திசாதுரியத்தைக் கண்டு தான் மயங்குகிறாள்...' என்றெல்லாம் சொன்னாயே! அதில் கடைசி வாக்கியமாய் இன்னொன்றையும் சேர்த்துக் கொள்...'கட்டவிழ்த்த காளையைப் போன்ற பெண் பணத்துக்காக என்ன வேண்டுமானாலும் பண்ணுவாள்" என்று. எனக்கு உன்னைப் பார்த்தால் கோபம் வரலை ப்ரியம்வதா. அனுதாபந்தான் வரது. நடிப்பு ஒன்றாலேயே அன்பை இவ்வளவு அபாரமாய் காட்டமுடிந்த நீ, உண்மையிலேயே நேசிக்கக் கற்றுக்கிட்டிருந்தால் ஒரு ஆணின் வாழ்க்கையில் எவ்வளவோ திருப்தியை ஏற்படுத்தியிருப்பாய். இந்த மாதிரி சர்மாவைப் போன்ற நரிகளிடம் எலும்புகளைப் பொறுக்கித் தின்று பணம் தரும் சுகத்திற்காகக் குட்டிக்கரணம் போட்டிருக்க மாட்டாய். என் வாழ்க்கை என்னவானாலும் ஆகிக்கட்டும். நான் கற்றுக்கிட்ட பாடத்தை மட்டும் உனக்குச் சொல்றேன் கேட்

டுக்கோ. சந்தோஷங்கறது வேலையிலோ, பணத்திலோ இறுதியில் செக்ஸிலோ...எதிலுமே கிடையாது. நள்ளிரவு தாண்டியதும் உறக்கத்தில் கழுத்தைச் சுற்றிக் கைகளைப் போட்டுக்கொள்ளும் இரு கைகளுக்கிடையே பிறக்கும் அந்த நிச்சிந்தையில்தான் இருக்கு. உன் வாழ்க்கையில் எந்த நிலையிலுமே அது உனக்குக் கிடைக்காது சர்மா மூலம்!'

# 46

அவள் ஜன்னலுக்கருகில் நின்றபடி வெளியே இருளைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் முகத்தில் ரத்தமே சுண்டிவிட்டாற்போல் வெளுத்திருந்தது. இன்ஸ்பெக்டர் சொன்ன ஒரு வார்த்தை அவளைக் கலவரப்படுத்திக் கொண்டிருந்தது. 'ரவி வெளிநாட்டிற்கு ஓடிப் போவதற்கு உதவி புரிவது உன் கணவர்தான்' என்ற வார்த்தைதான் அது.

இத்தனை நாள் விவாக வாழ்க்கையில் அவளுக்குக் கணவனைப் பற்றி நன்றாய்த் தெரியும். பெண்களுக்காக வும், குடிப்பதற்காகவும் குதிரைப் பந்தயத்திற்காகவும் என்ன வேண்டுமானாலும் செய்வார். குடி இல்லாவிட்டால் புத்தி சரியாயிராது. குதிரை தோற்றுவிட்டால் பைத்தியம் பிடித்துவிடும். அவள் தேகத்திலிருந்த வடுக்களே அதற்கு சாட்சி. துணிக் கம்பெனியை ஏறக்குறைய சூறையாடி விட்டார். ரவி வராமலிருந்திருந்தால் அது என்றோ இழுத்து மூடப்பட்டிருக்கும். ரவி அந்த விவகாரங்களை ஏற்றுக்கொண்டதும் கொஞ்சநாள் நன்றாய்த்தான் இருந் தார். ஆனால் மனித ரத்தத்தை ருசி கண்டுவிட்ட புலி யைப் போன்றவர் அவர்.

ரவி எல்லா சந்துகளையும் மூடிவிட்டதால் அவர் தத் தளிக்கத் தொடங்கியதையும், வந்த பணத்தையெல்லாம் ரவி திரும்பவும் கம்பெனியிலேயே முதலீட்டில் போட்டு

முடக்கி விட்டதையும் அவள் அறிவாள் இதெல்லாம் அவரை எவ்வளவு இக்கட்டில் ஆழ்த்திற்று என்பதற்குக் குடித்துவிட்டு வந்து அவர் பேசிய பேச்சுக்களே சான்று.

அவள் எல்லாவற்றையும் ஒரு பார்வையாளரைப்போல கவனித்துக்கொண்டேதான் வந்திருக்கிறாள். அவருக்குள் ளிருந்த ராட்சதத்தனம் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே வருவதையும் அறிவாள்...அப்படிப்பட்ட அவள் கணவன் ரவியைக் காப்பாற்றுவதாவது?

அவளுக்குள் ஏதோ சந்தேகம் வளர்ந்து பெரியதா யிற்று. அதுவும் இன்ஸ்பெக்டர் சொன்ன விஷயத்தி லிருந்து...இன்றுதான் கடைசிநாள் என்று தெரிந்தது.

அவளால் என்ன பண்ண முடியும்? முதலில் அவர்க ளிருவரும் எங்கே இருக்கிறார்கள் என்றுகூட அவளுக்குத் தெரியாதே. அவள் கணவனின் சாமர்த்தியத்தைப் பற்றி யும், கிரிமினல் மூளையைப் பற்றியும் அவளுடைய விவாக சமயத்திலேயே அவள் புரிந்துகொண்டு விட்டிருந்தாள். அரசியலில் சகலத்தையும் இழந்துவிட்டிருந்த அவள் தந்தையை எப்படி மூளை மழுங்கிப் போகுமாறு செய்தார் என்பதை அவளால் மறக்கத்தான் முடியுமா? அவ்வளவு கிரிமினல் சாமர்த்தியமுடைய அவள் கணவன் இன்று ரவி யைக் காப்பாற்றுகிறார் என்றால்...

ரவியிடமிருந்த ஷேர் சர்டிஃபிகேட்டுகள்...

ஆம். சாமர்த்தியமாய் அவைகளைத் தன் பெயரில் மாற்றிக் கொள்வதற்காகவே இந்த மாதிரி காப்பாற்றுவது போல நடித்திருப்பார். கம்பெனி விவகாரங்களைத் திரும் பவும் தன் கையில் எடுத்துக்கொள்ள இதுபோல் நடித்திருப் பார். ரவி எப்படியோ வெளிநாட்டிற்குப் போய் விடப் போகிறோம் என்ற பிரமையில் அந்தக் காகி தங்களில் கையெழுத்துப் போட்டிருப்பான். என்ன பண்ண லாம்? என்ன பண்ணுவது?

அவள் யோசனைகளைச் சிதறடித்தவாறு தொலை வில் ஒரு கார் வந்து கொண்டிருந்தது புலப்பட்டது. அவள்

கண்களை இடுக்கிக்கொண்டு இருளில் உற்றுப் பார்த்தாள். அது தன் வீட்டுக் கார்தான். வீட்டுக்குப் பக்கத்தில் தெருவில் கார் நின்றது. ஆனால் அதிலிருந்து இறங்கியது அவள் கணவனில்லை. யாரோ இரண்டு பேர்...

அதில் ஒருவன் ரவி. கார் திரும்பிப் புறப்பட்டது. அவளுக்கு ஏனோ பயமாயிருந்தது. ஏதோ கண்ணுக்குப் புலப்படாத சக்தி அவள் சாவைக் கட்டியம் கூறியது போலிருந்தது.

கார் கேட்டைத் தாண்டி உள்ளே வந்தது.

ஜன்னல் திரையை மூடிவிட்டு அவள் கீழே ஓடி வந்தாள். ஆனால் அதற்குள் தாமதமாகிவிட்டது. கணவன் உள்ளே வந்ததைப் பார்த்துவிட்டு அவள் சோஃபாவிற்குப் பின்னால் போய் ஒளிந்து கொண்டாள். சர்மா படியேறி மாடிக்குப் போய்க் கொண்டிருந்தார். அவளைப் பார்க்கவில்லை. அவளுக்குள் பரபரப்பு அதிகரித்துக்கொண்டே போயிற்று. வெளியே தெருவில் ரவியும், இன்னொரு ஆளும் இருந்தார்கள்.

ரவியைச் சந்தித்து நடந்த விஷயம் என்னவென்று தெரிந்து கொள்ள வேண்டும். இப்பொழுது சந்திக்க முடியாவிட்டால் இனி வாழ்நாளில் என்றைக்குமே சந்திக்க முடியாமல் போகலாம். அவள் கணவன் ரவியை வெளிநாட்டிற்கு அனுப்பி வைத்து விடலாம். அல்லது—அதற்கு மேல் அவளால் யோசித்துக் கொண்டிருக்க முடியவில்லை.

அவள் ஜன்னல் திரையைக் கொஞ்சம் ஒதுக்கிப் பார்த்தாள். தொலைவில் இருட்டில் இரண்டு உருவங்கள் அங்கேயே நின்று கொண்டிருந்தன. அதில் ஒருவன் ரவி. அவளுக்கு அவன் இன்னும் ஏன் அங்கேயே நின்று கொண்டிருந்தான் என்று புரியவில்லை. அவள் கணவர் ஏதேனும் பணம் தருவதாய் சொல்லியிருப்பாரோ?... வெளிநாட்டில் சில நாட்களைக் கழிப்பதற்கு வேண்டிய டாலர்களைத் தருவதாய் சொல்லியிருப்பாரோ?

ஒரு நிமிடத்திற்கு முன்னால் தன் கணவனைப் பற்றிக் கெட்டதாய் நினைத்ததற்கு வருந்தியவளாய் சோஃபா விற்குப் பின்னாலிருந்து வெளியே வரப் போனாள். அதே சமயம் சர்மா படியிறங்கி வந்து கொண்டிருந்தார்.

அவர் கையில் பிஸ்டல் இருந்தது. அவளைத் தேடிக் கொண்டிருந்தார்.

பாஸ்கர் ரவியைப் பார்த்துச் சிரித்தான்...ரவிக்குப் புரியவில்லை. சர்மா தம்மிருவரையும் இம்மாதிரி வீட்டிற்கு முன்னால் நிறுத்தி வைத்துவிட்டு உள்ளே ஏன் போகிறார்?

அவன் சந்தேகத்தை ஊகித்து விட்டவனாய் பாஸ்கர் சொன்னான் : 'உன் கதைக்கு இது கடைசி அத்தியாயம் ரவி! சர்மா தன் மனைவியைக் கொல்லத்தான் உள்ளே போகிறார்.'

ரவி திடுக்கிட்டான்.

'உள்ளிருந்து பிஸ்டல் சப்தம் கேட்டதுமே உன்னை இப்படியே தெருவில் விட்டுட்டுப் போயிடுவேன்...சர்மா கத்திக்கொண்டே வெளியே வருவார். அவளைக் கொன்ற தும் பிஸ்டல் காம்பவுண்டு புதரில் கிடைக்கும்...இரண்டு கொலைகளைப் பண்ணிய குற்றவாளியாய் உன்னைப் போலீசார் தேடுவார்கள். இதற்குப் பரிசு என் தங்கை—அதான் ப்ரியம்வதாவுக்குச் சின்ன வீடும் எனக்கு இரண்டு லட்சமும்...சின்ன வீடுன்னால் தெரியுமில்லே?...' சிரித்தான் பாஸ்கர்.

'தாம் பார்ட்டியிலிருந்து வரும்போது பிஸ்டல் சப்தம் கேட்டதுன்னும், நீ ஜன்னல் வழியாய் குதித்து ஓடிட்டிருந்த போது பார்த்தோம் என்றும் சர்மா கோர்ட்டில் சொல்லு வார். எப்படியிருக்கு?'

ரவி கேட்கவில்லை. அவன் ரத்தம் கொதித்துக் கொண்டிருந்தது. அவள் சாவதற்குச் சில வினாடிகள்தான் இருக்கின்றன என்ற உண்மை அவனை கதிகலங்க வைத்தது. பாஸ்கர் பிஸ்டலுடன் நின்று கொண்டிருந் தான்.

காப்பாற்ற வேண்டும்! காப்பாற்ற வேண்டும்! அவளைக் காப்பாற்ற வேண்டும். தன் உயிர் போனாலும் பரவாயில்லை!

அவன் பாஸ்கரைப் பார்த்தான். தான் ஓட்டமாய் உள்ளே போனால்? பாஸ்கர் சுட்டுவிடுவான். சுடட்டும்! அவன் செத்தால் என்ன நஷ்டம் வரப்போகிறது?

மானம் போய்விட்டது, புகழ் போய் விட்டது. கொலையாளி என்ற முத்திரையும் படிந்துவிட்டது. தூக்கு மேடை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது அவனை. இப்படிப்பட்ட நிலைமையில் செத்தால்தான் என்ன நஷ்டம்?

அவன் சாவு அவளை வாழ வைக்குமானால் அதை விட வேறு வேண்டுமா? அவன் மூளை சுறுசுறுப்பாய் இயங்கிற்று.

துப்பாக்கிச் சப்தம் கேட்டதுமே எல்லாம் பரபரப்பாய் மாறிவிடும். முக்கியமாய் சர்மா கலவரமடைந்து வெளியே வந்துவிடுவார். அது போதும். தம்மைச் சுற்றிலும் ஜனங்கள் கூடிவிடுவார்கள். அவன் உயிர் இரண்டு நிமிஷம் தாமதமானால் போதும். குரல் வளையில் இரண்டு நிமிஷம் வரையிலாவது மூச்சு துடிதுடித்துக் கொண்டிருந்தால் அது போதும்.

அந்த மூச்சு சப்தமாய் மாறி, தொண்டையிலிருந்து வார்த்தைகளாய் வெளிவந்து சர்மாவின் கொடூரச் செயலை வெளிப்படுத்தி விடும். உலகம் நம்பாவிட்டாலும் அவளாவது நம்புவாள். எஞ்சிய வாழ்க்கையை அந்த ராட்சதனிடமிருந்து தொலைவிற்குப்போய் கழிப்பாள். எல்லாவற்றையும்விட முக்கியமாய்—அவள் பிழைத்துக் கொள்வாள்.

அதைவிட முக்கியமாய்—

இந்த உபயோகமில்லாத வாழ்க்கையின் இறுதியிலாவது அவனால் தன்னலமில்லாமல் ஒரு உபகாரத்தைப் பண்ண முடியும்.

அவன் தேகத்தைப் பிளக்கக் கூடிய துப்பாக்கிக் குண்டு அவளுடைய மரணத்தைத் தடுக்கமுடிந்தால் அது போதும். நிமிட நாழிகைக்குள் அவன் இவ்வளவையும் யோசித்து முடித்துவிட்டான்.

இனி நேரமில்லை. சர்மா அதற்குள் உள்ளே போய் விட்டார். இனி நேரமும் அதிகமில்லை.

அவன் ஒருமுறை மூச்சை இழுத்து விட்டுக்கொண் டான். சட்டென்று திரும்பி மின்னலைக் காட்டிலும் வேகமாய் சர்மாவின் வீட்டை நோக்கி ஓடத் தொடங்கி னான்.

இந்த திடீர் சூழ்நிலைக்கு பாஸ்கர் முதலில் திகைப் படைந்துவிட்டாலும், உடனேயே தேறிக்கொண்டு, ஓடிக் கொண்டிருந்த ரவியைப் பின்னாலிருந்து குறி பார்த்தான். இப்படிப்பட்ட விஷயத்தில் மிக அனுபவசாலியாய் சற்றும் கலங்காமல் சரியாய் குறிபார்த்து ட்ரிக்கரை அழுத்தி னான்.

ஒன்று...

இரண்டு...

மூன்று...

மூன்று முறை அழுத்தியும் துப்பாக்கி வெடிக்கவில்லை. அவனுக்கு ஸேஃப்டி கேட்ச்சைப்பற்றி நினைவுக்கு வந்தது. அதனை ரிலீஸ் பண்ணுவதற்குள்ளாகவே ரவி கேட்டிற்குள் நுழையப் போய்விட்டான். இருவருக்குமிடையே ஐம்பதடி தூரந்தான் இருந்தது. பாஸ்கருக்கு தான் பண்ணவிருந்த தப்பும், ரவியின் எண்ணமும் புரிந்துவிட்டது. துப்பாக்கிச் சப்தம் வெளியே கேட்க வழியில்லை.

ரவியைத் தொடர்ந்து ஓடத் தொடங்கினான் அவனும். இப்படிப்பட்ட விஷயத்தில் கைதேர்ந்தவன் அவன். சரியாய் பத்தடி தூரத்திலிருக்கும் போது துப்பாக்கியைச் சுட்டான் — அது ரவியின் தலையில்பட்டு கேட்டிற்கு முன்னால் போய் விழுந்தது.

ரவிக்குத் தலை சுற்றிற்று. அப்படியே தலையைப் பிடித்துக் கொண்டு சுருண்டு விழுந்தான்,

சர்மா உள்ளேயிருந்து ஓடி வந்தார். 'அவள் உள்ளே யில்லை' என்றார்.

இருவருக்குமிடையே ஊசி விழுந்தாலும் கேட்கும்படி யான நிசப்தம். அந்த நிசப்தத்திற்கிடையே சோஃபா விற்குப் பின்னாலிருந்து சப்தம் கேட்டது.

இருவரும் சட்டென்று திரும்பிப் பார்த்தார்கள்.

பின்னாலிருந்து புலி துரத்திக் கொண்டு வருமானால் உயிருக்கு அஞ்சி ஓட்டம் பிடிக்கும் மான் குட்டியைப் போல அவ்விருவருக்கும் நடுவிலிருந்து விர்ரென்று ஓடினாள்.

காற்றினும் வேகமாய்...

புயலை விட துரிதமாய்...

'ஷூட் ஹெர்' சர்மா கத்தினார்.

பாஸ்கரின் கையில் ஆயுதம் இல்லை.

'ஷூட்'—பிஸ்டலை அவனை நோக்கி வீசியெறிந்தபடி கத்தினார். அதற்குள் ரவி மெல்ல மண்டியிட்டு எழுந்திருந் தான். அவன் கண்களைத் திறந்தபோது ஒரு பக்கத்தில் பாஸ்கரும் கொஞ்சம் தூரத்தில் சர்மாவும் தென்பட்டார் கள். அவன் மெல்ல எழுந்து கொண்டிருந்தபோது பாஸ்கர் அவளைப் பார்த்துத் துப்பாக்கியை குறி வைத்துக் கொண் டிருந்தது தென்பட்டது. ரவி அவன் மேல் பாயப்போனான். அதைவிட வேகமாய் பாஸ்கர் அவனை நோக்கித் திரும்பி னான்.

'நோ...நாட் ஹிம்!' சர்மா கத்தினார்! அது புரிந்ததுமே அவள் பின்னால் திரும்பினாள்.

பாஸ்கர் சர்மாவின் வார்த்தைகளைக் காதில் போட்டுக் கொள்ளாமல் ரவியைச் சுடப்போனான்.

அவள் பார்வை தன் கால்களுக்குக் கீழே விழுந்து கிடந்த துப்பாக்கியின் மேல் படிந்தது. குனிந்து அதை எடுத்து, கனவில் மிதப்பவளைப்போல சுடத் தொடங்கி னாள்.

டமார்...டமார்...டமார்...

பாஸ்கர் சரீரம் துண்டு துண்டாகி ரத்தம் கால்வாய் கட்டத் தொடங்கிற்று.

துடிதுடித்து விட்டு சில வினாடிகளில் சலனமில்லாமல் போயிற்று.

சர்மாவும் ரவியும் பார்வையாளர்களாய் நின்று விட்டார்கள்,

அவள் அப்படியே நின்றிருந்தாள்.

துப்பாக்கியிலிருந்து புகை இன்னும் வெளிவந்து கொண்டிருந்தது.

முதலில் மோட்டார் சைக்கிள் வெளிச்சம் அவள் மேல் பட்டது. பிறகு இன்ஸ்பெக்டரின் மோட்டார் சைக்கிள் அந்த வீட்டிற்கு முன்னால் வந்து நின்றது.

# 47

பிற்சேர்க்கை:—

'ஹௌ ஈஸ் தி ஷேர் மார்க்கெட்?'

அவள் சீட்டில் வந்து உட்கார்ந்ததுமே அவன் கேட்ட முதல் கேள்வி அது.

'ஸ்டேபில் சார்'—என்றாள் அவனது செக்ரட்டரி. நேரம் பத்தரை ஆகியிருந்தது.

'டர்ன் ஓவர் கணக்கைக் காட்டுங்க.'

அவள் காகிதத்தை நீட்டினாள். அவன் இரண்டு நிமிஷம் பார்த்துவிட்டு, 'குட்! விற்பனை எதுவும் குறை யலை' என்றான்.

அவள் பதில் பேசவில்லை. ஆனால் மனத்திற்குள் எண்ணிக் கொண்டாள், 'பெண்கள் ஆர்ட்டீ புடவைகளை வாங்குவதற்கும் அந்தக் கம்பெனி முதலாளியின்மேல் கொலைக்குற்றம் சுமத்தப்பட்டிருந்ததற்கும் எந்த சம்பந்த மும் இல்லை' - என்று.

'ஷேர் மார்க்கெட் இன்னும் 'பிக் அப்' ஆகாததுதான் ஆச்சரியமாயிருக்கு' என்றான் அவன்.

'விஷயமெல்லாம் இன்னும் பேப்பரில் வரலை சார். ஒருகால் நாளைக்கு வரலாம், நாளையிலிருந்து விலை ஏறலாம்,'

அவன் தலையாட்டினான். 'உங்க கால் எப்படியிருக்கு?'

'இப்ப நன்றாய்தானிருக்கு சார், நோ ட்ரபுள்.'

'அன்றைக்கு நான் ஜன்னல் வழியாய் பார்த்துட்டிருந்தேன். நீங்க எதையுமே கவனிக்காமல் ரோடைக் கடந்துட்டிருந்தீங்க. இல்லாவிட்டால் உங்க மேல் மோதவந்த அந்த வாகனத்தைப் பார்த்திருப்பீங்க கட்டாயமாய்.'

'ஆமாம் சார்.'

'தெருவைக் கடக்கும்போது கவனமாய் இருக்கணும்.'

'ஒரு மணியில் திரும்பி வரேன்.' நாற்காலியில் தொங்க விட்டிருந்த கோட்டைக் கையிலெடுத்துக் கொண்டான், 'ஆமாம். நேற்றிரவு புது வருடப் பிறப்பை எப்படி கழிச்சீங்க?'

அவள் சிரித்தாள். 'பெரிய பையனுக்கு ஒரே இருமல். சின்னவனுக்கு ஜுரம். நாங்க படுத்துக்கும்போது மணி நாலடிச்சிருச்சி. புதுவருடம் எல்லாமே எங்களுக்கு ஒரே மாதிரிதான் இருக்கும்.'

'அதிர்ஷ்டசாலிகள்' - மனதிற்குள் நினைத்துக் கொண்டான். அவன் தன் சேம்பருக்கு வெளியே வந்து சுற்றும் முற்றும் பார்த்தான். அவரவர்கள் தத்தம் வேலைகளில் ஆழ்ந்திருந்தார்கள். டைப் மிஷினின் ஓசையைத் தவிர வேறெந்த ஓசையுமில்லை. அவன் கீழே வந்து கொண்டிருந்தபோது ரிஸப்ஷனுக்கருகில் - 'போன் வந்திருக்கு சார்' என்றாள் ரிசப்ஷனிஸ்ட்.

அவன் ரிசீவரை எடுத்து, 'ஹலோ' என்றான் சோர்வோடு. நேற்றிரவெல்லாம் உறங்காததால் கண்கள் எரிச்சலெடுத்தன.

'நான்தான் லாயர் ரங்கநாதன்.'

'சொல்லுங்க.'

'கங்கிராஜுலேஷன்ஸ் ரவி.'

'சொல்லுங்க' என்றான், விஷயத்தைச் சீக்கிரமாய் சொல்லுங்கள் என்பதுபோல!

மறுமுனையில் தர்மசங்கடமான நிசப்தம். ரங்கநாதனின் குரல் தடுமாற்றத்தோடு வெளிவந்தது. 'ஐயாம் சாரி. சர்மாவின் பேச்சால் நான் தப்பான முடிவை எடுக்க வேண்டியிருந்தது.'

'இட்ஸ் ஆல் ரைட்...'

திரும்பவும் தடுமாற்றம்.

'கோயம்புத்தூர் புடவை கம்பெனியின் ஃபைலை வேறொரு லாயரிடம் கொடுத்திருக்கீங்களாம்.'

'ஆமாம். நீங்க இப்பல்லாம் ரொம்ப பிசியாயிட்டீங்க. சில ஃபைல்களை வேறு லாயருக்கு ட்ரான்ஸ்ஃபர் பண்ணிடச் சொன்னேன்...'

'ஆனால்...'

'நான் இப்ப வெளியே போகிறேன். ஏதாவது முக்கியமான விஷயம் இருந்தால் அப்புறமாய் பேசுங்க. அவசரம் ஒன்றுமில்லை. நான் வெளிநாட்டுக்கு ஓடிப் போயிடப் போறதில்லை.' போனை வைத்து விட்டான்.

வந்து காரில் உட்கார்ந்தான்.

'எங்கே சார்?'

'போலீஸ் ஸ்டேஷனுக்கு.'

கார் ஐந்தே நிமிஷத்தில் போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்து சேர்ந்தது. இன்ஸ்பெக்டர் ராஜசேகர் நாற்காலியில் பின்னுக்குச் சாய்ந்தவாறு தூங்கிக் கொண்டிருந்தார்.

'ஹலோ.'

ராஜசேகர் கண்திறந்து ரவியைப் பார்த்து, 'ஹலோ' என்றார். எதிரேயிருந்த நாற்காலியில் வந்து உட்கார்ந்து கொண்டு, 'ஹாப்பி நியூ இயர்' என்றான்.

'உங்களுக்காக வீட்டிற்குப் போன் பண்ணினேன். ஆபீசுக்குப் போயிட்டதாய் சொன்னாங்க. இவ்வளவு சீக்கிரமாய் அட்ஜஸ்ட் பண்ணிக்குவீங்கன்னு நினைக்கவேயில்லை. இட்ஸ் ஒண்டர்! ஆச்சரியமா இருக்கு.'

ரவி சிரித்துவிட்டுப் பேசாமலிருந்தான்,

'இன்னும் என்ன ஆச்சரியம்னால் நீங்க இவ்வளவு சீக்கிரத்தில் நிலைமையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து நிர்வகிப்பதுதான்...உங்களை இப்ப பார்க்கும்போது நீங்கதானா இந்த பத்து நாளும் அண்டர்கிரவுண்டிற்குள் போயிருந்ததுன்னு சந்தேகமாய் இருக்கு. அதற்குள் லாயரை நியமித்து அவரும் வக்காலத்து வாங்கிட்டு ஃபைல் பண்ணி எல்லாம் அரை மணிக்குள் ஆயிருச்சே...'

'அவளுக்கு ஒன்றுமாகாதே?'

'நோ...நோ. கேஸ் எதுவுமில்லை. ஒரு ஆளைக் காப்பாற்றுவதற்காக இன்னொருத்தரைக் கொல்லுவது குற்றமாகாது. வழக்கமான ப்ரொசீஜர்ஸ் எல்லாம் உண்டுன்னு வையுங்க. அவங்க தற்சமயம் வீட்டில்தான் இருக்காங்க.'

'சர்மா என்ன சொல்றார்?'

'குற்றத்தை ஒப்புக்கிட்டு ஸ்டேட்மெண்ட் தந்திருக்காரு.'

'ப்ரியம்வதா?'

'நடந்த கொலைக்கும் அவளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. அவள் ஆக்ஸெசரி டு மர்டர் கூட இல்லை. கொலை நடந்த இடத்தில் அவள் இல்லை. சாதாரண சூழ்நிலையாயிருந்தால் அவள்மேல் கேஸ் எதுவும் இதில் செல்லாது. ஆனால் சர்மா ஸ்டேட்மென்ட்டில் தாமிருவருமே சேர்ந்து இந்தக் கொலையைத் திட்டம் போட்டதாய் சொல்லியிருக்கிறார். தான் ஜெயிலில் கழிக்கும்போது அவள் மட்டும் ஏன் வெளியில் உல்லாசமாய் இருக்கணும்னு சொல்றார்.'

'சாடிஸ்ட்!' மனதிற்குள் எண்ணிக் கொண்டான் ரவி. அவனுக்கு முதன்முதலாய் ப்ரியம்வதாவின் மேல் அனுதாபம் ஏற்பட்டது. இன்ஸ்பெக்டர் சொன்னார்:

'இந்தக் கேசில் நீங்க நிரபராதிங்கிற சந்தேகம் எனக்கு எப்ப தோன்றிற்று தெரியுமா ரவி?'

'நான் மிஸஸ் சர்மாவுக்கு போன் பண்ணின போதா?'

'இல்லை.'

'பின்னே?' வியப்போடு கேட்டான்.

'பம்பாயிலிருந்து விமானம் அன்றைக்குத் தாமதமாய் வந்தது. நீங்க இங்கே கொலை பண்ணிட்டுத் திரும்பி பம்பாய்க்குப்போய் அங்கிருந்து வருவதென்பது நடைபெற முடியாதது. நீங்க போன் பண்ணின சமயத்தில் அந்த விமானம் ஆகாயத்திலிருந்திருக்கு. பாவம் பாஸ்கருக்கு இந்த விஷயம் தெரியாது. அதற்கு முன்னால் வந்த விமானத்தில் அவன் வந்துவிட்டு, உங்களை ஏர்போர்ட்டிலிருந்து பேசுவதுபோல பேசச் செய்திருக்கிறான். அதிலிருந்து என் யோசனையில் கொலையாளி யாருங்கற கேள்விதான் சுற்றிச் சுற்றி வந்ததே தவிர, உங்க மேல் மட்டும் சந்தேகமேயில்லை. பேப்பருங்க, அரெஸ்ட் வாரெண்ட் இந்த விஷயங்களையெல்லாம் விட்டுத் தள்ளுங்க. என் விசாரணை தொடர்ந்ததே தவிர, அது நீங்க எங்கே இருக்கீங்கன்னு தெரிஞ்சுக்கத்தான்! ஒருவிதத்தில் சொல்லப்போனால் நீங்க அனாவசியமாய் ஒளிஞ்சுக்கிட்டிருந்திருக்கீங்க.'

'குற்ற உணர்ச்சி! அதற்கு லாஜிக் இல்லை.'

இன்ஸ்பெக்டர் புரிந்து கொண்டது போல தலையாட்டினார்.

'நான் உங்க ஸ்டெட்மென்ட்டை ரிகார்ட் பண்ணிக்க நாளைக்குவரேன். வீட்டுக்குப் போய் முதல்ல நன்றாய் தூங்கணும்.'

'ஷ்யூர் இன்ஸ்பெக்டர்' என்றவன் அதுவரை பக்கத்தில் வைத்துக்கொண்டிருந்த பாக்கெட்டை எடுத்துத் தந்து 'எங்க கம்பெனிப் புடவை! எடுத்துக்குங்க' என்றான்.

'நான் லஞ்சம் வாங்கிக்க மாட்டேன்.'

'லஞ்சமில்லை. பரிசு!'

'வார்த்தை வேறே தவிர, இரண்டிற்கும் அர்த்தம் ஒன்றுதான்.'

'இல்லை. எனக்கு உங்களிடம் ஏதாவது வேலை இருந்து பண்ணினால் அது லஞ்சம். என் சந்தோஷத்திற்காகக் கொடுத்தால் அது பரிசு எடுத்துக்குங்க. ப்ளீஸ்.'

அவர் அதை வாங்கிக்கொண்டே, 'புதுவருடம். ராத்திரி பூராவும் வீட்டுக்கு வராததற்கு என் வீட்டுக்காரி எள்ளுங்கொள்ளும் வெடிச்சுக்கிட்டிருப்பாள். இந்தப் புடவை அந்தக் கோபத்தைக் கொஞ்சம் தணிக்கும். தாங்க்ஸ்!' என்றார்.

'உங்களுக்கும் இந்த பிராப்ளம் உண்டு போலிருக்கு.'

'எந்த பிராப்ளம்? வீட்டுத் தொந்தரவா?'

'இல்லை, தப்புப் பண்ணிட்டு அதை மூடி மறைப்பதற்காக மனைவிமார்களுக்கு நகைகளும் புடவைகளும் வாங்கிட்டுப் போறது'-ரவி சிரித்தான்.

'வேறு வழியில்லை. இந்த உத்யோகத்தில் இப்படித்தான்! என் முதல் மனைவி இந்த போலீஸ் ஸ்டேஷன்தான்... இரண்டாமவள்தான் கட்டிக்கிட்ட மனைவி. ராத்திரி பத்து மணிக்கு முன்னாடி வீட்டுக்குப்போனால் அதிர்ஷ்டந்தான்.'

'உங்களுக்கு எவ்வளவு சம்பளம் வரது?'

'கழித்தல்போக மீதி ஆயிரத்து ஐந்நூறு.'

'மூவாயிரம் தரேன். எங்க கம்பெனியிலேயே வந்து சேர்ந்துடுங்க. நான் விளையாட்டுக்குச் சொல்லலை இதை.'

'உங்களைப்போன்ற அன்புள்ளம் படைத்தவங்க எங்களுக்கு மிகவும் தேவை. சம்பளம் ஒரு பொருட்டல்ல.'

'எல்லாவற்றையும் விட முக்கியமாய் உங்களுக்கு நான் தர வாக்குறுதி என்னன்னா—எங்க கம்பெனியில் வேலை பண்ணினால் என்றைக்குமே ஐந்து மணி அடித்த பிறகு வேலை பண்ண வேண்டியதில்லை.'

'நிஜமாய்த்தான் சொல்றீங்களா?'

'நிஜமாய்த்தான் சொல்றேன்.'

ராஜசேகர் ஒரு நிமிஷம் யோசித்துவிட்டு, பிறகு சங்கடத்துடன், 'வேண்டாம். இதே பழகிருச்சி. நாளையி

லிருந்து சீக்கிரமாய் போனால் வீட்டில் என்ன பண்றதுன்னு தெரியாமல் எனக்குப் பைத்தியம் பிடிச்சிடும். ஒரு முறை எப்போதோ வீட்டுக்குச் சீக்கிரமாய் போனபோது வந்தது நான்தானா அல்லது வேறு யாரோவான்னு எங்க வீட்டாருக்கு சந்தேகம் வந்து ரொம்ப நேரத்திற்கப்புறந்தான் அது தீர்ந்தது.'

'நம்ப வீட்டிலேயே நாம்ப அகதிகளைப் போல இருப்பது துரதிர்ஷ்டம். ஆபத்து கூட.'

'எனக்கு ஆபத்தில்லைன்னு நினைக்கிறேன்.'

'ஏன் அப்படிச் சொல்றீங்க?'

'எங்க இலாக்காவில் பெண்கள் மிகக்குறைவு. பெர்சனல் செக்ரட்டரிங்க, அதெல்லாம் கிடையாது. எவ்வளவு பெரிய கேசுங்களைத் துப்புத் துலக்கிப் பிடிச்சாலும் கூட, பெண்கள் ஆட்டோகிராஃப் அது இதுன்னு வர மாட்டாங்க.'

ரவி முதல் முதலாக வாய்விட்டுச் சிரித்தான்.

'ஹாப்பி நியூ இயர்.'

'சேம் டு யூ.'

கார் மெல்ல புறப்பட்டது.

கூலிங் கிளாஸ் வழியே வீதி நீலமாய் தென்பட்டது. ஏர்கண்டிஷன் பண்ணப்பட்ட காராதலால் குளிர்ந்தகாற்று வீசிக்கொண்டிருந்தது.

போலீஸ் ஸ்டேஷனிலிருந்து வெளிவந்தபிறகு டிரைவர் திரும்பிப் பார்த்து 'ஆபீசுக்கா வீட்டுக்கா சார்' என்று பணிவாய் கேட்டான்.

அவனுக்குத் தன் பொறுப்பு தெரியும்...எங்கே என்று சொன்னான். கார் ஓசையைக் கிளப்பிக்கொண்டு ஓசையிடா அலையை நோக்கிப் புறப்பட்டது.

(முடிந்தது)

# ஈபலம்

பூங்கொடி பதிப்பகம்



எண்டமூரி வீரேந்திரநாத் - சுசீலா கனகதுர்கா